# முத்தமிழ் விழாமலர்

## 1991



விடுதலைப்புலிகள்
கலை, கலாச்சாரப்பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




894.811 MUT AR
AR
நூலகம் பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம்
ARCHIVES
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ் விழாமலர் 1991

Liberation Tigers Of TAMIL EELAM

## விடுதலைப்புலிகள் கலை,கலாச்சாரப்பிரிவு

ARCHIVES

107080

University of Jaffna
107080
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் முகடை உடைக்கும்
ஈழ
தமிழர் தாயகம் சமைக்கும் போரில்
வித்தாய் வீழ்ந்த வீரர் திருவடி
வைத்தே நாங்கள்
வணக்கம் செய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழீழ விடுதலைப் புலிகள்
இயக்கத்தின் தலைவரும்,
பிரதம இராணுவத்தளபதியும்,
தமிழீழ தேசியத்தலைவருமான

திரு. வே. பிரபாகரன்
*அவர்கள் வழங்கிய*

# வாழ்த்துச் செய்தி



மொழி, கலை, கலாசாரம் என்பன, ஒருதேசிய இனத்தின் கட்டமைப்பிற்கு தூண்களாக விளங்குகின்றன. ஒரு தேசியத்தின் ஆன்மாவாக திகழ்கின்றன. ஒரு தேசிய நாகரிகத்திற்கு அத்திவாரமாக அமைகின்றன.

மொழியும், கலையும், கலாசாரமும் வளம் பெற்று, வளர்ச்சியும் உயர்ச்சியும் அடையும் பொழுதே, தேசிய இனக் கட்டமைப்பு இறுக்கம் பெறுகிறது. பலம் பெறுகிறது. தேசிய நாகரிகம் உன்னதம் பெறுகிறது. மனித வாழ்வும் சமூகஉறவுகளும் மேன்மை பெறுகிறது.

எமது தேசிய இனக் கட்டமைப்பை சிதைத்து, இனரீதியாக எம்மை அழித்துவிட நீண்டகாலமாகவே எமது எதிரியான சிங்கள இனவாத அரசு திட்டமிட்டு செயற்பட்டு வருகிறது. எமது மொழியை அழித்து, எமது கலை கலாசாரத்தை சீரழித்து, எமது வரலாற்றை திரித்து, எமது பொருளாதார வாழ்வை சீர்

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலைத்து, காலம் காலமாக நாம் வாழ்ந்து வந்த எமது தாயகப் பூமியை ஆக்கிரமித்து — ஒட்டு மொத்தத்தில், எமது தேசிய கட்டமைப்பை சிதைத்துவிட எமது எதிரி கங்கணம் கட்டி நிற்கிறான். இந்த இன ஒழிப்புத் திட்டத்தின் பூதாகரமான வடிவமாகவே இன்றைய யுத்தம் எமது மக்களுக்கு எதிராக ஏவப்பட்டிருக்கிறது.

இந்த இக்கட்டான காலகட்டத்தில் எமது இனத்தின் தேசிய கட்டமைப்பு சீர்குலையாது பாதுகாப்பது எமது விடுதலைப் போராட்டத்தின் பிரதான இலட்சியமாக அமைய வேண்டும். இந்த நோக்கில், எமது தேசியத்தின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும், கட்டுக் கோப்பிற்கும் முதுகெலும்பாகவுள்ள எமது மொழி, கலை, கலாசாரம் பாதுகாக்கப்பட வேண்டும். பேணி வளர்க்கப்படவேண்டும்.

இந்த வரலாற்றுத் தேவையை நன்குணர்ந்து விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கலை, கலாசாரப் பிரிவினர் முத்தமிழ்விழா ஒன்றை பெரிய அளவில் அரங்கேற்ற இருப்பது எனக்கு பெருமகிழ்ச்சியை தருகிறது. இந்த முத்தமிழ் விழா எமது தாயகத்தின் வளர்ச்சிக்கும் எமது தேசியத்தின் எழுச்சிக்கும் முனைப்பூட்டுவதாக அமையுமென நம்புகிறேன். இந்தக் கலை நிகழ்வு எமது தேசியகலாசாரத்தில் ஒரு புரட்சிகரமான மறுமலர்ச்சியை உருவாக்க வேண்டும் என்பதே எனது விருப்பம்.

நான் கலை, இலக்கியங்களை மதிப்பவன்; ரசிப்பவன். கலை, இலக்கியப் படைப்பாளிகளை கௌரவிப்பவன்; கலை கலைக்காக அல்லாமல், மக்களுக்காகவே படைக்கப்பட வேண்டும் என்ற கருத்தைக் கொண்டவன்.

கலை இலக்கியப் படைப்புகள் மக்களைச் சிந்திக்கத் தூண்ட வேண்டும் பழைமையிலும் பொய்மையிலும் பல்வேறு மாயைகளிலும் சிறைப்பட்டுக் கிடக்கும் மக்கள் மனதில் புரட்சிகரப் பார்வையை தோற்றுவிக்க வேண்டும்; மாறிவரும் சமூக புறநிலைகளுக்கு ஒத்திசைவாக சமூக விழிப்புணர்வை உருவாக்கவேண்டும்.

நாம் இன்று ஒரு புரட்சிகரமான யுகத்தில் வாழ்கிறோம் பூகம்பமான மாற்றங்கள் உருவாகி வரும் புதியதொரு சகாப்தத்தில் வாழ்கிறோம். தமிழீழ மக்கள் இன்று விடுதலை வேண்டி போர்க் கோலம் பூண்டு நிற்கிறார்கள். எமது தேசிய வாழ்வின் சகல பரிமாணங்களிலும் வியாபித்து நிற்கும் ஒரு வரலாற்று இயக்கத்திலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞர்களும், அறிஞர்களும் அந்நியப்பட்டு நிற்கமுடியாது. அப்படி அந்நியப்படுவது மக்களிலிருந்தும் வாழ்க்கையின் நிதர்சனத்திலிருந்தும் அந்நியப்படுவதாக முடியும்.

இந்தக் காலகட்டத்தில், கலைஞர்கள், எழுத்தாளர்கள் அறிஞர்கள் ஆகியோரிடமிருந்து நான் கூடிய அளவு பங்களிப்பை எதிர்பார்க்கிறேன். ஒரு தாயகத்தை கட்டி எழுப்பும் பணிபுனிதமானது. இந்தப் புனித பணியில் பங்கு கொள்வது எல்லோரதும் தேசிய கடன். ஆயிரமாயிரம் போராளிகளின் அற்புதமான தியாகத்தில் உருவாகி வரும் எமது தாயகத்தை ஒரு உன்னதமான, மேன்மையான சமுதாயமாக மாற்றியமைக்க வேண்டும். இந்த சமூகமாற்றத்திற்கு வழிகோலும் வகையில் சிந்தனையாளர்களும் சிருஷ்டி கர்த்தாக்களும் எமது இயக்கத்திற்கு பக்கபலமாக நின்று பணியாற்ற வேண்டும்.

இன்றைய காலத்தின் தேவைக்கேற்ப, வரலாற்று ஓட்டத்திற்கு அமைய, கலை. இலக்கிய கர்த்தாக்கள் புதுமையான புரட்சிகரமான படைப்புகளை சிருஷ்டிக்க வேண்டும். இந்தப் படைப்புக்கள் எமது புனித விடுதலைப் போராட்டத்திற்கு உரம் ஊட்டுவதாக அமைய வேண்டும். சமூகப் புரட்சிக்கு வித்திடுவதாக அமைய வேண்டும்.

சமூகப் புரட்சி என்பது கலாசார மறுமலர்ச்சியை உள்ளடக்கியதாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே எனது கருத்து. சமூகப் புறநிலையில் மாற்றம் ஏற்படும் பொழுது அகநிலையிலும் மாற்றம் ஏற்படுவது அவசியமானது. பழைய முரண்பாடுகள் நிறைந்த, சமூக உறவுகளை உடைத்தெறிந்து, புதிய சமூக உறவுகளை கட்டி எழுப்பும் போது, இந்த சமூக மாற்றத்திற்கு ஏற்ப, மக்களின் மனவுலகிலும் ஒரு புரட்சி நிகழ வேண்டும். புதிய சமுதாயத்தில், புதிய உறவுகளைக் கொண்ட ஒரு புதிய வாழ்க்கையைத் தழுவும் மக்கள் ஒருபுரட்சிகரமான உலகப் பார்வையைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும். இங்கு தான் கலாசார மறுமலர்ச்சி முக்கியமாகிறது.

கலாசாரம் உயர்நிலை எய்தும் பொழுதே ஒரு இனம் மகிமை பெறுகிறது. மனித வாழ்வு உன்னதம் பெறுகிறது. மனிதம் வளர்ச்சி பெறுகிறது. கலாசாரம் உயர் நிலை பெறுவதாயின். கலாசார மறுமலர்ச்சி அவசியம். கலாசாரப் புரட்சி அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகத் தொன்மை வாய்ந்த, நீண்ட வரலாறுடைய, எந்த வொரு கலாசாரத்திலும் பழைமைவாதக் கருத்துக்களும், பார்வைகளும், காலத்துக்கு ஒவ்வாத வழக்குகளும், சம்பிரதாயங்களும், மூடநம்பிக்கைகளும் வேரூன்றியிருப்பது இயல்பு. எமது கலாசாரமும் இதற்கு விதிவிலக்கல்ல. கலாசாரம் என்ற கோலத்தில் எமது சமூகவாழ்வில் ஊடுருவி நிற்கும் பிற்போக்கான பண்புகளை, வழக்குகளை, கருத்தோட்டங்களை நாம் இனம் கண்டு களைதல் அவசியம்.

பழையன கழிந்து, புதியன சேர்ந்து செழுமைப்படும் கலை, கலாசாரம், பண்பாடு, எமது இனத்திற்கு பெருமை சேர்க்கும். எமது மக்கள் மனவுலகில் ஒரு புரட்சிகரமான விழிப்புணர்வை தோற்றுவிக்கும்.

இந்தப் புரட்சிகரமான கலாசாரப் பணிக்கு முத்தமிழ் விழா ஒரு முன்னோடியாக அமையுமென நம்புகின்றேன்.

விழா சிறக்கவும், விடுதலைப்புலிகள் கலை, கலாசாரப் பிரிவினரின் பணிகள் வளரவும் என் ஆசியும் ஆதரவும் என்றும் உண்டு.

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''

## வே. பிரபாகரன்

தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைச் செயலகம்.
விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி,
தமிழீழம்.



# நவீன உலக ஓட்டத்திற்கு இசைவாக

விடுதலைப் புலிகள் கலை, கலாசாரப் பிரிவினர் நடாத்துகின்ற முத்தமிழ் விழா, இந்தத் தேசத்தின் விருப்பங்களையும், தேவைகளையும் தழுவி நிற்கும் என நான் எண்ணுகின்றேன். எமது கலை, இலக்கிய வடிவங்களை சரியான திசைவழியில் அழைத்துச் செல்லும் என்று நம்பிக்கையுடன் இருக்கின்றேன்.

1974ஆம் ஆண்டு, இந்த மண்ணில் தமிழாராய்ச்சி மாநாடு ஒன்று நிகழ்த்தப்பட்டது. தமிழர்கள் தமது மொழியை, கலாசாரத்தை வளர்ப்பதற்காக—மேம்படுத்துவதற்காக அவ்விழாவை நடாத்தினர்.

அவ்விழாவின் வெற்றியையும், அதன்மூலம் தமிழர்களின் இனவெழுச்சியையும் பொறுக்கமுடியாத சிங்கள அரசு, மாநாட்டு மைதானத்திலேயே ஒரு படுகொலையை நடாத்தியது. ஒன்பது உயிர்களை இந்தத் தேசம் இழந்தது.

ஆயுதங்களாலும், வெடிகுண்டுகளினாலும்,

எமது மொழியை, கலாசார வாழ்வை சிதைத்துவிடலாம் என சிங்களப் பேரினவாதிகள் நினைத்தனர்.

ஆனால்,

குண்டுச் சத்தங்களிற்குள்ளும் எமது மொழி வளர்ந்தது, எமது கலைவடிவங்கள் புதுவடிவம் பெற்றன. ஒரு புதிய —புரட்சிகரமான - போர்க்குணம் மிக்க கலாசாரம் ஒன்று தோற்றம் பெற்றது.

எமது தாயகத்தின் விடிவும், விடிவுடன் இணைந்திருக்கும் மக்களின் வளமான வாழ்வும், எமது விடுதலைப் போராட்டத்தின் வெற்றியிலேயே தங்கி நிற்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த விடுதலைப் போரின் வெற்றிக்காக எமது கலை, இலக்கிய வடிவங்களும் போராடவேண்டும்.

இசையும், நாடகமும் எமது புதிய வரலாற்றை பாட வேண்டும். எதிரிக்கு அஞ்சாத போர்க்குணத்தை எடுத்தியம்ப வேண்டும்.

இயலும், இசையும், நாடகமும் போராட்டத்திற்கு துணை நிற்க வேண்டும்.

இந்த மண்ணில் விளைந்த கலைஞர்களினதும், அறிஞர்களினதும் படைப்புகளும், சிந்தனைகளும் தமிழிற்காகவும், தமிழீழத்திற்காகவும் அரும்பாடுபட்டுள்ளன. விடுதலைப்போரில் எமது மக்களை அணிவகுத்துச் சென்றுள்ளன.

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த காலம், மீண்டும் இங்கு முளை கொள்ளத் தொடங்கிவிட்டது. அதனையே இந்த முத்தமிழ் விழாவும் காட்டி நிற்கிறது.

எமது கலைகள், கலாசாரங்கள், பண்பாடுகள் யாவும் மூடத்தனத்திலிருந்து விடுபட்டு, நவீன உலகத்தின் ஓட்டத்திற்கு இசைவாகவும், அதேநேரத்தில் எம் தனித்துவத்திற்கு ஊறு செய்யாத வகையிலும் அமையவேண்டும் என நான் விரும்புகின்றேன்.

இந்த விழாவின்மூலம் எமது மொழியும், கலாசார வாழ்வும் மேம்படவேண்டும் என விரும்புகின்றேன்.

முத்தமிழ் விழா வெற்றி பெறவும், விழாமலர் மணம் வீசவும் எங்கள் விடுதலைப்போர் வெற்றி பெறவும் வாழ்த்துகின்றேன்.

**கோ. மகேந்திரராசா**
பிரதித் தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.
தலைவர்
விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைச் செயலகம்,
விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி,
தமிழீழம்



## ஊக்கமூட்டும் நிகழ்வு

நீண்ட காலத்தின் பின் தமிழீழத்தில் முத்தமிழ் விழா நடைபெறுகின்றது.

போராட்ட சூழலில் இவ் விழா நடத்தப்படுகின்றது.

சங்ககால இலக்கியங்கள் தமிழர்களின் தொன்மையை, பாரம்பரியத்தை கலாசாரத்தை எமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

முத்தமிழ் விழா நிகழ்ச்சிகளும் இக்காலத் தமிழர்களின் வீரமிகு வாழ்க்கையை எதிர்கால சந்ததிக்கு எடுத்துக் காட்டும்.

இயல், இசை, நாடகத்துறை சார்ந்தவர்கள் கால மாற்றத்திற்கேற்ப புரட்சிகர கருத்துக்களை மக்களுக்கு முன்வைக்க வரவேண்டும் அவை மக்களுக்கு வழிகாட்டிகளாக அமைய வேண்டும்.

முத்தமிழ் விழா அவ்வகையான முயற்சிகளுக்கு ஊக்கமூட்டும் நிகழ்வாக அமையட்டும்.

இவ் விழா எல்லா வகையிலும் சிறப்பாக அமையட்டும்.

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''

**யோகரத்தினம்**
**யோகி**
செயலதிபர்,
விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைச் செயலகம்,
விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி,
தமிழீழம்.



# கலைஞர்களால் தாயகம் வளம்பெறட்டும்

உலகின் திசையெங்கும், தேசங்களெங்கும் திட்டுத் திட்
டாக தமிழன் அடிமையாகக் கிடக்கின்றான். அகதியாகப் படுக்
கின்றான். அதையிட்டு அங்கெல்லாம் எவரும் கடும் சீற்றமோ,
கவலையோ படுவதாகத் தெரியவில்லை. ஒரு காலத்தில் மறத்
தமிழன் என்று வர்ணிக்கப்பட்டவன் இன்று அரைத்தமிழன்,
காற்தமிழன் என்று தேய்ந்துகொண்டிருக்கின்றான்; ஆனாலோ
தமிழீழம் மட்டும் இதற்கு மாறான திசைவழியில் சென்று
கொண்டிருக்கின்றது.

எதிரிகள் பாசறைகளை நோக்கி பரணி ஒன்று பாடத்
தக்கதாக வேங்கைகள் பாய்ந்து கொண்டிருக்கின்றனர். எங்
கள் தலைமுறைக்குள்ளேயே எம் தாயகம் விடிவுபெற வேண்
டும் — வெற்றிபெறவேண்டும் என்று உறுதியுடன் விடுதலைப
புலிகள் சாவையே தூசாகக் கருதிக்கொண்டு களத்தில் உலா
வருகின்றனர். வாழ்வா அல்லது சாவா எதுவரினும் விடுதலை
ஒன்றே குறி என்று எமது தலைவர் தனது சேனைகளை வழி
நடத்திக்கொண்டிருக்கின்றார். வெற்றியின் எல்லைகள் எங்கள்
கண்களுக்குத் தெரியக்கூடிய தூரம்வரை சென்றுவிட்டோம்.

மண் விடுதலை பெறும் அந்தக் கணத்திலேயே மக்களின்
சகல விடுதலைக்கும் இந்தப் போராட்டமே முடிவுகாண வேண்டு
மென்று ஒவ்வொரு விடுதலைப் புலிகளும் விரும்புகின்றார்கள்.
மக்களின் மனங்களை விடுவிக்கும் பணியில் எம் தாயகத்தை
நேசிக்கும் கலைஞர்களை, இலக்கியப் படைப்பாளர்களை, அறி
ஞர்களை அழைத்துச் செல்வதே விடுதலைப்புலிகள் கலை, கலா
சாரப் பிரிவினரின் முதன்மைப் பணியாகக் கொண்டுள்ளோம்.
களத்தில் நிற்கும் வேங்கைகளின் கரத்தை கலைஞர்கள் எல்
லாரும் சேர்ந்து வலுப்படுத்துவோம். இந்நாட்டின் கலைஞர்கள்
எல்லோரும் தளத்தில் நிற்பதுபோன்று, போர்க்களத்திலும் நிற்க
வேண்டுமென்று விடுதலைப் புலிகள் கலை, கலாசாரப் பிரிவின
ராகிய நாங்கள் விரும்புகின்றோம். எம் தாய்மண்ணின் கலை
ஞர்கள் வாழ்வு பெறவும், அந்தக் கலைஞர்களால் தாயகம்
வளத்தைப் பெறவும்கூடிய ஒரு நாட்டை உருவாக்குவோம். நாங்
கள் எடுக்கும் முத்தமிழ் விழாவின் சிறப்புக்கும் செழுமைக்கும்
உறுதுணையாக நிற்கும் சகல உள்ளங்களையும் வாழ்த்துகின்
றோம். விழாவையொட்டிய முத்தமிழ் விழா மலர் மணம் வீச
எனது வாழ்த்துக்கள்!

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''

**புதுவை இரத்தினதுரை**
பொறுப்பாளர்.
விடுதலைப் புலிகள்
கலை, கலாசார பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைச் செயலகம்,
விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி,
தமிழீழம்.



# எமது பெருங்கடமை

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே முதல், இடை, கடை என்று கழகம் (சங்கம்) நடத்தி இயல், இசை, கூத்து என வகைப்படுத்திச் சிறப்புடன் வளர்ச்சியுற்றுத் திகழ்ந்ததால் எம் தமிழ் முத்தமிழ் ஆயிற்று.

முடியுடை மூவேந்தர்களினதும், குறுநிலக் காவலர்களினதும் ஆட்சிக்காலத்தில் தமிழ்மண்ணில் பல தமிழ் அரசுகள் சீரோடும் சிறப்போடும் திகழ்ந்தன. அன்று கோலோச்சிய தமிழன் மாற்றார் படையெடுப்புக்களினால் பிற்காலத்தில் தனது அரசுகளையும் நாட்டு இறைமைகளையும் இழந்து அடிமையானான்.

பலநூறு ஆண்டுகளுக்குப் பின் அடிமைத்தளை அறுத்து தமிழினம் விடுதலைபெற தமிழீழ விடுதலை நோக்கிய பயணத்தை வீறுடன் நடத்திவரும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கலை, கலாசாரப் பிரிவினர் இன்று முத்தமிழுக்கு விழா எடுப்பது சாலப்பொருத்தமே.

கடல்கோள்களினால் பண்டைத் தமிழ் மண்ணின் பெரும் பகுதி மூழ்கடிக்கப்பட்டது போன்று, கடந்த 3000 ஆண்டுகளில் நடத்தப்பட்ட ஆரியப் பண்பாட்டுப் படையெடுப்புக்களினால் தமிழ்மொழி, கலை, பண்பாடுகள் சிதைக்கப்பட்டு அழிக்கப்பட்டு வந்துள்ளன; வருகின்றன.

மறைமலை அடிகள், தேவநேயப்பாவாணர் போன்ற சான்றோரால் இயற்தமிழும், தண்டபாணிதேசிகர், விபுலானந்த அடிகள், அண்ணாமலை அரசர் போன்ற அறிஞர்களால் இசைத் தமிழும் ஆரியத்தின் தாக்குதல்களினால் முற்றாக அழித்தொழிக்கப்படாது தடுக்கப்பட்டன. தமிழர்களின் கூத்து வடிவம் (நாடகத்தமிழ்) ஆரியக்கூத்தாகி ஆரியப் பண்பாட்டோடு ஒட்டிய நாட்டியங்களாக, நாடகங்களாக பெருமளவில் மாறிவிட்டன. அதை மீட்பதும் தமிழ் இயல், இசைகளைத் தனிச்சிறப்புடன் அரண்செய்வதும் எமது பெருங்கடமையாகும்.

அந்த நோக்கோடு முத்தமிழ் விழா சிறக்கவும், விழா மலர் நறுமணம் கமழவும் விழைகிறேன்.

"புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்"

**செ. சுப்பிரமணியன் (பேபி)**
மூத்த உறுப்பினர்
தமிழீழ விடுதலைப் புலிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைச் செயலகம்,
விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி,
தமிழீழம்.



## முத்தமிழின் சுடர் எத்திசையும் பரவ.

ஓர் இனத்தின் எழுச்சிக்கும் அவ்வினத்தின் மொழி வளர்ச்சிக்கும் வழி வகுத்திடும் தன்மையில், அம்மொழி சார்ந்த பல்வேறு துறைப் படைப்புக்களும் சிறப்பிடம் பெற்று விளங்குகின்றன. இவ்வடிப்படையில் பண்டைத்தமிழ் மக்களாற் போற்றப்பட்டும் இன்றும் எம்மவராற் பேணப்பட்டும் வருவன இயல், இசை, நாடகம் என்ற முத்துறைப் பிரிவுகளும் இவை சார்ந்த படைப்புக்களுமே. உலகிற் பேசப்படும் பல்வேறு மொழிகளிலும் இயல், இசை, நர்டகம் ஆகியன வழக்கிலிருப்பினும், அம்மொழிகளில் இம் முப்பிரிவுகளும் ஒருங்கிணைந்த நிலையில் ஒரு மகுடமிடப்பட்டு வழங்கி வருவதாகத் தெரியவில்லை. ஆரியம் மூவாரியம் என்றோ, ஆங்கிலம் மூவாங்கிலம் என்றோ வழங்கி வருவதை அறிய முடியவில்லை. ஆனால் நாம் மட்டும் தமிழ் மொழியின் செழுமையைப் பேணும் பொருட்டு, பண்டைத்தமிழின் பெருமையைப் பாதுகாக்கும் பொருட்டு, மொழியின் வளர்ச்சி கருதி இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றையும் போற்றி வளர்க்கும் பொருட்டு 'முத்தமிழ்' என்ற மணிமுடியினைத் தமிழன்னைக்குச் சூட்டி மகிழ்கின்றோம்.

'முத்தமிழ்' என்ற தன்மையில், நமது கண்ணுக்கும் கருத்துக்கும் புலனாகும் பொருள்களின் இயல்புகளை உரிய வகையில் விளக்குதற்கேற்ற சொல்லமைப்புக்களை உடையது இயற்றமிழ். சொல்லக் கருதிய பொருட்களைக் கேட்போர் விருப்புடன் ஏற்றுக்கொள்ளும் வகையில் இன்னோசையுடன் புலப்படுத்துவது இசைத்தமிழ். மனதில் எண்ணிய எண்ணங்களை மெய்ப்பாடுகளின் மூலம் உடம்பின் புறத்தே விளங்கித் தோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றும் வகையில் நடிப்பினால் வெளிப்படுத்துவது நாடகத் தமிழ். தேனினுமினிய தமிழ் மொழியில் தீஞ்சொற் காப்பியம் ஒன்றினைப் படைத்திட வேண்டின் முத்தமிழ்ப் பயிற்சி பெற்றிட வேண்டும் என்ற கருத்து, பழந்தமிழர்களிடையே நிலவி வந்துள்ளது. கவியரசர் கம்பர், உத்தமக் கவிஞர்களின் இயல்புகளை விளக்குமிடத்து,

''முத்தமிழ்த் துறையின் முறை போகிய
உத்தமக் கவிகட்கு ஒன்றுணர்த்துவன்''
என்று பேசியுள்ளமை உளங்கொள்ளக் கூடியதாகும்.

இன்றைய நிலையில், ஈழத்தமிழர்களாகிய எமது மன வளர்ச்சியையும் — எம்மிடையே ஏற்பட வேண்டிய இன எழுச்சியையும், பைந்தமிழின் இனிமையையும் — எம்மவரின் செயலாற்றலையும் வளர்க்கும் தன்மையில் இயல், இசை, நாடகங்கள் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. தாயக மண்ணுக்காகவும் இழந்த எமது உரிமைகளுக்காகவும் போராடிக்கொண்டிருக்கும் நாம், முத்தமிழ்' என்ற தன்மையில் இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றையும் போற்றி வளர்க்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். இதனைக் கருத்திற் கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் கலை, கலாசாரப் பிரிவினர் தமிழீழத் தாயக மண்ணில் 'முத்தமிழ் விழா' கொண்டாட முனைந்துள்ளமை காலத்திற்கேற்ற ஒரு நிகழ்வாகும்.

ஆண்டு பலகாலமாக அதிகார வெறி படைத்தோரால் அடக்கி ஒடுக்கப்பட்டு வரும் ஈழத்தமிழ்பேசும் மக்களின் இன உணர்வுகள் உரிய முறையில் மேலோங்கி நிற்பதற்கும், தமிழீழத் தாயகத்தில் அந்நிய சக்திகளினால் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்டு வரும் அனர்த்தங்களின் தாக்கங்களினால் நிலை இழந்து, மனங்கலங்கி நிற்கும் எம்மவரின் மத்தியில் புத்துணர்ச்சியும் புதுப்பொலிவும் ஏற்படுவதற்கும் இம் 'முத்தமிழ் விழா' வழிவகுத்திடும் என நம்புகின்றேன். தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை, கலாசாரப் பிரிவினரின் இந்நோக்கம் வெற்றி பெறும் வகையில், இவர்கள் ஏற்றி வைத்திடும் முத்தமிழின் சுடர் எத்திசையும் படர்ந்திட வாழ்த்துகின்றேன்.

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''

**தேவர்**
தமிழீழ விடுதலைப் புலிகளின்
மூத்த உறுப்பினர்,
முத்தமிழ் விழா பொறுப்பாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைச் செயலகம்,
விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி,
தமிழீழம்.



# இனிய தமிழுக்கு விழா

ஒரு தேசிய இனத்தின் முதன்மையான பகுதி அதன் மொழியாகும். எமது தேசிய இனத்தின் மொழியான தமிழை வளர்ப்பது எமது போராட்டக் கடமைகளில் ஒன்றேயாகும்.

எமது இனத்தை அடக்குவதுபோல், அழிப்பதுபோல், சிங்கள ஆக்கிரமிப்பாளர்களும் வெளிநாட்டு சுரண்டல் வாதிகளும் தொடர்ச்சியாக எமது மொழியின் வளத்தை ஆக்கிரமிப்பதிலும், அழிப்பதிலும் ஈடுபட்டு வருகிறார்கள்.

இத்தனை ஆக்கிரமிப்புக் கொடுமைகள் மத்தியிலும் எமது இனிய தமிழுக்கு விழா எடுப்பது சாதனையே ஆகும்.

இவ்விழாவானது ஒரு நண்பர் கூறியதுபோல் உலகில் அறிவியல் மொழிகளாக இருக்கும் ஆங்கிலம், ஜேர்மன், மொழிகள் போல் தமிழ் வளர இது, அத்திவாரமாகட்டும்.

எனது பெருந்தலைவன் வழிநின்று இவ்விழா வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

பரமு மூர்த்தி
அரசியல் பொறுப்பாளர்,
விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைச் செயலகம்.
தமிழீழ விடுதலைப் புலிகள்,
யாழ். மாவட்டம்.



# இனிவரும் நாட்களில்...

எங்கள் மொழி அழகானது. இனிமையானது.

எமது மொழி மாதிரி நாம் ஓர் அழகான இனக் கூட்டம். எம்மை மாதிரி எமது தேசமும் அழகானது.

எம்மை, எமது மண்ணை, மொழியை வளப்படுத்துவதற்காக நடாத்தப்படுகின்ற முத்தமிழ் விழாவை நான் மனதார வாழ்த்துகின்றேன்.

இந்த மண்ணின் விடிவிற்காக — விடிவின் தேவைக்காக இந்த மக்கள் பட்ட துன்ப — துயரங்களில், அவர்களின் சோகம் நிறைந்த வாழ்வை தற்கால கலை, இலக்கிய வடிவங்கள் உள் வாங்கி இருக்கின்றன. விடுதலைப் போராட்டம் சந்திக்கும் ஒவ்வொரு பிரச்சினைகளையும் நாடகமும், இசையும் எதிர் கொண்டன. இழப்புகளையும், வீரமரணங்களையும் 'அவர்களின் மனதை உருக்கும் கவிதைகளாக' எமது மக்கள் சந்தித்தனர். எமது வழமையான கலைவடிவங்கள் புதிய வடிவம் எடுத்து விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்காக போராடியது — போராடிக் கொண்டிருக்கிறது.

முத்தமிழ் விழா, இனி வரும் நாட்களில் தமிழீழத்தின் மற்றைய மாவட்டங்களிலும் நடக்க வேண்டும். இன்று எம் மிடையே சோகங்களை சுமந்து வாழும் தென்தமிழீழ மக்களின் வாழ்வு மலர்ந்து அவர்களும் இவ்விழாவினை — அந்த மண்ணி லேயே நடாத்த வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

தமிழீழத்தின் இயல்புகளை, பாரம்பரிய கலைவடிவங் களை, கலாசார வாழ்வை மேம்படுத்துவதற்காக நடைபெறும் முத்தமிழ்விழா வெற்றி பெறவேண்டும் என யாழ் மாவட்டத்து மக்களின் காவலரண்களில் கண்விழித்திருக்கும் போராளிகளின் சார்பாக வாழ்த்துகின்றேன்.

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''

**தினேஷ்**
தளபதி
தமிழீழ விடுதலைப் புலிகள்
யாழ். மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராந்தியச் செயலகம்,
தமிழீழ விடுதலைப்புலிகள்.
வன்னிப்பிராந்தியம்.



## உலகளாவ ஒலிக்கட்டும்

தமிழீழ மண் மீட்புக்கான உச்சக் கட்டப் போராட்டத்தை நாம் எட்டியுள்ள இந்த வேளையில் எமது மக்கள், எமது தாய்மொழி, விழுமை கொண்ட எமது கலை கலாசாரங்கள் என்பன சீரழிந்துவிடாமலும்; கட்டுக்குலையாமலும் பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பு அனைத்துத் தமிழீழ மக்களுடையதுமாகும் என்பதை எமது உணர்வுகளிலிருந்து பிரித்து விடமுடியாது.

ஒரு முழுமையான விடுதலைப் போராட்ட வடிவமானது வெறுமனே இரத்தப் புரட்சியால் எழுதப்படும் காவியமாகி விடாது. கட்டுக் குலையாத இலட்சியப் பாதையில் ஒரு இனத்தின் சமதர்ம உரிமைகள், உணர்வுகள், பாரம்பரியங்கள், அந்த இனத்துக்கான பண்பாட்டுக் கோலங்கள், பொருளாதார சுபீட்சங்கள் அனைத்தையும் ஒருமித்த முறையிலே முன்னெடுத்துச் செல்வதே ஒரு நிரந்தரமான விடுதலைப் போராட்டமாகும்.

இப்பேற்பட்ட உன்னதமான எமது விடுதலைப் போராட்டத்திலே மண்ணை நேசித்து மரணித்த தோழர்கள் எமது இலட்சிய வேரினைக் குருதியால் உரமேற்றிய அழியாத கலை வடிவம் பெற்றுவிட்டார்கள்.

போராட்டக் கட்டமைப்பிலே எமது விடுதலைப் புலிகள் கலாசாரப் பிரிவினரால் வடிவமைக்கப்பட்ட முத்தமிழ் விழாவானது எம்மினத்தின் மொழி அழகினை, பண்பாட்டுக் கோலத்தினை உலகளாவ ஒலிக்கச் செய்யட்டும். எமது இலட்சியப் போருக்கு உரமேற்றி வைக்கட்டும் என்று முரசம் செய்வதிலே பெருமையடைகின்றேன்.

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''

**பால்ராஜ்**
தளபதி
தமிழீழ விடுதலைப் புலிகள்
வன்னிப் பிராந்தியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டச் செயலகம்,
தமிழீழ விடுதலைப்புலிகள்,
மன்னார் மாவட்டம்.



# போர் முழக்கம் ஓயாத தமிழீழ மண்ணில்

தமிழீழ போராட்ட வரலாற்றில், பல்வேறு பரிமாண படிகளில் உயர்ந்து, நிற்கும் நாம், எமது போராட்ட உணர்வு களை, போர்க்கால உண்மைகளை விடுதலையின் மகத்துவத்தை, கலைத்துவப் படைப்புக்கள் ஊடாக மக்கள் மயப்படுத்தும் புதிய அத்தியாயத்தை ஆரம்பித்துள்ளோம். இதன் பிரதிபலிப்பாக விடுதலைப் புலிகள் கலைகலாசாரப் பிரிவினர், மகத்தான முறையில், போர் முழக்கங்கள் ஓயாத தமிழீழ மண்ணில் முத்தமிழ் விழாவினைக் கொண்டாடுவது குறித்து மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகின்றேன்.

உலக வரலாற்று அத்தியாயங்களில், சுதந்திரப் புரட்சி வெடித்த பல தேசங்களின் விடுதலைப் போராட்டங்களின் வெற்றிக்கு அந்தந்த தேசத்தின் பண்பாட்டு கலைவடிவங்கள் உந்துசக்தியாக உதவின என்பது உண்மையாகும்—

— இந்த மண்ணிலும், விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்காக கலைஞர்களும், அறிஞர்களும் தமது சிந்தனைகள் மூலமும், கலை இலக்கிய வடிவங்கள் மூலமும் எவ்வாறு போராடினார்கள் என்பதன் வரலாற்றுப் பதிவே இந்த முத்தமிழ் விழாவாகும்.

எதிரியின் எறிகணைகளுக்கு மத்தியில் முத்தமிழ் விழாவினை நாம் முனைப்புடன் கொண்டாடும் இவ்வேளையில், நான் கூறும் செய்தி என்னவெனில், எமது கலாசாரம் காப்பாற்றப்பட வேண்டிய அதே நேரத்தில் விடுதலை உணர்வை, வீரஉணர்வை வளர்க்கக் கூடியதாக எமது கலைகள் உருவாக வேண்டும். அதன் மூலம் போர்க்குணம் மிக்கதொரு சமூகம் இந்தமண்ணில் தோற்றம் பெற வேண்டும் என்பதே ஆகும்.

விடுதலைப்புலிகள் கலைகலாசாரப் பிரிவினர் ஒழுங்கு செய்துள்ள முத்தமிழ் விழாவின் இலக்குகள் இனிது நிறைவேற மன்னார் மக்களின் ஏகோபித்த மனச்சாட்சியாக நின்று வாழ்த்துகின்றேன் உளமார ஆசிக்கின்றேன்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

**சுபன்**
தளபதி
தமிழீழ விடுதலைப் புலிகள்
மன்னார் மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டச் செயலகம்,
தமிழீழ விடுதலைப்புலிகள்,
திருக்கோணமலை மாவட்டம்.



# அழிக்க முடியாத சான்று

விடுதலைப் புலிகள் கலை கலாசாரப் பிரிவினர் நடாத்தும் முத்தமிழ் விழா எமது கலாசாரத்தை சீராக்கவும், எமது கலைவடிவங்களை மேம்படுத்தவும் உதவும் என நினைக்கிறேன்.

தமிழர்கள் ஒரு தனித்துவமான இனத்தவர்கள், அவர்களிடம் அசைக்க முடியாத — இலகுவில் மாற்ற முடியாததொரு கலாசார வாழ்வு இருக்கிறது. அழகான, இனிமையான கலைவடிங்கள் இருக்கின்றன. சிங்கள அரச நிர்வாகம் தமிழீழ மண்ணில் அடக்குமுறை வடிவங்களை கட்டவிழ்த்து விட்டபொழுது எமது பண்பாட்டு விழுமியங்கள், கலாசார வாழ்வு என்பன சிதைக்கப்பட்டு விடுமோ என்று நாம் அச்சம் கொண்டதுண்டு ஆனால்,

இந்த மண்ணில் கட்டவிழ்த்து விடப்பட்ட அடக்குமுறை வடிவங்கள் எவற்றாலுமே எங்கள் தனித்துவத்தை சிதைக்க முடியவில்லை — அது முடியாதது என்பதற்கு இந்த முத்தமிழ் விழா ஒரு சான்றாகும்.

இந்த மண்ணின் மேல் சோகமும், வேதனையும், துன்பமும் கவி(ழ்)ந்த போதும் அதற்குள் வாழும் மக்களால் பாட முடியும் — ஆட முடியும். கலை, இலக்கிய வடிவங்களை விடுதலைப் போராட்டத்தின் வெற்றிக்காக பயன்படுத்த முடியும். என்பதை நாம் தெரிந்து வைத்திருந்தோம். உலகத்திற்கு கற்றுத் தந்தோம் என்ற பெருமை எங்களுக்குச் சேரவேண்டும்.

விடுதலை கிடைத்த பின்பு, எமது தேசத்தின் தலைநகரில் ஒரு நாள் 'முத்தமிழ் விழா' சீராக சிறப்பாக நடைபெறும். இன்று காடுகளில் — அகதிமுகாம்களில் துன்பத்துடன் — வேதனையுடன் வாழ்வைக் கழிக்கும் எமது மக்கள் அச்சமின்றி விழாவைக் கொண்டாடுவர். இளம் புலி வீரர்கள் வீரமுடன் அவர்களை காத்து நிற்பார்கள்.

அந்த நாளைக் காண — அந்த நாளுக்காக ஏங்கும் திருக்கோணமலை மக்களின் சார்பாக நான் முத்தமிழ் விழாவை வாழ்த்துகின்றேன்.

**குணம்**
தளபதி
தமிழீழ விடுதலைப் புலிகள்
திருக்கோணமலை மாவட்டம்

" புலிகளின் தாகம் தமிழீழ தாயகம் "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டச் செயலகம்
தமிழீழ விடுதலைப்புலிகள்
மட்டக்களப்பு மாவட்டம்



# புதிய உற்சாகம் பெற...

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓரத்திலுள்ள ஒரு காட்டில் செழித்து வளர்ந்து நிற்கும் மருதமரமொன்றின் கீழிருந்து முத்தமிழ் விழாவிற்கான இந்தச் செய்தியை எழுதுகின்றேன்.

இந்தப் போர்ச்சூழலில் இத்தகையதொரு தமிழ்விழா நடைபெறுவது சாதாரண விடயமல்ல. இது எமது மக்களின் மனஉறுதியையும், தாய்மொழிமீது கொண்ட பற்றையும், தேசப் பற்றை வெளிக்காட்டும் ஒற்றுமை உணர்வினையும் பறைசாற்றுவதாகவே உள்ளது.

இத்தகையதொரு தமிழ்விழா யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றது என்ற செய்தியை அறிந்த எனது சகபோராளிகள் ஒரு புதிய உற்சாகத்துடன் காணப்படுகின்றனர்.

உழைப்பாளி மக்களின் உணர்வலைகளை வெளிப்படுத்தும் கிராமியக் கலைகளில் எங்களுடைய பிராந்தியம் செழிப்புற்றிருப்பதை நினைத்து நான் பெருமிதமடைகின்றேன்.

முத்தமிழை வளர்க்கவும், மெருகூட்டவும் இப்பகுதிக் கலைஞர்கள் ஆற்றிய பங்குகள் அளப்பரியது. அதற்காகவே எதிரியால் அழிக்கப்பட்டுமுள்ளனர்.

இந்தப் போர்ச்சூழல் காரணமாக மட்டக்களப்புக் கலைஞர்கள் இந்த முத்தமிழ் விழாவில் பங்கேற்க முடியாதுள்ளது.

ஆனாலும் படுவான்கரைக் காடுகளில் மறைந்து வாழும் மக்களினதும், பரபரப்புடன் வாவியில் துடுப்பு வலிப்பவர்களினதும் உணர்வுகள் முத்தமிழைப் பாடும்.

எமது இயக்கத்தின் கலை - கலாசாரப் பிரிவினர் நடாத்தும் இந்த மாபெரும் முத்தமிழ் விழாவை நானும், எனது சக போராளிகளும், எனது பிராந்திய மக்களும் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''

கருணா
பிராந்தியத் தளபதி,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
மட்டக்களப்புப் பிராந்தியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைச் செயலகம்,
விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி,
தமிழீழம்.



# சுதந்திரத்திற்காக போராடும் மண்ணில்...

கலைகளினூடாகத்தான் ஒரு சமுதாயத்தின் மேம்பாடு புலப்படுத்தப்படுகின்றது. அதன் தலைத்துவமான பண்புகள் தெரியப்படுத்தப்படுகின்றன. வாழ்வும், வீழ்ச்சியும், அறிந்கொள்ளப்படுகின்றது. அத்துணை முக்கியத்துவம் பெற்ற கலைகளுக்காக முதன்முதலாக எமது தமிழீழ மண்ணில் முத்தமிழ் விழா நடாத்தப்படுகின்றது.

இந்த முத்தமிழ் விழா சுதந்திரமடைந்த தேசத்தில் நடத்தப்படவில்லை. சுதந்திரத்திற்காக , போராடும் மண்ணில் நடத்தப்படுகின்றது. அமைதியும், மகிழ்ச்சியும் நிலவும் நாட்டில் கொண்டாடப்படவில்லை அரசின் கொன்றொழிப்பு நிலவும் தேசத்தில் நிகழ்த்தப்படுகின்றது. துயரங்கள் தோய்ந்த வாழ்வுதான், இம்மண்ணில் தொடர்கின்றது. ஆனால் அவலங்கள் இங்கே அவலமாகக் கருதப்படுவதில்லை. ஆக்கிரமிப்பாளரை எதிர்த்துப் போராடியே ஆவோம் என்ற மன உறுதியைத்தான் அந்த துயரங்கள் வளர்க்கின்றன.

தாயகத்தின் விடிவிற்காக, இரத்தம் சிந்தப்பட்டுக் கொண்டிருக்கும் அதேவேளை, தேசத்தின் இறைமையை நிலை நாட்டுவதற்கு, முக்கியமான கலாசாரக் கூறுகளில் ஒன்றான கலைகளுக்கு விழா எடுக்கப்படுகின்றது.

எதிரி எம்வாழ்வை நசுக்க முயல்கின்ற அதேவேளையில் அதிலிருந்து விடுபடுவது மட்டுமல்லாமல் "எமக்கென ஒரு மொழியும், நிலமும், கலையும், கலாசாரமும் கொண்ட தனித்துவமான தமிழர்கள் நாம்" என்று தலை நிமிர்ந்து கூறுவதற்கு காரணியாக அமைகின்ற கலைக்கு விழா எடுக்கப்படுகின்றது.

எந்தக்கலைகளும் கலாசாரமும், பெண்களை அடிமைப் படுத்துகின்றனவோ அவை நீக்கப்பட்டு புதிய கலாசாரமும், புரட்சிகரமான கலைகளும் உருவாக வேண்டும் என்பதில் தேசிய விடுதலையோடு, பெண் விடுதலையையும், வென்றெடுக்கப்படுவதற்காகப் போராடிக் கொண்டிருக்கும் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

அவலங்கள், துயரங்கள், இழப்புக்களால், நாம் தளர்ந்து விடப்போவதில்லை என்பதையும் எத்துணை இடர்வந்தாலும், நாம் இடிந்து விடப் போவதில்லை. நிமிர்ந்துதான் நிற்போம் என்பதையும், அகில உலகிற்கும் எடுத்துக்காட்ட நடாத்தப்படும் இந்த முத்தமிழ் விழா சிறப்புடன் நடந்திட எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

**செல்வி ஜெயா**
பொறுப்பாளர்
விடுதலைப் புலிகள்
மகளிர் முன்னணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைப் புலிகள் மகளிர் படைப்பிரிவு,
தமிழீழம்.



# சமுதாய நன்மாற்றங்களை பெரு விளைவாகத்தர . . .

புரட்சி என்பது தனித்து தேசிய விடுதலையை மட்டும் குறித்து நிற்பதல்ல. அது ஒரு தேசத்தின் அரசியல், சமூக, பொருளாதார அடிக்கட்டுமானங்களில் ஏற்படுகின்ற முழுமையான மாற்றத்தைக் குறித்து நிற்கின்றது.

காலம் காலமாக ஒடுக்கப்பட்ட எமது மக்கள் தேசத்தின் விடுதலைக்காக களம் இறங்கி சமர் புரியத் தொடங்கி விட்டனர். சொல்லொணாத் துன்பங்களுக்கும், இழப்புகளுக்கும், மத்தியிலும் புதியதோர் சமுதாயத்தை படைப்பதற்காக அவர்கள் தம்மை விடுதலைப்போருடன் முற்று முழுதாக இணைத்துக் கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் மாறுகின்ற சமுதாய அமைப்புக்கேற்ப அதன் அரசியல், சமூக, பொருளாதார, கட்டுமானங்களிலும் மாற்றத்தை ஏற்படுத்த, மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டியது ஒவ்வொரு புரட்சியாளனதும் கடமை. இத்தகைய மாற்றத்தைத்தான் இன்று நாம் காண்கின்றோம்.

சமுதாயத்திலும், அரசியலிலும், கலை கலாசாரங்களிலும், வாழ்வு முறைகளிலும் மாபெரும் புரட்சி தொடங்கி விட்டது. அதன் அறிகுறியாகவே இயல்-இசை-நாடக முத்தமிழ் விழா நடைபெறப் போகின்றது.

மன்னரையும், கடவுளரையும் பாடியவர் எழுதியவர்கள் இன்று மண்ணை நேசிக்கத் தொடங்கி விட்டனர். மக்களை நேசிக்கத் தொடங்கி விட்டனர்.

சங்கம் வளர்த்த தமிழ் இன்று சமர் கண்ட நாயகர்களை தேசத்தின் எழுச்சிக்காக தம்மைத் தயார்படுத்திக் கொண்டிருக்கின்ற மக்களை உத்வேகப்படுத்துவதற்காக புரட்சித் தமிழாக புதுமெருகு பெற்று வளர்ந்துள்ளது.

சமூகத்தின் சமபங்கினரான பெண்களை சமையலறையிலிருந்து வெளியில் இழுத்து வந்து இன்று சரித்திரத்தின் நாயகர்களாக ஆக்கியிருக்கிறது.

அதுமட்டுமல்ல கலைவடிவங்களில் பெண்கள் பங்களிப்பை ஊக்குவிப்பதுடன் புதியதொரு வரலாற்றினை படைப்பதற்காக முத்தமிழ் விழா நடைபெறப் போகிறது.

மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணையாத வெற்று விழாக்கள் எமக்குத்தேவையில்லை. உளப் புரட்சியையும் செயற்புரட்சியையும் ஏற்படுத்தி சமுதாய நன்மாற்றங்களை பெருவிளைவாகத்தரும் பெருவிழாக்களே எமக்குத் தேவையானவை.

அத்தகையவற்றுள் ஒன்றாக முத்தமிழ் விழா அமைய வாழ்த்துகிறேன்.

'' புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''

**செல்வி ஜெயந்தி**
பொறுப்பாளர்,
விடுதலைப் புலிகள்
மகளிர் படைப் பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் உணர்வு

ஆடா மயிலாய் அசையா இளங் கொடியாய்
ஓடா நதியாய் ஒரு புதிராய் - நாடெல்லாம்
வீசாத தென்றலாய் வீசும் தமிழ்ப் பெருமை
பேசாத வாய் பிணத்தின் வாய்!

புறமும் அகப்பாட்டும் காப்பியனால் பூத்த
இறவா இலக்கணத்தின் ஏடும் - குறள் மொழியும்
ஆர்க்கும் சிலம்பின் அழகு தமிழ் நடையும்
பார்க்காத கண் பாவக் கண்!

கத்து கடல் பறித்தும் கல்லாதார் தீவைத்தும்
குத்து வடமொழியின் கூர்பட்டும் - இத்தனைக்கும்
வாடாத செந்தமிழின் வரலாறு கேட்ட பின்பும்
ஆடாத கால் ஆனைக்கால்!

வானம் அளவு வளர்ந்து மொழிக்கெல்லாம்
தானம் கொடுத்த தமிழேட்டில் - ஈனம்
படைக்க வந்தாரா? அவர் பல்லை ஒங்கி
உடைக்காத கை உலக்கை!

ஆளிருந்தால் என்ன? அழகிருந்தாலும் என்ன?
நீள் விழியார் நெஞ்சில் நிறைந்தென்ன? - கேள்தோழா
வையம் புகழும் தமிழ்க் கவிதை என்வாழ்வில்
செய்யாத நாள் செத்த நாள்!

உணர்ச்சிக் கவிஞர்
**காசி ஆனந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்களச் சிறையில் வாடிய சகோதரர்கள்



கா. சுதர்சன் கா. சிவஜெயம் காசி ஆனந்தன்

## செங்களமாடி மடிந்த சகோதரர்கள்



கப்டன் வாசு மேஜர் ஜேம்ஸ் கப்டன் சுந்தரி

சிவஜெயம் இந்தியப் படைகளுடனான போரில்
வீர மரணத்தைத் தழுவிக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரினுள்ளே

## கட்டுரைகள்


| | |
|---|---|
| ☐ செ. யோகராசா | 25 |
| ☐ கலாநிதி சபா. ஜெயராசா | 32 |
| ☐ ப. புஷ்பரட்ணம் | 36 |
| ☐ கலாநிதி இ. பாலசுந்தரம் | 57 |
| ☐ க. சொக்கலிங்கம் | 69 |
| ☐ கலாநிதி நீ மரியசேவியர் அடிகள் | 86 |
| ☐ கலாநிதி சோ. கிருஷ்ணராஜா | 89 |
| ☐ வி பி சிவநாதன் | 92 |
| ☐ க சிதம்பரநாதன் | 99 |
| ☐ வ. ஆ. அதிரூபசிங்கம் | 111 |
| ☐ கந்தையா ஸ்ரீகணேசன் | 118 |
| ☐ க. குணராசா | 129 |
| ☐ கலாநிதி அன்ரன் பாலசிங்கம் | 139 |
| ☐ காயத்ரி | 156 |
| ☐ கலாநிதி சி. க. சிற்றம்பலம் | 160 |


## சிறுகதைகள்


| | |
|---|---|
| ☐ இளையவன் | 56 |
| ☐ இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் | 101 |
| ☐ வசந்தன் | 105 |


## கவிதைகள்


| | |
|---|---|
| ☐ காசி ஆனந்தன் | 23 |
| ☐ கருணாகரன் | 30 |
| ☐ நாக. சிவசிதம்பரம் | 56 |
| ☐ சு. வில்வரட்ணம் | 64 |
| ☐ முருகையன் | 85 |
| ☐ பைப். ○ தமிழேந்தி ○ ரவி | 120 |
| ☐ மு. வே. யோ. வாஞ்சிநாதன் | 121 |
| ☐ நாவண்ணன் | 138 |



மலர் அமைப்பு;-

இளையவன். க. பாலநடராஜன்

இணுவையூர். சிதம்பர திருச்செந்திநாதன்

அட்டைப்படம்: தயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகலிட இலக்கியங்கள்
## - ஒரு கண்ணோட்டம்

செ. யோகராசா

ஈழத்து நவீன தமிழ் இலக்கியத்தின் புத்தம் புதியதொரு முகிழ்ப்பாக, அண்மைக்காலம் தொடக்கம் - குறிப்பாக, 1983 இன் பின் - வெளிவரும் புகலிட இலக்கியங்கள் விளங்குகின்றன. ஈழத் தமிழரின் பிறநாடுகளை நோக்கிய புலப்பெயர்வின் வெளிப்பாடுகளே இவை. இன்னொரு விதமாகக் கூறின் இவை புலப்பெயர்வுக் கலாசாரத்தின் அறுவடைகளாம். ஐரோப்பாவிலிருந்து மட்டும் முப்பதுக்கு மேற்பட்ட சஞ்சிகைகள் வெளிவருகின்றன. இவற்றுள் மேற்கு ஜேர்மனியிலிருந்து ஏறத்தாழ பதினைந்து சஞ்சிகைகள் வருகின்றன; மேற்கு ஜேர்மனியிலிருந்து வரும் தூண்டில் (1983), சிந்தனை (1985), தேனி (1988), புதுமை (1988), தளிர் (1990), அக்னி (1990) நோர்வேயிலிருந்து வரும் சுவடுகள், சுவிற்சலாந்திலிருந்து வரும் மனிதம் ஒல்லாந்திலிருந்து வரும் அ. ஆ. இ., பிரான்சிலிருந்து வரும் கண், சிந்து பள்ளம் (1990) என்பனவும் கனடாவிலிருந்து வரும் பார்வை, தேடல் (1989) என்பனவும் குறிப்பிடத்தகுந்தவை; கவிதை (எ - டு : துருவச்சுவடுகள்) சிறுகதை (எ - டு : மண்ணைத் தேடும் மனங்கள்) குறுநாவல் (எ - டு : ஆண்கள் விற்பனைக்கு) தொகுப்புகளும் கவனிக்கத் தக்கனவாகும். இவையும் மேற்கூறிய சஞ்சிகைகளில் வெளிவந்த கவிதைகள், சிறுகதைகள், தொடர்கதைகள் என்பனவுமே இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

புகலிட இலக்கியங்கள் எவற்றை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளன என்பதைக் கவனிக்க வேண்டும். இதற்கு முன் புகலிட இலக்கியங்களுக்கு அடித்தளமாகவுள்ள புலப்பெயர்வுக்கலாசாரம் உள்வாங்கியுள்ள அம்சங்கள் எவையென்பது பற்றி நினைவு கூரவேண்டியுள்ளது. இத்தகைய அம்சங்களுள் முக்கியமானவற்றை இவ்வாறு வகைப்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) புகலிட நாடுகளின் நிறவெறி; உழைப்பு சுரண்டல்; பொருளாதாரப் பிரச்சினைகள்; வேலை, கல்வி என்பனவற்றிற்கான சட்ட ரீதியிலான தடைகள்; அலுவலகக் கெடுபிடிகள்; மொழிப்பிரச்சினை.

(ஆ) புகலிட நாடுகளின் அகதிநிலை வாழ்க்கை; அந்நியம்; தமிழ்க் குடும்பங்களின் வாழ் நிலை இலக்கிய ஆக்கங்களை வெளியிட முடியாத நிலையும் அவற்றிற்கு எதிர்பார்த்த ஆதரவு கிடையா யாமையும்.

(இ) தாய்நாட்டு உறவு ஏக்கம்.

(ஈ) ஈழத்தின் இன அடக்குமுறைகள்.

(உ) புகலிட நாடுகளின் சமத்துவ நிலைமைகளினால் உணரப்படும் பெண்நிலைவாதம்; சாதி ஒடுக்கு முறை.

புலப்பெயர்வுக் கலாசாரத்தின் இத்தியாதி அம்சங்களைப் புகலிட இலக்கியங்கள் எந்தளவிற்கு வெளிக்கொணர்கின்றன என இனிக் கவனிப்போம்.

புகலிட இலக்கியங்களுள் எண்ணிக்கையிலும் தரத்திலும் முதன்மை பெறுபவை கவிதைகளே. இவற்றுள் பெரும்பாலானவை புதுக்கவிதைகளாகும். புகலிடங்களில் பெறும் அனுபவங்களை உள்வாங்கி தனித்துவமான முறையிலே வெளிப்படுத்தும் தன்மை புதுக்கவிதை வடிவத்திற்கே அதிகமுண்டு என்று கூறத் தோன்றுகின்றது. இத்தகு கவிஞர்களின் பட்டியல், வ. ஐ. ச. ஜெயபாலன், இளவாலை விஜயேந்திரன், சிவம், தமயந்தி, மைத்ரேயி, தம்பா, வயவை வளவன், கலிஸ்ரா, செழியன், ராகவன், ரமணன், ரஞ்சினி, கல்யாணி, சம்பு, ஜயகரன், ரஜின்குமார், சுகன் என்றவாறு நீண்டு செல்வதை அவதானிக்கலாம். ஒரு சிலரைத் தவிர இவர்களில் பலரும் கவிதையுலகிற்குப் புதியவர்களாவர்.

மேற் கூறிய கவிஞர்கள் பலரும் இன அடக்குமுறை மிகுந்தஈழ மண்ணின் கொடுரங்களையும், புகலிடங்களில் அந்நியமாகிவிட்ட நிலையினையும் துடிப்புடன் வெளிக்கொணர்வதில் முன்நிற்கின்றார்கள். இவர்களுள் குறிப்பிடத் தக்கவரான (சில காலம் நோர்வேயில் இருந்த) வ. ஐ. ச. ஜெயபாலன் எல்லோராலும் அறியப்பட்ட கவிஞராவர்.

> ''நானோ
> வழிதவறி அலாஸ்கா வந்துவிட்ட
> ஒட்டகம்போல் ஒஸ்லோவில்''

என்று, அந்நியமாகிப் போன தன்மையை எடுத்துரைக்கும் கவிஞர் (''இலையுதிர் கால நினைவுகள் 89'') நோர்வேயில் வாழும் 'மக்பாய்' பறவையை(தன்னினத்தை விட்டுப் பிரியாதது மக்பாய்) பார்த்து ஏங்குகின்றார். மக்பாய் பறவை இவர் கவிதையில் ஒரு குறியீடாகப் பரிணமிக்கின்றது. சோவியத் நாட்டுக் கவிஞன் மாயகோவ்ஸ்கி சூரியனுடன் உரையாடல் நிகழ்த்தியிருந்தான் அல்லவா? அதுபோல், ஜெயபாலனும், மக்பாயுடன் உரையாடுகின்றார்; பறவை கவிஞனைப் பார்த்துக் கூறுகின்றது:

> ''துருவத்துப் பறவைகளே
> தேடுமுந்தன் தாய்நாட்டை
> வழிப்போக்கன் குண்டி மண்ணைத்
> தட்டுவதுபோல் தட்டிவிட்டு
> வந்தவன் நீ''

கவிஞர் (வழிப்போக்கன்) தான் 'பரதேசி' யாகிவிட்ட நிலையில் சூரியனையும் பரதேசியாகப் பார்க்கின்றமை பிரமிப்பை ஏற்படுத்துகின்றது; புதிய படிமங்களும் புதிய உவமைகளும் வீச்சுடன் வெளிப்படுகின்றன.

ராகவன் கவிதைகளில் ஈழத்து இன அடக்குமுறையின் அவலங்கள் நன்கு வெளிப்படுகின்றன.

புகலிட நிறவெறியின் முன், கறுப்பராகத் தம்மை இனங்காணும் அனுபவங்கள் 'தம்பா' கவிதைகளில் காணக்கிடக்கின்றன. அந்நியமாய் விட்ட உணர்வலைகளை ஆனந்த பிரசாத் எடுத்துக்காட்டுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

894.811
MUT
AR



பெண் நிலை வாதம் பற்றி எழுதுபவர்களுள் மைத்ரேயி, கலிஸ்ரா இராஜநாயகம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்; சுசீந்திரன், ரஞ்சனி, கல்யாணி காங்கேசன் கோவிந்தகுமார், முதலானோரும் அவ்வப்போது எழுதுகின்றனர். மைத்ரேயின் 'பிரகடனம்' குறிப்பிடத்தக்கதொரு கவிதை எனலாம். அதன் ஆரம்பம் பின் வருமாறு:

''அம்மா,
யன்னலைத் திறப்பமா?
வேர்த்துக் கொட்டுது!
இல்லைப் பிள்ளை,
இந்தா விசிறி.
பேசாமப் படு!
அம்மா,
மூச்சு முட்டுது
கழுத்தை யாரோ நெரிக்கிற மாதிரி!
கதவைத் திறப்பமா?
புதுக் காத்து உள்ள வரும்.
இல்லைப் பிள்ளை
எனக்குத் தெரிஞ்ச வரை
எங்கம்மாவுச்குத் தெரிஞ்சவரை
அதற்கும் முந்தி....
எத்தனையோ தலைமுறையா
இந்தக் கதவோ யன்னலோ
திறந்தது கிடையாது
... ... ... ''

இங்கே காலங்காலமாக அடக்கப்பட்டு வந்த பெண்ணினத்தின் அமுக்கப்பட்ட உணர்வுகள் திறம்பட வெளிப்படுகின்றன அல்லவா? சாதாரணமொழி கம்பீரத்துடன் வெளிவருகிறது அல்லவா?

புலம்பெயர்ந்து வாழ்வோரின் கீழ்த்தரமான செயல்கள்பற்றி சம்பு, சிவம், மைத்ரேயி ஆகியோரின் கவிதைகள் குறிப்பிடுகின்றன.

புகலிடக் கவிஞர்களின் பார்வை விரிந்து பரந்து சர்வதேச விவகாரங்களை நோக்கித் திரும்புவதும் வலியுறுத்தப்பட வேண்டிய விடயமாகும். ஹலப்ஜா நகர் படுகொலை பற்றி (ஈரானிலுள்ள ஹலப்ஜா நகரில் ஈராக் 1988 இல் நடத்திய தாக்குதல்) ராகவனும், ஈரானிய விமானத்தினை அமெரிக்கா சுட்டுவீழ்த்தியது (1988) பற்றி ரமணனும், 'எரித்திரியா' பற்றி சித்தியும் எழுதியுள்ள கவிதைகள் இவ்விதத்தில் விதந்துரைக்கப்படவேண்டியன.

உள்ளடக்கம் எதுவாயினும் பொதுவாக மேற்கூறிய கவிஞர்களின் கவிதைகளில் துன்பியல் தன்மைகளே அடிநாதமாக ஒலிக்கின்றன. இது, தாய்நாட்டு நிலைமைகளின் பிரதிபலிப்பாக, மட்டுமன்றி புலம்பெயர்ந்து இருக்கின்ற நாட்டின் வாழ் நிலைப் பிரதிபலிப்புமாகும்.

சஞ்சிகைகளில் வெளிவரும் மொழிபெயர்ப்புக் கவிதை முயற்சிகள் பெரிதும் பாராட்டத்தக்கன. இவை தரமான கவிதைகளாக அமைந்து தமிழ் வாசகரின் கவிதை அனுபவத்தை விசாலிக்கச் செய்கின்றன என்பதில் ஐயமில்லை. ஜேர்மன் கவிஞர் ஏரிக் பிரீட், சல்மான் ருஷ்டி, உருது கவிஞர் பெய்ஸ் அகமது பெய்ஸ் முதலானோரின் கவிதை மொழிபெயர்ப்புகள் இங்கு குறிப்பிடப்படவேண்டியவாம்.

புகலிட இலக்கிய - சிறுகதைகளில் ஈழத்து இன அடக்கு முறை அவலங்களும் விடுதலைப் போராட்ட முயற்சிகளுமே அதிகம் வெளிப்படுகின்றன. ஐரோப்பிய எழுத்தாளர் ஒன்றியம் வெளியிட்டுள்ள சிறுகதைத் தொகுதியொன்றின் தலைப்பே ''மண்ணைத் தேடும் மனங்கள்'' (1985) என்பது கவனிக்கத் தக்கது; பதின்மூன்று கதைகளில் பத்துக் கதைகள் ஈழத்துடன் தொடர்புபட்டுள்ளன. விதிவிலக்காக, பாரீஸில் நிகழும் மேதின ஊர்வலம் பற்றியும் (செ. குணசிங்கம் எழுதிய வேடதாரிகள்), போதை வியாபாரத்தில் ஈடுபடுவது பற்றியும் (மேற்கு நோக்கிய பறவை - மலர்) புகலிடத் தமிழ்த் தொழிலாளர் பற்றியும் ('எப்படிப் புரியும்?' - செல்வம்) மூன்று கதைகள் அமைகின்றன. இவையும் ஈழத்துடன் தொடர்புபட்டே அமைந்துள்ளன. சஞ்சிகைகளில் வெளிவரும் சிறுகதைகளுக்கும் இத்தியாதி தன்மைகள் ஏற்புடைய

107080
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
ARCHIVES

னவாம். சஞ்சிகைகளில் அடிக்கடி எழுதுப வர்களாக விக்னா பாக்கியநாதன், பார்த் திபன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

சிறுகதைகள் எழுதுவோர் பலரும் எழுத்துலகிற்குப் புதியவர்களே. இதனால், இளம் எழுத்தாளர்களுக்குரிய பலவீனங்கள் அனைத்தும் - மேலோட்டமான பார்வை பிரச்சார வாடை, அடிக்கடி தலையிடுதல் முதலியன - இவர்களது கதைகளிலும் தலை காட்டவே செய்கின்றன.

தொடர்கதைகள் வெளியிடும் சஞ்சிகை கள் மிகச்சிலவாகும். க. ஆதவன் எழுதி வந்த ''மண்ணின் மணம்'' செழியன் எழுதி வந்த ''ஒரு மனிதனும் எங்கள் தேசமும்'' ஆகியவை இவ்விதத்தில் கவனத்திற்குரியன வாகும்:

பல குறுநாவல்கள் எழுதிவெளியிட்டு ஐரோப்பாவில் பரவலாக அறியப்பட்ட எழுத்தாளராகக் காணப்படுகின்றார் பார்த் திபன். இவரது குறுநாவல்களின் உள்ளடக் கம் பொதுவாக ஈழச் சமுதாயப் பிரச் சினைகளேயாகும். எடுத்துக்காட்டாக, இவ ரெழுதிய 'வித்தியாசப்படும் வித்தியாசங் கள்' (1987) சாதிக் கொடுமைகள் பற்றி யது; 'ஆண்கள் விற்பனைக்கு' (1988) சீதனப் பிரச்சினை பற்றியது. உள்ளடக்கம் ஈழத்துள்ள தமிழ்ச் சமுதாயமாயினும், இவற்றை எழுத உந்தியது புகலிடச் சூழ் நிலை என்பது குறிப்பிடத்தக்கது. ஆண்கள் விற்பனைக்கு குறுநாவலின் முன்னுரையில் பார்த்திபன் குறிப்பிடுவது இங்கு எடுத் தாளத்தக்கது. அவர் கூறுகின்றார்:

> '.சீதனம் என்பது இப்போது பெரிய பிரச்சினை அல்ல என்பது போல பலர் பேசிக் கொள்கிறார்கள். அது தவறானது என்பதை என்னால் நேரடியாகவே கண்டு கொள்ள முடிந் தது. சகோதரிகளுக்காக, பன்னிரண்டு மணித்தியாலங்களுக்கும் மேலாக காச் சம்பளத்தில் அடுப்பு வெக்கைக்கு முன்னால் வெந்து கொண்டிருக்கும் சகோதரர்களைச் சந்தித்த போதும், அட்டகாசமான திருமணக் கொண் டாட்டங்களில் பங்குபற்றும் பலர் தங்களுக்குள் மணமக்களைப் பற்றிக் கதைத்துக் கொள்ளும் போதும், அர சியல் தஞ்சம் ஏற்றுக் கொள்ளப்பட்ட வர்கள், வேலை செய்பவர்கள் குடியேற்ற அந்தஸ்து கிடைத்தவர்கள் தங்களுடைய 'விலை' கூடிவிட்டதாக அறிவிக்கும் போதும், ஊரிலுள்ள ஆதனங்களை விற்று, கூடவே குடும் பத்தையும் கடனாளியாக்கிவிட்டு, சீதனப் பொதியுடன் பிராங்போர்ட் விமான நிலையத்தில் வந்து குவியும் தமிழ்ப் பெண்களைப் பார்த்த போதும் சீதனம் என்பதன் பாதிப்பு தெளி வாகவே புரிந்தது...''

சீதனப் பிரச்சினையில் மட்டுமன்றி, பொது வாகவே சமூகநோக்கு ஆசிரியரிடம் ஏற் படுவதற்கும் புகலிடச் சூழ்நிலையே அடிப் படையாக விளங்கியது என்று கூறுவதில் தவறில்லை. ''வித்தியாசப்படும் வித்தியா சங்கள்'' முன்னுரையில்,

> ''நமது தாய் நாட்டிலிருந்து மாறுபட்ட சூழ்நிலையில் நாட்களைக் கடத்திக் கொண்டிருக்கிறோம். ஜேர்மனியர் களிடமிருந்து அற்ககோல், டிஸ்கோ, பெண்சுகம் ஆகியவற்றை மட்டுந்தான் பின்பற்றிக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் எதுவும் இல்லை. நல்லவற்றையும் அவர்களிடமிருந்து படித்துக் கொள்ளலாம்...''

என்று குறிப்பிட்டுச் செல்வது இதற்குச் சான்றாகின்றது. ஆரம்ப குறுநாவல்களில் கட்டுரைத்தன்மை, இறுக்கமற்றநிலை, ஆசிரியத் தலையீடு என்பன காணப்பட் டாலும் பின்னர் இத்தகைய குறைபாடு களிலிருந்து விலகிவரும் போக்கினை அவ தானிக்கலாம். எளிமை வாய்ந்த அனாயாச மான நடை இவரது பலமாகின்றது.

ஆக்க இலக்கியங்களைவிட, நாடகம், புகலிட நாடுகளில் பல பிரச்சினைகளை— நடிகர்கள் பற்றாக்குறை, நேரமின்மை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்திகை ஒழுங்குச் சிக்கல்கள், விளம்பரச் சிரமம், நிதி என்பனவற்றை — எதிர் கொள்ள வேண்டியுள்ளது. இவற்றின் மத்தியிலும் ஈழத்தின் குறிப்பிடத்தக்க நெறியாளராக விளங்கிய பாலேந்திராவின் பங்களிப்புகள் இவ்விதத்தில் காத்திரமானவையாகும். இலண்டனில் பாலேந்திரா குழுவினர் மேடையேற்றிய 'பார்வையாளர்கள்' 'மழை' 'எரிகின்ற எங்கள் தேசம்' 'யுகதர்மம்' 'முகமில்லாத மனிதர்கள்' முதலியன இருபதிற்கு மேற்பட்ட மேடையேற்றங்களைக் கண்டுள்ளதாக அறிய முடிகின்றது. ஆயினும், புகலிட நாடுகளில் மேடையேறும் பெரும்பாலான நாடகங்கள் சமூகப் பிரக்ஞையற்று வெறும் பொழுதுபோக்குச் சார்ந்து நகைச்சுவை நாடகங்களாக அமைவதாகவே அறிகின்றோம். மக்கள் மத்தியில் இலகுவான முறையிலும் வலுவான முறையிலும் கருத்துக்களை முன்னெடுத்துச் செல்லும் கலை வடிவங்களுள் நாடகமே தலை சிறந்ததென்பது அறிந்ததொன்றே. மேலும், தரமான பிறமொழி நாடகங்களுடன் பரிச்சயங் கொள்ளும் வாய்ப்பும் புகலிட நாடுகளில் அதிகமுண்டு. இவ்வாறிருந்தும் ஆரோக்கிய மற்ற வளர்ச்சி காணப்படுவது விசனத்துக்குரியதாகும்.

இறுதியாக, அழுத்திக் கூறவேண்டிய தொன்றுளது. அண்மைக் காலம் வரையிலான புகலிட இலக்கியங்கள் பெரும்பாலும் தாய்மண்ணைத் தழுவியதாகவே — ஈழத்தைச் சார்ந்ததாகவே — காணப்படுகின்றன. இதுமட்டுமே புகலிட இலக்கியங்களின் பண்பாகமாட்டாது. புகலிட வாழ்நிலைப் பிரச்சினைகளைக் கூர்மையுடன் சித்திரிப்பதாகவும் அது அமைவது அவசியம்; அப்போதுதான் 'புகலிட இலக்கியம்' என்பது அர்த்தமுடையதாகும்; முழுமை எய்தும். அந்நிலை இனிமேற்றான் ஏற்படவேண்டும்; விரைவில் ஏற்படுவதற்கான சாத்தியப்பாடு காணப்படவே செய்கின்றது.

## முத்தமிழ்

உலக மொழிகளிலே மொழிக்கு மூன்று என்ற அடைமொழி தந்து 'மூன்று தமிழ்' அதாவது **"முத்தமிழ்"** என்று வழங்கப்படுவது தமிழ் மொழிக்கு மட்டுமே அமைந்த தனிப்பெருஞ் சிறப்பாகும். மொழியில் நுட்பங்களையெல்லாம் நன்கு ஆராய்ந்து அறியவல்ல சான்றோர்கள் **"முத்தமிழ்"** என்று அழைக்கலாயினர்.

முத்தமிழ் என்பதற்குப் பொதுப்படையாக "இயற்தமிழ்" இசைத்தமிழ் "இயக்கத் தமிழ்" அல்லது "நாடகத் தமிழ்" என்று கூறுவர். இயலுக்கு என்று ஒரு தமிழ், இசைக்கு என்று மற்றொரு தமிழ், நாடகத்திற்கு என்று வேறோர் தமிழ் என்ற அடிப்படையில் மூன்று வகையான தமிழ்கள் தனித்தனியாக இருக்கின்றனவா? என்றால், இல்லை. "இயலால் ஆனதமிழ்" "இசையால் ஆனதமிழ்" "நாடகத்தால் ஆனதமிழ்" என்றும் மூன்று வகையான தமிழ்களும் இல்லை. அப்படியாயின் ஏன் முத்தமிழ் என்று பேரிட்டு அழைத்தனர் என்று வினவக் கூடும்.

தமிழ்ச் சான்றோர்கள் மொழியின் நுட்பங்களை நன்கு அறிந்திருந்த காரணத்தால், மொழிக்கு **"இயல்தன்மை" "இசைத்தன்மை" "இயக்கத்தன்மை"** அதாவது **"நாடகத்தன்மை"** ஆகிய மூன்று தன்மைகளும் உண்டு என்பதைக் கண்டறிந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முனைமழுங்கா நினைவுகளும் முளைவிடும் நாங்களும்

மழை காவிய முகில்களினூடே
சூரியன் உலவிய சுவடுகள் மரங்களில்
மழையில் சிலிர்த்த
பூக்களும் மொட்டும் பொலிந்த காலையில்
தூரமாய்ப் பட்சிகள் பறந்து மறையுமுன்
ஜீவனடங்க,
பேரொலி எழுப்பி வானில் திரிந்தன
மூன்று போர் விமானங்கள்.

கூடிய சந்தை ஓடிக் கலைந்தது
கடை; தெரு வீட்டிலுமிருந்து
வாழ்வின் பேறு உயிர் ஒனறென
உயிரை சுமையாய் சுமந்து ஓடினர் மனிதர்
யுத்த விமானங்களின் கீழே நசிந்தது நாள்.

□ □

அடையாளம் தவறிய கைதுகளில்
முன்பும்
எங்கள் ஊர்கள் இழவு கண்டன.
மூன்று அல்லது நான்கு இராணுவ வண்டிகள்
உறுமியபடியே
கிராமத்தில் நுழையும்.
எந்த வீட்டின் முன்பும் நிற்கும்.
துவக்குகள் தூக்கிய விஷமனிதர்
அரசின் ஏவலைத் தலையெனக் கொண்டு
சேவகமாய்
எவரையும் கைது செய்வர் ஐயத்தில்.
விடுதலை பற்றிச் சிந்திப்பதுவும்
விலங்கிட்ட முறையை எதிர்ப்பதுவும்
இங்கு பெரும் குற்றமெனவே
அடையாளம் தவறிய கைதுகள் நிகழ்ந்தன.

ஊரில்,
ஒவ்வொரு கைதும் நிகழும் போதும்
சுதந்திரம் பற்றிய இலட்சிய மனிதர்
நூறு நூறாய் முளைவிட்டனர்.
கைதும் சித்திரவதையும்
காவலுள் கொலையும் நிகழ்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறியின் செயலை வெறுத்துப் பறந்தார்.
புதிய வேருடன்
முளை விட் டெழுந்தார்
முனை மழுங்கா நினைவுகளில் இன்னும் இவை
எங்கள் வாழ்வின் இராணுவக் கொடுமை போலவே.

□ □

குறிதவறிய குண்டு வீச்சில்
வாழைத் தோட்டத்தில் நீர்விட்டவரோ
'ஆஸ்பத்திரி' வளவில் மூன்று குழந்தைகளும்
வேறுசில நோயாளரும்,
மிதி வண்டியில்
சுமை இழுக்கும் ஓர் வியாபாரி
போர்க்கள மொன்றில் அகதியான சிறுமியென
எவரும் கொலையுண்டிறப்பர்.
கொலையுறும் எவரும் தமிழர் என்பதே
இங்கு இலக்கு என்பதனால்
ஜீவனடங்க,
ஊரின் முகட்டில் பேரொலி எழுப்பி
மரணப் பறவைகள் மனிதரைத் தேடுதலாய்...

புத்த கோபுரங்களில் 'பிரித்' ஓதிடும்
பௌத்த பிக்குகளின் காதுகள் செவிடுபட
எங்களின் அழுகுரல்களையும் மேவி ஒலித்த
யுத்தப் பேரோசை
எங்கள் மண்ணில்
பாடசாலை வளவில் நின்ற
அரச மரத்தில் வீழ்ந்த குண்டில்
அரசும் முறிந்து வீழ்ந்து போயிற்று.
இந்தப் போரில,
'மஹாவம்சத்தின்' துருப்பிடித்த சத்தியங்களை
உண்மையின் நெருப்பில் எரித்து முடிப்போம்.

சொந்த மண்ணில் வாழ்வு முளைக்க
நம்மை
விதைக்கும் நிலையில் மகிழ்வைக் கொள்ளும்
இந்த நாளை
துணிவுடன் ஏற்பீர் துணிவுடன் ஏற்பீர்
பேரொலி எழுப்பி வானில் திரியும்
யுத்த விமானங்களின் கீழும் நீவிர்
இனியும் இனியும் அணியாய் திரள்வீர்.

கருணாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர்பியல்

# அதிகம் பயன்படுத்தப்படுவதும் அதிகம் ஆராயப்படாததுமான புலம்-

கலை இலக்கியங்கள் அனைத்தும் தொடர்பியல் நிலைப்பட்ட தேடலாகவே எழுந்தவை. தொடர்பியல் என்பது வாழ்க்கையின் உயிர்ப்பூட்டலாக அமைகின்றது. சமூகச் செயற்பாடுகளின் ஒன்றிணைந்த வெளிப்பாடாக அமைவதும் தொடர்பியலே. சமூகத்தின் பன்முகப் பரிமாணங்களுக்கேற்றவாறு வேறுவேறுபட்ட அளவிலும் பண்பிலும் தொடர்பியல் வெளிக்கிளம்புகின்றது.

கல்விச் செயற்பாடுகளும், கலை இலக்கிய ஆக்கங்களும் தொடர்பியலும் வேறு பிரிக்க முடியாதவை. அவற்றின் வழியாக கருத்துக்கள், மனவெழுச்சிகள், உணர்ச்சிகள், அனுபவங்கள் ஊடு கடத்தப்படுகின்றன. மனிதவாழ்க்கையின் மிக மேம்பாடான வடிவமாகிய உழைப்பின் செய்தி வடிவான ஆக்கம் தொடர்பியலின் வழியாக வெளிப்படுகின்றது. வெகுசிக்கலாகிச் செல்லும் தொடர்பியல் மனிதப்பண்பாட்டு முன்னேற்றத்தின் குறியீடாக இருக்கின்ற வேளை அவலங்களும் ஒடுக்கு முறைகளும் அவ்வாறான சிக்கல் நிரம்பிய தொகுப்பினூடாக மேலும் முன்னேற்றகரமாகக் காட்டப்படுகின்றது.

சிக்கலாகும் தன்மை என்றால் என்ன? தெளிவு, செறிவு, தாக்கம், பன்முகப்பாடு, வேகம் என்பவற்றை உள்ளடக்கியதே சிக்கலாகும் தன்மையாகும். புராதன மனிதரின் தொடர்புக் கோலங்கள் மிக எளிமையானவை. அங்க அசைவுகள், சைகைகள் என்பவற்றிலிருந்து இசை, நடனம், ஓவியம், சிற்பம் முதலியவை படிமலர்ச்சி கொள்ளத் தொடங்கின. அவ்வாறான செயல் முறைகளினூடே ஏற்பட்ட முக்கியமான நிகழ்ச்சி ''அருவமாக்கல்'' அல்லது ''சூக்குமவெளிப்பாடு'' என்பதாகும். தொடர்புகளை மிகவும் விசைப்படுத்திய மாற்றீடில்லாத சாதனமாக ''மொழி'' அமைந்தது.

கலாநிதி
சபா. ஜெயராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக வளர்ச்சிச் செயல் முறைகள் தொடர்பியலை நிறுவனப்படுத்தின. நமது மரபிற் பாணனும், பாடினியும், கூத்தனும் நிறுவன வளர்ச்சியைப் புலப்படுத்தினர். உழைப்பின் அனுபவங்கள், வேறுபட்ட பொருளாதாரச்சூழல் பன்முகப்பட்டமுரண்பாடுகள் என்பனவற்றுக்கேற்றவாறு வேறு வேறுபட்ட மொழியமைப்புகள் விருத்தியடைந்தன. வர்க்க வேறுபாடுகள் மொழியின் ஆளுகையை வேறுபடுத்தின. மேலோங்கிய வர்க்கம் தனக்கே உரித்தானதும் சாதாரண மக்களுக்கு அன்னியமானதுமான மொழியைப் பயன்படுத்தலாயிற்று. காலனித்துவ மேலாதிக்க முறைமையோடு அவர்களின் மொழியும் ஒன்றிணைந்தது. இன ஒடுக்கு முறைகளோடும் மொழி இணைந்திருந்தது.

**நவீன தொடர்பியல்:**

அச்சு இயந்திரத்தின் ஆளுகையோடு நவீன தொடர்பியல் ஆரம்பமாகின்றது. விசைமிக்க தொடர்பியலை அச்சு இயந்திரம் ஏற்படுத்தியமையால் ''அச்சு வாகனம்'' என்ற தொடரும் தமிழில் வழங்கலாயிற்று. ஆரம்பகால நூலாக்கம், பத்திரிகையாக்கம் முதலியவை தனியாள் வயப்பட்ட தொனியைக் கொண்டிருந்தன. ஆறுமுகநாவலரின் அச்சு இயந்திரசாலையில் அவரது நூல்களே பிரசுரிக்கப்பட்டன. அல்லது அவர் பரிசோதித்த பதிப்புகளே வெளியாகின. ஆரம்பகாலப் பத்திரிகைகளின் பக்கங்கள் பெருமளவில் அவற்றின் ஆசிரியர்களால் நிரப்பப்பட்டன.

பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து வளர்ச்சி பெறத் தொடங்கிய செய்தி நிறுவனங்களின் அமைப்பும், உலகளாவிய முறையில் அவற்றின் தொழிற்பாடுகளும் பல்வேறு முரண்பாடுகளை வளர்த்தன. அவற்றின் பின்புலத்தில் பின்வரும் முரண்பாடு பெருமளவு கவன ஈர்ப்பைப் பெறுகின்றது.

(அ) நலிவு எழுத்தாக்கம்.

(ஆ) பண்பு மேலோங்கிய எழுத்தாக்கம்.

நலிவு எழுத்தாக்கம் வாசகரைப் பற்றிய "தாழ்வான" அபிப்பிராயத்தைப் பிரதிபலித்தது. சமூக உணர்வுகளை நலிவடையச் செய்தது. மட்டரகமான பாலியல் உணர்வுகளுக்கு இடமளித்தது. இந்த முரண்பாடுகளைத் தமிழில் விளக்குவதற்கு ''குமுதம்'', ''இந்தியா ருடே'' ஆகிய இரு சஞ்சிகைகளையும் ஒப்பிடலாம். குமுதம் இதழ் தமிழ் வாசகரை ''தாழ்வான'' நிலையில் மதிப்பீடு செய்ய, 'இந்தியா ருடே' உயர்வாக மதிப்பீடு செய்தது.

தொடர்பியலின் மிகமுக்கிய திருப்பமாக அமைவது மின் வழியாக இயக்கப்படும் தொடர்பு முறையாகும். தொலைபேசி, தொலைப்பதிவு, வானொலி, சினிமா, தொலைக்காட்சி முதலியவை பெருமளவு தொடர்பூட்டலுக்கு வழியமைத்ததுடன், பரும்படியாக்க உற்பத்தியையும் நுகர்ச்சியையும் தொடர்புக்கோலங்களிலே ஏற்படுத்தின.

1894இல் முதலாவது படச் சுருள் திரையிடப்பட்டது. 1895ஆம் ஆண்டளவில் தொடர்புக்கம்பிகள் இல்லாத ஒலிபரப்பு ஏற்பட்டது. 1923ஆம் ஆண்டில் முதலாவது தொலைக்காட்சி திரையிடப்பட்டது. 1954இல் வண்ணத் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒளிபரப்பானது. 1962ஆம் ஆண்டில் முதலாவது தொடர்பியல் வர்த்தகச் செய்ம்மதி விண்வெளிச் சுற்றுப்பாதைக்கு அனுப்பப்பட்டது.

வானொலி ஒரு ''குருட்டுச் சாதனமாக''க் கருதப்பட்டாலும், தொடர்பியலில் ஒரு பலம் வாய்ந்த சாதனமாகக் கொள்ளப்படுகின்றது. எழுத, வாசிக்கத் தெரியாத மக்களிடத்துத் தகவல்களைப் பாய்ச்சும் எளிய சாதனம் அது. ரான்சிஸ்ரர் கண்டுபிடிக்கப்பட்டமை, குறைந்த விலை வானொலிப் பெட்டிகளின் ஆக்கம் முதலியவை தொடர்புப் பரிமாணங்களை மேலும் விசாலப்படுத்தின. மூன்றாம் உலகநாடுகளின் அபிவிருத்தித் தொடர்புப் பணிகளில் வானொலியின் செயற்பாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பீட்டளவில் முதன்மை பெறுகின்றன. செய்தி வழங்கும் பணியில் சினிமாவின் பங்களிப்பு வானொலியிலும் குறைந்ததாயினும், கருத்துப் பரிமாற்றங்களிலும் மனோபாவ ஆக்கங்களிலும் சினிமா பலம் மிக்க சாதனமாகும். மேலும், சினிமாவின் கலைப் பிரயோகத்திலும் அதன் வர்த்தகப் பிரயோகமே உலகளாவிய முறையில் மேலோங்கியுள்ளது.

வசதியான முறையில் பெருமளவு பொழுதுபோக்கை வழங்கக் கூடிய சாதனமாகத் தொலைக்காட்சி வளர்ந்து வருகின்றது. உலகளாவிய தொலைக்காட்சிச் செய்திப் பரிவர்த்தனையிலும், கட்டமைப்பிலும், பல்தேசியக் கம்பனிகள் பலம் வாய்ந்த இடத்தைப் பெறுவதால் அந்நிறுவனங்களின் கோட்பாடுகள் நிகழ்ச்சியாக்கங்களைத் தாக்குகின்றன. ''விளம்பரங்களுக்காகவே நிகழ்ச்சிகள்'' என்ற நலிவு ஏற்படத் தொடங்கியுள்ளது. 1971ஆம் ஆண்டிலிருந்து ஒலி, ஒளிக் கஸற்றுகள் சந்தைக்கு வந்தன. தகவல்கள், தரவுகள் முதலியவற்றைச் சேர்த்தல் களஞ்சியப் படுத்தல், பரப்புதல் முதலியவற்றில் இவை பலம் வாய்ந்த சாதனங்களாக வளர்ந்து வருகின்றன. செய்ம்மதிகளினூடான செய்திப் பரிவர்த்தனை, ஒலி, ஒளிபரப்பு, தகவல் திரட்டல் தொலைப்புலன் நுகர்வு முதலியவை 1973ஆம் ஆண்டுக்குப் பின்னர் வேகமாக வளர்ச்சியடையத் தொடங்கின. இவற்றோடு இணைந்ததாகக் கணனிகளின் உபயோகம் மேலும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது.

தொடர்பியல் அழகியலுடன் இணைந்தது. தொடர்பியல் வழியாக அறிவும், அழகும் கடத்தப்படுகின்றன. அழகும் அறிவும், திறன்களும் வாழ்க்கையின் ஒவ்வொரு படிநிலைகளுக்கேற்பவும் சந்தர்ப்பங்களுக்கேற்பவும் வழங்கப்படுகின்றன. பண்பாட்டு மேலோங்குகையிலே தொடர்பியல் பங்கு கொள்ளுகின்றது.

## தொடர்பியலும் மொழியும்:

உலகில் 3,500 மொழிகளுக்குமேல் வழக்கில் உள்ளன. இவற்றுள் பல மொழிகள் பேச்சு மொழிகளாகவேயுள்ளன. எழுத்து வடிவுள்ள மொழிகள் ஐந்நூறுக்குச் சற்றுக் கூடுதலாகவுள்ளன. ஐந்து கோடி மக்களுக்கு மேல் பேசப்படும் மொழிகள் பதினாறு.

அவையாவன:

ஆங்கிலம். ரூசியன், ஸ்பானிஸ், ஹிந்தி, சீனம், போர்த்துக்கீஸ், வங்காளி, ஜேர்மன், யப்பானிஸ், அரபு, உருது, பிரெஞ், மலே, இத்தாலியன், தெலுங்கு, தமிழ் என்பனவாகும்.

ஆபிரிக்கக் கண்டத்தில் மட்டும் 1250 மொழிகளுக்கு மேல் வழக்கிலுள்ளன. ஆனால் அவை விருத்தி செய்யப்படாத நிலையில் உள்ளன. ஒவ்வொரு மொழியையும் விருத்தி செய்தல் அந்த மொழியை பேசும் மனிதரின் தொடர்புத் திறனையும் ஆளுமையையும் வளர்ப்பதற்குரிய உபாயமாகும். தாய்மொழியே தொடர்பியலுக்குரிய உன்னதமானதும், மாற்றீடில்லாததுமான கருவியாகும்.

## தொடர்பியற்கோட்பாடு:

பேராசிரியர் டி. லஸ்வெல் என்பார் தொடர்பியல் பற்றி எழுப்பிய வினாக்கள் விதந்து பேசப்படுவதுண்டு.

யார்—

எதனை—

எந்தச் சாதனத்தின் வழியாக—

யாருக்கு—

எத்தகைய தாக்க விளைவுகளுடன்— என்பது அவரது வினாக்கள்.

''யார் என்பது தொடர்பு கொள்ள முயல்பவரையும், ''எதனை'' என்பது வழங்கப்படும் செய்தியையும், ''சாதனம்'' என்பது செய்திகடத்தப்படும் வழிமுறையையும், ''யாருக்கு'' என்பது செய்தியைப் பெறுபவரையும் குறிப்பிடுகின்றன, செய்தியை வழங்குநர் செய்திக்குறியமைப்பவர் அல்லது சங்கேதப்படுத்துநர் என அழைக்கப்படுவார். ''செய்தி'' என்பது ஒலி, ஒளி, படம், சொல் என்ற எந்த ஊடகத்தின் வழியாகவும் இடம் பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தியை ஊடுகடத்தும் பொழுது அவற்றிலே குறுக்கீடுகள் இடம் பெறலாம். செய்தியை வழங்குபவருக்கும், பெறுப வருக்குமிடையே நிகழும் அனைத்துக் கவ னக் கலைப்பான்களும் குறுக்கீடுகள் (நொய்ஸ்) எனப்படும். பெறுபவர், தவ றாக விளங்கிக் கொள்ளல் பொருள்சார் குறுக்கீடுகள் எனப்படும். இவை பற்றிய ஆய்வுகள் மிகவும் முக்கியமானவை.

**வெகுசனம்:**

ஒரே செய்தியை ஒரு குறித்த கால அளவீட்டில் அதிக அளவு மக்களுக்கு விநி யோகிப்பதற்குரிய எண்ணக்கருவாக ஒருசில ரால் ஒழுங்கமைக்கப்பட்டதே "வெகுசன சாதனம்" என்ற தொடராகும். பொது மக்களை அன்னியப்படுத்தும் ஒரு தொட ராகவே "வெகுசனத்திரள்" (மாஸ்) என்பது பயன்படுத்தப்பட்டது. இத்தொடரானது பொதுமக்களை அரசியல் நோக்கிலும், பண்பாட்டு அடிப்படையிலும், சுரண்டுவ தற்கான ஓர் அளவிடாகவே மேற்கு நாடு களிலே பயன்படுத்தப்படுகின்றது.

ஒவ்வொரு மனிதரதும் தனித்துவமான ஆளுமைக் கோலங்களை மறந்து, அவர் களை ஒரு திரளாகக் கருதுதல் தீவிரமான "சந்தைப் பொருளாதாரத்தின்" பண் பைப் புலப்படுத்துகின்றது.

தரக்குறைவான சுவைகளை வளர்த் தலும், கனங்காத்திரமான விஷயங்களை நொய்ம்மைப்படுத்தலும் வெகுசனங்களைத் தாழ்மைப்படுத்தும் நடவடிக்கைகளா கும். தகவல், கல்வி என்ற பண்புகளைக் கைவிட்டு, தனித்துப் பொழுது போக்கை மாத்திரம் வழங்குதலும், வெகுசனங்களின் ஆளுமையை நிராகரிக்கும் நடவடிக்கை களாகும்.

மலினமான பொழுது போக்கை நிரா கரிக்கும் இன்றைய எமது சூழல் ஆற்ற லும், ஆளுமையும் கொண்ட ஒரு சமூக நிருமாணத்தைப் பற்றிய குறியீடாகவே அமைகின்றது.

தமிழில் தொடர்பியலின் சமூக முரண்பாடு சார்ந்த வெளிக்கிளம்பல்களைச் சுட்டிக்காட்டுவதில் பேராசிரியர் கா. சிவத் தம்பி அவர்களின் பங்களிப்பு பல்வேறு பரிமாணங்களைக் கொண்டதாக அமை கின்றது.

## அழகுக்கலைகள்

*உலகில் அறிவியற் கலையையும், அழகுக் கலைகளையும் எந்தநாடு செம்மையாகவும், சிறப்பாகவும், முறையாகவும், வகையாகவும் வளர்க்கின் றதோ அந்தநாடு நாகரிக மேம்பாட்டையும், பண்பாட்டு உயர்வையும் மிக நல்ல முறையிலே பெற்று விளங்கும் என்பது கண்கூடு. இந்த இலக்கணத்தை முழுமையாகப் போற்றி வளர்த்த காரணத்தால்தான் பண்டைத் தமிழகம் உலக நாடுகளிடையே நாகரிகத்திலும் பண்பாட்டிலும் மிக் மேம்பட்டு விளங்கிற்று.*

*தமிழகம் வளர்த்த அழகுக் க்லைக்ளில் இன்றைக்கும் உலகம் போற்றிப் பாராட்டி, வாழ்த்தி வரவேற்கும் நிலையில் சிலபல அழகுக் கலைகள் தமி ழகத்திற்குப் புகழையும் பெருமையையும் சேர்த்துக் கொண்டிருக்கின்றன. அவைகளில் மிகச் சிறப்பித்துச் சொல்லக்கூடியவைகள்.*

1. இலக்கியக்கலை
2. இசைக்கலை
3. நாட்டியக்கலை
4. சிற்பக்கலை
5. கட்டடக்கலை
6. சித்தமருத்துவக்கலை
7. சமையற்கலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகர் - புதிய நோக்கு

ஒரு நாட்டில் உள்ள எல்லாப் பிராந்தியங்களுக்கும் தனித்துவமான பாரம்பரிய வரலாறு அமைவதில்லை. இவ் வகையில், யாழ்ப்பாணம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே இலக்கியங்களிலும், கல்வெட்டுக்களிலும் தனித்து இனங்காணப் பட்டு வந்திருப்பது சிறப்பான அம்சமாகும். இலங்கையின் முதல் வரலாற்று இலக்கியங்களான தீபவம்சம், மகாவம்சம் என்பன நாகதீபம் எனவும், சங்க இலக்கியங்களில் ஒன்றான மணிமேகலை நாகநாடு எனவும் இப்பிராந்தியத்தை அழைத் துள்ளன. (1). இதன் தனித்துவம் காலப்போக்கில் யாழ்ப்பாண இராச்சியமாக பரிணமித்த போது அதன் வரலாற்று இலக்கியங் களாக செகராசசேகரமாலை, செகராசசேகரம், யாழ்ப்பாண வைபவமாலை போன்ற நூல்களும் எழுந்தன. (2). இவை அர சியல் ரீதியாக மட்டுமன்றி பண்பாட்டு ரீதியாகவும் இப்பிராந் தியத்தை தனித்து இனங்காட்ட உதவியுள்ளன.

யாழ்ப்பாண இராச்சியம் தொடர்பான இவ்விலக்கியங்கள் தோற்றம் பெறுவதற்கு முன்னால் இப்பிராந்தியத்தில் ஆதிகால, ★ இடைக்கால வரலாற்றை அறிவதற்கு பாளி, சிங்கள இலக்கி யங்களில் அரிதாகக் கிடைக்கும் சான்றுகளையே முக்கிய ஆதார மாகக் கொள்ள வேண்டியுள்ளது. இலங்கை ஒரு அரசால், ஒரு மன்னனால் ஆளப்பட்டதாகக் கூறும் இந்நூல்கள் அவற்றின் ஆட்சிப்பீட மையங்களாக அநுராதபுரம், பொலநறுவை போன்ற நகரங்களைச் சிறப்பித்துக் கூறுகின்றன. இவை பலமான அதிகார பீடங்களாக அக்காலத்தில் விளங்கியதென்பதில் சந்தேகமில்லை. ஆனால் இவற்றின் பண்பாட்டு வட்டத்துக்குள் யாழ்ப்பா ணப் பிராந்தியம் தொடர்ச்சியாக உள்ளடங்கி இருந்ததா என் பதற்கு அதிக சான்றுகள் காணப்படவில்லை. தெற்கேயுள்ள மகாமையுடன் இம்மையங்கள் கொண்டிருந்த தொடர்புகளுக்கு சான்றுகள் இருப்பதைப் போல்தானும் கூட கிட்டேயுள்ள யாழ்ப்பாணத்துடன் கொண்ட தொடர்புகளுக்கு சான்றுகள்

ப. புஸ்பரட்ணம்
விரிவுரையாளர்
வரலாற்றுத்துறை
யாழ். பல்கலைக் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகம் காணப்படவில்லை, காணப்பட்ட சான்றுகளில் கூட, பெரும்பாலானவை யாழ்ப்பாணத்தில் இருந்து இம்மையங்களுக்கு எதிராக ஏற்பட்ட கிளர்ச்சிகள், கலகங்கள், படையெடுப்புகள் பற்றியதாகவே உள்ளன. இவை ஒரு மைய அரசின் கீழ் இப்பிராந்தியம் தொடர்ந்து இருக்கவில்லை; இருக்க விரும்பவில்லை எனக் கருதுவதற்கு இடமளிக்கின்றன.

யாழ்ப்பாண இராச்சியம் தொடர்பான தமிழ் இலக்கியங்கள் புகைபடர்ந்த நிலையில் இருந்தாலும் அவை ஏகோபித்த நிலையில் ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சி இங்கு இடம்பெறுவதற்கு முன்னால் ஒரு சுதந்திர அரசு இங்கிருந்தது என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றது.(3) இவற்றை ஆதாரமாகக் கொண்டு அரைநூற்றாண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாண வரலாற்றை எழுதிய முதலியார் இராசநாயகம்(4) சுவாமி ஞானப்பிரகாசர்(5) போன்றோர் ஆதியில் இங்கு சுதந்திர தமிழரசு இருந்ததென்ற கருத்தை முன்வைத்தனர். இக்கருத்துக்கு பெருமளவு உடன்பட்ட நிலையில் பிற்காலத்தில் ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை, ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, பேராசிரியர் கணபதிப்பிள்ளை, சி. எஸ். நவரட்ணம், அண்மையில் புலவர் பொ. ஜெகநாதன் போன்றோரும் இப்பிராந்தியம் தொடர்பான நூல்களை எழுதியுள்ளார்கள்.(6) ஆயினும் இந்நூல்கள் பெருமளவு இலக்கிய மூலங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டதனால் பிற்கால வரலாற்று ஆசிரியர்கள் பலரும் இக்கருத்துக்களுடன் உடன்பட்டதாகத் தெரியவில்லை அண்மையில் பல்கலைக்கழக மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றத்தை பதின் மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியென எடுத்துக் காட்டுகின்றன.(7) இலங்கை மீது படையெடுத்த பாண்டியர்களின் படைத்தளபதிகளான ஆரியச்சக்கரவர்த்திகள் தமிழ் நாட்டில் பாண்டிய வம்சம் வலிமை குன்றியபோது அதைச்சாதகமாகப் பயன்படுத்தி யாழ்ப்பாணத்தில் சுதந்திர அரசை அமைத்துக் கொண்டதாகத் தெரிகிறது. இவர்களே 1620இல் யாழ்ப்பாண இராச்சியம் போர்த்துக்கேயரிடம் வீழ்ச்சியடையும் வரை யாழ்ப்பாணத்தை ஆட்சி புரிந்ததாகக் கூறப்படுகிறது.

இவர்கள் ஆட்சிக்கு உட்பட்ட இராச்சியத்தின் தலைநகர் நல்லூர் என கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை, தக்ஷணகைலாய புராணம் போன்ற நூல்களும்,(8) யாபா பட்டுன (யாழ்ப்பாணம்) என சிங்கள இலக்கியங்களும் (9) சிங்கை, சிங்கை நகர் அல்லது சிங்கை நாடு என செகராசசேகரமாலை, செகராசசேகரன் போன்ற நூல்களும்(10) கூறுகின்றன. எனினும் தற்போது நல்லூரைத் தவிர ஒரு இராசதானிக்குரிய கட்டட அழிபாடுகள் யாழ்ப்பாணத்தில் வேறு எந்த இடத்திலும் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. 16ஆம் நூற்றாண்டு போர்த்துக்கேயர் யாழ்ப்பாணம் வந்தபோது நல்லூர் நகரத்தையே கண்டனர் என அறிகிறோம். இதுசம்பந்தமாக போர்த்துக்கேய மதகுருவான கேய்றோஸ் பாதிரியார் கூறியது கவனிக்கத்தக்கது:

> ''நல்லூரை விட வேறு நகரம் ஒருபோதும் அவர்களுக்கு இருக்கவில்லை. இது போர்த்துக்கேயருடைய பட்டினமும் அங்காடியும் அமைந்துள்ள இடத்தில் இருந்து அரை லீக் (ஏறக்குறைய ஒன்றரை மைல்) தூரத்தில் இருக்கிறது' (11)

இவர் குறிப்பிடுகின்ற பட்டினமும், அங்காடியும்தான் பிற்பட்ட காலத்தில் யாழ்ப்பாண நகரமாக மாறியது. இவ்விடத்தில் இருந்து ஏறக்குறைய 3 மைல் தூரத்தில் நல்லூர் இருக்கிறது.

இதன் நேரடியாட்சி யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களையும் இதற்கு அப்பால் திருக்கோணமலை மாவட்டத்தில் சில பாகங்களையும் உள்ளடக்கியிருந்ததாக தெரிகிறது.(12) இதன் எல்லைகளுக்கு அப்பால் பல தமிழ் வன்னி சிற்றரசுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரமாக செயற்பட்டாலும்கூட அவற்றிற்கும் யாழ்ப்பாண இராச்சியத்திற்கும் இடையே கடல்வழியாகவும், தரைவழியாகவும் நெருங்கிய வர்த்தக கலாசாரத் தொடர்புகள் ஏற்பட்டிருந்தன. அத்துடன் தமிழ்மொழி வழக்காலும், அதன் இலக்கியப் பாரம்பரியத்தினாலும், சைவசமய மரபுகளின் பயனாகவும், கண்ணகி வழிபாட்டின் மூலமாகவும் பொதுவான கலாசார ஒருமைப்பாட்டைப் பெற்றிருந்தன. (13) சில சந்தர்ப்பங்களில் யாழ்ப்பாண மன்னர்களின் அரசியல் ஆதிக்கம் தென்னிலங்கை வரை பரவியதாகத் தெரிகிறது: 14 ஆம் நூற்றாண்டுக்குரிய கோட்டகம சாசனம் ஒன்று யாழ்ப்பாணத்து மன்னனின் படைகள் மலைநாட்டில் நுழைந்து அங்கு ஆட்சியில் இருந்த சிங்கள அரசன் ஒருவனைத் தோற்கடித்தது பற்றிக் கூறுகிறது. (14)இத்தகைய சம்பவம் ஒன்று இக்காலத்தில் நடந்ததென்பதை தென்னிலங்கை வரலாற்று மூலகங்களும் உறுதிப்படுத்துகின்றன. குறிப்பாக ராஜாவலிய என்ற நூல் கம்பளை, றைகம, யாழ்ப்பாணம் ஆகிய இராசதானிகளில் யாழ்ப்பாணத்தை ஆட்சிபுரிந்த ஆரியச்சக்கரவர்த்திகள் படைப் பலத்திலும் பொருள்வளத்திலும் மேலோங்கியிருந்தனர் என்றும், மலைநாடு கரையோரம் ஆகியவற்றில் இருந்தும், ஒன்பது துறைமுகங்களில் இருந்தும் திறைபெற்று வந்தனர் எனவும் எடுத்துரைக்கின்றது. (15) இதை விக்கிரமபாகுவின் கல்வெட்டும் மறைமுகமாக உறுதிப்படுத்துகிறது.(16)

இத்தகைய வரலாற்றுப் பெருமை வாய்ந்த நல்லூர் இராசதானியின் நினைவுகள், நினைவுச் சின்னங்கள் இன்று மறக்கப்பட்டுள்ளன; மறைக்கப்பட்டுள்ளன எனக் கூறலாம். இலங்கையில் அநுராதபுரம், பொலநறுவை போன்ற இராசதானிகள் கைவிடப்பட்டு ஆயிரம் ஆண்டுகளை அண்மித்த போதிலும் கூட அவற்றின் நினைவுச் சின்னங்கள் பல இன்றும் பாதுகாக்கப் பட்டுள்ளன. ஆனால் முன்னூற்றி ஐம்பது ஆண்டுகளுக்கு முன் கைவிடப்பட்ட நல்லூர் இராசதானியின் ஒரு கட்டடத்தொகுதி தானும் பாதுகாக்கப்படவில்லை. இதற்கு நல்லூர் நகரைக் கைப்பற்றிய போர்த்துக்கீசரும் பின் வந்த ஒல்லாந்தரும் கடைப்பிடித்த கலையழிவுக்கொள்கை அடிப்படைக் காரணமாக இருப்பினும் அரச மட்டத்தில் இலங்கையின் பிறபாகங்களில் இருந்த இராசதானிகளைப் பாதுகாக்க எடுத்தது போன்ற முயற்சி நல்லூரைப் பாதுகாக்க எடுக்காமையும் முக்கிய காரணமாகும். மேலும் தனிப்பட்டவர்களோ தனிப்பட்ட நிறுவனங்களோ இதில் அக்கறை செலுத்தியதாகவும் தெரியவில்லை. இன்று நல்லூர் இராசதானி இருந்த இடத்தில் நெருக்கமான குடிமனைகளும் ,அரச நிறுவனங்களும், தொழிற்சாலைகளும் அமைக்கப்பட்டுள்ளதால் பெருமதிமிக்க தமிழரசின் நினைவுச் சின்னங்கள் இவற்றின் கீழே மறைந்து கிடக்கின்றன. இத்தகைய குறைபாடுகளினால் நல்லூர் இராசதானி அமைந்திருந்த உண்மையான இடத்தையோ அதன் பரப்பளவையோ திட்டவட்டமாகக் கூற முடியாதிருக்கிறது. ஆயினும் இப் பிராந்தியத்தில் அவ்வப்போது கிணறுகள் வெட்டியபோதும், கட்டடங்கள் அமைப்பதற்கு அத்திவாரங்கள் வெட்டியபோதும் கிடைத்த தொல்பொருட் சின்னங்கள், போர்த்துக்கேய ஆசிரியர்களின் குறிப்புகள், யாழ்ப்பாண வைபவமாலையில் வரும் சான்றுகள் முதலியவற்றைக் கொண்டு இந்த இராசதானி தற்கால நல்லூர்க் கந்தன் ஆலயத்திற்கு முன்பாகவுள்ள இரண்டு மைல் சுற்றளவில் அமைந்திருக்கலாம் என ஊகிக்க இடமுண்டு.(17)

இவற்றுள் வரலாற்றுப் பெருமை வாய்ந்த ஆலயங்களில் ஒன்றான நல்லூர் கந்தன் ஆலயம் தற்போதிருக்கும் இடத்தில் முன்பு இருந்ததாகத்தெரியவில்லை. போர்த்துக்கேய படைத்தளபதியான ஒலிவீரா நல்லூரில் இருந்த இரண்டு ஆலயங்களை இடித்துத் தரைமட்டமாக்கியதாகத் தெரிகிறது. (18) அதில் ஒன்று நல்லூர் கந்தன் ஆலயமாகும். முன்பு இவ்வாலயம் தற்போது சங்கிலியன் சிலை அமைந்துள்ள முத்திரைச் சந்திக்கு முன்பாக உள்ள பகுதியில் இருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கலாம் எனக் கருத இடமுண்டு. இன்றும் இங்குள்ள கிறிஸ்தவ தேவாலயத்தைச் சுற்றியும், அதன் கீழாகவும் புராதன கட்டடங்களின் அத்திவாரங்கள் இருப்பதனை அவதானிக்கலாம். இதன் அருகே யமுனா ஏரி அமைந்திருப்பது மேலும் இக்கருத்துக்குச் சான்றாகும்.

கைலாய மாலையில் வரும் தனிச்செய்யுள் இவ்வாலயத்தையும் யாழ்ப்பாண நகரத்தையும் அமைத்தவன் புவனேகபாகு எனக் குறிப்பிடுகிறது. (19) இதை ஆதாரமாக வைத்து இதன் தோற்ற காலத்தை சிலர் பத்தாம் நூற்றாண்டு எனவும், (20) வேறுசிலர் பதினைந்தாம் நூற்றாண்டு எனவும் கூறியுள்ளனர். (21) பத்தாம் நூற்றாண்டு எனக் கூறுவோர் இதில் வரும் காலத்தை பத்தாம் நூற்றாண்டு (கி. பி. 948) எனக் கணிப்பிட்டு ஆலயமும் இராசதானியும் சமகாலத்தில் தோன்றியதெனக் கூறுவர். இலங்கையில் புவனேகபாகு என்ற பெயருடன் ஏழு மன்னர்கள் ஆட்சிபுரிந்ததற்குச் சான்றுகள் உள. இவர்களுள் 6ஆம் பராக்கிரமபாகு கோட்டையை ஆட்சி செய்த காலத்தில் மலையாளப் பணிப் பெண்ணுக்கும் சிங்களப் பிரதானிக்கும் பிறந்த சபுமால் குமாரய என்பவன் (செண்பகப் பெருமாள்) கி. பி. 1450இல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி புவனேகபாகு என்ற பெயருடன் 17 ஆண்டுகள் ஆட்சி புரிந்ததாக தெரிகிறது. (22) இதை யாழ்ப்பாண மெயின் வீதியில் கிடைத்த இவன் காலக் கல்வெட்டும் உறுதிப்படுத்துகிறது. (23) இன்றும் நல்லூர் கட்டியத்தில் ஓதப்படும் சர்ப்புமால் ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகு போன்ற பெயர்கள் இவனையே குறிப்பதாகும். இதனால் தனிச்செய்யுளில் வரும் புவனேகபாகு 15ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தை ஆட்சிசெய்த செண்பகப்பெருமாளையே(புவனேகபாகு) குறித்ததுஎனலாம். ஆனால் இவ்வாலயத்தை இவன் புதிதாகக் கட்டியதாக தெரியவில்லை. ஏற்கனவே கட்டப்பட்டிருந்ததால் சில மாற்றங்களைச் செய்திருக்க வேண்டும்.

மேலும் நல்லூர் ஆலயத்தின் தோற்றத்தை இராசதானியின் தோற்றத்தோடு ஒப்பிடுவது பொருத்தமாகத் தெரியவில்லை. இது இராசதானியின் தோற்றத்திற்கு முன்னரே தோற்றம் பெற்றதாகக் கருத இடமுண்டு. அண்மையில் யாழ்ப்பாணக் கோட்டையில் கண்டுபிடிக்கப்பட்ட முதலாம் இராஜேந்திர சோழன் கால கல்வெட்டு 11ஆம் நூற்றாண்டில் நல்லூரில் இருந்த ஆலயம் ஒன்றிற்கு தானம் அளிக்கப்பட்டது பற்றிக் கூறுகிறது.(24) இது நல்லூர் கந்தசாமி கோயிலையோ அல்லது அக்காலத்தில் இங்கிருந்த வேறு ஒரு ஆலயத்தையோ குறித்திருக்கலாம். சமீபத்தில் சட்டநாதர் ஆலயத்தில் பழைய கட்டட அழிபாடுகள் இடையே கிடைத்த சதுரவடிவிலான ஆவுடையும் சிறிய லிங்கத்தையும் நோக்கும்போது சோழக்கல்வெட்டில் வரும் ஆலயம் இதுவாக இருக்கலாம் போல் தெரிகிறது.(25) சோழர் காலத்தில் சிவன் ஆலயங்கள் முக்கியத்துவம் பெற்றது போல் பாண்டியர் காலத்தில் முருகன் ஆலயங்கள் சிறப்புப் பெற்றன. சோழர் காலத்துக்கு முன்னரே பாண்டியன் செல்வாக்கு யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டதால் நல்லூர் கந்தசாமி ஆலய தோற்றத்தை இவ்வம்சத்துடன் தொடர்புபடுத்திப் பார்க்கவும் இடமுண்டு. எவ்வாறாயினும் இலங்கையில் பௌத்தமதம் செல்வாக்குப்பெற தமிழ்நாட்டுடனான தொடர்புக்கு யாழ்ப்பாணம் தொடக்க வாயிலாக இருந்த தென்பதை ஏற்றுக் கொண்டால், கி. பி. 6ஆம் நூற்றாண்டின் பின்பு தமிழ் நாட்டில் ஏற்பட்ட பிராமணிய மறுமலர்ச்சி யாழ்ப்பாணத்திலும் செல்வாக்கு செலுத்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை. இதனால் நல்லூரில் மட்டுமன்றி யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் புதிய பல இந்துக் கோயில்கள் தோற்றம் பெற்றிருக்கும் என எதிர்பார்க்கலாம்.

புவனேகபாகுவே யாழ்ப்பாண நகரத்தை அமைத்தவன் எனக் கூறுவதும் ஏற்கக் கூடியதாக இல்லை. இவனது ஆட்சி இடம் பெறுவதற்த முன்னரே இது தலைநகராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கியதற்கு ஆதாரங்கள் உள. கி. பி. 1435ஆம் ஆண்டுக்குரிய திருமாணிக்குழிக் கல்வெட்டு இந்நகரை இஆழ்ப்பானயந் பட்டினம் எனவும்,(26) 15ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்குரிய திருப்புகள் யாழ்ப்பாணாயன் பட்டினம்,(27) எனவும் சிங்கள ஸந்தேச நூல்கள் யாபாபடுவ எனவும்(28) அழைத்துள்ளன. இவை 1450ஆம் ஆண்டு புவனேகபாகுவின் படையெடுப்பு நடைபெறுவதற்கு முன்னால் யாழ்ப்பாணம் தலைநகராக விளங்கியதென்பதை எடுத்துக் காட்டுகின்றன. இவன் சிலவேளை யாழ்ப்பாணத் துறைமுகப்பட்டினத்தில் இருந்த அரசிருக்கையை பாதுகாப்புக் கருதி நல்லூருக்கு இடம் மாற்றியிருக்கலாம். அவ்வாறான சூழ்நிலை அக்காலகட்டத்தில் இங்கிருந்ததென்பதற்கு ஆதாரங்கள் உள. ஆனால் இதையோர் தலைநகர் மாற்றமெனக் கருத இயலாது. நல்லூரும் யாழ்ப்பாணமும் அருகருகே இருப்பதால் யாழ்ப்பாணம் நல்லூரையோ நல்லூரின் ஒரு பாகத்தையோ குறித்திருக்கலாம் எனக் கருதுவது ஏற்புடையதாகும்.(29) இதேபோல் யாழ்ப்பாண மன்னர்களின் இன்னொரு தலைநகரான சிங்கை அல்லது சிங்கை நகரையும் யாழ்ப்பாண நகரத்துக்குள் உள்ளடக்கிய இன்னொரு இடமாக வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர்.(30) இதற்குச் சான்றாக சில ஆதாரங்கள் காட்டப்பட்டுள்ளன. 1435இல் பொறிக்கப்பட்ட திருமாணிக்குழிக் கல்வெட்டில் யாழ்ப்பாணப் பட்டினமும், 1449க்கும் 1454க்கும் இடைப்பட்ட அரிகேசரி பராக்கிரம பாண்டியன் கல்வெட்டில் சிங்கையும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏறத்தாழ ஒரே காலகட்டத்திற்குரிய இரண்டு கல்வெட்டுக்களில் யாழ்ப்பாண மன்னர்களின் அரசிருக்கையாக யாழ்ப்பாணமும் சிங்கையும் வருவதால் இரண்டையும் ஒன்றெனக் கருதுகின்றனர். (31) இதற்கு மேலும் ஆதாரமாக கேய்றோஸ் பாதிரியாருடைய குறிப்புப் பயன்படுத்தப்பட்டுள்ளது. 1590இல் போர்த்துக்கேயர் கொழும்புத்துறையில் இறங்கி நல்லூரைநோக்கி அணிவகுத்துச் சென்றபோது சுங்கைநயினார் என்னும் அரணைத் தாண்டியதாக இவர் குறிப்பிட்டுள்ளார். (32) வரலாற்று அறிஞர்கள் இதில் கூறப்பட்டுள்ள சுங்கைநயினார் சிங்கைநயினாரின் திருபு எனக் கூறி சிங்கையும் நல்லூருக்கு கிட்டேயிருந்த யாழ்ப்பாண மன்னர்களின் அரசிருக்கை என அடையாளம் கண்டுள்ளனர்.(33)

மேலே கூறப்பட்ட இரண்டு காரணங்களை மட்டும் வைத்து சிங்கையை யாழ்ப்பாண நகரத்துடன் இணைத்துப் பார்ப்பது பெருமளவு பொருத்தமாகத் தெரியவில்லை. முதலாவதாக ஒரே காலகட்டத்திற்குரிய இரண்டு கல்வெட்டுக்களில் சிங்கையும், யாழ்ப்பாணமும் வருவதைக் கொண்டு இரண்டையும் ஒன்றென ஒற்றுமைப்படுத்திப் பார்க்க இடமிருப்பினும் வேறுபடுத்திப் பார்க்கவும் இடமுண்டு. அரிகேசரி பராக்கிரம பாண்டியன் கல்வெட்டில் சிங்கையுடன் அநுராதபுரம் (அனுரை) குறிப்பிடப்பட்டுள்ளது.(34) கோட்கம கல்வெட்டில் ஆரியச் சக்கரவர்த்தி மன்னர்களால் தோற்கடிக்கப்பட்ட சிங்கள மன்னர்களின் தலைநகர் அநுராதபுரம் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.(35) அநுராதபுரம் கைவிடப்பட்டு 400 ஆண்டுகள் கழிந்த பின்னரும் கூட இக்கல்வெட்டுக்களில் சிங்கள மன்னர்களின் அரசிருக்கையாக அநுராதபுரம் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேபோல் அரிகேசரி பராக்கிரமபாண்டியன் கல்வெட்டில் வரும் சிங்கை கூட தமிழ் மன்னர்களின் ஆரம்ப அரசிருக்கையை குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. இரண்டாவதாக கேய்றோஸ் பாதிரியார் கூறும் சுங்கை நயினார் அரணை சிங்கைநயினார் அரணின் திரிபு எனக் கூறுவது பொருத்தமாயினும் அதை இராசதானிக்குரிய அரண் எனக் கருதி அதுவே சிங்கைநகர் என அடையாளம் காண்பது ஏற்புடையதாக இல்லை. இவ்வரண் இருந்ததாகக் கூறப்படும் இடம் கடற்கரையை அண்டிய பகுதியாக இருப்பதால் இது கடல் பிராந்தியத்தில் இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படும் அச்சுறுத்தலைக் கண்காணிக்க சிங்கை தலைநகராக இருந்த காலத்தில் அமைக்கப்பட்ட காவல் அரண்களில் ஒன்றாக இருக்கலாம் அல்லது நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த மன்னர்கள் தமக்கு முற்பட்ட இராசதானியின் தலைநகரை நினைவுபடுத்தும் வகையில் தமது ஆட்சியில் கட்டப்பட்ட காவல் அரணுக்கோ வேறு கட்டடத்திற்கோ சிங்கை நயினார்எனப் பெயரிட்டிருக்கலாம். எவ்வாறாயினும் இதையொரு இராசதானிக்குரிய மிகப்பெரிய கட்டடமாக கருத இயலாது. நல்லூர் தலைநகராக விளங்கியதென்பதை அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்படாமலே அப்பிராந்தியத்தில் தற்செயலாக கிடைத்து வரும் தொல்பொருட் சான்றுகள் உறுதி செய்கின்றன.(36) ஆனால் சிங்கை நயினார் அரண் இருந்ததாகக் கூறப்படும் நல்லூருக்கும் கொழும்புத்துறைக்கும் இடைப்பட்ட பிராந்தியத்தில் தொன்மையான குடியிருப்புக்களுக்குரிய அரிய பல சான்றுகள் கண்டு பிடிக்கப்பட்டும் கூட(37) தற்செயலாகத் தானும் ஒரு இராசதானிக்குரிய கட்டட அழிபாட்டுச் சின்னங்கள் இதுவரை கிடைக்கவில்லை. இதனால் போர்த்துக்கேய ஆசிரியர் கூறிய சிறிய அரணை மட்டும் வைத்துஅதைதலைநகர் சிங்கை என அடையாளம் காண்பது பொருத்தமாக இல்லை.

அப்படியாயின் சிங்கையை யாழ்ப்பாணத்தில் இருந்து வேறுபட்ட தலைநகர் எனக் கொள்வதா? என்ற கேள்வி எழுகிறது. முதலியார் இராச நாயகம் செம்பகப் பெருமாள் நல்லூரைத்தலை நகராக கொள்ளும் வரை சிங்கையே ஆரியச்சக்கரவர்த்திகளின் தலைநகர் எனவும் அது வல்லிபுரம் எனவும் குறிப்பிட்டுள்ளார். (38) இக்கருத்தை ஏற்ற சுவாமி ஞானப்பிரகாசர் இதற்கு ஆதாரமாக அப்பிராந்தியத்தில் உள்ள தொல்பொருட் சின்னங்களை உதாரணம் காட்டினார். (39) இவற்றை ஆதிக் குடியிருப்புக்குரிய சான்றுகளாக கொள்ளலாமே தவிர தலைநகர் இருந்ததற்கான ஆதாரமாகக் கொள்ள முடியாது. இவைபோன்ற சான்றுகள் வல்லிபுரத்தில் மட்டுமன்றி கந்தரோடை, ஆனைக்கோட்டை, களபூமி, பூநகரி போன்ற இடங்களிலும் காணப்படுகின்றன.(40) இதனால் சிங்கையை யாழ்ப்பாணத்திற்கு வெளியே இருந்த தலைநகராகக் கருதலாமா? அவ்வாறு கருதுவதற்கு யாழ்ப்பாண இராசதானிக்கு முன்னோடியான அரசியல் நடவடிக்கைகள் சாதகமாக உள்ளன.

1215 இல் தமிழ், கேரளப் படைகளின் உதவியோடு கலிங்கமாகன் பொலநறுவை கைப்பற்றியதன் விளைவாக இலங்கை அரசியலில் முக்கிய மாற்றங்கள் நிகழ்ந்தன. இது வரை உத்தரபிரதேசத்தில் ஆதிக்கம் செலுத்திய சிங்கள மன்னர்களின் ஆதிக்கபீடம் தெற்கு நோக்கி நகர்ந்த அதேவேளை இவர்களுக்கு எதிரான வலுவுள்ள அமைப்பு வடக்கில் உருவாகியது. இக்காலகட்டத்தில் தம்பதேனியாவில் ஆட்சி புரிந்த 2 ஆம் பராக்கிரமபாகு பொலநறுவையில் ஆட்சி புரிந்த கலிங்கமாகனை ( கி. பி. 1236 பின் ) பதவியில் இருந்து நீக்கினாலும் ராஜரட்டை முழுவதையும் இவனால் ஆட்சி செய்ய முடியவில்லை. ( 41 ) இதற்கு பதவி நீக்கப்பட்ட கலிங்கமாகன் சிங்கள இராசதானிக்கு எதிரான அரசொன்றை வடஇலங்கையில் அமைத்திருந்ததே காரணம். ( 42 ) இவ்வரசு எங்கிருந்ததென்பதை திட்டவட்டமாக கூற முடியாவிட்டாலும் அவனும் தமிழ் கேரளப் படைகளும் நிலைகொண்டிருந்த இடங்களில் பல வட இலங்கையில் இருந்ததென்பதை சூளவம்சத்தில் இருந்து அறியமுடிகிறது. ( 43 ) இக்கட்டத்தில் தான் சாவக மன்னன் சந்திரபானுவின் முதலாவது படையெடுப்பு இடம் பெற்றது. இப்படையெடுப்பை 2 ஆம் பராக்கிரமபாகு முறியடித்தாலும் தோல்வியடைந்த சந்திரபானு கலிங்க மாகனிடம் அபயம் பெற்றோ ஆதரவு பெற்றோ மாகனின் பின் வட இலங்கையின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதாக தெரிகிறது. சிங்கள மன்னர்களுக்கு எதிரான இவனின் இரண்டாவது போராட்டம் வடக்கில் சுதந்திர அரசனாக இருந்து மேற்கொண்டதாக தெரிகிறது. ( 44 ) இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி இலங்கை வரலாற்று மூலங்களில் நேரடியான சான்றுகள் காணப்படாவிட்டாலும் சமகாலத்துப் பாண்டிய கல்வெட்டுக்களில் தெளிவான ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவற்றுள் 1263இலும் 1264இலும் பொறிக்கப்பட்ட இரு பாண்டியக் கல்வெட்டுக்கள் இலங்கையில் இரு மன்னர்கள் இருந்தார்கள் என்பதையும் அவர்களுள் ஒருவன் சாவகன் (சந்திரபானு) என்பதையும் அறிவிக்கின்றன. (45) இதில் 1264 இல் பொறிக்கப்பட்ட ஒரு கல்வெட்டிலே வீரபாண்டியன் இலங்கை மீது படையெடுத்தது பற்றி விரிவான வர்ணனை இடம் பெறுகிறது. இக்கல்வெட்டில் இருந்து நாம் பெறக்கூடிய சான்றுகள் பற்றி நீலகண்டசாஸ்திரி கூறியிருப்பது கவனிக்கத் தக்கது.-

''இலங்கையில் ஏதோ ஒரு தகராறு தோன்றியதென்றும் அமைச்சர்களுள் ஒருவன் பாண்டியர்களை கேட்டிருந்தான் என்றும், மன்னனின் நோக்கம் (வீரபாண்டியன்) பழைய அரசியல் முறையை முறைப்படி நிலைநாட்டுவதே என்றும் நாம்காணக்கூடியதாக இருக்கிறது. ஈழத்து மன்னர்களில் ஒருவன் போர்க்களத்திலே கொல்லப் பட்டான் என்றும் அவனுடைய படைகள், செல்வம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன என்றும் அதன் பின் இரட்டைக்கயல் (பாண்டிய இலச்சினை) திரிகூடகிரியிலும், கோணமலையிலும் பறக்கின்ற கொடிகளிலே பொறிக்கப்பட்டதென்றும் (இலங்கையில்) இன்னொரு மன்னன் தன் யானையைத் திறையாகக் கொடுத்து. சரணடைய நேரிட்டதென்றும் மேலும் கூறப்பட்டது. இறுதியாக முன்னர் கட்டளையை மீறிப் பகைமை காட்டி நின்ற சாவகன் மைந்தன் (வீரபாண்டியன் முன்னிலையில்) வந்து வீழ்ந்து வணங்கி உரிய வெகுமதியைப் பெற்றான் என்றும் கூறப்பட்டது. சாவகனுடைய மைந்தனுக்கு வீரக்கழல் வழங்கப்பட்டு அவன் யானையில் ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டான் என்றும் முன்னர் தந்தை யாண்ட பரந்த இலங்கையைத் தனயன் ஆள்வது முறையென எண்ணி அவனை உடனடியாக அனுரதபுரிக்கு செல்ல அனுமதித்தான் என்று இவ்வாசகத்தை வாசித்து என்னால் விளங்கக் கூடியதாக இருக்கிறது''(46)

இதில் இருந்து இரு மன்னர்களிடையே ஏற்பட்ட தகராற்றைத் தீர்க்க ஓர் அமைச்சன் (சிங்கள அரசின்) பாண்டியர் உதவியை நாடினான் என்பதும், இதில் ஒரு மன்னன் (சாவகன்) போர்க்களத்தில் கொல்லப்பட மற்ற மன்னன் (சிங்கள அரசன்) பாண்டியருக்கு பணிந்து திறை கொடுத்தான் என்பதும், இவனைப் போல் சாவகனின் மைந்தனும் பாண்டியர்களின் மேலாணையை ஏற்று மீண்டும் வட இலங்கையில் அரசமைத்தான் என்பதும் தெரிகிறது. இவ்வாறு சாவகன் அமைத்த வட இலங்கை அரசையே பின்பு பாண்டியப் பிரதானிகளும் ஆட்சி செய்தனர்.

இச்சான்றுகள் அனைத்தும் பொலநறுவையின் வீழ்ச்சிக்கும் யாழ்ப்பாணத்தில் ஆரிய சக்கரவர்த்திகளின் எழுச்சிக்கும் இடைப்பட்ட காலத்தில் மாகன், சந்திரபானு, அவன்மைந்தன், பாண்டியப் பிரதானிகள் போன்றோரின்ஆட்சி வடஇலங்கையில்இருந்துள்ளதென்பதை உறுதிப்படுத்துகின்றன. ஆனால் இவர்களின் அரசு எங்கேயிருந்ததென்பதற்கு இதுவரை சரியான சான்றுகள் கண்டுபிடிக்கப்படவில்லை. சிலர் திருக்கோணமலையெனவும், வேறுசிலர் யாழ்ப்பாணம் எனவும் ஊகம் தெரிவித்துள்ளனர் இவர்களுள் பேராசிரியர் இந்திரபாலா அவர்கள் மாகனைத் தோற்கடித்த சிங்களப்படைகள் பொலநறுவையை நிரந்தரமாக தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாமையினால் மகானின் அதிகார பீடம் பதவியாவாக இருக்க முடியும் எனக் கூறியுள்ளார். (47) இதற்கு மாகனின் படைகள் நிலைகொண்ட இடங்களில் சில இங்கிருந்திருக்கலாம் எனக் கருதியதும் மற்

றொரு காரணமாகும். ஆனால் இதுவரை வரலாற்று ஆசிரியர்களினதோ, தொல்லிய லாளரினதோ கவனத்தை அதிகம் ஈர்க்காத பூநகரியிலும் அதையண்டிய ஏனைய பிராந் தியங்களிலும் எம்மால் பெறப்பட்ட சான் றுகளை நோக்கும் போது மேற்குறிப்பிட்ட மன்னர்களின் அரசு இங்கிருந்திருக்கலாம் எனக் கருத இடமளிக்கிறது. போர்த்துக்கே யரால் புநெறிம் (பூநகரி) என அழைக்கப் பட்ட இப்பிராந்தியத்திற்குரிய பெயர் தற் போது பூநகரியின் எல்லைக்கு அப்பால் உள்ள முல்லைத்தீவு மாவட்டத்தின் வட மேற்குப் பகுதியிலும், மாந்தைக்கு வடக் காக உள்ள பகுதியிலும் உள்ள குளங்கள் இப்பெயரைப் (புநெறிம் குளம்) பெற்றிருப் பதால் அக்காலத்தில் பூநகரிப் பிராந்தியத் தின் எல்லைகள் தற்காலத்தை விட விரி வடைந்து இருக்கலாம் எனக்கொள்ள இடமுண்டு.

இப்பிராந்தியத்தில் ஓர் இராசதானி இருந்ததெனக் கருதக்கூடிய கட்டட அழி பாடுகள் தற்போது தென்னியங் குளப்பகு தியில் உள்ள செழியாவில், மூங்குவில், நீராவி போன்ற இடங்களில் கண்டுபிடிக் கப்பட்டுள்ளன. ஏறக்குறைய ஒன்றரை மைல் சுற்றளவுக்குள் 12 இற்கு மேற்பட்ட கட்டட அழிபாடுகள் காணப்படுகின்றன. இவற்றைத்தவிர இவ்வெல்லைக்குள் வேறும் சில கட்டடங்கள் இருப்பதாக தெரிகிறது. உயர்ந்த கருங்கற் தூண்களையும் (சரா சரி 9') செங்கட்டிகளையும் கொண்ட இக் கட்டடத் தொகுதிகள் காடுகளின் மத்தி யில் உயர்ந்த மண்மேடுகளாக காட்சியளிக் கின்றன. இக்கருங்கற் தூண்களில் உள்ள புடைப்புச் சிற்பங்களின் கலைமரபைக் கொண்டு இக்கட்டடத் தொகுதிகள் மிகப் பழமையானதென்பதை நிச்சயப்படுத்தமுடி கிறது. இக்கட்டடத் தொகுதிகள் சிலவற் றில் இருந்து இந்து விக்கிரகங்கள் பல எடுக்கப்பட்டு அண்மையில் உள்ள துணுக் காய் விநாயகர் ஆலயத்தில் வைக்கப்பட் டிருப்பதாக அறிய முடிகிறது. அது உண் மையாக இருக்கலாம். என்பதை எமக்குக் கிடைத்த சில சான்றுகளும் உறுதிப்படுத்து கின்றன. மிகக் குறுகிய சுற்றுவட்டத்துக் குள் இவ்வளவு பெருந்தொகையான கட்டட அழிபாடுகள் காணப்படுவதைக் கொண்டு அக்காலத்தில் இவ்விடம் இராச தானியின் தலைநகரமாக இருந்திருக்கலாம் எனக் கூற முடியும். அப்படியாயின் யாழ்ப் பாணத்திற்கு முன்னோடியான இராசதானி இதுவெனக் கூறலாம். இதற்கு இக்கட்டட அழிபாடுகள் மட்டுமன்றி அக்கால மன்னர் கள் தொடர்பான சான்றுகள் பலவும் இப்பிராந்தியத்துடன் இணைந்து வருவதை இங்கே சிறப்பாகக் காட்டலாம்.

பாளி சிங்கள இலக்கியங்கள் 2 ஆம் பராக்கிரமபாகுவினால் பொலனறுவை யில் இருந்து அகற்றப்பட்ட கலிங்கமாகன் வட இலங்கையில் எங்கு அரசமைத்தான் எனக் கூறாவிட்டாலும் அவனது தமிழ் கேரளப் படைகள் நிலைகொண்டிருந்த இடங்கள் பற்றிக் கூறுகின்றன. (48) இவற் றுள் சூளவம்சம் மாகனின் கோட்டைகள் அவன் படைகள் நிலைகொண்ட இடங்க ளாக கோட்டசாறா (கொட்டியாறு) கன் கதாத (கந்தளாய்) காகால (கவுடுல) பதி (பதவியா) குருந்தி, மகாதீர்த்த (மாதோட் டம்) மன்னாரபட்டினம் (மன்னார்) புலச் சேரி, வலிகாமம் கோணா (திருமலை) மடுபாதபதித்த (இலுப்பைக்கடவை) சூற தீர்த்த (ஊர்காவற்றுறை) முதலியவற்றைக் குறிப்பிட்டுள்ளது. (49)

இதில் கூறப் பட்டுள்ள மன்னார், மாந்தை குருந்தி, இலுப்பைக்கடவை ஊர் காவற்றுறை, வலிகாமம் போன்ற இடங் கள் தற்போது வடமேற்கு இலங்கையில் உள்ள இடங்கள் என்பதை இலகுவாக அடையாளம் காணமுடிகிறது. இதில் வலி காமம் என்ற இடம் தற்போது யாழ்ப்பா ணத்தில் உள்ள ஒரு நிர்வாகப் பிரிவைக் குறித்தாலும் மணற்பாங்கான இடங்கள் சிங்கள மொழியில் வலிகாமம் என அழைக் கப்பட்டதால் முன்பு இப்பெயர் பூநகரிக் கும் மாந்தைக்கும் இடைப்பட்ட பிராந்தி யத்தில் உள்ள ஒரு இடத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இதற்குப் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி சோழர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் வெற்றிகொண்ட வலிகாமம் மாந்தைக்கு ஐந்துமைல் தொலைவில் இருந்ததாக கூறியிருப்பது இங்கு நினைவுகொள்ளத்தக்கது. (50) மேலும் இதில் கூறப்பட்டுள்ள குருந்தி தென்னியங்குளத்திற்கு சற்றுத் தென்மேற்கேயுள்ள குருந்தன் குளத்தையும், மடுபாதபதித்த என்ற இடம் இதற்குகிட்டேயுள்ளஇலுப்பைக்கடவையையும் குறிக்கிறது. இதில் வரும் காகால என்ற இடத்தை சிலர் கொக்காவில் எனவும், வேறு சிலர் கட்டுக்குளம் எனவும் அடையாளம் கண்டுள்ளனர். (51) இது உண்மையில் தென்னியங்குளத்திற்குக் கிட்டேயுள்ள காக்கயன் குளத்தையே (52) குறிக்கிறது எனலாம். இதேபோல் கோண என்ற மாவட்டத்தை திருக்கோணமலை என அடையாளம் காணப்பட்டுள்ளது. இது சிலவேளை பூநகரியின் எல்லைப்பகுதியில் உள்ள கோணமலை, கோணவில் போன்ற இடங்களில் ஒன்றைக் குறித்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு. இதில் வரும் மற்றொரு இடமான புலச்சேரி எந்த இடத்தைக் குறிக்கிறது என்பதை வரலாற்று ஆசிரியர் அடையாளம் கண்டதாக தெரியவில்லை. பூநகரி ஈழ ஊருக்கு மேற்காக கடற்கரையை அண்டியுள்ள பகுதியில் புலையர்குடா, பறைமோட்டை (புலையர் குளம்), பறையகாடு (புலையர்காடு) போன்ற இடங்கள் காணப்படுகின்றன. இது மாகன் படைகள் நிலைகொண்ட புலச்சேரியாக இருக்கலாம். எனவே மாகனது அரசியல் நடவடிக்கைகள் தொடர்பான இடங்களை நோக்கும்போது அவற்றுள் பெரும்பாலானவை பூநகரிக்கும் மன்னாருக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் இருந்ததெனக் கூறலாம். இவற்றின் அமைவிடங்கள் மாகனுக்குத் தேவையான படைவீரர்களை தமிழ் நாட்டில் இருந்து கடல்வழி மூலம் இங்கு கொண்டுவர வாய்ப்பாக இருந்துள்ளது. அதனால் தான் அவனின் முக்கிய கோட்டைகளில் ஒன்று ஊர்காவற்றுறையில் இருந்தது.

மாகனின் பின் வட இலங்கையை ஆண்ட சாவக மன்னன் சந்திரபானு தம்பதேனிய அரசுக்கு எதிராக இரண்டாம் முறை படையெடுக்க முன்னர் சில அரசியல் முயற்சியில் ஈடுபட்டதாக தெரிகிறது. இவன் பாண்டிநாட்டில் இருந்தும், சோழநாட்டில் இருந்தும் தமிழ்க் கூலிப்படைகளை திரட்டிக்கொண்டு மாந்தையில் வந்திறங்கி பதி, குருந்தி மாவட்டங்களில் வசித்த மக்களை தன்னுடன் இணைத்துக் கொண்டதாக சூளவம்சம் கூறுகிறது. (53) இதில் கூறப்பட்டுள்ள குருந்தி என்ற இடத்தை வரலாற்று அறிஞர்கள் சிலர் முல்லைத்தீவுக்கு கிழக்கே பதவியாவுக்கு கிட்டவுள்ள குருந்திமலை என அடையாளம் கண்டுள்ளனர். (54) ஆனால் மாந்தைக்கு வடக்கே தென்னியங்குளத்திற்கு கிட்ட உள்ள ஒரு பழைய கிராமம் குருந்தன் குளம் என அழைக்கப்படுகிறது. (55) கடல் பிரயாணங்கள் முதன்மை பெற்று அக்காலகட்டத்தில்தமிழ்நாட்டிற்கும் திருக்கோணமலைக்கும் நேரடிக் கடல் தொடர்புகள் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. இதனால்சாவகனின் படைகள் மாந்தையில் இறங்கி தரை வழியாக பதவியா (குருந்தி மலைக்கு) செல்ல வேண்டியிருந்திருக்காது. இதனால் சூளவம்சம் கூறும் குருந்தி மாவட்டத்தை பதவியாவுக்கு கிட்டேயுள்ள குருந்திமலையுடன் ஒப்பிடுவதைவிட மாந்தைக்கு வடக்கேயுள்ள குருந்தன் குளத்துடன் ஒப்பிடுவதே பொருத்தமாகும். இதில் வரும் மற்றொரு இடமான பதி, பதவியாவைக் குறித்ததெனக் கூறினாலும் அது நிச்சயமாக பதவியாவைத்தான் குறித்ததெனக் கருதமுடியாது. அதேவேளை இப்பெயர் கொண்ட இடம் மாந்தைக்குக் கிட்டே இருந்திருக்க முடியாது எனவும் கூற முடியாது. இதை எதிர்கால ஆய்வுகள் எடுத்துக் காட்டவேண்டும்.

சாவக மன்னனைக் கொன்ற பாண்டியப்படை பின்பு பாண்டியரின் இலச்சினையை திரிகூடகிரியிலும், கோணமலையிலும் பறக்கின்ற கொடிகளில் பொறிக்கப்பட்டதாக குடுமியாமலைக் கல்வெட்டில் இருந்து அறியமுடிகிறது. (56) தென்னியங்குளத்திற்கு கிட்டேயுள்ள ஒரு இடம் கோணமலை என பாரம்பரியமாக அழைக்

கப்பட்டுவருவதற்கு ஆதாரங்கள் உள. இதனால் பாண்டியக் கல்வெட்டில் வரும் கோணமலையையும் இங்குள்ள கோணமலையையும் ஒன்றெனக்கருத இடமுண்டு. சாவகனைக் கொன்ற பாண்டியப்படை அவன் மைந்தனின் முடிசூட்டு விழாவை அநுராதபுரத்தில் நடத்தியதாக மேலும் இக்கல்வெட்டால் அறியமுடிகிறது. இது சாவகனின் ஆதிக்கம் அநுராதபுரத்தையும் உள்ளடக்கியிருந்ததென்பதை உறுதி செய்வதோடு, அவனின் ஆட்சிப்பீடம் இதற்குக் கிட்டே இருந்ததென்பதையும் மறைமுகமாக உணர்த்துகின்றது.

பாண்டியனின் மேலாதிக்கத்தை ஏற்று சாவகனின் மைந்தன் வட இலங்கையில் ஆட்சி நடத்தினாலும் காலப்போக்கில் இவனையும் நீக்கிவிட்டு பாண்டியரே ஆட்சி அதிகாரத்தை தம் வசப்படுத்திக்கொண்டனர். (57) இதைப் பாண்டிய மன்னர்கள் ஆண்டார்கள் என்பதைவிட இவர்களின் பிரதிநிதிகளில் ஒருவன் ஆண்டான் எனக் கூறலாம்.இதற்கு கைலாயமாலையில் வரும் கூற்றைத் தொடர்பு படுத்திக் கூறலாம். கைலாயமாலையின்கூற்றுப்படி யாழ்ப்பாண அரசின் முதல் மன்னனான சிங்கையாரியன் இங்கு வருவதற்கு முன்னால் அவன் பிரதிநிதியாக பொன்பற்றியூரைச் சேர்ந்த பாண்டியமழவன் இங்கு வந்ததாக கூறுகிறது. (58) கைலாயமாலையில் வரும் இக்கூற்றை புனைகதையென்றோ கற்பனையென்றோ கூறமுடியாது பொன்பற்றியென்பது தென் பாண்டிமிழலைக் கூற்றத்தைச் சேர்ந்த பேரூரென்பதை பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த பாண்டிய மன்னர்களின் ஆவணங்களில் இருந்து அறிய முடிகிறது. (59) மேலும் பாண்டிய மழவன் மட்டுமன்றி மழவச் சக்கரவர்த்தி மழவராயர் என வழங்கிய பாண்டியப் பிரதானிகள் பலர் பொன்பற்றியூரில் இருந்ததாகத் தெரிகிகிது. (60) இதனால் பாண்டிய மழவனுக்கு முன்பே வேறு பாண்டியப் பிரதானிகள் சாகவமைந்தனின் ஆட்சியை நீக்கிவிட்டு அதிகாரத்தை தம்வசப்படுத்திக் கொண்டனர் எனக் கூறலாம். அவ்வாறு கூறுவதற்கு மேற்கூறப்பட்ட காரணங்களோடு பாண்டியர் ஆட்சியை நினைவுபடுத்தும் பல இடப்பெயர்கள் தென்னியங்குளப் பிரதேசத்தை சுற்றிவர இருப்பது மற்றொரு காரணமாகும்.

இன்று தென்னியன் குளம் என அழைக்கப்படும் இப்பிரதேசம் முன்பு தென்னவன் குளம் என்ற பெயரில் இருந்து மருவிய வடிவம் எனக் கூறலாம். தென்னவன் என்பது பாண்டியரைக் குறிப்பதாகும். பாண்டியர் வரலாற்றில் இவர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட இடங்கள் தென்னவன் குடி, தென்னவன்பட்டி, தென்னவன்னல்லூர், தென்னவநாடு எனப் பெற்றிருந்தமை இதற்கு சான்றாகும்.(61) தென்னியன் குளத்தில் தொடர்ச்சியாக பாண்டியன் குளமும், பாண்டியன் கல்லு என்ற கிராமமும் அமைந்திருப்பது மேலும் தென்னியன் குளத்தைப் பாண்டியரோடு தொடர்புபடுத்த சான்றாக அமைகிறது. இங்கு கண்டு பிடிக்கப்பட்ட இராசதானிக்குரிய கட்டட அழிபாடுகளில் ஒன்று செழியாவில் காட்டுப்பகுதியில் உள்ளது. செழியார். செழியன் போன்ற பெயர்கள் பாண்டியர்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டதை கல்வெட்டுக்களிலும், இலக்கியங்களிலும் காணலாம். இராசாதிராசன் கால திருவாலங்காட்டுச் சாசனம் ஒன்று இவன் பாண்டியரை வெற்றி கொண்டதாக ''செழியாரைத் தேசு கொள் கோவிராச கேசரிவர்மன்'' எனச் சிறப்பித்துக் கூறுவதை இங்கு உதாரணமாக காட்டலாம். (62) கைலாயமாலை சிங்கையாரியனுக்கு முன் யாழ்ப்பாணத்தை ஆளவந்த பாண்டிய மழவன் பொன்பற்றியூரைச் சேர்ந்தவன் எனக் கூறுகிறது. தென்னியங்குளத்திற்கு தெற்கேமன்னாருக்கு கிட்டவுள்ள ஒருஇடம் பொன்பரப்பி என அழைக்கப்படுகிறது. இப்பெயர் தென்பாண்டி நாட்டில் உள்ள பொன்பற்றியூருடன் கொண்ட தொடர்பால் இங்கு ஏற்பட்டு பிற்காலத்தில் பொன்பரப்பி எனத் திரிபடைந்திருக்கலாம் எனக் கருத இடமளிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை கூறப்பட்ட கலிங்கமாகன், சாவகன், பாண்டியர் ஆகியோர் கால அரசியல் நிகழ்வுகளும், அதற்கான சான்றுகளும் யாழ்ப்பாணத்தில் அரசொன்று ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்னால் பூநகரிப் பிராந்தியத்தில் சுதந்திர அரசொன்று தோற்றம் பெற்று விட்டதென்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றன. அவ்வாறான அரசொன்று இருப்பதென்பதை ஏற்றுக் கொண்டால் இவ்விராச்சியத்திற்கு ஒரு சிறப்புப் பெயர் இல்லாமல் இருந்திருக்க முடியாது. அதை நல்லூருக்கு முற்பட்ட சிங்கை நகராக கொள்ளலாமா என்ற கேள்வி எழுகின்றது. இதற்கும் சில காரணங்கள் உள. முதலாம் ஜடவர்மன் சுந்தர பாண்டியன் கல்வெட்டு வட இலங்கையை ஈழம் எனக் கூறுகிறது. (63) இதற்குச் சற்றுப் பிற்பட்ட கால விஜயநகர காலத்துக் கல்வெட்டு யாழ்ப்பாணத்தை ஈழம் எனக் கூறுகிறது. (64) இரு கல்வெட்டுக்களுக்கும் இடையே ஈழம் பற்றிய வேறுபாடு எதைக் குறிக்கிறது என்பது தெரியவில்லை. ஈழம் என்பது சங்ககாலம் தொட்டு இலங்கையைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட பெயராகும். இது முழு இலங்கையையும் சில வேளை, இலங்கையின் ஒரு பாகத்தையும் குறித்து நின்றது. நன்னூல் மைலைநாதர் உரையில் தமிழ்நாட்டைச் சூழ உள்ள நாடுகளாக ஈழமும் சிங்களமும் தனித்தனியே கூறப்பட்டுள்ளது. (65) அதாவது ஒரே வரலாற்று மூலத்தில் இலங்கை இரண்டாக வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளது. ஆனால் இலங்கை வரலாற்று மூலங்கள் எதிலுமே ஈழம் பற்றிய குறிப்பு இடம்பெறவில்லை. உண்மையில் ஈழம் முழு இலங்கையை குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்குமாயின் அது நிச்சயமாக இலங்கை வரலாற்று மூலத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும். அப்படியாயின் தமிழ் நாட்டு வரலாற்று மூலங்களில் மட்டும் வரும் இந்த ஈழம் பண்பாட்டால் தமிழ்நாட்டை ஒத்திருந்ததா என எண்ணத் தூண்டுகிறது. பேராசிரியர் பத்மநாதன் ஈழம் என்ற சொல்லிற்கு 'கள்' என்ற பொருள் இருப்பதால் பனைவளம் நிரம்பிய வட இலங்கையை இது குறித்திருக்கலாம் என்றார். (66)

பாண்டியர் ஆட்சியில் இந்த ஈழம் வட இலங்கையைக் குறித்திருக்கலாம் என்பதற்கு பூநகரியில் உள்ள ஈழஊர், ஈழவன்குடா போன்ற இடங்கள் சான்றாகும். (67) இவை ஈழம் தொடர்பாக கண்டு பிடிக்கப்பட்ட இலங்கைக்கேயுரிய முதலாவது சான்றுகளாகும். இவை தற்போதைய வலைப்பாடு கிராமத்திற்கும் பொன்னாவெளிப் பகுதிக்கும் இடைப்பட்ட கடற் பிராந்தியங்களை அண்டிக் காணப்படுகின்றன. இவற்றின் தொடர்ச்சியாகவே கலிங்கமாகனது படைகள் நிலைகொண்ட புலைச்சேரி (புலயர்குடா) அமைந்துள்ளது. கடற்கரையை அண்டிய இவ்விரு இடங்களும் சோழர், பாண்டியர் ஆட்சியில் வர்த்தகத்தில் செல்வாக்குப் பெற்றிருக்கும் என்பதை இங்கு கிடைத்த பலதரப்பட்ட நாணயங்கள் உறுதிசெய்கின்றன. ஈழ ஊரின் காட்டுப்பகுதியில் காணப்படும் இந்து ஆலயங்களுக்குரிய அழிபாடுகள் இவர்களின் தொடர்பால் அக்காலத்தில் இந்துமதம் இங்கு செல்வாக்குப் பெற்றிருக்கும் எனவும் கருத இடமளிக்கிறது. 16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் ஈழஊரில் வாழ்ந்த மக்களை தம் மதத்திற்கு மாற்றி இங்கு கத்தோலிக்க தேவாலயம் ஒன்றைக் கட்டியதாக கூறியிருப்பது இங்கு நினைவுகொள்ளத்தக்கது. (68) இவ் ஈழ ஊரின் தென் எல்லைக் கிராமமாக வீரபாண்டியன் முனை அமைந்துள்ளது. பாண்டிய மன்னர்கள் தமது ஆட்சியின்போது தமிழ்நாட்டில் உள்ள சில இடங்களுக்கு தமது பெயரைச் சூட்டியதற்கு ஆதாரங்கள் உள்ளன. இன்றும் தமிழ் நாட்டில் உள்ள வீரபாண்டியன் கிராமம் பாண்டிய மன்னர்களின் பெயரால் ஏற்பட்ட ஒன்றாகும். (69) இதனால் பூநகரியில் உள்ள வீரபாண்டியன் முனை என்ற கிராமமும் சாவகனுக்கு எதிராக படையெடுத்த வீரபாண்டியன் பெயரால் ஏற்பட்டதெனக் கூறலாம். எனவே பாண்டியக் கல்வெட்டுக்கும் விஜயநகரக் கல்வெட்டுக்கும் இடையிலான ஈழம் பற்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபாட்டை நோக்கும்போது இவை மன்னனின் ஆள்புலத்தைக் குறிக்காது அவனின் அரசிருக்கை அமைந்த இடத்தை குறித்தது என எண்ணத் தூண்டுகிறது. விஜய நகர மன்னர் காலத்தில் மன்னனின் இராசதானி யாழ்ப்பாணத்துக்குள் இருந்ததைப் போல் பாண்டியர் காலத்தில் யாழ்ப்பாணத்துக்குள் மட்டும் இருந்ததாக கூறமுடியாது. இதனால் அரிகேசரி பராக்கிரம பாண்டியன் கல்வெட்டில் வரும் சிங்கை யாழ்ப்பாணத்தில் இருந்த தலைநகரைக் குறிக்காது முன்பு பூநகரியில் இருந்த இராசதானியின் தலைநகரைக் குறித்தது எனலாம். இத்தலைநகர் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் அல்லது தமிழ் நாட்டில் பாண்டியவம்சம் வலிமை குன்றி விஜயநகரப் பேரரசு எழுச்சியடைந்தமை போன்ற காரணங்களால் இங்கிருந்து நல்லூருக்கு இடம் மாற்றப்பட்டிருக்கலாம். பூநகரிக்கு நேர் எதிரே அமைந்த இவ்விடம் இலங்கையின் பெருநிலப் பகுதியில் இருந்து ஏற்படும் ஆபத்துக்களை தடுக்கும் மையமாக அமைந்ததினால் இவ்விடத்தை தெரிவு செய்திருக்க வேண்டும். பூநகரியில் உள்ள நல்லூர். மறவர் குறிச்சி, மட்டுவில் நாடு, சின்னத்தேவர் துறை, வெட்டுக்காடு, வெற்றிலைக்கேணி, கிராஞ்சி கேரதீவு, பலாலி போன்ற பழைய கிராமங்களிற்குரிய பெயர்கள் இதற்கு நேர் எதிரே யாழ்ப்பாணத்திற்குரிய இடப் பெயர்களாக இருப்பதை நோக்கும்போது இவற்றில் பல இராசதானி மாற்றத்தோடு, இங்கு ஏற்பட்டிருக்கலாம் எனக் கருத இடமளிக்கிறது.

ஆரியச் சக்கரவர்த்திகள் ஆட்சியில் தலைநகர் நல்லூருக்கு மாற்றப்பட்டாலும் கூட பூநகரி அதன் முக்கியத்துவத்தை இழந்துவிட்டதெனக் கூறமுடியாதிருக்கிறது. இதற்கு யாழ்ப்பாண மன்னர் கால அரசியல் நடவடிக்கைகள் சில இப் பிராந்தியத்துடன் இணைந்திருந்தமையே காரணமாகும். 15ஆம் நூற்றாண்டு நல்லூரில் இருந்து 17 வருடங்கள் ஆட்சிபுரிந்த செண்பகப்பெருமாளை நினைவுபடுத்தும் வகையில் தென்னியங்குளத்திற்கு வடமேற்காக உள்ள சில இடங்கள் செண்பகப்பெருமாள் புலவு, செண்பகப்பெருமாள் வெளி என்ற பெயர்களைப் பெற்றிருப்பதோடு சில ஆலயங்களின் தோற்றமும் செண்பகப்பெருமாளோடு தொடர்புபடுத்திக் கூறப்படுகிறது. இச்சான்றுகள் கோட்டையில் இருந்து படையெடுத்து வந்த செண்பகப் பெருமான் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கு முன்னால் யாழ்ப்பாண மன்னர்களின் எதிர்ப்பை இங்கு சந்தித்திருக்க வேண்டும். இதனால் இவன் படைகள் தங்கிய இடங்கள் இப்பெயரைப் பெற்றிருக்கலாம். அல்லது 17ஆண்டுகள் இவன் யாழ்ப்பாணத்தை ஆண்டபோது இதற்கு முன்னோடி அரசாக இருந்த பூநகரியில் சில பண்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கலாம். இதை மேலும் கோகில சந்தோஸிய இலக்கியத்தில் வரும் குறிப்புக்கள் உறுதிப்படுத்துகின்றன. கோட்டையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி செண்பகப் பெருமாள் படையெடுத்து வந்த பாதை பற்றிக் கூறும் இந்நூல் யாழ்ப்பாண அரசைப் பாதுகாக்கும் உப்புலவன் தெய்வம் பற்றியும் கல்முனைக்கும் (பூநகரி) மாந்தைக்கும் இடைப்பட்ட நாயாறு என்ற இடம் பற்றியும் கூறுகிறது. (70) இந்நூலில் வல்லிபுரம் குறிப்பிடப்படாவிட்டாலும் இதில்வரும் உப்புலவன் வல்லிபுர விஷ்ணு ஆலயமாக இருக்கலாம் எனச் சிலர் கருதுகின்றனர். ஆனால் யாழ்ப்பாணததை இலங்கையின் பெருநிலப்பகுதியோடு இணைக்கும் பூநகரியில் உப்புலவன் என்ற இடம் இருப்பதை நோக்கும்போது இவ்வாலயம் இங்கிருந்ததெனக் கூறலாம். இதில் வரும் மற்றொரு இடமான, நாயாறு, பூநகரி ஈழஊரின் அருகில் உள்ள நாகமுனை ஆற்றையே குறித்திருக்கலாம். இவ்வாற்றை அடுத்துள்ள பிரதேசம் இன்று பாடநூல்களில் பேய்முனை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் முன்பு இது நாகமுனை என்ற பெயரைப் பெற்றிருந்ததாக தெரிகிறது. பாளி இலக்கியங்களில் வரும் நாகதீவை இன்று யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் கருதினாலும் ஆதியில் இது பரந்த பிரதேசத்தைக் குறித்திருக்கலாம் என எண்ணத் தூண்டுகிறது. எதிர்காலத்தில் இவை விரிவாக ஆராயப்பட வேண்டிய ஒன்று.

இதுவரை பூநகரி தொடர்பாக கூறப்பட்ட வரலாற்று நிகழ்வுகள் பொலநறுவை அரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து இங்கு ஒரு அரசு தோன்றியதென்பதை எடுத்துக் காட்டுகின்றன. இவ்வரசு தமிழ்ப்பிராந்தியங்களின் ஏனைய இடங்களில் ஏற்படாது இங்கு ஏற்பட்டமைக்கு பொலநறுவை அரசின் பின் ஏற்பட்ட தற்செயல் அரசியல் மாற்றம்தான் காரணம் எனக் கூற முடியாது. மாறாக இதற்கு முன்னரே சிங்கள அரசின் ஆதிக்கத்தை எதிர்த்து நிற்கக் கூடிய தமிழ் அமைப்புக்கள் இங்கிருந்தமை காரணம் எனலாம் இதுபற்றிய சான்றுகள் சிலவற்றை இங்கு நோக்குவது பொருத்தமாகும்.

இலங்கையின் பெருநிலப் பகுதிக்கும், யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கும் இடைப்பட்ட ஒடுங்கிய நிலப்பகுதியையும், அதன் தொடர்ச்சியாக வடமேல் மூலையில் அமைந்த மணல்நீட்சிப் பிரதேசத்தையும் கொண்ட பூநகரியின் அமைவிடம் தமிழ் நாட்டிற்கு நேர் எதிரே அமைந்திருப்பதினால் ஆதிகாலம் தொட்டு தமிழ் நாட்டுடனான கடல்வழித் தொடர்புக்கு வாய்ப்பாக இருந்ததெனக் கூறலாம். இதனால் தமிழ்நாட்டில் காலத்திற்கு காலம் ஏற்பட்ட பண்பாட்டலைகள் இலங்கையின் ஏனைய பாகங்களைவிட இப்பிராந்தியத்தில் செல்வாக்குச் செலுத்தியதுடன், பிற இடங்களில் இவை பரவுவதற்கும் இப்பிராந்தியத்துடனான தொடர்பு காரணமாக அமைந்தது. இங்கு கிடைத்த கற்காலக் கருவிகளும்,(71) பெருங்கற்கால பண்பாட்டுச் சின்னங்களும்.(72) தமிழ்ப் பிராமி வரிவடிவங்களும் சங்ககாலத்தை ஒத்த தமிழர் நாகரிகம் சமகாலத்தில் இங்கும் நிலவியதை உறுதிப்படுத்துகின்றன. எமது ஆய்வின்போது பரமன்கிராயில் கிடைத்த தமிழ்ப் பிராமிச் சாசனம் பற்றி ஆராய்ந்த தமிழ் நாட்டின் முதன்மைச் சாசனவியலாளரான ஐராவதம்மகாதேவன் இவை சங்ககாலத்தை ஒத்த தமிழ் வேளீர்களின் ஆட்சி இங்கும் இருந்ததை உறுதிப்படுத்துகிறது எனக் கூறியிருப்பது இங்கு நினைவு கொள்ளத்தக்கது. (73) இக்காலத்தில் இப்பிராந்தியம் தமிழ் நாட்டுடன் மட்டுமன்றி இந்தியா கிரேக்க ரோம, அரசுகளுடனும் சற்றுப் பிற்பட்ட காலத்தில் அரேபிய சீனா நாடுகளுடனும் வர்த்தகத்தில் ஈடுபட்டதாக தெரிகிறது. இதற்கு இங்கு பரவலாக கிடைத்த புராணக்ஷ (கி. மு. 500) லக்ஷ்மி (கி. பி. 1 - கி.பி.5) ரோம (கி.பி. 1 - கி. பி. 5) நாணயங்களும், ரோம, அரேபிய சீன மட்பாண்டங்களும், கண்ணாடிப்பொருட்களும் உறுதிப்படுத்துகின்றன.(74), இத்தொடர்புகள் கி.பி. 6ஆம் நூற்றாண்டின் பின்னர் தமிழ்நாட்டுடன் மேலும் நெருக்கமடைவதைக் காணலாம்.

கி. பி. 6ஆம் நூற்றாண்டில் இருந்து தமிழ்நாட்டை ஆட்சிபுரிந்த வம்சங்கள் தமிழ்நாட்டின் இயற்கை எல்லையைத் தாண்டி பிற நாடுகளில் அரசியலில் பொருளாதார, பண்பாட்டு அம்சங்களில் செல்வாக்குப் பெறத் தொடங்கியது. இதற்கு வணிக கணங்களின் தோற்றமும், பிராமணிய மறுமலர்ச்சியும் தூண்டுகோலாய் அமைந்தன. இவற்றின் தாக்கம் சமகாலத்தில் அநுராதபுரத்திலும் ஏற்பட்டது. இவை தமிழ் நாட்டில் இருந்து நேரடியாக ஏற்பட்டது என்பதைவிட தமிழ் நாட்டிற்கு கிட்டேயிருந்த இலங்கையின் வடமேற்குப் பகுதியில் ஏற்பட்டு பின்னர் இங்கு பரவியதெனலாம். தமிழ்நாட்டு வம்சங்கள் இப்பகுதியை முதலில் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம் மேற்கில் இருந்து ஏற்பட்ட அராபிய வர்த்தக எழுச்சியை கட்டுப்படுத்தவும், பின்னர் இலங்கை அரசியலில் செல்வாக்கு செலுத்தவும் முடிந்தது. இக்காலத்தில் அநுராதபுரத்திற்கு வடக்கே யாழ்ப்பாணம் உள்ளிட்ட உத்தரதேசத்தில் இருந்து இரு கிளர்ச்சிகள் 7ஆம் நூற்றாண்டிலும் (கி. பி. 619 - 628) 8ஆம் நூற்றாண்டிலும் (கி. பி. 777 - 797) ஏற்பட்டதாக சூள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்சம் கூறுகிறது. (75) இதற்கு இப்பிராந்தியம் தமிழ்நாட்டு வம்சங்களுடன் கொண்டிருந்த தொடர்புகள் தூண்டுகோலாய் இருந்தது எனலாம். பூநகரி அரசபுரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பல்லவர்கால விநாயகர் சிலையும், வெட்டுக்காட்டில் கிடைத்த பல்லவர்கால கிரந்த எழுத்துக்களுடன் கூடிய சிலையின் உடைந்தபாகமும், (76) பத்தாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட வட்டெழுத்தில் பழனி என்ற பெயரை உடைய பாண்டிய நாணயங்களும் இவ்வம்சங்களின் தொடர்பு இங்கிருந்ததற்கு சான்றாகும். தமிழ் நாட்டின் பக்தி இயக்கத்தை தலைமையேற்று நடத்திய நாயன்மார்கள் பூநகரிக்கு தெற்கே மாந்தையிலமைந்த திருக்கேதீஸ்வர ஆலயத்தை சிறப்பித்துப் பாடியமை இக்காலத்தில் தமிழ்நாட்டிற்கும் இப்பிராந்தியத்திற்கும்இடையேயிருந்தநெருக்கமான தொடர்புக்கு மேலும் சான்றாகும்.

பல்லவரைத் தொடர்ந்து தமிழ் நாட்டை ஆண்ட சோழவம்சம் முற்பட்ட கால வம்சங்களைக் காட்டிலும் கடல் சார்ந்த பேரரசாக எழுச்சி பெற்றது. இவ்வம்சத்திற்கு எதிராக இலங்கை மன்னர்கள் பலரும் நடந்து கொண்டதால் சோழ மன்னர்கள் தமிழ்நாட்டு வம்சங்களை வெற்றி கொண்டதன் பின்னர், இலங்கை மீது படையெடுப்பது வழக்கமாக அமைந்தது. இத்தகைய ஒரு பின்னணியில் தான் முதலாம் பராந்தகன் (கி. பி. 907 - 955), சுந்தரசோழன் (கி. பி. 956 - 973), முதலாம் இராஜராஜன் (கி. பி. 985 - 1016), முதலாம் இராஜேந்திரன் (கி. பி. 1012 - 1044) ஆகியோர் ஆட்சியில் படையெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. இவர்களுள் முதலாம் இராஜராஜன் கி. பி. 993 இல் இலங்கையின் வடபகுதியையும், முதலாம் இராஜேந்திரன் கி. பி. 1017 இல் முழு இலங்கையையும் கைப்பற்றி பொலநறுவையைத் தலைநகராகக்கொண்டு 77ஆண்டுகள் (கி. பி. 993 - 1070) ஆட்சி புரிந்தனர். இக்காலத்தில் பொலநறுவை இவர்களின் தலைநகராக இருந்தபோதிலும் அவர்களின் நடவடிக்கைகள் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக திருகோணமலையில் அதிகரித்துக் காணப்பட்டது. இதுபோல் வட இலங்கையிலும் மாந்தையுள்ளிட்ட பூநகரிப் பிராந்தியத்தில் இவர்களின் செல்வாக்கு இருந்ததற்கான ஆதாரங்கள் பல அண்மையில் எமது ஆய்வின் போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. கி. பி. 10 ஆம் நூற்றாண்டில் தென்னிந்திய மன்னன் ஒருவன் யாழ்ப்பாணத்தின் மீது மேற்கொண்ட படையெடுப்பு பற்றி சூளவம்சம் கூறுகின்றது. (77). இப்படையெடுப்பை மேற்கொண்ட மன்னனைச் சிலர் 2 ஆம் பராந்தகசோழன் எனவும். வேறு சிலர் இராஷ்ர கூட மன்னன் எனவும் கூறுகின்றனர். (78) அண்மையில் பூநகரி மண்ணித்தலையில் கண்டுபிடித்த இடிந்த நிலையில் உள்ள சோழர் காலச் சிவாலயம் முற்பட்ட சோழக் கலைமரபை (10 ஆம் நூற்றாண்டுக்குரிய) பிரதிபலித்து நிற்பதால் யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்த மன்னன் சோழ அரசனாக இருக்கலாம் என கலாநிதி சிற்றம்பலம் கருதுகிறார். (79) இம்மன்னன் யாராக இருப்பினும் மண்ணித்தலைச் சிவாலயம் முற்பட்ட சோழக்கலைமரபை வெளிப்படுத்தி நிற்பதால் சோழரின் ஆட்சி அநுராதபுரத்தில் ஏற்பட முன்னரே அவர்களின் ஆதிக்கம் இங்கு ஏற்பட்டு விட்டதென்பது இதன் மூலம் தெளிவாகிறது (80)

சோழரின் 77 ஆண்டு கால ஆட்சியில் இலங்கை மும்முடிச் சோழமண்டலம் என்ற பெயருடன் சோழரின் ஒன்பதாவது மண்டலமாக சோழ நிர்வாகத்தில் இணைக்கப்பட்டது. இதனால் முற்பட்ட கால நிர்வாக முறை கைவிடப்பட்டு சோழரின் நிர்வாக முறை இலங்கையில் புகுத்தப்பட்டது. இதனால் இலங்கை ஒரு மண்டலமாகவும் நிர்வாகத்தின் பொருட்டு இவை வளநாடு, நாடு, கோட்டம் எனவும் பிரிக்கப்பட்டன. இதில் பொலநறுவை நிகரிலிச் சோழ வளநாடு எனவும், திருகோணமலை பரகேசரிவளநாடு எனவும், மாந்தை அருள் மொழித்தேவ வளநாடு எனவும் பிரிக்கப்பட்டிருந்ததை இங்கு கிடைத்த சோழக் கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன. (81)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை போன்ற நிர்வாகப் பிரிவு பூநகரிப் பிராந்தியத்தில் இருந்ததற்கு சாசன ஆதாரங்கள் இதுவரை கிடைக்காவிட்டாலும் இங்குள்ள வரலாற்றுப் பழைமை வாய்ந்த இடப்பெயர்கள் சோழரின் நிர்வாகப் பிரிவு இங்கும் இருந்திருக்கலாம் என்பதை உறுதிப்படுத்துகின்றன. பூநகரியில் தென் எல்லையில் குருந்தன் குளத்திற்கு வடக்காக உள்ள ஒரு இடம் சோழ மண்டலம் என அழைக்கப்படுகிறது. இப்பெயர் சங்க காலத்திலேயே தமிழ் நாட்டின் கிழக்குக் கரையோரத்தைக் குறிக்கப்பயன்படுத்தப் பட்டதால் அக்காலத்தில் ஏற்பட்ட வர்த்தக தொடர்பால் இப்பெயர் இங்கு ஏற்பட்டிருக்கலாம் எனக்கருத இடமுண்டு. ஆனால் இப்பிரதேசத்தில் உள்ள சாமந்தியமேடு என்ற இடத்தில் உள்ள புராதன கட்டிட அழிபாடுகளையும், சூழவர உள்ள சோழத் தொடர்பைக் காட்டும் சோழியன்குளம், வெள்ளாங்குளம், சோழ மண்டலக்குளம் போன்ற பெயர்களையும் தெற்கே மாந்தை சோழர் காலத்தில் அருள்மொழித்தேவ வளநாடு என்ற பெயர் பெற்றதற்கான சான்றையும் நோக்கும்போது பூநகரியில் உள்ள இச்சோழ மண்டலம் சோழர் கட்சியில் இலங்கையின் பிரதான நிர்வாக மண்டலமாக இருந்ததெனக் கூறலாம். இவ்விடத்திற்கும் கட்டிட அழிபாடு காணப்படும் தென்னியங்குளத்திற்கும் இடையிலான தூரம் ஒரு சில மைல்களாகும். இதே போல பூநகரியில் உள்ள மட்டுவில் நாடு என்ற கிராமத்தின் பெயர் சோழர்கால நாடு என்ற நிர்வாகப் பிரிவின் பெயரால் ஏற்பட்டதெனக் கூறலாம். இலங்கையில் நாடு என்ற சொல் முழுத்தேசத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டதே தவிர கிராமத்தை அல்லது குறிச்சியைக் குறிக்கப் பயன் படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் தமிழ் நாட்டில் சிறிய நிலப்பிரிவுகள் நாடு என அழைக்கப்பட்டதோடு பல்லவர் சோழர் ஆட்சியில் நிர்வாகப் பிரிவையும் குறிக்கப்பயன் படுத்தப்பட்டது, இது போல் இலங்கையிலும் சோழர் ஆட்சியில் நாடு என்ற நிர்வாகப் பிரிவு இருந்ததை தென்னிந்தியச் சாசனங்கள் உறுதி செய்கின்றன.(82)சோழர்காலத்தில் இந்தநாடு என்ற நிர்வாகப் பிரிவு அந்த ஊரின் பெயரோடு சேர்த்து அழைக்கப்பட்டது. இதற்கு அப்பர் நாடு, மருகல்நாடு, நல்லூர்நாடு, போன்ற நிர்வாகப் பிரிவுகளைக் கூறலாம் (83) இதேபோல் பூநகரியில் மட்டுவில் என்ற ஊரின் பெயரோடு இணைத்து மட்டுவில் நாடு என அழைக்கப்படுவதைக் காணலாம். இம்மட்டுவில் நாடு சோழர் காலத்துடன் தொடர்புடைய தென்பதற்கு திருவாலங் காட்டுச் சாசனத்தை ஆதாரமாகக் காட்டலாம். இச்சாசனத்தில் இரண்டாம் இராசாதிராசசோழன் வட இலங்கையில் வெற்றி கொண்ட இடங்களில் ஒன்றாக மட்டிவாழ் என்ற இடம் குறிப்பிடப் பட்டுள்ளது. (84) இவ்விடத்தை வரலாற்றாசிரியர்கள் பலரும் சாவகச்சேரிக்கு அண்மையில் உள்ள மட்டுவில் கிராமத்தை குறித்ததென அடையாளம் கண்டுள்ளனர். (85) உண்மையில் இது பூநகரி மட்டுவில் நாடு என்பதைப் பல சான்றுகளுடன் நிறுவியுள்ளோம். (86) இதனால் பூநகரி மட்டுவில் நாடு சோழர் காலத்தில் இருந்த ஒரு நிர்வாகப் பிரிவு என்பதில் சந்தேகமில்லை. இம் மட்டுவில் நாட்டிற்கு தெற்காக கரிக் கோட்டம் என்ற இடம் உள்ளது. கோட்டம் என்பது சோழர் காலத்தில் ஒரு நிர்வாகப் பிரிவாகும், .(87) சோழர் காலத்தில் இது அரசன் பெயரோடு அல்லது ஊரின் பெயரோடு சேர்ந்து அழைக்கப்பட்டது. பூநகரியில் உள்ள கரிக்கோட்டத்தை சோழர்கால நிர்வாகப்பிரிவாக எடுத்துக் கொண்டால் இதில் வரும் "கரி" என்பது மன்னனையா அல்லது ஊரையா குறித்தது என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்று.

1070க்குப் பின்னர் சோழரின் ஆட்சி இலங்கையில் வீழ்ச்சியடைந்தாலும் சிங்கள மன்னர்களுக்கு எதிரான போராட்டம் உடனடியாக முற்றுப்பெறவில்லை. இது தொடர்ந்தும் இடம்பெற்றதென்பதற்கு முதலாம் குலோத்துங்கன் (கி.பி. 1070-1120) இரண்டாம் இராசாதிராசன் (கி.பி. 1168. 1178) மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1178 - 1218) ஆகியோர் ஆட்சியில் இடம் பெற்ற படையெடுப்புக்கள் சான்றாகும். இதில் தமிழ் நாட்டில் இருந்து வந்த படை வீரர்கள் மட்டுமன்றி இங்கிருந்த சோழப் படைவீரர்களும் பங்கு கொண்டதாகத் தெரிகிறது. இப்போராட்டங்களில் சில வட மேற்கு இலங்கையில் நடந்ததற்கு ஆதாரங்கள் உள. இரண்டாம் இராசாதிராசன் கால திருவாலங்காட்டுச் சாசனம் இலங்கை மன்னன் முதலாம் பராக்கிரமபாகுவிற்கும் சோழருக்கும் இடையே நடந்த போரில் பராக்கிரமபாகு வட இலங்கையில் ஊருத்துறை (ஊர்காவற்றுறை), புலச்சேரி, மட்டிவாழ், மாதோட்டம், வலிகாமம் ஆகிய இடங்களில் தன் படைகளை நிறுத்தி வைத்திருந்ததாகவும் இவ்விடங்களை சோழத்தளபதி அண்ணன் பல்லவராயன் வெற்றி கொண்டு அவ்விடங்களைக் கைப்பற்றியதாகவும் கூறுகிறது. (88) இக் கல்வெட்டில் கூறப்படும் இடங்கள் அனைத்தும் வடமேற்கிலங்கையில் அமைந்திருப்பதுடன் அவற்றுள் இரு இடங்கள் (புலச்சேரி, மட்டுவில்நாடு) பூநகரிப் பிராந்தியத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

வன்னிப்பிராந்தியம் பற்றி ஆராய்ந்த லூயஸ் அவர்கள் இலங்கையில் தூய தமிழில் அமைந்த இடப்பெயர்கள் பல இப் பிராந்தியத்தில் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார். இவர் குறிப்பிட்ட பெயர்களில் பல சோழர் தொடர்பால் ஏற்பட்டதெனக் கூறலாம். இன்று பூநகரி என அழைக்கப்படும் பெயர் போத்துக்கேயர் காலத்தில் புநெறிம் என அழைக்கப்பட்டது. (89) இப்பெயரின் தோற்றத்தை ஆராய்ந்த சிலர் இது பூநகரமாக இருந்து பின்னர் பூநகரியாக மாறியதெனவும், (90) வேறு சிலர் தமிழ் நாட்டில் உள்ள பொன்னேரி, பூம்புகார் போன்ற பெயர்களில் இருந்து மருவிய வடிவம் எனவும் கருதுகின்றனர். ஆனால் தமிழ் நாட்டிலேயே பூநகரி என்ற இடமுண்டு. (91) இதனால் அங்கிருந்து ஏற்பட்ட குடிப்பெயர்ச்சியினாலோ அல்லது வர்த்தகத் தொடர்பினாலோ இங்கு இப்பெயர் ஏற்பட்டது எனலாம். மேலும் இன்று பூநகரியில் வழக்கில் உள்ள நல்லூர், தியாகருளம், ஆலங்கேணி பல்லவராயன், பல்லவராயன் கட்டு, சோழியன்குளம், அம்பலப்பெருமாள், சோழ மண்டலம், வெள்ளாங்குளம், நீராவி, ஆலங்குளம் போன்ற பெயர்கள் சோழர் ஆட்சியில் தமிழ் நாட்டில் இருந்த முக்கிய இடங்களாகும். (92) இவற்றுள் நல்லூர், வெள்ளாங்குளம், ஆலங்குளம் போன்ற இடங்கள் சோழர்கால செல்வாக்கிற்கு உட்பட்ட திருகோணமலையில் இன்றும் புழக்கத்தில் இருப்பதைக் காணலாம். பதவியாச் சிவதேவாலய அழிபாடுகள் இடையே காணப்பட்ட இரண்டாம் இராசாதிராசன் காலக் கல்வெட்டு இங்குள்ள இரவிகுல மாணிக்க ஈஸ்வரத்திற்கு ஞான தேசிக வணிக கணத்தைச் சேர்ந்த கோணாவில் வெங்காடான் எறிமணி ஒன்று தானம் கொடுத்தது பற்றிக் கூறுகிறது. (93) பூநகரியின் கிழக்கெல்லையில் அம்பலப்பெருமாள் கிராமத்திற்கு அருகே கோணாவில் என்ற இடம் காணப்படுகிறது. இதன் மூலம் இங்கிருந்த வணிகன் ஒருவனே பதவியாச் சிவதேவாலயத்திற்கு நன்கொடை கொடுத்தான் என எண்ணத் தூண்டுகிறது. இதற்கு இன்னுமொரு சான்றை ஆதாரமாகக் காட்டலாம். அம்பலம் என்பது சோழர் காலத்தில் வணிக கணங்கள் ஒன்று கூடும் இடங்களைக் குறிப்பதாகும். இவ்விடங்கள் காலப்போக்கில் ஒரு இடத்திற்குரிய பெயராக மாறியதை தமிழ் நாட்டில் காண முடிகிறது. பூநகரியில் கோணாவிலும் அம்பலப்பெருமாளும் அருகருகே உள்ள இடங்களாகும். இவ் அம்பலப்பெருமாள் சோழர் கால வணிகர்கள் ஒன்று கூடிய இடமாக இருந்ததால் இப்பெயரைப் பெற்றிருக்க வேண்டும். பதவியாவில் உள்ள கல்வெட்டும் வணிககணத்தை சேர்ந்த கோணாவில் வெண்காடனே தானம் கொடுத்ததாக கூறுகிறது. இதன் மூலம் சோழர் ஆட்சியில் பூநகரிக்கும் திருகோணமலைக்கும் நெருங்கிய தொடர்புகள் இருந்தன என்பது புலனாகிறது. சோழ சான்றுகள் தொடர்பாக பூநகரியில் உள்ள இடங்களுக்கும் பிற்காலத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் அரசொன்று தோன்றுவதற்கு சாதகமாக அமைந்த இடங்களுக்கும் இடையே அதிக தொடர்பு இருப்பதை அவதானிக்கலாம். இதனால் கலிங்கமாகனால் வட இலங்கையில் அரசொன்று அமைக்கப்படுவதற்கு முன்னால் அரசொன்று தோன்றுவதற்கான ஆக்கம் சோழர் காலத்திலே ஏற்பட்டு விட்டதெனக் கூறலாம். அவ்வாறு கூறுவதற்கு சில காரணங்களை மட்டும் தற்போது முன்வைக்க முடிகிறது.

யாழ்ப்பாண இராசதானியின் ஆரம்ப தலைநகர் சிங்கை, சிங்கைநகர் என்ற பெயர் பெற்றதற்கு கலிங்க வம்சத்துடனான தொடர்பே காரணம் என வரலாற்றறிஞர்கள் கருதுகின்றனர். இதற்கு ஆதாரமாக சில சான்றுகளைக் கூறியுள்ளனர். ஒன்று கலிங்கதேசத்தில் சில வம்சங்கள் லிங்கபுரத்தை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்ததால், வட இலங்கையில் அரசமைத்த கலிங்கமாகனும் அதன் தலைநகருக்கு தன் தாய்நாட்டை நினைவுபடுத்தும் வகையில் இப்பெயரை இட்டிருக்கலாம். இரண்டாவது கலிங்க வம்சத்து நாணயங்களைப்போல் யாழ்ப்பாண மன்னர்களால் வெளியிடப்பட்ட நாணயங்களிலும், கொடிகளிலும் நந்தி இலச்சனையும் அதன்மேல் பிறையும், நட்சத்திரமும் இடம் பெற்றுள்ளன. மூன்றாவது யாழ்ப்பாணத்து மன்னர்களுடைய விருதுப் பெயர்களான கங்கை ஆரியன், கங்கை நாடான் போன்ற பெயர்கள் கலிங்கத் தொடர்புடையவையாக இருப்பது. (94) இக்காரணங்களைக் கொண்டு சிங்கை நகரை கலிங்கநாட்டு சிங்கபுரத்துடன் தொடர்புபடுத்த வாய்ப்பிருப்பினும் இவற்றை வேறுபடுத்திப் பார்க்கவும் ஆதாரங்கள் உண்டு. பொலநறுவையில் கலிங்கமாகன் உட்பட பல கலிங்க வம்சத்தவர்கள் நீண்டகாலம் ஆட்சிபுரிந்தும்கூட அவர்கள் ஆட்சிக்கு உட்பட்ட நகரங்களில் ஒன்றுதானும் சிங்கபுரம் என்ற பெயர் பெற்றதாக தெரியவில்லை. மேலும் இவர்கள் ஆட்சியில் பலதரப்பட்ட நாணயங்கள் வெளியிடப்பட்டும்கூட அந்நாணயங்களில் ஒன்றாவது கலிங்கவம்சத்துச் செல்வாக்கைப்பெற்றதாகத்தெரியவில்லை. இவர்களுள் கலிங்கமாகன் பொலநறுவையிலோ அல்லது வட இலங்கையிலோ ஆட்சிபுரிந்த காலத்தில் இவனால் வெளியிடப்பட்டது என்று கூறக்கூடிய நாணயங்கள் எதுவும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இந்நிலையில் வட இலங்கையில் அரசமைத்த கலிங்கமாகன் இங்கு மட்டும் தன் தாய்நாட்டு மரபுகளைப் பின்பற்றினான் எனக் கூறுவதை ஏற்றுக்கொள்வது கஷ்டமாக தோன்றுகிறது. இதேவேளை யாழ்ப்பாண மன்னர்களின் நாணயங்களையும், தலைநகர் சிங்கையையும் கலிங்க நாட்டுடன் மட்டும் தொடர்புபடுத்துவது பொருத்தமாகத் தெரியவில்லை. இலங்கையில் கலிங்கத்தொடர்பு ஏற்பட முன்னரே பல்லவர், பாண்டியர், சோழர் ஆட்சியில் வெளியிடப்பட்ட நாணயங்களில் நந்தி இலச்சனையும், அதன் மேல் பிறையும் நட்சத்திரமும் இடம்பெற்றதைக் காண முடிகிறது. இந்நாணயங்களின் சில அம்சங்களைப் பின்பற்றியே பிற்காலத்தில் சிங்கள மன்னர்கள் நாணயங்களை வெளியிட்டுள்ளனர். அட்படியாயின் ஏன் யாழ்ப்பாண மன்னர்கால நாணயங்களில் இவை இடம்பெற்றிருக்கமுடியாது? சிங்கபுரம் என்பது கலிங்கநாட்டு வம்சங்களுக்கும் மட்டும் தலைநகராகஇருக்கவில்லை. இப்பெயர் சோழர் காலமன்னர்களின் தலைநகருக்கும் இருந்துள்ளது. குறிப்பாக முதலாம் பராந்தகன் தலைநகர்களில் ஒன்று சோழ சிங்கபுரம் என அழைக்கப்பட்டதை எடுத்துக்காட்டலாம். (95) யாழ்ப்பாண மன்னர்களின் விருதுப் பெயர்கள் சில கலிங்கத்தொடர்பைக் காட்டினாலும் கலிங்கத்தை வெற்றிகொண்ட சோழரும் அந்நாட்டுடன்தொடர்பான விருதுப் பெயர்களைப் பெற்றுள்ளனர். முதலாம் இராசேந்திர சோழனின் சிறப்பு பெயர்களில் ஒன்று கங்கைகொண்ட சோழன் என்பதாகும். மேலும் வட இலங்கையில் கலிங்க வம்சத்தின் தொடர்பைக் காட்டிலும் சோழரின் தொடர்புக்கே அதிக சான்றுகள் உள்ளன. இதனால் சிங்கைநகருடன் தொடர்புபடுத்தப்படும் சிங்கபுரத்தை கலிங்கத்துடன் தொடர்புபடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதைவிட சோழநாட்டுடன் தொடர்பு படுத்துவதே பொருத்தமாகத் தெரிகிறது. இக்கருத்தை எமது ஆசிரியர் கலாநிதி சி.க. சிற்றம்பலம் அவர்களும் ஏற்றுள்ளார். சோழர் இலங்கையை ஆட்சி செய்தபோது பல நகரங்களுக்கு புதிய பெயர்களை இட்டனர். அவற்றில் பல பிற்காலத்தில் நிலைத்து நிற்கவில்லை. (96) இதைப்போல் சிங்கபுரமும் இவர்கள் காலத்தில் இடப்பட்டு பிற்காலத்தில் நிலைக்காது போயிருக்கலாம். மாந்தைக்கு இவர்கள் இட்ட ராஜராஜபுரம் என்ற பெயரைப்போல் (97) வடக்கே பூநகரியில் உள்ள ராஜபுரமும், அரசபுரமும் இவர்கள் காலத்தில் இடப்பட்ட பெயர்களாகக் கருத இடமுண்டு. அதுபோல் சிங்கபுரம் என்ற பெயரும் இங்கிருந்திருக்கலாம். இதுவே இங்கு தோன்றிய அரசின் தலைநகர் சிங்கையாக மாறியிருக்கவேண்டும். இவற்றை எதிர்கால ஆய்வுகள்தான் மேலும் உறுதிப்படுத்த வேண்டும்.

★ அண்மைக்காலங்களில் கிடைத்த தொல்லியல் சான்றுகள் தொன்மையான தமிழர் நாகரிகம் இப்பிராந்தியத்தில் இருந்துள்ளதென்பதை உறுதிப்படுத்தியுள்ளன.

★ இவர்களின் கருத்தை புறக்கணிக்க முடியாதென்பதை அண்மைக் காலங்களில் கிடைத்துவரும் தொல்லியல் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

## அடிக்குறிப்புகள்

1. **Dipavamsa**. ed. Bimala Churn Law, The Ceylon Historica Journal, Vol VII, **Mahavamsa**, ed. Wilhelm Geiger, Colombo, 1960. மணிமேகலை, உரை சாமிநாதையர், உ. வே., சென்னை *1956*.
2. செகராசசேகரமாலை, *(பதிப்பு)* இரகுநாதையர், இ. சி., யாழ்ப்பாணம். *1942* செகராசசேகரம், அச்சுவேலி, *1932*. **யாழ்ப்பாண வைபவமாலை** *(பதிப்பு)* சபாநாதன், குல., *1953*, கொழும்பு. **ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணம்**, *(பதிப்பு)* இரகுநாதையர் இ. சி. *1942*, யாழ்ப்பாணம்.
3. **கைலாயமாலை**, கண்ணி *14 - 43;* வையாபாடல் *17*ஆம் பாடல், **யாழ்ப்பாண வைபவமாலை**, பக். *13 - 22*.
4. Rasanayagam, C., **Ancient Jaffna**, *(*Madras 1926*)* pp. 7-26.
5. ஞானப்பிரகாசா, சுவாமி, **யாழ்ப்பாண வைபவ விமர்சனம்** *(அச்சுவேலி: 1928)* பக். *47 - 48*.
6. யாழ்ப்பாணச் சரித்திரம் *(ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை 1933)* க. கணபதிப்பிள்ளை *(சங்கிலி நாடக முன்னுரை)* பொ. ஜெகநாதன் *(யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும் - 1987)*
7. இந்திரபாலா கா., **யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம்** *(கண்டி 1972)* **Pathmanathan, S. The Kingdom of Jaffna** *(*Colombo. 1978*)*
8. **யாழ்ப்பாண வைபவமாலை** *(பதிப்பு)* குல. சபாநாதன் *(கொழும்பு 1953)* பக். *27*, **கயிலாயமாலை**, பக். *7*.
9. Gunawardhena, W. F., ed. **Kohilasadisaya**, *(*Colombo: 1924*)* Vers. 246.
10. செகராசசேகரமாலை, செய்யுள் *36*: செகராசசேகரம், பக். *78*.
11. Queyroz, F., de. **The Temporal and Spirtual of Ceylon**, Tr. by S. G. Perera, (Colombo: 1930), p. 50.
12. இந்திரபாலா, கா., ''யாழ்ப்பாண இராச்சியம் தோன்றிய காலமும் சூழ்நிலையும்'' **இளங்கதிர்**, *21*ஆவது ஆண்டு மலர் *(பேராதனை)* ப. *48*.
13. பத்மநாதன், சி., ''இலங்கையில் இந்துமதம் - ஆரியச்சக்கரவர்த்திகள் காலம்'' **சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள்** *(தெல்லிப்பளை 1985)*. பக். *212*.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. பத்மநாதன். சி., ''தமிழ்ச் சாசனங்களும் ஈழவரலாற்று ஆராய்ச்சியும்'' இளந்தென்றல்
15. (கொழும்பு 1972) பக். 30
16. சூளவம்சம், 59:41. 16. E. Z. V. PL. 3, No. 47, pp. 463 - 465.
17. சிவசாமி, வி., ''நல்லூரும் தொல்பொருளும்'', ஒளி, (யாழ்ப்பாணம் : 1972) பக். 3
18. Queyroz. F., Op, cit. p. 642.
19. ஜெகநாதன், பொ., மு. கு. நூல், ப. 138.
20. இந்திரபாலா, கா., மு. கு. நூல், பக். 52.
21. கைலாயமாலை, ப. 26.
22. Rasanayagam- C., Op. cit., p. 332
23. E. T., p. 29.
24. Indrapala, K., "A Cola Inscription from the Jaffna Fort'' E. T. Vol. I, Pt. I· (Jaffna 1971), pp. 52 - 56.
25. சமீபத்தில் வரலாற்றுத்துறைச் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. செ. கிருஷ்ணராசா
வுடன் சென்று சட்டநாதர் கோவில் பகுதியில் மேலாய்வில் ஈடுபட்டபோது இக்
கோயிலின் பழைய கட்டட அழிபாடுகள் இடையே புராதன சிவலிங்கத்தையும்,
ஆவுடையும் கண்டு பிடிக்க முடிந்தது. இவ் ஆவுடை சதுரவடிவில் உள்ளது. இம்மரபு
பெரும்பாலும் சோழர் காலத்தில் பின்பற்றப்பட்ட ஒன்றாகும். சோழரின் பின்பு
இவை பெரும்பாலும் வட்டவடிவில் அமைக்கப்பட்டது. சோழர்காலத்தில் சிவன்
ஆலயங்கள் முக்கியத்துவம் பெற்றதால் இச் சட்டநாதர் ஆலயத்தின் ஆரம்ப
தோற்றம் சோழர் காலத்துடன் தொடர்புடையதெனக் கருத இடமுண்டு. இக்கோயில்
பிரதேசத்தில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் நல்ல பலனைத் தரலாம்.
26. ARE for 1901, No. 128 of 1901 SII, VII, No. 778;
27. முருகவேள் பன்னிரு திருமுறை 2ம் தொகுதி (கதிர்காமம்) பக். 554 - 580.
28. Gunawardhena, W. F., Op. cit., Vers. 246.
29. இந்திரபாலா, கா., மு. கு. நூல், பக். 55.
30. மேற் டி
31. மேற்படி 54.
32. Queyroz. F, Op. cit. p. 452
33. இந்திரபாலா, கா., மு. கு. நூல், பக். 55.
34. SII, VII, No. 778.
35 ARE for 1912, No. 4
36. சிவசாமி, வி., மு. கு. நூல், பக். 2 - 3.
37. Ragupathy, P.. **Early Settlements in Jaffna**, an Archaeological Survey (Madras 1987) pp. 32 - 38.
38. Rasanayagam. C., Op. cit. pp. 310 - 311.
39. ஞானப்பிரகாசர் சுவாமி, மு. கு. நூல், பக் 67 - 68.
40. Ragupathy P., Op. cit.
41. இந்திரபாலா, கா., மு. கு. நூல், ப. 32.
42. மேற்படி.
43. சூளவம்சம் 83 : 17, பூஜாவலிய, (பதிப்பாசிரியர்) ஸுமரவீர, ஏ. வி. (கொழும்பு 1961), ப. 116.
44. இந்திரபாலா, கா., மு. கு. நூல் ப. 33-
45. ARE for 1917, No. 588 of 1916.
46. Nilakanta Sastri, K. A., ''The Ceylon Expedition of Jatavarman Virapandya,'' **Proceedings and Transaction of the Eight all India Oriental Conference.** (Bangalore 1937), p. 509.
47. இந்திரபாலா, கா., மு. கு. நூல் ப. 56.
48. சூளவம்சம் : 83: 15 - 18
49. Ray. H. C. **Histroy of Ceylon**, Vol. I, Part II, (Colombo: 1960) p. 6199.
50. Nilakanta Sastri. K. A., 'The **Colas** (Madras: 1984) p. 408.
51. Pathmanathan, S., Op. cit., p. 106.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52. Arunachalam, P., The Census of Ceylon (Colombo 1902) p. 102.
53. சூளவம்சம். 88 : 63 - 64.
54. இந்திரபாலா, கா., மு.சு. நூல், ப. 30.
55. Arunachalam, P., Op. cit, pp. 102 - 103.
56. Nilakanta Sastri, K. A.. Op. citl. 1937, p. 507.
57. பத்மநாதன், சி., ''ஈழத்தமிழ் வரலாற்று நூல்கள்'', இளங்கதிர் 21வது ஆண்டு மலர் (பேராதனை) ப. 118.
58. கைலாயமாலை, ப, 12
59. Pathmanathan S., Op. cit. p. 206 60. Ibid.
61. சேதுப்பிள்ளை ரா. பி., தமிழக ஊரும் பேரும் (சென்னை 1956) ப. 93.
62. SII, Vol. III, No. 205, Vers. 76 - 79
63. ARE for 1894, No. 166 of 1894.
64. இந்திரபாலா, கா., மு. சு. நூல், ப. 44.
65. வேலுப்பிள்ளை, ஆ., தொடக்ககால ஈழத்து இலக்கியங்களும் அவற்றின் வரலாற்றுப் பின்னணியும் (யாழ்ப்பாணம்: 1986). ப, 10.
66. பத்மநாதன், சி., வீரகேசரி (கொழும்பு 7-3-77).
67. புஸ்பரட்ணம், ப., ''ஈழம் என்னும் இடப்பெயர் பூநகரியில் கண்டுபிடிப்பு'' ஈழநாதம் (யாழ்ப்பாணம் 6-4-90)
68. Friar Paulada Trinidade, Chapter on the Introduction Christianity to Ceylon (Chilaw: 1972) P.240. 69. சேதுப்பிள்ளை, ரா. பி., மு. சு. நூல், ப. 96.
70. Gunawadhena, W. F.,Op. cit., Ver 287.
71. இதுபற்றி கலாநிதி பொ. இரகுபதி அவர்களும் முற்குறிப்பிட்ட நூலில் குறித்துள்ளார்
72. இச்சான்றுகளைப் பார்வையிட்ட இலங்கையின் முதன்மைத் தொல்லியலாளரான சிரான் தெரணியகல என்பவர் இவை தொன்மையான திராவிடர் நாகரிகம் இருந்த தற்கான சான்றுகள் எனக் குறிப்பிட்டார். (4-6-90)
73. தினமணி (சென்னை 1-7-1990).
74. புஸ்பரட்ணம், ப., ''பூநகரிப் பிராந்திய தொல்லியல் மேலாய்வில் கிடைத்த தொல் பொருள் சின்னங்கள் - ஒரு வரலாற்று நோக்கு'' யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வி சார் கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை, (யாழ்ப்பாணம் 1-3-90) பக். 1—21
75. சூளவம்சம் 44: 70 - 75, 48 : 83 - 85.
76. சாசனவியல் புலமையுடைய பேராசிரியர் வி. சிவசாமி அவர்கள் உரையாடலின்போது கூறியமை. 77. சூளவம்சம், 54 : 12 - 15.
78. இந்திரபாலா கா., மு. சு. நூல், ப. 17. 79. உரையாடலின்போது கூறியமை.
80. புஸ்பரட்ணம்,ப., சோழர்கால மண்ணித்தலைச் சிவாலயம் (யாழ்ப்பாணம்-1990) பக்.1-14.
81. Pathmanathan, S., ''Chola rule in Sri Lanka'', Proceedings of the Fourth international Conference Seminar of Tamil (Studies Jaffna 1980), PP. 19-30. 82. Iibid
83. சதாசிவபண்டாரத்தார், தி. வை., பிற்காலச் சோழர் சரித்திரம், (அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1974) ப. 473. 84. E,I., Vol. XXII, No. 14.
85. Nilakanta Sastri K. A Op.cit., 1937, P509.
86. புஸ்பரட்ணம், ப., ''மட்டுவில் - இது சோழா ஆட்சியில் நிர்வாகப் பிரிவா'', வீரகேசரி வாரவெளியீடு (கொழும்பு, 15-49.0)
87. சதாசிவபண்டாரத்தார், தி. வை., மு.சு. நூல், ப. 473.
88. E. I, Vol. XXII, No. 14. 89.Friar Poula do Trinidade, Op, cit., P. 240.
90. Rasanayagam., C, Op. cit.
91. தமிழ்நாடு சென்னை ஒலிபரப்பு கூட்டுத்தாபன வீடும் வயலும் நிகழ்ச்சியில் 18-2-91 அன்று இக்கிராமம் பற்றிக் கூறப்பட்டது. 92. SII, Vol. I,II, III.
93. E. I., PP. 32 - 35 94. இந்திரபாலா, கா., மு. சு. நூல், பக். 35 - 37.
95. சதாசிவ பண்டாரத்தார், சி வை., மு. சு. நூல், ப. 56.
96 இந்திரபாலா, கா,, மு. சு. நூல் ப. 37.
97. SII, Vol. IV 1412 வரிகள் 10 - 15,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிழல் போதும் என்றால்...

ஒளியோடு காண
முடியாத யாவும்
உறவாக வாழ்வு
புரியும்.

இருளோடு கூடி
உறவாட ஆட
ஒருகோடி உண்மை
தெரியும்.

வழிமூட மூட
விழிமூடலின்றி
வழிதேடு மெங்கள்
வாழ்வு.

அழிவோடும் மீள
உருவாகும் எண்ணம்
உயிர்வாழ்வில் என்றும்
உண்டு.

ஒளிதேடும் பிஞ்சுக்
கொடி ஏறும் போது
தடையாவும் தளிர்
மீறும்.

நிழல் போதுமென்ற
களையாற நேரின்
துயர் நூறு வந்து
சூழும்.

மின்னின்றி வாழ
முடியாது என்று
முகம் வாடவில்லை
இரவு.
காற்றையும் வென்று
போத்தலுள் நின்று
கண்திறக் கின்றது
விளக்கு.

கதிர் கொண்ட நெல்லை
களை மூட - மூட
மழைகூடித் தாக்கினாலும்
தலைசாய லின்றி
எழவென்று கோடி
விதை தந்து மீள
வாழும்

வேரோ டிழுத்து
வெட்டிச் சரித்து
வெயிலைத் துண்டாடினாலும்
துண்டான கட்டை -
மரவள்ளித் தண்டும்
துளிர்விடும் சந்ததிக் காக.

நிலவுவிழு வானில்
விடிபொழுது கூட
நடு இரவு போலிருந்தாலும்
மூடுபனியோடு
இருள் அகலுதென்று
முகை அவிழும் பூக்கள்
சொல்லும்—

நாக. சிவசிதம்பரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முத்தமிழ் விழா"

சிறக்க

வாழ்த்துகின்றோம்

□

கங்கா எண்டர்பிரைசஸ்

358, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்.

□




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்
இயல்
இயல்

இசை
இசை
இசை

நாடகம்
நாடகம்
நாடகம்

"முத்தமிழ்"
விழாவில்
நாங்களும்
இணைகின்றோம்

ஸ்ரீதாமோதர விலாஸ்
358, கே கே. எஸ். வீதி.
யாழ்ப்பாணம்

[F-2]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் வாழ நாங்கள் வாழ்வோம் ●

"இரத்தின மாளிகை"

தங்க நகை, வைர நகை வியாபாரிகள்

57, கன்னாதிட்டி,

யாழ்ப்பாணம்.

[F-3[

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தில்

இயல்

இசை

நாடகம்

இனிதே
வளர்க

**அம்பிகா ஜுவெல்ஸ்**

நகைக்கள் முத்து
இரத்தின வியாபாரம்

*59, கன்னாதிட்டி,*
*யாழ்ப்பாணம்.*

[F-4]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முத்தமிழ்" விழா
இனிதே
சிறக்க

# றொலக்ஸ் பேக்கரி

**தரமான பாண் உற்பத்தியாளர்கள்**

**118, கஸ்தூரியார் வீதி,**

**யாழ்ப்பாணம்.**

[F-5]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

0 முத்தமிழ் விழா
இனிதே
சிறக்க

00 எங்கள்
இனிய
நல்வாழ்த்துகள்

உறுதியும் உத்தரவாதமும் உள்ள
தங்க நகைகள் தயாரிப்போர்

## அருள்முருகன் ஜுவல்லர்ஸ்

*.96/1, A கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

கிளை: 10, கண்டி வீதி சாவகச்சேரி.

[F-6]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● வாழ்த்துகின்றோம்

● இனிதே நடக்கட்டும் முத்தமிழ் விழா

● தங்க நகைகளுக்கு நம்பிக்கையான ஸ்தாபனம்

# திலகா ஜுவல்லர்ஸ்

240, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

[F-7]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

□ யாழ்நகரின்
தலைசிறந்த
புடைவை நிலையமாகிய

# மகாராணி ரெக்ஸ்

50, பெரியகடை
யாழ்ப்பாணம்.

□ நாங்களும்
"முத்தமிழ் விழா"
சிறக்க வாழ்த்துகின்றோம்.

[F-8]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❋ தமிழ்வாழ நாங்கள் வாழ்வோம்

❋ எங்கள் மண்ணில் தமிழை வாழவைப்போம்.

❋ முத்தமிழ் விழா நடக்கின்றது

❋ அதன் சிறப்பில் நாங்களும் பெருமை கொள்வோம்.

❋ அழகிற்கு அழகுசெய்யும், அழகிய தங்கநகைகளுக்கு

நியூ லெட்சுமி ஜுவல்லர்ஸ்

*190, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

[F- 9]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ இயல், இசை, நாடகம், சிறப்பாய் வளர
"முத்தமிழ் விழா" துணைபுரியட்டும்.

★ தங்க வைரநகைகளுக்கு
நம்பிக்கை நாணயமுள்ள நிலையம்

# நியூ லலிதா ஜுவல்லர்ஸ்

*74/1, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமிழ் விழாவினை

வாழ்த்துகின்றோம்.

அசல் " 22 " கரட்
நகைகளுக்கு

மகாலட்சுமி
ஜுவல்லரி மார்ட்

*213 A, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

[F-11]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்,
இசை,
நாடகம்,

வளர்க

நயம்,
நம்பிக்கை,
நாணயம்,
நிறைந்த

ஸ்ரீ அமலா ஜுவலர்ஸ்
74/1 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

[F-12]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● "முத்தமிழ் விழாவுக்கு" எமது வாழ்த்து

● நவீன அழகிய தங்க நகைகளுக்கு
வெல்கம் ஜுவல்லறி
164, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

[F-13]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☐ "முத்தமிழ் விழா"வின்
சிறப்பில்,

☐ நாங்களும்
பங்குகொள்கின்றோம்.

சிறந்த தங்கப்பவுண்
தயாரிப்பாளர்கள்

**நித்தியகல்யாணி ஜுவல்லறி**

162, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


[F-14]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் சிறக்க,
விழாநடத்துவோம்.

நவீன அழகிய தங்க நகைகளுக்கு

அன்ரன் லக்ஷா ஜுவல்லர்ஸ்
189/A கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

[F-15]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் மண்ணில்,

எங்கள் தமிழுக்கு,

இன்ப விழா

அழகு ஒரு ஆதனம்

அதற்கு தேவை ஆபரணம்

தங்க ஆபரணங்களுக்கு

# நியூ ஆனந்தா ஜுவலர்ஸ்

185, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்

[F-16]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர் நாட்டார் கலைகள்

உலகநாடுகள் விஞ்ஞானத்தின் அதிவேக வளர்ச்சிக்கேற்பத் தத்தம் நாட்டு அபிவிருத்தித் திட்டங்கள், கல்வித் திட்டங்கள் கலை, கலாசார, நடவடிக்கைகள் என்பவற்றை அமைத்துக் கொள்கின்றன. வளர்முக நாடுகளில் முக்கியமாகக் கல்வி கலா சாரத்திட்டங்களுக்கு யுனெஸ்கோ முதலான நிறுவனங்களும் முதலாளித்துவ நாடுகளும் முன்னின்று உதவியளித்து வருகின் றன கடந்தகால அரசியல் நடவடிக்கைகளையும், கொள்கைத் திட்டங்களையும் சீர்தூக்கிப் பார்க்கும்போது தமிழ் மக்களின் கலாசார அபிவிருத்தி-பாதுகாப்பு நடவடிக்கைகள் மிகவும் பின் தள்ளப்பட்டு, கவனிப்பாரற்ற நிலையிற் காணப்படுகின்றன. எனவே ஈழத் தமிழர் தமது பாரம்பரியக் கலை வடிவங்கள் பற் றியும் அவற்றைப் பேணிப் பாதுகாத்தல் பற்றியும் தீவிரமாகச் சிந்திக்கவேண்டிய காலகட்டம் இது என்பதை உணர்தல் அவசிய மாகின்றது.

ஒவ்வொரு இனத்தினரதும் அரும்பெரும் கலைவடிவங்கள் அனைத்தும் பரம்பரை பரம்பரையாகப் பேணப்பட்டுவரும் 'நாட் டார் கலை' மரபிலே தோற்றம் பெற்று வளர்ந்தவையாகும். புவி யியற் சூழல், பொருளாதார வளம், வாழ்க்கை முறை, சமயம், சடங்குகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், பொழுதுபோக்குகள், ஆடல்கள், பாடல்கள் ஆகிய அனைத்தையும் உள்வாங்கியனவா கவே நாட்டார்கலைகள் தோற்றமும் வளர்ச்சியும் பெற்றுவந்துள் ளன. இக்கலைகள் மக்களை ஒன்றுபடுத்தி, அவர்களை ஊக்குவித்து செயற்படுத்தியும் வந்திருக்கின்றன. நாட்டார் கலைகள் பாமர மக்களின் சொத்தாக அமைவதோடு அவை சாஸ்திரிய ரீதியான கலைகளின் (Classical Arts) தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அடிப்படையாகவும் அமைவதை உலகக் கலைவரலாறு விளக்கு கின்றது.

கலாநிதி

**இ. பாலசுந்தரம்**

*தலைவர்,*
*தமிழ்த்துறை*
*யாழ்ப்பாணப்*
*பல்கலைக்கழகம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் கலை வரலாற்றிலே "வேத்தியல்", "பொதுவியல்" என்ற இரு வேறுபட்ட கலைமரபுகள் இடம்பெற்று வந்திருக்கின்றன. பொதுவியல் - நாட்டார் கலைகளையும், வேத்தியல் - சாஸ்திரியக் கலைகளையும் குறிப்பனவாகும். காலப்போக்கில் சமூக பொருளாதார அமைப்புக்களிலேற்பட்ட மாற்றங்களால் பொதுவியலைச் சார்ந்த 'நாட்டார் கலைகள்' சமூகக் கவனிப்பில் உயர்நிலை மக்களாற் புறக்கணிக்க படுகின்ற போக்கு ஏற்படுவதாயிற்று. ஆனால் வேத்தியல் கலை வடிவங்களுக்கு உருவிலும் உள்ளடக்கத்திலும் நாட்டார்கலைகளே பெரிதும் அடிப்படையாக அமைந்தன என்பது உண்மையாகும் காலத்தால் முற்பட்ட நாட்டார் கலைகளின் வளர்ச்சியே பிந்திய சாஸ்திரிய கலைகளின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் காரணி என்ற உண்மை உணரப்படும்போது இவ்விரு கலைவடிவங்களும் ஒரு பண்பாட்டில் இரு தூண்கள் என்பது விளக்கம் பெறும்.

இந்திய உபகண்டத்திலே பிரதேச அடிப்படையிலும் இனக்குழுக்களின் தனித்துவத்திலும் நாட்டார் கலைகள் பெரிதும் வளர்ந்து காணப்படுகின்றன கதகளி, யக்ஷகானம் முதலான கலைவடிவங்கள் இந்தியாவில் பிரதேசரீதியான சுதேசியக் கலைவடிவங்களாக அமைந்துள்ளன, ஈழத் தமிழ் மக்கள் தமக்கே உரியவை, இன்ன இன்ன கலைவடிவங்கள் என்று உரிமை கோருவதற்கு உரியனவாக நாட்டார் கலை வடிவங்களே காணப்படுகின்றன. ஈழத் தமிழ் மக்கள் உலகக் கலை அரங்கிலே தமக்கென ஓர் இடம்பிடித்துக் கொள்ள வேண்டுமானால் அதனை ஈழத்து நாட்டுக்கூத்து மூலமே பெற்றுக்கொள்ள வாய்ப்புண்டு. ஈழத்தில் நன்கு வளர்ச்சி பெற்றுக் காணப்படும் இக்கூத்து வடிவத்தைத் தமிழ்நாட்டிற் காணமுடியாது. எனவே ஈழத்தமிழர் தமது 'தேசியக் கலை வடிவம்' என நாட்டுக்கூத்தைப் பேண வேண்டியது மிக இன்றியமையாததாகும்.

ஈழத் தமிழரிடையே வழக்கிலுள்ள நாட்டார் கலைவடிவங்களைப் பற்றி விரிவாக அறிந்துகொள்வதற்கு வசதியாக அவற்றை வருமாறு வகைப்படுத்திக் கொள்ளலாம்.

1. அவைக்காற்று கலைகள் -
   1. கூத்துக்கலை
   2. நடனக்கலை
   3. வில்லிசை
2. இலக்கியக் கலைகள் -
   1. நாட்டார் பாடல்கள்
   2. பழமொழி - விடுகதைகள்
3. விளையாட்டு
4. ஒப்பனைக் கலை

கூத்துக் கலைகள் :

ஆடற்கலை வடிவங்கள் பூர்வீக நடனங்களிலிருந்து பரிணமித்தவையாகும். ஒத்திசைவுபெற்ற இசைப் பாடல்களுடன் இடம் பெற்ற நடனம் காலப்போக்கில் கதைப் பாடல்களையும் கொண்டனவாக அமையலாயின. இத்தகைய கதைப் பாடல்களே பின்னாளிற் கதைதழுவிய கூத்துப்பாடல்களாகத் தோன்றி, நாட்டுக்கூத்துக்களையுந் தோற்றுவித்தன.

ஈழத்தில் மட்டக்களப்பு, வன்னி, யாழ்ப்பாணம் என்ற பிரதேச அடிப்படையில் நாட்டுக்கூத்துக்களின் தன்மைகளும் தனித்துவம் பெற்றுக் காணப்படுகின்றன. மட்டக்களப்புப் பிரதேசக் கூத்துக்கள் வடமோடி - தென்மோடி, விலாசம், மகுடிக் கூத்து என்ற- பிரிவுகளைக் கொண்டனவாகவும், மன்னார் கூத்துக்கள் மாதோட்டப் பாங்கு, யாழ்ப்பாணப் பாங்கு, வாசப்பு என்ற மூவகை நாடகப்பாணியில் அமைந்தனவாகவும் முல்லைத்தீவுப் பகுதியில் தனித்துவமான பாணியில் "காத்தான் கூத்தும்", "கோவலன் கூத்தும்" அமைந்துள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்திலும் 'காத்தான் கூத்து' பெருஞ் செல்வாக்குக்குரிய ஆடற் கலை வடிவமாக அமைந்துள்ளது இத்தோடு வடபாங்கு (வடமோடி), தென்பாங்கு (தென்மோடி) என்ற இரு பிரிவில் யாழ் மாவட்டத்தில் இருவகைக் கூத்துக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கிலுள்ளன. இவற்றோடு மலையகத் தமிழர் மத்தியில் ''காமன்கூத்து'' தனித்துவமான ஒரு ஆடற்கலை வடிவமாக அமைந்துள்ளது. இவ்வாறாக ஈழத் தமிழர் மத்தியில் வடபாங்கு, தென்பாங்கு, மகுடிக் கூத்து, வாசாப்பு, விலாசம், கோவலன் கூத்து மரபு, காமன்கூத்து என்ற நாடக மரபுகள் இன்றும் வழக்கிலிருந்து வருகின்றமை புலனாகின்றது. கிராமிய இசைநாடக மரபும் யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மைக்காலம் வரையும் நடிகமணி வி. வி. வைரமுத்து குழுவினரால் பேணப்பட்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிட்ட ஆடற்கலை வடிவமாகிய கூத்துக்களுக்குரிய மூல இலக்கியங்களாக இதிகாச, புராணக் கதைகளே பெரிதும் அமைந்தன. சிறுபான்மை சமூக, வரலாற்றுக் கதைகளும் கூத்து இலக்கியங்களாகப் பயன்பட்டன. ஈழத்தில் வரலாற்றுக்கதைப் பின்னணியில் பூதத்தம்பி நாடகம், சங்கிலியன் நாடகம், வெடியரசன் நாடகம் கண்டிராசன் நாடகம் என்பன ஆடப்பட்டு வந்துள்ளன. புராணக் கதைகளில் ஸ்ரீவள்ளி நாடகம், காத்தவராயன் நாடகம் என்பன பிரபல்யம் பெற்றவையாகும். அண்மைக்காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் காத்தவராயன் இசைநாடகம் தயாரிக்கப்பட்டு சுமார் முப்பது தடவைகள் இதுவரை மேடை ஏற்றப்பட்டு மக்களின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றுள்ளது. அன்றியும் இந்நாடகக் கதையமைப்பும், இசைமரபும் தமிழீழ விடுதலைப்போராட்டத்தினை முன்னெடுத்துச் செல்லும் அரசியல் பிரசாரக் குழுவினால் நன்கு பயன்படுத்தப்பட்டமையும் அதன் விளைவாக மேடைஏற்றப்பட்ட 'களத்திற் காத்தான்', 'போர் மண்ணில் புனிதத்தாய்' என்ற இரு நாடகங்களும் கிராமிய நாடகங்கள் ஆற்றல் மிக்க கலை வடிவம் என்ற உண்மையினைச் சான்று படுத்துகின்றன.

தென்மோடி கூத்துக்கள் கலைநுட்பம் மிக்கவை. இவற்றில் இடம்பெறும் பாடல்கள் இசை நுணுக்கம் கொண்டவை அவ்வாறே ஆடல் முறைகளிலும் நுட்பமும் வேகமும் அமைந்திருக்கும் தென்மோடிக் கூத்தர்களின் ஒப்பனை முறையிலும் தனித்துவம் காணப்படும். இவர்களது ஆடை அணிகலன்கள் வேகமாகத் துள்ளிக் குதித்து ஆடுவதற்கு ஏற்ற வகையில் பாரமற்றதும் இலகுவானதுமான ஆடை அலங்காரங்கள் மேற்கொள்ளப்படும். சிருங்காரச் சுவையும் கலந்ததாகத் தென்மோடிக் கூத்துக்களின் கதையமைப்புக் காணப்படும்.

வடமோடிக்கூத்துக்களில் பங்குபெறும் கூத்தர்கள் பாரமான முடிகள், கரப்புடைகள் ஆகியன அணிந்து ஆடுவதால், தென்மோடியோடு ஒப்பிடுகையில் வடமோடியில் ஆட்டம் வேகம் குறைந்தே காணப்படும். மேற்குறிப்பிட்ட வடமோடி, தென்மோடி மரபில் கிறிஸ்தவ நாடகங்கள் ஆடப்பட்டபோது ஒப்பனைமுறையில் சற்று வேறுபட்ட தன்மையுங் கொண்டிருத்தல் தவிர்க்க முடியாததாகும். ஈண்டு விதந்தோதப்பட வேண்டியது என்னவெனின், இன்றுவரை வடமோடி, தென்மோடி மரபில் நாட்டுக் கூத்துக்களை மிக்க ஆர்வத்துடன் நடாத்தி வருபவர்கள் கிறிஸ்தவர்களே என்பதாகும்.

விலாசம் என்ற கூத்து வகையானது, வடமொழியிலிருந்து தமிழில் புகுந்து சுமார் 18ஆம் நூற்றாண்டளவில் ஈழத்திற்கு அறிமுகமான ஒரு கிராமியக்கலை வடிவமாகும். வடமோடி, தென்மோடிக் கூத்துக்களை எடுத்து விலாசமாகப் பாடியாடிய மரபு தொடக்கத்திற் காணப்பட்டது. 19ஆம் நூற்றாண்டளவில் ஈழத்தில் விலாசக் கூத்துக்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. வடமோடி தென்மோடிக் கூத்துக்களில் தமிழர்தம் பாரம்பரிய இசையமைப்பில் (விருத்தம், அகவல், வெண்பா, தரு, சிந்து, கொச்சகம், தாழிசை மற்றும் கிராமிய இசை வடிவங்கள்) பாடல்கள் அமைய விலாசக் கூத்துக்களில் கர்நாடக இசையில் பாடல்கள் பாடப்பட்டன. அத்துடன் விலாசத்திலே வசனங்களும் இடம்பிடித்துக் கொண்டன. மரபுவழிக் கூத்து விலாசமாக மாற்றப்பட்டபோது, விலாசத்தில் கூத்து முறைகள் அதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடல் முறைகள் குறைக்கப்பட்டன. பதிலாக பாடலுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுவதால் கர்நாடக இசைமரபு பெரிதும் இக்கூத்திற் பேணப்படுவதாயிற்று இதனுல் விலாசத்திலே கூத்து ஆடல் முறைகள் மெல்லமெல்லக் குறைவதாயின. விலாசக் கூத்துக்கள் கற்றோராலும் கர்நாடக சங்கீத ஞானம் பெற்றோராலும் விரும்பிப் பயிலப்பட்டன, அவர்களால் பேணப்பட்டன. கர்நாடக இசையறிவுடையோரே விலாசக் கூத்திற் பங்குபெறலாயினர்.

அண்மைக் காலத்தில் ஈழத்தில் விலாசக்கூத்து மரபினை நடிகமணி வி.வி. வைரமுத்து குழுவினர் (காங்கேசன்துறை வசந்தகான சபையினர்) பேணிவளர்த்து வந்தமையினையும், அவர்களால் மயானகாண்டம், பூதத்தம்பி, ஸ்ரீவள்ளி, பிரகலாதன், பக்த நந்தனார், சத்தியவான் சாவித்திரி, குலேபகாவலி, கண்ணகி முதலிய விலாசங்கள் பெரிதும் நடிக்கப்பட்டு மக்களின் அமோக வரவேற்பைப் பெற்றமையும் ஈழத்துக் கிராமியக் கலைமரபில் குறிப்பிடப்படவேண்டியதொரு வரலாற்று நிகழ்வாகும். இக்குழுவினரின் விலாசக் கூத்துக்கள் யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய நகரங்களிலும், பேராதனை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களிலும் வானொலியிலும், தொலைக்காட்சியிலும், இடம்பெற்றன. பேராசிரியர் சு. வித்தியானந்தன் கூறுவது போன்று, 'ஈழத்து நாடக வரலாற்றிலே அவருக்குத் தனியிடமுண்டு. நாடகத்துறையிலே ஈழத்துக்குத் தனிப்புகழ் தேடித்தந்த நாடக மேதைகள் சிலரில் அவர் ஒருவர் என்பதும் நோக்கத்தக்கது.

### நடனக்கலை

நாட்டார் கலை மரபிலிடம்பெறும் நடனங்களில் வசந்தன் ஆட்டம் தனிச்சிறப்பு வாய்ந்தது. யாழ்ப்பாணத்திற் கட்டுவன் கிராமத்திலும் தென் தமிழீழத்தில் அனைத்துக் கிராமங்களிலும் வசந்தன் ஆடப்பட்டு வந்திருக்கின்றது.கோயிற் சடங்குகளோடும், சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளி முதலாம் பண்டிகைக் காலங்களிலும் மட்டக்களப்புப் பிரதேசத்தில் வசந்தன் ஆட்டத்தைச் சிறுவர்களும் இளைஞர்களும் பேணிவந்திருக்கின்றனர். வசந்தன் ஆட்டம் கிராமியக் கலைநிகழ்ச்சிகளில் முக்கிய இடம் பெறுவதாயிற்று. பாடசாலைகளிலும் வசந்தன் ஆட்டம் பயிற்றுவிக்கப்பட்டது. 1940 இல் தி. சதாசிவ ஐயர் பதிப்பித்த 'மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு' என்ற நூலில் 52 வகையான வசந்தன் ஆடல்களுக்குரிய பாடல்கள் இடம்பெற்றிருத்தல் குறிப்பிடத்தக்கது.

தென்னிந்தியாவில் பரவலாகக் கோலாட்டம் இடம்பெற்றபோதும், ஈழத்தில் இலக்கிய நயம்செறிந்த வசந்தன் பாடல்கள் நூலுருப் பெற்றிருத்தல் குறிப்பிடத்தக்கது. வசந்தன் ஆடலும் பாடலும் தெய்வஞ்சுட்டியும், உழவர்தொழில் முறைகளைச் சித்திரிப்பனவாகவும், இதிகாசக் கதைகளைச் சித்திரிப்பனவாகவும், நகைச் சுவையுடையனவாகவும், அத்துடன் ஆடல் நுணுக்கங்கள் பொருந்தியனவாகவும் அமைந்திருக்கும். இக் கலைவடிவமும், இன்றைய இளைய தலைமுறையினரால் பேணப்படாது மறைந்துபோகக்கூடிய துர்ப்பாக்கிய நிலையுங் காணப்படுகின்றது. இன்று வசந்தன் ஆட்டம் ஆடுவோர் இல்லை; எமக்கு எஞ்சியிருப்பன வசந்தன் பாடல்களேயாகும்.

வசந்தன் ஆட்டத்தை அதில் கைதேர்ந்த 'அண்ணாவியார்' மூலமே பழகவேண்டும். முறையான ஒருமாதகாலப் பயிற்சி பெற்றால் அதனை ஆடப்பழகிக் கொள்ளலாம். எட்டுப்பேர் அல்லது பத்துப்பேர் கொண்ட குழு நடனமாகவே இந்த ஆட்டம் அமையும். இந்நடனத்தில் தென்னிந்தியாவில் பெண்களும் பங்குபெறுவர். ஆனால் ஈழத் தமிழர் மத்தியில் இதுவரை காலமும் ஆண்களே இக்கலையை வளர்த்து வந்திருக்கின்றனர். மத்தளம், தாளம், வசந்தன் தடிகள், கால் சதங்கை என்பன வசந்தன் ஆட்டத்திற்குரிய உபகரணங்களாகும். வழக்கு அருகிக் கொண்டு வரும் நுட்பம் வாய்ந்த இக் கிராமிய நடனம் பேணிப் பயிலப்பட வேண்டிய ஒரு கலையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாளக் காவடி :

காவடி ஆட்டம் கோயிற் சடங்குகளிலே இடம்பெறுகின்றது. கோயில் நேர்த்திகளின் அடிப்படையில் நிகழ்த்தும் ஒரு வகைக் காணிக்கையாகக் காவடி ஆட்டம் அமைகின்றது. ஆனால் இக்கோயில் நடனத்திற்கும் அப்பால் கலை அம்சம் என்ற அடிப்படையில் கலையுணர்வோடமைந்த காவடி ஆட்டம் உண்டு. அதனையே ஈண்டு 'தாளக்காவடி' என்ற தொடர்புகுறிப்பதாகும் தாளம், மிருதங்கம், காற்சலங்கை, காவடி என்ற உபகரணங்கள் இவ்வாட்டத்தில் பயன்படுத்தப்படுகின்றன. ஆடல் நுணுக்கம் வாய்ந்த தாளக் கட்டுக்கள் இந்நடனத்தில் இடம்பெறும். தாளக்காவடியில் இடம்பெறும் 'கப்பல் ஆட்டம்', 'கிண்கிணியாட்டம்' என்பன தனிச்சிறப்பு வாய்ந்தவையாகும். தாளக்காவடி சிறப்பாக யாழ்ப்பாணத்திலேயே சிறப்புப் பெற்றிருந்திருக்கிறது. ஆவரங்கால் அண்ணாவி கந்தப்பிள்ளை, இணுவில் ஏரம்பு, அளவெட்டி இளையதம்பி, நெல்லியடிக் கந்தர், கதிரேசு, நற்குணம், குரும்பசிட்டி சின்னத்துரை, முருகன், தம்பன், கிருஷ்ணன், நவக்கிரி நாகலிங்கம் முதலிய அண்ணாவிமார் இக்காவடி ஆட்டத்தைப் பழக்கி கலைவளர்த்து வந்திருக்கின்றனர். இக்கலை வடிவம் காரைநகரிலும் தென்மராட்சிப் பகுதியிலும் வழங்கி வந்ததாக அறியப்படுகின்றது. இக்கலையின் ஏக வாரிசாக இன்று விளங்குபவர் கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை ஆவர். இவரைப் பயன் படுத்த வேண்டியது இன்றைய இளைய தலைமுறையினரின் பொறுப்பாகும்.

வில்லிசை :

தமிழ் நாட்டிலும், ஈழத் தமிழ் மக்களிடத்திலும் மிகப்பரவலாக இருந்துவரும் நாட்டார் கலைவடிவங்களில் வில்லிசை' யும் குறிப்பிடத்தக்கதாகும். இக் கலைவடிவம் தமிழகத்திலிருந்து 1960 க்குப் பின்பே ஈழத்தில் செல்வாக்குப் பெற்றுள்ளதாக அறியப்படுகின்றது. மட்டக்களப்புப் பகுதியில் மாஸ்டர் சிவலிங்கம் கொழும்புப்பகுதியில் லடிஸ் வீரமணி, யாழ்ப்பாணப் பகுதியில் சின்னமணி குழுவினர் இக்கலையை வளர்த்து வந்திருக்கின்றார்கள். அண்மைக் காலங்களில் பாடசாலைகளில் வில்லிசைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. சமகால சமூக பொருளாதார அரசியல் கருத்துக்கள் பற்றிக் கூறுவதற்கேற்ற சிறந்த கலைவடிவமாக வில்லிசை அமைவது இதன் முக்கியத்துவத்தைக் குறிக்கின்றது. அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் 'நாட்டார் வழக்கியற் கழகம்' வில்லிசைக் கலையை மிகப் பக்குவமான முறையில் பயன்படுத்தி நாட்டார் கலைப் பாரம்பரியத்தையும் அதே வேளையில் சமகால சமூக பொருளாதார சிந்தனைகளையும் பற்றிக் கூறவும் பயன்படுத்தி வருகின்றமை இக் கலைவடிவத்தின் எதிர்கால வளர்ச்சியைக் குறித்துக் காட்டுவதாகவுள்ளது.

நாட்டார் இலக்கியம் :

பரம்பரை பரம்பரையாக வாய்மொழி மரபில் பேணப்பட்டு வரும் இலக்கியவடிவமே நாட்டார் இலக்கியமாகும். இவை கிராமிய மக்களின் கூட்டுப் படைப்பாகவும், கிராமிய புலவனின் தனிப்படைப்பாகவும் அமைந்திருக்கும். ஈழத் தமிழ் மக்களிடையே வழங்கும் நாட்டார் பாடல்கள் சேகரிக்கப்பட்டு அவ்வப்போது நூலாக வெளியிடப்பட்டுள்ளன. மட்டக்களப்பு, மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மலையகம் என்ற பிரதேச அடிப்படையிலான இலக்கியத் தொகுப்புக்கள் வெளிவந்துள்ளன. இன்னும் நூல்வடிவம் பெறாமல் தனியார் சேகரிப்பில் வெளிவரக் காத்திருக்கும் தொகுதிகளும் உள்ளன. இவற்றை வெளிக்கொணர வசதிகள் அளிக்கப்பட வேண்டும்.

கிராமிய நாடகக் கலை இலக்கியங்கள் கிராமந்தோறும் ஏடுகளிலும், கொப்பிகளிலும் அச்சேற வசதியின்றி முடங்கிக் கிடக்கின்றன. பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர் கா. சிவத்தம்பி, பண்டிதர் வி. சீ. கந்தையா, கலாநிதி இ. பாலசுந்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியோரின் முயற்சியினால் சில கிராமிய நாடக ஏடுகள் நூல்வடிவம் பெற்றுள்ளன. இன்னும் நூற்றுக்கணக்கான நாட்டுக் கூத்துப் பாடல்கள் அச்சுவாகனம் ஏற பண வசதியை எதிர்பார்த்தவண்ணம் இருக்கின்றன. இக்கூத்து இலக்கியங்கள் நூலுருப் பெறவேண்டும். அப்போது தான் ஈழத் தமிழ் நாட்டார் கலைகளின் இலக்கியச் செழுமையும் வெளிப்பட வாய்ப்பு ஏற்படும்.

ஈழத்தமிழர் தம் வாழ்வையும், மண்ணையும், சமூகப் பழக்க வழக்கங்களையும் எடுத்துரைப்பனவாகவும், ஈழத் தமிழகத்தின் தனித்துவத்தைப் பேணத் தக்கனவாகவுமுள்ள பழமொழிகள், விடுகதைகள், கதைப்பாடல்கள் என்பனவும் சேகரிக்கப்பட்டு தனித்தனி நூல்களாக வெளியிடப்பட வேண்டும். இவ்வெளியீடுகள் ஈழத் தமிழரின் நாட்டார் கலைவளத்தின் பரப்பையும் பழைமையையும் சுட்டிக்காட்ட ஏதுவாக அமையத்தக்கவை.

ஈழத் தமிழரிடையே வழக்கிலுள்ள 'கண்ணகிவழக்குரை', 'கோவலனார் கதை', 'சிலம்புகூறல்'- என்ற இலக்கியங்கள் தமிழகத்தினின்றும் தனித்துவம் வாய்ந்தவை. கண்ணகி வழக்குரை என்ற நாட்டார் காப்பியம், ஈழத் தமிழிலக்கிய வரலாற்றுக் காலத்தில் ஏற்படும் ஒரு வெற்றிடத்தை நிரப்பக்கூடிய தகுதியும் பெருமையும் பெற்றிருத்தல் ஈண்டுச் சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும். இதுபோன்றே ஈழத் தமிழர் நாட்டுக்கூத்து இலக்கியங்களும், ஈழத் தமிழர் இலக்கிய பாரம்பரியத்தின் ஒரு பகுதியை வளமாக்கும் தன்மைவாய்ந்தவை ஆகும்.

**விளையாட்டுக் கலை:**

பாரம்பரிய விளையாட்டுக்கள் உலகப் பண்பாட்டுப் பின்னணியில் மதிப்பு மிக்கனவாகக் கருதப்படுகின்றன. பாரம்பரிய விளையாட்டுக்கள் அவ்வப் பிரதேச மக்களின் கலை கலாசாரத்தையும் பிரதிபலிப்பனவாகும். ஈழத்தமிழரிடையே 'வண்டிச் சவாரிப் போட்டி' வடக்கு கிழக்கு மாகாணங்களில் மிகப் பரவலாக நடைபெற்று வந்தபோதிலும் யாழ்ப்பாணத்திலே அளவெட்டி, இளவாலை, மாவிட்டபுரம், கோப்பாய், யாழ்ப்பாணம் முதலான இடங்களில் மிகவும் சிறப்பாக நடாத்தப்பட்டதாக அறிகின்றோம். இதுபோன்றே 'தாச்சிப் போட்டி' விளையாட்டும் இன்றுவரையும் யாழ்ப்பாணப் பிரதேசத்திலே பரவலாக இடம்பெற்று வருகின்றது.

பொதுவாக விழாக்காலங்களிலும் பண்டிகைக் காலங்களிலும் கிராமப்புறங்களிலும் பல்வகை விளையாட்டுக்களும் அவற்றோடு சேர்ந்த பாடல்களும் இடம்பெறும். கொம்பு விளையாட்டும், சேரிப்பாடல்களும், ஊஞ்சலும், ஊஞ்சற் பாடலும் கிட்டிப்புள் விளையாட்டும், கிட்டிப் பாடலும் இன்னும் எத்தனையோ பாரம்பரிய சிறுவர் விளையாட்டுக்களும், அவற்றோடு பாடப்படும் விளையாட்டுப் பாடல்களும் அருகிக் கொண்டு வருகின்றன. இவற்றைப் பதிவு செய்து வைக்கவேண்டிய கடப்பாடு இன்றைய தலைமுறையினருக்குரியதாகும்.

**ஒப்பனைக் கலை:**

சிறப்பாக கிராமிய நாடகங்களுக்கு வேண்டிய அலங்காரங்களையும் ஒப்பனைக் கலைஞர்களே செய்கிறார்கள். நடிகர்களுக்குரிய விதம்விதமான முடிகள், கிரீடங்கள், வில், வாள், கதாயுதம் முதலிய உபகரணங்கள், வேலைப்பாடு உடைய சட்டைகள், தலைப்பாகை என்பனவும் இவ்வகையிற் குறிப்பிடத்தக்கவை. பாரம்பரிய நாடக ஒப்பனைக்கலைஞர்கள் தமிழீழத்தில் மிகக் குறைந்தவர்களே காணப்படுகின்றனர். இவர்களிடமுள்ள இத்தகைய உபகரணங்கள் உரியவாறு அவர்களிடம் விலைக்கு வாங்கப்பட்டு, பொது இடம் ஒன்றில் (அரும்பொருளகம்) பேணப்படவேண்டும். இப்பொருட்களே எமது நாட்டார் கலைப்பாரம்பரியத்தின் மிச்ச சொச்சங்களாகவும் கலை வரலாற்றுச் சின்னங்களாகவும் அமையப் போவனவாகும். இவற்றோடு, மணவறை அலங்காரம், மேடை அலங்காரம் சார்ந்த கலைப் பொருள்களும் அழிந்துபோகாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேகரித்துப் பேணப்பட வேண்டியனவாகும். 'மாதிரி மணவறை அலங்காரம்' ஒன்றை அமைத்துப் பேணுதலும் பொருத்தமானதே.

பாரம்பரிய இசைக் கருவிகள்:
(உடுக்கு மத்தளம்)

ஈழத்தமிழ் மக்களது பாரம்பரிய இசைக் கருவிகளில் உடுக்கும் மத்தளமும் மிக முக்கிய இசைக் கருவிகளாகும். உடுக்கு சமயச் சடங்குகளில் பயன் படுத்தப்பட்டாலும் 'உடுக்கடித்துப் பாடும்' இசைப்பாடல்களும் நம்மவர் மத்தியில் வழங்கியிருக்கின்றன. அளவெட்டிப் பகுதிகளில் உடுக்கடித்து இசைக் கச்சேரிகள் நடந்திருக்கின்றன. இன்று நாட்டுக் கூத்திலும், பொருத்தமான இடங்களில் உடுக்கு இசையும் பயன்படுத்தப் படுகின்றது. மத்தளம் நாட்டுக் கூத்திலும், வசந்தன் கூத்திலும், காவடி ஆட்டத்திலும் பயன்படுவதாகும். மத்தள ஆசான் 'அண்ணாவியார்' என்று வழங்கப்படுவார். கூத்துக்களில் இன்று மத்தளத்திற்குப் பதிலாக மிருதங்கம், டோல்கி பயன்படுத்தப்படுவது பொருத்தமாகத் தோன்றவில்லை.

தமிழ் ஈழத்தில் வழக்கிலுள்ள நாட்டார் கலையம்சங்கள் பற்றிய தகவல்கள் ஈண்டு சுருக்கித் தரப்பட்டன. இவற்றினைப் பேணும் நடவடிக்கைகளுக்குப் பொதுமக்கள் உரியவர்களுக்கு ஒத்துழைப்பு நல்குவார்களென்றே எதிர் பார்க்கின்றோம். தமிழ் மக்களின் பாரம்பரிய கலைவடிவங்கள் அழிந்துபோகாமல் பாதுகாக்கப்பட வேண்டிய காலகட்டம் இதுவே. பாரம்பரிய இசைக் கருவிகள், நாட்டுக்கூத்து உடையலங்கார ஒப்பனைப் பொருள்கள், கிராமியக் கைப்பணிப் பொருள்கள், ஓவியங்கள், சிற்பங்கள், பாரம்பரிய விவசாயப் பொருள்கள், மற்றும் பாரம்பரிய தொழில்களுடன் கூடிய உபகரணங்களும், கலைப்பொருள்களும் பேணப்படவேண்டும். நாட்டார் பாடல்கள் நாட்டுக்கூத்து மெட்டுகள், பாட்டுக்கள் முதலியனவும் ஒலிப்பதிவு செய்யப்படவேண்டும். இயன்றவரை வீடியோ படமாகவும் ஒளிப்பதிவு செய்தும் கலைவடிவங்களைப் பேணலாம். இவை அனைத்தையும் உரியவாறு சேகரித்து 'ஈழத்தமிழர் நாட்டார் கலை அரும் பொருட்சாலை' ஒன்றை அமைக்க இத்துறை ஆர்வலர் அனைவரும் உடனே முயற்சி எடுப்பார்களாக. □

---

மகனா ?

**போர்க்களத்தில் பாருங்கள்**

சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுஉள னோஎன வினவுதி என்மகன்
யாண்டுஉளன் ஆயினும் அறியே னோரும்
புலிசேர்ந்து போகிய கல்அளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே.

— காவற் பெண்டு (86)
(புறநானூறு)

*என்னுடைய சிறிய வீட்டின் கண்ணே உள்ள ஒரு தூணைப் பிடித்து நின்று உன்னுடைய மகன் எங்கே? என்று கேட்கின்றாய் எனது மகன் எங்கே நிற்கின்றானோ எனக்குத் தெரியாது. புலியானது களைப்பு நீங்க உறங்கிவிட்டு வெறியேறிய மலையின் குகைபோல அவனைப் பெற்ற வயிறு இது தான். அவன் செருக்களத்தினிலேதான் நிற்பான். அவனை அங்குதான் போய்க் காண்பீர்களாக.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணின் உயிர்

ஈரமற்றுப் போனதடா இந்நிலம்
அட மானுடனே காதல் செய்

நாம் பிறந்ததும் தவழ்ந்ததும்
மண்தின்று வளர்ந்ததுமாய இந்தப் பூமி
சுடலைப் பொடியாகிப் போதல்
உனக்குச் சம்மதமா?

நிலமகளின் பூமேனி
தீயில் அகப்பட்ட பிள்ளைத்தாய்ச்சியைப்போல்
எரிந்தும் சரிந்தும்
கொப்புளங்கள் போட்டுடைந்த
புண்ணாகிப் போதல்
உன் நெஞ்சைப் பிழியவில்லையா?

அநாதரவான் சிறிசுகளாலும். அபலைப்பெண்களாலும்
காதல் முனை கருகி வாடும் கன்னியராலும்
கலங்கித்தவிக்கும் உன்தாய் பூமியை
ஒரு குழந்தையைப் போல மடிகிடத்திக் கொஞ்ச
உன் மனம் கனியவில்லையா?
உன் தாய் முன்றலில் தவழ்ந்தவன் அல்லவா
அட காதல் செய் மானுடனே.

காதற் பெருக்கின் வசமாகி இசைவுற இங்கு
எல்லாமே காத்திருக்கின்றன.
கண்ணில் நீர் மல்கிப் புரளும் உன் காதற்பெருக்கு
சாம்பல் பூத்துப் போன இம்மண்ணெங்கும்
ஓடிப்பரவி வெக்கை தணிக்கட்டும்?

எங்கெங்கும் வரண்டுபோன இந்தமண்ணின்
பாளம் பாளமான பிளவுகளில்
காதலின் ஜீவ ஊற்றுக் கண்கள் திறபடட்டும்
பற்றிப் படரும் அன்பின் கொடியோடலில்
காதல் அரும்புகள் கண்ணிகட்டட்டும்
அட காதல் செய் மானுடனே.
காதல் இம்மண்ணின் உயிர்நிலை கண்டு கொள்.

● சு. வில்வரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் வாழ,
விழா!
முத்தமிழ் விழா

சகல மட்பாண்ட பொருட்களுக்கும்
மொத்த, சில்லறை விற்பனையாளர்,

'கோல்டன் செரமிக்'

2, டி அர்ச்சனா வீதி,
(ஸ்ரான்லி வீதி)
யாழ்ப்பாணம்.

[F-17]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

□ விழா சிறப்படைய வாழ்த்துவோர்

## ராஜா றேட் செண்டர்

*3, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

□ உங்களுக்குத் தேவையான சகல,
வீட்டுப் பாவனைப் பொருட்களையும்
விநியோகிப்போர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் தமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ்

இணைந்த

"முத்தமிழ்"விழா எங்கள் மண்ணுக்கு பெருமை சேர்க்கும்

தரமான,
சுவையான,
பிஸ்கட் வகைகள்,
இனிப்பு வகைகள்,
ரொபி வகைகளுக்கு
தகுதியான இடம்

சில்வர் ரேடர்ஸ்

3B, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[F-19]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்ப விழாவாம்
முத்தமிழ் விழா
வாழ்க.

# முருகன் ஸ்ரோர்

27, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

O இலங்கை டுபாக்கோ நிறுவனத்தின் விநியோகத்தர்கள்

[F-20]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்.

யாழ். நகரில் தரமான பலசரக்கு வியாபார நிலையம்

# ஆதவன் ரேடிங் கோ

37, அர்ச்சுனா வீதி (ஸ்ரான்லி வீதி),
யாழ்ப்பாணம்.

[F-21]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேமமுற வேண்டுமெனில்,
தெருவெல்லாம்
தமிழ் முழக்கம்
செழிக்கச் செய்வீர்!

அழகிற்கு
அழகு
செய்யும்
நகைகளுக்கு

சோபனா ஜுவல்லறி
116 (V) கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

[F-22]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கும் தமிழ்
எதிலும் தமிழ்
எப்போதும் தமிழ்

- சிறந்த வேலைப்பாடுகள்
- அற்புதமான வடிவமைப்புக்கள்

ஹப்பி ஜுவல்லறி
118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

[F-23]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானம் அறிந்தது,
அனைத்தும்
அறிந்து,
வளர்மொழி
வாழியவே!


**ராஜு ஸ்ரோர்ஸ்**

*ராஜு கட்டிடம்*

67, 69, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

- *பான்சி பொருள்கள்*
- *அன்பளிப்புப் பொருள்கள்*
- *மின்சார சாதனங்கள்*
- *எவர்சில்வர் பாத்திரங்கள்*
- *கண்ணாடிப் பாத்திரங்கள்*

*போன்ற சகலவற்றுக்கும்*

[F-24]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கையில் கிடைத்த கடிதம்

○ இளையவன்

"இண்டைக்கு எப்படியாவது ஒரு கடிதம் வீட்டுக்கு எழுதி சீலன் அண்ணையிடம் குடுத்திட வேணும்" என எண்ணிக்கொண்டான் ஆனந்தன். காலை நேரப் பயிற்சி முடிந்து ஒவ்வொருவராக அழைத்து அன்றைய வேலை பற்றிக் கூறிக் கொண்டிருந்த சீலன், ஆனந்தனின் முறை வந்தபோது அவனை ஒருதடவை ஏற இறங்கப் பார்த்தான். 'தம்பி, உம்மடை வீட்டுக்காரர் உம்மை ஒருக்கால் கட்டாயமாய்ச் சந்திக்க வேணும் எண்டு படாதபாடு படுகினம். இயக்கம் கட்டாயப்படுத்தித்தான் உம்மை இங்கை மறிச்சு வைக்கிறமாதிரி அவை நினைக்கினம். ஆனபடியா நீர் இண்டைக்கு பரசுராமின்ரை 'காம்பு'க்குப் போய் வீட்டுக்காரரைச் சந்திச்சுப்போட்டு வாரும்! என ஒரே மூச்சில் சொல்லி முடித்தான். ஆனந்தனின் கண்களில் நீர் சொரிந்தது. சீலனுக்குச் சங்கடமாயிற்று. 'ஆனந்தன் ஓரமாய் ஒதுங்கி நில்லும். மற்றது ஆர் வரிசையில? கஜனோ, உமக்கு 12மணி வரை முன்பக்க சென்றி. 12 - 4 மணி வரை சமையல் உதவி, 4 - 6 மணி வரை பின்பக்க சென்றி 6 - 8 மணி வரை கம்யூனிக்கேசன் படிப்பு,' இவ்வாறாக ஒவ்வொருவராகக் கூப்பிட்டு நாற்பது பேருக்கும் வேலைகளைப் பகிர்ந்துவிட்டு ஆனந்தனின் பக்கம் திரும்பிய போதும் அவனது அழுகை ஓயவில்லை. கண்டிப்பான தோரணையில் 'ஆனந்தன் இங்க வாரும்' என அழைத்தான் சீலன். மெதுவாக அவனை நோக்கி வந்த ஆனந்தனிடம் 'ஏன் தம்பி அழுகிறீர்? என்றான் சீலன். 'எனக்கு வீட்டுக்காரரை சந்திக்க விருப்பமில்லை' மெதுவாக முணுமுணுத்தான் ஆனந்தன். தோள் மேல் கையை வைத்து பரிவுடன் என்னை உம்மடை சொந்த அண்ணனா நினைச்சுச் சொல்லும். 'ஏன் சந்திக்க மாட்டன் எண்ணுகிறீர்' 'உண்மையா அதை எப்பிடிச் சொல்லுறது எண்டு எனக்கு விளங்கேல்ல அண்ணை. ஆனா நான் சந்திக்க மாட்டன். என்னை அங்க போகச் சொல்லாதையுங்கோ' என முனகிய ஆனந்தனைப் பார்த்து 'ஏன் வீட்டுக்காரரைச் சந்திக்கமாட்டன் எண்டதை கடிதத்தில் எழுதித்தாரும். உமக்கு இண்டைக்கு அதுதான் வேலை' எனக் கண்டிப்பும் அன்பும் கலந்ததொரு தோரணையில் சொல்லிவிட்டு தனது சாளி மோட்டார் சைக்கிளை

□ சிறுகதை

நோக்கித் திரும்பிவிட்டான் சீலன். இனி அவன் முகாமுக்குத் திரும்பிவரும் நேரம் எவருக்கும் தெரியாது. ஆனால் அவன் சொல்லிவிட்டுப்போன வேலைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டிருக்கும். அன்பினாலும், கண்டிப்பாலும், ஒருவித அச்சம் கலந்த செயல்களினாலும் அங்கிருந்த அனைவர் மீதும் ஆளுமை செலுத்தி வந்தான் சீலன். அதனால் இண்டைக்கு கடிதத்தை எழுதவேண்டிய கட்டாயம் ஆனந்தனுக்கு. சீலன் அண்ணைக்கு என்று தொடங்கி அப்பாவைச் சந்திக்க முடியாத காரணத்தை எழுதுவோமா? அல்லது அம்மாவுக்கு, தங்கச்சிக்கு என்று யாருக்கேனும் முகவரியிட்டு எழுதி சீலன் அண்ணை மூலம் சேர்ப்பிப்போமா? எனப் பலவாறாகவும் யோசனை செலுத்திவிட்டு ஈற்றில் தனது இருக்கைக்கு வந்தான் ஆனந்தன்.

அன்பான அப்பாவிற்கு,

வணக்கம். நான் நலம். நீங்கள் என்னைப் பற்றி பலரிடமும் விசாரித்து என்னைச் சந்தித்து விடப் பலமுயற்சிகள் செய்வதாக நான் அறிகிறேன். அம்மாவின் உடல் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக அறிந்து மிகக் கவலை. மற்றும் தங்கச்சி, தம்பி, அண்ணன், அப்பம்மா ஆகியோரது சுக நலனுக்காக எனது அன்பான விசாரிப்புகள் உரியதாகட்டும். நீங்களும், தாயாரும், சகோதரர்களும் ஏனையோரும் என் மீது கொண்டிருக்கும் அன்புக்கும், பாசத்திற்கும் என்றும் நான் கடமைப்பட்டவன். ஆதலினால் என்னைத் தேடுகின்ற—அல்லது சந்திக்க எடுக்கின்ற அனைத்து முயற்சிகளையும் இக் கடிதம் கண்ட பின்னராவது கைவிடுவீர்கள் என எதிர்பார்க்கின்றேன்.

அப்பா! நீங்கள் நேற்று முன்தினம் எனது நண்பன் சிவாவைச் சந்தித்தபோது எனக்குள் இப்படி ஒரு ஆர்வம் முளை விட்டிருப்பதை அவதானிக்கவில்லை என்றும், தெரிந்திருந்தால் நீங்களே இயக்கத்தில் சேர்த்து எனக்கு நல்ல பதவி வாங்கிக் கொடுத்திருப்பேன் என்றும் கூறினீர்களாம். இது எனக்கு மகிழ்ச்சியை அல்ல அதிர்ச்சியையே தந்தது. ஏனெனில் சிறு பராயம் தொடக்கம் நீங்களே அரசியல் கூட்டங்களுக்கெல்லாம் அழைத்துப்போன ஞாபகம் எனக்குள் இன்னும் பசுமையாய், அதுமட்டுமல்ல, 'அடுத்த மேதினம் தமிழீழத்தில் தான் கொண்டாடப்படும்' என்று அமிர்தலிங்கம் அறுதியிட்டுக் கூறிய போது கை தட்டுவதற்காக என்னைப் பிடித்திருந்த கையை விலக்கியதும். நான் உங்களைத் தவறவிட்டு கூட்டத்தில் சிக்குண்டதும் அப்போது பத்து வயதுப் பராயத்தைக் கடந்த என் நினைவில் பதிந்திருக்கிறது. ஆனால் 'நானே சேர்த்து நல்ல பதவியும் வாங்கித் தந்திருப்பன்' என்று நீங்கள் கூறியதாக அறிந்தபோதுதான் எனக்கு அதிர்ச்சியாகப் போய்விட்டது. அப்பா! பதவிக்காகவோ-பகட்டுக்காகவோ-சொந்த நலன்களுக்காகவோ உங்கள் மகன் இயக்கத்தில் சேர்ந்திருப்பதாக கருதவேண்டாம். பத்து வருசத்திற்கு முதல் கணேசமாமாவைத் தேடி ஆமியும், பொலீசும் உங்கள் ஊரைச் சுற்றி வந்தது உங்களுக்கு ஞாபகமிருக்கும் தானே. அன்று முதல் மிக அண்மைக்காலம் வரை ஆமியைக் கண்டு அஞ்சிப் பயந்து நடுங்கி ஓடிய போதெல்லாம் எப்போதாவது இவர்களை நாமும் இப்படி ஓட வைக்க வேண்டுமென்ற ஆசை என்னுள் சின்னதாக முளை விட்டது என்னுடன் இணைந்து காலமும் வளர்ந்தது. ஏ. கேயும் எஸ். எம். ஜி.யும் இன்ன பிற ஆயுதங்களும் எங்கள் வீட்டு வாசல்வரை வந்துவிட்டது. நீங்களும் உணர்ந்தது தானே. இல்லாவிட்டால் கஜன் அண்ணாவையும், சோதி அண்ணாவையும் அவர்களோடு வரும் பிறரையும் வீட்டில் தங்க வைத்து ஆதரித்து இருக்க மாட்டீர்களே.

கஜன் அண்ணாவிடமும், சோதிஅண்ணாவிடமும் என்னையும் இயக்கத்தில் சேர்த்து விடும்படி எத்தனையோ தடவை கேட்டேன். "நான் பெரியவனாக வளரவில்லை. எனது உயரம் போதாது" என சொன்ன போதெல்லாம் ஒரு நாள் வளருவேன்தானே என எனக்குள் எண்ணிக் கொள்வேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரோடே இருக்கிற சிறிலங்கா அரசாங்க உத்தியோகத்தரான நீங்கள் உத்தியோகத்தையும் பாதுகாக்க வேணும், பெடியளையும் சமாளிக்க வேணும் என்று எண்ணிக் கொண்டு அந்தரத்தில் ஊஞ்சலாடுவது போல் நடந்துவருவதை நானும் நன்கறிவேன். இந்த நிலையில் நான் இயக்கத்தில் இணைந்துகொண்ட செய்தி கொழும்பில் இருக்கிற உங்கள் மேலதிகாரிகளுக்கு தெரிய வந்துவிடுமோ என நீங்கள் அஞ்சுவதும் எனக்குத் தெரியும். அப்பா! உங்கட மேலதிகாரியின் கந்தோரில் வேலை பார்க்கிற மிஸ்டர் கதிர்காமத்தம்பி வீட்ட வந்த போது ''நான் இவங்கள் இயக்கப் பெடியளோர்டை கொஞ்சம் ஐக்கியமாய்த் தான் நடக்கிறனான். இல்லாட்டி என்ர பெடியளும் எல்லே அவங்களோடை போய்ச் சேர்ந்திடும்'' என்று சொன்னதாய் கேள்விப்பட்டன். அதாவது நான் இயக்கத்தில் சேர்ந்துவிடக் கூடாது என்பதற்காகவே இயக்க ஆதரவாளர் மாதிரி நீங்கள் நடப்பதாக அறிந்தபோது நான் துவண்டு போய் விட்டேன். அதன்பிறகு உங்கள் மீதிருந்த மதிப்பு எனக்குள் சிதையத் தொடங்கியதும் உண்மைதான்.

எனது நண்பன் வேந்தன் C-90 ஓட்டிக் கொண்டு வரக் கண்டபோது அவனை வழிமறித்துக் கதைத்தீர்களாம். நானும் ஒரு C-90க்கு ஆசைப்பட்டதை ஞாபகப்படுத்தி வாங்கிக் கொடுக்காத கோபத்தில் தான் இயக்கத்திற்குப் போயிருக்கக்கூடும் என அபிப்பிராயப்பட்டீர்களாம்.

அப்பா! சண்டையெல்லாம் ஓய்ஞ்சு முடிந்து போனமாதிரி இருந்தொரு காலத்தில் நானும் படிக்கவும் - சோதனை எடுக்கவும் ஆசைப்பட்டது உண்மைதான். பல்கலைக்கழகம் போகவும்-பட்டதாரியாகவும் கனவு கண்டது மெய்தான். அதனால் ரியூசன் வகுப்புகளுக்குப் போய்வர உதவுமே என்பதற்காக C-90 அல்லது சாளி (Chaly) தானும் வாங்க ஆசை கொண்டதும் உண்டு. உங்களின் இயலாமையால் எனது அற்ப ஆசை பூர்த்தியாகவில்லை என்பதற்காக உங்கள் மீது எனக்குத் துளிகூடக் கோபமில்லை. அதனால் எனக்கு விரக்தியுமில்லை. மோட்டார் சைக்கிள்மீது கொண்ட மோகத்திற்காக இயக்கத்தில் நான் சேரவுமில்லை.

இந்த நாட்டில் வாழும் மக்களையும், மண்ணையும் நேசித்து எமது எதிர்கால சந்ததியாவது சுதந்திரமாகவும், சுபீட்சமாகவும் வாழ வேண்டுமென்பதற்காக - அதை அடைவதற்கு இன்று போராடுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதனால் போராட்டத்தைக் கைகட்டி நின்று வேடிக்கை பார்க்கக்கூடாது என்பதற்காக நான் இயக்கத்தில் இணைந்து கொண்டிருக்கிறேன். எனவேதான் என்னைச் சந்திப்பதாலோ, என்னுடன் பேசுவதாலோ எனது மனநிலையில் எந்த மாற்றமும் வந்துவிடப் போவதில்லை என்று சந்தேகத்திற்கு இடமின்றி வலியுறுத்திட விரும்புகின்றேன்.

மேலும் உள்ளத்தால் ஒன்றிணைக்கப்பட்ட ஒரு மாபெரும் குடும்பத்தில் இப்போதுதான் நான் பிறந்துள்ளேன். நாளைதான் எனக்குப் பெயர் சூட்டப்படலாம். நாங்கள் தங்கியிருக்கும் இடத்தில் எங்களுக்குப் பொறுப்பாக இருக்கும் அண்ணா மிகவும் நல்லவர். அம்மாவைப்போல உபசரித்து உணவூட்டுவதிலும், உங்களைச் சில சமயம் நினைவூட்டும் கண்டிப்பும், ஓடி ஓடி வேலை செய்யும் சுறுசுறுப்பும் அவரிடத்தில் ஒரு பிரியத்தை வளர்க்கின்றது. எனினும் இயல்பான கலகலப்பாக பேச முடியாதபடி ஒரு விதமான மரியாதை கலந்த பயம் எனக்குள். பொம்மரும், ஹெலியும், துப்பாக்கிகளின் சடசடப்பும் இப்போது எனக்கு அச்சமூட்டுவதாக இல்லை. இப்போதாயினும் என்னைப் புரிந்திருப்பீர்களென நம்புகிறேன். எனவே தேடிக்கண்டு பிடிக்கும் முயற்சியைக் கைவிடுவீர்களென்று நம்பிக்கை கொள்கிறேன்.

அம்மாவையும் உடம்பைக் கவனமாகப் பார்த்துக்கொள்ளச் சொல்லுங்கள். அம்மாவின் விருப்பப்படியே மாமா என்னைக் கனடாவுக்கு அழைத்துக் கொண்டிருந்தால் அந்தப் பிரிவை அவர் எப்படித் தாங்கிக் கொள்வாரோ, அதேபோல இந்தப் பிரிவுத் துயரையும் ஜீரணித்துக் கொள்ளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி அம்மாவிடம் பணிவாக மன்றாட்டமாக வேண்டுகிறேன். நாமனைவரும் ஒன்றாகக் கூடி குதூகலித்திருக்கும் காலம் வரும் வரையில் நாம் வாழ்வது சாத்தியமானால் அப்போது நேரில் சந்திக்கலாம். அத் தருணத்தில் நேரில் பேசவும், சுவைக்கவும், ஒவ்வொருவரிடமும் ஏராளமான அனுபவங்கள் ஓங்கிப் போயிருக்கும் என நம்புகின்றேன்.

இப்படிக்கு
உங்களின் மகன் ஆனந்தன்

என்று எழுதிக் கையெழுத்திட்டு நிமிரும் போது நேற்றைய இரவுத் தாக்குதலில் காயம்பட்ட நம்மவர்களைச் சுமந்து கொண்டு ஒரு வாகனம் முகாம் வாசலைக் கடந்து உள்ளே வந்தது. சிந்தப்பட்ட இந்த இரத்தங்களுக்குப் பழிவாங்கியே ஆக வேண்டும் என்ற ஆவேச உணர்வு மேலிட கடிதத்தை உறையில் போட்டு மூடினான் ஆனந்தன்.

●

# மகன் போர்க் களத்தில் வீரமரணம், தாய் ஈன்ற பொழுதிலும் பெருமகிழ்ச்சி.

''நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்தோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறினன் என்றுபலர் கூற
மண்டமர்க்கு உடைந்தனன் ஆயின் உண்ட என்
முலை அறுத் திடுவென் யானெனச்சினை இக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களம் துழவுவோள் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுஉவந் தனளே.''

- காக்கை பாடினியார் நச்செள்ளையார்
(புறநானூறு 278)

●

நரம்புகள் முறுக்கேறி விம்மிய நிலையில் திண் தோள்களும் தாமரை இலை போன்ற அடிவயிறுமுடைய மூதாட்டி ஒருத்தி, தன்மகன் முதுகிலே அம்புபட்டு இறந்தான் என்று அறியாதவர்கள் சொல்லக்கேட்டு உள்ளம் குமுறிக் கொதித்தாள், ''அவன் அவ்வாறு இறந்திருப்பானேயாகில் அவனுக்குப் பாலூட்டி வளர்த்த தனங்களை அறுத்தெறிவேன்'' என்று வீரசபதம் செய்தாள்.

செருக்களத்தில் ஓடோடிச் சென்று கையிலே வாளுங்கொண்டு வீராவேசத்துடன் பிணக் குவியலிடையே தனது மைந்தனைத் தேடலுற்றாள்.

அப்போது, செங்குருதி மார்பிலே பாய வீர மைந்தனாய் மடிந்திருந்த மகனைக் கண்டாள். அப்போது அவனைப் பிரசவித்த போது அடைந்த மகிழ்ச்சியை விட அளவிலா மகிழ்வெய்தி இறும்பூதெய்தினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்

சகல சைக்கிள் உதிரிப் பாகங்களுக்கும்
நம்பிக்கையான
ஒரே ஒரு நிலையம்

வெங்கடேஸ்வரா ஸ்டோர்ஸ்
97, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

[F-25]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க நிரந்தரம்
வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!

"முத்தமிழ்" விழாவினை வாழ்த்துவோர்

## சுப்பையா அன் கோ

4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

[F-26]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழியவே!"

ஈழ மண்ணில்
நடக்கும்
"முத்தமிழ்" விழா
சிறக்கட்டும்

# விக்னேஸ் ரெக்ஸ்

45, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(F/27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

□ "ஏழ் கடல் வைப்பினுந்
தன் மனம் வீசி
இசை கொண்டு
வாழியவே"

(F/28)

□ சிறந்த புடைவை நிலையம்
ரவி அன் ராஜ் சில்க்ஸ்
77, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

O "எங்கள் தமிழ்மொழி
எங்கள் தமிழ்மொழி
என்றென்றும்
வாழியவே"


O மொத்த சில்லறை
புடைவை வியாபாரிகள்

**யோகாஸ்**
**ரெக்ஸ்ரைலிஸ்**

16B, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

**கிளை: குமார் ரெக்ஸ்ரைல்ஸ்**
நல்லூர்.

[F-29]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சூழ்கலி நீங்கத்
தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே"

□அழகுக்கு அழகுசெய்யும் புடைவைகளுக்கு
**மலர் ரெக்ஸ்ரைல்ஸ்**
18, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

(F/30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தொல்லை வினைதரு
தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே"

O உங்கள் அழகை
மேலும் மெருகூட்ட
சிறந்த ஆடைகளுக்கு

**சிவகணேசன்**
**ஸ்ரோர்ஸ்**

41, பெரியகடை,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே "

" மக்கள்
அபிமானம்
பெற்ற
புடைவை
நிலையம் "

**காவேரி சில்க்ஸ்**

**181, நவீன சந்தை,**

*(உட்புறம்)*

**யாழ்ப்பாணம்.**

(F/32)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ வரலாறு கண்ட வீரப் பரம்பரை, "சங்கிலி" முதல் "பிரபாகரன்" வரை.

உண்மையை நாடிச் செல்லும் யாத்திரை மிகவும் புனிதமானது. இந்த யாத்திரையிலே ஈடுபடுபவன் உண்மை என்ற தெய்வத்திற்கு ஒவ்வாத பொய்ம்மைகளையே வழிபட்டு அவற்றிற்கு அடிமைப்படாது தன்னைக் காத்துக் கொள்ளல் மிகவும் இன்றியமையாதது. 'பொய்யாமை பொய்யாமை ஆற்றுதல்' என்ற திருவள்ளுவர் வாக்கு, உண்மைக்கு உண்மையாக நடப்பதை வற்புறுத்துகிறது என்றும் கொள்ளலாம், சிறப்பாக ஒரு நாட்டினதோ, ஓர் இனத்தினதோ வரலாற்றினை எழுத முற்படுவோன் பொய்ம்மைக்கு மறந்தும் இடமளிக்க முற்படுவானானால், அவன் எழுதும் வரலாறு நன்மைக்குப் பதில் நாசத்தையே விளைவிக்கும்; கடந்த காலங்களில் இலங்கையின் வரலாற்றினை எழுதியவர்களிற் பலரும் இத்தகைய பொய்களையே பெருக்கி, உண்மைகளைச் சுருக்கிய பணியின் பயனையே இன்று நாடு அநுபவிக்கின்றது.

புதைபொருள் ஆராய்ச்சிக்குப் பதிலாகப் பல சந்தர்ப்பங்களிலே பொருள் புதை ஆராய்ச்சிகளும் நிகழ்ந்ததுண்டு பேரினவாதச் சார்பினால் தமிழ்த் தேசிய இனத்தின் பாரம்பரியமும், தொன்மையும், சிறப்புக்களும் குழிதோண்டிப் புதைக்கப்பட்டன. தமிழர் சிங்களவருக்குப் பல நூற்றாண்டுகள் பின்னரே இங்கு வந்து குடியேறினர் என்று பொய்ம்மைக்கு உண்மை மெருகேற்றும் முயற்சிகள் தலையெடுத்தன. ஆனால் அண்மைக்கால வரலாற்றாய்வுகள், புதையுண்டிருந்த உண்மைகள் பலவற்றை வெளிக்கொண்டு வந்துள்ளமை மகிழ்ச்சி தருவதாகும்.

க. சொக்கலிங்கம்
"சொக்கன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கையின் ஆதிக்குடிகள்

''...ஆனால் தொல்லியல் நோக்கில் ஈழவரலாற்றையும் மகாவம்சம் கூறும் விஜயனின் கதையையும் ஆராய்ந்த சேனரத்தின (Senaratne, 1969) வடநாட்டிலிருந்து சிங்கள இனம் குடிபெயர்ந்ததற்கு எவ்வித சான்றும் இல்லை என்று எடுத்துக் காட்டினார். இவரைத் தொடர்ந்து அண்மையில் குணத்திலகா (Gunatillake, 1980) இந்நாட்டின் வரலாற்றுக்கால நாகரிக வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் வெறும் கற்பனையிலுள்ள விஜயனும் அவன் கூட்டத்தினருமல்ல என்றும், தென்னிந்தியாவைப் போன்று பெருங்கற்காலப் பண்பாடே (Megalithic Culture) என்றும் எடுத்துக் காட்டியுள்ளார். சுருங்கக் கூறின் ஈழ நாகரிகத்தின் தோற்றத்திற்கு வித்திட்டது பெருங்கற்காலப் பண்பாடே எனலாம்.

''நம் நாட்டுப் பெருங்கற்காலப் பண்பாட்டைத் தென்னிந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டின் அம்சமாகவே கொள்ளக் கிடக்கின்றது. தென்னிந்தியாவில் இதன் தோற்றத்தைக் கி. மு. 1000 ஆண்டளவுக்கு எடுத்துச் சென்றாலும் ஈழத்தில் இது கி. மு. 7ஆம் நூற்றாண்டளவில் பரவியிருக்கலாம் என றோமிலாதாபர் (Thaper Romila, 1975) கருத்துத் தெரிவித்தாலும் கூட, இதற்குச் சற்று முன்னுள்ள ஒருசில நூற்றாண்டுகளிலாவது இங்கு பரவியிருக்கலாம் என்பதற்கு வரலாற்று, தொல்லியல் சான்றுகள் துணைபுரிகின்றன.

''ஈழத்திலும் இப்பண்பாடு பரந்திருந்தது என்பதை வெளிக்காட்டும் விதமாக அநுராதபுரம், மாதோட்டம், திஸ்ஸமஹாராம, கந்தரோடை, ஆனைக்கோட்டை ஆகிய முக்கிய வரலாற்றுக்கால இடங்களின் அடித்தளங்களில் இப்பண்பாட்டுச் சின்னங்கள் காணப்படுவதோடு இதனைச் சேர்ந்த ०தாழிக்காடுகளும் கல்லறைகளும் புத்தளம் அநுராதபுரம், வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, திஸ்ஸமஹாராம, மொனராகலை, மாத்தளை, கேகாலை ஆகிய மாவட்டங்களிலும் காணப்படுகின்றன. புத்தளம் மாவட்டத்திலுள்ள பொன்பரிப்பு என அழைக்கப்படும் தாழிக்காட்டில் அகழ்ந்தெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகளை ஆராய்ந்த அறிஞர் கென்னடி (Kennedy, 1975) இம்மக்கள் தென்னிந்தியாவில் தற்கால திராவிட மொழிகள் பேசும் கூட்டத்தினரின் மூதாதையரே எனக் கருதினார். இவருக்கு முன்பு மாதோட்டத்தில் வெளிக்கொணரப்பட்ட எலும்புக்கூட்டை ஆராய்ந்தோர் (Chanmugam and Jayawardane, 1954) இதுவும்தென்னிந்திய மனித வர்க்கத்தை ஒத்ததுஎன்றனர்(1)

தொடக்கத்தில் ஈழம் எனவே பெயர் பெற்று அப்பெயர் காலப்போக்கிலே திரிந்து இலங்கையாகியது என வரலாற்றாசிரியர் சிலர் கருதுகின்ற இந்நாட்டின் ஆதிக்குடிகள் திராவிட இனத்தினரான தமிழரே என்பது, மேற்குறித்த கூற்றினால் நன்கு புலப்படுகின்றது. இன்று வடக்கிலும் கிழக்கிலும் தாம் இழந்த மண்ணினை மீட்டெடுக்கப் போராடுவோரின் முன்னையோர் கிறிஸ்துவுக்கு எட்டு, ஒன்பது நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலேயே ஈழமாகிய இலங்கை எங்கணும் வாழ்ந்தனர் என்பதை நினைவு கூர்வது மிகவும் பொருத்தமானதே. அதனோடு மகாவம்சம் கூறும் விஜயனும் அவன் தோழர்களும் இங்கு குடியேறியது கி. மு. 6ஆம் நூற்றாண்டு என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (ஆனால் விஜயன் வரலாறு ஒரு கற்பனைக் கதை!)

### ஈழத்தமிழ் வீரர் பரம்பரை வாழ்ந்த பிரதேசங்கள்

'அச்சம் என்பது மடைமையடா
அஞ்சாமை திராவிடர் உடைமையடா'

என்னும் குறிக்கோளை முன்வைத்துக் காலந்தோறும் ஈழத்தின் தொல்பெருங்குடிகளான தமிழ் மக்கள், மண்ணாசையோ

० தாழிக்காடு— இறந்தோரை இட்டு வைக்கும் மண்பாண்டங்களைப் புதைக்கும் இடுகாடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற ஆசைகளோ மிக்குத் தம்மை எதிர்த்த பகைவர்களோடு வீரச்சமர் புரிந்து தாங்கள் 'மாவீரர்' என்பதை நிறுவியிருப்பர் என்பது உண்மையானாலும் இடைக்கால வரலாறுகள் பேணப்படாமையாலோ, தமிழர் வாழ்வில் மங்குதசை ஏற்பட்டமையாலோ அவை எமக்குச் சான்றுகளோடு கிடைக்கவில்லை.

''யாழ்ப்பாண அரசு நிலவிய காலத்திலும் பின்னரும் எழுதப்பட்ட வரலாறு சார்ந்த இலக்கியம், அவற்றிற்கு முற்பட்ட காலம் பற்றிய தெளிவில்லாத சில செய்திகளையே நினைவுகூர்கின்றது. யாழ்ப்பாணத்தை ஆண்ட கதிரைமலை அரசபரம்பரை பற்றியும், சோழ இளவரசர் வருகை பற்றியும், குருடனான இசைக்கலைஞன் (யாழ்பாடி) கதிரைமலை அரசனிடமிருந்து மணற்றிடலைப் பரிசு பெற்றதுபற்றியும் கூறுவன, இவ்வாறான தெளிவற்ற கருத்துக்களுட் சிலவாகும். யாழ்ப்பாணத்தின் பழைமையான கடந்தகாலம் பற்றி ஒருவர் பெறக்கூடியன இவை மட்டுமே'' (2)

யாழ்ப்பாண வரலாறு பற்றிய இலக்கியச் செய்திகள் இவ்வளவு தாம் என்றால் இலங்கையின் வரலாற்றுத் தொடக்கத்திலிருந்து நீண்டதொரு காலப் பகுதியைத் தருவது, என்று வரலாற்றாளர் பெருமையோடு கூறிக்கொள்ளும் மகாவம்சமோ யாழ். குடாநாடு பற்றிக் கூறுவன மிக மிகச் சொற்பம்!

''அநுராதபுரத்தினை மையமாகக் கொண்டனவும், இலங்கை வரலாற்றினைக் கூறும் அதிகார பூர்வமானவையும் எனக் கொள்ளப்படும் பாளிமொழிப் பழம் வரலாற்று நூல்களோ, ஆங்காங்கு நாகதீபப் பிரதேசம் பற்றியும் குறித்த சில பௌத்தத் தூபங்களின் ஆக்கம் பற்றியுமே குறிப்பிடுகின்றன. (3)

எனவே தொல்லியற் பொருள்களையும், சின்னங்களையும் கொண்டே நிறுவ வேண்டிய உண்மைகள் பல இன்றும் மறைப்பிலேயே உள்ளன என்பது தெரிகிறது. இருப்பினும் ஈழத்தின் வடக்கிலே யாழ்ப்பாணக் குடாநாடு, அதனைச் சூழ்ந்துள்ள தீவுகள் என்பவற்றை உள்ளடக்கி கி. பி. 13ஆம் நூற்றாண்டு தொடக்கம் 16ஆம் நூற்றாண்டு வரை தமிழர் ஆட்சி புரிந்தனர் என்ற அளவிலே தற்காலிகமான மனநிறைவை நாம் கொள்ளலாம். அக்காலப் பிரிவின் மாவீரனாகச் சங்கிலி செகராசசேகரன் (1519 - 1561) விளங்குகின்றான்.

அடுத்து வன்னியர் என்ற வீரத்தமிழ் மறவர் வாழ்ந்த பிரதேசத்தினை நோக்கலாம். தமிழகத்தின் வட பிரிவில் இன்றும் பரந்து காணப்படுவதும், சோழரது படைப் பிரிவில் சிறப்பிடம்பெற்றிருந்ததும் முதலாம் இராசராசன் (985 - 1016) ஈழநாட்டைக் கைப்பற்றியதை அடுத்துச் சோழப் படைகளோடு ஈழத்திற்கு வந்ததும் (4) எனக் கொள்ளப்படும் வன்னியர்குழு மாகன் என்ற சிங்கள அரசன் காலத்தில் (1215 1255) அவன் பிரதேசத்திலும் வன்னிகளை அமைத்து அங்கும் தலைமை பெற்றிருந்ததாகத் தெரிகிறது. (5) யாழ்ப்பாணத்தில் தமிழரசர் ஆட்சி செய்த பதின்மூன்றாம் நூற்றாண்டு இறுதி தொடக்கம் யாழ்ப்பாணத்திலும் பல வன்னி நாடுகள் இருந்தன. (6) திருக்கோணமலை, கட்டுக்குளம் ஆகிய கிழக்குப் பகுதிகளிலும், புத்தளத்திலும் வன்னிகள் அமைந்திருந்தன. (7) யாழ்ப்பாணக் குடாநாட்டோடு வன்னிநாடு இணைந்திருந்த காலத்தில் அது மன்னாரிலிருந்து திருக்கோணமலை வரை பரந்திருந்ததாகவும் கூறப்படுகிறது. (8) [மேற்கே கற்பிட்டியிலிருந்து செட்டிகுளம், மாதோட்டம் முதலான இடங்களை அடக்கி, கிழக்கிலே திருக்கோணமலை வரை வன்னி பரந்து காணப்படுகிறது. (9)

பெரும்பாலும் காடடர்ந்த பிரதேசத்தையே உள்ளடக்கிய வன்னி நாட்டுத் தலைவர்கள் சங்கிலி செகராசசேகரனின் வீழ்ச்சிக்குப் பின்னர் அந்நியரான ஒல்லாந்தரின் ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போர்க்கொடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கி நாடும் மானமும் சுதந்திரமும் காத்திடும் பணியிலே ஈடுபட்டதாகத் தெரிகின்றது. இம்மாவீரர்களிலே கைலாயவன்னியன் (17ஆம் நூற்றாண்டு), பண்டாரவன்னியன் (18ஆம் நூற்றாண்டு) ஆகியோர் ஈடு இணை அற்றவர்கள்.

மட்டக்களப்பு ஈழத்தமிழகத்தின் கீழ்பால் அமைந்த தமிழர் வாழ் பிரதேசம் இதன் வரலாற்றுப் பழைமையும் பல வகையான கற்பனைகளால் திரிபடைந்து காணப்படுவதால் இங்கு தோன்றிய மாவீரர் பற்றிய செய்திகள் கிடைக்கவில்லை. யாழ்ப்பாண வரலாற்றின் மங்கலான செய்திகள் சிலவற்றையாவது 'யாழ்ப்பாண வைபவ மாலை' மூலம் அறிவது போல, மட்டக்களப்பு வரலாற்றினைச் சிறிதளவு அறிய 'மட்டக்களப்பு மான்மியம்' என்ற நூல் உதவலாம். (10) எனினும் அது போதியதன்று.

### சுதந்திர உதயமும் ஈழத்தமிழர் நிலையும்

1948 பெப்ரவரி 4ஆந் திகதி இலங்கை ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்றது. 'மக்களால் மக்களுக்கு மக்களின் ஆட்சி' என்ற குறிக்கோள் கொண்ட சனநாயக ஆட்சி மலர்ந்தது என இலங்கையர் மகிழ்ந்தபொழுது அந்த மகிழ்ச்சியிலே ஈழத் தமிழரும் பங்கு கொண்டனர். ஆனால் 'சனநாயகம் என்பது பெரும்பான்மை மக்கள் தமிழ்த் தேசிய இனத்தவரை அடக்கி ஒடுக்கி ஆளுவதே' என்று அதற்குப் புதியதொரு வியாக்கியானம் தந்து பேரினவாதிகள் தலைவிரித்தாடித் தமிழர்களை நசிக்க

## ஈழத்து உரைநடை

இலக்கண வரம்புடைமை நம் தமிழ்மொழிக்கு ஒரு தனிச்சிறப்பாகும். தமிழ்மொழி இன்பம் பயப்பதற்கு இலக்கண வரம்புடைமையும் ஒரு காரணமாகும். முத்தமிழுள் இயற்றமிழை முன்வைத்தற்கும் காரணம் அதுவேயாம். இயற்றமிழ்-இலக்கணத் தமிழ் ஆதலால் அதன் இலக்கண வரம்பை யாம் என்றும் போற்றுதல் வேண்டும். போற்றாதொழியின் இஃது இன்ன மொழியென்று தெரியாதவாறு தமிழ்மொழி சிதைந்து தன் இனிமையும் சிறப்பும் கெடும்.

மகாவித்துவான் கணேசையர்.
-தமிழ்க்கதிர் இதழில்.

காட்சிக்கும் துணிவுக்கும் இடையே ஐயம் நிகழும். காட்சி ஐம்புலவாயிலாக எய்தும் உணர்வு, துணிவு, 'யாதொரு பொருள் யாதோரியல் பிற்றாய்த் தோன்றினும் அத்தோன்றியவாற்றைக் கண்டொழியாது அப்பொருளின் கண் நின்று மெய்யாகிய பொருளைக் காணும் மெய்யுணர்வு' ஆதலின், ஐயத்தினீங்கித் தெளிந்தாரான் எய்துதற்குரியது. அளவினால் எல்லைப்பட்ட பொருளினைக் கண்ணுற்றோன், ஒரு நோக்கோடு அமைவான். நோக்குந் தோறும் நோக்குந்தோறும் புதிய புதிய அழகினைத் தோற்றுவிக்கும் ஒரு பொருள் கண்ணெதிர்ப்படுமாயின் அதனைக் கண்டோன், 'நோக்கிய கண் இமையாமல் நோக்கி நோக்கி' அப்பொருளின் காட்சி நலனைத் துய்த்தற்கு முயல்வான். இம்முயற்சியே ஐயவுணர்விற்கு அடிப்படையாயிற்று. ஆதலினாலே, ஈண்டு நாம் ஆராயும் காட்சி ஐயம் என்னும் இரண்டினுள்ளும் காட்சியினும் ஐயம் சிறப்புடையதென்று அறிதல் வேண்டும்.

— விபுலானந்த அடிகளார்
ஐயமும் அழகும் பற்றி விபுலானந்த செல்வம் நூலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்பட்ட பொழுதுதான் தமிழ் ஈழத்தவர் தமக்கு நேரவிருக்கும் ஆபத்தை உணர முடிந்தது. தேசியம் என்ற பெயரால், பௌத்த சோஷலிச சனநாயக அரசுப் பிரகடனம் சிங்களமொழியை ஆட்சி மொழியாக்கல், பொருளாதாரப் புறக்கணிப்பு, மலையகத்தமிழரின் பிரசாஉரிமைப் பறிப்பு, கல்வியில் தரப்படுத்தல், விகிதாசார உத்தியோக நியமனம், தமிழ் மண்ணிலே சிங்களக் குடியேற்றம் என்று இனவெறி நச்சரவு தனது கொடிய நாக்கினை வெளிப்படுத்திச் சிறுபான்மையினரைச் சிறப்பாகத் தமிழரைப் பரிநாசம செய்ய முற்பட்டது.

## ஈழத்தமிழரின் அரசியல் ரீதியிலான எதிர்ப்புக்கள்

ஒரு நாட்டின் தலைவன் என்பவன், அந்த நாட்டின் எல்லா இனமக்களதும் நன்மைகளை மனத்திற் கொண்டு அவற்றிற்கான திட்டங்களை வகுத்து நிறைவேற்றவும் தியாகங்கள் புரியவும் தயங்கான். ஆனால் அரசியல்வாதியோ தனது நலங்களை மனத்திற்கொண்டு அவை நிறைவேறுவதற்கானவழிவகைகளைஆராய்ந்துநிறைவேற்றவே முனைவான். இவ்வாறு நிறைவேற்றுகையில் இனங்களிடையே முரண்பாடுகளையும் கலகங்களையும் உண்டாக்கவும் அவன் தயங்கமாட்டான். குயுக்தியானவையும் சூழ்ச்சி நிறைந்தவையுமான கருத்துக்களைத் தனது நாவன்மையாலும் எழுத்துவன்மையாலும் மக்களிடையே பரப்பித் தனது பதவியை என்றும் நிலையாகப் பாதுகாப்பதேஅவனது குறிக்கோளாய் விளங்கும். துரதிருஷ்டவசமாக ஈழத்திலே நாட்டுத் தலைவர்களுக்கு (Statesman) இடம் இல்லாது அவ்விடத்தை அரசியல்வாதிகளே (Politicians) நிரப்பிக் கொண்டனர். இதனால் தேசியம் என்ற பேரில் பேரினவாதப் பேயே உருக்கொடுத்து விடப்பட்டது. அதன் கோர தாண்டவத்தினைத் தமிழ் அரசியல்வாதிகள் உணர்ந்து கொண்டாலும் அதன் அவ்வப்போதைய தளுக்கு மினுக்குகளில் மயங்குவதும், தெளிவதும், தெளிந்த பின்னும் சரியான முறையில் நடவடிக்கை எடுக்காமையுமாகிய குறைபாடுகளால் ஈழத்தமிழினத்திற்கு எவ்வித விடிவும் காணமுடியவில்லை. மேடைப் பேச்சுக்கள், பாராளுமன்ற விவாதங்கள், பத்திரிகைப் பிரசாரங்கள், சாத்வீகப் போராட்டங்கள், ஸ்ரீ அழிப்புக்கள், மாநாடுகள், தீர்மானங்கள், ஒப்பந்தங்கள், அமைச்சரவையில் இடம்பெற்று ஒத்துப்போய்க் கருமத்தை முடிக்கும் முயற்சிகள் என்று இவர்கள் கையாண்ட தந்திரங்களெல்லாம் பேரினவாதப் பேயின் முன்பு செயலிழந்து போயின. சமஷ்டி ஆட்சி அல்லது பிரிந்து போதல் என்ற முடிவும் நிறைவேறாது தொடக்க நிலையிலேயே தேங்கி நின்றது. வேறுவகையில் சொல்வதானால் இவர்கள் சிங்களப் பேரினவாதிகளின் ஏமாற்று வித்தைக்குப் பலியாயினர் என்றே சொல்ல வேண்டும். இலங்கையிலே ஈழத்தமிழினம் எதிர்நோக்கவிருக்கும் அவலங்களைத்தீர்க்க தரிசனத்துடன் உணர்ந்து, அவற்றைப் போக்கத் திரிகரணசுத்தியோடு பாடுபட்ட தந்தைசெல்வா கூட நம்பிக்கை இழந்து 'தமிழரை இனிக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்' என்று கூற நேர்ந்தது.

ஆனால், தமிழ் இளைஞர்கள் தமது எதிர்காலத்தைக் கடவுளின் கைகளிலே விட்டுவிட்டுச் சும்மா இருக்கத் தயாராயில்லை. 'மயிலே மயிலே இறகு போடு' என்று வேண்டுவதால் மயில் இறகுகிடைத்து விடாது என்று அவர்கள் அறிந்திருக்கிறார்கள். எனவே ஆயுதம் ஏந்திப் போராடியே இழந்த உரிமைகளைப் பெறலாம் என்ற உண்மையை உணர்ந்து கொண்டு அந்த வழியிலே துணிந்து குதித்தனர்.

விடுதலைப் போராட்ட இயக்கங்கள் பல உருவெடுத்தன. இவற்றிற் பலவும் சாண் ஏறி முழம் சறுக்கிய வேளையிலே, போராட்டத்தினை முனைப்புடனும்சத்திய நேர்மையுடனும் நடத்தத் தமிழ் ஈழவிடுதலைப்புலிகள் இயக்கம் முனைந்தெழுந்தது.

''புலிகளின் தாகம் தமிழ் ஈழத் தாயகம்'' என்ற குறிக்கோள் வாசகத்தை முன்வைத்து இந்தமண்ணின் வீரஇளைஞர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீராங்கனைகளும் களத்திலே குதித்தார்கள். நாளுக்கு நாள் போராட்டம் முனைப்படைந்துவெற்றிப்பாதையில் அடிஅடியாக அவர்கள் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். இந்தத்தியாகக் களவேள்வியைத் தொடக்கி வைத்த வீரத்திருமகன் வேலுப்பிள்ளை பிரபாகரன் (26-11-1954) என்பதை இன்று உலகமே அறிந்து கொண்டுவிட்டது. ஏற்றுக் கொண்டும் விட்டது.

## "நால்வர் வழியே நம்வழி"

சங்கிலி செகராசசேகரன், பண்டார வன்னியன், கைலாயவன்னியன், பிரபாகரன் - இந்த வீரபரம்பரையின் வழிகாட்டல் செயலுந்தல் ஆகியனவே இழந்த மண்ணை மீட்டிட உதவும் என்பதை நாம் நினைவில் உறுதியாக இருத்திச் செயற்படாவிட்டால் ஈழத்தமிழினத்திற்கு என்றுமே விடிவு ஏற்படாது.

இவர்களின் சாதனைகள் எமக்குத் தரும் படிப்பினை, தான் என்ன?

## (அ) சங்கிலி செகராசசேகரன்

தன்மானம், நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று என்பவற்றின் திரண்ட வடிவமாய், அந்நியர் இம் மண்ணைக் கொள்ள இடங்கொடாத மனத்திண்மைக்கு ஓர் இலக்கியமாய் விளங்கியவனே சங்கிலி செகராசசேகரன் இவனும் இவன் முன்னோரான யாழ்ப்பாண அரசின் மன்னரும் பெற்றிருந்த பெரும் புகழையும் வீரப்பெருமிதத்தையும் எடுத்துரைக்கும் குறிப்பு இது:

"யாழ்ப்பாணம் சிறியதேயாயினும் அதிலிருந்தரசியற்றிய சிலவரசர், தமது பராக்கிரமத்தினாலே இலங்கை முழுதையுங் கட்டியாண்டதோடு, பாண்டிநாடு சோழநாடு களையும் ஒவ்வோரமையங்களில் வெற்றி கொண்டிருக்கின்றார்கள் என்றால், அதன் சரித்திரப் பெருமை கூறவும் வேண்டுமோ? 1505இல் இலங்கைக்கு வந்த பறங்கிக்காரர் இலங்கையில் அநேக நாடுகளைச் சிங்களவரசர்பாற் கவர்ந்த பின்னரும் நூறு வருஷம் சென்றே யாழ்ப்பாணத்தைப் பிடித்தார்கள். அவர்கள் மூன்று முறை போர் தொடுத்தும் நிருவகிக்கவியலாது தோற்றோடினார்கள் என்பர்.. எப்படியாயினும் யாழ்ப்பாணத்தரசர் தமது நாட்டைப் பறங்கிக்காரர் காலத்திலுங் கைவிடாது நூறுவருஷம் ஆண்டார்கள் என்பதுண்மை." (12)

சங்கிலி செகராசசேகரன், யாழ்ப்பாணத்தை ஆண்ட சிங்கள மன்னனான ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகுவை (நல்லூர்க் கந்தசுவாமி கோயிற் கட்டியத்தில் இன்றும் கூறப்படுபவன். சப்புமால் குமரையன் எனச் சிங்கள நாமம் தரித்துக் கோட்டை அரசனான ஆறாம் பராக்கிரமபாகு வளர்த்த செண்பகப் பெருமாள் என்ற தமிழன்) வெற்றிகொண்டு மீண்டும் யாழ்ப்பாண அரசை நிறுவிய பரராசசேகரனின் (1478 - 1519) இளைய மகன். (13) இவனுக்கு மூத்தோர் பண்டாரம், பரநிருபசிங்கன் என்னும் இருவர். இவர்களில் பண்டாரம் கொலையுண்டான். பரநிருபசிங்கன் மூத்தவனாய் இருந்தும் சங்கிலியின் திறமைகண்டு தானே மனம் உவந்து சங்கிலிக்கு அரசுரிமை வழங்கினான்.

சங்கிலியின் ஆட்சித் தொடக்கத்தில் வன்னிப் பகுதியிலே வன்னியர் குழப்பம் செய்தார்கள். அந்தக் குழப்பத்தை அடக்கி நாட்டில் அமைதியை நிலைநிறுத்திய வேளையில் அவன் புதியதொரு பிரச்சினைக்கு முகங்கொடுக்கநேர்ந்தது. போர்த்துக்கீசர் வர்த்தக நோக்கமாக ஈழம் வந்து படிப்படியாகச் சிங்களப் பிரதேச அரசுகளின் விவகாரங்களிலே தலையிட்டுச் சிறிது காலத்தில் அவ்வரசுகளின் சில பகுதிகளைக் கபளீகரஞ் செய்ததோடு யாழ்ப்பாணஅரசிலும் கண்வைத்தனர். இவர்களது சூழ்ச்சிக்குப் பலியான பரநிருபசிங்கன், அப்பாமுதலி (அரசபிரதானி), காக்கைவன்னியன் (ஊர்காவற்றுறைத் தலைவன்) ஆகியோர் தமது குறுகிய பதவி ஆசைகளை நிறைவேற்ற வந்த ஆபத்பாந்தவர்கள் என இவர்களைக் கருதி இவர்களோடு நட்புறவு பூண்டு சங்கிலியின் ஆட்சியைக் கவிழ்க்க முற்பட்டனர்; இந்நோக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தை மனத்திற்கொண்டு போர்த்துக்கீச ரோடு வியாபாரம் செய்வதால் யாழ்ப் பாண அரசிற்குப் பொருளாதார வளர்ச்சி ஏற்படும் என்று சங்கிலிக்கு ஆசைகாட் டினார்.

சங்கிலி இவர்களது ஆசை வலையில் முதலில் வீழ்ந்து விடவில்லை. நீண்ட தயக் கத்துக்குப் பின் போர்த்துக்கீசரோடு வியா பார உடன்படிக்கை செய்துகொண்டான்; ஆனால் போர்த்துக்கீசர் பகல் வேளையில் மட்டுமே அரசின் தலைநகரான நல்லூரி னுள் நுழைந்து வியாபாரம் செய்யலாம் எனவும் இரவில் அவர்கள் துறைமுகம் சென்று (இன்றைய அலுப்பாந்தியே அன் றைய துறைமுகம்) தங்கள் கப்பல்களிலே தங்கவேண்டும் எனவும் நிபந்தனை விதித் தான். போர்த்துக்கீசர் இந்நிபந்தனையை ஏற்றுச் சிலகாலம் அதன்படியே நடந்து வந்தனர்.

ஆனால் சிலநாள் செல்ல, கப்பலில் தங்குவது கடினமாய் உள்ளது என்றும் துறைமுகக் கரையிலே தமது பொருள் களைக் களஞ்சியப்படுத்தவும், தங்கவும் தற் காலிகமாய் வீடுகள்கட்ட அநுமதிக்கவேண் டும் என்றும் அவர்கள் வேண்டிக்கொண்ட தைச் சங்கிலி ஏற்றான்.

உண்மையில் அவர்கள் வீடுகள் கட்ட வில்லை. மாறாகக் கோட்டை கட்டி யாழ்ப் பாண அரசோடு போரிடும் ஆயத்தங் களையே செய்து கொண்டிருந்தார் கள். இவ்வுண்மையை அறிந்த சங்கிலி பெருஞ் சீற்றங்கொண்டு அவர்களது கோட் டைகளை அழித்துவிட்டான். இச்செயல் போர்த்துக்கீசருக்குச் சங்கிலியை எதிர்த்துப் போர் நிகழ்த்த வாய்ப்பளித்தது. போரும் தொடங்கியது.

போர்த்துக்கீசர் தமது பீரங்கிகளுக்கும் துப்பாக்கிகளுக்கும் முன்பு தமிழ்ப்படையின் வாளும், வேலும், வில்லும் தூசுக்குச் சம மானவை என்றே நினைத்திருக்க வேண்டும். ஆனால் சங்கிலி தலைமை தாங்கிய தமிழ்ப் படைக்குத் துணிவும், வீரமும், தன்மான உணர்வும், போராற்றலும் மிதமிஞ்சி இருந்தமையால் போர்த்துக்கீசரால் தாக் குப்பிடிக்க முடியவில்லை. தோல்வியின் எல்லையை அவர்கள் நெருங்கிக்கொண் டிருந்த வேளையிலே, துரோகம் காக்கை வன்னியன் உருவில் வந்து அவர்களை வெற்றிப் பாதைக்கு மீண்டும் இழுத்து வந் தது. போர்க்களத்திலே யுத்தசன்னத்தனாக நின்ற சங்கிலிக்கு உதவுபவன்போல அவன் அருகில்வந்த காக்கைவன்னியனைச் சங் கிலி நட்புணர்வோடு தழுவிக்கொள்ள, அந் தத் தழுவலைப் பயன்படுத்தி வன்னியன் அவனை இறுகப் பிடித்துக் கொண்டான். சங்கிலி போர்த்துக்கீசரிடம் சிறைப்பட நேர்ந்தது. 'உடன்பிறந்தே கொல்லும் வியா தியாகத் துரோகிகள் உள்ளவரை எந்த இனமும் நாடும் உருப்படமுடியாது' என்ற உண்மைக்குக் காக்கைவன்னியன் நிதர்சன சாட்சியானான்.

சங்கிலியைப் போர்த்துக்கீசர் சிரச் சேதம் செய்தனர் என்றும், சிறைப்பிடித் துத் தென்னிந்தியாவில் வைத்தனர் என் றும் சங்கிலியினுடைய முடிவு முரண்பட்ட கருத்துக்கள் வரலாற்றாசிரியர்களிடையே நிலவுகின்றன. (14) சங்கிலி நாடகம், வன் னியனது பிடியிலிருந்து சங்கிலியை அவன் தளபதி விடுவித்து, போர்த்துக்கீச தள பதிக்கு விலங்கிட்டானென்றும் போர்த்துக் கீசர் தமிழ்ப்படையினரால் வெருட்டிக் கலைக்கப்பட்டனரென்றும், 'தொழுதகை யுள்ளும் பகையொடுக்கிய' துரோகிகளின் செயல்கண்டு வெறுப்புற்ற சங்கிலி தன் மகனுக்கு முடிசூட்டித் தான் ஆட்சியினின் றும் விலகிக்கொண்டான் என்றும் கற் பனை செய்கின்றது. (15)

சங்கிலியைக் கொடுங்கோலனாகவும் மதச் சகிப்பு அற்றவனாகவும் (மன்னா ரிலே கத்தோலிக்க மதத்தைத் தழுவிய அறுநூறு தமிழரையும் தன் மகனையும் சங்கிலி ஈவுஇரக்கம் இன்றிக் கொன்றான் என்பர்). தமையன் பண்டாரத்தைக் கொன் றவன் என்றும் பரநிருப சிங்கனுக்கு உரிமை யான அரசினைக் கவர்ந்தவன் என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறும், செவிவழிக் கதைகளும், கத் தோலிக்க நாட்டுக் கூத்துக்களும் அவன் மீது கறையினைப் பூசியுள்ளன. உண்மையே ஆனால் யாழ்ப்பாண அரசின் உரிமை அந் நியர் கைப்படாது காத்திட அவன் செய்த தீரப்போரும் முடிவும் அவனை மானங் காத்த மாவீரனாய்ப் போற்றத் தவற வில்லை. நாடகத்திலும் நவீன காவி யத்திலும் சங்கிலி கதாநாயகனாகத் தன் னிகர் இல்லாத் தலைவனாக உலா வரு கின்றான்

'தமிழரைக் காத்த தமிழர் பெருமகன்'
எங்கும் சுதந்திர மாகவே - எங்கள்
ஈழத்திரு மணி நாட்டிலே - தினம்
நின்று நிலவிய மண்ணினைச் - சில
நீசர் பறித்திடப் பார்க்கிறார் - பெருங்
குன்றை நிகர்த்தவித் தோளினான் -
உயிர்
கொல்லும் அரியினை ஒத்தவன் - பகை
கொன்று குவித்திட வல்லவன் - அவன்
கொற்றவன் ஆகுதல் நல்லதே. (17)

யாழ்ப்பாணத்துத் தமிழரின் அரண்மனை இருந்த இடம் யமுனாரி (யமுனாஏரி), தமிழரசர் அரண்மனை நுழைவாயில் என் பன இன்றும் எச்சசொச்சங்களாய் முத்தி ரைச்சந்தைக்கு அருகில் சங்கிலித் தோப்பு வளவில் அமைந்து சங்கிலி மன்னனையும் அவன் முன்னோரையும் நினைவு கூர வைக் கின்றன. செம்மணி வீதியும் பருத்தித்துறை வீதியும் சந்திக்கும் சந்தியிலே, குதிரை மீது வாள் உருவிய நிலையிலே, உள்ள சங்கிலியின் சிலை கம்பீரமாக அமைந்து ஈழத் தமிழரது மானவீரத்தை மௌன மாக எடுத்துரைக்கின்றது. அவன் பெய ரால் சங்கிலியன் வீதி விளங்குவதும் குறிப் பிடத்தக்கதே.

## (ஆ) கைலாயவன்னியன்

''போர்த்துக்கீசர் இலங்கையிலே தரை யிறங்கிய காலத்தில் வன்னி நாட்டின் எல்லை கிழக்கே திருகோணமலையில் தொடங்கி மேற்கில் மன்னார் வரை பரந் திருந்தது. பனங்காமம் இவ்வன்னிப் பிர தேசத்தில் மேன்மைசால் இடத்தினை வகித்தது. முல்லை நிலத்துக்குரிய காட்டு வளம், யானைச் செல்வம் என்பனவும் மருதநிலத்துக்குரிய வயல் வளமும் இங்கு சிறந்து பொலிந்தன. கிழக்கு மூலை தெற் கில் காணப்படும் கல்வெட்டுக்கள் பனங் காமம் பற்றானது வன்னியரின் தொடக்க காலக் குடியேற்றப் பகுதி என்பதை ஐயத் துக்கு இடம் இன்றிப் பெருமையோடு நிரூபிக்கின்றன.(18) பனங்காமம்பற் றின் ஆட்சித் தலைவர்களிலே தலை சிறந்து விளங்கியவன் கைலாயவன்னியன். இவன் ஒல்லாந்தர் காலத்தவன். ''வன்னி யின் ஆட்சியாளர்கள் ஒரு காலைக் கொம் பனியாரின் (ஒல்லாந்த கிழக்கிந்தியக் கொம்பனியாரின்) நிலத்திலும் மறுகாலை அரசனின் மண்ணிலும் பதித்துக் கொண் டிருக்கிறார்கள்'' என்று ஒல்லாந்த தேசாதி பதி தோமஸ் வான் றீ குறிப்பிட்டார். ''இவர்கள் போர்த்துக்கீசருக்கு அளித்த தலையிடியையே ஒல்லாந்தருக்கும் நிரந்தர மாகக் கொடுத்து வந்தார்கள். தலைவர் களிலே சிலர் அரசுக்கு (ஒல்லாந்த அரசுக்கு) வழங்க வேண்டிய வருடாந்தத் திறைக ளாகிய யானைகளையும், நிலவரியையும் கொடுக்காததோடு ஆண்டுதோறும் நிகழ்ந்த அரசுத் தர்பார்களுக்கும் சமுகமளிக்காது தேசாதிபதிகளின் அழைப்பினைப் புறக் கணித்தார்கள். இத்தகைய தலைவர்க ளிலே குறிப்பிடத் தக்கவன் பனங்காமத் துக் கைலாயவன்னியன். இவன்தொடர்ந்து பன்னிரண்டு ஆண்டுகள் அரசுத் தர்பாருக் குச் சமுகமளிக்கவே இல்லை என்று குறிப் பிடும் தோமஸ் வான் றீ மேலும் கூறுகின் றார். ''அச்சமற்றவனும் செல்வம் நிறைந்த வனுமான இந்தத் தலைவன் 1678இல் மரணம் அடைந்த பொழுது, அவன், வாரிசு பற்றி ஒல்லாந்த அதிகாரிகளுக்கு எவ்வித அறிவித்தலும் கொடுக்காது வன் னியர்கள் தம் தலைவனை நியமித்துக் கொண்டனர்.''

''வானம் பொழியுது பூமி விளையுது
மன்னவன் காணிக்கை ஏதுக்கடா'

என்று கட்டபொம்மன் கேட்டதாகக் குறிக் கும் நாட்டுப்பாடல் கைலாய வன்னியனுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் பொருந்துவதே. ஆட்சியாளரின் அழைப்பை ஓர் ஆண்டல்ல, ஈராண்டல்ல, பன்னிரண்டு ஆண்டுகள் புறக்கணிக்கும் அளவிற்குத் துணிவும் அச்சமின்மையும் நிறைந்த மாவீரனாய்க் கைலாயவன்னியன் விளங்கியது, அவனது தன்மானப் பெருமித உணர்வுக்குத் தக்க சான்றாகும்.

கைலாய வன்னியனைத் தொடர்ந்து வன்னியர்கள் அவனைப் போல எதிரிக்குத் தாக்குப் பிடிக்க முடியாத வீழ்ச்சியைக் கண்டிருக்கலாம். எனினும் அவர்களது குறிக்கோள், பெருமிதம், வீரமறம் என்பவற்றை நாம் குறைத்து மதிப்பிடல் இயலாது. ''வலிமை, வெற்றி என்ற இரண்டினையும் மட்டுமே வீரம் என்று கொண்டு குழம்ப வேண்டியதில்லை. வீரன்பற்றிய எமது கருதுகோள் தியாகம், மரணம் ஏன் தோல்வியையும் கூடத் தன்னுள் அடக்கியதாகவே இருத்தல் வேண்டும். வீரனானவன் மக்களின் உணர்ச்சியைத் தொட்டு எழுப்பி விட வல்லவனாய் இருப்பான்''(20) இந்தக் கூற்றை நாம் ஏற்றுக் கொண்டால் கைலாயவன்னியன் போன்றவர்கள் மாவீரர்களே என்பதையும் ஏற்றுக் கொள்வோம்.

வரலாற்றுக் கற்பனை நாடகமாகத் 'தணியாத தாகம்' என்ற பெயரில் கைலாய வன்னியனின் வீரவரலாறு1968ஆம்ஆண்டில் வெளியானது. மூன்றாம் பதிப்பாக 1976இல் இந்நூல் வெளியானதிலிருந்து [ஈழத்தமிழகத்தில் நாடகநூல் ஒன்று மூன்றாம் பதிப்பாக (பாடநூலாய் இல்லாமலே) வெளியானது ஒரு சாதனையே] இது மக்கள் உள்ளத்தினை எந்த அளவிற்குக் கவர்ந்திருக்கும் என்று நாம் எளிதில் ஊகித்துக் கொள்ளலாம். 'தணியாத தாகம்' நாடக நூலிலே இக்காலத்திற்கு ஏற்ற பல அரிய கருத்துக்கள் காணப்படுகின்றன. அவற்றிற் சில பின்வருவன:

''தாக்காமலே தாக்கும் தந்திரத்தில் கைதேர்ந்தவர்கள் டச்சுக்காரர். நமது நாட்டை அவர்கள் முற்றுகையிட்டாலும் நாம் ஆச்சரியப்படக் கூடாது. அப்படி நேரிடும் பொழுது மற்றைய அயலவர்களுடன் உள்ளதொடர்பு, உணவு விநியோகம் யாவும் துண்டிக்கப்படும். எமது உணவு, உடை யாவும் இங்கேயே உற்பத்தியாக வேண்டும். எந்த ஒரு உதவிக்கும் அயல் நாட்டை நம்பியிருக்கக் கூடாது''. (21)

''செண்பகவல்லி! சற்றுச்சிந்தித்துப்பார் படைகள் மட்டும் பகைவரை விரட்டிவிட முடியாது. நாட்டின் எல்லையை ஊடுருவும் நயவஞ்சகப் பகைவருடைய ஒற்றர்களை எதிர்த்துப் போராட வேண்டியவர்கள் ஊர்ப்பொதுமக்களாகிய நாமல்லவா?''(22)

''நீர்த்துளி, என்று கடலுடன் கலந்து விடுகிறதோ அன்றே அதற்கு நித்திய வாழ்வுண்டு. அதே போலத்தான் நாம் தனித்துளிகள் தமிழ்ச் சமூகம் என்னும் தண்டமிழ்க் கடலில் கலந்து கொண்டால் தான் நமக்கு நித்திய வாழ்வுண்டு.''(23)
''......இருப்பதும் ஒரே உயிர்தான். அந்த உயிர் நம்மை விட்டுப் பிரிவதும் ஒருமுறை தான். அந்த உயிரைப் பிறந்த நாட்டுக்காக இறந்து விட்டு விடுவதாகத் தீர்மானித்து விட்டோம்''(24)

கைலாயவன்னியனின் பரம்பரையில் வந்த நல்லம்பாண வன்னியன் மனைவியான நல்லநாச்சனிலும் வன்னியரது துணிவும் மன உறுதியும் நிலவின என்பதைப் பின்வரும் நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகின்றது.

''1790ஆம் ஆண்டளவில் பனங்காமத்து நல்லம்பாண வன்னியன் சிங்கள வன்னியன் ஒருவனின் மறைமுகமான குற்றச்சாட்டுக் காரணமாகக் கைதியாகி கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டு 12,000 றிக்ஸ் டொலர் (Rix Dollors) அபராதம் விதிக்கப் பட்டான். அவனுடைய நிலம் முழுவதும் பறிக்கப்பட்டுவண்ணார்பண்ணை வாசரான தாமோதரம்பிள்ளை என்பவருக்குக் குத்தகையாக அளிக்கப்பட்டது. அபராதப்பணம் செலுத்தும்வரை நல்லம்பாண வன்னியன் சிறையிருக்கநேர்ந்தது. தாமோதரம்பிள்ளை தமது குத்தகை நிலத்திலிருந்து மூன்று ஆண்டுகளில் அமோகமான வருவாயைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றார். நல்லநாச்சன் (நல்லம்பாணன் மனைவி) யாழ்ப்பாணம் வந்து வண்ணார் பண்ணையில் வசித்தான்; தன் கணவன் சிறையிலிருந்து மீளும்வரை குளிப்பதில்லை என்றும் ஒரு நேர உணவே உண்பதென லும் கடும் விரதத்தினை அநுட்டித்தாள். வன்னியனின் குடும்ப நண்பரும் ஒல் லாந்த அரசில் பெரும் செல்வாக்குப் பெற் றிருந்தவருமான வைத்தியலிங்கச் செட்டி யார் கொழும்பு சென்று அவனுக்கு விதிக்கப்பட்டிருந்த அபராதத்தை இறுத்து, நல்லம்பாணவன்னியனை மீட்டு வந்தார்''' (25)

## பண்டாரவன்னியன்

நெற்றியில் நிலைத்த நீறும்
நீள்கரம் பிடித்த வாளும்
வெற்றியைக் குறித்த நோக்கும்
வீரத்தை விளைத்த நெஞ்சும்
உற்றவெம் பகையை வென்று
உயர்கொடி யுடன் அடங்காப்
பற்றினை ஆண்ட வீரப்
பண்டார வன்னித்தோற்றம். (26)

என்று வருணிக்கப்படும் பண்டாரவன் னியன்,

காற்றிலா விடினும் வாழ்வோம்
கனவிலும் அடிமைத் தாழ்வை
ஏற்றிடோம் எனப்போர் செய்த
ஏந்தல் (27)

ஆவான். இவனுடைய முழுப்பெயர்குல சேகர வைரமுத்து பண்டாரவன்னியன். இவனை 'நுவரகளாவியைச் சேர்ந்தவன் எனச் சிலரும் முல்லைத்தீவைச் சேர்ந் தவன் எனச் சிலரும் கருதுகின்றனர். இவ் வன்னியனது யுத்த நடவடிக்கைகள் அனைத்தும் அடங்காப்பற்றுப் பிரதேசத் திலேயே நடைபெற்றிருக்கின்றன.' (28)

மகாவன்னி என அழைக்கப்பட்ட நுவ ரகளாவிய சிங்களப் பிரதேசமாயினும் இங்கு தமிழர் குடியேறி வாழ்ந்தமைக்கான சான்று பின்வருவது: ''இரண்டாம் இராச சிங்கனின் கைதியாகி 18 ஆண்டுகள் கண்டி யில் வாழ்ந்த றொபேட் நொக்ஸ் தப்பி யோடியபோது, அநுராதபுரத்தில் வாழ்ந்த மக்களுடன் சிங்கள மொழியில் உரையாடிய பொழுது அதை அவர்கள் விளங்கிக்கொள்ள வில்லையென்றும் அவர்களின் தாய்மொழி தமிழாக இருந்ததென்றும் குறிப்பிடுகின் றார்.'' (அநுராதபுரம் மகாவன்னியுள் அடங்கியிருந்தது என்பதும் இதனால்பெறப் படுகின்றது. குலசேகர வைரமுத்து பண் டாரவன்னியன் என்ற பெயர்கொண்டு இம்மாவீரன் தமிழன் என்பதும் நிரூபண மாகின்றது.) ஒல்லாந்தர் ஆட்சிக்காலத் திலும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின் தொடக்கத்திலும் வாழ்ந்த பண்டாரவன்னி யன்ஒல்லாந்தர்சாயவேர்(Dye Roots), திறை யாகக் கேட்டபொழுது கொடுக்க மறுத்து விட்டான். ஈழத்தின் கரையோரப்பகுதியை ஆக்கிரமித்ததோடு, படைபலமும் மிகுந் தவர்களாய் விளங்கிய ஒல்லாந்தரின் பணிப் பினை மறுத்த இவனது துணிவு பெரிதும் பாராட்டவேண்டியதே.

ஈழக் கரையோரப் பகுதிகளைக் கைப் பற்றமுடிந்த ஒல்லாந்தரால் மத்திய மலை நாட்டுப் பிரதேசமான கண்டியைக் கைப் பற்றுவது அரிதாகவே இருந்தது. 1815ஆம் ஆண்டுவரை ஆங்கிலேயராலும் இது முடி யாமல் இருந்ததற்குக் கண்டி அரசனதும் மக்களதும் சுதந்திர உணர்வும் வீரமுமே காரணமாய் இருந்தன. 'இனம் இனத் தையே சாரும்' என்ற பழமொழிக்கேற்ப வீரனான பண்டார வன்னியனும் அவனைச் சார்ந்த வன்னியரும் கண்டியரின் சுதந்திரப் போராட்டத்தில் அவர்களுக்குப் பக்கத் துணை ஆயினர். இதனால் பண்டாரவன் னியன் ஒல்லாந்தரதும் ஆங்கிலேயரதும் சீற்றத்துக்கு உள்ளானான். எனினும் அவன் இவர்களை ஒரு பொருட்டாக மதிக்க வில்லை. ''1803 ஆகஸ்ட் 25ஆந்திகதி முல் லைத்தீவிலிருந்த அரசாங்க இல்லத்தைத் தாக்கி அங்கு கப்டன் வொன் டிறிபேக்கின் தலைமையிலிருந்த படையைப் பின்வாங்கச் செய்தான். கப்டன் டிறிபேக் யாழ்ப்பா ணத்திலிருந்து வந்த வள்ளங்களின் உதவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுடன், தனது படைகளுடன் தப்பி ஓடினான்'' (29)

இத்தோல்வியால் நாணமும், பழிவாங்கும் உணர்வும்பெற்ற ஆங்கிலேயர் பண்டாரவன்னியனைத் தோற்கடிக்கச் சூழ்ச்சியில் இறங்கினர். கரிக்கட்டுமூலைத் தலைவனான காக்கைவன்னியனை ஆசைகாட்டி மயக்கி அவனைத் தம்பக்கமாக்கி அவன் உதவியோடு மீண்டும் பண்டாரவன்னியனை வெல்ல முற்பட்டனர். இம்முயற்சி மும்முனைத் தாக்குதலாக உருக்கொண்டது. ''ஜோன் ஜெவல் என்பவரின் தலைமையில் யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு படையும், கப்டன் எட்வேட் மெச் என்பவரின் தலைமையில் திருக்கோணமலையிலிருந்து ஒருபடையும், கப்டன் வொன்றிபேக் தலைமையில் மன்னாரிலிருந்து இன்னோர் பெரும்படையும் தரைமார்க்கமாக வன்னிநாட்டை நோக்கிச் சென்றன'' (30)

பண்டாரவன்னியன் யாழ்ப்பாணப் படைகளையும் திருக்கோணமலைப் படைகளையும் வீராவேசமாக எதிர்த்துப் போர் புரிந்தான். ஆனால் கரிக்கட்டு மூலைத் தலைவனின் சூழ்ச்சியால் மன்னாரிலிருந்து வந்த படைபற்றி எதுவும் தெரியாதிருந்தமையால், மாவீரனான பண்டாரவன்னியன் தோல்வியைத் தழுவ நேரிட்டது. மன்னார்ப் படை அவனும் அவன் வீரரும் தூங்கிக் கொண்டிருந்த முகாமிற்குள்ளே புகுந்து வீரர் பலரைக் கொன்று அவனையும் வீரர் எண்பதின்மரையும் சிறைப்படுத்தியது. இந்தச் சிறையிலிருந்து பண்டாரவன்னியன் தப்பிச் சென்ற கதை மிகவும் சாகசம்நிறைந்ததாகும். அது பின்வருமாறு:

''ஆங்கிலேயரால் சிறைப்பிடிக்கப்பட்ட பண்டாரவன்னியன் இறந்து கிடந்த வீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தி விட்டு, தன்னோடு சிறைப்பிடிக்கப்பட்ட வீரர்களைக் கண்டு பெருமிதமடைந்தான். கப்டன் றிபேக்கை நாடி 'நேருக்கு நேர் நின்று போர் செய்தவர்களை நாம் சாகுமுன் எம் வீரத்தைக்காட்ட ஒரு சந்தர்ப்பம் தரவேண்டும்'' என்று கேட்டான். பண்டாரவன்னியன் முன்பு தனக்கு உயிர்ப்பிச்சை அளித்ததை ஞாபகப்படுத்திய கப்டன், றிபேக் 50 வீரர்களைத் துப்பாக்கியுடன் நிறுத்தி விட்டுப் பண்டாரவன்னியனது விருப்பத்தை நிறைவேற்ற அனுமதி அளித்தான். பண்டாரவன்னியன் 50 குதிரைகளையும் 50 வாள்களையும் ஒரு ஈட்டியையும் வெள்ளையரிடம் பெற்று 50 வீரர்களிடம் கொடுத்தான். வாளேந்திய 50 வீரர்களையும் இரு பிரிவாக்கி ஒன்றை ஒன்று நோக்குமாறு சிறிது இடைவிட்டு நிறுத்தினான். ஈட்டியின் முனையில் தேன்தோடைப் பழமொன்றைக் குத்தி நடுவே நாட்டினான் பண்டாரவன்னியன் ஓரமாகப்போய் நின்று ''கைதட்டியதும் ஒரே பாய்ச்சலில் பக்கம் மாறவேண்டும். வாளோடுவாள் குதிரையோடு குதிரை மோதக் கூடாது. 50பேரின் வாளும் பழத்தில் வெட்ட வேண்டும். 50 துண்டுகள் கீழே வீழ்ந்திருக்க வேண்டும். எஞ்சிய துண்டுகள் ஈட்டிமுனையில் இருக்க வேண்டும்'' என்று கூறினான். வெள்ளையர்கள் வியப்போடு பார்த்து நின்றனர். பண்டாரவன்னியன் ஒரு முறை பலமாகக் கைதட்டினான். அவன் கூறியபடி எல்லாம் நடந்தது. வெள்ளையர்கள் வியப்படைந்து நின்றனர். மீண்டும் ஒரு முறை பண்டாரவன்னியன் கைதட்டினான். குதிரைகள் வெள்ளையர் மீது பாய்ந்து தாக்கின குதிரைப் படையை ஒருவாறு அடக்கிய ஆங்கிலேயர் பண்டாரவன்னியனைத் திரும்பிப் பார்த்தனர். பண்டாரவன்னியனைக் காணவில்லை- '(30)

ஆங்கிலேயப்படைகளின் துப்பாக்கிகளுக்கும் தேடலுக்கும் மத்தியிலே பண்டாரவன்னியன் தப்பியோடியதாகக் கூறும் இந்தக் கதை மிகையுரை போலத் தோற்றலாம். ஆனால் அவன் ஆங்கிலேயருக்குத் தண்ணீர் காட்டித் தப்பி ஓடியது மட்டும் உண்மை!

''1810 மே மாதத்தில் கண்டிப் பிரஜைகள் சிலரது உதவியுடன் கிழக்கு மூலை மேற்குப் பகுதியில், கிழக்கு மூலை தெற்குப் பகுதியில் பண்டாரவன்னியன் தனது எதிர்ப்பைத் தெரிவித்தான்.....இப் படை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யெடுப்பின் போது பண்டாரவன்னியன் படையில் 14 வீரரே இருந்தனர்....1810 செப்டம்பரில் பண்டாரவன்னியன் கண்டித் திசாவையின் உதவியுடன் மீண்டும் வன்னியைத் தாக்கவிருப்பதாக வன்னிப்பகுதி கலெக்டர் ரேணருக்கு மேற்பற்று கிழக்கு முதலியார் கதிர்காமநாயகத்திடமிருந்து செய்தி எட்டியது....1811இல் உடையாவூரில் நடைபெற்ற போரில் பண்டாரவன்னியன் படுகாயம் அடைந்தான். இவனது படை வீரர் இவனைப் பனங்காமத்துக்கு எடுத்துச் சென்றனர், அடுத்த நாளே பண்டாரவன்னியன் ஆவி பிரிந்தது.''(31)

இவ்வாறு தனது உயிர் உள்ளவரை மண்ணுரிமை காத்து, மானங்காத்து, மறத்தமிழர் புகழ் காத்து மரணத்தைத் தழுவிக் கொண்டான் மாவீரன் பண்டாரவன்னியன்.

> கல்லெனத் திரண்ட தோளும்
> கடலென விரிந்த மார்பும்
> 'நில்' என எதிரி தம்மை
> நிறுத்திடும் வீரவாளும்
> கொல்லென வருவேல் காக்கக்
> கொடுத்தகே டயமுங் கொண்டு
> 'செல்'லென எதிர்த்து வெள்ளைச்
> சேனையைக் கலைத்த வீரன்'(32)

பண்டாரவன்னியன் நினைவுச் சின்னங்களாகக் கற்சிலைமடுவில் ஒரு நடுகல்லும் [''1803 அக்டோபர் 31இல் இதையடுத்த பகுதியிலேதான் கப்டன் வொன் டிறிபேக் பண்டாரவன்னியனைத் தோற்கடித்தான்'' (33) ] வன்னிமாநகரில் 1982 யூலை 18இல் நிறுவப்பட்ட உருவச் சிலையும் இன்றும் நிலவி மானங்காத்த அவனது மாவீரத்தைப் பேசாது பேசிக் கொண்டிருக்கின்றன.

''இம்மன்னன் (பண்டாரவன்னியன்) பிரமசாரி. இவனுக்குக் காதலியார் சம்மாளங்குளம் என்ற கிராமத்தில் ஒட்டுசுட்டானிலிருந்து இரண்டு மைல் தொலைவிலுள்ளது - காதலி ஒருத்தி இருந்தாள்... அவள் பெயர் குருவிச்சி வன்னிச்சி. பண்டாரவன்னியன் சகோதரி பெயர் நல்லநாச்சன் வன்னிச்சி. கண்டிய வன்னியனான நுவரவன்னியனின் மூத்த மகனான குமாரசிங்க வன்னியனுக்கு இவள் மனைவி. குமாரசிங்க வன்னியன் முல்லைத்தீவில் நடந்தஒருபோரில் ஆங்கிலேயரின் துப்பாக்கிக்கு இரையானான். குருவிச்சி வன்னிச்சி பண்டாரவன்னியனின் வீழ்ச்சியைக் கேள்வியுற்றதும் நல்லநாச்சன் வன்னிச்சியோடு சேர்ந்து கார்த்திகைக்கிழங்கு என்னும் நச்சுக் கிழங்கினை உண்டு, ஒட்டுசுட்டான் நெடுங்கேணி வீதியை ஊடறுத்துச் செல்லும் இடத்தின் அருகிலுள்ள குருவிச்சி ஆற்றுக் கரையிலே பன்னாடை ஒன்றின்மேல் கிடந்து இறந்து போனாள்.''(34)

*பிரபாகரன்*

பலர் உலகிலே பிறந்து தமக்கென வரலாறு இல்லாமலே மறைந்து போகின்றனர். அவர்களிலும் குறைந்த தொகையினர் வரலாற்றிலே தங்கள் சுவடுகளைப் பதித்துச் செல்கின்றனர். வரலாற்றைத் தாமே படைத்து அதன் நாயகராயும் விளங்குவோர் மிகச் சிலர்தாம். அந்தச் சிலருள் ஒருவரே வேலுப்பிள்ளை பிரபாகரன்.

''முடியாது என்ற வார்த்தை எனது அகராதியிலே இல்லை'' என்றான் நெப்போலியன். ஆனாலும் ருஷ்யப் படையெழுச்சியிலும், மத்தியதரைக் கடற்போரிலும் அவனாலும் முடியாது போனவற்றை வரலாறு தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. பிரபாகரனைப் பொறுத்தவரையில் அவர் முடியாதவற்றை முடித்துக்காட்டும் சாதனையைப் புரிந்தவர் என்று வரலாறு என்றும் பேசும். எண்ணிக்கையிலே மிகக் குறைந்த போராளிகளோடு உலகின் நாலாவது பலம் பொருந்திய வல்லரசு ஒன்றின் நோக்கத்தை முறியடித்த சாதனைக்கு உலக வரலாற்றிலே ஈடு இணை காண்பது அரிது.

பசி, தாகம், நீண்டபயணம், மரணம் என்பவற்றையே தன்னால் வழங்கமுடியும் என்றும் சுகமான நல்வாழ்வுக்கு உறுதியில்லை என்றும் தாய்நாட்டின் மீது உண்மையான பற்றுடையோர் தன்னோடு சேரலாம் என்றும்கூறி அவ்வாறு தன்னுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்த போராளிகளைக் கொண்டு போர் நிகழ்த்தி இத்தாலியை ஒற்றுமை பூணவைத்தான் கரிபால்டி. கழுத்துகளிலே சைனைற்றைக் கட்டிக்கொண்டு தம் தலைவன் ஆணையிட்டால் அதனை விழுங்கி மரணத்தைத் தழுவிக்கொள்ளவும் ஆயத்தமாயுள்ள மாவீரர்களைக் கொண்ட புலிப் படைக்குத் தளபதி பிரபாகரன் என்னும் பொழுது இவர் கரிபால்டியிலும் அதிர்ஷ்டசாலி என்றுதான் சொல்ல வேண்டும். 'நரம்பு எழுந்து உலறிய நிரம்பா மென் தோள் முளரி மருங்கின் முதியோளின் சிறுவன்' போர்க்களம் சென்று விழுப்புண் பெற்று வீழ்ந்தது புறநானூறுகண்ட வீரம். இன்று அவன்போன்ற சிறுவர்கள் பலரும் வீராவேசமும், இனப்பற்றும், நாட்டுப்பற்றும் கொண்டு பிரபாகரன் பின்பு அணி வகுத்து நிற்கிறார்கள். சிறுவர்கள் மட்டுமோ? இளம் வீராங்கனைகள் நூற்றுக் கணக்கில் ஆயிரக்கணக்கில் தமிழ்ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தம்மை இணைத்துக் கொண்டு வீராங்கனைகளாய் பவனி வருகின்றனர். இவர்கள் வெறும் கூலிப்பட்டாளங்கள் அல்லர். 'மானம் பெரிதென்று எண்ணி வாழ்வு சிறிதென்றெண்ணும்' மறத்தமிழ் வீராங்கனைகள் இவர்கள். உயிர் வாழ்க்கையின் தந்தக் கோபுரக் கனவுகளுக்கும் இவர்களுக்கும் வெகுதூரம். நம்முந்தையரது மண்ணை மீட்டிட இவ்வளவு தொகையான பெண்கள் களவேள்விக்குத் தம்மை ஆகுதியாக வழங்க முன்வந்தமைக்கு உலக வரலாற்றில் வேறு சான்றுகளே இல்லை என்று துணிந்து கூறலாம்.

இத்தனைக்கும் 1954-11-26இல் பிறந்த பிரபாகரனுக்கு இன்னும் முப்பத்தாறு வயது கூட முடியவில்லை. வயதில் இளைய அவர் அநுபவ முதிர்ச்சி மிகுதியும் பெற்ற பெரும் வீரர், சாதனையாளர்.

தமிழ் மாணவர் பேரவை பலம்பொருந்திய இயக்கமாக வளர்ந்தது. இதில் தீவிரவாதக் குழுவாக தங்கத்துரை, சின்னஜோதி. பிரபாகரன் ஆகியோர் இயங்கினர். தொடக்க காலத்தில் கைக்குண்டுகள் செய்யவும் துப்பாக்கி சுடுவதற்கும் இவர்கள் பயிற்சி பெற்றனர். பிரபாகரனின் சொந்த ஊரான வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர் தங்கத்துரை. எனவே அவருடன் பிரபாகரனுக்கு நெருங்கிய தொடர்பிருந்தது. இந்தத் தீவிரவாதக் குழுவில் இருந்தவர்களில் சுமார் இருபத்தைந்து பேருக்கு மேற்பட்டோர் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள்.

அரசாங்கத்திற்குத் தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் அரச பஸ் ஒன்றை எரிப்பது என முடிவுசெய்தார்கள். நான்குபேர் இதற்கான பொறுப்பை ஏற்றுச் சென்றார்கள்.ஆனால், மற்ற மூவரும் நடுவிலேயே பயம் கொண்டு திரும்பி ஓடிவிட்டார்கள். 14 வயதுச் சிறுவனான பிரபாகரன் மட்டும் தைரியமாகச் சென்று அரச பஸ்ஸைக் கொளுத்திவிட்டுத் திரும்பி வந்தார்.... (35)

மாவட்ட நில அதிகாரியாகவும் சமயப்பற்று நிறைந்தவராகவும் 'மிதித்தஇடத்தில் புல் சாகாத பரமசாதுவாகவும் விளங்கிய ஒரு தந்தைக்கு மகனாகப் பிறந்த பிரபாகரன் தமிழ் ஈழ மீட்புக்கு அரசியற் போராட்டமோ, அஹிம்சைப் போராட்டமோ உதவாது என்று தமது பிஞ்சுவயதிலேயே உணர்ந்து கொண்டு துணிவோடும் தன்னம்பிக்கையோடும் செயற்பட எடுத்துவைத்த முதல் அடி இது. அடி என்று சொல்வதுந் தவறு. மறத்தமிழ் வீர பரம்பரையாகிய ஏணியின் முதற்படியிலே கால் பதித்தார் என்பதே பொருந்தும்

பொருளாதார வசதி, சமூக அந்தஸ் என்பன குறைவின்றி அமைந்த இளைஞ ஒருவன், விரும்பியிருந்தால் தனது படி பைத் தொடர்ந்து காலனித்துவ ஆட்சியி எச்சசொச்சமான உத்தியோகம் பெற் பகட்டாகவும் இன்பமாகவும் வாழ்ந்தி கலாம். தனக்கே தனக்கென்று வா விரும்பும் சுயநலமிகளுக்குத்தான் இந்த வாழ்க்கை பொருத்தமாக இருக்கலாம். பிர பாகரனுக்கு அல்ல, மகாபாரதத்தில் அவர் படித்த வீமன், கர்ணன் ஆகிய கதாபாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரங்கள், நெப்போலியன், சுபாஷ் சந்திர போஸ் போன்ற மாவீரர்கள், இந்திய சுதந்திரப் போராட்டத் தியாகிகள் என் போரின் வாழ்க்கை வரலாறுகளையும் நிகழ்ச்சிகளையும் உள்வாங்கி ஜீரணித்த அவருக்குத் தாமே வரலாறு படைக்க வேண்டும் என்ற எண்ணமும், அவாவும், தன்னம்பிக்கையும் ஏற்பட்டதில் வியப்பில்லை. அன்பான பெற்றோர், பாசம் நிறைந்த உடன்பிறப்புக்கள், உற்றார், உறவினர் ஆகியோரை எல்லாம் கைவிட்டுத் தியாகம் செய்த அவர் வரலாறு மெய்சிலிர்க்க வைப்பதாகும்.

பிரபாகரன் தம் தோழரோடு இருந்த இடத்திற்கு சென்று அவரை அழைத்து வந்த தந்தைக்கு அவர் கூறிய பதில், அவரின் தீர்க்கமான முடிவை நன்கு புலப்படுத்துகின்றது. ''குடும்பப் பொறுப்பை நீங்கள் ஏற்றிருக்கிறீர்கள். எனக்கு ஒரு பொறுப்புமில்லை. குடும்பத்திற்கோ நான் ஒரு போதும் பயன்பட மாட்டேன். என்னால் உங்களுக்கு எத்தகைய தொல்லையும் வேண்டாம். என்னை என்போக்கில் விட்டு விடுங்கள். இனி எதற்கும் என்னை எதிர் பார்க்காதீர்கள்''(36)

தனி மனிதனாக நின்று இலங்கை அரசாங்கத்திற்கு இடைவிடாத தலையிடியைக் கொடுத்துத் தமிழ் ஈழவிடுதலைப் போராட்டத்தின் முன்னோடியாக விளங்கினான் சிவகுமாரன். அவனது இலட்சியத்தை இதயத்தில் ஏற்றுக் கொண்ட பிரபாகரன் அதற்கு இயக்க வடிவம் கொடுத்து வளர்த்தெடுக்க அடிப்படையாய் அமைந்தவை அவரது தியாகம், சொல்லும் செயலும் ஒன்றாய் அமைந்த நேரிய போக்கு, சத்திய ஆவேசம், கொள்கையில் கொண்ட அழுங்குப்பிடி என்பனவே. இவற்றால் கவரப்பட்டு மாத்தையா, கிட்டு, பேபி, ரகு, இரவீந்திரன் (பண்டிதர்), செல்வநாயகம், அன்ரனி, சங்கர், குமரப்பா, புலேந்திரன், சந்தோஷம் முதலாக ஆற்றலும், இலட்சியப் பிடிப்பும், தியாகவெறியும் கொண்ட இளைஞர் கூட்டம் ஒன்று அணி திரண்டது. அது சிறிது சிறிதாக இன்னும் பல மாவீரர்களை இழுத்துத் தனக்கு ஆட்படுத்திக் கொண்டது.

எதிரிகளின் கைகளில் அகப்பட நேரும் சூழ்நிலைகளில் சைனைட் அருந்தி மரணத்தைத் தழுவுதல், கழுத்தில் விழுந்த மண மாலை கருக முன்னரே தம் இன்னுயிரை மரணதேவதைக்குப் பலியாக்கல். மரணத்தைத் தாமே எதிர்கொண்டு சென்று பகைவர் பாசறைகளைப் பூண்டோடு அழித்தல், சாகும் வரை நீர் கூட அருந்தாது உண்ணா விரதம் இருத்தல், பசி பட்டினி, நோய் முதலிய இடையூறுகளையெல்லாம் மாளாத மனஉறுதியோடு தாங்கிக் கொண்டு வனவாசம்செய்தல், பெற்றோர், உடன்பிறப்புக்களின் பந்தபாசங்களைப் பற்றறத் துறத்தல், துரோகி தனது சொந்த இரத்த உரித்தினன் என்றாலும் அவனைக் கொன்றொழிக்கவும் தயங்காமை முதலாகத் தமிழ் ஈழவிடுதலைப் புலிகள் செய்தவையும் செய்து வருகின்றனவுமான மாபெரும் தியாகங்களின் வரலாற்றிலே, ஒளி சுட்டும் தீபமாக விளங்கி வருகின்றார் பிரபாகரன்.

போரும் வீரமரணமும் மட்டும் குறித்த இலட்சியத்தை அடைவதற்குப் போதியனவல்ல. இராசதந்திரமும் அரசியல் ரீதியான நிகழ்கால எதிர்காலத் திட்டங்களும் வேண்டியவையே என்பதிலும் பிரபாகரனுக்கு அழுத்தமான நம்பிக்கை உண்டு. தேசியவாதம் பேசியோர், பாரதநாட்டின் அனுசரணையோடு தற்காலிகமானதும், பெரும் பயனை நீடித்து நின்று விளைக்காததுமான உடன்படிக்கைக்கு அவாவியோர் எல்லோருமே தங்களுடைய வேஷங்களைக் களைந்து தம்மை வெளிப்படுத்தி மக்களுக்குக் காட்டி அரசியல் அரங்கிலிருந்து மறைந்து போக வைத்த சாணக்கியம் மிகவும் பாராட்டத்தக்கதாகும். பேரினவாத அரசோடு சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தியும், ஒரு கட்டத்தில் யுத்த நிறுத்தப் பிரகடனம் செய்தும் அதன் முகமூடியைக் களைந்து எறிய வைத்து அதன் உள் நோக்கத்தை உலக அரங்கில் வெளிப்படுத்தியதும் சாமானியமான அரசியல் தந்திரம் அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் தந்திரம் ஒருபுறம், போர்த்திறம் மறுபுறம் ஆக இருமுனைச் செயற்பாடுகளையும் திட்டமிட்டுச் செயற்படுத்துவதிலேயே பிரபாகரனுடைய வெற்றிகள் தங்கியுள்ளன. 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23ஆம் திகதி திருநெல்வேலியில் அவர் தமது சகாவான செல்லக்கிளியின் தலைமையில் சென்று ட்றக்கில் வந்த பதின்மூன்று சிங்களச் சிப்பாய்களைப் பிணமாக வீழ்த்திய சாகசம் மகத்தானதாகும்.

"1983இல் தமிழ்க் கலாசாரத்தின் காவலரணாய் அமைந்த யாழ்ப்பாணத்தில் இலங்கை அரசின் இராணுவத்தின்மீது பேரச்சமூட்டும் வகையிலே அவர் பதுங்கல் தாக்குதல் ஒன்றை நடத்தினார். கதை கதையாய்ப் பேசுதற்குரிய இந்தத் தாக்குதல் இலங்கையரசினை அதன் முள்ளந்தண்டுவரை நடுங்கவைத்தது. இதனால் விறைத்துச் செயலற்றுப்போன அரசு எதிர் நடவடிக்கை எடுக்க முன்பே, சிங்களக் குண்டர்கூட்டம் இதற்குப் பழிவாங்கும் வகையிலே கொழும்பில் தமிழருக்கு எதிரான கலகத்தில் இறங்கியது. இந்தத் தாக்குதல் சிங்களவரின் அறிவை மயக்கி அதிர வைத்தது தெளிவு.'' (37)

பிரபாகரன் போர்க்கலையில் தேர்ந்தவர். குறிபார்த்துச் சுடுவதில் ஈடில்லாத திறமைசாலி. ஆயுதங்கள் பற்றிய தேர்ந்த அறிவு அவருக்கு உண்டு.

இன்று தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் கெரில்லாப் போர்முறையையும் கடந்து, நேரடி மோதல்களிலும் தலைசிறந்து விளங்குகின்றனர். நெல்லியடி இராணுவமுகாம் அழிப்பும், கோட்டையைக்கைப்பற்றியதும், மாங்குளம் முகாமைப் பிடித்ததும் புலிகளின் போராற்றலுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாய் விளங்குகின்றன. இவை பிரபாகரனின் போர்த்திட்டத்துக்கும் திறனுக்கும் கட்டியம் கூறுகின்றன. மாவீரர்களின் சாவைத் தூசெனக் கருதும் உளப்பாங்கிற்கும் திட்டம் வகுத்திடும் திறனுக்கும் வீரசாகசங்களுக்கும் பிரபாகரனின் பின்னணி ஊக்குவிப்பும் வழிகாட்டலும் துணைநிற்கின்றன.

குண்டுவீச்சு விமானங்களின் குண்டுப் பொழிவு ஒருபுறம், கடற்பீரங்கிகளினதும் ஷெல்களினதும் தாக்குதல் இன்னொரு புறம், ஹெலியின் அடாவடித்தனம் மற்றொருபுறம் என்று பலமுகத் தாக்குதலுக்கு ஈடுகொடுத்து எதிர்த்து நிற்பதும், எதிரிகளை, அவர்களின் மூலபலங்களை அழித்தொழிப்பதும் சாதாரண விஷயங்கள் அல்ல. உலகப் போர்களின் வரலாற்றில் பிரபாகரனைத் தலைவராய் ஏற்ற விடுதலைப் புலிகளின் சாதனைகள் தனி அத்தியாயத்தைப் படைத்துக் கொண்டிருக்கின்றன. உலகம் அடிக்கடி காணமுடியாத அற்புதம் இது என்று கூறலாம். இந்த அற்புதத்தின் மூலநாயகன் பிரபாகரன்.

## முடிவுரை

பேரினவாதத்தினை எதிர்த்து ஈழத் தமிழ் மக்கள் தங்கள் மண்ணை மீட்கும் போராட்டம் இன்னும் சில ஆண்டுகள் தொடர்ந்து நிகழலாம். ஆனால் வெற்றி ஒரு நாள் நிச்சயம் கிட்டும். அந்த வெற்றிப் பிரவாகத்துக்கு மத்தியில் பிரபாகரனின் நாமம் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் என்பதற்கு ஐயமில்லை.

இரண்டாம் உலகப் போரிலே ஜேர்மனிய சர்வாதிகாரியான ஹிட்லர், யூதரை இலட்சக்கணக்கிலே கொன்று குவித்தான் முதியோர், இளைஞர், பெண்கள், குழந்தைகள் என்ற வேறுபாடின்றி அழித்தொழித்தான் உலகின் எந்த மூலையிலும் யூதர் என்ற சாதியார் இல்லாது முற்றாகத் துடைக்கப்பட்டனர் என்றே உலகம் நம்பியது ஆனால் யூதசங்காரத்துக்குத் தப்பிப் பிழைத்த சிலர், பலராகி அவர்களின் ஆதிவதிவிடமான இஸ்ரவேலில்அவர்களின் தனியரசு உருவாகி விட்டது. அது உலகின் சவால்களுக்கு அஞ்சாது முகம் கொடுத்து வருகிறது.

போலந்தில் இரண்டாவது உலகப் போரின் போது யூதர்களில் பெரும்பாலான குடிமக்களை அழித்து விட்டு எஞ்சியோரை 'கெட்டோ' என்ற யூதர்சேரியில் ஜேர்மனியர் குடியேற்றினர். அதனோடும் விடாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தங்கியிருந்த வீடுகளிலிருந்தும் அவர்களை அப்புறப்படுத்தித் தொழில் முகாம்களில் அடைத்தும், தேசப்பிரஷ்டம் செய்தும் சித்திரவதை செய்தும் வருத்தி னர். இத்தகைய வெளியேற்ற நாடகம் ஒன்றில் அலிசியா என்ற யூதச் சிறுமி யும், அவள் தமையன்மாரும் தாயும் ஜேர் மன்ய பொலிஸாரினால் சுற்றி வளைக்கப் பட்டு வீட்டிலிருந்து வெளியேற்றப்படுகின் றனர். அந்தவேளையில் துயரமும், கோப மும் கண்ணீருமாக நின்று கலங்கிய அலிசி யாவை நோக்கி அவள் தமையன் கூறிய வாசகங்கள் இவை:

"போர் முடிவுற்றதும் நாங்கள் ஒரு நாள் வீட்டுக்குத் திரும்புவோம். இந்த அவலம் நீடிக்கப் போவதில்லை."(40)

தமிழனுக்குத் தனிநாடு இல்லாத பழி துடைக்கப்படும். துன்பக்கடலிலும் அச்சப் புயலிலும் அகப்பட்டுச் சீரழிவோர் தமது நலம் மறந்து, இனநலமும் மண்பற்றும் மிக்கவர்களாய்ச் சீறி எழுந்து போராட் டத்தில் பங்காளர்களாய் மாறுவர்; மாறி யாக வேண்டும். அன்று ஈழத் தமிழகத் திலே பிரபாகரன் தலைமையிலே சுதந்தி ரப் புலிக்கொடி பட்டொளிவீசிப்பறந்திடும். இந்தமண் எங்களின் சொந்தமண்

## அடிக்குறிப்புக்கள்

1. பிராமிக் கல்வெட்டுக்களும் தமிழும் - சி. க. சிற்றம்பலம், சிந்தனை - பங்குனி - 1989. பக். 57 - 58
2. Introduction - Early Settlement of Ceylon. Page One Ponnampalam Ragupathy.
3 — 9. ஈழத்து வன்னிமைகள் - கலாநிதி சி. பத்மநாதன் வன்னியர் : பக். 53 - 54
10. மட்டக்களப்பு மான்மியம் - பதிப்பாசிரியர், வித்துவான் F. X. C. நடராசா
12. முகவுரை - யாழ்ப்பாணச் சரித்திரம் பக். 3 ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை
13. பிற்கால யாழ்ப்பாணத்தரசர் - சங்கிலி, பக். XXXIV பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை
14. சங்கிலியைக் கொல்லல் - யாழ்ப்பாணச் சரித்திரம் பக். 70 ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை (I) பிற்கால யாழ்ப்பாணத்தரசர் சங்கிலி பக். XXXVI
15. உறுப்பு (III) களம் 7 சங்கிலி பக். 93
17. சீறும் சிங்கம் - சங்கிலியம் பக். 27 காரை செ. சுந்தரம்பிள்ளை
18. The Glory that was vanni A Review தணியாத தாகம் பக். - K. Paramothayan
20. முன்னுரை - தணியாத தாகம் பக்.— (மேற்படி முன்னுரையில் நாடகாசிரியர் கரவைக் கிழார், சி. எஸ். நவரத்தினம் எழுதிய 'Vanni and Vanniyas' என்ற ஆங்கில நூலி லிருந்து எடுத்துக்காட்டியுள்ள ஆங்கில மேற்கோளின் மொழிப்பெயர்ப்பு) மேற்படி நாடக முன்னுரை —
21. மேற்படி பக். 29 22. மேற்படி பக். 49 23. மேற்படி பக். 49 24. மேற்படி பக். 80
25. வன்னிமண்ணின் முதல் விடுதலை வீரன் பண்டாரவன்னியன் - பண்டாரவன்னியன் விழாமலர் (Vanni and Vanniyas நூலிலிருந்து அடிக்குறிப்பு மேற்கோளாய்த் தரப் பட்டுள்ள ஆங்கிலப் பகுதியின் மொழிபெயர்ப்பு) பக். 65 கே. எஸ். மெட்றாஸ்மயில்
26. பண்டாரவன்னித் தோற்றம் - மேற்படி மலர். பக்.—
27. மேற்படி - பக். —
28. புகழ்பூத்த வன்னி மண்ணின் காவலர்கள் பக். 36 முல்லைமணி வே. சுப்பிரமணியம்
29. மேற்படி பக். 37
30. விடுதலை முரசொலிக்கும் வீர வரலாறு படைத்தவன் க. தர்மலிங்கம் மேற்படி மலர் 67, 68ஆம் பக்கங்கள்
31. புகழ்பூத்த வன்னி மண்ணின் காவலர்கள் மேற்படி மலர் பக். 38
32. மேற்படி மலர் — மேற்படி
33. மேற்படி மலர் - கற்சிலை மடுவிலுள்ள பண்டாரவன்னியன் ஞாபகச்சின்னம் - படம் பக். —
34. Adangapattu and Pandara Vanniyan, மேற்படி மலர் பக். 110 Dr. S. V. Pararajasingam
35. புலிகள் இயக்கம் பிறந்தது — பிரபாகரன் பக். 14 பழ. நெடுமாறன்
36. இளமைப் பருவம் - மேற்படி நூல் பக். 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வானம் அறிந்ததனைத்தும்

அறிந்து

வளர் மொழி வாழியவே!"


திருமண

பட்டுப் புடைவைகளுக்கு

**அஜந்தாஸ்**

**ரெக்ஸ்ரைல்ஸ்**

54, பெரிய கடை,

யாழ்ப்பாணம்.

[F-33]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாமறிந்த மொழிகளிலே
தமிழ் மொழி போல்
இனிதாவது
எங்கும் காணோம்"

சிறந்த புடைவைகளுக்கு

நியூ சண்முகானந்த
றெக்ஸ்ரைல்ஸ்

58, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

(F/34)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" தேமதுரத் தமிழோசை

உலகமெலாம்

பரவும் வகை

செய்தல் வேண்டும்"

**கணேசன் ஸ்ரோர்**

**63, 78, காங்கேசன்துறை வீதி,**

**யாழ்ப்பாணம்**

[F-35]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிறநாட்டு நல்லறிஞர்
சாத்திரங்கள்
தமிழ் மொழியிற்
பெயர்த்தல் வேண்டும்"


**சோபனா ரெக்ஸ்ரைல்ஸ்**

**16, பெரியகடை வீதி,**

**யாழ்ப்பாணம்.**

(F/36)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரத்தின் சங்கீதம்

போராளர் யார் என்றால்...
சொந்த மண்ணின்
புனிதநிலை உணர்ந்து கொண்டு
புலியாய் நிற்போர்.
யாபேரும்
ஒடுங்காமல் உரிமை பெற்ற
இனிய விடுதலை அடைய வேண்டும்
என்போர்.
சாவினையும் குளிகையாய் உருட்டிப் பூண்டோர்
சரித்திரத்தின் நாயகர்கள்
தமிழர் நெஞ்சில்
ஓவியமாய் அழியாமல் அமர்ந்திருப்போர்
உணர்ச்சி என்னும் உன்னதத்தின்
உயிராய் உள்ளோர்.

மதத்தினது பெயர் சொல்லி
மொழியைச் சொல்லி
மக்களது சாதி சொல்லி
இனத்தைச் சொல்லி
பிதற்றுகிற பயித்தியத்தை
ஆண் - பெண் என்ற
பேதத்தின் அடியான அநியாயத்தை
ஒதுக்கல்களை, மிரட்டல்களை ஒழிக்க என்றே
உயிர்களையும் அர்ப்பணிப்போர் போராளர்கள்
மதிப்புடனே அவர்களை நாம் வணங்குகின்றோம்.
வாழ்த்துகிறோம்.
பாராட்டிப் போற்றுகின்றோம்.

அந்த உயர் வீரர்களைப் பாடுகின்றோம்
அவர்களது தியாகத்தை—
தேசீயத்தின்
சொந்த முழு உரிமை கொண்ட சின்னமாக்கி
சுதந்திரத்தின் சங்கீதம் இசைக்கின்றோம் நாம்!
செந்தமிழர் விடுதலைக்காய் முயற்சி செய்யும்
தீவிரத்தை வலியுறுத்திப் போற்றுகின்றோம்
மைந்தர்களை மறவாமல்,
முதுகில் தட்டி
மனமாரக் கைகுலுக்கி மெச்சுகின்றோம்!

● முருகையன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமை பேணுமின்

நீ. மரியசேவியர் அடிகள்

## பண்பாடு

வரலாற்று ஓட்டத்தில் மலர்ந்தும், உலர்ந்தும், வளர்ந்தும், தளர்ந்தும் நிற்கும் பண்பாடு பல கூறுகளை அடக்கிய பல்வேறு கூட்டொருமைத் தன்மையது. பொதுக் குறியீடு களைக் கொண்டதும், ஒரு இன மக்களால் ஏற்றுக் கொள்ளப் பட்டதும், குறிப்பிட்ட ஒரு பாங்கிற்குள் பின்னப்பட்டதுமாகிய ஒழுகலாறு, உலக நோக்கு, சிந்தனை முறை, செயற்பாட்டு வகை, சமூக அமைப்பு, கலை வெளிப்பாடு போன்ற இன்னோ ரன்ன உறுப்புக்களைக் கொண்டதுதான் பண்பாடு.

## பொதுமை

தமிழ் இனத்தைப் பொறுத்தளவில் அதன் பண்பாட்டுச் சொத்து பல்வகைப்பட்ட வரலாற்று சமய, சமூக அரசியற் தாக்கங்களுக்கும் உள்ளானது என்பது கருத்திற் கொள்ளப்பட வேண்டியது. இலக்கியத்துறையை எடுப்பின் புத்த சமயத்தின் மணிமேகலையும், சமண மதத்தின் சிலப்பதிகாரமும், சைவ சமயத்தின் தேவார திருவாசகங்களும், கிறிஸ்தவ மதத்தின் தேம்பாவணியும், முகமதியர் மறையின் சீறாப்புராணமும் தமிழர் அனைவரினதும் அழியாச் சொத்துக்கள், இந்நோக்கில், தமிழர் பண்பாட்டின் கூறுகள் என்பன எந்தவொரு குறிப்பிட்ட தமிழ் வகுப்பிற்கோ, பிரிவிற்கோ தனிச் சொந்தமாகாது பொதுமை உணர்வுடன் போற்றிக் காக்கப்பட வேண்டும்.

## சங்ககால உலகு நோக்கு

தமிழர் பண்பாட்டின் ஒரு சில கூறுகள் தமிழின வரலாற்றிலும், வாழ்க்கை முறையிலும் ஆழமாகப் பதிந்து விட்டன.

''யாதும் ஊரே; யாவரும் கேளிர்'' என்றார் புலவர் பூங்குன்றனார். இது, எந்தக் குறுகிய எல்லைக்குள்ளும் வாழாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளப் பண்பினால் உலகளாவ வாழும் தன்மையை மட்டுமல்லாது, உலகில் வாழும் மக்கள் அனைவரையும் அடைக்கும் தாவின்றி அன்பு செய்து வாழும் பண்பும் சங்ககாலத் தமிழினத்துக்கு இருந்தது என்பதைக் காட்டுகின்றது. இக்கூற்று இன்றைய நம் நிலையிலும் வேறுபட்டதன்று. அதே பாடலில்,

''வாழ்தல் இனிதென மகிழ்ந்தன்று
மிலமே;

முனிவின் இன்னாது என்றலு மிலமே

என இயம்பும் புலவர் அன்றைய தமிழ் மக்களின் வாழ்க்கைக் கண்ணோட்டத்தைச் சுட்டிக் காட்டுகின்றார். இதனால் இன்பந்தான் இறுதி என்ற கொள்கையோ, உலகத்தைத் துறத்தல் தான் சிறந்தது என்ற கோட்பாடோ இன்றி, வருவதை ஏற்று வாழ்வாங்கு இன்புடன் வாழ்தல் தமிழ் இனத்தின் தனிக் கொள்கை என்பது தெளிவாகின்றது. சங்க காலத்துத் தமிழ் மக்களின் மன நிலையைப் படம் பிடித்துக் காட்டும் அதே புலவர் ''சாதலும் புதுவதன்று'' என அடித்துக் கூறி ''தீதும் நன்றும் பிறர் தர வாரா'' என அறிவுரை கூறுகின்றார். இது மனிதனே தனது செயல்களுக்கு முழுப்பொறுப்பேற்க வேண்டுமென்ற பண்டைத் தமிழர் கொள்கையினை வலியுறுத்துகின்றது.

## பழையதும் புதியதும்

மேற்கூறப்பட்டதற்கு மாறாக வேறு சில பண்டைய பண்பாட்டுக் கூறுகள் இன்று முற்றும் மாறுதல் அடைந்து விட்டன. அன்றைய தமிழர் சமூகம்

''பிறவியில் உயர்வும் தாழ்வும்
சொல்லல் மடமை - இந்த
பிழை நீங்குவதே உயிருள்ளாரின்
கடமை''

என்று பாரதிதாசன் சாடுவதற்கு ஏதுவான சாதிவேற்றுமைகளை வளர்க்கவில்லை. ஒன்றே குலம், ஒருவனே தெய்வம் என்ற கொள்கையில் வேரூன்றி இருந்தது. ஆரிய ஆதிக்கத்தின் அவலமான விளைவே தமிழ் வாழ்வில் சாதி என்ற அடிப்படையில் உருவாகிய உயர்வு தாழ்வுகள், ஆக கபிலர், அந்தணரை நோக்கி

''நால்வகைச் சாதி இந்நாட்டில் நீர் நாட்டினீர்'' எனக் கூறியதில் வியப்பில்லை. இதைப் போலவேதான் அன்றைய தமிழகத்தில் புலால் அருந்துதல் தவறாகக் கருதப்பட்டதன்று. தமிழ் வேந்தர் அரண்மனைகளில்

''புலவு நாற்றத்த பைந்தடி
பூ நாற்றத்த புகை கொளி இ
ஊன்றுவை கறி சோறுண்டு''

வாழ்ந்த வாழ்வைப் புறநானூறு சுட்டிக் காட்டுகின்றது. காலப் போக்கில் காய் கனிகளை உண்பதும், மச்சம் மாமிசத்தைத் தவிர்ப்பதும் தமிழின உயர் குடிமக்களின் ஒழுக்கமாய் மாறியது. அதேபோல் இன்று தமிழ் மக்களிடம் காணப்படும் சீதனம் (இலக்குமி செல்வம்) அன்றைய தமிழர் சமூக வாழ்வில் இருக்கவில்லை. மாறாக தமிழ் இலக்கியங்களில் மணமகன் மணமகளுக்கு அளித்த ''முலை விலை''யைப் பற்றிப் பேசப்படுகிறது. பெண்ணுக்கு அணிகலன்களை மணமகனே கொடுத்த வழக்கத்தை அகநானூற்றுப் பாடல்கள் தெரிவிக்கின்றன.

## ஒற்றுமையின் சின்னம்

விழிப்புணர்ச்சியும், விடுதலை வேட்கையும் தலைதூக்கிய இன்று தமிழினத்தின் பண்பாடு நம்மவரைக் கட்டிக்காக்கும் ஒற்றுமையின் சின்னமாய் மாறவேண்டும். இதன் பொருள்: நமது இனத்தின் எந்தவொரு பிரிவினரும் எக்காரணத்தையிட்டும் தமிழரின் பொதுச் சொத்தாகிய பண்பாட்டிற்குத் தனியுரிமை கோரலாகாது. நமது பண்பாடுஇப்பொதுமை அடிப்படையில் பேணிக் காக்கப்பட்டும் புது மெருகேற்றப்பட்டும் வளர்க்கப்பட வேண்டியது.

## பொது விழாக்கள்

பொது விழாக்களை தமிழ் மக்கள் அனைவரும் ஒருங்கு சேர்ந்து கொண்டாட வேண்டும். இயற்கையுடன் இணைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்த நம் மூதாதையர் அதனுடன் தொடர்புள்ள விழாக்களை பொது விழாக் களாகக் கொண்டாடி வந்ததில் வியப் பில்லை. உழைப்பின் உயர்வையும், உழவ ரின் மேன்மையையும் உயர்த்தி இயற்கை யின் ஊடாக அதற்கு அப்பாலுள்ள இறைக்கு நன்றி செலுத்த உருவாகியது தைப்பொங்கல்விழா. அறுவடையின் விழா வாகவும், நன்றியின் விழாவாகவும் விளங் கும் தைப்பொங்கல் எந்தவொரு குறிப் பிட்ட சமூக, சமய,எல்லைக்குள்ளும் அடை பட்டிருக்கவில்லை. அதனாற்றான் தமி ழினத்தைத் தட்டியெழுப்பிய தமிழ் அறி ஞர் அண்ணாதுரை தைப்பொங்கல்விழா மற்றைய விழாக்களைப்போல் அன்றி ''நமது விழா; நாம் நம்மை உணர உத வும் விழா'' என்றார். தமிழரின் புத்தாண்டு விழாவும் இத்தகையதே. இயற்கையுடன் இணைந்தது; நேரடியான சமூக, சமய தொடர்பற்றது;ஆகவே பொதுமையானது.

## மரபுச் சடங்குகள்

வாழ்வின் மையமான நிகழ்ச்சி திரு மணம். அதில்வரும் ஒருசில நடைமுறை கள் மிகவும் பழைமை வாய்ந்தன; புனித மானவை. தனி நிலை உணர்வையும், அதற்கு அப்பாலுள்ள சமூக உணர்வையும் சுட்டிக்காட்டும் தமிழர்களின் திருமணச் சடங்கில் மாப்பிள்ளை பெண்ணுக்குக் கட் டும் தாலி பண்டுதொட்டு இன்றுவரை தமிழ் மக்களின் திருமண நடைமுறையாக இருந்து வந்துள்ளது என்பது அறிஞர் பல ரின் கருத்து. பிற்கால இலக்கியங்களில், கூறப்பட்ட தாலி அணிதல் பண்டைய தமி ழர்களின் திருமண உறவின் அடையாளம் என்கின்றனர். தாலிகளுள்ளும் புலிப்பற் தாலியே மிகவும் பழமையானது. எனவே ஐந்திணையுள் ஒன்றான குறிஞ்சி வாழ் மக் களிடையே இப்பழக்கம் தோன்றியிருக் கலாம்.

## கலைகள்

தமிழர்கள் வளர்த்துவந்த கலைகள் கால ஓட்டத்தில் கணிசமான மாற்றங் களை அடைந்து வந்தன. எடுத்துக்காட் டாக குறிஞ்சிப்பண், பாலைப்பண், மருதப் பண், முல்லைப்பண், நெய்தற்பண் முதலிய தமிழ்ப் பண்கள் இசைத்துறையின் ஆதிப் பண்கள். அவைகளைப் பற்றியோ, பத்துப் பாட்டுப் போன்ற சங்க நூல்களில் கூறப் படும் பண்கள் பலவற்றின் தன்மைகளைப் பற்றியோ, இன்றுள்ள நம்மவர்க்குத் தெரி யாது. இன்று நமது பாரம்பரிய இசை யென்று போற்றப்படும் கர்நாடக இசை விசய நகர அரசின் காலத்தில் நமது இசை வாழ்வியலில் புகுந்தது என்பது எத்தனை பேருக்குத் தெரியும்? ஐரோப்பியர், முஸ் லிம்களின் வரவால் மேல்புலத்து. வட நாட்டு இசைமுறைகள் தமிழ் இசைத்துறை யில் நுழைந்தன. இடையில் புகுந்ததென்று எதையும் ஒதுக்கிவிடாது, நமது சொந்த ஊற்றுக்குச் சென்று, அதன்வழி நின்று, வரலாற்றில் நிகழ்ந்த மாற்றங்களையும் கருத்திற்கொண்டு, புதிய வடிவங்களைச் சமைக்கவேண்டும். இந்தக் கண்ணோட்டத் தில், ஆலயங்களில் வழிபாட்டு மொழியாக அழகுதமிழ் கையாளப்படுவதும், நாடகத் துறையில் கிராமியக் கலை வடிவங்கள் பேணிக் காக்கப்படுவதும், பரத நடனக் கலையை சமய சார்பில்லாத மற்றைய கருத்துக்களுக்கும் ஊடகமாகப் பயன்படுத் துவதும் வரவேற்கப்படவேண்டியது.

பெருமிதம் அடையவேண்டிய நமது பண்பாட்டின் பொதுமையை உணர்ந்து, புதியன புகுத்தி, பழையன பேணி வாழ் வாங்கு வாழ்வோம்!

## நல்லது செய்தல்

நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்
எல்லாரும் உவப்பது அன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியுமற்றதுவே.

— நரிவெரூஉத்தலையார்
(புறநானூறு 195)

நல்லவை செய்ய மாட்டீராயினும் தீயவற்றையாவது செய்யாதிரும். உம்மை யாவரும் புகழ்வதற்கும், நல் வழியிலே செலுத்தி உய்யுமாறு செய் வதற்கும் அதுவே சிறந்த வழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தமிழே!
செழுந்தமிழே!
முத்தமிழே!
முது தமிழே!
வண்டமிழே!
வளர் தமிழே!

வாழ்க!
வளர்க!!

தரமும் சுவையும் நிறைந்த
சிற்றுண்டி வகைகளுக்கு
**றிக்கோ**
*370, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

[F-37]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீந்தமிழே!
தேன்தமிழே!
கன்னித்தமிழே!
அன்னைத்தமிழே!
பூந்தமிழே!
புலவர் தமிழே!

வாழ்க!
வளர்க!

☐ நாகரிகப் பொருள்கள்,
விளையாட்டு,
அன்பளிப்புப் பொருள்கள்
போன்றவற்றுக்கு

# பெஷன் ஹவுஸ்

65, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசைத் தமிழே! அருந் தமிழே! தங்கத் தமிழே!

சங்கத் தமிழே! கனித் தமிழே! கன்னல் தமிழே!

வாழ்க!
வாழ்க!
வாழ்க!

□ சகலவிதமான புடைவைகளுக்கும் புகழ்பெற்ற நிலையம்

□ சிங்கம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
172, (84) காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

[F-39]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழே வாழ்க தாயே வாழ்க!
அமிழ்தே வாழ்க அன்பே வாழ்க!
கமழக் கமழக் கனிந்த கனியே!
அமைந்த வாழ்வின் அழகே வாழ்க!

□ □ □

**கேயெஸ் பான்சி ஹவுஸ்**

176(88), காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.


[F-40]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழே !
தமிழே !
எங்கள் தமிழே !

□

"சேர சோழ பாண்டிய ரெல்லாம்
ஆர வளர்த்த ஆயே வாழ்க!
ஊரும் பேரும் தெரியா தவரும்
பாரோர் அறியச் செய்தாய் வாழ்க!"

□

○ சகல அன்பளிப்புப் பொருட்களுக்கும்
○ பாடசாலை உபகரணங்களுக்கும்
அம்பலவாணர் அன் சன்ஸ்
196, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

[F-41]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எங்கள் தமிழே!*
*இன் சுவைத் தமிழே!*

□

"சீரிய அறமும் சிறந்த வாழ்வும்
ஆரும் அடையும் அறிவைப் பொழிந்தாய்
வீரம் தந்தாய் மேன்மை வகுத்தாய்
ஈர நெஞ்சே இன்பம் என்றாய்"

□ □

யாழ்நகரில் நீடித்த பாவனைக்கு புகழ் பெற்ற
சங்கு மார்க் எவர் சில்வர் பாத்திரங்களுக்கு

□ □ □

**செல்வா சன்ஸ் சேல்ஸ் சென்ரர்**
**118, (198) காங்கேசன்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

[F-42


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ □ ○ □ ○

"குமரி நாட்டில் தூக்கிய கொடியை
இமயத் தலைமேல் ஏறச் செய்தாய்
தமிழைத் தனித்த புகழில் நட்டாய்
தமிழின் பகைவர் நெஞ்சைச் சுட்டாய்"

○ □ ○ □ ○

" முத்தமிழ் " விழா!
சிறப்புற
எமது
இதயபூர்வமான
வாழ்த்துக்கள்

பாண்டியன் பலசரக்கு மாளிகை
95, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

[F-43]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" முத்தமிழ் அம்மா
முத்தமிழ் அம்மா,
தத்துவ உணர்வை
முதலில் தந்தாய்
எத்தனை இலக்கியம்
இலக்கணம் வைத்தாய்,
முத்துக் கடலே
பவழக் கொடியே "

□

சிறந்த

கூறைச் சேலைகளுக்கு

ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ.

புடைவை வியாபாரிகள்

13, 14 பெரியகடை,

யாழ்ப்பாணம்.

[F-44]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" எழுத்தே பேச்சே இயலே வாழ்க!
இழைத்த குயிலே இசையே வாழ்க!
தழைத்த மயிலே கூத்தே வாழ்க!
ஒழுக்க வாழ்வின் உயிரே வாழ்க!

□ நாகரிகமான புடைவைகளுக்கு

□ ஆறுமுகம் ரெக்ஸ்ரைல்ஸ்
20, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

[F-45]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ஊரில் தமிழன் மார்பைத்தட்டிப்
பாரில் தமிழன் நானே என்னும்
சீரைத் தந்த தமிழே வாழ்க!
ஓரா உலகின் ஒளியே வாழ்க !"

# அம்பிகை சென்ரர்

109, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

[F-46]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

□ தமிழே ஆதித்தாயே வாழ்க!
□ தமிழர்க் கெல்லாம் உயிரே வாழ்க!

நாளுக்கோர் புதுமை! □
நாடுவது உண்மை! □
இவற்றை அளிப்பதுதான் □

□ **சீமாட்டி**
□ **122, மின்சார நிலைய வீதி,**
□ **யாழ்ப்பாணம்.**

(F/47)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" தமிழே ஆதித்தாயே வாழ்க!

தமிழர்க்கெல்லாம் உயிரே வாழ்க!

தமிழ் நாட்டுக்கும் பிறநாட்டுக்கும்

அமிழ்தாய் அமைந்த அம்மா வாழ்க!"

○ உலர் சலவையில் சிறப்பிடம் பெற்றவர்கள்

○ 50 வருடங்களுக்கு மேலான நீண்ட அனுபவம்

**சன்லைற் றைக்கிளீனேர்ஸ்**
23, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

கிளை :- 28, சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

[F-48]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஊரில் தமிழன் மார்பைத் தட்டிப்
பாரில் தமிழன் நானே என்னும்
சீரைத் தந்த தமிழே வாழ்க!
ஓரா உலகின் ஒளியே வாழ்க!

மட்பாண்டப் பொருள்களுக்கும்
மின்சார உபகரணங்களுக்கும்
நியூ விமாகி
713, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" முத்தமிழ் விழா " வுக்கு எமது வாழ்த்துக்கள்!

" தீம்பால் செந்தேன் தமிழ் மொழி
செங் கரும்பே தமிழ் மொழி
நாம் பேசு மொழி தமிழ் மொழி"

தமிழ் மக்களின் இதயங்களை வென்ற

தனித்துவமான செய்தி நிறுவனம்

" உதயன் " - " சஞ்சீவி "

292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

[F-50]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது மண்ணில் நடக்கும்

"தமிழ் விழா"

இன்ப விழாவாக

பரிணமிக்க

வாழ்த்துகின்றோம்!

## வி. வடிவேல்

219, மின்சார நிலைய வீதி,

யாழ்ப்பாணம்

[F-51]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்றமிழே!
இசைத் தமிழே!
நாடகத் தமிழே!
உயர் தமிழே!
ஒண் தமிழே!
எழில் தமிழே!
இன் தமிழே!
கன்னல் தமிழே!
கனித் தமிழே!
சங்கத் தமிழே!
தங்கத் தமிழே!
அருந் தமிழே!
ஆசைத் தமிழே!
புலவர் தமிழே!
பூந்தமிழே!
அன்னைத் தமிழே'
கன்னித் தமிழே!
தேன் தமிழே!
தீந்தமிழே!
வளர் தமிழே!

"முத்தமிழ் விழா"

எமக்குப்
பெருமை
சேர்க்கும்

நல்ல நூல் விற்பனையாளர்கள்

பூபாலசிங்கம்
புத்தகசாலை

4A, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை: "நகுலினி"
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.


(F/52)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை வெளிப்பாடு

கலைகள் சுவைஞனை உணர்ச்சிவயப்படுத்துவன என்றும், உணர்ச்சிவயப்படுத்த வேண்டுமென்றும் பொதுவாகக் கருதப்படுகிறது திரைப்படங்களைப் பார்ப்பதினாலும், நாவல்களை வாசிப்பதினாலும் சுவைஞர் உள்ளக்கிளர்ச்சியடைகின்றனர். நுகர்வோனிடத்து உணர்ச்சியையோ அன்றி சலனத்தையோ தோற்றுவிக்காத சிறுகதையை கலைப் படைப்பென்பதில்லை, கச்சேரியை இரசிப்பதில்லையென கலைக்கு விளக்கம் தரப்படுவதுண்டு. கலைநுகர்வினால் ஏற்படும் உள்ளக்கிளர்ச்சியை நவரசங்களாக நம்முன்னோர் வகுத்துக் கூறியுள்ளனர். இசை கேட்போர்களின் உணர்ச்சியைக் கிளர்ந்தெழச் செய்வதென்றும் இசையின் அடிப்படை நோக்கம் அதுவே யாகுமெனவும் இவர்கள் கருதினர். நடிகன் தன் பாவனையினால் பார்வையாளனிடம் மெய்ப்பாடுகளைத் தோற்றுவிக்கிறான் என்ற கொள்கையும் மேற்படி அபிப்பிராயத்திற்கு வலுவூட்டுகிறது. கலைகள் சுவைஞரை உணர்ச்சிவயப்படுத்துவன என்ற மேற்படி விளக்கம் கலை பற்றிய தவறானதொரு கருத்தாக்கமாகும்.

கலைகள் நுகர்வோனிடத்து உள்ளக்கிளர்ச்சியை ஏற்படுத்துமென்ற விளக்கம் மெய்யான கலைக்கும், போலிக்கலைக்குமிடையிலான வேறுபாட்டைத் தரம்பிரித்தறிய இயலாதபடி செய்து விடுகிறது. மேலும் கலையை வெறுமனே பொழுதுபோக்குச் சாதனமாக எண்ணும் படியும் செய்துவிடுகிறது. கலை-இலக்கியங்களில் கட்டற்ற கற்பனையின் அவசியத்தை வலியுறுத்துவோர், ஒரு கலையின் "பெறுமதி" அது சுவைஞருக்குத் தரும் மனவெழுச்சியிலும், உள்ளக்கிளர்ச்சியிலும் தங்கியுள்ளதென்பர். கலையை பொழுதுபோக்குச் சாதனமாக கொள்ளும் கலைஞரதும் (?) சுவைஞரதும் (?) அபிப்பிராயமும் இதுவாகவிருக்கிறது.

*கலாநிதி*
*சோ. கிருஷ்ணராஜா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலான மக்களால் பொழுது போக்கிற்கென விரும்பி வாசிக்கப்படல் கலைக்குரிய ''கட்டளைக்கல்'' அல்ல. மணியனும், புஷ்பா தங்கத்துரையும், ராஜேந்திரக்குமாரும் வெற்றிகரமான கலை வணிகர்களே ஒழிய கலைஞர்கள் அல்ல. கலையின் பெயரால் சமுதாயச் சீரழிவிற்கும், தவறான கண்ணோட்டங்களிற்கும் மக்களை அவர்கள் இட்டுச் செல்கின்றனர். உணர்ச்சிவசப்படுத்தும் கலை பகுத்தறிவுச் சிந்தனையை மழுங்கடித்து விடுகிறது.

உணர்ச்சி சிக்கலானதொரு கருத்தாக்கமாகும். உணர்ச்சிபற்றி பொதுக்கொள்கையெதுவும் இன்றுவரை உளவியலாளர்களால் முன்வைக்கப்படவில்லை. கலைக்கும் உணர்ச்சிக்குமிடையிலான தொடர்புகள் பற்றிய கருத்து மயக்கங்களிற்கு அங்கீகரிக்கப்பட்ட கொள்கையொன்று இல்லாமையும் காரணமாயிற்று.

கலைகள் சுவைஞரிடத்து ஏற்படுத்தும் உணர்ச்சியை பெயரிட்டுக் கூறமுடியாது. ''சுகமான அனுபவம்'', 'எங்கோ மிதப்பது போன்ற உணர்ச்சி'' என இசைக் கச்சேரிகளை இரசிப்போர் தம்முள் குறிப்பிடுவதை அவதானிக்கலாம். 'இது கதையல்ல காவியமென'' நல்ல நாவல்கள் பற்றிக் குறிப்பிடுவர். எவ்வாறுயினும், இத்தகைய இரசனைக் குறிப்புகளால் கலைபற்றிய விளக்கமெதுவும் பெறப்படுவதில்லை. அவை தீர்மானமற்ற வெறும் குறிப்புகள் மட்டுமே.

'மெய்யான வாழ்வில்'' எமக்கேற்படுகிற உணர்ச்சிக்கும், கலைநுகர்வினால் ஏற்படும் உணர்வனுபவத்திற்குமிடையில் பெருத்த வேறுபாடுண்டு. ஒருவர் அவமதிப்பிற்குள்ளாகும் பொழுது அல்லது அச்சமடையும் பொழுது அவருக்கு கோப உணர்ச்சி அல்லது பய உணர்வு ஏற்படுகிறது. ஆனல் கலைநுகர்வு தரும் உள்ளக்கிளர்ச்சியோ அத்தகையதல்ல அது சிறப்புவகையான அனுபவமாகும். அவ்வனுபவத்தை, உணர்ச்சிகளைப் பெயரிட்டுக் கூறுவதுபோல பெயரிட்டுக் கூறமுடியாதுள்ளது.

கலைகள் உணர்ச்சி வெளிப்பாட்டுத் திறனுடயவை. வெளிப்படும் உணர்ச்சி சுவைஞனுக்குத் தரப்படும் தகவல் அல்ல மாறுக உணர்ச்சி வயப்படுத்துவதுமல்ல. கலைகள் உணர்ச்சியை வெளியிடுவதன் மூலம் நுகர்வோனுக்கு ஒருவகையான அனுபவத்தைத் தருகிறது. இவ்வனுபவம் ஓர் அறிகை அனுபவமாகும் நுகர்வோன் கலையைப் புரிந்து கொள்கிறான். இதனால் இலயிப்புக் கொள்கிறான். சுவைஞனின் இலயிப்பை உணர்ச்சிவயப்படுத்தலாக அர்த்தப்படுத்தல் ஆகாது.

கலையின் உணர்ச்சி வெளிப்பாட்டுத் திறனுக்கேற்ப நுகர்வோனில் ஏற்படுத்தப் பெறும் அழுத்தம் வேறுபடும். அழுத்தமான உணர்ச்சி வெளிப்பாட்டுத் திறனுடைய கலைப்படைப்புகள் கற்பனைத்திறனுடைய சுவைஞனிடத்து அழுத்தமான உணர்ச்சியனுபவத்தைத் தோற்றுவிக்கலாம். ஆனால் உணர்ச்சிவயப்படுத்தல் ஆகாது. சுவைஞனை உணர்ச்சிவயப்படுத்தல் தீங்கானது. அவனது சிந்தனைக்கு இடையூறு விளைவிப்பது மிகச் சிறந்த கலைப்படைப்புக்கள் என அங்கீகரிக்கப்பட்டவை - அது சத்திய ஜித்ரேயின் திரைப்படங்களென்றாலென்ன, ஜானகிராமனின் நாவல்களாயிருந்தாலென்ன, சுவைஞனை உணர்ச்சிவயப்படுத்துவதில்லை. அவை சிறந்ததொரு அனுபவத்தையே நுகர்வோனுக்குத் தருகின்றன.

கலைஞன் தன் உணர்ச்சிகளை சுவைஞனுக்குத் தரவிரும்பும் அறிகையனுபவத்துடன் இணைத்துக் கலைப்படைப்பை உருவாக்குகின்றான். கலைநுகர்வு மூலம் அறிகையனுபவமும் (உள்ளடக்கக் கருத்தெனலாம்). கலையின் உணர்ச்சி வெளிப்பாடும் சுவைஞருக்குக் கிடைக்கிறது. எனவே கலையனுபவம் அடிப்படையில் அறிகையனுபவமே என்பது புலனாகிறது. இவ்வனுபவம் ஏனைய (விஞ்ஞான) அறிகையனுபவங்களிருந்தும் வேறுபட்டது. கலைதரும் உணர்ச்சியனுபவத்தை நுகர்வோனின் உணர்ச்சித்துலங்கலாக இனங்கண்டு கொள்ளலாகாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையைப் பொழுதுபோக்குச் சாதனமாக எண்ணுவோரும், விரைவுவிற்பனையை எண்ணிக் கதைவிடுவோரும், வணிகநோக்குடைக் கலைஞர்களும் (?) சுவைஞனின் உணர்ச்சித் துலங்கலையே கலையின் பயன் பாடாகக் கருதுகின்றனர். இலக்கியம் ஏற்படுத்தும் உணர்ச்சி வெளிப்பாடு அதிலிடம்பெறும் சொற்களின் அர்த்தத்திலிருந்து வெளிப்படுகிறது. பாடும் முறையினால் இசை கிளர்ச்சியனுபவத்தைத் தருகிறது. ஓவியத்தில் வரைய எடுத்துக்கொண்ட கருப்பொருளில் உணர்ச்சிவெளிப்பாடு தங்கியுள்ளது. நாடகத்தில் நடிகனின் பாவனையினால் இது வெளிப்படுகிறது. கலையின் உணர்ச்சிவெளிப்பாடு சுவைஞனை கலையுடன் ஒன்றிக்க உதவுகிறது. இவ்வொன்றிப்பு கலையனுபவத்தை தருகிறது. அது ஓர் சிறப்புவகையான அறிகையனுபவமாகும். உணர்ச்சித் துலங்கல் கலையனுபவமுமல்ல, அது கலையின் நோக்கமுமல்ல. □

---

**நேற்று முன்தினம் தந்தை,**
**நேற்றுக் கணவன்,**
**இன்று மழலை மகன்**

"கெடுக சிந்தை கடிது இவள் துணிவே
மூதின் மகளிர் ஆதல் தகுமே
மேல்நாள் உற்ற செருவிற்கு இவள் தன்னை
யானை எறிந்து களத்துஒழிந் தனனே
நெருநல் உற்ற செருவிற்கு இவள்கொழுநன்
பெருநிரை விலக்கி ஆண்டுப்பட் டனனே.
இன்றும்,
செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித் துடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோன்
செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே."

— ஒக்கூர் மாசாத்தியார்
புறநானூறு 279

*இவளுடைய உள்ளத் துணிவைப் பாருங்கள்! நினைக்கவே பயமாக இருக்கின்றதே! பழைமை வாய்ந்த மறக்குடி மகளும் இவள்தான் முன்னைய போரிலே இவளின் தந்தை யானையை வென்று களத்திலே இறந்தவன் நேற்றைய போரிலே இவள் கணவன் பசுக்கூட்டங்களைக் காத்து நின்று இறந்தவன். இன்று போர் முரசு கேட்டதும் தன் சுற்றத்தவரும் போரிட வேண்டும் என விரும்புகின்றாள். அதனால் யாது செய்கின்றாள்?*

*தன் ஒரே மகனை அழைத்து தலைக்கு நெய் தடவி வெள்ளாடை தரித்து, கையிலே வேலுங் கொடுத்து, "மகனே போருக்குப் புறப்படுவாய்!" என்று போகச் செய்கின்றாள் அவள் பண்பு சாலச் சிறந்தது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனிவள அடிப்படைக் கைத்தொழிலுக்கான வாய்ப்பும் வசதியும்

வி. பி. சிவநாதன்
எம். ஏ.
விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் சர்வதேச வர்த்தகத் தொடர்புகள் தடைப்பட்ட வேளையில், இறக்குமதி செய்யப்பட்ட கைத்தொழில் பொருள் பற்றாக்குறையால், தோன்றிய பொருளாதார நெருக்கடி இலங்கையின் கைத்தொழில் மயமாக்கத்திற்கான ஆரம்பநிலையாக இருந்தது. இச்சூழல் சுயதேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதும் ஏனைய உற்பத்திகளிற்குத் தேவையான உள்ளீடுகளை வழங்கக் கூடியதுமான கைத்தொழிற்துறையொன்றை அபிவிருந்தி செய்ய வேண்டுமென்ற தூண்டுதலை இலங்கை அரசிற்கு ஏற்படுத்தியது.

இவ்வாறே ஒரு நாட்டின் அல்லது பிரதேசத்தின் இறக்குமதிகள் தடைப்பட்டபோது அல்லது பொருளாதாரத் தடைகள் ஏற்பட்டபோது அப்பிரதேசத்தின் சுய உற்பத்தி, நுகர்வுத் தேவைகளை நிறைவு செய்வதற்காக அப்பிரதேசத்தில் கிடைக்கக்கூடிய வளங்களை மதிப்பிடுவதும், கண்டுபிடிக்கப்பட்ட வளங்களை சிறந்த முறையில் பயன்படுத்தி விரைவான பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்திக் கொள்வதும், அவசியமானதொன்றாகக் கருதப்படுகிறது

வடகிழக்குப் பிரதேசத்தில் கிடைக்கக்கூடிய கனிப்பொருள் வளங்களை மூலப் பொருளாகக் கொண்ட கைத் தொழில்களை ஆரம்பிப்பது ஏனைய கைத்தொழில்கள் வளர்ச்சியடைவதற்கும் அன்னியச் செலாவணியை அதிகளவில் உழைப்பதற்குமான சாதமான நிலைகளை உருவாக்கும் இப்பிரதேசத்தில் கனிவளத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு பெருமளவான மூலதன வசதிகள் இன்மையும், எம்மால் தற்போது பெறமுடியாத தொழில் நுட்ப வசதிகளும் இவ்வுற்பத்திகள் சார்பாக கற்றறிந்த விற்பன்னர்கள் இன்மையும், போதியளவு வலு சத்திகள் கிடைக்க முடியாதிருப்பதும், உற்பத்தி செய்யப் பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றைச் நேரடியாக சந்தைப்படுத்தும் வசதிகள் இன்மையும், மேற்குறிப்பிட்டவற்றை சீர்செய்யவும் அதற்கான பொருளாதார ஒழுங்குகளை மேற்கொள்ளும் வசதிகள் இன்மையும். இத்துறை சார்ந்த கைத்தொழில்கள் விரிவடையாமைக்குக் காரணங்களாகின்றது. இன்று எம்மால் இனங் காணப்பட்ட கனிவளங்கள் சிதைந்து போகாமலும் வேறு பிரதேசத்தவராலும் வேறு நாட்டவராலும் சுரண்டப்படாமலும், பாதுகாத்து இப்பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்திக்கான திட்டமிடல்களை மேற்கொள்ள வேண்டியது எமது கடமையாகும்.

மூலவளங்கள் செறிந்து காணப்படும் பகுதிகளில் கைத்தொழில் மையங்கள் இருத்தல் வேண்டும். ஏனெனில் குறைந்த செலவில் கூடியளவான உற்பத்தியை மேற்கொள்வதற்கு கைத் தொழிலுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் இருத்தல் வேண்டும். குறிப்பாகக் கனி வளங்களும் மனிதவளமும் செறிவாக உள்ள பகுதியை கைத்தொழில் மயமாக்கத்திற்கான பகுதியாகத் தேர்ந்தெடுத்தல் பொருளாதார ரீதியாக நன்மை பயப்பதாக இருக்கும்.

மூலவளம் நிறைந்த பகுதியாகக் கருதப்பட்ட யாழ்ப்பாணத்தின் காங்கேசனில் சீமெந்துத் தொழிற்சாலையும், பரந்தனில் இரசாயனத் தொழிற்சாலையும், மட்டக்களப்பின் வாழைச்சேனையில் கடதாசிக் கைத் தொழிலும், திருகோணமலையின் புல்மோட்டையில் இல்மனைற் தொழிற்சாலையும் ஆரம்பிக்கப்பட்டதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். மேற்குறிப்பிட்ட கைத் தொழிற்சாலைகளே அதிக அன்னியச் செலாவணியைத் தேடித்தந்ததோடு இலாபத்தில் இயங்கும் கைத் தொழில்களாகவும், ஏனைய கைத் தொழில்களுக்கு மூலப் பொருளை வழங்கும் கைத் தொழில்களாகவும் இருக்கின்றன. கைத் தொழில் அபிவிருத்தியினூடாக இப்பிரதேசத்தின் பொருளாதாரத்தையும் அபிவிருத்தி செய்ய முடியும் என்ற அடிப்படையில் கைத்தொழிலுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் வளங்கள் என்பவை இன்னும் குறைந்துவிடவில்லை என்பதைச் சுட்டிக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கடலோர கனி மணல் படிவு

திருகோணமலையின் புல்மோட்டையிலிருந்து யாழ்ப்பாணத்தின் நயினாதீவு வரைக்கும் கடலோர கனிமணல் படிவு இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இக்கனி மணலில் இல்மனைற் 70—72 வீதமாகவும் (Ilmenite) உருத்தையில் (Rutile) 8 வீதமாகவும் சேர்கோன் (Zircon) 8 — 10 வீதமாகவும் மொனோசிற் 0.2வீதமாகவும்(monozit) கதிர்த் தொழிற்பாட்டு மொனோசிற் 6.8 வீதமாகவும் இருக்கின்றது. மேற்குறிப்பிட்ட கனிமப்படிவங்களைப் பல்வேறு சேர்க்கைகட்கு உட்படுத்தும்போது பல்வேறு கைத் தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருட்களைப் பெறமுடிகின்றது.

1979ம் ஆண்டு புவியியல் அளவைத் திணைக்களத்தினால் ஆய்வொன்று நடாத்தப்பட்டது. இவ்வாய்வு குறிப்பிட்ட பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டதாக இருந்த போதும் தேவிகல்லு, புதவாக்காடு, நாயாறு ஆகிய இடங்களில் புதிய பாரிய கனிமணல் படுகைகள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மேற்குறித்த மூன்று இடங்களிலும் ஏழு அடி ஆழம் வரையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் ஏறத்தாழ 71.7 இலட்சம் தொன்களைக் கொண்ட மணல் படுகை இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. புல்மோட்டையில் மேலரும்பியும் நிலத்தடியிலும் இருக்கும் கனிமணல் படுகையோடு புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டவையும் சேர்க்கப்பட்டால் பல இலட்சம் தொன்களைக் கொண்ட படுகை இப்பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டதை அறியக் கூடியதாகவுள்ளது. அத்துடன் கொக்கிளாயிலிருந்து அரிசாமலை வரையுள்ள பிரதேசம் தவிர்ந்த ஏனைய கரையோரப் பிரதேசங்களிலும் ஏறத்தாழ 57.4 இலட்சம் தொன்களைக் கொண்ட படுகையொன்று இருப்பதனையும் ஆய்வுகள் காட்டுகின்றது. படுகைக் கணிப்புத் துளைகளில் பெரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பான்மையானவை பாரிய கனிப்பொருள் மணல்களின் அடிப்பகுதி நிலநீர்மட்டம் வரை எட்டியுள்ளது எனவே, துளையிடும் கருவித்துணையுடன் 7' க்குச் கீழும் அடிநில நீர்மட்ட ஆழத்திற்குக் கீழும் கனிவ ளம் படுகை ஆய்வு செய்யப்படும்போது மேற்குறிப்பிட்ட அளவைவிடக் கூடுதலான அளவு கனிமணல் படுகை இருப்பதனை அவதானிக்கக் கூடியதாக இருக்கும் என 1979 ம் ஆண்டு கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபன ஆண்டு அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

1981 ம் ஆண்டு கைத் தொழில் அபி விருத்திச் சபையின் அறிக்கையின்படி திருக்கோவிலும் 2.5 இலட்சம் தொன் அள வான கனிமணல் படுகை இருப்பதும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. எனவே வடகிழக்கு கரையோரமெங்கும் மேலும் ஆய்வுகள் செய்யப்பட்டால் கனிப் பொருள் மணல் பெருமளவில் பெறக்கூடியதாக இருக்கும் என்பதையே வெவ்வேறு காலங்களில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகள் காட்டுகின்றன. இதனால்தான் அவுஸ்திரேலியா, யப்பான், கொறியா போன்ற நாடுகள் இக்கனிமணல் படுகைகளில் முதலீடு செய்ய ஆர்வமாயும் ஆயத்தமாகவுமுள்ளன இந்நாடுகள் இப் பகுதிகளில் அரசியல் உறுதிநிலை ஏற்பட்ட பின்னர் தமது முதலீடுகளை மேற்கொள்ள சந்தர்ப்பம் கிட்டும் என எதிர்பார்த்திருக் கின்றன இதேவேளை இலங்கை அரசோ ஜேர்மனி, நெதர்லாந்து போன்றவற்றின் உதவியுடன் ஆய்வுகளையும், உற்பத்தியை யும் மேற்கொண்டு அவுஸ்திரேலியா, யப் பான் போன்ற நாடுகளிற்கு கனிமணலிருந்து பெறப்பட்ட இல்மனைற்றையும், உருத்த லைற்ரையும், சேர்கோனையும் ஏற்றுமதி செய்து அதிக அன்னியச் செலவாணியை பெற்றுவருகின்றது. 1974ம் ஆண்டு 85, 627000மெற்றிக்தொன் இல்மனைற்றையும். 2335000 மெற்றிக்தொன் உருத்தலைற்றை யும் 30000 மெ. தொன் சேர்கோனையும் ஏற்றுமதி செய்து பெருமளவு அன்னியச் செலாவணியை பெற்றது. 1982ம் ஆண்டில் 48895000 மெற்றிக்தொன் இல்மனைற் றையும் 15301000 மெற்றிக்தொன் உருத் தலைற்றையும் 9209000 மெற்றிக்தொன் சேர்கோனையும் ஏற்றுமதி செய்து பல கோடி ரூபாவை அன்னியச்செலாவணியாக உழைத்தது.

மேற்குறிப்பிட்ட கனிமணல்களிலிருந்து குறிப்பாக இல்மனைற் உருத்தலைற் என்ற இரண்டையும் சில செய்முறைக்குட் படுத்தும் போது ரைற்ரேனியப் ஒக்சைட் என்ற இரசாயனம் பெறப்படுகிறது. இது வெள்ளை நிறமாக இருப்பதால் இதனைப் பயன் படுத்தக்கூடிய பல்வேறு கைத் தொழில்களை ஆரம்பிக்கமுடிகிறது. குறிப் பாக நிறங்களை உற்பத்தி செய்தல் (**Paint**) வர்ணீற் (**Varnishes**) லக்குவேர் (**Lacquers**) போன்றவற்றை உற்பத்தி செய்ய முடிகின் றது அத்துடன் பிளாஸ்ரிக் உற்பத்திக்கும் கடதாசி உற்பத்திக்குமான வடிகட்டிகள் (**Fitter**) உற்பத்தி செய்யவும் பயன்படும்.

இல்மனையிற்றிலிருந்து பெறப்படும் இரும்பு— உருக்குக் கைத்தொழில்களில் பயன்படுத்தப்படுவதோடு, விரைவான வேக சுழற்சியில் உடைந்து போகாததும், விரை வில் தேய்வுக்கு உட்படாததும், விரைவான வேகத்தினால் ஏற்படும் உஷ்ணத்தில் வளைந்தோ, எரிந்தோ போகமுடியாது உருக்கைச் செய்யக்கூடியதாக இருப்பதால் இதனைப் பெறுவதற்கு கைத்தொழிலில் முன்னிலையில் இருக்கும் யப்பானும் அவுஸ் திரேலியா போன்ற நாடுகளும் போட்டி போடுகின்றன. அத்துடன் விமானச் சிறகு களையும் அதன் காற்றாடிகளையும் செய் வதற்குப் பயன்படக் கூடியதாக இருப் பதால் அதிக அன்னிய செலாவணியைப் பெறக்கூடிய வாய்ப்பு இருப்பதோடு எதிர் காலத்தில் எமது பொருளாதார அபிவிருத் திக்கும் கைத்தொழில் மயமாக்கத்திற்கும் உதவக்கூடிய முக்கிய கனிவளமாகவும் இருக் கின்றது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

உருத்தலைற் என்ற இரசாயனத்தில் சிவப்பு மண்ணிற தன்மையிருப்பதால் ரைற் ரேனிய ஒக்சைட்டில் (**Titanium oxides**)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிதளவு இரும்புத்தாது உள்ளது. இவ் இரும்புத்தாது மட்பாண்டங்களை உற்பத்தி செய்வதற்கு அவசியமானதாகவுமுள்ளது. அத்துடன் இரும்பு ஒட்டும் உலோகக் குச்சிகளைச் செய்வதற்கும் (welding rods) மற்றும் இலேசான உலோகச் செய்கைகளிற்கும் உதவக் கூடியதாகவுமுள்ளது.

மேலும் கனிமணல் படிவுகளிலிருந்து பெறப்படும் மொனோசிற் (manozite) கைத்தொழில் சேர்கோன் போன்றவற்றைப்பயன்படுத்தி காஸ்மான்ரில் (gas montles) பவுண்டறி சாண்ட் (Foundry sands) அரத்தாள் (sand paper) மட்பாண்டம் போன்றவை உற்பத்தி செய்யக் கூடியதாகவுள்ளது.

இல்மனைற்றும் ஏனைய தாதுப் பொருள் இரசாயனப் பொருட்களும் அடிப் படைக் கைத்தொழிலுக்கு அவசியமானதாக இருப்பதால், கைத்தொழில் அபிவிருத்திக்கான கனிவளத்தை கொண்ட பிரதேசமாக வடக்கு கிழக்குப் பிரதேசமிருக்கிறது. இதனைச் சுரண்டுவதற்காக இந்தியாவும் இலங்கை அரசும் அரசியல் காரணங்களை முன்னிறுத்தி அப்பகுதியை ஆக்கிரமித்து பல்வேறு குடியேற்றத் திட்டங்களை புதிது புதிதாக மிகக்குறுகிய காலத்தில் நிர்மாணித்து வருவதோடு, அப்பகுதியை அன்னியர் முதலீடு செய்யும் சுதந்திர வர்த்தக வலயமாகவும் மாற்றத்திட்டமிட்டு உள்ளன. இதனால் அப்பகுதிக்குரிய மக்கள் தாம் பெறவேண்டிய வாய்ப்புக்களையும் வளங்களையும் இழந்துவிடும் நிலையும் உருவாகி வருகிறது. இன்றைய அரசியல் சூழ்நிலைகளில் இப்பகுதி மக்கள் தம் இருப்பிடங்களை விட்டு இடம் பெயர்ந்ததையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

### செம்பு

வடகிழக்குப் பிரதேசத்தில் செம்புப்படிவும் உள்ளதென்பதற்கான சான்றுகளும் உண்டு. திருகோணமலைக்கருகில் சீனக்குடாவில் துளைகருவி கொண்டு ஆராய்ந்த போது 100 மீற்றர் ஆழத்தில் 4 மில்லியன் தொன் அளவான செம்புப்படிவு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனை நிலத்தியிலிருந்து மேலே எடுப்பதற்கான செலவு அதிகம் எனக்கருதியதால் அரசு அதனை எடுக்க இன்னும் முன்வரவில்லை. இத்தாதுப்படிவு இப்பிரதேச கைத்தொழில் மயமாக்கத்திற்கான முக்கிய படிவாகவும் கொள்ளலாம். இந்த ஆய்வு மேலும் விஸ்தரிக்கப்பட்டால் வேறும் பலபகுதிகளில் இத்தாதுப்படிவு இருக்கலாம்.

### கடல்நீர் இரசாயனப் பொருட்கள்

வடகிழக்குப் பிரதேசத்தின் குடாக் கடல்களின் கடல்நீர் உப்பை உற்பத்தி செய்வதற்கும் மற்றும் எரிசோடா caustic Soda) குளோறீன் (Chlorine) சோடியம் காபனேற், சுத்தமாக்கும் சோடா (Washing soda) ஐதரோக்குளோரிக் அமிலம் (Hydro chloric acid) பொட்டாசியம் குளோரைட் (Potassium Chloride) சோடாச்சாம்பல் (Soda ash) கிப்சம் (Gypsum) மக்னீசியா (Magnesia) புறோமீன் (Bromine) போன்றவற்றை உற்பத்திசெய்யக் கூடிய வாய்ப்பும் வசதியும் உண்டு பரந்தன் இரசாயனக் கைத்தொழிற்சாலையில் மேற்குறிப்பிட்டவை எல்லாம் உற்பத்தி செய்யப்பட்டன. ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு, கல்லுண்டாய் போன்ற இடங்களில் விளைவிக்கப்படும் உப்பை அடிப்படையாகக் கொண்டு பரந்தன் இரசாயனக் கைத்தொழிற்சாலையில் இலங்கை முழுவதற்கும் தேவையான இரசாயனப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இங்கு உற்பத்தி செய்யப்பட்டவை பற்றாக்குறையாக இருந்த வேளையில் மாத்திரம் இறக்குமதி செய்யப்பட்டது. இக்கைத்தொழிலால் பலகோடி ரூபா அன்னியச் செலாவணி மீதப்படுத்தப்பட்டதோடு பல்வேறு கைத்தொழில்களுக்குத் தேவையான இரசாயன மூலப்பொருட்களை உற்பத்தி செய்து வழங்கக்கூடிய இயலளவு டையதாகவுமிருந்தது. கடல்நீர் கனிமணல்களை குறைந்த செலவில் பெறக்கூடிய வாய்ப்பும் வசதியும் வடக்கிலேயே இருக்கின்றதென்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையின் உற்பத்திகளில் முக்கியமானதொன்றாக விளங்கும் எரிசோடா சவர்க்கார உற்பத்திக்கும் புடவைத் தொழிலுக்கும் அவசியமானதொன்றாக இருக்கிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் எரிசோடாவில் சவர்க்கார உற்பத்தியாளர்கள் 63 வீதத்தையும் புடவை உற்பத்தியாளர்கள் 12 வீதத்தையும் ஏனைய கைத்தொழில் தேவைக்காக 25 வீதமும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. சவர்க்கார உற்பத்திக்கு எரிசோடா முக்கியமானதாக இருப்பதால் இலங்கையின் சவர்க்கார உற்பத்தியாளர்கள் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையிலேயே பெரிதும் தங்கி இருந்தனர். இத்தொழிற்சாலையின் உற்பத்தி தடைப்பட்டதோடு சவர்க்கார உற்பத்தியாளர்கள் அதிக விலை கொடுத்து எரிசோடாவை இறக்குமதி செய்கின்றனர். இத்தொழிற்சாலை உற்பத்தியை மேற்கொண்ட காலங்களில் ஆண்டொன்றுக்கு சராசரியாக 1700 மெற்றிக் தொன் எரிசோடாவை உற்பத்தி செய்துள்ளது என்பதைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

இங்கு வருடம் ஒன்றிற்கு சராசரியாக 1000 மெற்றிக் தொன் குளோறீன் உற்பத்தி செய்யப்படுகிறது. இவ்வுற்பத்தியில் 74 வீதம் கடதாசிக் கைத்தொழிலுக்காகவும் 21 வீதம் தண்ணீர் சுத்திகரிக்கவும் 1.8 வீதம் புடவைக் கைத் தொழிலுக்கும் 0.9 வீதம் நீச்சல் தடாக நீர் சுத்திகரிப்பிற்கும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக வாழைச்சேனை எம்பிலிப்பிட்டிய கடதாசி ஆலைகள் பரந்தனில் விளைவிக்கப்பட்ட குளோறினிலேயே பெருமளவில் தங்கியிருந்தது.

பரந்தன் இரசாயனத் தொழிற் சாலையில் வருடம் ஒன்றிற்கு சராசரியாக 500 மெற்றிக் தொன் மேசை உப்பு (Table salt) உற்பத்தி செய்யப்பட்டது. இது பிஸ்கற் உற்பத்திக்கும், குளிர்பான உற்பத்திக்கும், எண்ணெய் உற்பத்திக்கும் மார்ஜரீன் உற்பத்திக்கும் மற்றும் வீட்டுப்பாவனைக்குமாக விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இங்கு வருடம் ஒன்றிற்கு சராசரியாக 900 மெற்றிக் தொன் ஐதரோக் குளோறிக் அமிலம் உற்பத்தி செய்யப்பட்டது. இரும்பைச் சுத்திகரிப்பதற்கும் நாகம் பூசுவதற்கும் இது பயன்படுத்தப்படுகிறது. பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை இதை உற்பத்தி செய்வதற்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட சல்பூரிக் அமிலமே மேற்குறிப்பிட்ட தேவைக்கு பயன்படுத்தப்பட்டது. பின்னர் இறக்குமதி நிறுத்தப்பட்டு இத்தொழிற்சாலையின் உற்பத்தியிலேயே ஏனைய கைத்தொழில் நிறுவனங்கள் தங்கியிருந்தன. குறிப்பாக உருக்குக் கூட்டுத்தாபனம், யூனியன் கார்பைட்,லிவர்பிரதேஸ் போன்ற பெரிய நிறுவனங்கள் ஐதரோக் குளோரிக் அமிலத்தை அதிகளவில் கொள்வனவு செய்தன. பரந்தன் இரசாயனக் கைத்தொழில் இலங்கையின் கைத் தொழிலுக்குத் தேவையான அடிப்படை இரசாயன மூல பொருட்களை வழங்கி வந்ததோடு அதிகளவான அன்னியச் செலாவணியையும் மீதப்படுத்தித் தந்துள்ளது. இரசாயன மூலப் பொருள் உற்பத்தி செய்யக்கூடிய வாய்ப்பும் வசதியும் இருப்பதால் எதிர் காலத்தில் கைத்தொழில் துறை இப்பிரதேசத்தில் அபிவிருத்தி அடைவதற்கும் வாய்ப்புண்டு என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**சுண்ணக்கல்**

உலோகமல்லாத கனி வளங்களில் மிக முக்கியமானதும் அதிகளவில் கிடைக்கக் கூடியதுமான சுண்ணக்கல்படிவு யாழ்ப்பாண தீபகற்பத்திலும் மன்னார் முழங்காவில் போன்ற பகுதிகளிலும் காணப்படுகிறது இது வெளியரும்பியும் 4' - 7' ஆழத்திலும் இருப்பதால் இதனை எடுப்பதற்கான செலவு மிகக்குறைவானதே. இம் மூலப் பொருளைப் பயன்படுத்தி சீமெந்தும் மற்றும் உரம் மண்பாண்டம் அஸ்பெஸ்டஸ்சும் உற்பத்தி செய்யப்படுகின்றது. அத்துடன் வீதி அமைப்பிற்கான உள்ளீடாகவும் வீடு கட்டும் அடிப்படைப் பொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1950 பதுகளில் ஆரம்பிக்கப்பட்ட காங்கேசன்சீமெந்துக் கூட்டுத்தாபனம் ஒரு வருடத்தில் 270 000 மெற்றிக்தொன் சீமெந்தை உற்பத்திசெய்யும் இயலளவையுடையது. இங்கு அமைக்கப்பட்ட லங்கா சீமென்ற் என்ற கைத்தொழில் பகுதி மணித்தியாலத்தில் 4000 பாக் சீமெந்தை உற்பத்தி செய்யும் இயலளவையுடையது. 1980 பதுகளில்ஆரம்பிக்கப்பட்டலங்காசிமென்ற் ஆலை தென்கிழக்காசியாவிலேயே அதிநவீன இயந்திர உபகரணங்களால் நிர்மாணிக்கப்பட்ட ஆலையாகும். இவ்விருதொழிற்சாலைகளின் உற்பத்தி இயலளவும் எமது தேவைக்கு மேலாக உற்பத்தி செய்யும் இயலளவைக் கொண்டதாக இருப்பதால் மேலதிகமாக உற்பத்தி செய்யப்பட்டவை ஏற்றுமதி செய்யப்பட்டு பெருமளவான அன்னியச் செலாவணியை உழைக்கும் வாய்ப்பு உண்டு. இத்தொழிற்சாலை அமைந்த பிரதேசத்திற் கண்மையில் சுண்ணக்கல் பெருமளவில் தோண்டி எடுக்கப்படுவதால் சூழல் மாசுபடும் ஆபத்து உண்டு. இத்தொழிற்சாலையின் மிகை உற்பத்தியும் மிகை வருமானமும் இப்பகுதியின் அபிவிருத்திக்கே பயன்படுத்த வேண்டிய அவசியமும் உண்டு. இது புறக்கணிக்கப்பட்டால் இக் கைத்தொழிற்சாலையால் பொருளாதார ரீதியாக ஏற்படும் இலாபத்தை விட சமூக ரீதியாக ஏற்படும் செலவு அதிகமானதாகவே இருக்கும். எனவே சமூகநலன் நோக்கில் இத்தொழிற்சாலையின் உற்பத்தி திட்டமிடப்படவேண்டும். இத் தொழிற்சாலை மேற் குறிப்பிட்ட இயலளவுடையதாக இருந்தபோதும் இதற்குத் தேவையான சுண்ணக்கல்லை பல ஆண்டுகள் பெறக்கூடிய அளவிற்கு சுண்ணக்கல்படிவு உள்ளது. வடபகுதியில் முக்கிய கனிவளப்படிவு சுண்ணக்கல் என்றால் அது மிகையாகாது.

சீமெந்துக் கைத்தொழில் மற்றைய கைத்தொழில்களுக்கு மூலப்பொருளை வழங்கும் கைத்தொழிலாகவுமுள்ளது. அத்துடன் ஒருநாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் கட்டிட நிர்மாணம் வீதி அமைத்தல், பாலம் அமைத்தல், குளம்கட்டுதல் போக்குவரத்துக்குத் தேவையான பொருளாதாரக் கட்டுமானங்களை நிர்மாணித்தல் போன்றவற்றிற்கு மிகவும் அடிப்படையான மூலப்பொருளாக இருக்கின்றது. எனவே இப்பகுதியில் பொருளாதார சுபீட்சம் இத்தொழிற்சாலையிலேயே தங்கியுள்ளது.

### களிமண்படிவு

ஓடு, செங்கல் உற்பத்திக்கான களிமண்படிவு ஒட்டிசுட்டானில் உள்ளது இது இப்பகுதிஓடு, செங்கல் தேவைக்குப் போதுமான அளவு இருக்கவில்லை. ஆனால் 30 — 50 வீதமான தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய செங்களிமண்படிவு உள்ளதாகக் கருதப்படுகிறது. ஒட்டிசுட்டான் ஓடு, செங்கல் தொழிற்சாலை விரிவுபடுத்தப்பட்டால் குறிப்பிட்டளவு தேவையை நிறைவு செய்யலாம்.

சீமெந்து உற்பத்திக்குத் தேவையான களிமண் முருங்கன் பகுதியில் உண்டு. காங்கேசன் சீமெந்து உற்பத்திக்கு இங்கிருந்தே களிமண் பெறப்படுகிறது. சீமெந்து உற்பத்தி மூலப் பொருளில் 5 வீதமாக இது இருக்கிறது. சீமெந்து உற்பத்தியின் நீண்டகால தேவையை பூர்த்தி செய்யக் கூடியளவுக்கு இப்படிவு உள்ளது.

### கண்ணாடி மணல்

கண்ணாடி சூரிய சக்தி செய்யக் கூடிய மணல் (சிலிக்காமணல்) பருத்தித்துறை தொடக்கம் தாளையடி வரையிலான கடற்கரையோரப்பகுதியில் பெருமளவில்காணப்படுகிறது. கடற்கரையோரத்திலிருந்து ½ மைல் தொடக்கம் 2 மைல் வரையிலான பகுதியில் மண் மேடுகளாகவும் தரையாகவும் இது பரந்து காணப்படுகிறது. இம் மணல் இதுவரை கண்ணாடி உற்பத்திக்காக பயன்படுத்தப்படாமலே உள்ளது. (வீடுகட்டும் தேவைக்குப் பயன்படுத்தப்படுவதுண்டு) சிறந்த தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி ஏற்றுமதி செய்யக்கூடிய நல்ல கண்ணாடி உற்பத்தி செய்ய வாய்ப்பு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறிப்பிட்டவை தவிர்ந்த இன்றுவரை ஆய்வுகளினால் ஆதாரப்படுத்தப்படாத கனிமப்படிவுகள் இருக்கலாம் ஆய்வாளர்கள் இதனைக் கண்டுபிடித்து பொருளாதார அபிவிருத்திக்கு உதவுதல் வேண்டும். அத்துடன் மன்னார் பகுதியில் பெற்றோலியப் படிவு இருப்பதாக பலநாடுகளின் உதவியுடன் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது முண்டு. இன்று அவ்வாய்வு இந்தியாவின் உதவியுடன் மேற்கொள்ளப்படுவதற்கான ஆயத்தங்களும் நடைபெறுகிறது. நவீன விஞ்ஞானக் கருவிகளைக் கொண்டு ஆராய்ந்து பெற்றோலியம் இருப்பதாக கண்டறியப்படுமானால் வடக்கின் வளம் கிழக்கின்வளம் எதிர்காலத்தில் சுபீட்சத்தை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. □

**உசாத்துணை நூல்கள்**

1. **The National Atlas of Sri Lanka**
   Survey Department 1988.

2. **Mineral Resources of Sri Lanka**
   On information Survey Industrial Development Board 1985.

3. இலங்கை கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபன
   ஆண்டறிக்கை *1971 — 1980.*

4. சீமெந்துக் கூட்டுத்தாபன ஆண்டறிக்கை.

5. பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஆண்டறிக்கை.

### புலவர் என்பவர்...

புலவர் என்பது அறிஞர் எனப் பொருள்படும். புலம் — அறிவு. அர் ஒரு விகுதி ... புலவராவார் இயல், இசை, நாடகம் என்னும் மூன்று தமிழும் முறையே பயின்று ஐந்திலக்கண நெறிகளுந் தழுவிக் கடுங்கவி, இன்பகவி, அருங்கவி, பெருங்கவி என்னும் நால்வகைக் கவிகளையும் பாடும் வலியமைந்த அறிஞர் என நிகண்டு நூலார் கூறுவர். கடுங்கவி— ஆசுகவி. அருங்கவி — சித்திரகவி, புலவரும் கவி, கமகன், வாதி, வாக்கி என நால்வகைப்படுவர். கவியாவான் கடுங்கவி முதலிய நால்வகைக் கவிகளையும் பாடுந் தொழில் வல்ல புலவன். கவி — பண்டிதன். கமகனாவான் பலகலையுணர்ச்சியானும் மதிநலவலியானும் கற்றுணராத நூற்பொருள்களையும் கற்றுணர்ந்தவன் போலக் கற்றுணர்ந்தோர் வியக்குமாறு போதிக்கும் புலவன். கமகன்—போதிப்பவன். வாதியாவான் ஏதுவும் மேற்கோளும் எடுத்துக் காட்டிப் பல மதங்களை மறுத்துச் சுவமதம் ஒன்றையே நிறுத்தி வாதிக்கும் புலவன். வாதி வாதஞ் செய்பவன். வாக்கியவான் அறம், பொருள் முதலிய புருடார்த்தங்கள் நான்கையுந் திறம்பட விரித்துரைக்கும் புலவன். வாக்கி — வாக்கில் வல்லவன்.

அ. குமாரசாமிப் புலவர்,
— தமிழ்ப் புலவர் சரித்திரம். *1916*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைக்கான அரங்கு

க. சிதம்பரநாதன்

மக்களை ஒரு முழு நிறைவு கொண்ட திரளாக எழுச்சி கொள்ள வைக்கின்ற நடைமுறையில் 'கலாசார எழுச்சிகொள் ளல்' ஓர் மிக முக்கியமான கட்டமாகும். மக்கள் தாமே, தமது சொந்தவிதி மீது ஓர் ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டைச் செலுத்துகின்ற அளவிற்கு அவர்களது மனங்களைத் தூண்டா மல் விடுவோமாயின், அவர்களை ஒரு முழுத்திரளாக எழுச்சி கொள்ள வைக்க முடியாமல் போய் விடும். ஓர் நீண்ட காலனித் துவ பாரம்பரியத்துள், அடிமைத்தனத்தை ஏற்றுப் பழக்கப் பட்ட ஓர் வாழ்வு வாழ்ந்து வருகிற பொதுமக்கள் மத்தியில் இத்தகைய கலாசாரவேலை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தாகும். உண்மையில் ஒரு மக்கள் போராட்டத்தில் கலாசார வேலை என்பது ஓர் முக்கிய பங்கு வகிக்க முடியும்.

பயந்து பயந்தே பழக்கப்பட்டுப்போய் விட்ட எதற்கும் மற்றவர்களிடம் கையேந்தியே பழக்கப்பட்டுப் போய்விட்ட ஓர் பாரம்பரியத்தின் வழிவழி வந்த எமது சமூகம் உண்மை யில் தமது வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை இழந்து நிற்கிறது. எமது சமூகம் ஓர் பயங்கரமான அதிகார அடுக்கைக் கொண் டுள்ள ஒரு சமூகம். அந்த அதிகார அடுக்கின் அடிமட்டத்தில் உறைகின்ற பரந்துபட்ட மக்கள் எல்லோருக்குமே அஞ்சுகிறார் கள். வாய் திறந்து கதைக்கவே அஞ்சுகிறார்கள். தான் கதைப் பது சரியா? தான் கதைக்கின்ற விடயத்திற்கு மற்றவர்களிட மிருந்து அங்கீகாரம் கிடைக்குமா? தான் கதைப்பதால் தனது நலன்கள் பாதிக்கப்பட்டுவிடுமா? என்றெல்லாம் அஞ்சி, கதைக் காமலே விட்டு விடுகிறார்கள். ஓர் கிராமப் புறத்தில், நாம் நடத்திய நாடகக் களப் பயிற்சியில் கலந்து கொண்ட ஓர் இளம் பெண் கூறினாள் "எனக்குக் கதைக்க விருப்பமாயிருக்கிறது. ஆனால் என்னால் கதைக்க முடியாமலிருக்கிறது" இது தான்பிரச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினை உண்மையில் ஓர்வாயில்லாத பூச்சியாக அவள் வாழ்கிறாள். தன்னைப் பாதிக்கின்றஎந்தப் பிரச்சினை பற்றியும் அவளால் வாய்திறக்க முடிவதில்லை. தன்னை வெளிப்படுத்த அவளால் முடியாமலிருக்கிறது. இது ஒரு பாரிய உள் ஒடுக்கு முறையாகும். (Internal Oppression) இராணுவ ஒடுக்குமுறை, பொருளாதார ஒடுக்குமுறை என்பன வெளி ஒடுக்கு முறைகளாகும். (External Oppressions) இந்த உள்ஒடுக்கு முறையிலிருந்து அவளை விடுவிக்கின்ற போது தான் அவள் ஒரு மனிதனாக எழுந்து தனது ஏனைய வெளி ஒடுக்கு முறைகளிலிருந்து விடுதலையடையப் போரிடுவாள். இத்தகைய ஒரு விடுதலையை அவளுக்குக் கொடுக்கக் கூடிய கலாசார வேலை பாரிய அளவில் முன்னெடுக்கப் பட வேண்டும். இத்தகைய கலாசார வேலையில் அரங்கு ஒரு முக்கிய பங்கை வகிக்க முடியும். இத்தகைய அரங்கை மனித உயிர்ப்புக்கான அரங்கு என்றோ, விடுதலைக்கானஅரங்கு என்றோ நாம் அழைத்துக் கொள்ளலாம். விடுதலைக்கான அரங்கு நாம் மேற்கூறிய பெண்ணை அவளது சமூக நிர்ப்பந்தங்களிலிருந்து சற்றே விடுவித்து அவள் சுதந்திரமாகப் பேசவும், பாடவும், ஆடவும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கும்.

விடுதலைக்கான அரங்கு ஒரு புது வகையான நடிகரைக் கோரி நிற்கிறது. இந்த நடிகர் தனது பார்வையாளர்களாக உள்ள ஒடுக்கப்பட்ட மக்களில் உள்ளுறைந்துள்ள படைப்பாற்றல் தன்மையை தூண்டி விடக் கூடியவராக இருக்க வேண்டும். இத்தகைய நடிகர், இன்று எமக்குப் பரிச்சியமாகவுள்ள நடிகரிலிருந்து முற்றிலும் மாறுபட்டவரே. இன்று எமக்குப் பரிச்சியமாகவுள்ள நடிகர். பார்வையாளரை மேலிருந்து கீழ் பார்க்கும் (top-down) மனப்பாங்கையேகொண்டுள்ளார். இவரின் நடிப்பு முறை பார்வையாளரைச் சிந்திக்க வைக்காமல், அவர்களை வெறுமனே உணர்ச்சி வசப்படுத்துவதாகவே அமைந்துவிடுகிறது. இப்படிக் கூறுவதன் மூலம், நாம் கலை அனுபவத்தில் ஏற்படுகின்ற உணர்ச்சி அம்சத்தை முற்றாக நிராகரிக்கிறோம் என்பது அர்த்தமல்ல. உணர்ச்சி வசப்படுத்தலையே நாம் நிராகரிக்கிறோம். நாம் கோருகின்ற அரங்கு பார்வையாளர்களை உணர்ச்சி வசப்படுத்தாமல், அவர்களில் உள்ளுறைந்துள்ள படைப் பாற்றலைத் தூண்டி அவர்களைச் செயல்புரியும் மனோ நிலைக்கு உயர்த்தும் இந்த அரங்கிலே பார்வையாளர்கள் வெறுமனே பார்ப்போர்களாக மட்டும் இருப்பதில்லை. அவர்கள் அரங்கின் இணை தயாரிப்பாளர்களாகவே (Co- producers) ஆகிவிடுகின்றனர். அவர்கள் வெறுமனே செயலற்ற நிலையில் (Passive) நாடகத்தைப் பார்த்துக் கொண்டிராமல்செயலூக்கமான நிலையில் (active) அரங்க நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருப்பர். இப்படியான அரங்க நிகழ்ச்சிகள் ஒடுக்கப்பட்ட மக்களின் வெளிப்பாட்டு ஆற்றலை அதிகரித்து விடுகிறது. இந்த அரங்கு ஒடுக்கப்பட்ட மக்களுக்கான அரங்காக இருக்கும். இத்தகைய அரங்க நடைமுறை விடுதலைக்கான கலாசார செயற்பாட்டில் (Cultural action for freedom) ஒரு பிரயோசனமானதும், பெறுமதியானதுமான ஓர் முறையாக இருக்கும். ●

**"பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க" எனப் பெரியோர் புதுமணத் தம்பதியரை வாழ்த்தும்போது பெற வேண்டிய பேறுகள் எனக் கருதுபவை**

| | | | |
|---|---|---|---|
| (1) புகழ் | (2) கல்வி | (3) ஆற்றல் | (4) வெற்றி |
| (5) நன்மக்கள் | (6) பொன் | (7) நெல் | (8) நல்லூழ் |
| (9) நுகர்ச்சி | (10) அறிவு | (11) அழகு | (12) பெருமை |
| (13) இளமை | (14) துணிவு | (15) நோயின்மை | (16) ஆயுட்காலம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" முத்தமிழ் "விழா
எங்கள் மண்ணில்
புகழ் பரப்பும்

எண்ணற்ற
வகைகளில்
இணையற்ற
வர்ணங்களில்
புடைவைகள்
வாங்க

மறுமலர்ச்சிக் கழகம்
பதிவு இல. 004
யாழ். ப ... கழகம்

இளவரசி ரெக்ஸ்ரைல்ஸ்

57, நவீன சந்தை,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

[F-53]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துகின்றோம்!

" முத்தமிழ்விழாவை "

வாழ்த்துவோர்

○ அழகுக்கு அழகு செய்யும்

○ அற்புதமான புடைவை

○ விற்பனை நிலையமான :-

**ரஞ்சனாஸ்**

17, 18, 18 A, நவீன சந்தை,

யாழ்ப்பாணம்.

[F-54]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுச்சி
விழாவாம்
"முத்தமிழ் விழா"
புகழ்
பரவுக!

# இரட்ணம் பார்மஸி
அன்
குறோசரி

388, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

[F-55]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

□ தெள்ளூற்ற தமிழமுதின்
சுவை கண்டார்
இங்கமரர்
சிறப்புக் கண்டார்!

□ முத்தமிழ் விழாவுக்கு
எங்கள் வாழ்த்து!

□ **வினாயகர் ஸ்ரோர்ஸ்**
166, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

[F-56]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்"


முத்தமிழ் விழாவை வாழ்த்துவோர்:

**அன்னராஜா ஸ்ரோர்ஸ்**

**158, மருத்துவமனை வீதி,**

**யாழ்ப்பாணம்.**

(F/57)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

" முத்தமிழ் விழா
சிறக்கட்டும் "

# யோகு ரேடிங் கோ

332, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

[F-58]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் உயிராம் தமிழுக்கு
நடக்கும் "முத்தமிழ் விழா" வினை
வாழ்த்துகின்றோம்.

---

**கே. கே. ஏ. கந்தையாபிள்ளை**

122, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

[F/59]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

□ தமிழ் வாழ்க! 'முத்தமிழ் விழா' வளர்க! □


கு. சிவப்பிரகாசம் அன் சன்ஸ்

312, மருத்துவமனை வீதி,

யாழ்ப்பாணம்.


[F-60]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "புரிதல்"

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்

வானம் சுதந்திரமாக இருந்தது. வெளிர் நீல நிறத்தில் அதன் அழகு பிரமிப்பைத் தந்தது. எப்படி இருந்தும் என்ன பிரயோசனம்?

வானம் மாத்திரம் சுதந்திரமாகவும் அழகாகவும் இருந்தால் மட்டும் போதுமா? என்ற நினைப்பும் அவனுள் எழுந்தது.

தலைக்கு மேலே மாமரத்தின் கிளைகளில் பசுமை பிரகாசித்தது. ஒன்றையொன்று கலைத்து வந்த இரண்டு அணில்கள் ஒரு செக்கன் நின்று அவனை வினோதயாகப் பார்த்து விட்டு மீண்டும் பாய்ந்தன.

நல்ல காலம், சுலோசனா காணவில்லை என அவன் நினைத்தான். அவள் கண்டிருந்தால் -

''பார்த்தீங்களோ! இந்த அணில்களும் உங்கடையாக்கள் மாதிரி என்னை விநோதமாய்ப் பார்க்குதுகள்'' என்று தான் சொல்லுவாள்.

அவள் சுபாவமே இப்படித்தான். எதையும் சமாளித்து அனுசரித்துப் போகும் பழக்கம் மிகவும் கஷ்டமான காரியம்.

☐ சிறுகதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் மீண்டும் இயற்கையுடன் ஒன்றிப் போயிற்று. பெரிய வளவில் நெருக்கமான மரங்கள், மா, பலா, அத்தனையும் இருந்தன. ஒரு புறத்தில் வாழையும் கூட வேண்டாம், வேண்டாம் என்று பூஞ்செடிகளும் தான்.

தண்ணீர் இல்லாமல் எல்லாமே சோர்ந்து போய், அகதிகளாய் இருக்கும் நம்மவர்கள் போல இருந்தன.

பார்வை அப்பால் வளைந்து போயிற்று, மதிலைத் தாண்டி தூரத்தில் தெரிந்த பனை மரங்களை கண்கள் கவ்விக் கொண்டன. அதன் கம்பீரமும் உயரமும் மனத்துக்கு இதத்தைக் கொடுத்தது.

எங்கள் வாழ்க்கையின் குறியீடாகத் தான் இந்த மண்ணில் பனை இருக்கிறது என அவன் நினைத்தான். என்ன கஷ்டம் வந்தாலும் அதன் தோற்றத்தில் என்ன தளர்ச்சி வந்து விடப் போகிறது?

பொருளாதாரத் தடை வந்து மண்ணெண்ணையைக் காண்பதே கஷ்டமாகி - நீர் இறைப்புகளும் கனவாகி, பசுமையான பயிர்கள்எல்லாம் காய்ச்சல்காரர்கள் மாதிரி ஆனபின்னரும் கூட பனை மரங்கள் என்ன மாதிரி உறுதியாக நிற்கின்றன.

பனைகளைப் பார்க்க அவனுக்கு பெருமிதமும் சந்தோஷமாகவும் இருந்தது. ஆனால் எத்தனை பேர் இதனை உணர்ந்து கொள்கின்றார்கள்.

வேலைக்குப் போகும் நேரங்களைத் தவிர சாய்மனைக் கதிரையைக் கொண்டு வந்து இந்த மாமரத்தின் கீழ் போட்டு அவன் இயற்கையோடு ஒன்றிவிடுவது வழக்கமாகி விட்டது.

வீட்டினுள் இருப்பது, அவனுக்கு சங்கடமான விடயம். என்னதான் இருந்தாலும் இருப்பது அன்னிய வீடு. எதைச் செய்வதாக இருந்தாலும் கேட்டுத்தான் செய்ய வேண்டும். வீட்டுக்காரர்களின் முகம் என்ன விதத்தில் மாறுகின்றது என்று பார்த்துப் பார்த்து,...

வாடகை வீடு எடுத்துக் கொண்டு போகலாம் என்றாலும் சுலோசனாவுக்குச் சம்மதமில்லை. ''அக்கா கோவிப்பா. அத்தான் பேசிக் கடிதம் போடுவார்'' என்றெல்லாம் சொல்லுவாள்.

சுலோசனாவின் அக்காவின்புருஷன்பிள்ளைகள் மூன்று பேரும், அவனும் சுலோசனாவும் இந்த வீட்டில் அகதிகளாக தஞ்சம் புகுந்த மாதிரி சுவிஸில் தஞ்சம் புகுந்து இருந்தார்கள்.

சுலோசனாவின் அக்கா இந்தப்பெரிய வீட்டில் தன்னுடைய மற்றொரு மகளுடனும் சகல வசதிகளுடன் அரசோச்சிக் கொண்டிருந்தாள். வீட்டில் இருக்கும் மகள் கூட விரைவில் வெளிநாட்டு அகதியாக ஆயத்தம்.

சுலோசனாவின் அக்காவின் வசதிகளும் வெளிநாட்டு வருமானமும் தான் சுலோசனாவுக்கு அக்காவின் மீது தீராத அன்பை வளர்த்திருக்க வேண்டும் என அவன் நினைப்பதுண்டு.

அக்காவின் வீட்டில் இருப்பதைப் பெருமையாக சுலோசனா நினைத்தாலும் மின்சாரம் இல்லாததால் தண்ணீர் அள்ளிக் கஷ்டப்படுவதை இரவு நேரத்தில் குப்பி விளக்கில் ரீ. வி.யின் வெறுந்திரையைத் தரிசிக்கும் நேரங்களிலும் அவள் படுகின்ற பாட்டை அவனால் ரசிக்க முடிவதில்லை.

கிணற்றின் உட்சுவரில் வாளி அடிபடும் சத்தம் கேட்டது. தலையைத் திருப்பினான் அவன். சுவரில் வாளி அடிக்கஅடிக்க தண்ணீர் அள்ளுவது சுலோசனாவாகத் தான் இருக்கும்.

கிணற்றடியில் சிவப்பு சோட்டி தெரிந்தது. அவன் எதிர்பார்த்தபடி சுலோசனா தண்ணீர் அள்ளிக் கொண்டிருந்தாள். அவளும் தற்செயலாக அவனைப் பார்த்தாள்.

அவள் பார்வையில் இனிமை மின்னவில்லை. சாடையான கடுமை - அவனைத் திட்டித் தீர்க்கும் கடுமை அதில் பிரதிபலித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'உங்களுக்கு அறிவிருக்கா' என்றும் 'எதைச் சொன்னாலும் உம்மாண்டி மாதிரி இருந்து இருந்து என்ரை பெருமையைச் சோதியுங்கோ' என்றும் அவள் சொல்லுவதும் அவன் நினைவில் உதயமாயின.

அவன் அவளைப் பார்த்துச் சிரித்தான். அவன் சிரிக்கவில்லை. அவள் சிரிக்க மாட்டாள் என்று அவனுக்குத் தெரியும்.

எழுந்து கிணற்றடியை நோக்கி நடந்தான். சுலோசனா ஒரு வாளி தண்ணீரைக் கொண்டு வந்து வாளிக்குள் ஊற்றி விட்டு, மறு வாளிக்காக கிணற்றின் உள்சுவரை இடித்துக் கொண்டிருந்தாள்.

'என்னப்பா' என்றான் கிணற்றின் கட்டில் இருந்தபடி.

'ம்' என்று தான் அவள் பதில் சொன்னாள்.

'ஏனப்பா கோவிக்கிறாய்...'

அவள் பதில் சொல்லாமலே தவித்தாள். துலாக் கயிற்றைப் பிடிச்சுப் பிடிச்சு கையெல்லாம் புண்ணாய்ப் போச்சு' என்றாள் அவள்.

'என்னப்பா செய்யிறது, இந்த நேரத்தில என்ன செய்யலாம். இந்தப் பிரச்சினை எங்களுக்கு மாத்திரமே - ஊரோடை எல்லாரும். ஏன் எல்லாத் தமிழ் சனத்துக்கும் தானே'

'நீங்கள் உங்கடை சித்தாந்தத்தை உங்களோடை வைச்சுக் கொள்ளுங்கோ. என்ரை நெஞ்சு எரியிற எரிவு எனக்குத்தான் தெரியும்.'

'நீ படுகிற கஷ்டம் உனக்கு மாத்திரம் தான் எண்டே நீ நினைக்கிறாயப்பா. எத்தினை லட்சம் சனம் என்னென்ன மாதிரி எல்லாம் கஷ்டப் படுகுதுகள். அதெல்லாம் உனக்குத் தெரியாதே.'

'தெரிஞ்சு என்ன செய்யிறது. என்ரை தலை விதி' என்றாள் சுலோசனா.

தண்ணீர் அள்ளி முடிந்து வாளியை கையை விட அது ஆடுகாலில் போய் படீர் என அடித்தது.

அவனுக்கு பட்டென்று கோபம் வந்தது. 'என்னப்பா நீ வாளியை உப்பிடி அடிபட விட்டால் அது நெளியாதே? இரவல், வீட்டில வந்திருந்து கொண்டு உப்பிடிச் செய்ய அவை என்ன நினைப்பினம்.'

'இது என்ன பிறத்தியார் வீடே அக்கா வின்ரை வீடுதானே. அவ ஒண்டும் பெரி சாய் குறை நினைக்க மாட்டா. நீங்கள் உங்கடை ஆக்கள் மாதிரி என்ரை வீட்டார்களையும் நினைக்காதேங்கோ.'

அவன் சுலோசனாவை நுட்பமாகப் பார்த்தான்.

'உன்ரை ஆட்களின்ரை வீடோ என்ரை ஆட்களின்ரை வீடோ. அதுவல்ல இப்ப பிரச்சினை. இப்ப நாங்கள் இருக்கிறது இரவல் வீடு, அதுவும் தலைக்கு மேலால செல் விழேக்க அகதிகளாய் ஓடி வந்து தஞ்சம் புகுந்திருக்கிறம். அதை மாத்திரம் மறந்து போகாதை'

'அகதி எண்டு சொல்லி இஞ்சை வந்து என்ன சிரட்டையுக்கையே தண்ணி குடிக்கிறீங்கள். நீங்கள் அகதியாய் ஓடி வந்திட்டீங்கள் எண்டு உங்கடையாக்கள் வந்து என்ன வெட்டியே விழுத்தினவை. என்ரை அக்கா இருந்த படியால் தானே வா - சுலோசனா இந்தப் பெரிய வீட்டில இருக்கலாம் எண்டு சொன்னவ' என்றாள் பெருமிதத்துடன்.

அவள் கோபம் தணிந்திருந்தது.

'சுலோசனா நான் உன்னோடை போட்டி போட வரேல்லை. என்ரையாட்கள், உன்ரையாட்கள் எண்டு நானும் உன்னைப் போல பேய்க் கதை கதைக்க விரும்பேல்லை. ஆயிரம் தான் நீ சொன்னாலும் எங்கடை சொந்த வீடு மாதிரி எதுவும் வராது.'

'நீங்கள் ஒவ்வொண்டுக்கும் ஒவ்வொண்டு சொல்லுவியள். நெடுக உப்பிடித்தானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள். கலியாணம் முடிச்சு இவ்வளவு காலமாச்சு. எப்பதான் அக்கா வீடு, தங்கச்சி வீடு என்று விட்டிருக்கிறியள்.' என்னும் போதே அவள் கண்கள் கலங்கின.

O O O

1990ஆம் ஆண்டு தீபாவளி அன்று 'செல்கள்' அவர்கள் இருந்த வீட்டுப் பகுதியை சுகம் விசாரிக்கத் தொடங்கின. கண் முன்னாலேயே எதிர் வீட்டு நடுக்கூரையைப் பிளந்து கொண்டு ஒரு செல் விழுந்தது.

சின்னத்துரைக் கிழவரும் அவரின் பேத்தி பத்மாவும் கொடூரமாக உடல் சிதறி மரணித்தார்கள்.

பெருங் குரலெடுத்து அழுத சுலோசனாவின் அழுகையை நிறுத்த அவன் பெரும் பாடு பட்டான்.

கையில் அகப்பட்ட பொருட்களுடன் அவர்கள் சைக்கிளில் புறப்பட்டார்கள். நல்ல வேளை பிள்ளைகள் இல்லாமல் போனது என்று கூட அப்போது நினைத்தாள்.

வாய்க்கால் வழியால் ஓடும் நீரைப் போல் சனங்கள் சுமைகளுடன் தங்கள் வீடுகளை விட்டும், கிராமங்களை விட்டும் தயக்கத்துடன் இடம் மாறிக் கொண்டிருந்தார்கள்.

தலைவிரி கோலமாக சைக்கிளில் இருந்த சுலோசனாவின் பேச்சுக்களைப் பொறுமையுடன் செவிமடுத்தான் அவன்.

'சும்மா இருக்கேலாமல் அவன்களோடை சுரண்டுகிறது. இப்ப பாருங்கோ நாங்கள் படுகிறபாட்டை.''

'ஐயோ வீடு எப்படி நாசமாய்ப் போகுதோ. ஐயா கஷ்டப்பட்டு உழைச்சு எனக்கு ஆசையாய்க் கட்டித் தந்த வீடு. நான் சின்னப்பிள்ளை தொடக்கம் விளையாடின மாமரம், கிணற்றடி எல்லாத்தையும் விட்டுப்போட்டு எப்பிடி இருக்கப் போறன்' என்று அவள் பலவாறாகச் சொல்லிப் புலம்பினாள்.

புறப்பட்டவுடன் சுலோசனாவின் அக்கா வீட்டுக்குத்தான் முதலில் வந்தார்கள். பிறகு இடைக்கிடை போய் வீட்டுச் சாமான்களைக் கொண்டு வந்து சேர்த்தாலும் அங்குபோய் குடியிருக்க முடியவில்லை. இப்போது கொழும்பில் நம்மவர்கள் சொந்த வீடு வாங்கி வைத்திருப்பது போல அக்கா வீடே பெருமையாகிப் போய் விட்டது சுலோசனாவுக்கு.

வரும் காலங்களில் சுலோசனாவின் அக்காவும் வெளிநாடு போக வீட்டை முழுமையாகப் பொறுப்பேற்க வேண்டிவரும் என்றெல்லாம் சுலோசனா சொல்லிக் கொண்டு இருந்தாள்.

O O

'இப்ப ஏன் அழுகிறாயப்பா. இப்பதான் உன்ரை அக்கா வீட்டில இருக்கிறாய். அவவோடை உயிரும் பிராணனுமாய் இருந்து சந்தோசமாய் சீவிக்கிறாய். பிறகென்ன பிரச்சினை' என்றான் அவன்.

'நீங்கள் என்ன நக்கலே அடிக்கிறீங்கள்' என அவள் கோபத்துடன் கேட்டாள்.

'இல்லையப்பா. நான் ஏன் கோபிக்க வேணும். இது உன்ரை அக்கா வீடு நீ அவவோடை சந்தோஷமாய் இருக்கிறாய். வேறை என்ன பிரச்சினை வரப்போகுது.'

சுலோசனாவின் முகத்தில் திருப்தி தெரியவில்லை. தன்னை அவன் கேலி செய்வதாக அவள் உணர்ந்திருக்க வேண்டும்.

'ஆரால நாங்கள் இஞ்சை வந்து அகதியாய் இருக்கிறம் எண்டு தெரியுமே உங்களுக்கு. அதுகளைப் பற்றி எப்பவாவது யோசிச்சனீங்களே. சும்மா இருக்கேலாமல் அவன்களோடை சொறிஞ்சு சொறிஞ்சு எங்கடை நிம்மதியள் போனது தான் மிச்சம். அதுகள் ஒண்டும் உங்களுக்குத் தெரியாது. அக்கா வீட்டில இருக்கிறது தான் பெரிய விசியமாய் போச்சு''

அவனுக்கு சட்டென்று சிரிப்பு வந்தது. ''உன்ரை அக்கா நல்ல ஆள்தான். அது பிரச்சினை இல்லை. ஆனால் இஞ்சை குடியிருக்க வந்து இப்ப என்ன கொஞ்ச நாள் தானே ஆகுது. இன்னும் கொஞ்ச நாள் போகட்டும் எல்லாம் உனக்கு விளங்கும். உன்ரை சொந்தக் காணியின்ரை பக்கத்துக் காணிக்காரன் கதியால் வெட்டையுக்க இலை குழை விழுந்ததுக்கே சண்டைக்குப் போனனியப்பா - நீ- அதெல்லாம் மறந்து போனியே? இன்னும் கொஞ்சக் காலம் பொறு. இரண்டு மாதமோ, மூண்டு மாதமோ போகட்டும். நீயாய் நாங்கள் வேறை வீட்டை போவம் எண்டு சொல்ல வருவாய். அப்பதான் உனக்கு எல்லாமே விளங்கும். அப்பதான் அவன்களை இவங்கள் சொறியிற விசியமே விளங்கும்'' என்றான் அவன். □

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிப் பெரு விழாவாம்
"முத்தமிழ்" விழா
எங்கள்
சிந்தை
கவரும் 'விழா'

**விழாவினை**

வாழ்த்துவோர்:

மறுமலர்ச்சிக் கழகம்
பதிவு இல. 004
யாழ். பல்கலைக் கழகம்

# ஈஸ்வர பகவான்

## அன் கம்பனி

**104, (298) மருத்துவமனை வீதி,**

**யாழ்ப்பாணம்.**

[F-61]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமிழ் விழா
எங்கள் மண்ணுக்கு
பெருமை சேர்க்கும்

சிறந்த பலசரக்கு வியாபாரிகள்

சிவக்குமார் ஸ்ரோர்ஸ்
282, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

[F-62]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''முத்தமிழ்'' விழாவை
வாழ்த்துவதில்
பெருமை கொள்வோர்

## ஆசீர்வாதம் ஸ்ரோர்ஸ்

61, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

பாடசாலை உபகரணங்கள்,
காகிதாதிகள்
விற்பனையாளர்கள்.

[F•63]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" முத்தமிழ் " விழாவை

ஆர். வி. ஜி. மெடிக்கல்ஸ்
504, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

வாழ்த்துகின்றோம்.

[F-64]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முத்தமிழ்" விழா

□ வைஜீ

மெடிக்கல்ஸ்

520, மருத்துவமனை வீதி,

யாழ்ப்பாணம். □

வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" தமிழீழ மக்களின்
தனித்துவமான
'முத்தமிழ் விழா'
தமிழீழ மண்ணின்
பெருமைகள்
பல
சொல்லும் "

□ " விக்ரேஸ் "
100, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

" நியூவிக்ரேஸ் " □
மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமிழ் விழாவினை

□ கே. கிருபாகரன்

50, கன்னாதிட்டி,

யாழ்ப்பாணம்.

[H-1]

வாழ்த்துகின்றோம்.

□ சிவன் மாளிகை லிமிட்.

திருநெல்வேலி தெற்கு,

யாழ்ப்பாணம்.

[H-2]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமிழ் விழா
சிறப்புக்கள்
பல பெறுக!

# அகிலா
## ஜுவல்லறி

72, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

☐ *நகைகள், இரத்தின வியாபாரிகள்*

(H-3)



எங்கள்
தமிழுக்கு
ஒருவிழா!

# ராணி
## ஜுவல்லர்ஸ்

63, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

☐ *தங்க, வைர வியாபாரிகள்*

(H-4)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானம் வெளிக்கும்

○ ○ வசந்தன்

சூரியன் அந்தச் சின்னக் கடலிற்குள் விழத்தொடங்கியது மாலை நேரத்துச் சிவப்புக் கதிர்கள். அச்சிறு கடலில் பட்டுத் தெறித்து தென்னமரவாடிக் கிராமத்தை சிவப்பாக்கிக் கொண்டிருந்தன. கருநிழலாக சில மனிதர்கள் தண்ணீருக்குள் நின்று. நாளைய வாழ்வுக்காக வலைகளை வீசி எறிந்தனர்.

தேவி, தன் வீட்டு முற்றத்தில் மகனுடன் இருந்தாள். அவர்கள் மண்ணினால் அழகான வீடு கட்டிக்கொண்டிருந்தார்கள். தேவியின் கை தற்செயலாக அந்த மண்வீட்டை உடைத்து விட்டது!

''நீங்கள் உடைச்சுப் போட்டீங்கள்'' அவன் சிணுங்க வெளிக்கிட்டான்.

தேவி சமாளிக்கத் தொடங்கினாள்.

தம்பி வளர்ந்து, அம்மாவிற்கு கல்வீடு கட்டித் தருமாம். ''அம்மா, கல்வீட்டை உடைக்கமாட்டாவாம்''

சூரியன் முற்றாக கடலில் விழுந்தான்; தென்னைகள் சிலிர்த்து ஒருகணம் சோகம் தெரிவித்தன.

பறவைகளும், கடலும், காடும் அமைதியாகின.

□ □ சிறுகதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நேரம், நெஞ்சை உலுக்கும் சத்தங்கள் கேட்கத் தொடங்கின. அவள் வானத்தை நிமிர்ந்து பார்த்தாள். நான்கு உலங்கு வானூர்திகள் அந்தக் கிராமத்தைத் தான்.

''அம்மா, நாலு...'' அவன் சந்தோசமாகக் கூவினான்.

அவளுக்கு நெஞ்சு படபடத்தது.

அவை நாலும் தாழப்பதிந்து, நிலத்திற்குத் தாவின.

தேவி, அவனின் கையை இறுகப்பற்றி இழுத்துக்கொண்டு ஓடத் தொடங்கினாள்.

அவனிற்கு என்னவென்று விளங்கவில்லை. ஆனால் கலவரத்துடன் ஓடினான். பின்னால், வெடிச்சத்தங்கள் கேட்டன. கிராமம் சுவாலைவிட்டு எரியத்தொடங்கியது. அந்தக் கிராமத்திலிருந்து அவலமான குரல்கள், எழுந்து காற்றில் கலந்தன.

காட்டிற்கு அருகில் வந்ததும், தேவி திரும்பிப் பார்த்தாள். ''ஐயோ, எரிக்கிறாங்கள்'' அவளது வாய் முணுமுணுத்தது. அதுவரையில் பேசாமல் வந்த தம்பி கேட்டான்:

''அம்மா, அப்பாவும், தங்கச்சியும் எங்க?''

அவையள் வருவினம்.

எங்கட வீடு.

''சத்தம் போடாதையப்பன், காட்டுக்கையும் அவங்கள் நிப்பாங்கள்'' தன் மகனை அணைத்தபடியே தேவி ஒரு பற்றைக்குள் பதுங்கினாள். இரவு முழுவதும் அவள் விழித்திருந்தாள். கிராமம் எரிந்து கொண்டிருந்தது. இடை இடையே, துப்பாக்கி வேட்டுகளும், அவலக் குரல்களும் எழுந்து மறைந்தன. காட்டினுள் தூரத்தில் எங்கேயோ, பறவைகளின் அவலமான சத்தங்கள் எழுந்தன. மனது நடுங்கியது.

காட்டிற்குள்ளும் அவர்கள்.....இரவு அவள் தூங்கவே இல்லை. விடிந்தது, சத்தம் எதுவுமே இல்லை.

''அவங்கள் போயிட்டாங்களோ'' தேவி பற்றையை விட்டு வெளியே வந்தாள். மாரி காலத்து நில ஈரம் உடலை குளிர வைத்திருந்தது, தம்பி சோர்ந்து போயிருந்தான், லேசாக காய்ச்சல் காய்ந்தது, உடல் படபட எனநடுங்கியது.

''தம்பி பயப்பிடாத,வீட்டை போவம்'' சதுப்பு நிலத்தில் அவள் காலெடுத்து வைத்தாள். அப்பொழுது ஊரவர்கள் நாலு பேர் ஓடிவந்தார்கள்.

''பிள்ளை, உங்கை போகாதை, அங்கை ஏராளமான ஆக்களைச் சுட்டுப் போட்டாங்கள்'' வயது முதிர்ந்த கிழவர் ஒருவர் அவசரமாகச் சொன்னார்.

''பொம்பிளையளை எல்லாம் பிடிச்சுக் கொண்டு பள்ளிக்குடத்திலே போய் இருக்கிறாங்கள். அவளவை இரவிரவா கத்திறாளவை. சீ, உந்த அறுவான்களை ஆர்தான் கேக்கிறது,'' அந்தக் கிழவர் சினந்து கொண்டிருந்தார். ''வா,பிள்ளை போவம்'' அவர்கள் ஒற்றையடிப் பாதையால் நடந்தார்கள்.

ஆற்றங்கரையில் அவர்களின் ஊரவர்கள் பலர் இருந்தனர். அவர்களின் முகங்கள் பயத்தால் வெளிறி இருந்தன, இரவு முழுவதும் விழித்திருந்ததால் சோர்ந்து களைத்திருந்தார்கள்.

'ஊருக்கு எனிப் போகேலாது, அவன் நிரந்தரமா இருந்திட்டான். நாங்கள் கொக்கிளாய்க்கு போவம்'' முதியவர் ஒருவர் அங்கிருந்தவர்களுக்கு வழிகாட்டியாக நடந்தார்.

அவர்கள்காடுகளிலும்,வெட்டைகளிலும், பதுங்குவதும் நடப்பதுமாக இருந்தார்கள். எவருமே எதுவுமே பேசவில்லை.சிலவேளைகளில் சின்னக் குழந்தைகள் கத்த ஆசைப்படும். அந்தக் குரல் கூட தாயின் கண்ணீருக்கிடையே பலவந்தமாக அடக்கப்பட்டது. மனதில் சோகத்துடனும், பயத்துடனும் அவர்கள் மௌனமாக நடந்தார்கள்.

தம்பி மட்டும் சில நேரங்களில் ''அம்மா பசிக்குது'' என்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசாமல் வா என அவளது மென்மையான குரல் முரட்டுத்தனமாக அவனை அடக்கும். இரவுகளில் மட்டும் அவன் நித்திரை ஆனபின், தன் மகனின் தலையைத் தடவிக் கொண்டே அவள் விம்மி, விம்மி அழுவாள். சிலநேரங்களில் ஏதோ ஒரு கொஞ்ச உணவு அவர்களுக்குக் கிடைத்தது. மற்றும்படி காட்டில் தேங்கிக் கிடக்கும் தண்ணிதான் அவர்களின் வயிற்றை நிரப்பியது.

''ஊர் தெரியுது எனிப் பிரச்சினை இல்லை'' என்றான் ஒருவன். தம்பி கத்தினான். ''அங்க அப்பாவும் தங்கச்சியும்'' கத்திக் கொண்டே ஓடினான். தேவி அழத் தொடங்கினாள். மகிழ்ச்சியாலும், நிம்மதியாலும், துயரத்தாலும் அழத் தொடங்கினாள்.

''ஏன் அழுகிற பிள்ளை. எனித்தான் பிரச்சினை இல்லையே'' கிழவி ஒருத்தி மங்கிப்போன கண்களை மலர்த்தியபடியே சொன்னாள், அப்பொழுது தூரத்தில் வெடிச் சத்தங்கள் எழுந்தன. ஒருவன் தலை தெறிக்க ஓடி வந்தான்.

''ஆமிக்காரன் கண்டவங்களை எல்லாம் சுடுறான் ஊரை விட்டு 24 மணி நேரத்திற்க வெளியேற வேண்டுமாம் கொக்கிளாயில இருந்து, செம்மலை, குமுளமுனை வரை எல்லாச் சனமும் அகதியாய்ப் போகுதுகள்'' என மூச்சு விடாமல் சொல்லி முடித்தான்.

அவர்களின் முகங்கள் சோர்ந்து கறுத்தன. தலையைக் குனிந்தபடியே முல்லைத் தீவை நோக்கி எழுந்து நடந்தனர்.

எங்களின்ர மண்ணுக்கு வந்து, எங்கட வாழ்வுக்காக நாங்கள் உழைக்கும் வரைக்கும், எனி நாங்களும் அகதிகள்.

ooo ooo ooo

புதிய கிராமம் தம்பிக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் அம்மம்மாவின் வீட்டில் நின்றார்கள். இயக்கத்தில் இருக்கும் சின்னமாமா சிலவேளைகளில் தம்பியையும், அம்மம்மாவையையும்பார்க்க வருவார். தம்பிக்கு மாமாவின் தோளில் தொங்கும் துவக்கில் தான் ஒரு கண். அன்றும் மாமா வந்திட்டுப் போனார்.

தேவி எங்கேயோ போயிட்டு வந்தாள். தம்பி வாசலுக்கு ஓடினான். அம்மாவை அணைத்துக் கொண்டான்.

''மாமா வந்தவர்'' என்றான்.

''என்னவாம்''

''என்னையும், அம்மம்மாவையும் பார்க்கத்தான் வந்தவர்'' என்றான், தம்பி.

''மாமாட்டை நீ என்ன கேட்டனி,

''எனக்கொரு துவக்கு வேணும் என்று கேட்டனான்''

''ஏன் தம்பிக்குத் துவக்கு''

''எங்கட வீட்டை போறதெண்டால் அது வேணுமென்று சொன்னனீங்களல்லோ, அதுதான், மாமாவிடம் கேட்டனான்' தன் பிள்ளையைஎட்டி அணைத்தபடியே தேவி மெல்லமாக சொன்னாள்.

''அதுக்கு, நீ மாமாவை மாதிரி வளர வேணும், படிக்க வேணும்'' ''படிக்கிறதோ'' தம்பி பறித்துக்கொண்டு ஓடினான், வாசலில் படுத்திருந்த நாய் அவனுடன் எழுந்து ஓடியது!

''தம்பி ஓடாத, ஓடாத இங்க வா, அம்மம்மா கண்டா ஏசப் போறா'' அவள் இரகசியமான குரலில் அதட்டினாள்.

''ஏனம்மா''

''முத்தத்தில உழக்கக் கூடாதடா''

''ஏன்''.

''முத்தத்தைப் பார்......

இதுதான் மாமாவின்ர காலடி, இதை அழிக்கக் கூடாது''

''நீ வா, வாப்பன்'' அவன் அம்மாவிற்கு பின்னால் நடந்தான். நாய் அவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வின் காலிற்குள் செல்லமாக தடக்கித் தடக்கி விழுந்தது, அவன் ஓடிச்சென்று அம்மாவின் கையைப் பிடித்தான்.

''என்ர அம்மா நல்ல வடிவு'' என்றான் தம்பி,

''அப்ப வீடு'' அவனை இழுத்தபடியே தேவி கேட்டாள்.

''எந்த வீடு'' தம்பி வியப்புடன் கேட்டான்.

''அதுதான் ஊரில நாங்கள் இருந்தம்''

'' எங்கட வீடும் நல்லது '' என்றான் தம்பி,

''வீட்டுக்கு முன்னால் இருக்கிற கடல்'' அம்மா தொடர்ந்து கேட்டாள்.

''அதுவும் வடிவு, எனக்கு நல்ல விருப்பம்'' திடீரென, கதைத்துக் கொண்டு வந்த, தம்பியைக் காணவில்லை, சத்தத்தையும் காணவில்லை. அம்மா திரும்பிப் பார்த்தாள், தம்பியின் முகம் மாறி இருந்தது. ஏதோ யோசனையில் வந்து கொண்டிருந்தான்.

''மாமா வர ஒரு துவக்கு கேக்கத்தான் வேணும்'' அவன் முணுமுணுத்துக் கொண்டு வந்தான்.

000 000 000

தம்பி இப்போது கொஞ்சம் வளர்ந்திருந்தான். உலகம் ஓரளவு விளங்கத் தொடங்கி இருந்தது. எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். அவனால் நினைவுகளை மட்டும் மறக்க முடியவில்லை. ஊரை விட்டு ஓடி வந்த பயங்கரம் நிறைந்த அந்த இரவு அவனின் மனதில் படிந்து போயிருந்தது.

வாசலிற்கு வந்த தம்பிக்கு அதிசயமாயிருந்தது. அம்மம்மா முத்தம் கூட்டிக் கொண்டிருந்தா

''அம்மம்மா, இண்டைக்கு ஏன் நீங்கள் கூட்டுறீங்கள்'' அதிசயமாக கேட்டான். தம்பி.

''மாமா வந்தவன் அல்லோ, அவன் அடுத்த முறை வரும் வரைக்கும் இந்தக் காலடிகளை நான் பார்த்துக் கொண்டே இருப்பன், அவன்ர நினைவு வரேக்கை எல்லாம் வந்து பார்ப்பன்'' அம்மம்மா மாமாவின் காலடிகளைப் பார்த்துக் கொண்டே சொல்லிக் கொண்டிருந்தா.

''அம்மம்மாவிற்கு சரியான விசர்'' தம்பி சொல்லிக் கொண்டே பள்ளிக்கூடத்திற்கு ஓடினான். பள்ளிக் கூடத்திலயும் அரைவாசி நேரம் மாமாக்களின் கதை தான். அவர்களின் துணிவைப் பற்றியும் துவக்குகளைப் பற்றியும் தெரிந்தவற்றை எல்லாம் கதைத்தார்கள், மத்தியான நேரம் தம்பிக்கு அடிவயிற்றில் பசி கிள்ளியது. மணி அடித்ததும் வீட்டை ஓடவேணும்.

பாடசாலையை விட்டு வெளியே வந்தான்.பாலத்திலிருந்து முறிகண்டி அண்ணை இவனிடம் வந்தார். ஊருக்கு உதவாத அந்த மனுசனின் கண்கள் ஏன் கலங்கி இருந்தது

''உன்ர மாமாவை முறிப்பில.... அவனால் அதற்கு மேல் கேட்க முடியவில்லை. வீட்ட ஓடினான்.

''டேய், பார்த்து வாடா'' மகனின் காலடி அழிந்து விடும் என அம்மம்மா கத்தினா. அவ பார்க்கிற கடைசிக் காலடி. அவன் பேசாமல் வீட்டுக்குள் போனான் அவனை அறியாமல் அழத்தொடங்கினான்.

''தம்பி ஏன்ரா அழுகிற''

அந்த நேரம் வாசலில் சனச் சத்தம் கேட்டது. அம்மம்மா வாசலிற்குச் சென்றாள். ''அம்மா உங்கட மகன்......''

அம்மம்மாவிற்கு எதுவுமே தெரியவில்லை. உலகமே இருண்டது.

அந்தக் கடைசிக் காலடியும் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்தது.

000 000 000

காட்டிற்கு அருகில் இருந்த ஓலைக் குடிசை ஒன்றில் தங்கன் இருந்தான். அன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சிக்கு புதியவர்களை அழைத்து வந்திருந்தார்கள். அதில் தம்பியும் ஒருவன். தங்கன்போராட்ட கஷ்டங்களை ஒவ்வொருவருக்கும் விளக்கினான். அடுத்தது தம்பியின் முறை.

''தம்பி, நீ நினைக்கிறமாதிரி இல்லையடா, இயக்கம். சரியான கஷ்டம். உன்னாலை ஏலாது. மாமா செத்தும் கொஞ்ச நாள்கூட ஆகேல அம்மா பாவம், நீ வீட்டை போ'' என்றான் தங்கன்.

''மாமா இல்லையெண்டபடியால்தானே நான் வந்தனான். குடும்பத்தில ஆராவது ஓராள் இயக்கத்தில இருக்கத்தானே வேண்டும்'' அவன் சினத்துடன், சிணுங்கத் தொடங்கினான்.

''உனக்கு வயசு காணாது, கஷ்டமும் விளங்கேலை. பிடிவாதமா நிற்கிற எதுக்கும் வா - போகப் போகத் தெரியும்'' சொல்லிக் கொண்டே தங்கன் வெளிக்கிட்டான்

அவர்களும் எழுந்து நடந்தார்கள். சாதுவான நிலவு தெரிந்த இரவு நேரம். காடுகளிற்கூடாகவும், கிராமங்களிற்கூடாகவும் நீண்ட தூரம் நடந்தார்கள். சில வேளைகளில் இந்தியப்படை முகாமின் வேலிகளுக்கருகாலும், - ஆபத்து நிறைந்த ஒழுங்கைகளிற்காலும். இருளோடு இருளாக அவர்கள் சென்றார்கள். முடிவில், வயலுக்கு தண்ணி கொண்டுசெல்லும் ஒரு பாலத்தில், தங்கன் ஆறுதலாக இருந்தான்.

''உங்களுக்கு இப்ப ஓரளவு விளங்கி இருக்கும். இப்படித்தான் போராட்டம். போராளிகளின் வாழ்வு, நாங்கள் எப்பவும் சாகலாம். ஆபத்து நிறைந்ததுதான் எங்கட வாழ்வு. பிரச்சினை இல்லை. ஆராவது வீட்டை போறதெண்டால் போகலாம்'' தங்கன் அமைதியாகச் சொன்னான்.

''அண்ணை நாங்கள் வரேலை'' நாலு பேர் நின்றனர்.

சரி, தம்பியை மட்டும் விட்டுட்டு, மற்றவையைக் கூட்டிக்கொண்டு போகச் சொல்லி தன் தோழன் ஒருவனுக்கு கூறினான். போகப்போறன் என்று சொன்னவர்களுக்கு எப்படிப் போகவேணும் என்று சொல்லிவிட்டு தங்கன் திரும்பினான்.

தம்பி, கேவிக் கேவி அழ வெளிக்கிட்டான்.

''நான் வீட்டை போகேலை'' என விம்மினான். தங்கன் ஆறுதலுடனேயே அவனது தலையை அணைத்தான். அவனும் அவனில் சாய்ந்து மேலும் பலமாக அழுதான்.

''சரி வா'' என்றான் தங்கன். அடுத்த நிமிசம், அழுகையைக் காணவில்லை. 'வாங்கோ போவம் அவையள் போகப் போகினம்' என்று அவசரப்பட்டான் தம்பி.

தங்கன் சிரித்துக்கொண்டான்.

எங்கட மண் ஒப்பற்றது. இந்த மண்ணிலதான் இப்படிச் சிறுவர்கள் தோன்ற முடியும். அவனது நெஞ்சம் கனத்தது.

விடிந்தது. பயிற்சிக்கு வந்த புதிய போராளிகளை, பழைய போராளிகள் நின்று பார்த்தனர். தம் இளைய சந்ததியை ஆசையோடு பார்த்துக்கொண்டிருந்த அவர்களின் கண்களில் அன்பு, பாசம், நட்புணர்வு எல்லாம் வெளியாகவே தெரிந்தது.

''தங்கண்ணா இவனைக் கூட்டிய ரேக்கை, ஒரு பசுமாட்டைபும் கொண்டு வந்திருக்கலாம்'' தம்பியைப் பார்த்துக் கொண்டே ஒருதோழன் சொன்னான்.

''டேய், நீ படிக்க கள்ளத்திலதான் இயக்கத்துக்கு வந்தனி''

தம்பியின் முகம் கோபத்தால் சிவந்தது.

''வேணுமெண்டால் பள்ளிக்குடத்தில போய்க் கேளுங்கோ, நான் எத்தனையாம் பிள்ளை என்று. நான் ஆறெண்டு தெரியேலை'' அவன் சிறுபிள்ளைத்தனமாகவே சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''டேய், அவன் மகேந்தியின்ர மரு மேனடா'' என்றான். தங்கன்.

''ஆர் எங்கட மகேந்தி அண்ணையின் ரயோ'' அந்த முகாமின் பொறுப்பாளன் கண்களை அகல விரித்தபடியே கேட்டான்

''ஓம். கப்டன் மகேந்தி''

''ஆளப் பார்க்கத் தெரியுது'' கேலியாகப் பேசிக் கொண்டே அவர்கள் தூர விலகிச் சென்றார்கள். அன்றிரவு..., அந்த முகாமின் பொறுப்பாளன் தங்கனுக்கு அருகில் வந்தான்.

"மகேந்தி அண்ணை செத்து இன்னும் ஒரு மாதம் கூட ஆகேல, அவனை வீட்ட விடுவம், தாய்மனுசி பாவம். ஒரேயொரு பெடியன் - கொஞ்ச நாட் கழித்து வரட்டும்'' என்றான்.

"நான் சொல்லீட்டன். வேணுமெண்டால் நீ சொல்லிப்பார்'' என்றான் தங்கன்.

''நான் சொல்லப் போறதில்லை. ஒரு கிழமைக்கு போட்டு நல்லா வாட்டப் போறன். இதுதான் பயிற்சி எண்டு தெரியட்டும் - ஆள் தானாப் பறப்பார்'' அவர்கள் சத்தமில்லாமல் சிரித்துக் கொண்டார்கள். நிலவு வெளிச்சம் கூட நுழைய முடியாத காட்டின் இருள் அவர்களை மூடி இருந்தது. எப்போ விடியும் என அவர்கள் மரங்களின் இலைகளிற்கால் தெரிந்த நட்சத்திரங்களை பார்த்துக் கொண்டு நீண்ட நேரமாக விழித்திருந்தார்கள். பின் உறங்கிப் போனார்கள். விடிந்ததும் தங்கன் வெளிக்கிட்டு வேறு முகாமிற்குச் சென்று விட்டான்.

000 000 000

தங்கன் அந்த முகாமிற்கு வந்தான். சின்ன மகேந்தி சிரித்துக் கொண்டே அவனிற்கு அருகில் வந்தான். தன் மாமாவின் பெயரையே தனக்கு வைத்ததாக சொன்னான். தலைமயிரை ஒட்ட வெட்டியிருந்தான். தோளில் துப்பாக்கி ஒன்று கனத்தது. அவனை திரும்பிப் அனுப்புவதற்காக கொடுக்கப்பட்ட கடுமையான பயிற்சிகளே. அவனை ஒரு திறமையான சின்னப் போராளி ஆக்கி இருந்தது.

''எங்கயாவது அடிபிடிக்குப் போவேணும்'' தங்கனுக்கு அருகில் இருந்தபடியே சின்ன மகேந்தி கேட்டான்.

''அதுக்கென்ன போனாப் போகுது'' என்ற படியே தங்கன் மேலே பார்த்தான். இலைகள் ஒன்றுடன் ஒன்று முத்தமிட்டு சூரியக் கதிர்களை மறைத்து நின்றது. கிளைகளில் தாவி வந்த குரங்கொன்று தன் பல்லைக்காட்டி விட்டுப் போனது,

''குரங்குக்குக் கூட உங்களோடதான் பகிடி'' என்று சொல்லி விட்டு மகேந்தி சிரித்தான். அவனது கண்களை ஆழமாகப் பார்த்தபடியே,

''மகேந்தி, நீ ஏன் இயக்கத்துக்கு வந்தனி'' என்று கேட்டான் தங்கன். மகேந்தியின் சிரிப்பு நின்றது. சின்ன முகம் கடுமையாக மாறியது.

''எனக்கு, ஒரேயொரு விருப்பந்தான். எங்கட ஊருக்கு நாங்கள் எல்லாம் போக வேணும். தங்கன் வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தான். இந்தப் பிஞ்சு உள்ளத்திலே இப்படி ஒரு எண்ணம்...

''தங்கண்ணை., நானும், அம்மாவும் எங்கட ஊராக்களும் இரவிரவா - சாப்பாடு இல்லாமல், சேத்திலயும், தண்ணியிலயும் விழுந்து. விழுந்து ஓடிவந்ததை நான் மறக்கேலை. மறக்கப் போவதும் இல்லை.'' அவன் சொல்லிக் கொண்டிருந்தான். தங்கன் அந்தச் சின்ன எரிமலையை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

0000 □ 0000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியம் போற்றிடும் எம்மவர் போர்த்திறம்

தமிழன் வரலாறு புகழ் பூத்தது. தமிழன் வரலாறு சீர் படைத்தது. தமிழ் இலக்கிய ஏடுகளைத் தட்டிப்பார்க்கின் றோம். தமிழன் பெருமை அங்கே எட்டிப் பார்க்கின்றது. ஏடு களின் பக்கங்கள் புரள்கின்றன. எம்மவர் பெருமைகள் திரள் கின்றன. முச்சங்கம் அமைத்து — மூதறிஞர் குழு நிறைத்து, மூவேந்தர் முயற்சியினால் முத்தமிழும் போற்றப்பட்டதை உணர்கின்றோம். முடிதரித்த மன்னர்கள் அடிபணிந்து போற்ற, எத்திக்கும் புகழ் பரப்பி ஏற்றமிகு ஆட்சியினை தமிழன்னை ஓச்சினாள் என்ற புகழுரைகள் இலக்கிய ஏடுகளிற் காட்சி கொடுக்கின்றன. திக்கெட்டும் சீர் நிறைத்து — தீந்தமிழால் புகழ் குவித்து — மற்றோர்கள் மலைத்து நிற்க, மாண்பு பல காட்டி நின்றான் மறத்தமிழன் என்ற மகிமைதனை இலக்கியங் கள் பேசுகின்றன. உலகிற் தோன்றிய மக்களுள் முதலில் தோன் றினோர் - கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்தகுடியினர் என்றெல்லாம் புகழாரம் — எம்மவர்க்கு மலிந்து கிடக்கின்றன — இத்தன்மையில், தமிழின் மகிமையை — தமிழன் பெருமையைத் தரணிக்கு உணர்த்துவதில் தலைசிறந்து விளங்கு பவை சங்கத்தமிழ் இலக்கியங்கள். சங்கத் தமிழ் இலக்கியங்கள் என்ற நிலையில், தமிழ் இலக்கியப் பரப்பிலே தனியிடம் பெற்றுத் திகழ்பவை பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்னும் பைந்தமிழ் நூல்களாகும்.

பண்டைத் தமிழன் மாண்புகளை — எம்மவரின் பெருமை சேர் வரலாறுகளைப் போற்றி நிற்கும் தமிழ் இலக்கியங்களுள் அறம், பொருள், வீடு பற்றிப் பேசுபவை சில. இன்பம் பற்றிப் பேசுபவை சில. அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றுள் இன்பம் என்பதே பல்லோராலும் விரும்பப்படுகிறது — பெரிதும் வேண்டப்படுகிறது. இவ்வின்பத்தைப் பெறுவதற்குக் களம் அமைத்துக் கொடுப்பது — வழிவகுத்து வைப்பது நல்லாட்சி நில வும் நாடேதான். நல்லாட்சி என்றதன்மையில், தம்மாட்சி நிலவும்

வ. ஆ. அதிரூபசிங்கம்
பி. ஏ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசம் ஒன்றிலேதான் அனைத்து இன்பங் களையும் அனுபவிக்க முடிகின்றது. ஒரு நாடு நல்லாட்சி பெற்றுத் துலங்கிட வேண் டின் —தம்மாட்சி பெற்று விளங்கிட வேண் டின் அந்நாட்டு மக்கள்மறக்குலத்து மைந் தர்களாக — மண்ணுக்காகத் தம்மை அர்ப் பணிக்கும் மாவீரர்களாகத் திகழ்ந்திட வேண்டும். இதனாலேயே, பண்டைத் தமி ழன் போர்க்கலையைத் தனக்குரியதெனப் போற்றி வளர்த்தான் — படைமுகத்தைத் தன் விளையாட்டுக் களமெனக் கருதி வாழ்ந்தான். எம்மவர் வாழ்க்கையின் இயல்புகள் பலவும் போர்ப் பண்புகளுடன் பிணைந்தவையாகவும், மறப்பண்புகளுடன் இணைந்தவையாகவும் விளங்கி நின்றன. பெற்றெடுத்த பிள்ளையின் பிஞ்சுக் கழுத் திலே ஐம்படைத் தாலியை அணிந்து மகிழ்ந்தனர் எம்மவர். புலியின் பல்லைக் கோர்த்துச் செய்த புகழ்தரு தாலியைப் புனைந்து களித்தனர் பண்டைத்தமிழர். காதற் கிழத்தியின் கைதனைப் பற்றிட களிறினை எறிந்து களித்து நின்றனர் பண் டைத் தமிழர் — காளைச் சண்டையும் கோழிச் சண்டையும் கண்களிற் கண்டிட விருப்புடன் எழுந்தனர் மறக்குல மைந்தர் கள். புறவாழ்க்கையிலே போரினைப் போற்றி மகிழ்ந்த பண்டைத் தமிழர்கள் அகவாழ்க்கையிலும் போரினைப் போற்றி நின்றமையை இலக்கியங்கள் எமக்கு உணர்த்தி நிற்கின்றன.

இலக்கிய ஏடுகளைப் புரட்டி எம் மவரின் பண்டைப் பெருமைகளை — பார் வியந்திடப் புரிந்து நின்ற போர்ச்சாதனை களைப் பார்த்திடும்போது மெய் சிலிர்த்து நிற்கின்றோம். போர்களில் ஈடுபடுவதையும் வெற்றிகள் பல பெற்றிடுவதையும் கடமை யெனக்கொண்டிருந்தனர் பண்டைத்தமிழ்க் காவலர்கள். பழங்காலத் தமிழ் மன்னர் கள் போர் வீரத்திற்கே முதன்மை கொடுத் தனர்.

'போர் எனில் புகலும் புனைகழல்
மறவர்' என்ற தொடரும்,

பொதுவில் தூங்கும் விசியுறு தண்ணுமை
வளியெர்டு தெண்கண் கேட்பின்
அதுபோர் என்னும் என்னையும் உளனே,

என்ற தொடரும் எம்மவரின் வீர உணர் வையும் போரிடத்துடிக்கும் குன்றாத ஆர் வத்தையும் வெளிப்படுத்தி நிற்கின்றன போர்க்களம் சென்று மாற்றானுடன் பொருதி இறப்பதே பெருமையெனக் கொண்டனர் பண்டைத் தமிழ் வீரர்கள். மன்னர் செயலும் மக்கள் செயலும் இவற்றை உணர்த்தி நிற்கின்றன. கணைக் காலிரும்பொறை என்ற சேர அரசனுக் கும் செங்கணன் என்ற சோழ அரசனுக் கும் பகை மூண்டது. போர் நிகழ்ந்தது. சேரன் சிறைப்பட்டான். மான உணர்வு டன் சிறையிலே உணவின்றி வாடினான் மன்னன். நீர் வேட்கையால் நினைவு தடு மாறிய நிலையில் ''தண்ணீர்'' எனக் கேட்டுவிட்டான். தண்ணீர் விரைந்து வந் தது. தவறினை மன்னன் உணர்ந்தான். அந்த நீரைப் பருகாமல் மான உணர்வுடன் சேரன் பாடிய பாடலை புறநானூறு எமக்குத்தருகிறது.

''குழவியிறப்பினும் ஊன்தடிபிறப்பினும் ஆளன்றென்று வாளாற்றப்பார்'' என்ற பாடலடிகளில் மன்னனின் போர் உணர்வு வெளிப்படுவதுடன், இயல்பாய் ஒருவர் வீழ்ந்து படினும் மெய்யிலே வீரவடுதாங்கி வீழ்வதே சிறப்பு என்பதும் உணர்த்தப்படு கின்றது. பிள்ளை இறந்து பிறப்பினும் தசைப்பிண்டமாய்ப் பிறந்தாலும் அதனை கருப்பையிற் கிடத்தி வாளால் துண்டித்த பின்பே அடக்கம் செய்யப்பட்டது. போர் புரியும் வீரன் புறங்காட்டி ஓடுவது அற மல்ல என்பதும், முதுகிற் புண்பட்டால், தீரா இழிவும் மாறாவடுவும் ஏற்படும் என்பதும் பெரிதாய் மதிக்கப்பட்டது. தம் வீரர் போர் முனையிற் போர் புரியும் பொழுது தம்மைப் பாதுகாப்பதற்காகத் தனியிடம் புகமாட்டார்கள் மன்னர்கள். இன்பமாகிய மனைவியின் தோள் மருவு தலையும் மறந்து போர் ஒன்றையே இன் பப் பொருளெனக் கண்டு — இலட்சியம் எனக் கொண்டு வாழ்ந்தனர் மறமன்னர் கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் போர்க் களத்திற் காட்டிய திறமைசேர் வீரத் தைப் புறநானூறு அழகாகக் கூறுகிறது.

'உடன்று மேல் வந்த வம்ப மன்னரை
வியந்தன்று மிழிந்தன்று மிலனே யவரை
அழுந்தப் பற்றியகல் விசும்பார்ப் பெழக்
கவிழ்ந்து நிலஞ்சேர வட்டதை
மகிழ்ந்தன்று மலிந்தன்று மகனுமிலனே'

'முறை முறையாக வெகுண்டு மேல் வந்த புதிய வீரரை மதித்ததும் அவமதித் ததும் இலன். அவரை இறுகப்பிடித்துப் பரந்த ஆகாயத்தின் கண்ணே ஒலி எழக் கவிழ்ந்து உடலம் நிலத்தின் கண்ணே பொருந்தக் கொன்றதற்கு மகிழ்ந்ததும் இவ்வாறு செய்தோமென்று தன்னை மிகுத் ததும் அதனினும் இலன்.'

நெடுஞ்செழியனின் போர்த்திறம் இங்கே போற்றப்படுகின்றது. மறப்பண்பு இங்கே புனிதமாக்கப்படுகின்றது.

மாற்றான் படையினரைக் கொன்று குவித்து, பசும் பொன்னாலான மன்னர் தம் முடியினை எடுத்துத் தம் அடியினை அலங்கரித்திடும் வீரக் கழலாய் மாற்றி அமைத்து, மனங்களித்தலும், பகையரசர் களின் காவலையுடைய மதில்களைஅழித்து, அங்கு இருந்த அரசனுடைய முடிக்கலமத னால் தமக்குகந்த வீரமுடியினைச் செய்து புனைதலும் எம்மன்னர்களின் சிறப்பியல்பு களாக இருந்தன.

'கடி புனைந்த பசும்பொன் னின்
அடி பொலியக் கழறைஇய' என்ற தன்மையிற் புறநானூறும்-

'கடி மதிலெறிந்து குடுமிகொள்ளும்' என்ற தன்மையிற் பெரும்பாணாற்றுப்படை யும் தமிழ் மன்னர்களின் போர்த் திறமை களைப் போற்றிப்பாடுகின்றன. போரிலே வெற்றி பெற்ற மன்னர்கள் பகையரசரின் முடிதனைக் கவர்ந்து கொள்ளுதல் சிறந்த வொரு போர் இலக்கணமாகக் கொள்ளப் பட்டது. முரசைக் கவர்ந்ததன் மேல் கள வேள்வி செய்வது பெருமரபாக இருந்தது. பகையரசரின் முரசுகளுடன், வெண்கொற் றக் குடையினையும் பற்றிக்கொண்டு, தன் புகழுரை எங்கும் பரவிட, அவர்தம் படை களைக் கொன்று களவேள்வி செய்த அர சரின் போர்த்திறமைகளை அகநானூறு போற்றிப் பேசுகின்றது.

மாற்றான் மேல் படையெடுத்துச் சென்ற மன்னர்கள் மாற்றான் நாட்டைப் பலவழிகளிற் கூறுபடுத்தினர் - சிதைத் தழித்தனர். காற்றினும் கடிதாய்ப் பகை நாட்டினுள் சென்ற நெடுஞ்செழியன் பகை நாடு பற்றியெரியும்படி பெரு நெருப்பை மூட்டினான்.

'காலென்ன கடி தூர அய்
நாடு கெட வெரி பரப்பி
யாலங்கானத் தஞ்சு வரவிறுத்
தரசுபட வமருழக்கி' செழியன் திறம் இங்கும் பேசப்படுகின்றது. செழியனின் போர்த்திறத்தைப் புறநானூறு மேலும் போற்றுகிறது.

'பொருநனும் இளைஞர் கொண்டியும் பெரிதென
எள்ளிவந்த வம்ப மன்னர்
புல்லென் கண்ணர் புறத்திற் பெயர
ஈண்டு அவர் அடுதலும் ஒல்லான் ஆண்டு அவர்
மாண் இழை மகளிர் நாணினர் கழியத்
தந்தை தம்மூர் ஆங்கண்
தெண்கிணை கறங்கச் சென்று ஆண்டு அட்டனனே'

'நெடுஞ்செழியன் சிறுவன்' என்று எள்ளி நகையாடிப் போரிட வந்தவர்களைப் போர்க்களத்திலே கொல்லவொன்னாதவ னாக அவரவர் ஊர்வரை ஓடவெருட்டி ஆங்காங்கே போர்ப்பறை முழக்கிச்சென்று அழித்த செழியன் போர்த்திறமையை இலக்கியங்கள் மேலும் இயம்புகின்றன.

பகைவரை வெட்டித்தம் வடிவினை இழந்த வாள்கள் - பகைவர்தம் நாடழித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மையில் நிலையிழந்த வேல்கள் - பகை யரசனை மோதி அழித்துக் கிம்புரி கழன்ற களிறுகள் - போர்க்களக் குருதிக்கறை படிந்த குளம்புகளையுடைய குதிரைகள் ஆகியவற்றுடன் கடல் நிகர் படையுடன் போரினைச் செய்து துளையிடப்பட்ட மார் புடன் நிற்கும் அதியமான் நெடுமான் அஞ் சியின் போர்த்திறமை போற்றி நிற்கின் றது புறநானூறு, அதியமான் புகழ் மேலும் உயர்கிறது.

'மறப்புலி உடலின் மான்கணம் உளவோ
மருளின விசும்பின் மாதிரத்து ஈண்டிய
இருளும் உண்டோ ஞாயிறு சினவின்
அச்சொடு தாக்கிப் பாருற்று இயங்கிய
பண்டச் சாகாட்டு ஆழ்ச்சி சொல்லிய
அரிமணல் ஞெமரக் கற்பக நடக்கும்
பெருமிதப் பகட்டுக்குத் துறையும்
உண்டோ?
எழுமரம் கடுக்கும் தாள்தோய் தடக்கை
வழுவில் வன்கைமழவர் பெரும
இரு நில மண்கொண்டு சிலைக்கும்
பொருநரும் உளரோ நீகளம் புகினே.'

'புலி சீறினால் எதிரே நிற்கும் மானி னம் உளவோ? ஞாயிறு எழுமாயின் ஓடாது நிற்கும் இருளும் வானில் உளதோ? ஆற் றல் மிக்க கடாவானது போகுதற்கு அரிய துறையும் உண்டோ? இல்லைஅன்றோ! அவை போல முழந்தாள்வரை நீண்ட வலிய கையி னையுடைய வீரர்க்குத் தலைவனே! நின் நாட்டைக் கைப்பற்றிப் போரிடும் வீரரும் உளரோ? நீ களம் புகுந்தால் எவர்தாம் நின்னை எதிர்க்க வல்லார்.'

அதியமான் நெடுமான் அஞ்சியின் போர்த்திறமையை போற்றிப் பாடுகின்றார் ஔவையார். விழுப்புண்களைத் தம் மெய் யிலிலே விரும்பி ஏற்றனர் எம்மவர்.

'விழுப்புண் படாத நாளெல்லாம்
வழுக்கினுள்
வைக்குந் தன்னாளை யெடுத்து''

என்பதற்கமைய விழுப்புண்படாத நாள் களைத் தம் வாணாளாகக் கருதாது இருந் தனர் எம்முன்னோர். போர்பற்றி எழுந்த உடற்புண் கண்டு உவகை மிகக்கொண்ட னர் முத்தாகவும், பவளமாகவும், வைர மாகவும், மாணிக்கமாகவும்தம்மெய்யிற்படு விழுப்புண்களைப் போற்றிமதித்தனர்.

''நெடுஞ்சேரலாதன் தன்னுடன் போரிட்ட ஆரியரையும்,யவனரையும் முறி யடித்தான். யவனர் கைகளைப் பின்பக்க மாகக் கட்டி அவர்தம் தலைகளில் நெய் யைப் பெய்து, தனது வஞ்சி நகரத்திற்கு அழைத்து வந்தான். அவர்களிடமிருந்த சிறந்த அணிகளையும் எடுத்துக்கொண் டான். இமயவரம்பன் தான் வென்ற ஏழு அரசர்களின் பொன்முடிகளை உருக்கித் தனது வெற்றிக்கு அணியாகப் பொன் மாலை ஒன்றை ஆக்கி அணிந்திருந்தான் என்றெல்லாம் பதிற்றுப்பத்து பகர்கின்றது. மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை என்னும் இரண்டு பாட்டுகளுக்கும் தலைவன் தலை யாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்னும் பாண்டியமன் னன். இவன் கோச்சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரவிரும்பொறை என் பானுடன் தலையாலங்கானத்திலே போர் செய்து வென்று அவனைச் சிறைப்படுத் தினான். போரின் புகழினால் இவன் பெய ரும் பெரிதாயிற்று. சோழன் குளமுற்றத் துக் துஞ்சிய கிள்ளிவளவனின் போர்த் திற மையைப் புறநானூற்றின் மூலம் போற்று கின்றார் ஆலூர்மூலங்கிழார்.

''காலனும் காலம் பார்க்கும் பாராது
வேல் ஈண்டு தானை விழுமியோர்
தொலைய
வேண்டிடத்து அடூஉம் வெல்போர்
வேந்தே
திசை இரு நான்கும் உற்கும் உற்கவும்
பெருமரத்து இலையில் நெடுங்கோடு
வற்றல் பற்றவும்
வெங்கதிர்க் கனலி துற்றவும் பிறவும்
அஞ்சுவரத் தகுந புள்ளுக்குரல் இயம்பவும்
எயிறுநிலத்து விழவும் எண்ணெய் ஆடவும்
களிறுமேல் கொள்ளவும் காழகம் நீப்பவும்
வெள்ளி நோன்படை கட்டிலொடு
கவிழவும்
கனவின் அரியன காணா நனவின்
செருச் செய் முன்ப.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வேல் நெருக்கம் கொண்ட பெரும் படை உடைய மேலான மன்னரையும் கொன்றழிக்கும் வெற்றிப் போராற்றல் உடைய வளவனின் போர்த்திறமையினால் எட்டுத்திக்கிலும் எரிகொள்ளிகள் எரிந்து வீழ்கின்றன. பெருமரங்கள் இலையற்றுக் கிளைகள் வற்றி உலர்கின்றன. அச்சந் தரும் பறவைகள் ஒலிக்கின்றன. தலை மயிர்களில் எவரோ எண்ணெய் வார்க்கின் றார்கள். பன்றி ஏற்றினை ஏறுகின்றது. ஆடைகள் களையப்படுகின்றன. வலிய படைக்கலங்கள் வைக்கப்பட்டுள்ள கட் டில்கள் முறிந்து வீழ்கின்றன'' என்ற தன் மையிலான இந்நிகழ்வுகள் அனைத்தும் பகைவர்தம் கனவிலும் நனவிலும் நிகழ் வதாகக் கூறுகிறது புறநானூறு.

சோழன் கரிகாற் பெருவளத்தானின் போர்த்திறமையைப் போற்றி நிற்கும் புற நானூறு-

''எல்லியும் இரவும் என்னாய் பகைவர்
ஊர்சுடு விளக்கந்து அழுவிழிக் கம்புலைக்
கொள்ளை மேவலை''

'அவன் பகலிலும் போர் செய்வான். இரவிலும் போர் செய்வான். பகைவன் ஊர்கட்குத் தீயிட்டு அந்த ஒளியிலே இர விலும் போர் செய்வான். பகைவர் ஊரார் அழுகின்ற ஆரவார ஒலி அவனுக்கு மிக விருப்பமானது.'

சோழனின் போர்த்திறம் இங்கே ஓங்கி நிற்கின்றது. பண்டைத் தமிழர்தம் போர்த் திறமைகள்மகளிர் தம்மான உணர்வினாலும் வீரஉணர்வினாலும் போற்றி வளர்க்கப்பட் டமையையும் இலக்கியங்கள் எடுத்தோது கின்றன. தம் வயிற்றிலே கருவாகி - கவின் பெறு வடிவிலே உருவாகி, தாம் கொடுத்த வீரப்பால் குடித்த மழலைகள் மறம் குன்றா மானமும், உரங்குன்றா வீரமும், உடை யோராய்த் திகழவேண்டும் என்பதைத் தமிழ்த் தாய்மார்கள் தமது இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தனர்.

''இடைப்படை யழுவத்துச் சிதைந்து
வேறாகிய
சிறப்புடையாளன் மாண்பு கண்டருளி
வாடுமுலையூறிச் சுரந்தன
ஓடாப் பூட்கை விடலை தாய்க்கே''

கையிலே வேல் தாங்கி - களத்திலே குவிந்து நின்ற படை பிளந்து பாரிய படை அழித்துப் பாங்குடனே போர்க்களத்தே புரண்டுவிட்டான் ஒரு வீரன். அவன் உட லும் சிதைந்துவிட்டது. மறக்குலத்துத் திலக மாய் அவனை வளர்த்துவிட்ட தாய் தன் சேயின் அருஞ்செயல்கண்டு அகமும் முக மும் ஒருங்கே மலர்கின்றாள். மைந்தனின் வீரம் கண்டு மாதாவின் முலைகள் பால் சுரக்கின்றன. 'போரில் என் மகன் புற முதுகிட்டு ஓடியிருப்பின் அவனுக்குப் பால் ஊட்டிய இம்முலையை அறுத்திடுவேன், என்று சபதம்பூண்டு தன் மகனின் போர்த் திறமையிலே கொண்ட நம்பிக்கையுடன் போர்க்களம் புகுந்து, தன்மகன் இறந்து கிடக்கும் நிலைகண்டு ஈன்றபொழுதிலும் பெருமகிழ்ச்சிகொண்டாள் தாய்.

''படையழிந்து மாறினனென்று பலர் கூற
மண்டமர்க்குடைந்தனனாயின் உண்ட
வென்
முலையறுத்திடுவென் யானெனச் சினை
இக்
கொண்ட வாளொடு படு பிணம்
பெயராச்
செங்களந் துழவு வோன் சிதைந்து
வேறாகிய
படுமகன் கிடக்கை காணூ
ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனளே''

போர்க்களத்தே வீரராய் வீழ்ந்துவிட்ட மைந்தரின் வீர உணர்வும் அவர்களைப் பெற்றெடுத்துப் பேணி வளர்த்த தாய் மாரின் மான உணர்வும் ஒருங்கே நிழலாடு கின்றன.

தரைப்போர்களில் ஏற்றமிகு வகையி னிலே எண்ணற்ற சாதனைகள் புரிந்துநின்ற பண்டைத் தமிழர் கடற் போர்களிலும் தலைசிறந்து விளங்கினர். அஞ்சாநெஞ்சுடன் கடலிற்பகைவருடன்போரிட்ட சேரமன்னன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பரதவன்' அல்லது 'கடல் மறவன்' எனப் போற்றப்படுகின்றான். கடலது பொங்கிச் சேரநாட்டை அழிக்க முற்பட்டபோது தன் வலிமையினாலும் தன்படையினரின் துணையினாலும் அக் கடலைப் பின்போக ஓட்டியமையால் செங்குட்டுவன் என்பான், 'கெடலருந் தானையோடு கடல்பிறக்கு ஓட்டிய செங்குட்டுவன்' எனப்பட்டான்.

கடற்கொள்ளைக்காரரான 'கடம்பர்' என்னும் இனத்தவரை இமயவரம்பனும், செங்குட்டுவனும் தத்தம் காலத்துக் கடற் போர்களில் முறியடித்துத் தம் வாணிகத்தை நிலைநிறுத்தினர். செங்குட்டுவன் பெற்ற கடற்போர் வெற்றிகளைப்போற்றி நிற்கின்றன பதிற்றுப் பத்தும் அகநானூறும். கடல்நீரை அரணாகக்கொண்டு அக் கடலிடையே வாழ்ந்துவந்த பகைவரைக் கப்பற் படையுடன் சென்று, அறவேயழித்துச் செங்குட்டுவன் பெற்ற வெற்றியினால் 'கடலோட்டிய வேல் கெழு குட்டுவன்', 'கடலோட்டிய வெல் புகழ் குட்டுவன்' எனப் பாராட்டப்பட்டான். புயலெனச் சீறிப் பெரும் அலையென மாறி ஆரிய மன்னரும் அவர்தம் படைகளும் அலறுமாறு அவர்களைத் தாக்கி, புகழினை உடைய இமயத்தின் மீது வளைந்த விற்பொறியைப் பதித்து, தன் சீற்றத்தாற் சினம்கொண்டிருந்த பகை வேந்தரைப் பணித்து வந்த சேரன் புகழை அழகாகப் பாடுகின்றது அகநானூறு.

''ஆரியர் அலறத் தாக்கிப் பேரிசைத்
தொன்று முதிர் வடவரை வணங்கு விற்
பொறித்த
வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்''

சேரனின் போர்த்திறம் இங்கே தோற்றம் கொடுக்கிறது. சோழன் கரிகாலன், வசபன் என்னும் மன்னனின் ஆட்சிக் காலத்தில் கடற்படையின் துணைகொண்டு இலங்கை மீது போர் தொடுத்தான். இப்படை எடுப்பில் கரிகாலன் பெருவெற்றி பெற்றான். வெற்றி பெற்ற கரிகாலன் பன்னீராயிரம் படையினரைச் சிறை செய்து சென்றான். கடலிலே கோட்டைகட்டிப் போதிய பாதுகாப்புடன் இருந்த கடம்பர் மீது படையெடுத்தனர் சேரநாட்டுவீரர்கள். யானை மீதேறி நின்று கடலில் இறங்கி வேல் வீசினர். பகைவரின் பாதுகாப்பு உடைபட்டது.

''கடும்பரிப் புரவி ஊர்ந்த நின்
படுந்திரைப் பனிக்கடல் உழந்த தானே''

''கெடல் அரும்பல் புகழ்நிலைஇ நீர்புக்கு
கடலொடு உழந்த பனித்துறைப் பரதவ''

என்ற அடிகளில் சேரமன்னன் அஞ்சா நெஞ்சுடன் கடலினிற் பகைவருடன் போரிட்ட பரதவன் அல்லது கடல் மறவன் எனப் போற்றப்படுகிறான்.

'கடற்கொள்ளைக் கூட்டத்தவராகிய கடம்பரையும் ஆரிய அரசர்களையும் யவன அரசர்களையும் இமய வரம்பன் வென்றடக்கி அவர்களிடம் இருந்து பெற்ற பொருட்களையும், அணிகலன்களையும், செல்வங்களையும் தன்னுடைய மாந்தை என்னும் தலைநகருக்குக் கொண்டுபோய் வீரர்களுக்கும் புலவர்களுக்கும் வழங்கியது போக எஞ்சியவை நிலத்திற் புதைத்து வைத்து நிலந்தின்ன விடுத்தான்' என்ற தன்மையில் இமயவரம்பனின் கடற்போர்த் திறமை பேசப்படுகிறது.

''வலம்படு முரசின் சேரலாதன்
முந்நீர் ஓட்டிக் கடம்பறுத்து இமயத்து
முன்னோர் மருள வணங்குவிற் பொறித்து
நன்னகர் மாந்தை முற்றத்து ஒன்னார்
பணிதிரை தந்த பாடு சொல் நன்கலம்
பொன் செய் பாவை வயிரமொடு ஆம்பல்
ஒன்று வாய் நிறையக் குவைஇ அன்றவண்
நிலந்தினத் துறந்த நிதியம்' என்ற மாமூலனார் பாடல் மூலம் இதனை அறிய முடிகின்றது.

பழந்தமிழ் மன்னர்களின் கடற்படை வலிமையினாலும் கடற்படை வீரரின் வன்மையினாலும் தமிழ்க் கொடிகள் கடல் கடந்தும் பறந்தன.

மாற்றான்மீது படையெடுத்துச்சென்று அவனை தோற்றோடச்செய்த மன்னர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது வெற்றியை உறுதி செய்யும் வகையில் பகையரசர்களின் காவல் மரங்களை வெட்டுதல் சிறந்தவொரு போர் மரபாகப் போற்றப்பட்டது. இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன் தன் பகைவரின் காவல் மரமாகிய கடம்பமரத்தை வெட்டினான் என்று பதிற்றுப் பத்துக் கூறுகிறது.

'பலர் மொசிந் தோம்பிய திரள் பூங்கடம்பின் கடியுடை முழுமுதறுமியவோய்' என்ற தொடர் இதனை உணர்த்துகிறது.

கடற்படையின் துணைகொண்டு பகைவர் மீது தொடுத்த கடற்போரில் அவர்களது காவல் மரமாகிய கடம்பையும் வெட்டி வீழ்த்தி அக்கடம்பினால் முரசு செய்து முழக்கினான்.

'வலம்படு முரசிற் சேரலாதன்
முந்நீரோடிக் கடம்பறுத்து' என்ற அகநானூற்றுப் பாடல் மூலம் இதனை உறுதி செய்திட முடிகிறது.

வஞ்சினம் கூறிப் போர்தனைப் புரிதலும் அப்போர்களில் திறமைகள் காட்டி வெற்றிகள் பெறுதலும் எம்மவரின் போர்ப் பண்புகளாக விளங்கின.

என்னை இளையன் எனப் புல்லிய மொழி மொழிந்த சினம் பொருந்திய அரசரைப் போரின் கண் சிதறப் பொருது அவர்தம் முரசத்தோடு கூட அவரைக் கைக்கொண்டிலேனாயின் எனது குடை நிழற்கண் வாழ்வார். தாங்கள் சென்றடையும் நிழல் காணாதே, கொடியன், எம் முடைய அரசன் என்று கருதிக் கண்ணீரைப் பரப்பிப் பழிதூற்றும் கொடுங் கோலை உடையேனாகுக' என்று தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் போர்க்களத்தில் வஞ்சினம் கூறி நிற்கின்றான் என்ற தன்மையில் புறநானூறு செழியன் புகழ்பாடுகிறது.

சோழன் நலங்கிள்ளி போர் செய்யப் புகுமுன்,

'என் உள்ளத்தை இகழ்ந்த அறிவில்லாதோன் துயில்கின்ற புலியை இடறிய குருடன் போலப் பிழைத்துப் போதலோ அரிது அவன் வருந்தும்படி போர் செய் யேனாயின் தம் நெஞ்சிலே காதல் கொள்ளாத பொதுப் பெண்டிர் மார்பில் என் மாலை புரளுவதாக' என்று வஞ்சினம் கூறிப் போர் செய்தமையையும் புறநானூறு பாடுகிறது.

'ஆற்றலுடை யோராற்றல் போற்றாதென்
உள்ள மெள்ளிய மடவோன் றெள்ளிதிற்
றுஞ்சு புலியிடறிய சிதடன் போல
உய்ந்தனன் பெயர்தலோ வரிதே மைந்துடைக்
கழைதின் யானைக்கால் அகப்பட்ட
வன்றிணி நீள்முனை போலச்சென்று அவண்
வருத்தப் பொரேனாயின் பொருந்திய
தீது இல் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தல் மகளிர்
ஒல்லாமுயக்கு இடைக் குழைக என்தாரே'

வஞ்சினம் கூறுவதிலும் எம்மவர் தமது போர்த்திறமைகளைப் புலப்படுத்தத் தவறவில்லை.

இவ்வாறெல்லாம் தரையிலும், கடலிலும் பெரும் போர்கள் நிகழ்த்தித் தமது வெற்றிக் கொடியைப் பட்டொளி வீசிப் பறக்கவிட்டனர் தமிழ்மன்னர்கள். போரில் வேட்கையும் இறப்பில் அஞ்சாமையும் பெற்றிருந்தனர் பண்டைத் தமிழர்கள். அம்பும் வேலும் நுழையும் போர் முனைகளைத் தேடிச் சென்று அங்கு நின்று போர்புரியும் மறப்பண்பை வளர்த்து நின்றனர் எம்மவர். அடிக்கின்ற கோலுக்கு அஞ்சாது மென் மேலும் சீறிவரும் பாம்பைப் போன்று செயல்புரிந்த வீரரின் வியத்தகு திறமையினால் எங்கும் தமிழன் புகழ் பரந்து வீசியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழருக்கென்று ஓர் இசை, நடனப் பாரம்பரியம்

நீண்டகால வரலாற்றைக் கொண்ட ஈழத் தமிழினம் தனித்துவமான பண்பாட்டைக் கொண்டுள்ளது. இத்தனித்துவமான பண்பாட்டை வலியுறுத்தும் காரணிகளில் கலைகள் முக்கியமானவை. ஈழத்தமிழரின் தனித்துவங்களை நிலைநாட்ட வேண்டிய வரலாற்றுக் காலகட்டமாகிய இன்று ஈழத்தமிழரின் இசை, நடனக்கலைகள் பற்றி இக்கட்டுரை சித்திரிக்கின்றது.

தென்னாசியாவில் இந்தியக் கலை மரபின் செல்வாக்கு பொதுவாகக் காணப்படினும், ஒவ்வொரு பிரதேசத்துக்கென வித்தியாசமான கலைப்பாரம்பரியம் காணப்படுகின்றது. இந்த வகையில் கடலால் பிரிக்கப்பட்ட ஈழத்திலும் தமிழ் நாட்டிலிருந்து வேறுபட்ட ஒரு மரபு காணப்படுவது ஒன்றும் அதிசயமான விடயமல்ல.

கர்நாடக சங்கீதமும் பரதநாட்டியமும் கற்றோர் மத்தியிலும், மற்றோர் மத்தியிலும் ஈழத்தமிழரின் இசை, நடனமாகக் கணிக்கப்படுகின்றன. நிறுவனபலமும், சமூகபலமும் இவற்றை வளர்ப்பதற்கு துணை நிற்கின்றன. ஆனால் பரந்துபட்ட மக்கள் மத்தியில் கிழக்கிலுள்ள கூத்திசை, நாட்டாரிசை, பண்ணிசை, கிராமிய மக்கள் மத்தியில் பயில்நிலையிலுள்ள ஆடல்வகைகளும், சமூகத்தில் கணிக்கப்படுவது இல்லை. உண்மையில் இவற்றிலே தான் ஈழத்தமிழரின் தனித்துவமான இசை நடன அம்சங்களைக் காணமுடியும்.

ஈழத்துத் தமிழரின் இசை நடன, நாடகப் பாரம்பரியங்களை மீட்டெடுத்து வளர்க்கும் சிந்தனை ஏலவே மேற்கிளம்பியுள்ள போதிலும், அரச ஆதரவு இன்மையும், தென்னிந்திய தொல்சீர்க் கலைகளான பரதம், கர்நாடக சங்கீதம் ஆகியவற்றையே ஈழத்துக் கலைகள் எனப்போற்றும் மனப்பான்மையும், கிராமிய மக்கள் கலைகளை பயில்நிலையில் பேணுவோரின் விட்டுக்கொடுக்காத மனநிலையும் இப்பணியை அவ்வப்போது முடக்கிவைத்துள்ளது.

கந்தையா
ஸ்ரீகணேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்சீர்க்கலைகளின் அடியொற்றி எமது கலைகளை மீட்டெடுத்து செம்மையுறச் செய்து மக்கள் மத்தியில் பரந்துபட்ட ஒரு பயில்நிலையை ஏற்படுத்துதல் காலத்தின் தேவை. இத்துறையில் நடைபெற்ற சில முயற்சிகள் குறிப்பிடற்குரியன. ஈழத்தமிழரின் கலை மீட்புப்பணி அறுபதுகளில் (மறைந்த) பேராசிரியர் சு. வித்தியானந்தனின் நாடக மீட்புடன் ஆரம்பிக்கப்பட்டது.

அறுபதுகளின் பிற்கூறில் ஈழத்து இசை எனும் எண்ணக்கரு வானொலியில் ஈழத்துப் பாடல்கள் ஒலிபரப்பும் நிலைமைக்கு வளர்த்தெடுக்கப்பட்டது. இதில் கு பரராஜசிங்கம், என். என். சண்முகலிங்கம், பேராசிரியர் க. கைலாசபதி ஆகியோர் முன்னின்றுழைத்தனர். முத்துசாமி, ரொக்கசாமி, பிச்சையப்பா, குலசீலநாதன் ஆகியோர் இசையமைத்த மெல்லிசைப்பாடல் ஈழத்துப்பாடல்களாக வெளிவந்தன. பத்மலிங்கம், முத்தழகு, சுஜாதா அத்தநாயக்கா, கலாவதி, சக்திதேவி, ஜெகதேவி ஆகிய பாடகர்களும் பங்களித்தனர்.

எண்பதுகளில் தமிழர்களின் பாரம்பரிய பண்பாட்டுப் புலங்களில் எழுந்த நாடகங்களில் ஈழத்து நாட்டார்ரிசையையும் பண்ணிசை கர்நாடக சங்கீதம் மற்றும் கூத்திசையையும் பொருத்தமான முறையில் கலந்து பயன்படுத்தப் பட்டன தாசிசீயஸின் பொறுத்ததுபோதும் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் மண்சுமந்தமேனியர், மாதொருபாகம் மௌனகுருவின் சக்தி பிறக்குது மற்றும் சங்காரம் குகராஜாவின் 'மனிதனும் மிருகமும்' முதலிய நாடகங்களில் கூத்திசை, நாட்டாரிசை, பண்ணிசை, கர்நாடகசங்கீதம் ஆகியன கலந்து பயன்படுத்தப்பட்டன.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் திருமதி நவராஜகுலம் முத்துக்குமாரு, கண்ணன் கூட்டுமுயற்சியில் ஈழத்து பாரம்பரிய இசைக்கோலங்கள் இசை நாடகங்களில் பதிவு செய்யப்பட்டு வெளியிடப்பட்டன. 1990 இல் நடைபெற்ற 'ஈழத்துத் தமிழரின் இசை நாடகம் பாரம்பரியம்' எனும் கருத்தரங்கில் தலைமையுரையாற்றிய யாழ்-பல்கலைக்கழக நுண்கலைத் துறைத்தலைவர் பேராசிரியர் சிவத்தம்பி ஈழத்து இசை நாடகப் பாரம்பரியம் ஆராயப்பட்டு மீட்டு வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்பதை மீளவலியுறுத்தினார். இந்த வழிகாட்டலில் நுண்கலைத்துறை விரிவுரையாளர் கலாநிதி சி. மௌனகுரு பல்கலைக்கழக நாடகப் பட்டறை மாணவர்களையும், நுண்கலைத்துறை நடன மாணவிகளையும் கொண்ட குழுவுக்கு நாட்டார் கூத்து நடனங்களையும், பாடல்களையும் பழக்கி அச்சுவேலி பாடசாலை ஒன்றில் மேடையேற்றியிருந்தார்.

இம்முயற்சிகள் எமக்கு ஒன்றை வலியுறுத்துகின்றன. மலையாளத்து கதகளி, கன்னட யக்ஷகானம், சூத்திர குச்சுப்புடி, மணிப்பூர் மணிப்புரி, சிங்கள கண்டிய நடனம் போல ஈழத்து நடனம் ஒன்றை உருவாக்க முடியும் என்பதே. எவ்வாறு ஈழத்து இசை ஒன்றை நாம் காணமுடியுமோ அவ்வாறே நடனமும் பொதுக் கலைமரபுகளான கர்நாடக சங்கீதம், பரத நாட்டியம் ஆகியவற்றோடு எமது சொந்தக் கலைமரபுகளையும் வளர்த்தெடுப்பதில் எவருக்கும் இரண்டாம் கருத்து இருக்க முடியாது

இக்கலைகளை மீட்டெடுப்பதில் தனியாள் ஆள் ஒருவரின் முயற்சி பல கைகளால் இணைக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்படவேண்டும். இசைவல்லுநர்கள், இசையமைப்பாளர்கள், கலை ஆய்வாளர்கள், நடனவித்தகர்கள், நாடக ஆய்வாளர்கள், நாடகவியலாளர்கள் நிறைந்த ஒரு குழு இப்பணியில் அமர்த்தப்பட்டு நிறுவனமயப் படுத்தப்பட்ட நிலையில் கலைமீட்புப்பணி நடத்தப்படவேண்டும். இக்குழுவில் கிராமங்களில் இக்கலைகளைப் பேணும் அண்ணாவிமார்ர், கலைஞர்கள் ஆகியோர் சேர்க்கப்படவேண்டும்.

போர்ச்சூழலினால் எமது இசை நடன நாடகக் கலைகள் காலத்தால் அழியுண்டு போகாது, காப்பாற்ற சம்பந்தப்பட்ட அனைவரும் முன்னின்று உழைத்தல் அத்தியாவசியமானது. பேணப்படும் இக் கலையை பயில்நிலையில் மாணவர்க்குப் போதிப்பது அதற்கான பாடவிதானம் செயல்முறைத்திட்டம் வகுத்து ஒழுங்குபடுத்துவது. பின்னர் அவற்றை அவைக் காற்றுகலைகளாக மேடையேற்றுதல் என்பன எமது கலைகளை நிலை நிறுத்த உதவும். இந்நிலைமை எமது தனித்துவத்தைக் கலையில் பேண வழிவகுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராளிகளான கவிஞர்கள் குரல்

## காவோலை அழுகிறது!

போராடப் புறப்பட்ட
குருத்தோலையை...
காரோடும்
ஆசைகாட்டி...
மேல்நாடு அனுப்ப
எண்ணி...
மேல்லோகம் அனுப்பிவிட்டு
காவோலை
அழுகிறது.

— *பைப்*

## இடர் நீங்க பாடுங்கள்!

சுந்தரத் தமிழால் கவிபாடும்
செந்தமிழ்க் கவிகாள், கலைஞர்காள்
வந்தனம் கூறி அழைக்கின்றேன்
எந்தமிழ் மக்கள் இடர் நீங்க
பைந்தமிழ் மொழியில் பாடுங்கள்!

- *தமிழேந்தி*

## கவிதை வரக் காணோம்!

விழியிரண்டும் கூர்ந்து ஆவலுடன் நாளும்
காத்திருந்து பார்த்தேன் கவிதைவரக் காணோம்
நேற்றுக் கூடப்பார்த்தேன் ஏமாற்றம் தானே மிச்சம்
காயமுற்றவேளை கவிதை தந்த கவியே
காற்றுலர்த்தும் நீரோ உங்கள் கவியூற்று
இல்லை என்று கூறி எழுதிவிடும் நாளை
காத்திருப்பேன் மீண்டும் கவிதை வருமென்று
வேற்றுநாடு சென்றோர் வேசம் போட்டு நின்றோர்
பார்த்து இங்கு நின்றோர் பார்வையாளர் போன்றோர்
தோலுரித்துக் காட்டி தொடுத்த கவிச்சரத்தை
அடுத்து ஒரு கவிதை வடித்து விடும் கவியே
நாளை காலை மலரும் என்ற சாரமதைக் கொண்டு.

— *ரவி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திய குருதி கொஞ்சமா?

நாம் சிந்திய குருதி கொஞ்சமா? - புலி
நரியைப் பார்த்து அஞ்சுமா?
தூக்கடா தமிழா! துவக்கினை - தமிழ்த்
தாயகம் மீளும் எமக்கடா!

வேங்கைத் தமிழா ஓடிவா - நம்
விடுதலைக் கீதம் பாடிவா!
தூங்கும் பொழுதைக் கொன்றிடு - போர்க்
களத்தில் புகுந்து வென்றிடு!

எங்கள் தாயகம் எரியுதே - பார்....
எங்கும் சிங்கள நரியடா;
தங்கத் தமிழா! எழுந்திடு - அவர்
தலைகளை வீழ்த்தித் திரும்பிடு!

□

கவிஞர்
மு. வே. யோ. வாஞ்சிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய தமிழரின் பரந்த எண்ணங்களின் எச்சங்கள்



"கேணியும், கால்நடைகள் முதுகு உரஞ்சும் ஆவுரஞ்சிக் கல்லும்."



"வழிப்போக்கருக்கு நிழலாக வாசற் புறக்கொட்டகையும் சங்கடப் படலையும்."



"பொதி சுமப்போரின் வசதிக்காக சுமைதாங்கி."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடக்குமுறையாளர்களின் அடாவடித்தனங்களுக்கு சாட்சியங்களாய்

அன்றைய காட்சியும் இன்றையகோலமும்





● நூல் நிலையம்





● நவீனசந்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பால்மணம் மாறும் முன்பே தீராத வடுக்கள்









சிந்திய குருதி தமிழீழம் மீட்பது உறுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெங்கொடுமைச் சாக்காடோ? எங்களின் தாய் மண்!









கொலைவெறி கொண்டு கொன்று குவித்தாலும்,
குலைநடுங்கச் செய்யும் போர் தொடரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக் கோட்டை



''அந்நியர்
ஆதிக்க
சின்னமாய்''



''நெஞ்சுரம்
மிக்க
புலிப்படையின்
வெற்றியின்
சின்னமாய்''

''26-9-90 கோட்டையில் "புலிக்கொடி பறக்கும் காட்சி''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டுச்சின்னங்களாய் தென்தமிழீழத்தில் எழுந்து நின்ற திருக்கோயில்



(படம் - 1955)

மட்டக்களப்பு - கொக்கட்டிச் சோலை
தான்றோன்றீஸ்வரர் கோயில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த திருக்கோணமலையில்,
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றும் தம்பலகமம்.



(படம் - 1955)

தம்பலகமம் கோணேசர் கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடியேற்றங்களால் இழந்துபோன தமிழ்ப் பிரதேசங்கள்

ச. குணராசா
எம். ஏ.

குடிசார் வரலாற்றுப் புவியியல் அடிப்படையில் திராவிட இனத்திற்குச் சொந்தமான இலங்கையின் மண்ணும் மக்களும், தம் வளத்தின் ஒரு பகுதியை இழக்க நேர்ந்த சம்பவம் கி. மு' 438 ஆம் ஆண்டு நிகழ்ந்தது. இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் இருந்த லாடா நாட்டின் மன்னன், தன் நாட்டிற்கு உதவாதவர்கள் எனக்கருதிய தன் மகன் சிங்ஹல விஜயனையும் அவனது தோழர்கள் எழுநூறுபேரையும் மரக்கலமொன்றில் ஏற்றி நாடு கடத்திவிட்டான். அவர்கள் தாமிரபர்னி என்ற, கொணாநதிக்கும் (காலஓயா) கதம்பநதிக்கு (அருவியாறு) இடைப்பட்ட பிரதேசத்தில் வந்து சேர்ந்தனர். சிங்ஹல விஜயனின் வருகையுடன் ஸ்ரீ லங்காவில் சிங்கள மக்களது தோற்றம் ஆரம்பமாவதாக வரலாற்றுச் செய்திகள் கூறுகின்றன. அவை கூறத்தவறிய செய்திகள் என்னவென்றால் விஜயனும் அவனது தோழர்களும் இலங்கையின் கரையில் இறங்கியபோது, இலங்கையில் நாகரிகத்தில் முன்னேறிய ஒரு மக்கட்கூட்டமும், பண்டைய வாழ்க்கைமுறையைக் கைக்கொண்டு வாழ்ந்த ஒரு மக்கட்கூட்டமும் வாழ்ந்து வந்துள்ளன என்பனதாம்.

''பகைவராக வந்த சிங்களவர் ஓரளவு நாகரிகமடைந்திருந்த மக்கள் வசத்தில் இந்த நாடு இருந்ததைக் கண்டனர்'' என பார்க்கர் என்பார் தன் ''புராதன இலங்கை'' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். ''இயக்கர்'' என்று வரலாற்று நூலில் கூறப்படும் இம்மக்கள் அரசியல் முறைகளுக்கு ஏற்ப வாழ்ந்தனர் என்று தோன்றுகிறது. அத்துடன் இவர்கள் ''நகரங்கள்'' என்று சொல்லக்கூடியதான, குறைந்தது இரண்டு குடியேற்றிடங்களைக் கொண்டிருந்தனர் என்றும் தோன்றுகிறது. ஐந்தாம் படை என்று நாம் இப்பொழுது கூறும் உட்பகையின் உதவிகொண்டு சிங்கள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர் இம் மக்களை இலகுவில் தம் ஆட்சிக்குக்கீழ் கொண்டுவந்தனர், எனத்தமது நூலில் இலங்கையின் குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத் தலைவராகவிருந்த ஏ.ஜி. ரனசிங்ஹ குறிப்பிட்டுள்ளார். இராமாயணம் போன்ற காவிய நூல்கள் இலங்கையில் நாகரிகமான ஒரு மக்கட்கூட்டத்தினர் வாழ்ந்து வந்த வரலாற்றினைக் கூறுகின்றன. இவ்வாறான நூலாதாரங்கள் வரலாற்றாய்வு அறிஞர்களை, குறிப்பாக மகாவம்சம் என்ற சிங்கள இதிகாச நூலை ஏற்றுக் கொள்பவர்களை, கவர்வதில்லை. ஆனால், இன்று அவர்களால் மறுக்க முடியாத ஆதாரங்களாக அகழ்வாய்வுகள் மூலம் கிடைத்த தொல்பொருட்சான்றுகள், இலங்கையில் சிங்ஹல ஆரியர்கள் வருவதற்கு முன்னரே, திராவிட மக்களும் அவர்களது கலாசாரமும் நிலவிவந்துள்ளன என்பதை நிரூபிக்கின்றனவாகக் கிடைத்துள்ளன.

இலங்கையில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே மனிதகுலம் நிலைபெற்றிருந்தது என்பதற்கு ஆதாரமாக, பலாங்கொடைப்பகுதியில் அகழ்வாய்வின் மூலம் கிடைத்த புராதன மனிதரின் எலும்புச் சுவடுகள் ஆதாரமாகின்றன. நியாண்டல்தால் மனிதனின் சுவடொத்த இவை இலங்கையில் ஆதிமனிதர்கள் வாழ்ந்தனர் என்பதற்கு ஆதாரமாகின்றன. பொம்பரிப்பு, ஆனைக்கோட்டை, பரந்தன், இப்பன்கடுவ, பத்தியகம்பளை, கல்மனை, கித்துல்கல், குருவித்தை, பத்ததொம்பலெனை முதலான இலங்கையின் பல பகுதிகளிலும் அகழ்ந்தெடுக்கப்பட்ட முதுமக்கள் தாழிகளும், ஆதிக்குடியேற்றங்களுக்குரிய பாத்திரங்களும் என்புகளும் சிங்கள ஆரியரின் வருகைக்கு முன்னரே இந்த மண்ணில் நாகரிகமான மக்கட்கூட்டமொன்று வாழ்ந்துள்ளது என்பதை நிரூபிக்கும் சான்றுகளாக இன்று மாறிவிட்டன. மரணமடைந்த தலைவனை பெரும் தாழி (பானை) ஒன்றினுள் இட்டு, அவன் உபயோகித்த பொருட்களையும் கூடவே வைத்து, புதைக்கின்ற ஈமத்தாழி முறை, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட திராவிட மக்களது கலாசாரம் என்பது இன்று நிருபணமாகிவிட்டது. இந்தியாவில் தாமிரபரனி ஆற்றின் அருகில் ஆதிச்சநல்லூர் எனும் இடத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்ட முதுமக்கள் தாழிகள் இதனை மேலும் நிரூபிக்கின்றன. அத்தாழிகளில் எழுதப்பட்ட பிராமிய எழுத்துக்கள், திராவிட மொழி எழுத்துக்களின் மூலம் எனவும் கூறப்படுகின்றன. ஆனைக்கோட்டையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட ஈமத்தாழியில் காணப்பட்ட எழுத்து ''கோ வேந்து'' என கலாநிதி இந்திரபாலாவால் வாசிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் இலங்கையில் சிங்ஹல ஆரியர் வருவதற்கு முன்னரே திராவிட மக்களும் அவர்தம் காலசாரமும் நிலை பெற்றிருந்தன என்பதனை நிரூபிக்கின்றன.

பண்டைய இலங்கையின் வடபெரும் பகுதி நாகதீபம் எனவும், தென் பெரும் பகுதி தம்பபண்ணை அல்லது தாமிரபர்னி எனவும் இரு தெளிவான புவியியற் பகுதிகளாக விளங்கின. (படம் - 1). கதம்பநதி




எனப்படும் அருவியாற்றுக்கும் நாகபொக்கணை, திரிகூடம் எனும் பகுதிகளுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கேயுள்ள பிரதேசம் நாகதீபம் எனப் பட்டது. நாகதீபத்தில் யாழ்ப்பாணக்குடா நாடு, அதன் அயற்றீவுகள், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு முதலான பிரதேசங்கள் அடங்கியிருந்தன. இப்பகுதிகளில் நாகர் எனப்படும் மக்கட்கூட்டத்தினர் உயர்ந்த கலாசாரத்துடன் வாழ்ந்து வந்து உள்ளனர். தென்பகுதியான தாமிரபர்னியில் இயக்கர் எனப்படும் மக்கட்கூட்டத்தினர் பரவலாகப் பல காட்டுக்குடியிருப்புகளை உருவாக்கிக் கொண்டு வெவ்வேறு தலைமைகளில் வாழ்ந்துள்ளனர். திரிகூடம், அரித்தகிரி, யக்குர கலை, லக்கலை நிகும்பிலாவனம், துமரக்கை, விந்தனை, மகியங்கனை, சிறிஸ்தவத்து முதலானவை இயக்க மக்களது குடியிருப்புகளாகும். தென்பகுதியிலும் நாகர்களின் குடியிருப்புகள் இருந்துள்ளன. கல்யாணி (களனியா), நனிகிரி என்பன அத்தகைய குடியிருப்புகளாகும். நாகதீபத்தில் இயக்கச்சி போன்ற இயக்க குடியிருப்புகள் இருந்துள்ளன.

நாகதீபத்தில் நாகர்களின் செழிப்பான குடியிருப்புகளாக நாகதீவு (நயினாதீவு), கதிரமலை (கந்தரோடை), ஆனைக்கோட்டை, நாகர்கோயில் (வல்லிபுரம்), ஜம்புக்கோளம் (காங்கேசன்துறை), நாகபடுவான் (கரியாலைநாகபடுவான்), குருந்தன்குளம் மகாதீர்த்தம் (திருக்கேதீஸ்வரம்), மகாவில்லாச்சி என்பன விளங்கின. இவர்கள் வர்த்தகம், பயிர்ச்செய்கை என்பவற்றில் வல்லவர்களாக இருந்துள்ளனர். நாக வழிபாட்டையும் லிங்க வழிபாட்டையும் கொண்டிருந்தார்கள். தாமிரபர்னி இயக்கர்கள் இயற்கை வழிபாட்டையும் பைசாச வழிபாட்டையும் கொண்டிருந்தனர்.

எனவே சிங்ஹல ஆரியரின் வருகைக்கு முன்னரே இலங்கை முழுவதிலும் நாகர், இயக்கர் என்ற ஆதித்திராவிட மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதற்கு, பரவலாக இலங்கை எங்ஙனும் கண்டெடுக்கப்பட்ட பெருங்கற் பண்பாட்டுக்கால மட்பாண்டங்கள், ஈமத்தாழிகள் என்பன நிரூபிக்கின்றன. இலங்கை முழுவதும் முதலில் திராவிடருக்குச் சொந்தமாக விளங்கியது.

தாமிரபர்னியில் வந்திறங்கிய விஜயனும் அவனது தோழர்களும் தென்னிலங்கையில் வாழ்ந்த இயக்கத் திராவிடரை வெற்றிகொண்டு பல குடியேற்றங்களை நிறுவிக்கொண்டனர். தாமிரபர்னியின் இயக்கத்தலைவியாக விளங்கிய குவேனி என்பாள். அதற்குத் துணை போயினள். உபதிஸ்சகமம், அநுராதகமம், உருவெலகமம், கஜயரகமம், மகாகமம் முதலான பல குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டன. இவ்விடங்களில் வாழ்ந்த இயக்க மக்களில் ஆண்கள் அனைவரும் அழிக்கப்பட்டு, பெண்கள் சிறையெடுக்கப்பட்டு, தம் மனைவியராக்கிக் கொண்டனர். பாண்டிநாட்டிலிருந்தும் லாடா நாட்டிலிருந்தும் பெண்களும் ஆடவரும் தருவிக்கப்பட்டு தாமிரபர்னியின் ஆற்றங்கரையில் குடியமர்த்தப்பட்டனர். மகாவலிகங்கை, மாணிக்ககங்கை, களனிகங்கை முதலான பள்ளத்தாக்குகளில் சிங்ஹல ஆரியர்கள் தம் குடியேற்றங்களை நிறுவிக்கொண்டனர். இயக்கக்குழுக்கள் தமக்குள் பகைத்துக்கொண்டு பிளவுற்று நின்றதால், தென்னிலங்கை, ஆரியரிடம் பறிபோனது. ஆனால் அவர்களால் நாகதீபத்தினைக் கைப்பற்றவோ தமது குடியேற்றங்களை அங்கு நிறுவவோ இயலாது போய்விட்டது.

தென்னிலங்கையைச் சிங்கள ஆரியர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். விஜயனின் பின்னர் 281 ஆண்டுகள் (கி மு. 438-கி.மு 177 வரை) தாமிரபர்னிப் பிரதேசத்தில் சிங்கள ஆட்சி நடந்தது. இந்த ஆட்சிக்கு கி.மு.177 இல் முடிவு வந்தது. அவ்வேளை சிங்கள இராச்சிய மன்னனாக விளங்கிய தேவநம்பிய தீசனின் சகோதரரான சுரதீசன், இரு தமிழ்த்தலைவர்களினால் தாக்கப்பட்டான். சேனன், குத்திக்கன் என்ற இந்த இரு தமிழ்த்தலைவர்களை மகாவம்சத்தை மொழிபெயர்த்த டேர்னர், கடற்படையிலும் குதிரைப் படையிலும் சிறந்த இரு தமிழர் எனக் கருதுவார். கைகர். என்பார் இவர்கள் இருவரையும் 'இங்கு குதிரைகள் கொண்டு வந்த ஒரு கப்பல் காரனின் மக்கள்' என்பர். எவ்வாறாயினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் சிங்கள ஆரியரிடம் இழந்த தாமிர பர்னி அரசினை சேனன், குத்திக்கன் என்ற தமிழர்கள் கைப்பற்றி இருபதாண்டுகள் அநு ராதபுரத்திலிருந்து அரசாண்டனர்.

மீண்டும் தென்னிலங்கை இராச்சியம் சிங்களவர் வசமானது. மீண்டும் இலங்கை எல்லாளன் காலத்தில் சிங்களவர் ஆதிக்கத் திலிருந்து மீட்கப்பட்டது. கி. மு. 145 ஆம் ஆண்டு, பெரும்படையுடன் தென்னிலங்கை மீது படையெடுத்த எல்லாளன் என்ற தமிழ் இளவரசன், அசேலன் என்ற சிங்கள மன் னனைக்கொன்று அநுராதபுரத்தை கைப்பற் றிக்கொண்டான். கி. மு. 101 ஆம் ஆண்டு வரை நாற்பத்தி நான்கு ஆண்டுகள் அவன் தமிழரின் சுதந்திர மன்னனாக விளங்கி னான். துட்டகைமுனு என்ற சிங்கள இள வரசனிடம் தமிழரின் சுதந்திரத்தை இவன் இழக்கநேர்ந்தது. எல்லாளன் காலத்தில் தமிழர் இராட்சியம் களனி நதிக்கும் (கல் யானி), கல்லோயா நதிக்கும் வடக்கே பரவிக் கிடந்தது. ஆக தென்புறத்தே உருகுணை என்ற சிறியதொரு பிரதேசமே சிங்கள ஆட் சியாளரிடம் இருந்தது என்பது குறிப்பிடத் தக்கது. (படம் - 2.)



படம்-2

காலத்திற்குக் காலம் ஆதித் திராவிட மக்களது நாடாகிய தென்னிலங்கைப்பிரதே சம் சிங்கள மன்னரது ஆட்சிக்குக் கீழ் வந் தது. சுதந்திரம் இழப்பதும் பின்னர் தமிழ் மன்னரால் கைப்பற்றப்பட்டுச் சுதந்திரம் பெறுவதுமாக விளங்கியது. கி. மு. 43 தொட்டு கி. மு. 29 வரை அநுராதபுரத்தி லிருந்து புலகித்தன், பாகியன், பண்ய மாறன், பிலய மாறன், தத்திகன் முதலான ஐந்து தமிழ் மன்னர்கள் ஒருவர் பின் ஒருவ ராக இலங்கையை ஆண்டுள்ளனர். முதலா வது சேனன் காலத்தில் ஸ்ரீமாற ஸ்ரீவல்ல பன் என்ற பாண்டிய மன்னன் இலங்கை யைக் கைப்பற்றினான். பின்னர் சோழமன் னர்களும் இலங்கையைக் கைப்பற்றி ஆண் டுள்ளனர். கி. பி. 10 ஆம் நூற்றாண்டில் இலங்கை முழுவதையும் ஈழமண்டலம் அல் லது மும்முடிச் சோழபுரம் எனப்பட்டது. சோழ ஆட்சி நிலவியது. சோழராட்சியிலி ருந்து மீண்டும் தென்னிலங்கையை பராக் கிரமபாகு என்பான் கைப்பற்றிக் கொண் டான். மாகன் என்ற தமிழ் மன்னன் கைப் பற்றும் வரை இலங்கை சுதந்திரத்தை இழந் திருந்தது. மாகன் பொலநறுவையில் தன் ஆட்சியை நிலைப்படுத்திக்கொண்டான். சிங் களவரால் தமிழரிடமிருந்து கைப்பற்றப்பட் டிருந்த நிலங்கள், சொத்துக்கள் என்பனவற் றை இவன் மீளப் பெற்றுக்கொடுத்தான். இதனை மகாவம்சம் இவ்வாறு கூறும், ''சிங் கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடை யே தர்மமான சமத்துவம் பாராட்டிய பண் டைய எல்லாளனைப்போல மாகன் விளங் கவில்லை. இவன் தன் தமிழ்த்துணைவரிடம் விசேடமாக அன்பு பாராட்டி அவர்களுக்கு வயல்களும், புற்றரைகளும், வீடுகளும், தோட்டங்களும், பணியாட்களும், மாடுக ளும், எருமைகளும்-தொகுத்துக் கூறுங்கால் சிங்களவரின் உடமைகள் யாவற்றையும் கொடுத்தான். அந்தோ, காலனின் பூதங் கள் போன்ற அந்தத் தமிழ்ப்பூதங்கள் இப் படியே இந்த இராச்சியத்தையும் சமயத்தை யும் அழித்தனர்.'' என மகாவம்சம் புலம் பும். தமிழர் பிரதேசங்களைச் சிங்கள ஆதிக் கத்திலிருந்து மீட்டு, இராசரட்டை எனப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும் வடபகுதியில் குடியேறியிருந்த சிங்கள ஆக்கிரமிப்பாளர்களை, தென்புலம் பெயர வைத்தவன் மாகன் ஆவான்.

கி. பி. 1236 ஆம் ஆண்டு இரண்டாம் பராக்கிரமபாகு என்ற சிங்கள மன்னனிடம் தென்னிலங்கை பறிபோனது. மாகன் தென்னிந்தியாவுக்கு கரந்தோடி, பின்னர் விஜய காலிங்கன் என்ற நாமத்துடன் யாழ்ப்பாண இராச்சியத்தின் மன்னனானான். அக்காலத்தில் யாழ்ப்பாண இராச்சியம் மேற்கே குதிரை மலையிலிருந்து கிழக்கே கதிரைவெளி வரை ஒரு நேர்கோடு கீறில் அக்கோட்டிற்கு வடக்குப்புறப்பிரதேசம் முழுவதையும் அடக்கியிருந்தது. (படம் - 3). கி. பி. 1505 இல்




படம் - 3

இலங்கைக்குப் போர்த்துக்கேயர் வந்தபோது இலங்கையில் ஐந்து இராச்சியங்கள் இருந்தன. யாழ்ப்பாண இராச்சியம் தமிழ் மன்னனாலும் கண்டி இராச்சியம் நாயக்கத் தமிழ் மன்னனாலும் ஆளப்பட்டன. கண்டி இராச்சியத்தின் நிர்வாகத்தின் கீழ் மட்டக்களப்புப் பிரதேசம் (அம்பாறை உட்பட) அடங்கியிருந்தது. கோட்டை, சீதாவாக்கை, இரய்கம என்ற மூன்று மேற்குக்கரையோர இராச்சியங்கள் சிங்கள மன்னர்களின் ஆதிக்கத்தின் கீழ் விளங்கின. இலங்கையின் பெரும்பகுதியில் தமிழ் அரசாட்சி நிலவியது. ஒல்லாந்தர் காலத்தில் கண்டி இராச்சியம் தவிர்ந்த கரையோரங்கள் அனைத்தும் அவர்களால் நிர்வகிக்கப்பட்டன. மட்டக்களப்புக்கரையோரமும் அவர்களால் கைப்பற்றப்பட்டிருந்தது. அவர்கள் வடபகுதியையும் கிழக்குப்பகுதியையும் தமிழர் வாழும் பிரதேசமாக ஒரு பிரிவாக்கி யாழ்ப்பாணப் பிரதேசம் எனப் பெயரிட்டு நிர்வகித்தனர் (படம் - 4). அவ்வாறு பிரிப்பது அவர்களுக்கு இலகுவாகவிருந்தது. இவ்விரு பெரும் பகுதிகளி




படம் - 4

லும் தமிழ் மக்கள் தொடர்ந்து வாழ்ந்து வந்தமையும், யாழ்ப்பாணப்பிரதேசம் எனப்பட்ட இப்பெரும் பகுதியையும் ஏனைய சிங்களப்பகுதிகளையும் தெளிவான பல மைல்கள் அகலமான காடு பிரித்திருந்தமையும் தனித்ததொரு பிரதேச அலகாக அவர்களைக் கருதவைத்தது. பிரித்தானியர்கள் இலங்கையை- ஐந்து மாகாணப்பிரிவுகளாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்து ஆண்டனர். (படம் - 5) தெதுறு ஓயாவிற்கும் யான் ஓயாவிற்கும் வடபகுதி




முழுவதும் வடமாகாணம் எனப்பட்டது. இது இன்றைய வடமாகாணப் பிரிவிலும் பார்க்க இருமடங்கு பெரியது. யான் ஓயாவிலிருந்து கும்புக்கன் ஓயாவரையிலான கிழக்குப்பகுதி கிழக்கு மாகாணம் எனப்பட்டது. அவர்களின் மாகாணப்பிரிவு குடிசார் அடிப்படையில் அமைந்ததும் புவியியற் பிரதேச அடிப்படையில் அமைந்த பிரிவுகளாகும். 1946 ஆம் ஆண்டளவில் இலங்கையை ஒன்பது மாகாணங்களாக இறுதியாகவகுத்த போது தமிழ் மக்கள் வாழ்கின்ற வடக்கு பிரதேசம் ஒரு மாகாணமாகவும், கிழக்குப் பிரதேசம் ஒரு மாகாணமாகவும் பிரிக்கப் பட்டன. தமிழரின் தாயகப்பிரதேசங்கள் குடிசார் அடிப்படையில் நிர்வாகப்பிரிவுகளாக வகுக்கப்பட்டன.

ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து இலங்கை விடுபட்ட போது, அவர்கள் தமிழ்மக்களது நலனைப் பேணத்தவறி விட்டனர். போர்த்துக்கேயர் இலங்கையைக் கைப்பற்றியபோது, சிங்கள இராச்சியம், தமிழ் இராச்சியம் என இரு தெளிவான அரசியற்பிரிவுகள் இலங்கையில் இருந்தன. தமது நலனுக்காக போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் பின்னர் வந்த ஆங்கிலேயரும் ஒருங்கிவைத்து ஆண்டனர். ஆங்கிலேயர் தமது ஆதிக்கத்தை விடுவித்துக்கொண்டு கப்பலேறியபோது நிச்சயமாக, முன்னர் இருந்த வகையில் ஸ்ரீ லங்காவையும் ஈழத்தையும் வகுத்துக்கொடுத்திருக்க வேண்டும். அக் காலத்து அரசியல் தலைவர்களும் தெளிவான இரு இனப்பிரிவுகளுக்கான இராச்சியத்தினைக்கோராமல், ஒற்றையாட்சியின் கீழ் வாழலாமெனத் தப்புக்கணக்குப் போட்டு விட்டனர். எனவே ஆங்கிலேயர் தமிழ் அரசையும் சேர்த்துச் சிங்கள ஆட்சியாளரிடம் ஒப்படைத்து விட்டு 1948 இல் இந்த மண்ணிலிருந்து வெளியேறினர்.

இக்காலகட்டத்தின் பின்னர் சிங்கள அரசு திட்டமிட்டவிதத்தில் குடியேற்றங்களை நிறுவத்தொடங்கியது. வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கும் சிங்கள மாகாணங்களுக்கும் இடையிலான காட்டுப் பிரதேச எல்லைகளை அழித்துக் குடியேற்றத் திட்டங்களை உருவாக்கி அவற்றில் சிங்கள மக்களைக் குடியமர்த்துவதன் மூலம் தமிழரின் பாரம்பரியப் பிரதேசத்தை அபகரிக்கும் விதத்தில் செயற்பட்டது, மகாவலி கங்கையிலிருந்து கும்புக்கன் ஓயாவரை பரவியிருந்த மட்டக்களப்புப் பிரதேசத்தைத்திட்டமிட்டமுறையில் இரு அலகுகளாகப்பிரித்தது. மட்டக்களப்பு மாவட்டம் 7004 சதுர கிலோமீற்றர் பரப்பினைக்கொண்டிருந்தது. அதில் மூன்றில் இரண்டு பங்கு பரப்பினை அதாவது 45 9 சதுர கிலோமீற்றர் பரப்பினைப் பிரித்து எடுத்து அம்பாறை மாவட்டத்தினை உருவாக்கியது. ஆக 2464 சதுர கிலோமீற்றர் பரப்பே மட்டக்களப்பு மாவட்டமாக எஞ்சியது. இந்த இரு பிரிவுகளையும் நிரந்தரமாகப்பிரித்து, அம்பாறை மாவட்டத்தினைச் சிங்களக் குடியேற்றமாக மாற்றிவிடும் எண்ணத்துடன் கல்லோயாக் குடியேற்றத்திட்டம் மாபெரும் குடியேற்றத்திட்டமாக உருவாக்கப்பட்டது. அம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாறை மாவட்டம் உட்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் 1946 ஆம் ஆண்டில், மொத்தச்சனத் தொகையில் 5.9 % தொகையினரே சிங்கள மக்களாகவிருந்தனர். கல்லோயாக் குடியேற்றத்திட்டத்தோடு, அம்பாறை மாவட்டத்தில் தொடர்ந்து உருவாக்கப்பட்ட சங்கமம் குடியேற்றம், நாவல் ஆறுத்திட்டம், அம்பலன் ஓயாத்திட்டம் என்பவற்றின் மூலம் சிங்களவர்கள் ஏராளமாகக் குடியமர்த்தப்பட்டனர். அதனால் அம்பாறை மாவட்டத்தில் இன்று 37.8% சிங்கள மக்களாகிவிட்டனர். 42.5% மக்கள் முஸ்லீம் மக்களாகவும் ஏனையோர் தமிழராகவும் உள்ளனர். (படம் ; 6)




இன்றைய மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ளும், அதன் எல்லைப் புறங்களிலும் மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்பகுதியில் வடக்குத் தெற்காக அமைந்துள்ள மதுறுஓயாக் குடியேற்றத்திட்டம் மட்டக்களப்பில் 10% நிலப்பரப்பினைத் துண்டித்து மாத்தளை மாவட்டத்துடன் சேர்த்து விட்டுள்ளது. அதன் எல்லையில் அமையும் உல்கித்தஓயாக் குடியேற்றத்திட்டம் எல்லைப்புறக்காடுகளை அழித்து தனித்துவப் பிரிவினை இல்லாது செய்து விடுவதோடு மட்டக்களப்பு மாவட்டத்தின் பரப்பினுள் குடியிருப்புக்களை நிறுவ இடம் கொடுத்துள்ளது. 1991 ஆம் ஆண்டுக் குடிசனக் கணக்கெடுக்கும்போது. 1981 இல் 3.4% சிங்களமக்களைக் கொண்டிருந்த மட்டக்களப்பு மாவட்டம் குறைந்தது 15% சிங்கள மக்களைக் கொண்ட மாவட்டமாக மாறியிருக்கும். மதுறுஓயாத்திட்டமும் உல்கித்த ஓயாத்திட்டமும் இதனைச் சாதித்திருக்கும்.

சிங்களக் குடியேற்றங்களினால் பெரிதும் பாதிக்கப்பட்ட மாவட்டம் திருகோணமலையாகும். கந்தளாய்த்திட்டம் திருகோணமலையின் பரப்பில் 5%ஐச் சிங்களக்குடியேற்றமாக ஆரம்பத்தில் விழுங்கிவிட்டது. அதனைத்தொடர்ந்து உண்டாக்கப்பட்ட மொறவெவாத்திட்டம் (முதலிக்குளம்). திருகோணமலையின் எல்லைப் புறங்களில் ஆரம்பிக்கப்பட்ட பதவியாத் திட்டம், வாகல்கடவெலத்திட்டம் என்பனவும் ஏராளமான கிராமவிஸ்தரிப்புத்திட்டங்களும் திருகோணமலையில் சிங்களக்குடியேற்றங்களை அதிகரிக்க வைத்தன. 1921 இல் திருகோணமலை மாவட்டத்தில் 4.4% மக்களே சிங்களவராவர். 1946 இல் இந்த எண்ணிக்கை 14.7% ஆக அதிகரித்திருந்தது, குடியேற்றத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டதன் பின்னர் திருகோணமலைமாவட்டத்தில் இன்று சிங்கள மக்கள் 33.4% ஆக மாறிவிட்டனர். திட்டமிடப்பட்ட செயற்பாடு இதுவாக அமைந்தது. தமிழரின் பாரம்பரிய நிலங்கள் அபகரிக்கப்பட்டன. அவைபற்றிய தகவல்கள் கச்சேரிக்காணிக் கிளையில் பேணப்பட்டிருந்தன. அவற்றினை கலவரத்தின் போது திட்டமிட்டு எரியூட்டி அழித்தும் விட்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா மாவட்டத்தில் பாவற்குளம் உலுக்குளம், மாமடுவ, மடுகந்த முதலான குடியேற்றத்திட்டங்கள் சிங்கள மக்கள் குடியேற்றத்தை இந்தமாவட்டத்தில்உருவாக்கி விட்டன. இம்மக்களுக்கெனத் தனித்த ஒரு உதவி அரசாங்கஅதிபர்பிரிவுஇயங்கிவருவதும் குறிப்பிடத்தக்கது. இன்று வவுனியாவில் 16.6% மக்கள் சிங்களவராவர். முல்லைத்தீவு மாவட்டத்தில் சிங்கள மீனவரைக் குடியமர்த்த எடுத்த முயற்சிகள் தோல்வி கண்டதால், மணலாற்றுப்பகுதியில் வெலிஓயாக்குடியேற்றத் திட்டமொன்று உருவாக்கப்பட்டு வருகின்றது. கென்ற்பாம், டொலர்பாம் என்ற இரு பெரும் தனியார் தோட்டங்களையுள்ளடக்கிய பகுதியில் இத்திட்டம் உருவாகி வருகின்றது, எப்படி மட்டக்களப்பை அம்பாறையிலிருந்து பிரித்து கொண்டார்களோ அதே போன்ற குடியேற்ற சதியாக வெலிஓயாத்திட்டம் விளங்குகிறது. திருகோணமலை மாவட்டத்தையும் முல்லைத்தீவு மாவட்டத்தையும் அப்படியே நடுவால் குடைந்து எடுத்து அநுராதபுர மாவட்டத்துடன் சேர்க்கும்திட்டம் இதுவாகும் இதனால் முல்லைத்தீவு மாவட்டம் தனது பரப்பில் 6% இழக்கவுள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக வடக்கிற்கும் கிழக்கிற்கும் இடையிலான தரையோரப் போக்குவரத்தில், இப்பிரதேசம் பறிபோனால் வடக்கும் கிழக்கும் நிரந்தரமாக நிலப்பரப்பினால் பிரிக்கப்பட்டுவிடும்

இவ்வாறான குடியேற்றத்திட்டங்கள் ஆங்கிலேயர் ஆதிக்கம் நிலவி விலகிய காலத்திலிருந்து திட்டமிட்ட முறையில் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழ் மீட்பில் கவனம் செலுத்திய தலைவர்கள். மண் மீட்பில் கவனம் செலுத்தத்தவறியதின் விளைவே இதுவாகும். □

## படம்: 6-க்கு உரிய படவிளக்கம்

1. பாவற்குளம் குடியேற்றம்,
2. உலுக்குளம் ,,
3. மடுகந்த ,,
4. வெலிஓயாக் ,,
5. பதவியாக் ,,
6. மொறவெவ ,,
7. கந்தளாய் ,,
8. கிராம விஸ்தரிப்புக் ,,
9. ,, ,, ,,
10. ,, ,, ,,
11. ,, ,, ,,
12. ,, ,, ,,
13. உல்கித்தஓயாக் குடியேற்றம்
14. மதுறு ஓயாக் குடியேற்றம்
15. கல்லோயாக் குடியேற்றம்

---

**பின்னிணைப்பு :**

அட்டவணை : I

மாவட்டங்களின் பரப்பளவுகள் (சதுர கிலோ மீற்றரில்)

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | — | 2072 |
| மன்னார் | — | 2002 |
| வவுனியா | — | 2645 |
| முல்லைத்தீவு | — | 1966 |
| மட்டக்களப்பு | — | 2465 |
| அம்பாறை | — | 4539 |
| திருகோணமலை | — | 2618 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை : 2

வடக்கு - கிழக்கு மாகாணங்களின்/மாவட்டங்களின் சனத்தொகை (இனரீதியாக)-1946

| இனம் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|---|
| தமிழர் — | 97.3 | 62.3 | 73.6 | — | 50.3 | — | 44.5 |
| முஸ்லிம்கள் — | 1.2 | 30.1 | 8.7 | — | 42.0 | — | 29.2 |
| சிங்களவர் — | 1.0 | 3.7 | 16.6 | — | 5.9 | — | 14.7 |
| ஏனையோர் — | 0.5 | 3.9 | 1.1 | — | 1.8 | — | 11.6 |

1 - யாழ்ப்பாணம். 2 - மன்னார். 3 - வவுனியா. 4 - முல்லைத்தீவு
5 - மட்டக்களப்பு. 6 - அம்பாறை 7 - திருகோணமலை.

அட்டவணை : 3

வடக்குக் கிழக்கு மாவட்டங்களின் சனத்தொகை - இனரீதியாக (சதவீதத்தில்) 1981

| இனம் | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|---|
| தமிழர் — | 97.6 | 64.3 | 76.4 | 89.9 | 72.0 | 20.4 | 36.5 |
| முஸ்லீம்கள்— | 1.6 | 26.1 | 6.8 | 4.7 | 23.9 | 41.5 | 29.3 |
| சிங்களவர் — | 0.8 | 8.2 | 16.6 | 5.2 | 3.4 | 37.8 | 33.4 |
| ஏனையோர்— | — | 1.4 | 0.2 | 2.2 | 0.7 | 0.7 | 0.8 |

1 - யாழ்ப்பாணம். 2 - மன்னார். 3 - வவுனியா. 4 - முல்லைத்தீவு.
5 - மட்டக்களப்பு. 6 - அம்பாறை. 7 - திருகோணமலை.

*சங்கிலி மீது சீற்றமும் ஆத்திரமும் கொண்ட போர்த்துக்கேயர் அவனை ஒழித்துக்கட்டப் பிலிப்பு த ஒலிவீரா என்னும் தலைவனின் கீழ் கி. பி. 1619இல் பெரும் படையொன்றை அனுப்பினர். சங்கிலியும் படை திரட்டினான். இருபடைகளும் பெரும் போர் நிகழ்த்தின. எனினும் சங்கிலியின் படை தோற்கடிக்கப்பட்டது. சங்கிலி பிடிபட்டான். ''யாழ்ப்பாணத் தமிழரசு'' ஒலிவீராவின் கையிற் சிக்கியது. இதனோடு தமிழரசர் பரம்பரையும் முடிந்தது.*

*அரச பரம்பரை ஒழிந்தது. தன்மானம் என்னும் பெரிய தனத்தை இழந்து விட்டோமே என்னும் மனப்பாரம் யாழ்ப்பாணத்து மகன் ஒவ்வொருவனது இதயத்தையும் அமுக்கியது. மதித்தற்கரிய மாணிக்கமாகிய சுதந்திரத்தைச் செல்வத்தை இழந்து விட்டோமே என்ற கவலை மக்களை வாட்டியது. வீடுதலை வேட்கை பொங்கி எழுந்தது.*

பேராசிரியர் கணபதிப்பிள்ளை
இலங்கை வாழ் தமிழர் வரலாறு. (1956)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொன். சிவகுமாரன்

தமிழர் உரிமைக்காக
தன்னுயிர் தந்த தலைமகன்
அவன் சிலைகூட
அடக்குமுறையாளர்களுக்கு
சிம்ம சொப்பனம் தான்.



உரும்பராய் சந்திக்கு சமீபமாக சிவகுமாரன் சிலைகள்
சிதைக்கப்பட்டமுன்னைய சிலைகளும், இன்றைய காட்சியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமனிதர்களான
# மணிவிளக்குகள்

தங்கமண்; தமிழீழத் தாய்மண் பெற்ற
தவப்புதல்வீர்; விழுதெறிந்த விருட்சமாகி
இங்குநீர் நிழலானீர்; நிமிர்ந்து நாங்கள்
இப்பொழுது வாழ்கின்றோம்; இனியும் வாழ்வோம்
வெங்கொடுமை தாங்கியெம் மண்ணில் நீங்கள்
விளைந்தீர்கள்; அறுவடையை நாங்கள் செய்தோம்
மங்காதும் நாமங்கள் தமிழீழத்தில்...
மாமனிதர் ஆனீர்கள் எம்தேசத்தில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ தேசிய விருதுகள்

தமிழீழ மண்ணினதும், மக்களினதும், மேன்மைக்காக உழைக்கும் மக்களிலிருந்து அவர்கள் ஆற்றிவரும் இலக்கியப் பணி, கலைப்பணி, மக்கள் நற்பணி, போராட்டப் பங்களிப்புகள், புதிய கண்டுபிடிப்புகள், தீரச்செயல்கள், அரசியற் பணி, மருத்துவம், விஞ்ஞானம், கல்வி, பத்திரிகைத் துறை போன்ற பல்வேறு துறைகள் சார்பில் ஒவ்வொருவரை மதித்து அவர்களுக்கு தமிழீழ தேசிய விருது வழங்குவதென தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் முடிவுசெய்துள்ளது.

ஆண்டு தோறும் பத்து துறைகளுக்கு இதுபோன்ற விருது வழங்கப்படும். ஒரு பவுண் எடைகொண்ட புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட தங்கப்பதக்கமும், இருபத்தையாயிரம் ரூபா ரொக்கமும் ஒவ்வொரு விருதிலும் அடங்கும். இவ்விருதுகள் ஆண்டுதோறும் விடுதலைப்புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் முத்தமிழ் விழாவில் வழங்கப்படும்.

ஒவ்வொரு துறையிலும் தத்தம் அறிவை, ஆற்றலை மக்களுக்காக, மண்ணுக்காக பயன்படுத்தும் உண்மைத் திறமையாளர்களை உலகறியச் செய்யவும் அவர் தம் தொண்டு மேலும் சிறக்கச் செய்வதுமே இவ்விருதுகள் வழங்கப்படுவதன் நோக்கமாகும்.

## இவ்வாண்டு விருதுகள் பெறும் மாமனிதர்கள்

| | |
|---|---|
| மறைந்த திரு. க. சிவானந்தசுந்தரம் | — மக்கள் பணி |
| மறைந்த திரு. ஆ. இராசரத்தினம் | — போராட்டப் பங்களிப்பு |
| மறைந்த திரு. பொ. அருணாசலம் | — உயிரை மதிக்காத தீரச்செயல் |
| திரு. கலைஞானி | — அரும்பொருள் தொல்பொருள் பாதுகாப்பு |
| திரு. நடராசா | — போராட்ட பங்களிப்பு |
| திரு. காசி ஆனந்தன் | — இலக்கியம் |
| திரு. சிவஞானசுந்தரம் | — பத்திரிகை |
| திரு. திருநாவுக்கரசு | — கலை நாடகம் |

- தமிழீழ விடுதலைப் புலிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க. சிவானந்தசுந்தரம்

யாழ். மாவட்டம் வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட மறைந்த க. சிவானந்தசுந்தரம் அவர்கள் தமிழீழ விடுதலைக்காக தன் வாழ்நாளின் இறுதிவரை அஞ்சாத அரிமாவாகச் செயற்பட்டு வீரமரணத்தைத் தழுவிக்கொண்டவர்.

*1956* இல் சிங்கள ஆட்சியாளரின் மொழித்திணிப்பையும், அடக்குமுறைகளையும் எதிர்த்து தமிழ் அரச பணியாளர்களுடன் சேர்ந்து அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தை உருவாக்கி அதன் முதல் தலைவராகச் செயற்பட்ட சிவானந்தசுந்தரம் அவர்கள் தமிழ் சமூகத்துக்காக ஆற்றிய அரும்பணிகள் அளப்பரியன.

*1961* இல் தமிழ் மக்கள் எழுச்சிபெற்று சிங்கள ஆட்சியாளருக்கு எதிராக நடத்திய அறப்போரின்போது தமிழரசுக் கட்சியின் பொறுப்புச் (நிர்வாகச்) செயலாளராக இருந்து அப்போராட்டம் வெற்றிகரமாக நடப்பதற்கு பெரும் பணியாற்றியவர்.

பின்னர் தமிழரசுக்கட்சியுடனான கருத்து வேறுபாடுகளினால் அதிலிருந்து ஒதுங்கிய சிவானந்த சுந்தரம் அவர்கள் விடுதலைப்புலிகள் இயக்கம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வீறுடன் நடத்தியவேளையில், அரசியல் நடத்தியோர் மக்களுக்கு முகம் கொடுக்க முடியாது ஓடி ஒளிந்தவேளையில், தமிழீழ மக்கள் மன்றத்தை அமைத்து தமிழ் மக்களுக்கு நற்பணியாற்றியவர்.

இந்திய அரசுப் படைகளும் அதிகாரிகளும் தமிழீழத்தில் மேற்கொண்ட தமிழின விரோதப் போக்கை எதிர்த்து குரல் கொடுத்த சிவானந்தசுந்தரம் அவர்கள் இந்தியப் படையைத் திருப்பி அழையுங்கள் என்று இந்திய அதிகாரிகளின் முன்னர் வீரமுழக்கமிட்டவர். அதனாலேயே இந்திய அதிகாரிகளின் கோபத்துக்குள்ளாகி அவர்கள் தூண்டுதலின் பேரால் *21.10.88* அன்று இனத்துரோகிகளினால் படுகொலை செய்யப்பட்டு அவர் மடிந்தாலும், அவரின் விடுதலை முழக்கம் தமிழர் இதயங்களில் என்றும் ஒலித்துக்கொண்டே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொ. அருணாசலம்

வவுனியா மாவட்டம் பாலமோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட பொ. அருணாசலம் அவர்கள் பண்டைத் தமிழரின் வீரம் வீழ்ந்து படவில்லை என்பதை வெளிப்படுத்தி வீரமரணத்தைத் தழுவிக்கொண்டவர்.

கடந்த நவம்பரில் மாங்குளம் இராணுவ முகாம் விடுதலைப் புலிகளினால் வெற்றி கொள்ளப்பட்டவேளையில், ஆயுதத்துடன் தப்பியோடிய சிங்களச் சிப்பாய் ஒருவன் தான் வவுனியாவுக்குத் தப்பிச் செல்ல வழிகாட்டுமாறு துப்பாக்கியைக் காட்டி மிரட்டிய போது இந்த பொ. அருணாசலம் என்னும் 54 வயதுடைய வன்னிக்கிழவர் அந்த சிங்களச் சிப்பாயை சாதுரியமாக மடக்கிச் சண்டையிட்டார்.

ஆயுதத்தை இழந்த சிங்களச் சிப்பாய் கை எறிகுண்டை எடுத்தபோதும் அஞ்சாது அருணாசலம் அவர்கள் அவனோடு போராடியபோது கைக்குண்டு வெடித்து அந்தச் சிப்பாய் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டான். விழுப்புண்ணேற்ற அருணாசலம் அவர்கள் யாழ். மருத்துவமனையில் சிகிச்சை பலனளிக்காத நிலையில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் இவரின் பெயர் என்றும் நிலைத்து நிற்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆ. இராசரத்தினம்

யாழ். மாவட்டம் மட்டுவிலைச் சேர்ந்த மறைந்த ஆ. இராசரத்தினம் அவர்கள், தமிழீழம் விடுதலை பெற வேண்டும். அதற்காகப் போராட ஒரு இயக்கம் காண வேண்டும் என இலட்சியக் கனவு கண்டவர். அவரது கனவுகள் நனவாகும் காலத்தில் அதைப் பார்க்க அவர் இன்று எம்முடன் இல்லை.

1956 இல் சிங்கள அரசின் மொழித் திணிப்பினால் கொதித்தெழுந்த இராசரத்தினம் அவர்கள் தமிழ் தொழிலாளர்களை தொழிற்சங்கங்கள் புறக்கணித்து ஒதுக்கியவேளையில் தமிழர்க்கெனத் தனித் தொழிற்சங்கம் வேண்டுமெனச் சிந்தித்து, அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் உருவாக அயராது உழைத்து அதன் தலைவராகவும் செயற்பட்டார்.

தமிழ் மக்கள் உரிமைகளை அமைதிவழிப் போராட்டங்களின் மூலம் சிங்கள ஆட்சியாளரிடமிருந்து பெறமுடியாது என்பதை நன்குணர்ந்த அவரின் சிந்தனை ஆயுதப் போராட்டத்தின் பக்கம் திரும்பியது.

1973 இல், யாழ். பண்ணைப் பாலத் தகர்ப்பு முயற்சி தொடர்பாக பொலிசாரினால் தேடப்பட்டு தலைமறைவாகித் தமிழகம் சென்ற இராசரத்தினம் அவர்கள் எல்லாளன் என்ற பெயரில் பத்திரிகைகளுக்கு ஆக்கங்களை அளித்தார். மாணவர் பேரவை சிதைவையடுத்து தமிழீழ விடுதலைக்கு புது இயக்கம் காணப் புறப்பட்ட பிரபாகரன் அவர்களை தமிழகத்தில் சந்தித்து அவருக்கு உறுதுணையாகச் செயற்பட்டார்.

உலக விடுதலைப் போராட்ட வரலாறுகள், இராணுவ அமைப்புக்குத் தேவையான செய்திகளை ஆங்கில நூல்களிலிருந்து மொழி பெயர்த்துக் கொடுத்ததுடன், தலைவர் பிரபாகரனால் உருவாக்கப்பட்ட புதிய தமிழ் புலிகள் இயக்கத்துக்கான பெயர் உருவாவதற்கு உதவியாக இருந்தார். அந்த அளவுக்கு அவர் விடுதலையை விரும்பிச் செயற்பட்டவர்.

இன்று விருட்சமாக வளர்ந்துவிட்ட விடுதலை இயக்கத்தின் அடித்தள அமைவில் அவரின் அரும்பங்கும் இருந்தது. ஆஸ்த்மா நோயுடனும், பட்டினியுடனும் ஒருபுறம் போராடிக்கொண்டே தமிழீழ விடிவுக்காகப் பணியாற்றி உயிர்நீத்த இராசரத்தினம் அவர்கள் தமிழீழத்தின் நேதாஜி என தமிழ்மக்களால் போற்றப்படுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞானி

யாழ். மாவட்டம் குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட கலைஞானி அவர்கள் தனித்து நின்று தமிழீழத்தின் அரும்பொருட்காட்சியகமாகச் செயற்பட்டு வருகிறார்.

கலைஞானி அவர்கள் தமிழீழத்தின் பல பகுதிகளிலுமிருந்து சேகரித்த பண்டைய நாணயங்கள், கலைப்பொருட்கள், தொல் பொருட்கள், பழைய ஏட்டுச்சுவடிகள், கையெழுத்துப்படிகள் (பிரதிகள்) என்பவற்றையெல்லாம் தனது ஆற்றலுக்கு மீறிய வகையில் பேணிப்பாதுகாத்து வருகிறார்.

அவர் தேடி வைத்திருக்கும் அருங்கலைப் பொருட்களை வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள் பல இலட்சம் ரூபாவுக்கு விலை பேசிய பொழுது கோடியாகக் கொடுத்தாலும் தரப்படமாட்டேன் என்று அடித்துக் கூறியவர்.

சொந்த இருப்பிட வசதியோ, அன்றி நிலையாக வசிப்பதற்கு கட்டிட வசதியோ இல்லாத நிலையிலும் அனைவரும் வியக்கும் வகையில் தொல்கலைப் பொருட்களைச் சேகரித்துப் பேணி வருகிறார் என்றால் தமிழனின் பண்டைய அரிய கலைப் பொருட்கள் தமிழீழத்தை விட்டு வெளியே செல்லக்கூடாது என்பதில் அவர் கொண்டுள்ள உறுதிப்பாடே காரணியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடராசா

திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட காளிக்குட்டி நடராசா என்ற நடேசண்ணர் அவர்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தன் உறுதியான பங்களிப்பின் மூலம் மக்கள் மனதில் நிலையாக நிற்பவர்.

விடுதலைப் புலிகளுக்கு உதவிகள் புரிந்தமைக்காக சிறிலங்கா இராணுவத்தினரால் இவரது மைத்துனர் இருவர் கொல்லப்பட்ட போதிலும் இந்திய இராணுவத்தினரால் இவரது குடும்பம் பல அல்லல்களுக்குள்ளாக்கப்பட்ட போதிலும், எதுவித கலக்கமோ தயக்கமோ இன்றி தொடர்ந்தும் விடுதலைப்புலி இயக்க வீரர்களுக்கு உறுதுணையாக நிற்பவர்.

பெரும் இராணுவ முற்றுகையில் விடுதலைப் புலி இயக்க வீரர்கள் சிக்கி வெளியே வரமுடியாதிருந்த வேளைகளில், அவர்களின் உணவுத் தேவைகளுக்காக வேட்டையாடி வந்தும் உணவுப் பொருட்களைச் சேகரித்து வந்தும் வெளியே தகவல் சேகரித்தும் பல வழிகளால் போராட்டத்துடன் இணைந்து நிற்கிறார்.

மேலும் அவரது மைத்துனர் இருவர், அவரது மூத்தமகன் ஆகியோர் இயக்க முழுநேர உறுப்பினர்களாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் வேளையிலும், தன்னையும் முழுநேர இயக்கப் பணிக்கென ஒப்படைத்துள்ளார். அவரது குடும்பமும் முற்று முழுதாக இயக்கப் போராளிகளுக்கு உறுதுணையாக இருந்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞர் காசி ஆனந்தன்

மட்டக்களப்பு மாவட்டம் அமிர்தகழியைப் பிறப்பிட மாகக் கொண்ட கவிஞர் காசிஆனந்தன் சிறந்த போராட்ட இலக்கியங்களைப் படைத்து தமிழுலகம் போற்றுகின்ற உணர்ச்சிக் கவிஞராகத் திகழ்ந்து வருகிறார்.

அவர் படைத்த பாடல்களில் பெரும்பாலானவை தமிழுரிமை நெருப்புக்களாகவே இருந்தன. 1965 இல் தமிழன் கனவு என்னும் காவியத்தின் மூலம் இன்றைய போராட்ட நிலையை போராட்ட முறையை அன்றே அவர் கனவு கண்டு படம் பிடித்துக்காட்டுகிறார்.

எமது இயக்கம் உருவாகுவதற்கு நீண்ட காலத்துக்கு முன்பே

மறவர் படைதான் தமிழ்ப் படை.<br>
குலமானமொன்றுதான் அடிப்படை<br>
வெறிகொள் தமிழர் புலிப்படை.<br>
அவர் வெல்வார் என்பது வெளிப்படை.

என்று பாடி விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு தீர்க்கதரிசனத்தோடு அன்றே கட்டியங் கூறியவர். தமிழ் தேசிய விடுதலை உணர்வுகளையே அவர் பாடல்கள் முதன்மைப்படுத்தியதால் மிகச் சிறந்த இலக்கியவாதியாக இருந்தும் அவர் 'இலக்கிய உலகினால்' ஒதுக்கப்பட்டவர்.

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினையை இலங்கைக்கு வெளியே (சென்னையில்) 1963 இல் முதன்முதல் உண்ணாவிரதப் போராட்டம் மூலம் எடுத்துச் சென்றவர். சிங்கள அரசின் அடிமை முறியான குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தை ஏற்க மறுத்து தான் வகித்து வந்த அரச பணியைத் துறந்த முதல்வர் அவர். தமிழுரிமைப் போரில் அவர் காட்டிய தீவிரம், நீண்ட கால சிறையையும், தலைமறைவு வாழ்க்கையையும் அவருக்குத் தந்தது. அவர் மட்டுமன்றி அவரின் தம்பியர் இருவர் தங்கை ஆகியோரும் ஆண்டுக் கணக்காக சிங்களச் சிறையில் வாடியவர்கள்.

கவிஞர் அவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டிருக்கிறார். விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்ட அவர் தம்பி சிவஜெயம் என்ற மேஜர் சந்திரன் இந்தியப்படையினருடனான மோதலின்போது வீரமரணமடைந்தவர்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் கவிஞர் படைத்த இலக்கியங்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் சிறப்பான இடம் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவஞானசுந்தரம்

யாழ். மாவட்டம் வடமராட்சிப் பகுதியிலுள்ள கரவெட்டியில் பிறந்த சிவஞானசுந்தரம் அவர்கள் 1965 செப்டெம்பர் 15 ஆம் திகதி முதல் ஈழத்தில் சிரித்திரன் என்ற பெயரிலான கார்ட்டூன் சஞ்சிகையை வெளியிட்டார் ஈழத்தில் சஞ்சிகை வெளியிடுவது என்பதுவே தற்கொலைக்கு ஒப்பான செயல் என்று கருதப்பட்ட காலத்தில் நகைச்சுவை உணர்ச்சி ததும்பும் கார்ட்டூன் சஞ்சிகையை வெளியிடத் தொடங்கியவர் சிரித்திரன் சுந்தர் எனப்படும் சிவஞானசுந்தரம் அவர்கள் எந்தவிதமான பின்னணிப் பலமும் இல்லாமல் சிரிக்கவும் சிந்திக்கவுமான பத்திரிகையை சுமார் இருபதுவருடங்களுக்குமேலாக வெளியிட்ட சுந்தர் அவர்கள் புத்தக வெளியீட்டுத்துறையிலும் கால் பதித்தவர். தூரிகை கொண்டு சமூக முரண்பாடுகளைப் படம் பிடித்துக் காட்டி மனப்பக்குவத்தை ஏற்படுத்தப் பாடுபட்டவர். தமிழ் தேசிய இன உணர்வின் ஊற்று நிலங்களில் ஒன்றாக விளங்கி வரும் சுந்தர் அவர்கள். சிறிலங்கா அரசு வழங்கிய சாகித்திய மண்டலப் பரிசை நிராகரித்ததன் மூலமாகவும் தமது மானவுணர்வை வெளிப்படுத்திக் காட்டியவர்.

பத்திரிகை வெளியீட்டுத்துறையில் குறிப்பிடப்படவேண்டியவரான திரு. சுந்தர் அவர்கள் நோய்வாய்ப்பட்டிருக்கும் இன்றைய நிலையிலும் தொடர்ந்து பத்திரிகை வெளியீட்டுக்காக உழைத்து வருபவராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநாவுக்கரசு

யாழ். மாவட்டத்திலுள்ள நாயன்மார்கட்டுப் பகுதியில் பிறந்தவரும் எஸ். ரி. அரசு என்று பலராலும் அறியப்பட்டவருமான திருநாவுக்கரசு அவர்கள் தமிழீழத்தின் நாடகத்துறை வரலாற்றில் குறிக்கப்பட வேண்டியவர் ஆவர். கலையரசு பாணியைப் பின்பற்றிய நாடகங்களில் தேர்ச்சி மிக்கவரான அரசு நாடகம் சார்ந்த அனைத்துத் துறைகளிலும் பயிற்சி மிக்கவர். நாடக பிரதி தொடக்கம் ஒப்பனை வரையில் அனைத்தையும் நுணுக்கமாக நுணுகி ஆராய்ந்து மேடையேற்றும் அரசு அவர்களின் முதலாவது நாடகம் கானல்வரியாகும். கலைவாணர் நாடக மன்றத்தின் இயக்குனராக இருக்கும் அரசு அவர்கள், தாம் கற்பனையில் வடித்த ஒவ்வொரு பாத்திரத்தையும், தாமே உருவாக்கி மேடையில் தோன்றும் ஒவ்வொரு பாத்திரத்திலும் தமது முத்திரையைப் பதிப்பவராவார். புராண, வரலாற்று நாடகங்களை மேடையேற்றுவதில் அனுபவம் மிக்கவர். நாடகத்துறையில் ஏறத்தாழ ஐம்பது ஆண்டுக்கால ஈடுபாடும், பட்டறிவும் கொண்டவர். 'குத்துவிளக்கு' என்னும் திரைப்படத் தயாரிப்பில் ஈடுபட்டதன் ஊடாக திரைப்படத் துறையிலும் அறிமுகமானவர்.

சிறுவயதில் இந்தியாவில் சிற்பத்துறையில் பயிற்சி பெற்றவரான அரசு அவர்கள் சிறந்த புகைப்படக் கலைஞரும் ஆவார். தமிழுணர்வு கொண்டவரென்பதுடன் 1961 இல் இடம்பெற்ற அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டு வீரத் தழும்பு பெற்றவர் ஆவார்.

விடுதலைப் போராட்டம் வீறுடன் வளர அரசு அவர்கள் நாடகத் துறையில் இன்றும் தன் பங்களிப்பை நல்கி வருபவர் ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

□ இன்ப விழா

முத்தமிழ் விழா

சன் ஸ்ரார்

ஜுவலறி

147B (337) கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

[H-5]

□ எங்கள் சிந்தை

கவர்ந்த விழா

மறுமலர்ச்சிக் கழகம்

பதிவு இல. 004

யாழ். பல்கலைக் கழகம்

நியூ புஷ்பா

ஜுவல்லர்ஸ்

284, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

[H-6]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

□ கபிலேஸ்
ஜுவல்லர்ஸ்
280, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(H-7)

தமிழீழ மண்ணில்
நடக்கும்
விழாவினை
வாழ்த்துகின்றோம்.

"முத்தமிழ்" விழா
சிறக்க
எங்கள்
நல்வாழ்த்துக்கள்!

□ யாழினி
ஜுவல்ஸ்
144, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(H-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

□ தமிழுக்குப் பெருமை சேர்க்கும் விழா!

○ ஈ. எஸ். கே. நகைத் தொழிற்சாலை

82/3, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

(H-9)

□ *வாழ்த்துகின்றோம்! வரவேற்கின்றோம்!*

○ துரையப்பா பத்தர்

இராஜகோபால்

123, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

(H-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

□ "முத்தமிழ்" விழாவை வாழ்த்துகின்றோம்!

பாரத்

ஸ்ருடியோ

கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

□ *யாழ் நகரின் சிறந்த புகைப்படப்பிடிப்பாளர்கள்*

(H-11)



□ "முத்தமிழ் விழா" வாழ்க!

பி. அம்பலவாணர்

ஜுவலர்

119, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

□ *நம்பிக்கையான தங்க நகை வியாபாரிகள்*

(H-12)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☐ "முத்தமிழ்" விழா சிறக்க வாழ்த்துகிறோம்!

**சீமாட்டி நகைமாளிகை**

220 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

☐ நவீன வடிவங்களில் தங்க நகைகள்

(H-13)



☐ இனிய தமிழ் விழா, முத்தமிழ் விழா!

**சரிதா ஜுவல்லர்ஸ்**

**241, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

☐ 22 கரட் தங்க நகைகளுக்கு

(H-14)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

□ "முத்தமிழ்" விழா
வாழ்க!

(H15)-

உதயா
ஜுவல்லர்ஸ்
188, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

நியூ லக்கி ஸ்டார்
ஜுவல்லறி
229, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

□ "தமிழ் மொழி"
வளர்க!

(H-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்,
இசை,
நாடகம்,
வளர்க!

(H-17)

நியூ ராதிகா

ஜுவல்லறி

189, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தமிழ்
விழா
சிறக்க

இந்திரா ஜுவல்லறி
183, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(H 18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காம்பில் மணக்கும்
மல்லிகை"

□ நியூ சியாமளா ஜுவல்லறி மாட்
173 1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

□ புதுப்புது வடிவங்களில்
தங்க நகை உற்பத்தியாளர்கள்.

[H-19]

"காதில் மணக்கும்
மல்லிகை"

நியூ சாந்தி ஜுவலர்ஸ்
167, கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.

□ மனம் மகிழும் நகைகளை
விநியோகிப்போர்.

[H-20]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" அழகிய தங்க
பவுண் நகைகளுக்கு "

வேம்பா,
நஞ்சா,
தமிழ்மொழி!

## நதியா ஜுவல்லறி

2, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(H-21)


---


" மின்சார
ஒப்பந்தகாரர் "

விரும்பிக்
கற்பது
தமிழ் மொழி!

## வி. ரி. ஆர். சிங்கம்

7, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[H-22]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

□ நியூ பாமா ஹாட்வெயர்ஸ்
11/3, அருச்சுனா வீதி,
(ஸ்ரான்லி வீதி)
யாழ்ப்பாணம்.

" முத்தமிழ் விழாவை "

○ கட்டடப் பொருள்
விற்பனையாளர்கள்

(H-23)

சுவையும் தரமும் உள்ள ○
உணவு வகைகளுக்கு

" வாழ்த்துகின்றோம் "

ஹோட்டல் பரடைஸ்
91, கஸ்தூரியார் வீதி,
□ யாழ்ப்பாணம்.

(H-24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் மூன்றும் வாழ்க !

நியூ சிற்றி ரேடர்ஸ்

135, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

(H-25)

கனியே அமிழ்தே, தமிழே வாழ்க !

சண்முகா ஏஜென்சி

63, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

[H-26]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரேடியோஸ் பதி

58, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

766, பருத்தித்துறை வீதி,
நல்லூர்-

☐ "உயிர் தமிழுக்கு

☐ உடல் மண்ணுக்கு"

[H-27]



கணபதி ஸ்ரோர்ஸ்

40, கஸ்துரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

☐ வாழ்க!

☐ தமிழ் மொழி!

(H-28)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முத்தமிழ் விழா"வை

"இனிய விழா"

**கல்யாணி கிறீம் ஹவுஸ்**
*73, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

**ராஜ்மரினா ரெக்ஸைல்ஸ்**
*28, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

வாழ்த்துகின்றோம்.

(H-29)

முத்தமிழ் விழா

மறுமலர்ச்சிக் கழக..
பதிவு இல. 004
யாழ். பல்கலைக் கழகம்

(H-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழுக்குப்
பெருமை
சேர்க்கும்
விழா!

## லிங்கம்ஸ் ஹவுஸ்

6, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(H-31)

விழா
சிறக்க
வாழ்த்துகின்றோம்!

## வாகினி ரெக்ரைல்ஸ்

81, பெரியகடை
யாழ்ப்பாணம்.

(H-32)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் விழாவினை
வாழ்த்துகின்றோம் !

நியூ சி கே. பீ. ரெக்ஸ்ரைல்
7 (74), பெரியகடை,
யாழ்ப்பாணம்

(H-33)

முத்தமிழ் விழாவினை
வரவேற்கின்றோம்.

சி. எஸ். கைலாசம்பிள்ளை
அன் சன்ஸ்
76, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

H-34)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(H-35)

வாழ்த்துகின்றோம்!

# சரண்யா ரெக்ஸ்

174(86), காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

விழா சிறக்கட்டும்!

# " பிள்ளையார் "

251, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(H-36)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் தமிழர் விழா,
முத்தமிழ் விழா!

(H-37)


விஜிதா
ரெக்ஸ்ரைல்
109, பெரியகடை,
யாழ்ப்பாணம்.


எழிலார்ந்த விழா,
முத்தமிழ் விழா!

(H-38)


"அல்டி"
269/1, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிப்பெரும் விழா

சாந்தி

ரெக்ஸ்ரைல்

157, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(H-39)

தனியிடம் பெறுக!

சிவநாதன்ஸ்

159, நவீன சந்தை,
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(H-40)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரைப் பெருவிழா!

# "சிவம்"

14*A*, நவீனசந்தை,
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(H-41)



முத்தமிழ் விழா!

# சோதி
# புடைவை மாளிகை

14, நவீனசந்தை,
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(H-42)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ விழாவினை

# த. சங்கரப்பிள்ளை அன் சன்ஸ்

21, நவீனசந்தை
யாழ்ப்பாணம்.

○ வாழ்த்துகின்றோம்

(H-43

○ நல்லவைகள்

# " கிறவுண்ஸ் "

22A, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்

○ நடக்கட்டும்

H(-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டும்

நான் மடிந்து போவதற்கு முன்னே — எம்
நற்றமிழாள் அரியணையில் வீற்றிருக்க வேண்டும்.
தேன் கலந்த சொல்லெடுத்துப் பாடி — அத்
தெய்வமொழிப் பூவடியை யான் புகழ வேண்டும்.

காவியங்கள் பல பிறக்க வேண்டும் — போர்க்
களத்திறந்த தமிழ்மறவர் கதை உரைக்க வேண்டும்.
ஓவியங்கள் சிற்பங்கள் யாவும் — அவ்
ஒப்புயர்வில் மாவீரர் புகழிசைக்க வேண்டும்.

குண்டு எறி ஊர்திகளை ஓட்டி — எம்
குலமகளிர் எதிரிகளை வென்றுவர வேண்டும்.
தொண்டடிமை நாற்பண்பு யாவும் — சற்று
தொலைவிருத்தி விடுதலைக்கு தோள் கொடுக்க வேண்டும்.

அண்டை அயல் நாட்டவர்கள் எம்மை — ஓர்
அடிமை இனம் என எண்ணல் அற்றுவிட வேண்டும்.
சண்டை கொடும் போரொலிகள் ஓய்ந்து — மன
சாந்தி யொடெடம் சந்ததியர் கற்றுயர வேண்டும்.

கற்குவியலான மனையாவும் — பெரும்
கட்டிடங்களாய் உயர்ந்து வானிலிடிக்க வேண்டும்.
பொற்குவியல் தேடிவரப் போனோர் வந்து
புதிய தமிழீழத்தை கண்டதிர வேண்டும்.

சிங்களத்து வளம் தேவையில்லை — பயிர்
செய்முறையில் தன்னிறைவு நாட்ட வேண்டும்.
எங்களவர் உற்பத்திப் பண்டம் — புவி
எத்திசையும் ஏற்றுமதி செய்திடுதல் வேண்டும்.

மங்கலங்கள் பல பொங்கும் வேளை — ஒரு
மறைவிடமே என்றனுக்கு கவிபுனைய வேண்டும்.
அங்கிருந்தென் ஆவியுள்ள மட்டும் — என்
அன்னை மண்ணை மீட்டவரை நான் படிக்க வேண்டும்.

காவியமாய் புதிய புறம்பாடி — எம்
காலத்து வரலாற்றை நூல் பொறிக்க வேண்டும்.
சீவியத்தை மண் மீட்க ஈந்து — செத்த
செருக்களத்து மறவருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

- நாவண்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழாராய்ச்சி மாநாடு தை 1974



"அலங்கார ஊர்தியும் ஆவலுடன் திரண்ட மக்களும்"







"பொலிஸார் விளைவித்த அனர்த்தங்கள்"



''படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவுத் தூண்களும் மீண்டும், மீண்டும் சிதைக்கப் பட்டன''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு தசாப்தங்களும் புலிகளும்



கலாநிதி
**அன்ரன் பாலசிங்கம்**
அரசியல் ஆலோசகர்
தமிழீழ விடுதலைப் புலிகள்.

எண்பதுகளில், தமிழீழத்தினதும் சிங்கள தேசத்தினதும் அரசியல் தலைவிதியை மாற்றியமைத்து தொண்ணூறுடன் முடிவடைந்த ஒரு முக்கிய தசாப்தத்தின் வரலாற்று நாயகனாக விளங்குகிறார் பிரபாகரன். இப்படியாக பிரபாகரனுக்கு புகழாரம் சூட்டுகிறார் பிரபல எழுத்தாளரும், 'லங்கா கார்டியன்' சஞ்சிகையின் ஆசிரியருமான மேர்வின் டீ சில்வா.

புயலின் மையமாக நின்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த வீரன் என்ற காரணத்திற்காக ஒரு தசாப்தத்தின் மாமனிதன் எனப் பிரபாகரன் போற்றப்படுகிறார். "இது எனது தனிப்பட்ட மானசீக மதிப்பீடு அல்ல. இலங்கைத் தீவை அதிரவைத்த பூகம்பமான நிகழ்வுகளின் அடிப்படையில் பார்க்கும் போது இது தவிர்க்க முடியாத வரலாற்றின் தீர்ப்பு" என்கிறார் மேர்வின்

எண்பதுகளில், புயலின் வேகத்துடனும், ஆவேசத்துடனும், புலிகள் இயக்கம் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தது என்ற வரலாற்று உண்மையை யாரும் மறுக்க முடியாது. இந்தக் காலகட்டத்தின் வரலாற்றுக் கதாநாயகன் பிரபாகரன் என்பதும் சரியான மதிப்பீடுதான். என்னும் பிரபாகரனதும் விடுதலைப் புலிகளினதும் வரலாறு ஒரு தசாப்தத்திற்குள் மட்டும் அடங்கி நிற்கவில்லை. எழுபதுகளின் ஆரம்பத்தில் தலைதூக்கிய வன்முறை அரசியல் அலைகளுடன் தொடங்கி இன்று வரை படிமுறை வளர்ச்சியுடன் முன்நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் புலிகளின் வரலாறு கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்களை வியாபித்து நிற்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இரண்டு தசாப்த காலகட்டத்தில் தமிழீழ மக்களின் அரசியல் வரலாறு மாபெரும் திருப்பு முனைகளை எதிர் கொண்டது. இந்த வரலாற்றுத் திருப்பங்களும், தேசிய போராட்டத்தில் அவை விளைவித்த பாரிய தாக்கங்களும் விடுதலைப் புலிகளின் வரலாற்றுத் தோற்றம், வளர்ச்சி எழுச்சியுடன் பின்னிப் பிணைந்து நிற்கின்றன.

எழுபதுகளைக் கொண்ட தசாப்தம் அரச அடக்கு முறையையும் (State Repression) ஆயுத எதிர்ப்பு முறையையும் (Armed Resistance) முனைப்புறச் செய்த காலகட்டம். ஒடுக்கு முறை மோசமாகிச் செல்லும் போது எதிர்ப்பு முறையும் உரங் கொண்டு தீவிரம் பெறுவது இயல்பானது. சகல புரட்சிகரப் போராட்டங்களிலும் இதுவே சரித்திர நியதியாக இருந்து வந்திருக்கிறது. இந்த முரண்பாட்டு நியதியின் அடிப்படையில் இந்த தசாப்த வரலாற்றினை நாம் மீளாய்வு செய்து பார்ப்பது பயனுடையதாக அமையும் அப்பொழுது தான் ஆயுதப் போராட்டத்தின் வரலாற்றுத் தேவையையும் புலிகள் இயக்கத்தின் தோற்றத்திற்கான புறநிலைகளையும் நாம் புரிந்து கொள்ளலாம்.

எழுபதின் ஆரம்ப காலகட்ட நிகழ்வுகள் தமிழீழ மக்களின் அரசியல் வாழ்வில் பாரிய தாக்கங்களை விளைவித்தது. இந்தக் காலப் பகுதியில் புதிய மூர்க்கத்துடன் எழுந்த சிங்களப் பேரினவாதம் தமிழருக்கு எதிரான ஒடுக்கு முறையை தீவிரப் படுத்தியது. இதன் விளைவாக, தமிழ் சிங்கள தேசங்கள் மத்தியில் நிலவிய தேசிய முரண்பாடு கூர்மையடைந்தது, இதனால் தமிழீழத்தில் வன்முறை அரசியலின் எழுச்சிக்கான திண்ணியமான புறநிலைகள் உருவாகின,

ஏற்கனவே சிங்கள இனவாத ஒடுக்கு முறையின் அழுத்தத்தால் விரக்தியும் வெறுப்பும் கொண்டிருந்த 'தமிழ் இளம் சமுதாயம் மீது 1970ஆம் ஆண்டு தரப்படுத்தல் முறை திணிக்கப்பட்டமை எரிகிற புண்ணில் எண்ணை ஊற்றுவது போல அமைந்தது. உயர் கல்வி வாய்ப்பிற்கும் வேலை வாய்ப்பிற்கும் கதவுகள் அடைக்கப் பட்டதால் தமிழ் இளம் பரம்பரை ஆவேசம் கொண்டெழுந்தது. ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், கண்டனக் கூட்டங்கள், கொடும்பாவி எரிப்புக்களாக தமிழீழமெங்கும் மாணவர் கிளர்ச்சிகள் குமுறின. இந்தக் கிளர்ச்சிகளுக்கு எதிராக சிங்கள அரசின் ஆயுதப் படையினர் மேற்கொண்ட மிருகத்தனமான அடக்குமுறையும் இளம் சமூகத்திற்கு மேலும் ஆவேசத்தைக் கொடுத்தது. இந்தக் கொந்தளிப்பான சூழ்நிலையில் சிங்கள இனத் துவேசத்திற்கு சிகரம் வைக்குமாப்போல 1972 ஆம் ஆண்டு மே 22 ஆம் திகதி புதியகுடியரசு அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. திருமதி பண்டார நாயக்காவின் தலைமையில் முக்கூட்டு முன்னணியாக (சிறிலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி) 1970 இல் ஆட்சிப்பீடம் ஏறிய அரசு சிங்களப்பேரினவாதத்தை சட்டரீதியாக ஸ்தாபனமயப்படுத்த முனைந்தது. இந்த நோக்கில் கொண்டுவரப்பட்ட புதிய அரசியல் யாப்பை இடதுசாரி இயக்கத்தின் தந்தைகளில் ஒருவராக வர்ணிக்கப்பட்ட கொல்வின் ஆர்.டி. சில்வா உருவாக்கிக் கொடுத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. சிங்கள மொழிக்கும் பௌத்தத்திற்கும் முதன்மையான விசேஷ அந்தஸ்து வழங்கி, முந்திய சோல்பரியின் அரசியலமைப்பில் தமிழருக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு உத்தரவாதங்களை நீக்கி, தமிழரின் நலன்களுக்கு விரோதமான முறையில் உருவாக்கப்பட்ட இந்தப் புதிய அரசியலமைப்பு சிங்கள - தமிழ் தேசிய முரண்பாட்டை மேலும் வலுக்கச் செய்தது.

சிங்கள தேசத்தில் தலைவிரித்தாடிய இனத் துவேச அரசியல் தமிழ் மக்கள் மத்தியில் குறிப்பாக இளைஞர் மத்தியில் புரட்சிகரமான அரசியல் விழிப்புணர்வையும் தீவிரவாத போர்க்குணத்தையும் உருப்பெறச் செய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேயுருவம் பெற்றுவந்த சிங்களப் பேரினவாதத்தை எதிர்த்து நின்று போராடும் உறுதிப்பாடோ, செயற்திறனோ, தீர்க்க தரிசனமோ, உருப்படியான கொள்கைத் திட்டமோ எதுவுமற்ற பழைய தமிழ்த் தலைமையில் புதிய இளம் சமுதாயத்திற்கு நம்பிக்கை தளர்ந்தது. பிரித்தானிய காலனித்துவம் திணித்துச் சென்ற பாராளுமன்ற அரசியல் முறை சிங்களப் பெரும்பான்மை சர்வாதிகாரத்திற்கும் வல்லாதிக்கத்திற்கும் வலுவூட்டி வந்ததால் பாராளுமன்ற அரசியலிலும் அவநம்பிக்கை ஏற்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக, மென்முறை வழியைத் தழுவி நின்ற அகிம்சைப் போராட்டம் அன்றைய புரட்சிகர சூழ்நிலைக்கு ஒவ்வாதது என்ற விழிப்புணர்வும் ஏற்பட்டது. மனிதாபிமானமற்ற, மனித தர்மங்களுக்கு மதிப்பளிக்காத, அடக்குமுறையாளரின் மிருகத்தனமான வன்முறைக்கு எதிராக, மென்முறையான, ஆத்மீக அறநெறி தழுவிய போராட்டவடிவம் வெற்றியளிக்கப் போவதில்லை என்பதை தமிழீழ இளம் சமூகம் உணர்ந்து கொண்டது.

அடக்குமுறையாளரின் வன்முறையானது மனித உரிமைகளையும், அடிப்படை மனித சுதந்திரங்களையும் நசுக்கி, தமிழின ஒழிப்பை இலக்காகக் கொண்டதால் அது அநீதியானது, பிற்போக்கானது. அடக்குமுறையாளரின் இந்த அநீதியான, பிற்போக்கான வன்முறைக்கு எதிராக அடக்கப்படும் மக்கள் உரிமை கோரி சுதந்திரம் கோரி, நீதி கோரி மேற்கொள்ளும் வன்முறைப் போராட்டம் முற்போக்கானது, நியாயமானது. இந்தக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் வன்முறை அரசியல் போராட்டத்தில் குதிக்க புரட்சிவாதத் தமிழ் இளைஞர்கள் தீர்மானித்தனர்.

இதுவரை காலமும் அமைதி வழியில் நடைபெற்று வந்த அரசியல் போராட்டம் எழுபதின் ஆரம்பத்தில் வன்முறை தழுவிய போராட்டமாக வெடித்தது. கொலை முயற்சிகள், குண்டுத் தாக்குதல்கள், அரச உடைமைகளை நாசம் செய்தல், பேருந்துகளுக்கு தீ வைத்தல், அரச கொடியை எரித்தல் - இப்படியாக பரவலாக அரசியல் வன்முறை குமுறியது. புதிய இனவாத அரசியலமைப்பை ஆதரித்து தமிழ்த் துரோகிகளாக கருதப்பட்ட தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசின் அடிவருடிகளாக செயற்பட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர்கள், அரச அடக்குமுறையின் ஏவு நாய்களாக செயற்பட்ட தமிழ்க் காவற்றுறை அதிகாரிகள் ஆகியோர் மீது திட்டமிட்ட தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

தமிழீழத்தில் தலையெடுத்த வன்முறைப் போராட்டம் சிங்கள அரசுக்கு ஒரு புதிய சவாலாக எழுந்தது. 1971 ஆம் ஆண்டு சித்திரையில் தென்னிலங்கையில் வெடித்த ஜே.வி.பி. யினரின் ஆயுதக் கிளர்ச்சியை வெற்றிகரமாக நசுக்கி, பதினையாயிரம் சிங்கள இளைஞர்களைக் கொன்று குவித்த பண்டார நாயக்கா அம்மையார் தமிழீழத்திலும் அரச அடக்குமுறையை முடுக்கிவிடத் தயங்கவில்லை. அரச ஆயுதப்படையினரால் தமிழ் இளைஞர்கள் வேட்டையாடப்பட்டனர். விசாரணையின்றி சிறையில் தள்ளப்பட்டனர். மிருகத்தனமான சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டனர். கொலை செய்யப்பட்டனர் இந்தக் கொடுமை காரணமாக பல தீவிரவாத இளைஞர்கள் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொள்ள நேர்ந்தது. ஆயினும் வன்முறை அலைகள் ஓயவில்லை.

தமிழ் இளைஞர்களின் வன்முறைப் போராட்டம், ஒழுக்கம், கட்டுப்பாடு கொள்கைத் திட்டத்தைக் கொண்ட ஒரு புரட்சிகர அமைப்பு மூலம் நெறிப்படுத்தப்படவில்லை. தனிநபர்களாகவும், ஒரு சிலரைக் கொண்ட குழுக்களாகவும், தன்னிச்சையான போக்கில் வன்முறையில் இறங்கிய இளைஞர்களுக்கு அனுபவமோ, ஆயுதம், வெடிமருந்துகள் பற்றிய அறிவோ, பயிற்சியோ, போர் யுக்தி, போர் முறைத் திட்டங்கள் பற்றிய தெளிவோ இல்லாததால் பெரும்பாலான வன்முறை முயற்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் தோல்வியில் முடிந்தன. எனினும் விடுதலையுணர்வும், தேசியப் பற்றுணர்வும், அரச ஒடுக்கு முறைக்கு, எதிரான ஆவேசமும், புரட்சிகரப் போர்க் குணமும் இந்த இளைஞர்கள் மத்தியில் மிகுந்து காணப்பட்டது

வன்முறை அரசியலில் ஆர்வம் கொண்ட இந்த புரட்சிவாத இளைஞர்கள் அனைவரும் தம்மைத் தமிழ் மாணவ பேரவையினர் என அழைத்துக் கொண்டனர். சத்தியசீலன் என்ற பட்டதாரி மாணவன் தலைமையில் இந்த அமைப்பு இயங்கி வந்தது. சிவகுமாரன், பிரபாகரன், தங்கத்துரை போன்றோர் இந்த அமைப்போடு தொடர்பு கொண்டு இயங்கி வந்தனர்.

செயற்திறனற்ற தலைமை காரணமாக இந்த அமைப்பு செம்மையாக செயற்படவில்லை. சத்தியசீலன் இளைஞர்களை வன்முறைக்குத் தூண்டி விட்டாரே தவிர களத்தில் இறங்கத் துணியவில்லை. புரட்சிகர கொள்கைத் திட்டமோ, செயற்பாடோ இல்லாததனாலும், ஆயுதப் போராட்டம் பற்றிய தெளிவு இல்லாததனாலும் வன்முறை நிகழ்வுகள் மாறி, மாறி தோல்வி கண்டதாலும், பேரவைத் தலைமை மீதும் விரக்தியடைந்த பிரபாகரன் தனித்தியங்க முடிவு செய்தார். எதேச்சையாக, கட்டுப்பாடற்ற முறையில், திசையின்றி பிரவாகமெடுத்த வன்முறை எழுச்சியானது இளைஞர் சமூகத்தின் இதயக் குமுறலை வெளிப்படுத்தியதே தவிர மக்களின் உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்கவில்லை என்பதை பிரபாகரன் புரிந்து கொண்டார். தேசிய விடுதலையை இலட்சியமாக வரித்த கொள்கைத் திட்டத்துடன் ஒரு புரட்சிகர ஆயுதப் போராட்ட அமைப்பு கட்டி எழுப்பப்பட வேண்டியதன் வரலாற்றுத் தேவையையும். அவர் நன்கு உணர்ந்து கொண்டார். ஒழுக்கம், கட்டுப்பாடு, கொள்கைத் திட்டம், ஆகியனவற்றைக் கொண்ட ஒரு புரட்சிகர விடுதலை அமைப்பைக் கட்டி எழுப்பி, தீர்க்கமான ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டுமென உறுதி பூண்ட பிரபாகரன் 1972 ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்து அந்த முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டார். வீரமும், அர்ப்பணிப்பும், விடுதலையுணர்வும் மிகுந்த புரட்சிகர இளைஞர்கள் பிரபாகரன் பின்னால் அணி திரண்டனர்.

1972 ஆம் ஆண்டு இறுதிக்கட்டத்தில் விடுதலைப்புலிகள் இயக்கம் தனது வரலாற்று ரீதியான பிறப்பை எடுத்தது. புதிய தமிழ்ப் புலிகள் என்ற பெயரில் அமைப்பை உருவாக்கிய பிரபாகரன், அவசரப்பட்டு களத்தில் குதிக்காமல், ஆரம்பகாலத்தை, தனது தோழர்களுக்கு ஆயுதப்பயிற்சி அளிப்பதிலும், போர் முறைத் திட்டம் ஒன்றை உருவாக்குவதிலும் செலவழித்தார். அன்றைய எதார்த்த சூழ்நிலையும், தமிழீழத்தின் பூகோளத் தன்மையையும், எதிரியின் இராணுவபலத்தையும் கருத்தில் கொண்டு நீண்டகால கெரில்லா (கரந்தடி) போர் முறையின் அடிப்படையில் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுப்பதே பொருத்தமானதென பிரபாகரன் முடிவுக்கு வந்தார். ஆரம்ப காலத்திலிருந்தே 'புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்' என்ற இலட்சிய வரிகளைப் புனைந்த பிரபாகரன் தமிழீழத் தாயகத்தை மீட்டு, சுதந்திர தனியரசு அமைப்பதையே புலிகள் இயக்கத்தின் அடிப்படைக் குறிக்கோளாக வரித்துக்கொண்டார்.

விடுதலைப்புலிகளின் தோற்றமானது எழுபதுகளைக் கொண்ட தசாப்தத்தின் ஒரு முக்கிய வரலாற்று நிகழ்வாகவும், தமிழீழ தேசிய சுதந்திரப் போராட்டத்தின் ஒரு மாபெரும் திருப்புமுனையாகவும் அமைந்தது. திசை தெரியாது அலை மோதிய வன்முறை எழுச்சியிலிருந்து ஒரு திண்ணியமான, நீண்டகால ஆயுதப் போராட்டத்திற்கான, உறுதியான அத்திவாரத்துடன் புலிகள் இயக்கம் பிறப்பை எடுத்தது. புலிகளின் பிறப்போடு புரட்சிகரமான ஒரு புதிய வரலாறும் பிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10-ஆந் திகதி யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள் இனத்துவேச அரசியலின் அசிங்கமான வெளிப்பாடாக அமைந்தன. தமிழரின் கலாசார வாழ்வை சிதைக்கவும் சிங்கள அரசு தயங்காது என்பதை இந் நிகழ்வு எடுத்துக் காட்டியது. இச்சம்பவம் தமிழீழ மக்கள் மனதில் என்றுமே மாறாத ஒரு வடுவை ஏற்படுத்தியதோடு இன முரண்பாட்டை மேலும் இறுகச்செய்தது.

தமிழாராய்ச்சி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்த விடாது தடுக்க சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசு பகீரத முயற்சிகளைச் செய்தது. இறுதியில் சிங்களப் பொலிஸாரை ஏவி மாநாட்டைக் குழப்பியது. இந்தச் சம்பவத்தில் 9 அப்பாவித் தமிழர்கள் கொலையுண்டார்கள். இந்தப் படுகொலைச் சம்பவத்திற்கு சூத்திரதாரியாக விளங்கியவர் யாழ்ப்பாண மேயர் அல்பிரட் துரையப்பா ஆவர். சுதந்திரக் கட்சியின் வடமாகாண பிரதான அமைப்பாளராக இயங்கிய துரையப்பா, அரசின் அடிவருடியாக இருந்து தமிழ்த் துரோக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தார். தமிழ்த் தீவிரவாத இளைஞர்களை அரசுக்கு காட்டிக் கொடுத்தார். தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு சிங்களப் பொலிஸாரை ஏவிவிட்டதற்கும் இவரே காரண கர்த்தாவாக விளங்கினார். இந்த இனத் துரோகியை அழித்து சிங்கள அரசுக்கு ஒரு பாடம் புகட்ட பிரபாகரன் முடிவு செய்தார்.

இதற்கிடையில் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளால் கொதிப்படைந்த சிவகுமாரன் அல்பிரட் துரையப்பாவையும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் சந்திரசேகராவையும் குண்டு வைத்து கொலைசெய்ய மேற்கொண்ட பகீரத முயற்சிகள் தோல்வியடைகின்றன. இதனால் பொலிஸாரால் தீவிரமாக வேட்டையாடப்பட்டு வந்த சிவகுமாரன் 1974 ஜூன் 5ஆந் திகதி வீர மரணத்தை தழுவிக் கொள்கிறான். விடுதலையுணர்வும், வியப்பு மிக்க துணிச்சலும், விடாமுயற்சியும் கொண்ட மகத்தான ஒரு விடுதலை வீரனை இழந்து தமிழீழம் துயரில் ஆழ்ந்தது.

பிரபாகரன் தலைமையில் விடுதலைப் புலிகள் திட்டமிட்டபடி செயலில் குதிக்கிறார்கள். தமிழினத்தின் பெரும் துரோகியான அல்பிரட் துரையப்பா 1975 ஜூலை மாதம் 27ஆந் திகதி பொன்னாலை வரதராஜப்பெருமாள் கோவிலுக்கு அருகாமையில் பிரபாகரனால் சுட்டுக் கொல்லப்படுகிறார்.

அல்பிரட் துரையப்பா கொலையுண்ட நிகழ்வு சிங்கள அரசுக்கு பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது. தமிழரின் போராட்டத்தைக் காட்டிக் கொடுக்க முயன்ற தமிழ்த் துரோகிகளுக்கு இச்சம்பவம் ஒரு எச்சரிக்கையாக அமைந்தது. சிங்களப் பேரினவாதக் கட்சிகள் தமிழீழத்தில் நிலைகொள்ள முனைந்த முயற்சிகளுக்கும் இந்தச் சம்பவம் ஒரு முற்றுப்புள்ளி வைத்தது. சிங்கள இனவாத அடக்கு முறைக்கு எதிராக தொடுக்கப்பட்ட ஆயுத எதிர்ப்பு இயக்கத்தின் முதலாவது அத்தியாயத்தை விடுதலைப் புலிகள் ஆரம்பித்து வைத்தனர். எழுபதுகளில் தமிழீழத்தை அதிரவைத்த முதலாவது ஆயுதப் போர் நடவடிக்கையை வெற்றிகரமாகச் செயற்படுத்தி, விடுதலையை நோக்கிய நீண்ட, கடினமான வரலாற்றுப் பயணத்தை தொடக்கி வைத்தார் பிரபாகரன்.

1976 ஆம் ஆண்டு மே 5 ஆம் நாள் புதிய தமிழ்ப் புலிகள் என்ற அமைப்பு தமிழீழ விடுதலைப்புலிகள் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இராணுவ அமைப்பையும் அரசியல் அமைப்பையும் ஒன்றிணைந்த ஒரு தேசிய விடுதலை இயக்கமாக விடுதலைப் புலிகள் தமது வளர்ச்சிப் பாதையில் வீறு நடைபோட்டனர். அன்று மலர்ந்து கொண்டிருந்த எமது விடுதலை இயக்கத்திற்கும், தமிழரின் தேசியப் போராட்டத்திற்கும் பெரும் அச்சுறுத்தலாக விளங்கியது தமிழ்ப் பொலிஸ் உள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுப்படையாகும். இந்த உளவுப் படையுடன் சேர்ந்து சிங்கள அரசின் கைக்கூலிகளாக காட்டிக் கொடுப்போரும் இனத் துரோகிகளும் இயங்கினர். தமிழீழத்தில் ஒரு ஆயுதப் போராட்ட அமைப்பு வளர விடக் கூடாது என்பதில் மிகவும் உறுதியோடு, எதிரியின் கைப்பொம்மைகளாக இவர்கள் செயற்பட்டனர். எனவே விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆரம்பகால கெரில்லா நடவடிக்கைகள் பொலிஸ் உளவுப்படையை சிதைப்பதோடு, காட்டிக் கொடுக்கும் கயவர்களையும், இனத் துரோகிகளையும் அழிப்பதையே நோக்காகக் கொண்டிருந்தது.

பாராளுமன்றத்திற்குப் புறம்பாக தமிழீழத்தில் தலைவிரித்தாடிய அரசியல் வன்முறை எழுச்சியும், புலிகள் இயக்கமாக உருவகம் பெற்ற ஆயுத எதிர்ப்பு இயக்கமும் தமிழ் அரசியல்வாதிகளுக்கு அச்சுறுத்தலையும் நெருக்குதலையும் கொடுத்தது. பாலைவனத்தில் எழுப்பும் குரல்கள் போல பாராளுமன்றத்தில் விடும் அறிக்கைகளில் எவ்வித அர்த்தமும் இல்லை என்பதை தமிழீழ மக்கள் உணர்ந்து கொண்டனர். சமஷ்டி கோரி நடத்திய சாத்வீகப் போராட்டங்களும் பயனற்றுப் போய் விட்டதையும் மக்கள் உணராமல் இல்லை. தீவிரமடைந்து சென்ற சிங்கள இனவாத ஒடுக்கு முறையும், அதன் எதிர்வீச்சாக தமிழீழத்தில் உருவாகியுள்ள புரட்சிகர புறநிலைகளும், ஒற்றையாட்சியை கைவிட்டு தன்னாட்சி உரிமையை வென்றெடுக்க வேண்டுமென மக்கள் மத்தியில் எழுந்துள்ள புதிய அரசியல் விழிப்புணர்வும் தமிழ் அரசியல்வாதிகள் மீது ஒரு புதிய அழுத்தத்தை ஏற்படுத்தியது.

ஒப்பந்தங்கள் செய்து, உடன்பாடுகள் செய்து, ஒத்துழைப்புச் செய்து, எல்லா வகையிலும் நெகிழ்ந்து கொடுத்தும் சிங்கள ஆளும் வர்க்கத்தால் மாறி மாறி ஏமாற்றப்பட்ட கசப்பான வரலாற்று அனுபவமும் தமிழ்த் தலைவர்களை உறுத்தியது. தமிழீழத்தில் மேலோங்கி நின்ற தன்னாட்சி உரிமைக்குரலுக்கு செவி சாய்க்க மறுத்தால் அது அரசியல் தற்கொலையில் முடியும் என்பதையும் அரசியல் தலைவர்கள் உணர்ந்தனர். இவ்வாறான வரலாற்று நிர்ப்பந்தங்களால் நெருக்கப்பட்ட தமிழ் அரசியல்வாதிகள் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு ஒத்திசைவாக தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் தனியரசுக் கோரிக்கையை முன்வைக்க முன்வந்தனர்.

1976ஆம் ஆண்டு மே மாதம் 14ஆந் திகதி வட்டுக்கோட்டையில் நிகழ்ந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேசிய மாநாட்டில் ''தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் ஒரு சுதந்திரமான, இறைமையுடைய, மதசார்பற்ற சோசலிச தமிழீழத்தை அமைப்பது'' என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற தமக்கு ஒப்புதல் தருமாறு கோரி 1977 ஜூலையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கூட்டணியினர் தமிழ் மக்களை வேண்டிக் கொண்டனர். தேர்தலில் வெற்றிபெறும் உறுப்பினர்கள் தமிழீழ தேசிய அரசியல் நிர்ணய அவையாகச் செயற்பட்டு தமிழீழ அரசுக்கான யாப்பு ஒன்றைத் தயாரித்து, தமிழீழத்தின் சுதந்திரத்தை நிலைநாட்டப் போராடுவோம் எனவும் கூட்டணியினர் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் பிரகடனம் செய்தனர். சர்வசன வாக்கெடுப்புப் போல நிகழ்ந்த இத் தேர்தலில் தமிழீழ மக்கள் தமது அரசியல் அபிலாசை என்ன என்பதை தெள்ளத் தெளிவாக தெரியப்படுத்தினர். அமோக வெற்றியை ஈட்டிய கூட்டணியினர் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய கதையை இங்கு விபரிக்கத் தேவையில்லை.

தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமைப் போராட்டத்தை வெறும் தேர்தல் கோஷமாக கூட்டணியினர் பயன்படுத்தியமை தமிழீழமக்களுக்கு இழைத்த மாபெரும் வரலாற்றுத் துரோகமாகும். தமிழ்த் தேசிய இனத்தின் அடிப்படை அரசியல் உரிமையான தன்னாட்சி உரிமையை கொச்சைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தும் வகையில் கூட்டணியினர் அரங் கேற்றிய இந்த அரசியற் துரோக நாடகம் தமிழ் மக்களின் தேசியவிடுதலைப் போராட் டத்தை பின்னடைவுக்குள் தள்ளியது.

1977 தேர்தலில் பெரும்பான்மைப் பலத்துடன் பதவியேறிய ஜே. ஆரின் ஆட்சி பீடம் தமிழ் மக்களுக்கு எதிராக யுத்த பிரகடனம் செய்வது போல ஒரு பயங்கர இனக் கலவரத்தை கட்டவிழ்த்து விட்டது. இந்த சிங்கள இனவாதப் பேயாட்டத்தில் ஆயிரக்கணக்கில் தமிழ் மக்கள் கொல்லப் பட்டபோதும் கூட்டணித் தலைவர்கள் செயலிழந்து போய் தமது பாராளுமன்ற நாற்காலிகளை மட்டும் இறுகப் பற்றிய படி இருந்தனர். இந்தச் சம்பவத்தை அடுத்து கூட்டணித் தலைமை தமிழீழ அரசியல் அரங்கிலிருந்து முற்றாக அந்நியப் பட்டு நின்றது. இந்த வெற்றிடத்தை நிரப் புவதுபோல விடுதலைப்புலிகளின் ஆயு தப் போராட்டம் முனைப்புறத் தொடங் கியது. அரசின் அடக்குமுறை கருவிகளாக செயற்பட்டு, தமிழ் மக்களின்போராட்டத் திற்கு முட்டுக்கட்டையாக விளங்கிய பல இரகசியப் பொலீஸ் அதிகாரிகளையும் துரோகிகளையும் எமது இயக்கம் அழித்தது.

1978 ஏப்ரல் 7ந் திகதி இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளையும் அவரது பொலீஸ் கோஷ்டியும் முருங்கன் காட்டுக்குள் புலிக ளால் அழிக்கப்பட்ட சம்பவம் சிங்கள ஆட்சியாளருக்கு அதிர்ச்சியைக்கொடுத்தது. பஸ்தியாம்பிள்ளை கோஷ்டியை அழித்த மைக்கும், மற்றைய பொலீஸ் அதிகாரிகள், இனத்துரோகிகள் கொல்லப்பட்டமைக்கும் உரிமைகோரி, முதற் தடவையாக விடு தலைப் புலிகள் வெளியிட்ட அதிகார பூர் வமான அறிக்கையை கொழும்புப் பத்திரி கைகள் முக்கியம் கொடுத்து பிரசுரித்தன. இதனூடாக புலிகள் இயக்கம் தமிழ் சிங் கள மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றது. விடுதலைப்புலிகளின் ஆயுதப்போராட்டம் வளர்ச்சிபெற்று வருவதைக் கண்டு சிங்கள அரசு திகைத்தது. தமிழீழத்தில் தலை மறைவாக வளர்ந்துவரும் விடுதலை இயக் கத்தை எப்படியாவது அழித்து விட வேண் டும் என்ற நோக்கில், 1978 மே மாதம் விடுதலைப் புலிகள் தடைச் சட்டத்தை சிங்கள அரசு பாராளுமன்றத்தில் நிறை வேற்றியது. இந்தச் சட்டம் ஆயுதப்படை களுக்கு அளவுக்கு மீறிய அதிகாரங்களை வழங்கியது. இளைஞர்களை கண்மூடித்த னமாக கைதுசெய்யவும், விசாரணை இல் லாமல் நீண்டகாலம் தடுப்புக்காவலில் வைத்திருக்கவும், சித்திரவதை செய்து கொல்லவும் இந்தக் கொடும் சட்டம் இட மளித்தது. ஒட்டுமொத்தத்தில், தமிழருக்கு எதிரான அடக்குமுறையை இந்தச் சட்டம் மேலும் வலுப்படுத்தியது.

1978ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 7ஆந் திகதி ஜெயவர்த்தனா அரசு புதிய அரசியலமைப்புச் சட்டத்தை அமுல்படுத் தியது. இந்த அரசியலமைப்புச்சட்டம் சர்வ அதிகாரங்களைக் கொண்ட ஜனாதி பதி ஆட்சிமுறையை நிறுவியது. சிங்கள மொழிக்கும் பௌத்தத்திற்கும் விசேட அந்தஸ்தை வழங்கியது. தமிழ்மொழியை இரண்டாம்தர நிலைக்கு தள்ளியது. சாராம் சத்தில், சிங்கள பௌத்த பேரினவாதம் சட்டமூலம் வலுப்பெற்றதோடு, ஒரு பாசிச சர்வாதிகார ஆட்சியும் அமையப்பெற்றது. சிறிலங்கா ஆட்சியமைப்பிலிருந்து தமிழ் மக்கள் பூரணமாக அந்நியப்படுத்தப்பட்ட னர்.

பாராளுமன்ற ஆசனங்களை தொடர்ந் தும் இறுகப்பற்றியிருந்த கூட்டணியினர் இந்த அரசியலமைப்புச் சட்டத்திற்கு எந் தவித எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை. ஆயினும் விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழருக்கு எதிராக இழைக்கப்பட்ட இந்த அநீதியை சர்வதேச சமூகத்தின் கவனத் திற்கு கொண்டுவர உறுதிபூண்டது. இந்தச் சட்டம் சிறீலங்கா தேசியப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட அதே தினத்தில் அரசுக்கு சொந்தமான பயணிகள் விமான மான 'அவ்ரோ' விமானத்தை விடுதலைப் புலிகள் தகர்த்தனர். இரத்மலானை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமான நிலையத்தில் பயணிகள் இறங்கிய சிறிது நேரத்தில் புலிகளால் வைக்கப்பட்ட நேரக்குண்டு வெடித்து விமானம் சிதறியது. கொழும்பில் நிகழ்ந்த முதற் குண்டு வெடிப்பான இந்த சம்பவம் தமிழர் பிரச்சினையை சர்வ தேசமயப்படுத்தியதுடன், இனத் துவேசத் திமிர்கொண்ட சிங்கள அரசின் முகத்தில் கரிபூசுவதாகவும் அமைந்தது.

எழுபதுகளைக்கொண்ட தசாப்தத்தின் இறுதிக் காலகட்டம் இன ஒடுக்குதலின் இரத்தம்படிந்த இருண்ட அத்தியாயத்துடன் முடிவுற்றது. தீவிரமடைந்து வந்த விடுதலைப் புலிகளின் ஆயுத எதிர்ப்பு இயக்கத்தை ஒழித்து, தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கத்துடன் ஜெயவர்த்தனா அரசு கடும் நடவடிக்கைகளை எடுக்க முடிவுசெய்தது. இதன்படி 1979 ஜூலை 30 ஆந் திகதி விடுதலைப் புலிகள் தடைச்சட்டத்திற்குப் பதிலாக படுமோசமான பயங்கரவாத தடைச்சட்டத்தை அமுலுக்கு கொண்டு வந்தது. சனநாயக தர்மங்களுக்கு விரோதமானதும், அடிப்படை மனித உரிமைகளை மீறுவதுமான இந்தக் கொடுமையான சட்டத்தைச் சர்வதேச சமூகம் கடுமையாகக் கண்டித்தது, இந்தப் பயங்கரவாத சட்டத்தை பிறப்பித்த நேரத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் அவசரகால சட்டமும் பிரகடனப்படுத்தப்பட்டது. பிரிகேடியர் வீரதுங்கா தலைமையில் மேலதிக இராணுவப்படைகளை யாழ்ப்பாணத்தில் குவித்த ஜெயவர்த்தனா, ஆறுமாத காலத்திற்குள் அதாவது 1979 டிசம்பர் 31 ம் திகதிக்குள், விடுதலைப்புலிகள் இயக்கமும் அதன் 'பயங்கரவாத'' நடவடிக்கைகளும் முற்றாக அழிக்கப்படவேண்டுமென பிரிகேடியர் வீரதுங்காவுக்கு விசேட ஆணைபிறப்பித்தார்.

வீரதுங்காவின் இராணுவம் யாழ்ப்பாணத்தில் வெறியாட்டம் ஆடியது. முன்னென்றுமில்லாவகையில் பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்டது. நூற்றுக்கணக்கில் தமிழ் இளைஞர்கள் கைது செய்து காவலில் வைக்கப்பட்டார்கள். மிருகத்தனமாக சிறைகளில் சித்திரவதை செய்யப்பட்டார்கள். பலர் இராணுவ முகாம்களிலும் பொலிஸ் நிலையங்களிலும் வதைபட்டு படுகொலை செய்யப்பட்டார்கள். அவர்களது சிதைந்த உடல்கள் வீதியோரம் வீசப்பட்டன. யாழ். குடாநாட்டு மக்கள் மீது இராணுவ பயங்கரவாதம் கோர நர்த்தனம் புரிந்தது.

வீரதுங்காவின் ஆறுமாத காலகொடும் கோன்மை ஆட்சியின் விளைவாக பெரும் தொகையில் தமிழ் இளைஞர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பின்னால் அணிதிரண்டனா. பரந்துபட்ட தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்திற்கு மனமுவந்து ஆதரவு நல்கினர்.

எழுபதுகளின் தசாப்தம் சிங்கள தமிழ் தேசிய முரண்பாட்டை என்றுமில்லாத வாறு முதிர்ச்சியடையச் செய்தது. அரச ஒடுக்கு முறையின் தீவிரமான அழுத்தம் தமிழீழத்தில் அரசியல் வன்முறையை அலை மோதச் செய்தது. இந்த அரசியல் வன்முறையால் எழுந்த புறநிலைகள் ஒரு பலம் வாய்ந்த ஆயுத எதிர்ப்பு இயக்கத்தை, புலிகள் இயக்கத்தை பிறப்பெடுக்கச் செய்தது. அரச ஒடுக்குமுறை மேலும் மேலும் தீவிரமடைந்து செல்ல ஆயுத எதிர்ப்பு முறையும் தீவிரமடைந்து சென்றது. பிரபாகரன் தலைமையில் ஆயுதப் போராட்டம் வளர்ந்து விரிவடைய மிதவாத பராளுமன்ற அரசியல் செயலிழந்து போனது. ஒட்டு மொத்தத்தில், இந்த தசாப்தப் தமிழரின் அரசியல் போராட்டத்தை ஆயுதப் போராட்டமாக உயிர்வடிவம் பெறச் செய்ததுடன் தன்னாட்சி உரிமையை நிலைநாட்டி தமிழீழத் தனியரசை நிறுவும் வரலாற்றுத் தேவையையும் வெளிப்படுத்தியது.

வரலாறு காணாத வன்முறைப் பூகம்பங்கள் இலங்கைத் தீவை உலுப்பிய கால கட்டமாக எண்பதுகளின் தசாப்தம் அமைந்தது. இந்தக் காலகட்டத்தில், மூர்க்கம் கொண்டு எழுந்த அரச ஒடுக்குமுறைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிராக சீற்றம்கொண்டு எழுந்த புலிகளின் எதிர்ப்பியக்கம் சூறாவளி வேகத்தில் உக்கிரமடைந்தது.

இந்த தசாப்தத்தில் தமிழீழம் என்றுமில்லாதவாறு இரத்தம் சிந்தியது. சிங்கள படையெடுப்புகளும், இந்திய இராணுவ ஆக்கிரமிப்பும், உள்ளூர் கூலிப்படைகளின் அராஜகமுமாக தமிழீழ மண் ரணகளமாகியது.

மிகக் கொந்தளிப்பான இந்தக் காலகட்டத்தில் புயலின் மையமாக நின்று, எல்லா எதிர்ப்பியக்கத்திற்கு ஈடுகொடுத்து தமிழரின் வீர விடுதலைப்போராட்டத்தை முன்னெடுத்தவர் பிரபாகரன். ஆகவே தான் இந்த தசாப்தத்தின் மாமனிதனாக, வரலாற்றுக் கதாநாயகனாக பிரபாகரன் கருதப்படவேண்டியவர்.

இராணுவ, அரசியல், ராஜதந்திர பரிமாணங்களில் பல திருப்புமுனைகளை எடுத்த இந்தப் பத்தாண்டு வரலாற்றில் புலிகள் இயக்கம் பல சிக்கலான சவால்களுக்கு முகம்கொடுத்தது. இதில் இந்திய தலையீடு முக்கியம் பெறுகிறது. 83 நடுப்பகுதியில் ராஜதந்திரக் குறுக்கீடாக ஆரம்பித்து, 87 அக்டோபரில் நேரடி இராணுவ ஆக்கிரமிப்பாக பூதாகாரமெடுத்து, 90 மார்ச் வரை நீடித்த இந்திய வல்லாதிக்க தலையீட்டை தனித்து நின்று எதிர்த்து ஈற்றில் வெற்றிகொண்டமை புலிகள் இயக்கத்தின் மகத்தான வரலாற்று சாதனையாகும்.

ஒரு மாபெரும் விடுதலைச் சக்தியாக வளர்ந்து, இக் காலகட்டத்தின் முக்கிய வரலாற்று நிகழ்வுகளையும் திருப்புமுனைகளையும் புலிகள் இயக்கமே நிர்ணயித்தது இதனை இக் கட்டுரையில் முழுமையாக மீளாய்வுசெய்வது கடினம். எனினும் சுருக்கமாகப்பார்ப்போம்.

எண்பதுகளின் ஆரம்பம், கூட்டணியின் இனத் துரோகப் படலமாகவும் சிங்களப் பேரினவாதத்தின் இன ஒழிப்பு வன்முறையாகவும் தொடங்கியது. தமிழீழத் தனியரசு அமைப்பதற்கு தமிழ் மக்களிடம் ஒப்புதல்பெற்று கொழும்புப் பாராளுமன்றத்திற்குள் நுழைந்து கொண்ட கூட்டணி, மாவட்ட அபிவிருத்திச் சபையை ஏற்கும் அளவிற்கு கீழிறங்கியது. இந்த மாவட்டசபைத் தேர்தலுக்கு முதல் நாள் இரவு, 1981 மே 31ஆந் திகதி, யாழ்ப்பாணத்தில் சிங்கள ஆயுதப்படைகள் வெறியாட்டம் ஆடி யாழ் நகரை தீயிட்டுக் கொளுத்தியது. யாழ். நூல்நிலையமும் அதிலிருந்த வரலாற்றுக் கலாசார பொக்கிஷங்களும் தீ வைத்து அழிக்கப்பட்டன. ஜெயவர்த்தனாவின் மூத்த அமைச்சர்களான சிறில் மத்தியூவும், காமினி திசநாயக்காவும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து இந்த நாசவேலையை செய்து முடித்தனர். யாழ்ப்பாண தீ வைப்பை அடுத்து, சரியாக மூன்றுமாதங்களின்பின்னர் இலங்கைத் தீவு பூராகவும் தமிழருக்கெதிரான இனக் கலவரம் வெடித்தது. நூற்றுக் கணக்கில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். கோடிக் கணக்கில் தமிழர் சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன.

அரச வன்முறை தீவிரமாக விடுதலைப் புலிகளின் ஆயுத எதிர்ப்பியக்கமும் அதிதீவிரமடைந்தது.

1981 அக்டோபர் 15ந் திகதி, சாள்ஸ் அன்ரனி (சீலன்) தலைமையில் விடுதலைப் புலிகளின் அதிரடிப் படையணி ஒன்று யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறை வீதியில் இராணுவ ஜீப் வண்டி ஒன்றை தாக்கி இரு இராணுவத்தினரை அழித்தனர். சிங்கள இராணுவத்திற்கு எதிராக விடுதலைப் புலிகள் நடத்திய முதலாவது கெரில்லாத் தாக்குதல் இதுவாகும்.

1982 ஜூலை 2ஆந் திகதி நெல்லியடியில் ரோந்து சென்ற பொலிஸ் ஜீப் வண்டி மீது திடீர் தாக்குதலை நடத்திய புலிகள் நான்கு பொலிசாரை கொன்றனர்.

1982 அக்டோபர் 27ஆந் திகதி விடுதலைப்புலிகளின் கெரில்லா அணி ஒன்று சாவகச்சேரி பொலிஸ் நிலையம் மீது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிகரமான தாக்குதலை நடத்தியது. இந்தத் தாக்குதலில் மூன்று பொலிசார் கொல்லப்பட்டனர். மூவர் படுகாயமடைந்தனர். பொலிஸ் நிலைய ஆயுதக் களஞ்சியத்திலிருந்து பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

இவ்விதம் என்பதின் ஆரம்பத்தில் முனைப்புற்ற புலிகளின் ஆயுத எதிர்ப் பியக்கம் 83இல் மேலும் தீவிரமடைந்தது.

இது இவ்வாறிருக்க, தமிழர் பிரச்சினைக்கு தீர்வுத் திட்டமாக, அதிகாரப் பரவலாக்கத்தின் அத்திவாரமாக கூட்டணியால் சிங்கள அரசிடமிருந்து பெறப்பட்ட மாவட்டசபை, அதிகார வறுமையால் செயலிழந்து செத்துப் போனது. இந்த நிலையில், 1983 மே 18ஆம் திகதி வடக்கில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதென அரசு அறிவித்ததும் தேர்தல் களத்தில் குதிக்க கூட்டணியும் மற்றும் சந்தர்ப்பவாத அரசியல் கட்சிகளும் முன்வந்தன. வடக்கில் தாண்டவமாடும் அரச பயங்கரவாதத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு விடுதலைப் புலிகள் பொதுமக்களை கேட்டுக் கொண்டனர். வடக்கில் அரசின் கைப் பொம்மைகளாக செயற்பட்டு வந்த ஐக்கிய தேசியக்கட்சியின் அமைப்பாளரும் ஆதரவாளர்களும் விடுதலைப்புலிகளின் எச்சரிக்கையை மீறி தேர்தலில் குதிக்க முற்பட்டதால் இவர்களில் மூவரை விடுதலைப் புலிகள் சுட்டுக் கொன்றனர். ஒரே நாளில் நடைபெற்ற இந்த சம்பவத்தை அடுத்து ஐ. தே. கட்சியின் சார்பில் நின்ற சகல தமிழ் வேட்பாளர்களும் தேர்தலிலிருந்து வாபஸ் பெற்றதுடன் பல தமிழர்கள் ஐ. தே. கட்சியிலிருந்தும் ராஜினாமா செய்தனர். புலிகளின் தீவிர அரசியல் பிரசாரத்திற்கு செவிசாய்த்த வடமாகாண மக்கள் உள்ளூராட்சித் தேர்தலை பூரணமாய் பகிஷ்கரித்தனர். இந்தப் பகிஷ்கரிப்பு அரசியல் ரீதியில் புலிகளுக்கு கிட்டிய மகத்தான வெற்றியாக அமைந்தது. புலிகளின் வேண்டுகோளை நிராகரித்து தேர்தலில் நின்ற கூட்டணியினர் சகிக்க முடியாத அவமானத்தை தேடிக் கொண்டனர். தேர்தலில் சந்தித்த தோல்வியுடன் கூட்டணி செல்லாக் காசாக மாறியது. இத்துடன் தமிழீழ அரசியல் அரங்கிலிருந்து கூட்டணியின் உதய சூரியன் நிரந்தரமாக அஸ்தமித்தது.

தமிழர் வரலாற்றில் கொந்தளிப்பு மிகுந்த காலகட்டமாக 1983 ஜூலை மாதம் அமைந்தது. ஒரு சம்பவம், சங்கிலித் தொடர்பாக பல நிகழ்வுகளை விளைவித்து பாரிய அரசியல் தாக்கங்களை ஏற்படுத்தி, போராட்ட வரலாற்றின் ஓட்டத்தை முனைப்படுத்தும் வகையில் அமைந்ததென்றால், அது ஜூலை 23ஆந் திகதி திருநெல்வேலியில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதல் சம்பவமாகும். சிங்களப் பேரினவாதத்தை பேரதிர்ச்சியில் ஆழ்த்திய இந்தத் தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இந்த அதிரடித் தாக்குதலை திட்டமிட்டு அதில் பங்கு கொண்ட பிரபாகரன் தனது கையால் ஏழு இராணுவத்தினரை சுட்டுக் கொன்றார். தமிழீழத்தில் கூடிய தொகையில் சிங்களப் படையினர் கொல்லப்பட்ட முதற் சம்பவம் இதுவாகும்.

'பயங்கரவாதத்தை' பூண்டோடு அழிக்கப் போவதாக மறி, மாறி முழங்கிக் கொண்டிருந்த ஜெயவர்த்தனா அரசுக்கு இந்த தாக்குதல் சம்பவம் முகத்தில் ஓங்கி அறைந்தது போல இருந்தது. புலிகள் இயக்கத்தின் தலைமையில் புரட்சிகர ஆயுதப் போராட்டம் ஒருதிண்ணியமானவடிவத்தையும் காத்திரமான வளர்ச்சியையும் பெற்று வருகிறது என்பதை தமிழ் மக்களுக்கு இந்தத் தாக்குதல் சம்பவம் உணர்த்தியது.

இந்த சம்பவத்தின் அதிர்ச்சி அலைகள் தென் இலங்கையில் பரவிய போது அதனை தமிழருக்கு எதிரான இனக் கிளர்ச்சியாக மாற்றிவிட்டு, கொழும்பில் நிலைகொண்டிருந்த தமிழரின் பொருளாதார ஆதிக்கத்தை நாசமாக்கிவிட சிங்கள அரசு திட்டமிட்டது. அரசின் தூண்டுதலின் பேரில் ஜூலை 26ஆந் திகதியிலிருந்து தென்னி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லங்கையில் வெடித்துப் பரவிய இனப் பூகம்பம் வரலாறு காணாத இரத்தக் களரியை உண்டுபண்ணியது. சிங்களக் காடையரின் காட்டுமிராண்டித்தனமான வன்முறை முழு உலகத்தையுமே அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

இந்த இனத் துவேச வன்முறையானது தமிழ், சிங்கள தேசங்களை என்றுமில்லாதபடி பிளவு படுத்தியது. தமிழ்த் தாயகத்தில் தன்னாட்சி உரிமையை நிலைநாட்டும் தனியரசுப் போராட்டத்திற்கு என்றுமில்லாத உத்வேகம் பிறந்தது. இனவுணர்ச்சிப் பிரவாகத்தில் உந்தப்பட்டு ஆயிரமாயிரம் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தில் குதிக்கத் தயாரானார்கள். தனியரசுப் போராட்டம் மேலோங்குவதைக் கண்டு பயந்த சிங்கள அரசு, அவசர அவசரமாக, அரசியலமைப்பில் ஆறாவது திருத்தம் ஒன்றை அமுல்படுத்தி, தமிழரின் தன்னாட்சி உரிமைக்குத் தடைவிதித்தது. இந்தத் தடை தனியரசுப் போராட்டத்திற்கு மேலும் உரமேற்றுவதாக அமைந்தது. இந்தச் சமயத்தில், பாராளுமன்றத்திலும் இருக்கமுடியாது தமிழீழத்திற்கும் திரும்பமுடியாது தத்தளித்த கூட்டணித் தலைவர்கள் தமிழ்நாட்டில் தஞ்சமடைந்தார்கள்.

இதுவரை காலமும் இலங்கைத்தீவை அதிரவைத்த சம்பவங்களையும், அதன் வரலாற்றுப் போக்கினையும் மிகவும் உன்னிப்பாக அவதானித்து வந்த இந்தியஅரசு ஜூலை கலவரத்துடன் இலங்கையில் தலையிட முடிவுசெய்தது. இந்திய வல்லாதிக்கத்தை வெறுத்த ஜெயவர்த்தனாவின் அமெரிக்க ஏகாதிபத்திய சார்புப் போக்கும், இலங்கையில் இந்திய பகைமை சக்திகளின் ஊடுருவலும் பாரத அரசுக்குச் சினத்தை மூட்டியது. அதே சமயம், ஈழத் தமிழர்கள் மத்தியில் மேலோங்கிவரும் தனியரசுப் போராட்டமும், அதனை முன்னெடுத்த புலிகளின் ஆயுத எதிர்ப்பு இயக்கமும் இந்திய உபகண்டத்தில் பிரிவினைவாத சக்திகளுக்கு ஊக்கமளிக்கலாம் எனவும் இந்தியா அஞ்சியது. எனவே, இந்த அச்சுறுத்தல்களுக்குமுற்றுப்புள்ளி வைத்து, இலங்கைத்தீவை தனது பூகோள-கேந்திர ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர இந்திய அரசு தீர்மானித்தது. இந்த நோக்கை நிறைவேற்ற இரகசியத் திட்டம் ஒன்றும் இந்திய பாதுகாப்பு அமைச்சினால் தீட்டப்பட்டது.

இந்த இரகசியத் திட்டத்தின்படி, தமிழ்ப் போராளி அமைப்புகளுக்கு ஆயுதங்களும் பயிற்சியும் அளித்து, ஆயுத எதிர்ப்பியக்கத்தை தீவிரமாக்கி, ஜெயவர்த்தனா அரசுக்கு நெருக்குதலை உண்டு பண்ணி ஒற்றையாட்சியின் கீழ் தமிழ் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைக் கொண்டுவர இந்தியா விரும்பியது. ஜெயவர்த்தனாவின் திமிரை அடக்கி அவரை வழிக்குக் கொண்டுவருவது மட்டுமல்லாமல், தமிழீழ மக்களின் தனியரசுப் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கவும் இந்தியா திட்டமிட்டது. ஏனைய அமைப்புகளுக்கு கூடிய அளவு ஆயுதங்களும்; பயிற்சியும், பண உதவியும் அளித்துவிட்டால் இராணுவ சமபலத்தை மாற்றியமைத்து தனிநாட்டு இலட்சியத்தில் உறுதியுடன் நிற்கும் புலிகள் இயக்கத்தையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரலாம் அல்லது ஒழித்து விடலாம் எனவும் இந்திய அரசு கருதியது. இந்தத் திட்டத்தை அமுல் படுத்தும் அதிகாரத்தை இந்திரா காந்தி அம்மையார் இந்திய உளவுப்படையான றோவுக்கு (Raw) வழங்கினார்.

*1983* ஆகஸ்டில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பாரிய தாக்கங்களை விளைவித்தன. வரலாற்றுப் படிமுறை வளர்ச்சியில் உருவகம் கொண்டு வந்த தமிழரின் ஆயுத எதிர்ப்பு இயக்கம் இந்திய தலையீட்டினால் திடீரென ஒரு செயற்கையான வீக்கம் அடைந்தது. செய்வதறியாது செயலிழந்து போயிருந்த பல தமிழ்க் குழுக்கள் இந்தியாவின் இரத்த மூட்டலினால் உயிர்பெற்று எழுந்து நிமிர்ந்தன. படைபலத்தை பெருக்கிக் கொள்ள வேண்டும் என்ற அவாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்மூடித்தனமான ஆட்சேர்ப்புகள் நடந்தன. இதனால், பல சமூக விரோத சக்திகள் இந்தக் குழுக்களுக்குள் ஊடுருவல் செய்ய முடிந்தது. இதன் விளைவாக ஒழுக்கம், கட்டுப்பாடு சீர்குலைந்தது.

சிறு அளவில் இந்திய உதவியை புலிகள் பெற்றுக் கொண்டாலும் இந்திய அழுத்தங்களுக்கு வளைந்து கொடாமல் தனித்துவமான போக்கிலும் இலட்சிய உறுதியிலும் இறுக்கமாக இருந்தனர். ஆனால் அனேகமாக மற்றைய அமைப்புக்கள் எல்லாமே, இந்திய உதவியில் மெய் மறந்து இந்திய எசமானுக்கு அடிமைப் பட்டன. இந்தியாவின் கூலிப்படை என்று டெலோ இயக்கம் தன்னை பகிரங்கமாக பிரகடனப்படுத்தியது.

ஆயுதப் பயிற்சித் திட்டத்தை இந்திய மண்ணில் செயல்படுத்திக் கொண்டு, கொழும்பில் பேச்சு வார்த்தை நாடகம் ஒன்றையும் பாரத அரசு அரங்கேற்றியது. செத்துப் போயிருந்த கூட்டணித் தலைமைக்குப் புத்துயிர் கொடுத்து, சர்வகட்சி மாநாட்டில் தமிழரின் பிரதிநிதிகளாக அவர்களை மேடையேற்றியது. ஒருபுறம் தமிழ் இளைஞர்களை கூலிப்படைகளாக களத்தில் இறக்கி ஜே. ஆர் அரசுக்கு இராணுவ நெருக்குதலைக் கொடுத்து மறுபுறம், கூட்டணியை தமிழர்களின் பிரதிநிதிகளாகப் பாவித்து, ஒற்றையாட்சியின் கீழ் அற்பசொற்ப சலுகைகளுடன் ஒரு தீர்வைக் கொண்டுவர இந்திய அரசு முயன்றது. அரசியல் பாலைவனத்தில் ஒதுங்கிப் போயிருந்த கூட்டணித் தலைவர்களுக்கு இந்தக் கதாபாத்திரம் மிகவும் பொருத்தமாக அமைந்தது. எனவே, இந்திய இயக்குனர்கள் சொன்னபடி நடிப்பதற்கு அவர்கள் தயாராக இருந்தனர். எனினும் குறைந்தபட்ச சலுகைகளைத் தானும் கொடுக்க ஜே. ஆர். அரசு மறுத்ததால் 83 இன் இறுதியில் ஆரம்பித்த சர்வகட்சி மாநாடு சிறிது காலம் இழுபட்டு பின்னர் தோல்வியில் முடிந்தது.

1984ஆம் ஆண்டு, தமிழீழம் பரவலாக விடுதலைப்புலிகள் இயக்கத்தின் ஆயுதப் போராட்டம்அதிதீவிரமடைந்தது.தொடர்ச்சியாகவும் தீர்க்கமாகவும் பல முனைகளில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதல்களினால் நூற்றுக்கணக்கில் இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பல பொலிஸ் நிலையங்கள் தாக்கி அழிக்கப் பட்டன. இதனால் வடக்கில் பொலிஸ் நிர்வாக சேவை சீர்குலைந்தது. மிகவும் நுட்பமான முறையில் புலிகளால் தயாரிக்கப்பட்ட நிலக்கண்ணி வெடிகள் இராணுவ தரப்பில் பலத்த உயிர்ச் சேதத்தை விளைத்தது. இதனால் கொதிப்படைந்த இராணுவம் அப்பாவிப் பொதுமக்களை பழிவாங்கியது. திருக்கோணமலை, வவுனியா மாவட்டங்களில் பல கிராமியப் படுகொலைகள் இடம் பெற்றன. மக்களைக் கொன்று விட்டு தப்பி விட முடியாது என்ற வகையில் புலிகளின் பதிலடித் தாக்குதல்கள் அமைந்தன சிங்கள ஆயுதப்படைகளை நேருக்கு நேர் நின்று சமர்புரியும் அளவிற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் பாரிய வளர்ச்சி பெற்று வருவதைக் கண்டு சிங்கள அரசு திகிலடைந்தது. புலிகளின் போராட்ட சாதனைகளைக் கண்டு தமிழீழ மக்கள் பூரிப்படைந்தனர். தமிழரின் விடுதலைப் போராட்டம் முழுமையான ஆயுதப் போர் வடிவம் பெற்று வருவதை மக்கள் புரிந்து கொள்ளத்தவறவில்லை.

புயலின் வேகத்துடன் புலிகளின் ஆயுதப்போராட்டம் உக்கிரமடைவதைக் கண்டு இந்திய அரசு கலக்கமடைந்தது. சிங்கள இராணுவ இயந்திரம் சிதைக்கப்பட்டு தமிழரின்ஆயுத எதிர்ப்பியக்கம் வெற்றிப்பாதையில் வீறு நடை போட்டால் தனியரசு சாத்தியமாகும் சூழ்நிலை பிறந்து விடுமென இந்தியா அஞ்சியது.போட்டஅழுத்தம்போதும், இனிப்போர்நிறுத்தம் செய்து,பேச்சுக்களை நடத்தி, பிரச்சினையைத் தீர்ப்போம் என இந்திய அரசு,85இன் ஆரம்பத்திலிருந்தே, புலிகள் இயக்கம் மீதுஅழுத்தத்தைப் போட்டது.இந்தியாவின் வற்புறுத்தலின் பேரில் 85ஜூன்18ஆம் திகதி விடுதலைப் புலிகளுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் சிங்கள ஆயுதப்படைகளுக்கும்மத்தியில் போர் நிறுத்தம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து ஜூலை முதற்பகுதியில் இந்திய அரசின் மத்தியத்துவத்தின் கீழ் பூட்டான் தலைநகர் திம்புவில் பேச்சுக்கள் ஆரம்பித் தன.கூட்டணி உட்பட சகல தமிழ்அமைப்பு களும் பேச்சுகளில் கலந்துகொண்டன.தமிழ ரின் தன்னாட்சி உரிமையை வலியுறுத்தி புலிகள்இயக்கம் திம்பு பேச்சுக்களில் நான்கு கோட்பாடுகளை முன் வைத் த து இந்தக் கோட்பாடுகளை ஏனைய அமைப்புக்களும் ஏற்றுக் கொண்டு தன்னாட்சி உரிமைகோரிக் கையில் ஒரே நிலைப்பாட்டை எடுத்துக் கொண்டது இந்திய அரசுக்குபெரும் ஏமாற் றத்தைக் கொடுத்தது.

தமிழர் தேசியம், தமிழர் தாயகம், தமிழர் தன்னாட்சி உரிமை என்ற அடிப் படைக் கோட்பாடுகளை அங்கீகரித்து தமிழீழ மக்களின் தேசிய பிரச்சினைக்கு ஒரு தீர்வுத் திட்டம் முன்வைக்கவேண்டும் என்ற விடுதலைப் புலிகளதும் மற்றைய தமிழ் அமைப்புகளதும் ஏகோபித்த கோரிக் கையை சிங்கள அரசு நிராகரித்தது. இப் படியாக திம்புப் பேச்சுவார்த்தைகள் சிக்க லடைந்த நேரத்தில் வவுனியாவில் சிங்கள இராணுவம் போர்நிறுத்தத்தை மீறி 200க் கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்களை கொன்றுகுவித்தது. இதனை கடுமையாக ஆட்சேபித்து புலிகளும் ஏனைய அமைப்பு களும் திம்பு பேச்சுகளை பகிஷ்கரிக்க முடி வெடுத்தன. இந்திய அரசு பேச்சுக்களை தொடரவைக்க பகீரத முயற்சிசெய்தும் திம்பு பேச்சுக்கள் முறிவடைந்தன. பேச்சுக் கள் முறிவடைந்ததைத் தொடர்ந்து தமிழீ ழத்தில் விடுதலைப் போர் உக்கிரமடைந் தது. விடுதலைப் புலிகள் தொடர்ந்து வீர சாதனைகள் புரிந்தனர்.

தன்னாட்சி உரிமைப் பிரச்சினையில் தமிழமைப்புகள் புலிகளோடு ஒன்றுசேர்ந்து ஒரே குரலெழுப்பியதும், திம்புப் பேச்சுகள் முறிந்ததும் தொடர்ந்தும் புலிகள் இயக் கம் ஆயுதப்போரில் முன்னணிப் படையாக நின்று சிங்கள இராணுவத்தின் முதுகெலு ம்பை முறித்துவருவதும் இந்திய அரசுக்கு சினத்தைக்கொடுத்தது. தமிழ் அமைப்புகள் மத்தியில் ஒற்றுமையைக் குலைத்து, மோதல் களை உண்டுபண்ணி, புலிகள் இயக்கத்தைப் பலவீனப்படுத்தி, கடுகெதியில் முன்னேறிச் செல்லும் ஆயுதப் போராட்டத்தை கட்டுப் படுத்த இந்திய அரசு சதிசெய்தது.டெலோ, ஈ. பி. ஆர், எல். எப். இயக்கங்களுக்கு நவீன ஆயுதங்களை வழங்கி புலிகளை மோதி அழிக்கத் தூண்டிவிட்டது. இதற்கிடையில் சிங்கள அரசு புளொட் தலைமையுடன் இர கசியத் தொடர்புகளை ஏற்படுத்தி புலி களை அழிக்கும் இன்னொரு சதியில் ஈடு பட்டது. இப்படியாக, தமிழ்க்குழுக்கள் இந்திய சிங்கள அரசுகளின் சூத்திரதார சூழ்ச்சி வலைக்குள் சிக்குப்பட்டு புலிகளு டன் மோதுவதற்குத் துணிந்தன. தேசிய விடுதலைப் போராட்டத்திலோ, அன்றித் தமிழீழ மக்களின் நலனிலோ எவ்வித அக் கறையும் காட்டாது முற்று முழுதாக, சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த இந்த ஆயுதக் குழுக்கள், இந்திய ஏகாதிபத்தியத்தினதும்சிங்களபேரினவாதத் தினதும் சூழ்ச்சிக்குப் பலியாகி, தமிழரின் விடிவுக்காக இரத்தம் சிந்திக்கொண்டிருந்த புலிகள் இயக்கத்தை அழிக்க முற்பட்ட போது புலிகளும் தற்காப்பு யுத்தத்தில் குதிக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். 1986மே மாதம் டெலோ இயக்கத்துடனும், நவம்பர் மாதம் ஈ. பி. ஆர்- எல். எவ் வுடனும் மோதல்கள் நிகழ் ந்து இவ்விரு இயக்கங்களும் விடுதலைப் புலிகளால் நிராயுதபாணிகள் ஆக்கப்பட்ட னர். புளொட் இயக்கம் தடைசெய்யப் பட்டு அவர்களது செயற்பாடுகள் நிறுத்தப் பட்டன. எட்டப்பர் கோஷ்டிகளுக்கு எதி ராக புலிகள் ஈட்டிய வெற்றி தமிழீழ சுதந் திரச் சுடரை அணைந்து போகாமல் பாது காத்தது. இந்தியாவின் கூலிகளாக மட்டு மன்றி மக்கள் விரோத சக்திகளாகவும் செயற்பட்ட இந்தஅமைப்புகள் செயலிழந்து போக தமிழீழத்தில் தலைவிரித்தாடிய அராஜகமும் நின்று போயிற்று.

எதிரி அமைப்புக்களின் பகைமுரண் பாடுகள் நீங்கியதால் தமிழீழத்தில் புலிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கத்தின் மேலாதிக்கம் வளர்ந்தது. சிங்கள இராணுவத்திற்கு எதிரான ஆயுதப் போராட்டம் என்றுமில்லாத முனைப்புடன் முன்னேற்றம் கண்டது. பல முனைகளில் வெடித்த புலிகளின் தாக்குதல்களுக்கு ஈடு கொடுக்க முடியாமல் சிங்கள இராணுவம் முகாமுக்குள் முடங்கியது. யாழ்ப்பாணக் குடாநாடும் வடக்கின் பெரும்பகுதிகளும் விடுதலைப்புலிகளின் பெரும் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களாக மாறின. சிங்கள அரசு தோல்வியின் விளிம்புக்குத் தள்ளப்பட்டது.

தனது சதித்திட்டங்கள் எல்லாம் தவிடு பொடியாகி, புலிகள் இயக்கத்தின் மேலாதிக்கம் மேலோங்கி வந்தமை இந்திய அரசுக்கு திகைப்பைக் கொடுத்தது. சிங்கள இராணுவத்தின் ஆதிக்கம் உடைக்கப்பட்டு தமிழீழ மண் படிப்படியாக புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்து கொண்டிருப்பதையும் இந்திய அரசால் ஜீரணிக்க முடியவில்லை. நான்கு ஆண்டு காலமாக நடத்திய அரசியல், ராஜதந்திர சுழியோட்டங்களினாலும், சூழ்ச்சிகளாலும் எவ்வித பயனும் கிட்டவில்லை என்பதை உணர்ந்து கொண்ட பாரதம் நேரடி இராணுவத் தலையீடுதான் ஒரேவழி என்ற முடிவுக்கு வந்தது. புலிகளின் ஆயுதப் போராட்ட நெருக்குதலால் ஆட்டம் கண்டிருக்கும் சிங்களக் கிழட்டு நரி, இந்திய இராணுவத் தலையீட்டை எதிர்க்காது என்றும் புதுடில்லி கணிப்பிட்டது. இந்திய இராணுவம் விடுதலைப் புலிகளை அழித்துவிடும், தமிழரின் விடுதலைப் போராட்டத்தை நசுக்கி விடும், சிங்கள இராணுவத்தைப் பலி கொடாமல் இந்த சாதனையைச் சாதித்து விடலாம் என நப்பாசை கொண்ட ஜெயவர்த்தனா இந்திய ஆதிக்கத்திற்கு அடிபணிய முடிவு செய்தார். 1987 ஜூலை 29 ஆம் திகதி ராஜீவ் - ஜே. ஆர் ஒப்பந்தம் கைச்சாத்தாகியது. இந்தியாவின் பூகோள நலன்களையே பிரதான நோக்காகக் கொண்ட இந்த ஒப்பந்தத்திற்கு அமெரிக்க, ரஷ்ய வல்லரசுகளின் ஆசீர்வாதமும் கிடைத்தது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ராஜதந்திர வெற்றி என இந்தியப் பாராளுமன்றமும், இந்திய பத்திரிகை உலகமும் ஒப்பந்தத்தைப் புகழ்ந்தன. கூட்டணி தொடக்கம் தமிழ் அமைப்புக்கள் எல்லாமே ஒப்பந்தத்திற்குப் புகழாரம் சூட்டின. தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டும் ஒப்பந்தத்தை எதிர்த்தனர். தமிழ் மக்களின் நலனுக்காக, தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமைக்காக, தமிழ் மக்களின் கௌரவத்திற்காக இந்திய வல்லரசுடன் முரண்பட்டு நிற்கத் துணிந்தது.

இந்திய இலங்கை அரசுகளின் கூட்டுச் சதியின் விளைவாக இந்தியப்படைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கு மிடையே யுத்தம் வெடித்தது. ஆயுதக்களைவு என்ற போர்வையில் இந்திய அமைதிப்படை புலிகளுக்கு எதிராக யுத்தத்தில் இறங்கியது. இந்த யுத்தம் தமிழீழ மக்களுக்கு எதிரான போராக விஸ்வரூபம் பெற்றது

1987 அக்டோபர் 10ஆந் திகதி ஆரம்பமான இந்திய - புலிகள் யுத்தம் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக நீடித்தது. ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட இந்திய இராணுவ வீரர்களை களத்தில் இறக்கி புலிகளை அழித்துவிட இந்திய அரசு பகீரத முயற்சிகளை எடுத்தது. புலிகளை ஆதரித்து நின்ற அப்பாவித் தமிழ் மக்களையும் இந்திய அரசு பழிவாங்கியது. இந்திய இராணுவத்தின் அசுரத்தனத்திற்கு ஆறாயிரத்திற்கு மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் பலியானார்கள்.

தமிழீழம் முழுவதையும் முற்றுகையிட்டு நின்ற ஆக்கிரமிப்பு இராணுவத்தை எதிர்த்து விடுதலைப் புலிகள் ஆக்ரோசத்துடன் சமர்புரிந்தனர். அலை அலையாக எழுந்த படையெடுப்புகளை எல்லாம் மலைபோன்ற உறுதியுடன் எதிர்த்துப் போராடினர். விடுதலைப்புலிகளின் அலாதியான துணிவும் அசைக்கமுடியாத தன்னம்பிக்கையும் இந்திய இராணுவத்தை திகைக்கவைத்தது. இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட வீரர்களை உயிர்ப்பலி கொடுத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகளை வெற்றி கொள்ள முடியாது போகவே இந்திய இராணுவத்தின் மன உறுதி தளர்ந்தது. இந்திய வரலாற்றிலேயே என்றுமே சந்தித்திராத நீண்ட, கடினமான ஒரு யுத்தத்தில் குதித்து, பெரிய உயிர்ச் சேதத்தை சந்தித்தும் தனது இராணுவ-கேந்திர இலக்குகளை அடைய முடியாமல் இந்திய அரசு திணறியது.

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் வெற்றி கொள்ள முடியாத போது அரசியல் ரீதியில் அந்நியப்படுத்தி விடலாம் என்ற நோக்கத்தில் போலியான ஒரு மாகாணசபைத் தேர்தலை அரங்கேற்றித் தனது கூலிகளை இந்திய அரசு பதவியில் ஏற்றியது. அப்படியிருந்தும் மக்களின் ஆதரவு இல்லாததால் மாகாணசபை நிர்வாகம் செயற்படவில்லை.

ஒட்டுமொத்தத்தில், இந்தியத் தலையீடு தமிழீழத்தில் தோல்வியைச்சந்தித்தது. ராஜீவ் - ஜே. ஆர். ஒப்பந்தம் செயலிழந்து செத்துப் போனது. எனினும் இந்திய இராணுவம் தொடர்ந்தும் தமிழீழத்தில் நிலை கொண்டிருந்தது.

புதிய ஜனாதிபதியாக பதவி ஏற்ற பிரேமதாசா, 1989இன் ஆரம்பத்திலிருந்தே விடுதலைப்புலிகளை சமாதானப் பேச்சுக்கு வருமாறு மாறி, மாறி அழைப்புகளை விடுத்தார். வடகிழக்கில் முடிவில்லாமல் தொடரும் யுத்தமும், தென்னிலங்கையில் ஜே. வி. பியின் கிளர்ச்சியுமாக வன்முறைச் சுவாலைகள் இலங்கைத் தீவு முழுவதிலும் பரவியிருந்தது; புலிகளுக்கு எதிரான யுத்தத்தை சாக்காக வைத்து வடகிழக்கில் இந்திய இராணுவம் நிரந்தரமாக நிலை கொண்டு விடலாம் என பிரேமதாசா அஞ்சினார். ஜே. வி. பியினரும் இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான கோஷத்தை முன்வைத்தே கிளர்ச்சியை நடத்தி வந்தார்கள். எனவே விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தி இந்திய இராணுவத்தை வெளியேற்றி விட வேண்டுமென பிரேமதாசா விரும்பினார். தமிழீழ மண்ணில் இந்திய ஆக்கிரமிப்பிற்கு முற்றுப் புள்ளி வைத்துவிட வேண்டும் என புலிகளும் விரும்பியதால் பிரேமதாசாவின் அழைப்பை ஏற்க முடிவு செய்தனர். நிபந்தனைகள் எதுவுமின்றி பேச்சுக்கள் சுமுகமாக நடைபெற்றன. இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக பிரேமதாசா அரசு புலிகளுடன் கைகோர்த்து நின்றமை ராஜீவ் அரசுக்கு சினத்தைக் கொடுத்தது. சிங்கள இராணுவத்திற்கு முண்டு கொடுத்து, சிறிலங்கா அரசின் நலனுக்காக, இந்திய ஜவான்கள் இரத்தம் சிந்திக் கொண்டிருக்கும் வேளையில் பிரேமதாசா அரசு புலிகளை அரவணைத்து நிற்பது இந்தியாவுக்கு அவமானத்தையும் ஆத்திரத்தையும் கொடுத்தது. புலிகளின் விவேகமான ராஜதந்திர காய் நகர்த்தலால் இந்திய இலங்கை உறவுகளில் பகைமை மூண்டது. இந்திய இராணுவத்தை வெளியேறுமாறு பிரேமதாசா பகிரங்கமாக அறிவித்தார். இலங்கையின் அழைப்பின் பேரில் அமைதிகாக்க வந்ததாகக்கூறி வந்த இந்திய அரசுக்கு நிலைமை சங்கடமாகியது. அவமானப்பட்டு முகத்தில் கரி பூசியபடி இந்திய இராணுவம் தமிழீழத்திலிருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டது.

எத்தனையோ திட்டங்கள் வகுத்து, எத்தனையோ அரசியல் ராஜதந்திர நாடகங்களை அரங்கேற்றி, எத்தனையோ கோடி பணத்தைச் செலவழித்து, எத்தனையோ ஜவான்களின் உயிரைப் பலி கொடுத்து, இறுதியில் வெறும் கையுடன் எதிர்பார்த்தது கைகூடாமல், அவமானப்பட்டு வெளியேறுவதை இந்தியாவினால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டபோது சோவியத்யூனியன் கையாண்ட யுக்தியை இந்தியா கடைப்பிடிக்க முனைந்தது. புலிகளிடமிருந்து தனது பொம்மை ஆட்சியை காப்பாற்றும் நோக்கில் ஒரு கூலி இராணுவத்தை உருவாக்க இந்தியா முயன்றது. 'தமிழ்த் தேசிய இராணுவம்' என்ற பெயரில் இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவம் அமைக்கப்பட்டது. பலவந்தமாக தமிழ் இளைஞர்களையும் மாணவர்களையும் வேட்டையாடிப் பிடித்தது, பயிற்சி அளித்து, பெருந்தொகையில் நவீன ரக ஆயுதங்களை வழங்கி, புலிகளுக்கு எதிராக ஒரு படை திரட்டப்பட்டது. பெருமாளின் மாகாணசபை நிர்வாகத்திற்கு பாதுகாப்பு அரணாக இந்தப் படையை உருவாக்கிவிட்டு, இந்திய இராணுவம் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் படிப்படியாக வெளியேறியது.

இந்திய இராணுவம் வெளியேறிய பிரதேசங்கள் துரிதகெதியில் புலிகள் வசம் வீழ்ந்தன. இலட்சிய உறுதியும், போர் அனுபவமும், வீரமும் மிகுந்த புலிப்படை வீரரின் மின்னல் வேகத் தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் 'தமிழ்த் தேசிய இராணுவம்' சிதறுண்டு ஓடியது. பெரும்பான்மையானோர் ஆயுதங்களுடன் சரணடைந்தனர். மாகாணசபை கவிழ்ந்தது. பெருமாளும் அவரது சகாக்களும் இந்தியாவில் தஞ்சம் புகுந்தனர். இந்திய அரசின் இறுதித் திட்டமும் தவிடு பொடியாகியது.

எண்பதுகளின் இறுதி ஆண்டு இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் வெளியேற்றத்துடனும் 'தமிழ்த் தேசிய இராணுவத்தின்' வீழ்ச்சியுடனும் முடிவடைந்தது. இந்திய இராணுவத் தலையீடு தோல்வியில் முடிந்ததால் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எழுந்த மிகப்பெரிய ஆபத்து நீங்கியது. இந்திய வல்லாதிக்கம் விடுத்த பெரியதொரு சவாலை புலிகள் இயக்கம் வெற்றி கொண்டது. ஒடுக்கப்பட்டு வந்த தமிழ்த் தேசிய இனத்தின் நியாய பூர்வமான விடுதலைப் போராட்டத்தில் அநியாயமாகத் தலையிட்ட தன் கசப்பான வரலாற்றுப் பாடத்தை இந்திய அரசு கற்றுக் கொண்டது. இந்திய இராணுவ பூதத்தை தனித்துநின்று எதிர்த்து வெற்றி கொண்டதால் உலகத்தின் தனிச்சிறந்த போராட்ட சக்தியாக புலிகள் இயக்கம் புகழைத் தேடிக்கொண்டது.

இந்திய இராணுவம் வெளியேறியதைத் தொடர்ந்து கொழும்பு பேச்சுக்களில் சிக்கல் எழுந்தது. பிரேமதாசா அரசின் போக்கிலும் அணுகுமுறையிலும் மாற்றம் ஏற்பட்டது. இந்திய வல்லாதிக்க ஊடுருவலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதோடு ஜே. வி. பி. இயக்கமும் அழிக்கப்பட்டதால் திமிர்கொண்ட பிரேமதாசா அரசு தமிழர் பிரச்சினைக்கு உருப்படியான தீர்வு எதுவும் வைக்காமல் தட்டிக்கழிக்க முற்பட்டது. தமிழரின் தன்னாதிக்க உரிமைக்கு தடைவிதித்த அரசியலமைப்பின் ஆறாவது சட்டத்திருத்தத்தை நீக்கிவிடவேண்டுமென புலிகள் விடுத்த கோரிக்கையையும் அரசு அசட்டைசெய்துவந்தது. அதே சமயம், எந்தத் தீர்வுக்கும் முன்நிபந்தனையாக விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டுமென அழுத்தங்களும் போடப்பட்டன. இதனால் அரசுக்கும் புலிகளுக்கும் முரண்பாடு எழுந்தது.

ஜே. வி. பி இயக்கம் என்ற போர்வையில் ஐம்பதினாயிரத்திற்கு மேற்பட்ட அப்பாவிச் சிங்கள இளைஞர்களைக் கொன்று குவித்த சிங்கள ஆயுதப்படைகள் புலிகளையும் அழித்து விடலாமென கர்வம்கொண்டது. தமிழீழத்தில் முகாம்களுக்குள் முடங்கிக்கிடந்த சிங்கள இராணுவத்திற்கு வரிப் புலிகள் கம்பீரமாக பவனி வருவதையும், புலிக்கொடிகள் எங்கும் வானுயரப் பறப்பதையும் காண சகித்துக்கொள்ள முடியவில்லை. கிழக்கில் சிங்களப் பொலிஸாரின் அட்டகாசங்களும் வடக்கில் இராணுவத்தினரின் அத்துமீறல்களும் மோதல்களாக உருவெடுத்து இறுதியில் யுத்தமாக வெடித்தது.

தமிழ், சிங்கள தேசங்கள் மத்தியில் வரலாறுகாணாத மாபெரும் மோதலாக வெடித்திருக்கும் முழு அளவிலான யுத்தத்துடன் தொண்ணூறுகளின் புதிய தசாப்தம் ஆரம்பமாகியது.

பல வரலாற்றுத் திருப்புமுனைகளையும், யுக நிகழ்வுகளையும் கொண்டதாக அசைந்த கடந்த இரு தசாப்தங்களின் சரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்திரம் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் படிமுறை வளர்ச்சியோடும், எழுச்சியோடும் போராட்டத்தோடும் இழையோடி நிற்ப தைப் பார்த்தோம். இந்த வரலாற்று ஓட்டத்தில் புலிகள் இயக்கம் தமிழரின் சுதந்திர எழுச்சியின் புரட்சிவடிவமாக வளர்ச்சி கண்டதோடு, விடுதலைப் போராட்டத்தையும் தீர்க்கமான பாதையில் முன்னடையச் செய்தது.

எமது தேசிய வாழ்வுக்கு அடித்தளமானதும், சுதந்திர தனியரசுக்கு அத்திவாரமானதுமான எமது தாயக மண்ணை மீட்டெடுக்கும் முயற்சியில் புலிகள் இயக்கம் மாபெரும் சாதனைகளை நிலைநாட்டியிருக்கிறது. தொடர்ச்சியான, திண்ணியமான, வீரம்செறிந்த போராட்டத்தின் பயனாக இன்று தமிழீழத்தின் பெரும்பகுதி நிலப்பரப்பு புலிகளால் மீட்கப்பட்டிருக்கிறது. நீண்ட காலமாக அந்நிய இராணுவங்களின் ஆக்கிரமிப்புக்களமாக இருந்து வந்த இந்தப் பகுதிகள் இன்று தமிழரின் நிர்வாக கட்டுப்பாட்டுப் பிரதேசமாக மாற்றப்பட்டிருப்பது எமது போராட்டத்தின் பெரியதொரு முன்னடைவாகவே கருதப்பட வேண்டும்.

பிரபாகரனின் சொந்த முயற்சியாலும் செயற்திறனாலும் இன்று தமிழீழ மக்களின் பாதுகாப்பு அரணாக ஒரு பலம் வாய்ந்த விடுதலை இராணுவம் உருவாக்கப்பட்டிருக்கிறது. மரபுவழி யுத்த முறைகளில் கைதேர்ந்ததாக தமிழர் படை ஒன்று அமைக்கப்பட்டிருப்பது எமது போராட்ட வரலாற்றில் வளர்ச்சியை நோக்கிய பெரும் திருப்பு முனையைக் குறித்து நிற்கிறது.

அற்புதமான தியாகங்களும், அர்ப்பணிப்புகளும் நிறைந்த புலிகளின் போராட்டம் தமிழர் மத்தியில் என்றுமில்லாதவாறு தேசாபிமான உணர்வையும் விடுதலைப் பற்றையும் ஊட்டியிருக்கிறது. பரந்துபட்ட பொதுமக்களை சாதிய, வர்க்க, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் ஒரே இலட்சியத்தில் ஒன்றுபடுத்தி, ஒரே தேசிய சக்தியாகக் கட்டி எழுப்பிய சாதனையும் புலிகளையே சாரும்.

இன்று எமது போராட்டம் தென் ஆசியக்கண்டத்தில்முதன்மை பெற்ற தேசிய விடுதலைப் போராட்டமாக உலகத்தின் கவனத்தை ஈர்த்திருக்கிறது. போர்த்திறனிலும் இலட்சிய உறுதியிலும் தியாக சிந்தையிலும் ஈடிணையற்றதாகத் திகழும் புலிகளின் தன்னாட்சி உரிமைப்போர் உலகின் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைப் போராட்டங்களுக்கு ஒரு உந்து சக்தியாகவும் வழிகாட்டியாகவும் அமைந்துள்ளது.

தமிழீழ விடுதலை இராணுவத்தின் தோற்றமும், தாயக மீட்புப் போரில் ஈட்டப்பட்டுவரும் மகத்தான சாதனைகளும், எதிரி இராணுவம் எதிர்கொள்ளும் பேரிழப்புகளும் தமிழீழ மக்களுக்கு என்றுமில்லாத ஒரு புதிய நம்பிக்கையை புலிகள் இயக்கம் மீது ஏற்படுத்தியிருக்கிறது. இந்தப் புதிய தசாப்தத்தினதும் வரலாற்றுப் படைப்பாளிகளாக திகழப்போகும்விடுதலைப் புலிகள் தமிழர் தாயகத்தில் தன்னாட்சி உரிமையை நிலைநாட்டி தமது புனித இலட்சியத்தை அடைந்தே தீருவார்கள் என மக்கள் மத்தியில் நம்பிக்கை பிறந்திருக்கிறது.

இழப்புகளும், அழிவுகளும் ஒரு விடுதலைப் போராட்டத்தில் சர்வசாதாரண நிகழ்வுகள். நாம் எத்தனையோ இழப்புகளையும், அழிவுகளையும் சந்தித்துள்ளோம். சந்தித்தும் வருகின்றோம். ஆனால் இந்த இழப்புகளும், அழிவுகளும் எமது ஆன்ம உறுதிக்கு உரமாக அமைந்துவிட்டால் உலகத்தில் எந்தவொரு சக்தியாலும் எம்மை அடக்கிவிடமுடியாது.

தலைவர் வே. பிரபாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைகளில் மறைந்த உண்மைகள்

"கலையும் விஞ்ஞானமும் சமூக உழைப்பிலிருந்து தோன்றியவை. இரண்டும் ஒன்றுக்கொன்று ஆதாரமாக உள்ள இருவகைப்பட்ட வடிவங்கள், இவையிரண்டும் மானிட உழைப் பிலே வேர் கொண்டுள்ளன'' என மார்க்ஸிய அறிஞர் ஜோர்ஜ் தோம்சன் கூறுகின்றார்.

இத்துணை முக்கியத்துவம் பெற்ற கலைகள் பற்றி பேசு மிடத்து கலைஞன், கலைஞர் என்ற பெயர்ப்பதங்கள் பாவிக்கப் படுவதுபோல கலைஞி, கலைஞை என்ற சொற்கள் வழக்கில் சொல்லப்படுவதில்லை. அப்படியானால் கலைகள் தோற்றம் பெற்ற காலத்திலிருந்து இன்றளவும் கலைத்துறைகளில் பெண் களின் ஈடுபாடு இல்லாமலிருந்ததா? குறைவாக இருந்ததா? என்றெல்லாம் பல கேள்விகள் மனதில் எழுகின்றன.

கலை என்று தோற்றம் பெற்றதோ அன்றிலிருந்து பெண் களின்பங்கும் இருந்திருக்கின்றது என்பதை ஆங்காங்கே கிடைக் கும் சில வரலாற்றாதாரங்கள், தொல்பொருளாய்வாளரின் கண்டுபிடிப்புக்கள் சில காட்டி நிற்கின்றன.

ஆதிசமுதாய வாழ்வில் ஆணாயினும் சரி பெண்ணாயினும் சரி வேலைகளில் ஈடுபட வேண்டும். வேட்டையாடுதல், காய் கனி பறித்தல் போன்ற வேலைகளில் இருவரும் ஈடுபடுவர். நிரந்தரமாக ஓரிடத்தில் வாழாமல் அலைந்து திரிவர். வேட்டை யாடிப் பெற்ற மாமிசத்தை அன்றே பச்சையாகச் சாப்பிட்டு விடுவார்கள். வேட்டைக்குச் சென்று கொன்ற மிருகத்தைக் கொண்டு வந்து சாப்பிடும் போது ஆடிப்பாடிக் களித்திருப்பர். இந்த ஆடல்பாடல்களில் ஆண்களும் பெண்களும் பங்குபற்றுவர்.

உற்பத்திக் கருவிகள், கலை வடிவங்கள் இரண்டும் மனி தனின் புற, அக உணர்வுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு அவனின் ஆக்க சக்திக்கும் உந்து கோலாக அமைவன. உற்பத் திக் கருவிகளின் வளர்ச்சி கலைவடிவங்களில் மாற்றங்களை ஏற்படுத்தி வந்ததை, வருவதை வரலாறு தெளிவிக்கின்றது.

காயத்திரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் தொகை அதிகரிக்க அதிகரிக்க அவர்களின் உணவுத் தேவைகளும் அதிகரித்தன. இந்தத் தேவை மக்களை புதிய வழிமுறைகளைக் காணத் தூண்டியது. விவசாயமும், மீன்பிடித் தொழிலும் அறிமுகமாகியது. இதனால் அலைந்து திரிந்த நாடோடி வாழ்க்கை முறை மாறி மக்கள் நிலையாக வாழத்தலைப்பட்டனர்.

இசை, கூத்து. சிற்பம், ஓவியம் எனப் பல கலைகளும் அங்கு வளர ஆரம்பித்தன. அந்த சமூகத்தில் கலையை நுகர்பவர்களுக்கும் கலைஞருக்குமிடையே பெரிய இடைவெளிகள் எதுவும் இருக்கவில்லை. ஆண்களினதும் பெண்களினதும் கலைவெளிப்பாடுகள் பிரித்துப்பார்க்கப்படவில்லை.

மேலதிகமாக உற்பத்தி செய்யக் கூடிய விதத்தில் உற்பத்திக் கருவிகள் அதிகரிக்க கூட்டாக வாழ்ந்த மனித சமூகம் வர்க்கங்களாகப் பிளவுபடத் தொடங்கின. முன்னேறிய உற்பத்திக் கருவிகளை, உற்பத்திச் சாதனங்களை வைத்திருந்தவர்கள் வாய்ப்பற்ற ஏனையோரை அடிமைகளாக்கி தமக்காக உழைக்கச் செய்தனர். உற்பத்திச் சாதனங்களை ஆள்பவனே கலைகளையும் கட்டுப்படுத்தினான். கூட்டுச் சமூக அமைப்பு சிதைந்தது. கூட்டுக் கலை குலைக்கப்பட்டது.

கலைஞருக்கும் நுகர்வோருக்குமிடையே பெரிய இடைவெளி ஏற்பட்டது. மக்கள் தம் அக உணர்வை வெளிப்படுத்த கலைகளைப்படைக்க முடியவில்லை. குறிப்பிட்ட சிலருக்காக அதாவது நிலப்பிரபுக்களுக்காக கலைகள் படைக்கப்பட்டன.

சங்க இலக்கியங்களில் பாணன் என்ற ஆண் கலைஞன் மட்டுமல்லாமல் பாடினி, விறலி என்ற பெண்கலைஞர்களும் குறிப்பிடப்படுகின்றார்கள். அந்தப் பெண் கலைஞர்கள் சுதந்திரமானவர்கள். எவருக்கும் அடிமைகளல்லர். புகழப்படவேண்டியனவாக இருந்தால் மட்டுமே எந்த நிலப்பிரபுவையும் பாடுவார்கள்.

ஆனால் தொடர்ந்து வந்த சமூக அமைப்பில் இந்த நிலை முற்றாக மாறுகின்றது. சிலப்பதிகாரத்து மாதவி அதனை அப்படியே பிரதிபலிக்கின்றாள். கணிதத்தின் சிறப்பினையும், எழுத்துக்களின் சிறப்பினையும் அவற்றாலாய இயற்றமிழின் ஐந்து கூறுபாட்டையும் இசைத் தமிழுக்கியன்ற நால்வகைப் பண்களின் பெருமையினையும் அப்பண்களோடு கூடிய பதினொரு வகைக் கூத்துக்களையும் ஆடும் திறன் மிக்க மாதவி கோவலன் என்னும் நிலப்பிரபுவின் பாலுறவுத் தேவைகளைப் பூர்த்தி செய்பவளாகவே வாழ்ந்தாள். கானல்வரியில் யாழிசைத்து சுதந்திரமாகப் பாடமுற்பட்டதால்தான் கோவலன் அவளைப் பிரிந்தான். இதிலிருந்தே பெண் கலைஞரின் நிலைப்பாடு புரிகின்றது. கலைஞர்கள் எப்படி நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பில் சிக்குண்டு திணறினார்கள் என்பதுமட்டுமல்ல பெண்கலைஞர்கள் எப்படிச் சீரழிக்கப்பட்டார்கள் என்பதும் புலனாகின்றது.

சிலப்பதிகாரத்தில் நிலப்பிரபுவுக்கு அடிமையாக பெண்கலைஞர் இருக்கின்ற அதேவேளை, வேறு ஒரு மாறுபட்ட சமூகத்தையும் காணக் கூடியதாக இருக்கின்றது. ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை, வேட்டுவவரி என்பவற்றினூடாக பெண்களின் இசை, கூத்து போன்ற கலைவெளிப்பாடுகளைப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. தீங்கு ஏதும் நிகழாமல் இருப்பதற்காக குலதெய்வமாகிய மாயோனை வாழ்த்தி பெண்கள் குரவைக் கூத்தாடுகின்ற செய்தி ஆய்ச்சியர் குரவையில் வருகின்றது, கண்ணகியைத் தங்கள் குலதெய்வமாகக் கொண்டு பெண்கள் குரவைக் கூத்தாடுவது குன்றக் குரவையில் வருகின்றது. இவைகளெல்லாம் பெண்கள் தங்கள் கலை உணர்ச்சிகளை, மகிழ்ச்சியை சுதந்திரமாக வெளிப்படுத்தியதைக் காட்டுகின்றது. பழங்குடித்தன்மை மிக்க சமூகத்தில் மட்டும் தான் இந்த நிலை. ஆனால் நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்புக்குள் கட்டுப்பட்டு வாழ்ந்த பெண்களுக்கு இந்த சுதந்திரம் இருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலப்பிரபுக்கள் தம்மை எதிர்த்து தமது அடிமைகள் நடந்து விடக்கூடாது என்பதற்காக கடவுட் கோட்பாட்டை உருவாக்கி நிலைபெறச் செய்தார்கள். முற் பிறவியில் செய்த பாவத்தினால் தான் அடிமையாகக் கஷ்டப்படுகின்றார்கள் என்றும் அல்லாவிடில் தெய்வம் தண்டிக்கும் என்றும் பல மூடக்கொள்கைகளை தமது அடிமைகளின் மனதுள் புகுத்தினார்கள். மக்களுக்காக கோயில் கட்டுவதாகக் கூறிக் கொண்டு தமது வர்க்க நலனைக் காத்துக் கொள்ள கோயில்களைக் கட்டினார்கள். கோயில்களை மையமாக வைத்து கலைகள் வளர்க்கப்பட்டன. கலைஞர்கள் கட்டுப் படுத்தப்பட்டனர். தேவதாசி என்ற ஒரு சாதியினர் உருவாகினர். கோயில்களில் நடனமாடும் பெண்கள் அங்கே நடனமாடுவதற்கு என கோயில்களோடு பொட்டுக் கட்டிவைத்தனர். பொட்டுக்கட்டி வைக்கப் பட்ட பெண்கள் நிலப்பிரபுக்களுக்கும் ஆசைநாயகிகளாக வாழவேண்டிய அடிமை நிலையில் இருந்தார்கள்.

கலைத்திறன் மிக்க பெண்கள் தேவரடியார் என்ற நிலையிலிருந்து தேவதாசியாக மாறி தாசிகுலம் ஆக்கப்பட்டு பெண்கள் ஆண்களுக்கு இன்பமூட்டும் கருவிகளாக கருதப்பட்ட ஓர் சமுகத்தில் குலமகள், விலைமகள் என்ற இரட்டைத்தன்மை உருவானது.

இவ்வாறாக சமுதாய மாற்றங்களூடாக பெண் கலைஞர்களின் செயற்பாடுகள் மறைக்கப்பட்டமையும் அவர்கள்பெண்கள் என்ற காரணத்தால் கலைத்துவங்கள் குறுகிய வட்டத்துள்ஒடுக்கப்பட்டமையும்நிகழ்ந்தன.

கலைகள் தோற்றம் பெற்று வளரத் தொடங்கியதிலிருந்து. இன்றுவரை இசை, நடனம், நாடகம், இலக்கியம் என்ற எந்தத் துறைகளை எடுத்துக் கொண்டாலும் அவ்வத்துறைகளில் பெண்கள் பங்குபற்றியமை பெரும்பான்மையும் வெளிப்படுத்தப்பட வில்லை. இக்கலைத்துறைகளில் பெண்கள் ஈடுபடாதிருந்திருக்கலாம் என்று எக்காரணம் காட்டியும் அடித்துச் சொல்லிவிட முடியாது. அப்படியானால் பெண்களின் திறமைகள் மறைக்கப்பட்டுள்ளனவா என்ற கேள்வி இயல்பாக எழுகின்றது. எப்படிப் பட்டகலை ஆற்றல்கள்? ஏன் அவை மறைக்கப்பட்டன? என்ற கேள்விகளுக்கான விடைகள் ஆராய்ந்து கண்டு பிடிக்கப்பட வேண்டியன. கலைத்துறையின் முழுமையை கலை வளர்ந்த வரலாற்றின் உண்மையை வெளிப்படுத்த இந்த ஆய்வுகளே உதவும்.

இயல், இசை, நடனம், நாடகம் என்ற பல்வேறு கலைத்துறைகள் சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக பல ஆராய்ச்சிகள் வெளியாகியுள்ளன ஆனால் அவற்றில் பெண்களின் கலைத்திறமைகள் பெரிதும் வெளிப்படுத்தப்படவில்லையென்றால் அதற்குக் காரணம் பெண்கள் பங்குபற்ற வில்லை என்பதல்ல. ஆராய்ச்சியில ஆண் முதன்மை நோக்கு இதனை மறைத்திருக்கக் கூடும்.

இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நாவலர் போன்றோரில் சமயத்தூய்மை வாதம் நடனத்தை நிராகரித்தது. சதிர்க்கச்சேரியை,சின்னமேளம் என இழிவாகக் கூறியது. பெண்கள் நடனநிகழ்ச்சிகளில் ஈடுபட்டால் அவர்கள் இழிவானவர்களாகக் கருதப்பட்டார்கள். பெண்களின் கலைத் திறமைகள் வெளிப்படுத்தப்பட வாய்ப்பு இல்லாமல் போனது.

பொதுவாக பெண்களின் கலை உணர்வு தையல், பாய் இழைத்தல், கோலம்போடல், பின்னல்வேலை எனகட்டுப்படுத்தப் பட்டது.

இசை, நடனம், நாடகம் என்ற எத்துறைகளை எடுத்தாலும் அக்கலைத் துறைகளின் ஊடாக எத்தனைவலிமையான கருத்தையும்இயல்பாகவிளங்கவைக்கலாம்இந்தக் கலை துறைகளில்ஈடுபடஆர்வமுள்ளஎவரும் இதனுள் மூழ்கித்திளைத்து முத்தெடுக்க உரிமையுடையவர்கள். ஆண்களுக்கு மட்டும் தான் இவற்றில் ஈடுபடஉரிமை உண்டு என்று சொல்லிவிட முடியாது. இது மனித உரிமை.இந்த உரிமையைப் பறிக்க நினைக்கும் எவருக்கெதிராகவும் போராடலாம். தடைக்கற்களாக இருக்கும் பிற்போக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனமான கருத்துக்கள் எதிர்க்கப்பட வேண்டும் பெண்களுக்குள்ள உரிமைகளுக்காக போராட, இந்தக் கருத்துக்களை எதிர்த்து சரியான கருத்துக்களை முன்வைக்க சகல ஆண்களும் பெண்களும் முன்வரவேண்டியது மட்டுமல்லாமல் செயல்படவும் வேண்டும் முற்போக்குத்தனமான செயல்பாடுகள் மூலம் பிற்போக்குத்தனமான கொள்கைகளை உடைத்தெறிய வேண்டும்.

சகல கலைகளிலும் ஈடுபடுவதால் பெண்கள் தாம் மட்டும் வளரவில்லை இந்த சமூகத்தையும் வளர்க்கின்றார்கள் என்பதை புரியவைக்க வேண்டும். விழிப்புணர்வை ஏற்படுத்த சரியானதோர் ஊடகமாக இருக்கும் இந்தக் கலைத்துறை சார்ந்த விடயங்களில் பெண்களுக்கு ஈடுபட உரிமை உண்டே என்பது மட்டுமல்ல, இடைக்காகத்தில் தான் இந்த உரிமை பறிக்கப்பட்டது என்பதையும் சகலரும் புரிவதோடு பெண்களின் கலைத்துவங்கள் ஏன் மறைக்கப்பட்டன என்பதை ஆராய முன்வர வேண்டும்.

கண்டிப்பான தன்மை என்பது இராணுவக் கட்டுப்பாட்ன் ஓர் இயல்புத்தன்மையே. எந்த நாட்டிலானாலும் சரி இராணுவக் கட்டுப்பாட்டுக்கென்று சில தனித்தன்மைகள் உண்டு. கம்யூனிச நாடாகட்டும் சனநாயகநாடாகட்டும் இராணுவக்கட்டுப்பாடு எந்த இடத்திலும் தனி இயல்பு கொண்டதாகவே இருக்கும். எந்த இராணுவத்தின் நடவடிக்கையையும் கவனியுங்கள். விளைவுகளைப்பற்றிக் கவலைப்படுவதில் அல்ல வெற்றியை அடைவதிலேயே அது கண்ணும் கருத்துமாய் இருக்கும். இராணுவ நடவடிக்கைகளில் 'வெற்றியே' எல்லாவற்றையும்விட முக்கியமானது. இன்னொன்று நாங்கள் மக்களுக்காகப் போராடும் மக்களின் நம்பிக்கைக்குரிய போராளிகள். எம்மை மதிப்பாய்வு செய்கின்றவர்கள் எதிரிகளோடு மோதும் எங்கள் இரக்கமற்ற தன்மையைச் சுட்டிக்காட்டுகிறார்கள். "இரக்கமற்ற தன்மையையே" வடிவமாகக் கொண்ட எதிரிகளோடுதான் நாங்கள் மோதுகிறோம் என்பதை மறந்துவிடுகிறார்கள் நாங்கள் அவர்களை அன்போடு அணுகமுடியும் என்று நினைக்கிறீர்களா? முடியாது இதுதான் உண்மை. ஆனால் உண்மையில் நடைமுறையில் நாங்கள் அறப்பண்பும், ஒழுங்குணர்வும் அமைந்தவர்களாகவே இருக்கிறோம்

நல்ல கட்டுப்பாட்டில் நம்பிக்கையுள்ள ஓர் தலைமை ஆசிரியரின் கீழ் கட்டுப்பாடுகள் மிக்க ஒரு பள்ளிக்கூடம் இருக்குமாயால் அங்கே பயிலும் மாணவர்கள் நல்ல கல்விபெற்று வாழ்வில் உயர்நிலை அடைவார்கள். ஆசிரியர்களும் குறிப்பாக தலைமையாசிரியரும் கட்டுப்பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் சில பள்ளிக்கூடங்கள் முதல்தரப் பள்ளிக்கூடங்களாய் மக்களால் கணிக்கப்படுவதை நீங்கள் அறிவீர்கள் அப்படிப்பட்ட தலைமை ஆசிரியருக்குக் கீழே பயின்று ஒவ்வொரு ஆண்டும் வரிசைவரிசையாக வெளியேறும் மாணவர்கள் பிற்காலத்தில் சிறப்புடன் வாழ்க்கை நடத்துவதையும் கண்டிருப்பீர்கள். எங்கள் நிலையிலும் இந்த உவமை பொருந்தும். இதனால் தான் நாங்கள் கட்டுப்பாட்டிற்கு முதலிடம் தருகிறோம்.

தலைவர் வே. பிரபாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம்

கலாநிதி
**சி. க. சிற்றம்பலம்**
தலைவர்
வரலாற்றுத்துறை
யாழ். பல்கலைக்கழகம்

இன்றைய வட-கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசமென்பது ஓர் அரசியற் சிந்தனையாக இந் நூற்றாண்டின் நாற்பதுகளில் தமிழ் மக்கள் இந்நாட்டின் அரசியலதிகாரத்தினைச் சமமாகப் பகிர்ந்து கொள்ளுவதற்காக முன் வைக்கப்பட்டதொன்றாக விளங்குகின்றது. வரலாற்று நோக்கில் இத்தகைய சிந்தனையை முன்னெடுத்தவர்களாக இலங்கை கம்யூனிஸ்ற் கட்சி (1), இலங்கைத் தமிழரசுக்கட்சி (2) தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழர் இளைஞர் விடுதலை இயக்கங்கள் (3) ஆகியவை விளங்குகின்றன இவ்வடகிழக்கு மாகாணங்கள் ஆங்கில ஆட்சியாளரால் நிருவாக வசதிக்காக உருவாக்கப்பட்டவையே எனலாம். 1796 ஆம் ஆண்டில் ஈழத்தில் தமது ஆதிக்கத்தினைப் பரப்பிய பிரித்தானியர் ஈழத்தினை 1833 இல் ஐந்து மாகாணங்களாகப் பிரித்தனர். இப்பகுப்பில் வடகிழக்கு மாகாணங்கள் அடங்கினாலும் அவை அளவில் தற்போதைய வடிவத்தை விடப் பெரியனவாக விளங்கின எனினும் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் (1886) இவை இன்றைய வழக்கினைப் பெற்றன எனலாம். ஆங்கிலேயருக்கு முன்னர் ஆட்சி செய்த டச்சுக்காரர் (கி.பி. 1658-1796) காலத்திலமைத்த வடிவமைப்பே ஆங்கிலேயர் இவ்வாறு வடகிழக்கு மாகாணங்களைப் பிரிப்பதற்கு உதவியது போற் தெரிகிறது. எவ்வாறாயினும்சுதேச நூல்களில் குறிப்பாக பாளி சிங்கள நூல்களில் இப்பகுதிகள் உத்தரதேச றோகணை என்றபிரிவில் அடங்கின. தற்கால வட மாகாணமும், திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள மகாவலி கங்கையும் உத்தரதேசவின் ஓர் பகுதியின் எல்லையாக அமைய, கிழக்கே மகாவலிகங்கை தொடக்கம் கும்புக்கன் ஓயா வரையிலுள்ளபகுதி [றோகணைப் பிரிவில் ஓர் பகுதியாக விளங்கின

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனலாம். சுருங்கக் கூறின் தமிழ் வரலாற்று நூல்களாகிய யாழ்ப்பாண வைபவமாலை, மட்டக்களப்பு மான்மியம் போன்றவை தற்கால வட-கிழக்கு மாகாணங்களில் மேற்கூறிய எல்லைகளில் தமிழரின் கலாசாரத் தனித்துவத்தினைக் கூறும் நூல்களாக அமைகின்றன எனலாம். துரதிர்ஷ்டவசமாக இந்நூல்கள் இவை பற்றி விரிவான தகவல்களைத் தரவில்லை. இந்நாட்டின் தொடர்ச்சியான அரசியல் வரலாற்றினைக் கூறும் பாளி நூல்களாகிய தீவ வம்சம், மகாவம்சம், சூளவம்சம் ஆகியன அனுராதபுர அரசையமையமாக வைத்து வரலாற்று நிகழ்வுகளைக் குறித்ததால் உத்தரதேச, றோகணைப்பகுதிகளின் அரசியல் நிகழ்வுகளுக்கு உரிய முக்கியத்துவத்தினை அளிக்காத நிலையை நோக்கும் போது இப்பகுதிகளில் (தற்கால வடகிழக்குப்பகுதிகளில்) தனித்துவமான அரசியல் வளர்ச்சி ஒன்று பண்டு தொட்டுக் காணப்பட்டது போன்று தெரிகின்றது. இத்தகைய கூற்றினை இந்நூல்களில் மேற்கூறிய பகுதிகள் பற்றி ஆங்காங்கே, இடையிடையே காணப்படும் குறிப்புகள் இப்பகுதிகள் மீது இடைஇடையே அனுராதபுர அரசு மேற்கொண்ட மேலாணையை எடுத்துக்காட்டுபவையாகவும் காணப்படுகின்றன. இலக்கிய ஆதாரங்கள் இவ்வாறு அமைந்தாலும், கடந்த இரு சகாப்தங்களாக மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் ஈழத்தின் ஆதிக்குடிகள், நாகரீக வளர்ச்சி ஆகியன பற்றி பல புதிய தகவல்களைத் தந்துள்ளன எனலாம்.

(I)

ஈழத்தின் வரலாறு முப்பிரிவுகளை உள்ளடக்கியதொன்றாகும் இவை முறையே வரலாற்றுக்கு முற்பட்டகாலம், வரலாற்றுதயகாலம். வரலாற்றுக்காலம் ஆகும். வரலாற்றுக்கு முற்பட்டகாலம் கற்காலம் எனப்படும். இற்றைக்கு ஒரு இலட்சம் வருடங்களுக்கு முன்னரே ஈழத்தில் கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் ஈழத்தின் தென்மேற்கே உள்ள ஈரவலயத்திலுள்ளன. இவர்களைப் பழைய கற்கால மக்கள் என்பர் அறிஞர். இதனைத் தொடர்ந்து இடைக்கற்காலம், புதியகற்காலம் ஆகியன இவ்வரலாற்றுக்குமுற்பட்டகாலப்பகுப்பில் அடங்கினாலும் புதியகற்காலத்திற்குரிய தடயங்கள் நம் நாட்டிற் கிடைக்கவில்லை. இடைக்கற்காலத்திற்குரிய சான்றுகளே கிடைத்துள்ளன. இச்சான்றுகள் யாழ். மாவட்டம் தவிர்ந்த வடகிழக்கு மாகாணப்பகுதிகளிற் கிடைத்துள்ளன. யாழ். மாவட்டத்தில் இவைகிடைக்காததற்குக்காரணம்இவற்றை உருவாக்குவதற்குத் தேவையான குவாட்ஸ் இன கல்லின வகை இங்கு காணப்படாமையே ஆகும். இம்மக்களின் கலாசாரம் கி. மு. 28,000 ஆண்டளவில் தொடங்கி கி.மு. 1000 வரை நீடித்திருந்தது. தற்கால வேடர்களின் மூதாதையரே இதனை உருவாக்கியவர்கள் ஆவர். இக்கலாசாரம் தமிழகத்தில் நிலவிய இடைக்கற்காலக் கலாசாரத்தினை ஒத்துக் காணப்படுவதால் இது தமிழகத்திலிருந்துதான் ஈழத்தினை அடைந்தது எனக்கொள்ளப்படுகிறது.

(II)

கி.மு. 1000 தொடக்கம் கி.மு. 250ஆம் ஆண்டிற்குரிய காலப்பகுதி வரலாற்றுதயகாலமாகும். வரலாற்றுக்கால வளர்ச்சிக்கு வித்திட்ட காலமாக இது அமைந்ததால் இது இவ்வாறு பெயர் பெற்றது எனலாம். இக்காலத்திற்குள் ஈழத்தின் இன்றைய நாகரிகத்தினை உருவாக்கிய மக்கட் கூட்டத்தினர் ஈழத்திற் புகுந்தனர். இதனைப் பாளி நூல்கள் விஜயன் கதை, பாண்டுகாபயன் கதை என்ற ஐதீகங்களிற் கூறுகின்றன. விஜயன் கதை சிங்கள மக்களின் மூதாதையினர் வட இந்தியாவிலிருந்து இந்நாட்டின் வரண்ட வலயப்பகுதிகளில் நதிக்கரைகளை அண்டி மேற்கொண்ட குடியேற்றத்தினைக் கூறுவதாக வரலாற்றறிஞர் பலர் ஏற்றுக்கொண்டாலும் இக்கதை ஒரு கட்டுக்கதை என்பதும் இத்தகைய கட்டுக்கதையின் உருவாக்கத்திற்கு பௌத்தமத ஜாதகக்கதைகளே கருப்பொருளாக அமைந்தன என்றும் மெண்டிஸ் (4) போன்ற வரலாற்றறிஞர்கள் எடுத்துக்காட்டியுள்ளமை அவதானிக்கத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் இக்கட்டுக்கதையிற் கூட வடகிழக்கு மாகாணங்கள் விஜயன் கூட்டத்தினர் வந்திறங்கிய பகுதியாகக் குறிப்பிடப்படுவது அவதானிக்கத்தக்கது. இவர்கள் வந்திறங்கிய இடம் 'தம்பபாணி, எனக்கூறப்படுகிறது. (5) வடமொழி வடிவ மாகிய தாமிரவர்ணிதான் இவ்வாறு தம்ப பாணி என அழைக்கப்பட்டது எனலாம். தாம்ரவர்ணி என்றால் பொன்நிறமானது எனப்பொருள்படும். தமிழ்இலக்கியங்கள் குறிக்கும் பொன்னி ஆறுதான் பாண்டி நாட்டிலுள்ள தாம்ரவர்ணி என அழைக் கப்பட்டுள்ளது என இனங்காணப்படுவதால் இப்பகுதியிலிருந்து மக்கள் ஈழத்தினை அடைந்ததால் இவர்கள் வந்திறங்கிய இடம் இவ்வாறு அழைக்கப்பட்டது போற் தெரி கிறது. இது விஜயனது தலைநகராகவும் விளங்கியது. இது அமைந்திருந்த இடம் அருவியாற்றங்கரையின் (மல்வத்துஓயாவின்) கரையோரம் என இனங்காணப்பட்டுள்ளது. விஜயனது பாண்டிய இளவரசியும் அவளு டன் கூடிய பரிவாரத்தினரும் வந்திறங்கிய இடமும் இம் மன்னார் மாவட்டத்திலுள்ள மாதித்த ஆகும். (6) மாதித்த என்றால் 'பெருந்துறை' எனப்பொருள்படும் இதனாற் பெருந்துறை என்ற தமிழ் வடிவம் தான் பாளி நூல்களில் 'மாதித்த' என இடம் பெற்றிருக்கிறது போற்தெரிகிறது. யாழ்ப் பாண வைபவமாலை (7) விஜயன் கூட்டத்தி னர் வந்திறங்கிய இடமாகக் கதிரமலையைக் குறிக்கிறது. இக்கதிர மலைதான் கந்த ரோடை என நாளடைவில் உருமாறியது எனக்கொள்ளப்படுகிறது. விஜயனது சகாக் கள் நாட்டின் பல்வேறு இடங்களிற் குடி யேற்றங்கள் அமைத்தது பற்றிப் பாளி நூல் கள் கூறுகின்றன. இவற்றுள் கிழக்கு மாகாணப்பகுதியிலுள்ள றோகணை, தீக வாபி ஆகியனவும் அடங்கும். விஜயன் பின் ஆட்சிபீடமேறிய பண்டுவாசுதேவவும், அவ னின் அரசியும் வந்திறங்கிய இடம் திரி கோணமலை எனவும் கொள்ளப்படுகிறது. ஒட்டுமொத்தமாக நோக்கும் போது விஜயன் கதை ஓர் கட்டுக்கதையாயினும் இதிற் கூறப்படும் சம்பவங்கள் வட - கிழக்கு மாகா ணங்கள் ஆதிக்குடியேற்றப் பகுதியே என் பதை உறுதி செய்வனவாக இங்கு கிடைத் துள்ள தொல்லியற் சான்றுகள் உறுதிசெய் கின்றன எனலாம். இக்கட்டுக்கதையில் மாத் திரமன்றி புத்தர் இந்நாட்டிற்கு மேற் கொண்டதாகக் கூறப்படும் ஐதீகத்தி லும் வடபகுதி நாக அரசின் இருப்பிடமா கக் கூறப்படுவது ஈண்டு அவதானிக்கத்தக் கது. (8) இதனையே மணிமேகலை நாக நாடு என்கிறது. இத்தகைய நாக அரசு தென்மேற்கே களனிகங்கைப்பகுதியிலும் காணப்பட்டது. இவர்களும் வடபகுதி நாக அரசர்களும் உறவினராவர்.

விஜயன் கதை கட்டுக்கதை என்பதை இதனைநிரூபிப்பதற்கான தொல்லியற்சான் றுகள் காணப்படாமை எடுத்துக்காட்டுகின் றது எனலாம். இத்தகையசான்றுகள் வடஇந் தியாவிலிருந்து சிங்கள மக்களின் மூதாதை யினர் இந்நாட்டிற்கு வரவில்லை என்பத னையும் இந்நாட்டிற்கு நாகரிகத்தினை உருவாக்கியோர் தென்னிந்தியாவிலிருந்தே ஈழம் புகுந்தனர் என்பதையும் எடுத்துக் காட்டியுள்ளன. (9) இவர்களுக்குரிய கலா சாரமும் பெருங்கற்கால கலாசாரம் எனத் தொல்லியலாளா இனங்கண்டுள்ளனர். இறந்தோரை அடக்கஞ் செய்வதற்காகப் பெரிய கற்களைப் பயன்படுத்தி ஈமச்சின் னங்களைப் படைத்ததால் இது இவ்வாறு பெயர்பெற்றது எனலாம். இக்கலாசாரத் தில் நான்கு முக்கிய அம்சங்கள் காணப் டன. வசிப்பிடங்கள் இடுகாடுகள் / ஈமச் சின்னங்கள், வயல்கள், குளங்கள் ஆகிய னவே இத்தகையதாகும். இம் மக்கள் படைத்த ஈமச்சின்னங்கள் பலவகைப்பட் டன. கல்லறைகள், கல்பட்டங்கள், கல் மேசைகள், நடுகற்கள் போன்றனவற்றோடு நிலத்தில் குழிகளில் அடக்கஞ் செய்தல் எதுவித ஈமச்சின்னங்களும் இன்றி அடக் கம் செய்தல் போன்றனவும் இவற்றுட் சில வாகும். இவர்கள் பயன்படுத்திய மட்பாண் டங்கள், இரும்பாயிதங்கள் ஆகியனவற்றுள் நெருங்கிய ஒற்றுமையுண்டு. கடந்த நூற் றாண்டில் பாக்கர் திஸமகாராமாப்பகுதி யில் அகழ்வினை மேற்கொண்ட போது இத்தகைய தடயங்களைக் கண்டுபிடித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பகுதியிற்றான் றோகணை அரசின் மையப்பிரதேசமாக விளங்கிய மாகம என்ற இடம் அமைந்திருந்தது. இந்நூற்றாண்டின் முற்பகுதியில் புத்தள மாவட்டத்திலுள்ள பொம்பரிப்பில் தாழிக்காடு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது. 1970 இல் இதில் மேலும் பல அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இத்தாழிக்காடு தமிழ் நாட்டுத் தாம்மிர வர்ணி ஆற்றுப்படுக்கையிலுள்ள ஆதிச்ச நல்லூர்த் தாழிக்காட்டினைப் பெரிதும் ஒத்துக்காணப்படுகிறது. 1969 இல் அனுராத புரத்திலும் 1970 இல் கந்தரோடையிலும் 1980 களில் மாந்தையிலும் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இத்தகைய அகழ்வுகள் விஜயன் கூட்டத்தினரின் ஆகக் குடியேற்றம் நடந்ததாகப் பாளிநூல்கள் கூறுமிடங்களிலெல்லாம் இப்பெருங் கற்கால கலாசாரம் நிலைத்திருந்ததை எடுத்துக் காட்டியுள்ளன. இத்தகைய ஈமச்சின்னங்களில் பிறவகைகளும் இத்தகைய அகழ்வின் போது இனங்காணப்பட்டன. மாந்தையில் 1950 களில் மனித எலும்புக் கூடொன்று அகழ்ந்தெடுக்கப்பட்டது. இத்தகைய ஓர் எலும்புக்கூடு ஆனைக்கோட்டையிலும் கிடைத்துள்ளது. இவ்வடக்கத்தோடு வெண்கலத்தாலான முத்திரை ஒன்றும் கிடைத்தது. இதன் வாசகம் 'கோவேந்தன்' /கோவேதன் /கோவேதம் ஆகும். (10) இதேபோன்ற சவ அடக்கம் காரைநகரிலும் கிடைத்துள்ளது. இவற்றைவிட வடகிழக்கு மாகாணங்களுக்கு வெளியே காணப்படும் ஈமச்சின்னங்களை ஒத்த ஈமச்சின்னங்கள் வடக்கே வவுனியாவிலும் கிழக்கே கதிரவெளியிலும் கிடைத்துள்ளன. இவற்றுள் கல்வட்டம் கல்லறை, கல்மேசை ஆகியன அடங்கும். ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது ஈழத்தின் வரலாற்றுதய காலக் குடியேற்றம் தமிழ் நாடு உட்பட்ட தென்னிந்தியாவிலிருந்து இங்கு வந்ததையே இப்பெருங்கற்காலபண்பாட்டிற்கும் தென்னிந்திய பண்பாட்டிற்குமிடையே இழை விட்டோடும் ஒற்றுமையை எடுத்துக் காட்டுகின்றது. தென்னிந்தியாவில் இப்பண்பாட்டை உருவாக்கியவர்களின் எலும்புக் கூடுகளை ஆராய்ந்தோர் இவை திராவிட மொழிபேசியோருக்குரியன என்பதை எடுத்துக் காட்டியுள்ளனர். ஈழத்திலும், பொம்பரிப்பிலும், மாந்தையிலும், கிடைத்த எலும்புக்கூடுகளும் இதனையே உறுதிசெய்துள்ளன. ஆனைக்கோட்டையில் எலும்புக் கூட்டுடன் கிடைத்த முத்திரை இதற்கான மேலதிக சான்றாக அமைகிறது எனலாம். (11) இதனால் வரலாற்றுதய காலத்தில் வட இந்திய குடியேற்றத்திற்குப் பதிலாக தென்னிந்திய குடியேற்றமே நடந்ததென்பதும், இம் மக்கள் அப்போது இங்கே காணப்பட்ட கற்காலமக்களின் கலாசாரத்தின் மேல் தமது கலாசாரத்தைத்திணித்தனர் எனவும்கொள்ளலாம். இங்குகாணப்பட்டகற்காலமக்களே பாளிநூல்களில் யக்கர்கள், நாகர்கள் என அழைக்கப்பட்ட அமானுஷ்யர்களாவர்.

மேற்கூறிய பின்னணியில் நோக்கும் போது ஈழத்தின் நாகரிக கர்த்தாக்கள் திராவிடரே என்பது புலனாகின்றது. இன்றைய சிங்கள - தமிழ்மொழி பேசுவோர் அவர்களின் சந்ததியினரே என்பதும் உறுதியாகின்றது. அத்துடன் இவ்விரு மொழி பேசுவோருக்கிடையே ஏற்பட்ட கலாசார வேறுபாடு ஈழத்தின் வரலாற்றுக்காலத்தில் பௌத்த மதத்தின் வருகையோடேதான் ஏற்பட்டது எனலாம். இங்குள்ள சிங்கள தமிழ் மக்களின் மூதாதையினர் ஒன்றுக்கு மேற்பட்ட திராவிட மொழிகளைப் பேசினர் போற் தெரிகின்றது. இவற்றுட் தமிழோடு சிங்களத்தின் மூதாதை மொழியாகிய 'எலு' வும் காணப்பட்டது எனலாம். இவ்வெலு மொழி பௌத்தம் வந்தபோது அதன் சமய மொழியாகிய பிராகிருதயாகிய பாளியுடன் கலந்தபோதே இன்றைய சிங்களமொழி உருவாகியது எனலாம். இதனை ஈழத்தின் மிகப்பழைய கல்வெட்டுக்களாகிய பிராமிக் கல்வெட்டுக்களும் உறுதி செய்கின்றன (12) இக்கல்வெட்டுக்கள் பௌத்த மதத்திற்கு கொடுக்கப்பட்ட தானத்தை எடுத்தியம்புகின்றன. இயற்கையான குகைகள் காணப்படும் இடங்களில் இவை அமைக்கப்பட்டன. வட-கிழக்குப்பகுதிகளில் இத்தகைய கற்பாறைகள் பிறபகுதிகளிற் காணப்படுவனவற்றோடு ஒப்பிடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது எண்ணிக்கையிற் குறைந்தே காணப் படுகின்றன. எனினும் இங்கு காணப்படும் இக் கல் வெட்டுகள் ஈழம் முழுவதும் அன்று நிலவிய கலாசாரத்தின் தன்மையை எடுத்துக் காட்டுகின்றன எனலாம். இப்பிராமிக் கல் வெட்டுக்களில் காணப்படும் இந்துமதப் பெயர்கள்இந்நாட்டில் பௌத்தம் கால் கொள்ள முன்னர் இந்துமதமே மக்களின் மதமாக விளங்கியதையும் இவ்விந்துக்களில் பெரும்பான்மையினர் பௌத்தர்களாக மாறியதையும் எடுத்துக்காட்டுகின்றன.(13) இப்பெரும் பான்மையினர் தான் சிங்கள மக்களின் மூதாதையினராகிய எலுமொழி பேசியமக்களாகும். இக் கல்வெட்டுக்களில் பௌத்த மதத்தின் மொழியாகிய பாளி மொழிகாணப்படுவதுஇயற்கையே. கர்ரணம் இவை பௌத்த மதத்திற்குக் கொடுக்கப் பட்ட தானத்தைக் குறிப்பதாலே எனலாம்

எனினும் இவற்றுள் பல பழைய திரா விட வடிவங்கள் உள. இவை வரிவடிவத்தி லும், சொற்பிரயோகத்திலும், காணப்படு கின்றன. இவ் வரிவடிவத்தினை ஆராய்ந்த அறிஞர் ஈழத்தின் பௌத்தத்தோடு வடஇந் தியாவிலிருந்துவந்த பிராமி வரிவடிவம்வர முன்னர்தமிழக வரிவடிவமாகிய 'திராவிடி' வரிவடிவம் ஒன்று இங்கு காணப்பட்டதென் றும் நாளடைவில் வடஇந்திய வரிவடிவம் இதனை அமிழ்த்தியதையும் இனங்கண்டு கொண்டுள்ளனர் இதனையே இவற்றுட் காணப்படும்திராவிடச்சொல் வடிவங்களும் உணர்த்துகின்றன இவை கிறீஸ்தாப்த காலத்தோடு மறைகின்றன. தமிழகத்தில் ஆட்சி செய்த வேளிர், ஆய் போன்றகுறுநில மன்னர்கள் போல் ஈழத்திலும் இத்தகைய குறுநில மன்னர்கள் காணப்பட்டதை நாடு முழுவதும்காணப்படும் பிராமிக்கல்வெட்டுக் களில் வரும் வேள் ஆய் போன்றவடிவங்கள் உணர்த்துகின்றன இக்குறுநில மன்னர்கள் ராஜ,கமளி என்ற, விருதுப் பெயர்களையும் படைத்திருந்தனர் இக்குறுநிலமன்னர்ஆட்சி யில் உள்ளூர் நிருவாகத்தில்முக்கிய இடத் தினைப்பெற்றவர்கள் இக்கல்வெட்டுக்களில் 'பருமக' என அழைக்கப்பட்டுள்ளனர். கிட்டத்தட்ட கிறிஸ்தாப்த காலத்திற்கு முந்திய ஆயிரம் கல்வெட்டுக்களில் மூன்றி லொரு பகுதியில் இவ்வடிவம்காணப்படுவது ஈண்டு அவதானிக்கத்தக்கது. இதுதமிழ் வடி வமாகிய பருமகன்/பெருமகன் ஆகியவற்றை ஒத்தே காணப்படுவது அவதானிக்கத்தக்கது சங்க இலக்கியங்களில் இவர்கள் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. பருமகவின் பெண்பால் வடிவமாகப் பருமகளும் இக்கல் வெட்டுக்களில் காணப்படுகிறது. இதே போன்று பல குழுக்களின் பெயர்களும் காணப்படுகின்றன. இவற்றுள் 'பரத' என்ப தும் ஒன்றாகும். கிட்டத்தட்ட120 கல்வெட் டுக்களில் இவ்வடிவம் உண்டு சில இடங்க ளில் இது 'பட' எனவும் இவற்றுள் பிர யோகிக்கப்பட்டுள்ளது. இதன் மூலவடிவம் பரத/பரதவர் ஆகும். சங்க இலக்கியங்கள் பாண்டி நாட்டின் கடற்கரை யோரத்தில் வாழ்ந்த இம்மக்கள் முத்துக்குழிப்பு, குதிரைவியாபாரம்ஆகிய தொழில்களில் ஈடு பட்டிருந்ததை எடுத்தியம்புகின்றன. இத் தகையகுழுக்கள் பல கிறீஸ்தாப்த காலத்தில் மறைந்துவிட்டன. சிங்கள தமிழ் கலாசா ரங்களுக்கிடையே நிலவிய அடிப்படை ஒற் றுமையை இவ்விரு மொழிகளுக்கு மிடையே உள்ள ஒற்றுமைகள் உறுதி செய்கின்றன. மானிட இயலாளரும் சிங்கள-தமிழ் மக்களின் சாதியமைப்பு, உறவுமுறைப்பெயர்கள்,கலா சார ஒற்றுமைகள் ஆகியவற்றையும் இனங் கண்டு கொண்டுள்ளனர்.

இச்சந்தர்ப்பத்தில் ஈழத்தின் ஆதிப் பிராமிக்கல்வெட்டுக்களிற் காணப்படும் ஈழ (ஈழம்) தமேட, தமேழ போன்ற பதங்கள் பற்றிக் குறிப்பிடுவது அவசியமாகின் றது: (14) அநுராதபுரத்திலுள்ள பிராமிக் கல்வெட்டில் ஈழபரத (ஈழத்துப்பரதன் என்ற குறிப்புக் காணப்படுகிறது. 'ஈழ' என்ற பதம் பூநகரிப்பகுதியிற் கிடைத்த மட்பாண்ட ஓடொன்றிலும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. (15) தமிழகத்திலுள்ள திருப் பரங்குன்றத்திலுள்ள பிராமிக்கல்வெட்டு ஒன்று 'ஈழக்குடுமிகன்' (ஈழத்துக்குடுமிகன்) எனக் கூறுகிறது. இச்சான்றுகளோடு சங்க இலக்கியமாகிய பட்டினப்பாலையில் வரும் 'ஈழத்துணவு' என்ற குறிப்பும் ஈழத்துப்புல வரான 'ஈழத்துப்பூதந்தேவனார்' பற்றி அக நானூறு, நற்றிணை, புறநானூறு ஆகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களில் வரும் குறிப்புகளும் ஈழம் நமது நாட்டின் பழம்பெரும் பெயராக விளங்கியதை எடுத்துக்காட்டுகின்றன. இவ்வீழத்திற்கும் சிலப்பதிகாரத்தின் உரையாசிரியரால் கடற்கோளால் அழிந்ததாகக் கூறப்படும் ஏழ்தெங்கநாடு, ஏழ்மதுரைநாடு, ஏழ்முன்பாலைநாடு, ஏழ்பின்பாலைநாடு, ஏழ்குன்றநாடு, ஏழ்குணகாரைநாடு, ஏழ்குறும்பனைநாடு ஆகியவற்றுக்கும் தொடர்பு இருக்கின்றது போற் தெரிகின்றது. (16) ஈழ என்பது ஏழாகவோ அன்றி ஏழ் என்பது ஈழாகவோ மாறியிருக்கலாம். ஈழம் கடற்கோள்களில் இருந்து தப்பிய பிராந்தியமாகவும் இருக்கலாம். இவ்வீழம்தான் பின்னர் 'ஸ்ரீ' என்ற பகுதியுடன் சேர்ந்து சீகள / சிங்கள என்ற நமது நாட்டின் பெயராக மாறியதுபோற் தெரிகிறது. இந்நாட்டுப் பெயருக்கு கொடுக்கப்பட்ட விளக்கம்தான் விஜயன் கதைபோற் தெரிகிறது. இக்கதையில் விஜயனது மூதாதையினராகிய சீகபாகு சிங்கத்தினைக் கொன்றதால் அவனின் சந்ததியினர் சீகள என அழைக்கப்பட்டதாக விளக்கம் அளிக்கப் ப ட் டு ள் ள து. சீ+கள என்பதே சீகளவாகும். சீ என்பது சிங்கமாகும்; களஎன்பது கொல்லுதல்/சந்ததியினர் எனப் பொருள் தந்து நிற்கும். இதனால் ஈழத்திலிருந்து மருவிய சீகள ஒரு நாட்டின் பெயராக முதலில் இருந்து பின்னர் ஒரு குறிப்பிட்ட மக்களின் பெயராக மாறியதுபோற் தோன்றுகிறது. 'ஈழத்தவர்' என ஆதியில் ஈழத்துமக்கள் அனைவரும் அழைக்கப்பட்டதைச் சங்க இலக்கியங்களில் வரும் புலவரில் ஒருவர் 'ஈழத்துப் பூதந்தேவனார்' எனக் குறிக்கப்படுவது எடுத்துக் காட்டுகின்றது. இக்காலத்தில் இனத்துவ அடிப்படையில் சிங்கள-தமிழ் மொழி பேசுவோர் பிரிந்து நிற்கவில்லை. மொழி அடிப்படையில் இருந்த வேறுபாடு இனத்துவத்துடன் ஒன்றுசேர்ந்த வேறுபாடாக கி. பி. 6ஆம் நூற்றாண்டுகளுக்குப்பின்னரே மேலோங்கியது. இதனை மகாவம்சம் போன்ற நூல்கள் எடுத்துக்காட்டுகின்றன. ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுக்களில் 'தமேட' என்ற பதம் நான்கிடங்களில் உள்ளது. இவை அநுராதபுரம், வவுனியா, திருக்கோணமலை, அம்பாறை மாவட்டங்களிலுள்ள குடிவிலாகும். இவற்றுள் அநுராதபுரத்தினைத் தவிர மற்றைய மூன்றிடங்களும் வட - கிழக்கு மாகாணங்களிலேதான் உள. இப்பதம் தமிழகத்தை, தமிழகத்தவனைக் குறித்தது. தமிழ் நாட்டவர் பெயராகவே ஆதியில் இக் கல்வெட்டுக்களில் மட்டுமன்றிப் பாளிநூல்களிலும் வழங்கப்பட்டுள்ளது. பின்னர்தான் இது ஓர் இனத்துவத் தொனியுடன் ஈழத்து வரலாற்று நூல்களில் இடம்பெற்றது எனலாம்.

### (III)

ஈழத்தின் வரலாற்றுக் காலம் தேவநம்பியதீஸனின் ஆட்சியோடு ஆரம்பமாகின்றது. அநுராதபுரத்தினைத் தலைநகராகக் கொண்டு இம்மன்னனால் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஒற்றை ஆட்சி அமைப்பு வட - கிழக்கு மாகாணங்கள் உட்பட ஈழம் முழுவதும் அநுராதபுர அரசின் இறுதிக் காலம்வரை (கி.பி.10ஆம் நூற்றாண்டுவரை) நீடித்திருந்தது எனப் பாளி நூல்கள் எடுத்தியம்புகின்றன. ஆனால் பாளி நூல்களை உற்று நோக்கும்போது வரலாற்றுக் காலத்தின் ஆரம்பத்தில் பல சிற்றரசுகள் காணப்பட்டது தெரிகிறது. இத்தகைய சிற்றரசுகள் பல நாடளாவிய விதத்தில் காணப்பட்டதைப் பிராமிக் கல்வெட்டுக்களும் எடுத்தியம்புகின்றன. (17) இலக்கிய ஆதாரங்களில் வடபகுதியில் நிலைபெற்றிருந்த நாகதீப / நாகநாடு அரசு பற்றிய குறிப்புகள் பற்றி ஏற்கனவே கண்டோம். வடபகுதியில் இத்தகைய அரசு காணப்பட்டது போன்று றோகணைப் பகுதியிலும் இரு அரசுகள் தேவநம்பியதீஸன் காலத்திற் குறிக்கப்படுகின்றன. இவை கதிர்காமம், சண்டனாகம ஆகிய இடங்களிற் காணப்பட்டசிற்றரசுகளாகும். பாளிநூல்கள் இவர்களைக் கதிர்காமச் சண்டனாகமச் சத்திரியர்கள் என அழைக்கின்றன. (18) தேவநம்பியதீஸன் காலத்திற்குப் பின்னர் இவைக்கு என்ன நடந்தன என்றுகூடக் குறிக்காவிட்டாலும் இவ்வரசுகள் மட்டக்களப்புத் தமிழகத்தில் காணப்பட்டதற்கான சான்றுகள் பிராமிக் கல்வெட்டுக்களில் உள. கதிர்காமம் இன்று அம்பாந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டை மாவட்டத்தில் அமைந்தாலும் கூட அன்று மட்டக்களப்பு தமிழகத்தின் ஓர் பகுதியாக விளங்கியதை கதிர்காமத்திலும் மட்டக்களப்புத் தமிழகத்திலும் மேலோங்கி நிற்கும் முருக வழிபாட்டம்சங்களுக்கிடையே காணப்படும் ஒற்றுமை எடுத்துக்காட்டுகின்றது. இப்பகுதிக் கல்வெட்டுக்கள் இவ்வம்சத்தில் பத்துச்சகோதரர்கள் இருந்தனர் என்றும் இவர்களுக்கிடையே கூட்டாட்சி நிலவியதையும் எடுத்துக்காட்டுகின்றன. இவர்களில் மூத்தோர் வம்சம் கதிர்காமத்தினை மையமாகக் கொண்டு காணப்பட, இளையோன் வம்சம் மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்பட்டு படிப்படியாக அம்பாறை மாவட்டத்திலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் செல்வாக்கினைப் பரப்பி மாகவில் (திஸமகாராமவில்) தமது ஆட்சியை நிலை நிறுத்தியதை எடுத்துக் காட்டுகின்றன. (19) இவ்வம்சத்தவர்கள் வழிவந்தவனே துட்டகைமுனு ஆகும். இவ்வம்சம் 'ஆய்' வம்சமே என்பதனை இக்கல்வெட்டுக்களில் காணப்படும் 'ஆய்' என்ற முழுப்பெயர் உணர்த்துகின்றது. அத்துடன் இக்கல்வெட்டுக்களில் ஒற்றை மீன் சின்னம் காணப்படுவதோடு 'மீனவன்' எனப் பொருள் தரும் 'மஜ்ஜ' என்ற பதமும் காணப்படுகிறது. இவ்வொற்றை மீன் சின்னம் பழைய பாண்டியரது நாணயங்களிற் காணப்படுவது ஈண்டு அவதானிக்கத் தக்கது, இச் சிற்றரசுகளின் மன்னர் சூடி இருந்த பெயர்களில் 'உதி' யும் ஒன்றாகும். உதய, என்ற பெயர் தேவநம்பியதீஸனின் தம்பியின் பெயராகவும் காணப்படுகிறது. வவுனியா மாவட்டத்திலுள்ள பிராமிக் கல்வெட்டுக்கள் 'உதி' என்ற சிற்றரசன் பற்றிக் கூறுகின்றன. திரிகோணமலை மாவட்டத்திலுள்ள நாச்சியார் மலையிலுள்ள கல்வெட்டுகள் 'உதி' யின்கீழ் இப்பகுதியிற் காணப்பட்ட அரசு பற்றிக் கூறுகின்றன. இதற்கும் சங்க இலக்கியங்களில் காணப்படும் உதி, உதயன் என்ற சேர மன்னர்கள் சூடி இருந்த பெயருக்குமிடையே உள்ள ஒற்றுமை நோக்கற்பாலது. திரிகோணமலை மாவட்டத்தில் நிலவிய செரு, சோம என்ற பிற இரு சிற்றரசுகள் பற்றியும் தாதுவம்சத்தில் குறிப்புளது. இதனால் ஒற்றை ஆட்சி அமைப்பு அநுராதபுரத்தை அண்டியுள்ள பகுதிகளில் மட்டும் காணப்பட பிற இடங்களில் சிற்ரசுகள் பெருமளவுக்கு சுதந்திரமாக இயங்கின எனக் காணமுடிகிறது. இத்தகைய அமைப்பு வட - கிழக்கு மாகாணங்களிலும் காணப்பட்டன எனலாம்.

எனினும் ஈழத்து அரசியல் வரலாற்றில் இதனை புவியியல் ரீதியில் மிக அண்டியுள்ள தமிழகத்திலிருந்து ஏற்பட்ட படையெடுப்புகள் ஓர் முக்கிய நிகழ்ச்சியாக அமைந்துள்ளது.

தேவநம்பியதீஸன் தம்பியாகிய சூரதிஸன் காலத்தில் குதிரை வணிகர்கள் புத்திரர்களாகிய தமிழர்களாகிய சேனன், குத்திகன் ஆகிய இருவர் அநுராதபுரத்தில் இவனிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றி 22வருடங்கள் ஈழத்தினை ஆண்டதாக மகாவம்சம் கூறுகிறது. (20) இவர்களின் பின்னர் தேவநம்பியதீஸனின் இன்னொரு தம்பியாகிய அசேலன் காலத்தில் எல்லாளன் என்பவன் சோழநாட்டிலிருந்து ஈழத்தில் அரசாட்சியைக் கைப்பற்றி 44 வருடங்கள் நீதி தவறாது ஆண்டதாக மகாவம்சம் கூறுகிறது. (21) இதே காலத்திற்குள் ஆய் வம்ச மன்னனாகிய துட்டகைமுனுவுக்கும் எல்லாளனுக்கும் இடையே போர் ஏற்பட்டது. இப்போரை ஓர் இனப்போராக மகாவம்சம் சித்திரித்தாலும் இது ஒரு இனப்போரல்ல. உள்நாட்டில் எழுச்சிபெற்ற அரசன் ஒருவன் வெளிநாட்டிலிருந்து வந்து ஈழத்தைக் கைப்பற்றி அரசாண்டபோது அவனது ஆட்சியிலிருந்து ஈழத்தினை மீட்க மேற்கொண்ட போராகவே இது விளங்குகிறது. (22) எல்லாளன் துட்டகைமுனுவுடன் நடந்த போரில் மரணமடைய அவனுக்கு உதவியாக பலுகா என்ற அவனது மருமகன் 6000 படைவீரருடன் வந்தபொழுது மரணமடைந்தான். துட்டகைமுனுவுக்குப் பின்னர் வந்த மன்னர்களுள் ஒருவனாகிய வலகம்பாக அல்லது வட்டகாமினி என அழைக்கப்படும் மன்னன் காலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கி. மு. 104) தமிழகத்தின் பாண்டிநாட்டிலிருந்து படை எடுப்பு நிகழ்ந்தது. இப்படை எடுப்பை நிகழ்த்தியவர்கள் ஏழு தமிழ் பாண்டியர்கள் என மகாவம்சம் குறிப்பிடுகிறது. இவர்களுள் இருவர் தமிழகத்திற்கு மீள மிகுதி ஐவர்களாக புலஹதன், பாஹியா, பணயமாற, பழையமாற, தாதிகன் ஆகியோர் 14 வருடமும் 7மாதமும் மாறி மாறி ஆட்சிசெய்ததாக மகாவம்சம் குறிப்பிடுகிறது. (23) இதன் பின்னர் ஆண்ட தமிழர்களாக வடுகன், நீலியன் ஆகியோர் குறிப்பிடப்படுகின்றனர். ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது கிறிஸ்தாப்தத்திற்கு முந்திய வரலாற்றுக் காலத்தினை உள்ளடக்கிய 250 வருட காலத்தில் 1/3 காலப்பகுதியில் தமிழர் ஆட்சி ஈழம் முழுதும் வியாபித்திருந்தமையைப் பாளி நூல்களே ஒத்துக்கொள்கின்றன.

ஈழத்தின் வடபகுதியில் அனுராதபுர மன்னர் மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பௌத்த நிறுவனங்களுக்கு அவர்கள் கொடுத்த தானங்களாக அமைந்ததையே பாளி நூல்கள் குறிப்பது அவதானிக்கத்தக்கது. இப்பகுதி இவர்கள் ஆட்சிக்குள் அமைந்திருந்தால் ஏன் இவர்களது அரசியல் நடவடிக்கைகளை இந்நூல்கள் கூறவில்லை என்ற கேள்வி அடுத்து எழுகிறது. இத்தகைய அரசியல் நடவடிக்கையை வல்லிபுரப் பொன்னேடு எடுத்துக் காட்டுகின்றது எனக் கூறப்படுகிறது. இதன் காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டாகும். இப்பொன்னேடு 1936 ஆம் ஆண்டில் பௌத்த விகாரையின் அடித்தளத்தில் கண்டெடுக்கப்பட்டது. (24) இது வக என்ற மன்னன் காலத்தில் வடபகுதியில் அவனது தேசாதிபதியாக இசிகிரயன் என்பவன் விளங்கிய போது புயங்குதிஸ என்பவனால் கட்டப்பட்ட விகாரை பற்றிக் கூறுகிறது. இதில் குறிப்பிடப்படும் மன்னன் அனுராதபுரத்தினை ஆண்ட 'வசப' மன்னன் என ஆராய்ச்சியாளர் கருத்துத் தெரிவித்தாலும் கூட இவ்வசப மன்னன் வெளியிட்ட பிற சாசனங்களை உற்று நோக்கும் போது இம்மன்னன் அவற்றில் 'வசப' என்ற முழுப்பெயருடன் காணப்பட ஏன் வல்லிபுரப் பொன்னேட்டில் மட்டும் 'வக' என்ற பெயருடன் குறிக்கப்படுகிறான் என்பது விந்தையாகவே இருக்கிறது. இதனால் வல்லிபுரப் பொற்சாசனம் குறிக்கும் 'வக' என்ற மன்னன் அனுராதபுரத்தினை ஆண்ட வசபனா என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. இதனால் இது குறிக்கும் வக என்ற மன்னன் வடபகுதியில் காணப்பட்ட ஓர் அரசனாகக் கூட இருக்கலாம். இப்பொற்சாசனத்தின் நோக்கம் பௌத்த விகாரை அமைத்ததைக் குறிப்பதாகும். இதனால் இச்சாசனம் பௌத்த மதத்திற்குரிய பிராகிருத மொழியில் அமைந்திருப்பது வியப்பன்று. தென்னிந்தியாவிலும் பிராகிருத மொழியே பௌத்த மதத்திற்குப் பயன்படுத்தப்பட்டது. இம்மொழியிலமைந்த சாசனங்களைக் கொண்டு ஒருவரும் அங்கு திராவிடர் இருக்கவில்லை என்று கூறவில்லை. ஈழத்திலும் திராவிடரே (எலு மொழி பேசியோரில் மூதாதையினர்) இம்மொழியின் செல்வாக்கால் தம்மொழியின் தனித்துவத்தினை இழந்து பிற்காலச் சிங்கள மொழி பேசுவோராக மாறியதைப் பிராமிச்சாசனங்கள் எடுத்துக் காட்டுவது போல் வல்லிபுரப் பொற்சாசனமும் திராவிட மொழிகளிலொன்றாகிய தமிழ் பேசப்பட்ட பகுதியில் இவ்விகாரை கட்டப்பட்டதையும் தமிழரின் ஆதரவு இதற்குக் கிடைத்ததையும் எடுத்துக் காட்டியுள்ளது எனலாம். இப்பொன்னேட்டிற் காணப்படும் பல பதங்கள் இப்பகுதி தமிழ்மொழி வழக்கிலிருந்த பகுதி என எடுத்துக்காட்டியுள்ளது. வடகரை என்பது இவற்றில் ஒன்றாகும். அத்தான என்பது இடம் எனப் பொருள்பட்டாலும் இது ஒரு சமயம் வடகரையிலிருந்த ஓர் குறிப்பிட்ட இடத்தினையும் குறித்திருக்கலாம். இதன் மூல வடிவம் குடத்தனை போன்று அத்தானையாகவும் இருந்திருக்கலாம். 'நாகதீப' என்பது இன்னோர் வடிவமாகும். இதில் தமிழிற்கே உரிய வல்லின 'க' பயன்படுத்தப்பட்டுள்ளது. இசிகிரய என்ற வடிவம் பற்றியும் ஆராயப்பாலது. 'ராய' என்பது 'ராஜ' என்பதன் மருவுதலே எனக் கொள்ளலாம். 'இசிகி' என்பதைச் சிலர் 'ஈழ' எனப் பொருள் தருகிறது எனவும் கொள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர். எவ்வாறாயினும் சங்கஇலக்கியங்களிற் காணப்படும் முரஞ்சியூர் முடி நாகராயர் போன்ற பெயர்களும் பிற்காலத்தில் 'மழவராயர்' 'சேனாதிராயர்' போன்ற பெயர்களும் தமிழ் மக்கள் மத்தியில் 'ராயர்' என்ற வடிவம் காணப்பட்டதை எடுத்துக் காட்டுகின்றது எனலாம். இதனால் வல்லிபுரப் பொன்னேடு வடபகுதியில் சிங்கள மக்கள் வாழ்ந்ததற்கான சான்றாகவும், அனுராதபுர அரசின் ஓர் பகுதியாக விளங்கியதற்கான சான்றாகவும் விளங்குகிறது எனக் கொள்ள முடியாது. ஒரு மதத்தின் மொழியில் அமைக்கப்பட்ட சாசனத்தைக் கொண்டு அப்பகுதி மக்கள் எல்லோரும் இம்மொழியையே பேசினர் எனக் கொள்வது தவறு. இப்பொன்னேட்டிற் காணப்படும் தமிழ் வடிவங்கள் இக் கூற்றினை மறுப்பதாக அமைகின்றன எனலாம்.

கிறிஸ்தாப்தத்திற்குப் பின்னரும் தமிழகத்திற்கும் ஈழத்திற்குமிடையே காணப்பட்ட தொடர்புகளைத் தமிழ், சிங்கள நூல்கள் கூறுகின்றன. கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் கரிகாற்சோழன் ஈழத்தின் மீது படை எடுத்து 12.000 மக்களைச் சிறை பிடித்துச்செல்ல முதலாவது கஜபாகு தமிழ் நாடு சென்று இரட்டித்த மேற்கூறிய தொகையுடன் ஈழம் மீண்டதாக ராஜவலிய என்ற சிங்கள நூல் கூறுகிறது. இம் மன்னனே கண்ணகி வழிபாட்டை ஈழத்திற் புகுத்தியதாக சிலப்பதிகாரம், ராஜவலிய போன்ற நூல்கள் கூறுகின்றன. (25) வடபகுதியில் கந்தரோடையிலிருந்து முல்லைத்தீவு, திரிகோணமலை, மட்டக்களப்பு, மாவட்டங்களை இது அடைந்ததாக நாட்டார் பாடல்கள் கூறுகின்றன. வட-கிழக்கு மாகாணங்களை ஒருமைப்படுத்தும் வழிபாடாக இது இக்காலந்தொட்டு இன்றும் விளங்குவது அவதானிக்கத்தக்கது. பின்னர் சூளவம்சத்தில் கி. பி. 5 ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற தமிழர் படை எடுப்புகள் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகிறன. இவர்களில் ஏழுபேர் குறிக்கப்படுகின்றனர். பித்தசேன, பண்டு, பருண்ட, குட்டபரிண்ட, திரிதர, டாதிய, பிதிய ஆகியோரது ஆட்சி 22 வருடங்கள் நீடித்தது.(26) யாழ்ப்பாண வைபவமாலையிலும் (27) பாண்டு மன்னர் ஆட்சி பற்றிய குறிப்பு இக்காலத்துக்குரியதாக அமைகின்றது. இதில் பாண்டு மன்னன் கிரிமலைப் பகுதியிலிருந்து முக்குவர்களை மட்டக்களப்பு நோக்கித் துரத்தியதாகக் குறிக்கப்பட்டுள்ளது. இது வடபகுதியில் ஏற்பட்ட பாண்டியர் ஆட்சியையா அல்லது அனுராதபுரத்திலாண்ட பாண்டியர் ஆட்சியையா குறிக்கின்றது. என்பது ஆராயற்பாலது தமிழகத்திலிருந்து ஏற்பட்ட படை எடுப்புக்கள் மாத்திரமன்றி ஈழத்திலிருந்தும் தமிழகம் சென்று தமிழ் இராணுவத்துடன் திரும்பிவந்து அனுராதபுரத்தில் சிங்கள மன்னர் அரசாட்சியை நிலைநிறுத்தியதற்கும் சான்றுகள் உள. இவ்வாறு சென்ற முதல் மன்னர் ஈழநாக (கி. பி. 33 - 43) ஆகும். (28) இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின்னர் தமிழகத்திற்குப் படை உதவி கோரிச் சென்றவனாக அபயநாக (கி. பி. 231-240) குறிக்கப்படுகிறான். (29) மேலும் 250 ஆண்டுகளுக்குப் பின்னர் முதலாவது மொகலான என்பவன் (கி. பி. 491 - 508) தமிழகம் சென்று படை உதவியுடன் வந்து தனது அரசுரிமையைப் பெற்றான். (30)

கி. பி. ஆறாம் நூற்றாண்டுக்கு முன்னர் உள்ள காலப்பகுதி முற்பட்ட அனுராதபுர காலமாகும். இக்காலத்தில் தமிழகத்தில் சங்ககாலம், சங்கமருவிய காலங்கள் காணப்படுகின்றன. சங்கமருவியகாலத்தில் (கி. பி. 3ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் கி. பி. 6ஆம் நூற்றாண்டுவரை) இங்கே களப்பிரர் ஆட்சி நடந்தது. அரசியல் அமைதியின்மை காணப்பட்டது. இதனால் கிறிஸ்தாப்தத்திற்கு முன்னர் நடைபெற்ற தமிழகப் படையெடுப்புக்கள் போல் இக்காலத்தில் தமிழகப் படை எடுப்புக்கள் ஈழத்தின் மீது ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் மிக மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. அனுராதபுர மன்னர் உத்தரதேசத்தில் (வடபகுதியில்) சமய நிறுவனங்களுக்கு மேற்கொண்ட தானங்கள், சமய நிறுவனங்களை அமைத்தல் ஆகியனவே பாளி நூல்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையிடையே குறிப்பிடப்படுகின்றன. அரசியல் ரீதியான தொடர்புகள் மிக அருகியே காணப்படுகின்றன. ஆனால் கிழக்கு மாகாணத்தில் பொதுவாகவே இந்நிலை காணப்பட்டாலும் ஆங்காங்கே இம் மன்னர்கள் சிற்சில காலங்களில் குளங்களை அமைத்தல் போன்ற நிகழ்ச்சிகளும் கூறப்படுகின்றன. இத்தகைய நிகழ்ச்சிகள் புதுமையானவை அன்று. வலிமையுள்ளமன்னன் பிற பகுதிகளில் தனது செல்வாக்கை பரப்பும் நடவடிக்கை போன்றே இவை அமைந்தன. ஆனால் இவர்கள் மேற்கொண்ட நிருவாக ஒழுங்குகள் பற்றிய சான்றுகள் காணப்படவில்லை.

(IV)

கி. பி. 6ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட அரசியல் கலாசார மறுமலர்ச்சியின் தர்க்கம் ஈழத்திலும் ஏற்பட்டது. முதலில் பல்லவவம்சமும்பின்னர் பாண்டிய சோழவம்சங்களும் தமிழ் நாட்டின் அரசியலதிகாரங்களைப் பெற அவற்றின் அரசியல் ஆதிக்கமும் ஈழத்திலும் ஏற்பட்டது. பல்லவர் எழுச்சியோடு தமிழகத்தில் திராவிட கலாசாரத்தின் மேன்மை காணப்பட்டதுபோன்று ஈழத்திலும் சிங்கள-தமிழ் மொழி பேசியோர் ஈழவர் என்ற நிலையிலிருந்து மாறி இனத்துவ ரீதியாக, மத ரீதியாக தனியான பாதையில் செல்லத் தொடங்கினர். இக்காலத்திற்குள் சிங்கள என்ற நாட்டுப் பெயர் சிங்கள மக்கட் கூட்டத்தினருக்கு வழங்கப்பட்டதோடு கி. பி. 7ஆம் நூற்றாண்டிற்குள் சிங்கள வரிவடிவமும் எழுச்சி பெற்றது. இவ் வரலாற்று நிகழ்ச்சியைக் கே. எம். டி சில்வா பின்வருமாறு எடுத்துக்காட்டியுள்ளார். (31)

கிறிஸ்துவுக்குப் பின்னுள்ள 5ஆம், 6ஆம் நூற்றாண்டுகளில் தென்னிந்தியாவிலே மூன்று இந்து அரசுகள் (பாண்டியர், பல்லவர், சோழர்)எழுச்சிபெற்றன. இதன் விளைவாக இவைகளுக்கும் சிங்கள ராஜ்யத்திற்குமிடையே இருந்த உறவுகளை இனத்துவ முரண்பாடுகள் ஊறுசெய்தன. இத்திராவிட அரசுகள் சமய நோக்கைப் பொறுத்தமட்டில் போர்க்கோலமிக்க இந்துத் தன்மையைக் கொண்டு விளங்கியதோடு தென்னிந்தியாவிலும் பௌத்த செல்வாக்கினை அடியோடு களைந்தெறிவதையே நோக்கமாகக் கொண்டும் செயற்பட்டன. காலப்போக்கில் போர்க் கோலம் மிக்க இந்து மதத்தினால் தென்னிந்தியாவில் பௌத்த மதம் முற்றாக அழிக்கப்பட்டது. இதன் விளைவாகத் தென்னிந்தியா சிங்கள ராஜ்யங்களுக்கிடையே இருந்த மிக முக்கிய பண்பாட்டு உறவு துண்டிக்கப்பட்டது. தவிர, ஈழம் மீது தென்னிந்திய அரசுகள் கொண்டிருந்த பொறுப்பு-வழக்கமாக இவ் வெறுப்புணர்ச்சிக்குக் கொள்ளை அடிக்கும் வேட்கை ஆர்வமூட்டியது. - இப்போது முதற்தடவையாகச் சமய ஆர்வத்தாலும் இனத்துவத்தின் பெருமை உணர்வினாலும் முனைப்புப்பெற்றது. இதிலிருந்து எழுந்த முக்கிய விளைவு என்னவென்றால் ஈழத்திலிருந்த தமிழர் தமது இனத்துவம் பற்றிக் கூடுதலாக பிரக்ஞை செலுத்தத் தொடங்கினர். இந்த இனத்துவ உணர்வினைப் பண்பாட்டு ரீதியாகவும் சமய ரீதியாகவும் அவர்கள் நிலை நாட்ட முனைந்தனர் - இதுதான் திராவிட / தமிழ் / இந்து என்ற வடிவமாகும்.

மேற்கூறிய பின்னணியிற்றான் ஈழத்திலும் வாரிசுரிமைப்போர் ஓர் முக்கிய அம்சமாக 7ஆம், 8ஆம் நூற்றாண்டுகளில் நடைபெற்றது இதனால் தமிழகத்தின் செல்வாக்கு மிக மேலோங்கிய காலகட்டம் இதுவாகிறது. வட - கிழக்கு மாகாணங்களிலும் தமிழர் தனித்துவத்தினை நிலைநாட்ட மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பாளி நூல்கள் இப்பகுதிகளில் ஏற்பட்ட கிளர்ச்சிகளைச் சிங்கள மன்னர்கள் அடக்கிய சம்பவங்களாகக் கூறுகின்றனபோற் தெரிகிறது. சூளவம்சம் ஸிலாமேகவண்ணன் (கி. பி. 619 - 628) ஆட்சிக்காலத்தை உத்தர தேசத்தினை ஸிரிநாக என்பவன் கைப்பற்ற முயற்சித்தான் எனவும் இக்கலகக்காரரை ஸிலாமேகவண்ணன் உடனே அடக்கி உத்தரதேசத்தினைத் தனது ஆட்சிக்குக் கீழ்க் கொண்டுவந்தான் எனவும் கூறுகிறது. (32) இதே நூல் மீண்டும் கி. பி. 8ஆம் நூற்றாண்டில் இப்பகுதியில் நடைபெற்ற கிளர்ச்சிபற்றிக் கூறுகின்றது. இக் கிளர்ச்சியை இரண்டாவது மகிந்தன் (கி.பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

777 - 797) வெற்றிகரமாக அடக்கியதாக இந்நூல் கூறுகிறது. (33) இப்பின்னணிக்குள் யாழ்ப்பாண வைபவமாலையில் வரும் உக்கிர சிங்கன் - மாருதப்புரவல்லி கதைகள் ஆராயப்பாலன. கி. பி. 8ஆம் நூற்றாண்டுக்குரிய இக்கதைகளைத் தென்னக, ஈழ அரசியற் பின்னணியில் நோக்கும்போது கதிரமலையில் (கந்தரோடையில்) இருந்து அரசு செய்த ஓர் அரசைப்பற்றியே இவை குறிப்பிடுகின்றன எனலாம். (34) இத்தகைய கதையை ஒத்த கதையே மட்டக்களப்புத் தமிழகத்திற்குரிய ஆடகசவுந்தரி கதையுமாகும். (35) இக்கதைகள் இப்பகுதி அரசுகள் பற்றிய மரபுகளை வெளிக்காட்டுவனவாக அமைந்துள்ளன எனக் கூறலாம்.
கி. பி. 8ஆம் நூற்றாண்டில் பாண்டியர் படை எடுப்பும் ஈழத்தில் ஏற்பட்டது. இப்படை எடுப்பைமேற்கொண்டவன் சிறிமாற சிறி வல்லபன் ஆகும். இப்படை எடுப்பு ஈழத்தின் வடபகுதியூடாவே நடைபெற்றது. அநுராதபுர அரண்மனையும் அழிக்கப்பட்டது. இப்படை எடுப்பின் இறுதியில் முதலாவது சேனன் (கி. பி. 833-53) பாண்டியரோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தினால் அரசுரிமையை மீண்டும் பெற்றுக்கொண்டான். இப் பாண்டியபடை எடுப்புக்குப் பதிலடி கொடுக்க இரண்டாவது சேனன் (கி. பி. 853 - 867) பாண்டிநாட்டின் மீது படைஎடுத்து வெற்றியீட்டியதாகக் கூறப்படுகிறது (36) இக்காலத்தில் பாண்டியரோடு (சோழருக்கெதிராகச்) சிங்கள அரசு சிநேகித உறவு பூண்டது. தமிழகத்தில் பாண்டியருக்கு உதவிசெய்ய ஈழத்துச் சிங்களப்படை சென்றது. பாண்டியர் சோழருடன் தோல்விகண்டதால் தமது ஆதிக்கத்திற்கு பாண்டிய - ஈழ நட்புறவிலிருந்து எதிர்ப்பு வருவதைத் தடுக்கச் சோழர் ஈழத்தினைத் தமது ஆதிக்கத்தின் கீழ்க்கொண்டுவர வேண்டியேற்பட்டது. முதலாம் பராந்தகன் காலத்தில் சோழப் படை அநுராதபுரத்தினை அழித்தது. பின்னர் இரண்டாம் பராந்தகச்சோழன் காலத்தில் இப்படை வடபகுதியாகிய நாகதீபத்திலுள்ள ஊர்காவற்றுறை வழியாக ஈழத்தினை அடைந்தது. இப்படை எடுப்பை நடாத்திய 'மன்னனாக' 'வல்லபர்' என்ற மன்னன் சூளவம்சத்தில் குறிக்கப்படுகிறான். சோழரைக் குறிக்கும் 'வளவன்' என்ற பதம்தான் வல்லபன் என வழங்கப்பட்டது போற் தெரிகிறது. பின்னர் முதலாம் ராஜராஜன் காலத்தில் ஈழத்தின் வடபகுதி சோழர் ஆணைக்குக் கொண்டுவரப்பட, அநுராதபுர தலைநகரமும் அழிக்கப்பட்டது. இது நிகழ்ந்தது கி. பி. 997ஆம் ஆண்டிலாகும். பின்னர் இவனது மகனாகிய முதலாவது ராஜேந்திரன் காலத்தில் ஈழம் முழுவதும் சோழரது ஆணையை ஏற்றதோடு முதன் முதலாக சோழ அரசின் ஒன்பதாவது மாகாணமாகி இது மும்முடிச் சோழ மண்டலமெனவும் அழைக்கப்பட்டது. (37)

(V)

பொலநறுவைக்காலம் சோழராட்சியுடன் ஆரம்பமாகின்றது. இதன் காலம் கி.பி. 1000 -1250 ஆகும். பொலநறுவைக்கு ராஜராஜனின் விருதுகளில் ஒன்றாகிய 'ஜனநாத' என்ற பெயரைத் தழுவி ஜனநாத மங்கலம் எனப் பெயரிடப்பட்டது. இன்றும் பொலநறுவையிற் காணப்படும் சிவாலயங்களும் தமிழ்க் கல்வெட்டுக்களும் அகழ்ந்தெடுக்கப்பட்ட இந்து விக்கிரகங்களும் இவ்வரசில் தமிழ்க் கலாசாரம் பெற்றிருந்த முக்கியத்தினை விளக்குகின்றன எனலாம். சோழர் காலத்தில் சோழப் பேரரசனின் இராசப்பிரதிநிதியே சோழ அரசின் சார்பாக ஈழத்தினை நிருவகித்தான். இவன் 'சோழ இலங்கேஸ்வரன்' எனஅழைக்கப்பட்டதைகந்தளாய், மானாங்கேணி ஆகிய இடங்களிற் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் எடுத்தியம்புகின்றன. (38) சோழர்களின் தலைமையகம் திரிகோணமலையில் காணப்பட்டது போற் தெரிகின்றது. காரணம் இங்குதான் பிற மாவட்டங்களைவிட அதிகமான சோழக்கல்வெட்டுக்கள்காணப்படுகின்றன. முதலாவது ராஜராஜன் தான் கட்டிய தஞ்சைக்கோயிலுக்கு மானியமாக அளித்த ஐந்து கிராமங்கள் கூட இம்மாவட்டத்திற்குள் காணப்பட்டன. திரிகோணமலையோடு மாந்தை, ஊர்காவற்றுறை ஆகியன சோழரின்முக்கிய கடற்படைத் தளங்களாக விளங்கின. வட மேற்கே புத்தளம் மாவட்டத்தில் மட்டுமன்றி தென் கிழக்கே நேர்கணைப்பகுதியிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாசனம் என்ற இடம்வரை இவர்கள் படைகள் நிலை கொண்டிருந்தன. முதன் முதலாகத் தமிழ் நாட்டில் சோழ அரசில் காணப்பட்ட நிருவாகப்பிரிவுகளும்ஈழத்திற் புகுத்தப்பட்டதற்கான சான்றுகள் உள. (39) நிருவாகப் பிரிவுகளில் நாடு, வளநாடு ஆகியன குறிப்பிடத்தக்கன. மாதோட்டப் பகுதி பேரரசனாகிய ராஜராஜனின் பெயரால் அருள் மொழித் தேவவளநாடு என அழைக்கப்பட்டது. திரிகோணமலை மாவட்டத்தில் ராஜராஜச் சோழவளநாடு, விக்கிரம சோழவளநாடு, வீரபரகேசரி வளநாடு, ராஜேந்திர சோழவளநாடு, போன்ற பிரிவுகள் இயங்கியமை கல்வெட்டுக்களிற் குறிக்கப்பட்டுள்ளன. நாடு, சபா, ஊர் நகரம் போன்ற உள்ளூராட்சி அமைப்புக்களும் ஈழத்தில் அக்காலத்திற் காணப்பட்டன. திரிகோணமலை மாவட்டத்திலுள்ள கந்தளாயில் அமைக்கப்பட்ட பிராமணக் குடியேற்றம் முதலாம் ராஜராஜனின் பெயரால் 'ராஜராஜச் சதுர்வேதி மங்கலம் எனப் பெயர் பெற்றது. இதே மாவட்டத்திலுள்ள நிலாவெளிப் பிள்ளையார் கோயிற் சாசனம், மானாங்கேணிக் கோயிற் சாசனம் ஆகியன திரிகோணமலை பற்றியும் இங்கே காணப்பட்ட சிவாலயம் பற்றியும் அரிய குறிப்புக்களைத் தருகின்றன. (40) நிலாவெளிக் கல்வெட்டில் 'கோணபர்வதம் திருக்கோணமலை மச்சகேஸ்வரமுடைய மகாதேவர்க்கு' என்ற குறிப்புக் காணப்படுகிறது. கோணேஸ்வர ஆலயம் மச்சகேஸ்வரம் என அழைக்கப்பட்டதை தக்ஷிண கைலாய புராணம், திருக்கோணாசல புராணம் ஆகியன எடுத்துக்காட்டுவது ஈண்டு அவதானிக்கத்தக்கது. சோழரின் ஆட்சியின் படர்ச்சி மட்டக்களப்புத் தமிழகத்திலும் காணப்பட்டாலும் இதுபற்றிய விபரங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. வடபகுதியில் மாதோட்டம் சோழமன்னனின் பெயரால் 'இராஜராஜபுரம்' என அழைக்கப்பட்டது. இங்கும் கோயில்கள் கட்டப்பட்டன. யாழ்குடா நாட்டிலுள்ள முதலாம் ராஜேந்திரனுடைய கல்வெட்டு இங்குள்ள கோயிலொன்றுக்கு அளிக்கப்பட்ட தானத்தைக் குறிக்கிறது. இக்கோயில் அமைந்த இடம் நல்லூர் என இனங்காணப்பட்டது. கி. பி. 1070இல் சோழர் ஈழத்தினை விட்டகன்றனர்.

சோழ அரசில் ஏற்பட்ட முக்கிய அரசியல் மாற்றங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்ததாலும், ஈழத்தில்முதலாவது விஜயபாகு தலைமையில் சோழருக்கெதிரான கிளர்ச்சி வலுவடைந்ததாலுமே சோழர் ஈழத்தின் மீதான தமது ஆதிக்கத்தை விட்டனர் எனலாம். சோழர் மறைந்தாலும் சோழராட்சி ஈழ வரலாற்றில் குறிப்பாகத் தமிழர் வரலாற்றில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியது. இதனையே பேராசிரியர் கிங்ஸ்லி டீ சில்வா பின்வருமாறு கூறுகிறார். (41)

> 'சோழராட்சியின் தவிர்க்க முடியாத விளைவு யாதெனில் ஈழத்தின் மதத்துறையிலும் பண்பாட்டுத்துறையிலும் இந்து-பிராமண சைவசமய நடைமுறைகளும் திராவிடக் கலையும் கட்டடக் கலையும் தமிழ் மொழியும் ஊடுருவி மிகப்பலம் வாய்ந்த முறையில் மேலோங்கியமையே... இக்காலந் தொட்டு ஈழத்தின் மீது தென்னிந்தியா செலுத்திய ஆதிக்கம் முற்று முழுதாக இந்துமத உள்ளடக்கத்தினையேகொண்டதாயிருந்தது'.

சோழருக்குப் பின் பொலநறுவையில் ஆண்ட அரசர்களுள் முதலாம் விஜயபாகு, முதலாம் பராக்கிரமபாகு, நிசங்கமல்லன் ஆகியோர் குறிப்பிடத்தக்க பேரரசர்களாவர். முதலாம் விஜயபாகு கந்தளாயிலிருந்த சோழமன்னன் ராஜராஜன் பெயரில் அமைக்கப்பட்ட சிவ தேவாலயத்திற்குத் தன் பெயரை இட்டான். இதனால் இது விஜய ராஜேஸ்வரம் என அழைக்கப்பட்டது. (42) திரிகோணமலை மாவட்டத்திலுள்ள பாளமோட்டைத் தமிழ்க்கல்வெட்டில் இம்மன்னன் காலத்தில் இக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட மானியம் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. கந்தளாய் இந்து - திராவிடக் கலாசாரத்தின் மையப் பிரதேசமாக விஜயபாகுவுக்குப் பின்னரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டது. இரண்டாம் கஜபாகு (கி. பி. 1132 - 1153) தனது கடைசிக் காலத்தை இப்பகுதியில் இச்சூழலிலே கழித்தான் எனக் கூறப்படுகிறது. கோணேசர் கல்வெட்டு இம்மன்னன் கோணேஸ்வரத்திற்கு அளித்த தானத்தைப்பற்றிக் கூறுகிறது. (43) முதலாம் பராக்கிரமபாகு காலத்தில் கிழக்குப்பகுதியில் பொலநறுவை அரசின் மேலாணை பரந்திருந்தது. வடபகுதியைப் பொறுத்தமட்டில் முதலாம் விஜயபாகு காலத்தில் அவன் இப்பகுதியில் மேற்கொண்ட அரசியல் நடவடிக்கைகளுக்குப்பதிலாகக் கலாசார நடவடிக்கைகள் பற்றிய சான்றுகளே காணப்படுகின்றன. எனினும் முதலாம் பராக்கிரமபாகு இப்பகுதியிலுள்ள ஊர்காவற்றுறை, மட்டுவில், வலிகாமம் போன்ற துறைமுகங்களில் தமிழகத்திலுள்ள சோழருக்கெதிராக இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டான் எனச் சூளவம்சம் குறிப்பதும், நயினாதீவில் இப்பகுதித் துறைமுகத்தில் மேற்கொண்ட வர்த்தக நடவடிக்கைகள் பற்றிக் குறிக்கும் இவனது தமிழ்க் கல்வெட்டுக் காணப்படுவதும் தமிழ்ப்பகுதியில் இவனது மேலாணை பரந்திருந்தமை புலனாகின்றது. (44) நிசங்கமல்லனின் மேலாணை வடபகுதியிற் பரவியதற்குத் தடயங்கள் காணப்படவில்லை. ஆனால் கிழக்கே கந்தளாய் சிவன்கோயிலில் தனது தாயின் நினைவாக 'பார்வதி தர்மசாலா' என்ற ஓர் தர்ம நிறுவனத்தை அமைத்ததற்கான சான்றுகள் உள. நிசங்கமன்னனின் பின் கலிங்க வம்சத்தவர் ஆட்சி சில காலம் நீடிக்க கி. பி. 1215இல் இந்தியாவிலுள்ள கலிங்க தேசத்திலிருந்து மாகன் என்ற அரசன் தமிழ், கேரளப் படையுடன் வந்து பொலநறுவையைக் கைப்பற்றி நாற்பது ஆண்டுகள் ஆட்சி செய்தான். (45) இவன் காலத்தில் வடபகுதியில் சிலகாலம் சாவக நாட்டிலிருந்து வந்த சந்திரபானு ஆட்சிசெய்தான். இவன் மகன் இவன் பின்னர் அரசனானான். இவர்கள் தமிழகத்திலிருந்து வந்த பாண்டியரால் தோற்கடிக்கப்பட மாகனாட்சியைத் தொடர்ந்து வடபகுதியில் பாண்டியரின் கீழ் சேனாதிபதிகளாக விளங்கிய ஆரியச் சக்கரவர்த்திகள் 13ஆம் நூற்றாண்டின் இறுதியில் சுதந்திர அரசை ஸ்தாபித்தனர். (46) எனினும் மாகனது ஆட்சி கிழக்கு மாகாணத்தில் தமிழரது செல்வாக்குப் பல வழிகளிலும் ஸ்திரம்பெற உதவியமை குறிப்பிடத்தக்கது.

(VI)

வடபகுதியிலமைந்த சுதந்திர ராச்சியத்தின் தலைநகராகச் சிங்கை நகர், நல்லூர், யாழ்ப்பாண பட்டினம் ஆகிய பெயர்கள் காணப்படுகின்றன. (47) வடக்கே இவ்வாறு சுதந்திர அரசு தோன்ற அநுராதபுர, பொலநறுவைப் பிரதேசம் காடடர்ந்த பிரபிரதேசமாக மாறச் சிங்கள மன்னரின் அரசிருக்கை தென்மேற்கே தம்பதேனியா, யாப்பகூவா, குருநாகல், கம்பளை, கோட்டை, கண்டி ஆகிய பகுதிகளை நோக்கி நகர்ந்தது. இவ்வாறு சிங்கள-தமிழ் அரசுகள் வெவ்வேறு புவியியற் பிராந்தியங்களிற் சுழன்றாலும் சிங்கள அரசில் தமிழ் கலாசாரத்தின் தாக்கம் இல்லாமலில்லை. நிற்க, யாழ்ப்பாண அரசின் மன்னர் தமது சிம்மாசனப் பெயர்களாகப் பரராசசேகரன், செகராசசேகரன் ஆகியனவற்றைக் கொண்டனர். ஆரியச்சக்கரவர்த்திகள் என இவர்கள் அழைக்கப்பட்டதற்குக் காரணம் இவர்கள் சக்கரவர்த்தி என்ற பட்டத்தினை சூடிய பிராமணர்களாகப் பாண்டிய அரசின் படைத்தளபதிகளாகக் கடமை ஆற்றியதேயாகும். இவர்கள் கொடிபற்றியும் இலக்கியங்கள் குறிக்கின்றன. செகராசசேகரமாலை தனது சிறப்பாயிரத்தில் இதனை 'விடைக் கொடியும், சேதுவும் நீள்கண்டிகள் ஒன்பதும் பொறித்து மிகைத்த கோவும்' எனக் கூறத் தக்ஷிண கைலாச புராணம் இடப வாள்கொடி எழுதிய பெருமான் சிங்கையாரியன் சேதுகாவலன், எனக் குறிக்கிறது. இவர்கள் நாணயங்களில் சேது என்ற தமிழ் வாசகம் காணப்படுகிறது. இவ்வாசகம் இராமேஸ்வரக் கரையிலுள்ள சேதுக்கரையிலிருந்து இவர்கள் வந்ததை எடுத்துக்காட்டுகின்றது. இச்சேதுக்கரை பல புண்ணிய தலங்கள் நிறைந்த பகுதி கூட. இதனால் இது ஓர் மங்கலப் பொருளாக இவர்களின் நாணயங்களில் கல்வெட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுக்களிற் காணப்படுகின்றது எனலாம். இவர்கள் நாணயங்களில் சேது என்ற தமிழ் வாசகமும் அதன்மேல் நந்தியும் காணப் படுகின்றது. இத்தகைய சின்னங்கள் தமிழகத்திலுள்ள பல்லவநாணயங்களிற் காணப் படுவதும் அவதானிக்கத்தக்கது. எல்லாமாக 17 மன்னர்கள் யாழ்ப்பாண அரசை ஆட்சி செய்தனர். கடைசி மன்னராகிய இரண்டாவது சங்கிலியன் 1619இல் போர் முனையில் போர்த்துக்கேயரால் தோற் கடிக்கப்பட்டான். இவர்கள் திருவாகமுறை மத்திய காலத்தில் தமிழகம், ஈழம் ஆகிய பகுதிகளில் வழக்கிலிருந்த திருவாக முறையை ஒத்துக் காணப்பட்டதோடு இத் திருவாகம் தமிழில் நடைபெற்றதும் அவ தானிக்கத் தக்கது. இவர்களின் தலைநகர் நல்லூரில் புகழ்பூத்த நூலகமாகிய 'சரஸ் வதிமகால்' என்ற நூல் நிலையம் காணப் பட்டது. தமிழ் கலை கலாசாரம் ஆகியன மேன்மை பெற்ற காலமாக இம்மன்னராட்சி விளங்குகிறது. எனினும் இவ்வரசின் வரலாற்றில் இருமுக்கிய நிகழ்ச்சிகள் குறிப் பிடத்தக்கன. ஒன்று பதின் நான்காம் நூற் றாண்டில் இவ்வரசு ஈழத்தில் காணப்பட்ட சிங்கள அரசைவிட வலிமையுடைய அரசாக எழுச்சிபெற்றதோடு அக்காலச் சிங்கள அரசின் மையப் பிரதேசமாக விளங்கிய கம்பளை அரசினை வெற்றிகொண்டதை கேகாலை மாவட்டத்திலுள்ள இவ்வரசின் தமிழ்க் கல்வெட்டு பின்வருமாறு எடுத் தியம்புகிறது. (48)

**சேது**

கங்கணம் வேற் கண்ணிணையாற் கட்டினார் காமர் வளைப்
பங்கையக் கைமேற்றிலதும் பாரித்தார் பொங்கொலிநீர்
சிங்கை நகராரியனை சேராவனு ரேசர்
தங்கள் மடமாரதர் தாம்.

ஆரியச் சக்கரவர்த்தியின் வரிகேசரிப் போர் கம்பளை அரசில் வரிசேகரித்தமை யும் மடவல என்ற இடத்திலுள்ள சிங்கக் கல்வெட்டு எடுத்தியம்புகின்றது. (49) ஆரியச்சக்கரவர்த்தியின் நூற்றுக்கணக்கான கப்பல்கள் பாக்கு நீரிணையில் நிறைந்திருந் ததை இபன் பற்றுற்றா என்ற அராபிய யாத்திரிகன் குறிப்பிடுகிறார். இம்மன்னர் மேலாணை தெற்கே நீர்கொழும்பு, சிலாபம் போன்ற பகுதிகள்வரை பரந்திருந்தாலும் பின்னர் நெடுதுகாலம் நீடிக்கவில்லை. 14ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழகத்தில் ஏற்பட்ட விஜயநகரப் பேரரசின் எழுச்சியும் ஈழத்தின் வடபகுதியில் அதனது ஆதிக்கப் படர்ச்சியும் ஆரியச் சக்கரவர்த் திகளின் மேலாணை ஈழத்தின் தென்பகு திக்கு விஸ்தரிக்கப்படுவதைத் தடுத்தன. எனினும் 15ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கோட்டை அரசு ஆறாவது பராக் கிரமபாகு காலத்தில் வலுப்பெற்ற காலத் தில் இந்நூற்றாண்டின் நடுப்பகுதியில் 17 ஆண்டுகள் கோட்டை அரசின் பகுதியாக யாழ்ப்பாண அரசு கோட்டை அரசனின் பிரதிநிதியாகிய சப்புமால் குமரய்ய என்ற சிங்களப் பெயருடைய செம்பகப்பெருமாள் என்ற கேரளத் தளபதியால் ஆளப்பட் டாலும்மறுபடியும் யாழ்ப்பாண அரசு தனி, யரசாகியது. போத்துக்கேயரால் இது வெற்றிகொள்ளப்படும்வரை இது நிலை கொண்டிருந்தது. வடமாகாணத்தில் வன் னிப்பகுதி வன்னியர் என அழைக்கப்பட்ட தமிழ் குறுநிலமன்னர்களால் ஆளப்பட்டது. இவர்கள் வருடா வருடம் யாழ்ப்பாணத் திலுள்ள ஆரியச்சக்கரவர்த்திகளின் தலை நகருக்குச் சென்று திறை கொடுத்தாலும் பெருமளவுக்குச் சுதந்திரமாக விளங்கினர். யாழ்ப்பாண அரசின் ஆதிக்கம் தற்போதைய வடமாகாணப் பகுதியிலும் கிழக்கு மாகாணத்தில் வெருகல் ஆறுவரையும் பரந் திருந்தது. திரிகோணமலையில் ஆட்சிசெய்த வன்னியர் யாழ்ப்பாண அரசருடன் நெருங் கிய உறவுகொண்டிருந்தனர்.

ஈழத்தில் எப்போது வன்னியர் ஆட்சி தொடங்கியதென்ற கேள்வி எழுகிறது. சோழராட்சியின் இறுதியிலே இதுதொடங்கி விட்டது போற் தெரிகிறது. காரணம் இவ் வன்னியர் தலைவர்கள் சோழப்படைகளான வேளைக்காரருடன் சேர்ந்து போரிட் டதற்கான சான்றுகள் தமிழகத்திற் காணப் பட்டதால் ஈழத்திலும் இவ்வாறே நடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றிருக்கலாம் போற் தோன்றுகின்றது. இவர்களுக்கு அளிக்கப்பட்ட நிலமானியங்களே வன்னிமைகள் எனப்பட்டன, வடபகுதியிற் காணப்பட்ட வன்னிமைகளை விடக் கிழக்கு மாகாணத்திலும் புத்தளமாவட்டத்திலும் இவை காணப்பட்டன. (50) கிழக்கு மாகாணத்திற் காணப்பட்ட வன்னிமைகளின் வரலாற்றில் குளக்கோட்டன் ஓர் முக்கிய பங்கினை வகிக்கிறான். இவன் காலம் 13 ஆம் நூற்றாண்டாகும். சோடகங்கன் எனவும் இவன் இலக்கியங்களில் அழைக்கப்படுகிறான். தமிழ் நாட்டிலிருந்து வன்னியர்களை அழைத்து வந்து அவர்களுக்கும் திரிகோணமலைக் கோணேஸ்வர ஆலயத்திற்கும் இவனளித்த தானங்கள் பற்றிய விவரம் கோணேசர்க்கல்வெட்டில் உண்டு. இது பற்றி யாழ்ப்பாண வைபவமாலையிலும் குறிப்புண்டு. தான் கோயிலுக்குக் கொடுத்த தானங்களுக்கு ஊறுசெய்தோர் நீறாக அழிவர் எனக் கோணை நாதர் மீது ஆணையிட்டு இவன் கூறியதாக இக் கல்வெட்டில் வரும் பின்வரும் செய்யுள் (51) கூறுகிறது.

''மாறாத புனல் பாயும் திருக்குளமும்
வயல் வெளியும் வருந்திச் செய்தே
வீறாக என் மரபோற் கேயாமற்
கோணமலை விமலர்க் கீந்தேன்
பேறான பெரியோரே இதற்கழிவு
நினைத்தவர்கள் பெட்பு நீங்கி
நீறாகப் போவரிது நிச்சயம் நிச்
சயங் கோண நிமலர் ஆணை''

குளக்கோட்டன் பற்றித் திரிகோணமலையிலுள்ள கோட்டை வாசலிலுள்ள கல்வெட்டும் பின்வருமாறு குறிக்கிறது.

''முன்னே குளக்கோட்டன் மூட்டுத்
திருப்பணியை
பின்னே பறங்கி பிரிக்கவே - மன்னவ
பின் பொன்னாத தனையியற்ற
வழித்தேவைத்து
எண்ணாரே பின்னரசர்கள்

திரிகோணமலையிற் காணப்பட்ட வன்னியர் ஆட்சி பற்றி கி. பி. 14 ஆம் நூற்றாண்டுக்குரிய கங்குவேலிக் கல்வெட்டும் ''மலையில் வன்னியனாரும் ஏழூரில் அடம்பர்களும் கூடிக்கோணைநாதருக்கு'' அளித்த தானம் பற்றிக் குறிப்பிடுகிறது. கி. பி, 16-ம் நூற்றாண்டுக்குரிய வெருகல் கல்வெட்டு கயிலை வன்னியனார் இக்கோயிலின் மேற்கு மதிலைக் கட்டியதாகக் கூறுகிறது. (52) தம்பலகாமத்திலும் கி. பி. 14 ஆம் நூற்றாண்டுக்குரிய தமிழ்க் கல்வெட்டொன்று கிடைத்துள்ளது. இது பழுதடைந்த நிலையிலுள்ளது. இதுவும் வன்னியர் பற்றிக் குறிக்கலாம். இது போல் கி. பி. 13 ஆம் நூற்றாண்டுக்குரிய தமிழ்க் கல்வெட்டு ஒன்றும் திரிகோணமலையிலுள்ள வில்லூன்றிக் கந்தசுவாமி கோயிற்தூணிலுண்டு. மட்டக்களப்பு மான்மிகம் இப்பகுதியில் மாகனுடன்தான் வன்னிமைகள் தோன்றின எனக் கூறினாலும் இவனுக்கு முன்னரே இங்கும் இவை தோன்றிவிட்டன எனலாம். (53) மாகன் கேரளத்திலிருந்து தன்னுடன் கூட்டி வந்த முக்குவர்களுக்கு வன்னிமைகளை அளித்து அவர்களை இப்பகுதித் தலைவர்களாக்கினான். இத்தகைய முக்குவவன்னிமைகள் புத்தள மாவட்டத்திலும் காணப்பட்டன. இவர்களை கி. பி. 15 ஆம் நூற்றாண்டில் கோட்டை மன்னன் அடக்கினான். போத்துக்கேயர் வரலாற்றாசிரியரான கெய்ரோஸ் சுவாமிகள் யாழ்ப்பாண ராச்சியத்தின் எல்லைகள் பற்றிக் குறிப்பிடுவது அவதானிக்கத்தக்கது. இது திரிகோணமலை வரையும் பரந்திருந்ததை அவர் குறிப்பிடுகிறார். (54) இதனெல்லை மேற்கே சிலாபம் வரை ஒரு காலத்தில் சென்றதையும் அவர் குறிப்பிட்டுள்ளார். போத்துக்கேயரிடமிருந்து 1658 இல் ஆட்சிப்பொறுப்பினை ஏற்ற டச்சுக்காரரின் முதற்தேசாதிபதியாகிய பான்கூன்ஸ் மேலும் இது பற்றி விரிவாகக் கூறியுள்ளார்.(55) அஃதாவது

''இந்நான்கு மாகாணங்களும் (வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி) பதின்மூன்று தீவுகளும் யாழ்ப்பாண பட்டினமென வழங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்டன. இவற்றோடு வன்னியும் அவ்வரசைச் சேர்ந்திருந்தது. யாழ்ப்பாண மன்னர் வன்னியைக்கைப்பற்றித் திறை பெற்றுவந்தனர். அதே போல் போர்த்துக்கேயரும் வன்னியரிடமிருந்து திறை பெற்றனர். மேற்கிலே கற்பிட்டியிலிருந்து பூநகரிப்பக்கமாகவுள்ள கல்முனை வரை காணப்படும் செட்டிகுளம், மாதோட்டம் முதலான இடங்களை அடக்கிக்கிழக்கிலே திரிகோணமலை வரையும் வன்னிபரந்துகாணப்படுகிறது. இவ்வரசினைச் சியங்கேரி (சங்கிலி) என்றஅரசன் நாற்பத்திரண்டு ஆண்டுகட்கு மேலாக அரசாண்டான்.

டச்சுக்காரராட்சியில் *(கி.பி.1658 - 1796)* வடகிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களின் மரபு வழித்தாயகமாகக் காணப்பட்டதை மேற்கூறிய வான்கூன்ஸ் தேசாதிபதியின் கூற்று உறுதிசெய்கிறது. அஃதாவது:

''பழைய மலபார் (தமிழ்) ராசாக்கள் ஆதிக்கம் பரந்து காணப்பட்டது. உயர்ந்த மலைத்தொடர்கள் மீதும் வேடர்களின் திலப்பர புக்கள் மீதும் இந்த ஆதிக்கம் பரந்திருந்ததோடு புத்தளம், கற்பிட்டியின் நடுப்பகுதிக்கும் அது பரந்திருந்தது. அது மேலும் தெற்கு நோக்கி விரிவாக்கப்பட்டு நீர்கொழும்புவரை ஈழத்தின் மேற்குக்கரையோரம் அவர்கள் கட்டுப்பாட்டுக்குள்ளே இருந்தது. கிழக்குப்பகுதியில் பாணமை வரைக்கும் கும்புக்கன் ஓயாவிலும் அது பரந்திருந்தது. இன்றும் கூட வழக்கமாக மலபாரி மொழியே இங்கு பேசப்படுகிறது.

வடக்கே யாழ்ப்பாண அரசு மறைந்தாலும் கிழக்கே திரிகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் வன்னியராட்சி தொடர்ந்தது. (36) எனினும் இவர்கள் மீது முதலில் கோட்டை மன்னரும் அவர்கள் வீழ்ச்சியடையக் கண்டி மன்னரும் மேலாணை செலுத்தினர். இதனைப் போத்துக்கேய வரலாற்றாசிரியராகிய கெய்ரோசின் குறிப்புகளும் இப்பகுதிகளிற் கிடைக்கும் கல்வெட்டுக்களும் உறுதி செய்கின்றன. இக் கல்வெட்டுக்கள் தமிழிலே நிருவாகம் இங்கு நடைபெற்றதை உறுதி செய்கின்றன. திரிகோணமலை மாவட்டத்திலுள்ள கிளிவெட்டிப் பிள்ளையார் கோயிற் கல்வெட்டு, திரிகோணமலை மாரியம்மன் கோயிற் கல்வெட்டுகள் ஆகியனவற்றை இங்கே குறிக்கலாம். இவை கி. பி. 16 ஆம், 18 ஆம் நூற்றாண்டுகளுக்குரியவையாகும். ஏற்கனவே கி.பி. 16ஆம் நூற்றாண்டுக்குரியவொரு கல்வெட்டு வன்னியர் பற்றிக் குறிப்பதைக் கண்டோம். மட்டக்களப்புத் தமிழகத்திலுள்ள கல்வெட்டுக்களில் கி.பி. 16 ஆம நூற்றாண்டுக்குரிய கல்வெட்டுகள் முக்கியம் பெறுகின்றன. இவற்றுள் ஒன்று தம்பிலுவிலில் காணப்படுகின்றது. இக் கல்வெட்டு சிவஞானசங்கரன் கோயிலுக்கு அளிக்கப்பட்ட தானத்தினைக் குறிக்கும் போது கோட்டை அரசனான விஜயபாகு பற்றியும் கூறுகிறது. இதேபோன்று திருக்கோயிற் சித்திர வேலாயுத சுவாமி கோயிலிலும் இரு கல்வெட்டுக்கள் உள. முதலாவது கல்வெட்டு கி.பி. 16 ஆம் நூற்றாண்டுக்குரியது. இரண்டாவதன காலம் கி. பி. 1752 ஆகும். இதேபோன்று வீரமுனையிலும் ஓர் செப்பேடு உண்டு. இதன் காலம் கி. பி. 16 ஆம் 17 ஆம் நூற்றாண்டுகளாகும். இச்செப்பேட்டில் கண்டி மன்னராகிய இரண்டாவது சேனரத்புவனசிங்கசுவாமி என அழைக்கப்படுகிறான். இம்மன்னன் வீரமுனைப் பிள்ளையாருக்கு அளித்த நிலமானியத்தை இத்தமிழ்க் கல்வெட்டு எடுத்தியம்புகிறது. இதேபோன்று கி. பி. 1683 ஆம் ஆண்டுக்குரிய சம்பாந்துறைச் செப்பேடு கண்டியரசன் பிராமணருக்கு அளித்த நிலமானியத்தைக் கூறுகிறது. இதனை அளித்தவன் இரண்டாவது ராஜசிங்கனாகும. (கி. பி. 1635 - 1687) இத்தகைய சான்றுகள் கி. பி. 16 ஆம், 17 ஆம், 18 ஆம் நூற்றாண்டுகளில் இப்பகுதிகளில் தமிழர் ஆட்சிநிலை கொண்டமையையும் இவர்கள் மீதுகண்டிமன்னர் பெயரளவில் மேலாணை செலுத்தியதையும் எடுத்தியம்புகின்றன எனலாம். இக்காலத்தில் எழுந்த மட்டக்களப்பு மான்மியம் சிங்களவர் மேலாணை ஏற்கப்பட்ட காலத்திலும் கூடத் தனியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கிய தமிழரின் கலாசார பாரம்பரியத்தினை எடுத்துக் காட்டுகின்றது எனலாம்.

(VII)

கி.பி. 1658 இல் போத்துக்கேயரிடமிருந்து அரசியலாதிக்கத்தினை ஒல்லாந்தர் கைப்பற்றியதன் விளைவாக ஈழத்தின் வடபகுதி இவர்களின் ஆட்சிக்குக் கீழ் வந்தது. வடபகுதி வன்னிச் சிற்றரசர்கள் இவர்கள் மேலாணையை ஏற்றனர். கிழக்குப் பகுதியில் திரிகோணமலையிலிருந்த வன்னிச் சிற்றரசுகள், மட்டக்களப்புச் சிற்றரசுகள் தமிழிற் கருமமாற்றினாலும் கூட கண்டி மன்னனின் மேலாணையை ஏற்றிருந்தன. எனினும் கி. பி. 1766 இல் கண்டி மன்னனுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின் விளைவாக ஒல்லாந்தர் (டச்சுக்காரர்) ஈழத்தின் கரையோர மாகாணங்களுக்கு அதிபதியானார்கள். இதனால் இப்பகுதிகளின் நிருவாகம் சீரமைக்கப்பட்டது. இவர்கள் மேற்கொண்ட நிருவாக நடவடிக்கைகள் இப்பகுதிகளின் கலாசார பாரம்பரியத்தினை இவர்கள் அங்கீகரித்ததையே எடுத்துக்காட்டுகின்றன. இக்கரையோரப் பகுதிகளை எல்லாமாக ஆறு மாவட்டங்களாக இவர்கள் பிரித்தார்கள். இவற்றுக்கும் பொறுப்பாகத் தலைவர்கள் நியமிக்கப்பட்டனர். இவ்வாட்சி மாவட்டங்கள் பின்வருமாறு அமைந்தன. (57)

(1) கொழும்பு மாவட்டம் பெந்தோட்டை ஆறு தொடக்கம் வடக்கே தெதுறு ஓயா வரைக்கும் பரந்திருந்தது.

(2) புத்தளம் - கற்பிட்டி மாவட்டம் - தெதுறுஓயா தொடக்கம் மோதரகம் ஆறுவரை பரந்திருந்தது.

(3) யாழ்ப்பாண மாவட்டம் - மோதரகம் ஆறு தொடக்கம் வடக்கே யாழ்ப்பாணக் குடாநாடு வன்னிப்பகுதி ஆகியவற்றையும் உள்ளடக்கிக் கிழக்கே கொக்கிளாய் வரையும் பரந்திருந்தது.

(4) திரிகோணமலை மாவட்டம் - கொக்கிளாய் தொடக்கம் தெற்கே வெருகல் ஆறு வரையும் பரந்திருந்தது.

(5) மட்டக்களப்பு மாவட்டம் - வெருகல் ஆற்றிலிருந்து தெற்கே கும்புக்கன் ஆறு வரையும் பரந்திருந்தது.

(6) காலி மாவட்டம் - கும்புக்கன - பெந்தோட்டை ஆறுகளுக்கிடைப்பட்ட பகுதியை உள்ளடக்கியிருந்தது.

இவ்வாறு நிருவாக வசதிக்காக ஆறு ஆட்சி மாவட்டங்களை அமைத்த டச்சுக்காரர் அவ்வப் பகுதிகளின் வழக்கங்களுக்கேற்ப நீதி நிருவாகத்தினையும் ஒழுங்கு செய்திருந்தனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் இப்பகுதியில் தொன்றுதொட்டு நிலவி வந்த தேச வழமைப்படியே நீதி நிருவாகம் அமைந்திருந்தது. அத்துடன் இப்பகுதித் தேச வழமைச் சட்டங்களைத் தொகுத்த பெருமையும் இவர்களுக்கே உண்டு. மட்டக்களப்பு மாவட்டத்தில் முக்குவர்களுக்கே தனிச்சிறப்பான முக்குவ வழக்கங்கள் இப்பகுதி நிருவாகத்தில் முக்கியம் பெற்றன. எனினும் நீதி நிருவாகத்தை ஒருங்கிணைக்க விரும்பிய டச்சுக்காரர் சிங்களப்பகுதிகளின் நீதி நிருவாகத்தையும், தமிழ்ப்பகுதிகளின் நீதி நிருவாகத்தினையும் வெவ்வேறாகவே இனங்கண்டு கொண்டதை இவர்கள் ஏற்படுத்திய நீதி நிருவாகப் பிரிவுகள் உணர்த்துகின்றன. இவ்வாறு ஆட்சி மாவட்டங்களும் நீதி நிருவாகத்திற்காக மூன்று பெரிய மாவட்டங்களாகச் செயற்பட்டன. அவையாவன கொழும்பு, காலி, யாழ்ப்பாண நீதி மாவட்டங்களாகும். (படம்-1) கொழும்பு நீதி நிருவாக மாவட்டம் கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டிருந்தது. இப்பிரிவில் கொழும்பு, புத்தள மாவட்டங்கள் அடங்கி இருந்தன. புத்தளம், நீர்கொழும்பு ஆகிய இடங்களிலுள்ள தமிழர்கள் மெல்ல மெல்லச் சிங்கள மொழி பேசுபவர்களாக மாறத் தொடங்கினர்.

காலி நிருவாக மாவட்டம் காலியைத் தலைமையகமாகக் கொண்டிருந்ததோடு இதனுள் பெந்தோட்டை ஆறு தொடக்கம் - கும்புக்கன் ஆறுவரையிலுள்ள பகுதிகள் அடங்கியிருந்தன. ஆனால் தமிழ்ப் பகுதிகளாகிய யாழ்ப்பாணம், திரிகோணமலை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு ஆகியன ஒரே நீதி நிருவாகப் பிரிவில் அடங்கியிருந்தன. இதன் தலைமையகம் யாழ்ப்பாணத்தில் அமைந்திருந்தது. திரிகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களிலுள்ள வழக்குகள் யாழ்ப்பாணத்தில் மேல் விசாரணைக்கு அனுப்பப்பட்டன. ஒல்லாந்தரின் நடவடிக்கைகள் சிங்களவர் - தமிழர் ஆகியோர் தனித்துவமான கலாசார பாரம்பரியத்தைப் பேணுபவர்கள் என்பதை அங்கீகரித்ததையே உணர்த்துகின்ற அதே சமயத்தில் தமிழரின் பாரம்பரிய பிரதேசத்தினையும் அங்கீகரித்ததையும் எடுத்துக்காட்டுகின்றன.

ஒல்லாந்தரிடமிருந்து ஆட்சிப்பொறுப்பைக் கையேற்ற பிரித்தானியரும் சிங்கள-தமிழ் மக்கள் தனித்துவமான மரபுவழித் தாயகங்களில் வாழ்ந்து வந்ததை இனங்கண்டு கொள்ளத் தவறவில்லை. அது மட்டுமன்றி இவை இரண்டும் தனித்தனியான தேசிய இனங்களே என்பதனையும் அங்கீகரித்திருந்தனர். ஐரோப்பாவில் தேசியவாதம், தேசிய இனங்கள் ஆகியனவற்றின் உருவாக்கத்தை அறிந்திருந்த இவர்கள் தனித்தனிப் பகுதிகளில், தனியான பொருளாதார, நீதி நிருவாக, கலாசாரப் பாரம்பரியத்தினை உடைய சிங்கள - தமிழ் மக்களை இவ்வாறு இனங் கண்டு கொண்டமை வியப்பன்று. கி. பி . 1796 இல் ஈழம் பிரித்தானியர் கையில் வந்தபோது முதலாவது தேசாதிபதியாக நோத்பிரபு கடமையாற்றினார். இவரின் காரியதரிசியாக கிளைகோன் விளங்கினார். இவர் 1799இல் வெளியிட்ட குறிப்பு தமிழரைத் தனியான தேசிய இனமாக இவர்கள் இனங்கண்டு கொண்டதை எடுத்துக்காட்டுகிறது. (58) அஃதாவது

> ''இலங்கைத் தீவானது மிகப் பழைய காலந்தொட்டே இருவேறு தேசிய இனங்களால் வெவ்வேறு பகுதிகளில் உரிமைகொண்டாடப்பட்டுள்ளது. இத்தீவின் நடுப்பகுதியும் தென்பகுதியும் வளவை ஆற்றிலிருந்து சிலாபம்வரையிலானமேற்குப்பகுதியும்சிங்கள இனத்தவரால்ஆட்சிசெய்யப்பட்ட பகுதியாகும் இத்தீவின் வடக்குக் கிழக்கு நிலப்பகுதிகள் மலபார் (தமிழ்) மக்களின் ஆட்சிக்குட்பட்ட பகுதியாகும். இவ்விரு தேசிய இனங்களும் இவ்விரு பகுதியினரும் மதத்தாலும் மொழியாலும் வாழ்க்கைப் பண்பாட்டாலும் முற்றிலும் வேறுபட்டவர்களாவர்.''

தேசாதிபதியாக இருந்த நோத் பிரபுவின் காரியதரிசியாக விளங்கிய கிளைகோன் கூற்றினை நோத்பிரபுவின் பின்னர் தேசாதிபதியாக வந்த சேர் றெபேட் பிரவுன்றிக் பிரபுவின் கூற்றும் அங்கீகரித்துள்ளமை அவதானிக்கத்தக்கது. அவர் சென்னையிலுள்ள பிரித்தானிய நிருவாகத்தின் தலைமைச் செயலாளருக்கு 1813ஆம்ஆண்டு யூலாய் மாதம் 10ஆம் திகதி எழுதிய கடிதத்தில் தமிழ்மொழி புத்தளம் தொடக்கம் மட்டக்களப்பு வரை வழக்கிலிருந்ததைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். (59)

> ''புத்தளம் மட்டக்களப்பு வரையுள்ள பகுதிகளில் வாழும் மக்கள் பேசும் மொழியாக இது இருப்பதனால் இப்பகுதிகளில், ஏனைய பகுதிகளில் சிங்களமொழிக்கு இருக்கின்ற வழக்குரிமை போலத் தமிழுக்கும் அவ்வழக்குரிமை இருக்கவேண்டுமெனக் கட்டளையிட்டுள்ளேன். இதற்குத் தங்களுடைய எதிர்ப்பு இருக்காது என நம்புகிறேன்''

இக்காலத்தில் பிரதம நீதியரசராக விளங்கியவர் சேர் அலெக்சாண்டர் ஜோன்சன் ஆவர் அவர் தமிழ் மக்களின் தனித்துவமான நீதி, பாரம்பரிய சட்ட வழக்காறுகள் பற்றி நன்கறிந்தவர். அவர் சேர் றெபேட் பிறவுன்றிக் தேசாதிபதியின் கூற்றை அங்கீகரித்துப் பின்வருமாறு கூறியுள்ளமை அவதானிக்கத்தக்கது. (60) அஃதாவது (படம் - 2)

> 'வடமேற்கிலுள்ளபுத்தளத்திலிருந்து தென்கிழக்கேயுள்ள குமணை ஆறு வரையிலுள்ள நிலப்பகுதி தமிழ் மக்களின் குடியிருப்பு ஆகும். மேற்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலாபத்திலிருந்து தென்மேற்கே உள்ள குமணை ஆறுவரையிலுள்ள நிலப்பகுதி சிங்கள மக்களின் குடியிருப்பு ஆகும்."

இவ்வாறு தமிழ்மக்கள், சிங்கள மக்கள் வாழ்ந்தபிரதேசங்கள் தனித்துவமான கலாசாரப்பின்னணியையும், நீதித்துறைப்பின்னணியையும் கொண்டிருந்ததை ஆங்கிலேயர். தமது ஆட்சியை இங்கு நிலை நாட்டிய காலத்தில் அங்கீகரித்ததையே மேற்கூறிய குறிப்புக்கள் எடுத்துக்காட்டுகின்றன. எனினும் இத்தகைய போக்கு நெடிதுகாலம் நீடிக்கவில்லை. இலங்கையில் எவ்வாறு பிரித்தானியர் ஆட்சியை வலுப்படுத்த முடியும் என்பதனை ஆராய 1829 இல் கோல்புறூக் தலைமையில் ஓர் ஆணைக் குழு அமைக்கப்பட்டது. இவ்வாணைக் குழு 1832இல் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. இவ்வாணைக் குழுவினருக்கு ஈழத்தின் மத்திய பகுதியில் கண்டியரின் பாரம்பரியமும், மேற்குதெற்கு கரையோரப்பகுதிகளில் கரைநாட்டுச் சிங்களவரின் பாரம்பரியமும் வட - கிழக்கு மாகாணங்களில் தமிழ் மக்களின் பாரம்பரியமும் நிலைத்திருந்தமை வியப்பாக இருந்தது. இப்பகுதிகளின் தனித்துவமான பாரம்பரியத்தை ஒழித்து ஒரே நிருவாக அமைப்பில் கொண்டுவருவதன் மூலம் தான் ஈழத்தில் பிரித்தானியர் ஆட்சி வலுவடையும் என நம்பினர். பிரித்தானியாவின் ஒற்றையாட்சி அமைப்பில் பழக்கப்பட்டவர்கள். ஐரிஷ், ஸ்கொட்டிஸ் சிறுபான்மை மக்களின் தனித்துவத்தினை அமிழ்த்தியவர்களான ஆங்கில ஆட்சியாளர் இத்தகைய ஒரு நடவடிக்கையை வரவேற்றதும் ஆச்சரியமில்லை. இதன்படி ஈழம் முதலில் ஐந்து மாகாணங்களாகவும் பின்னர் கடந்த நூற்றாண்டின் இறுதியில் தற்போதைய ஒன்பது மாகாணங்களாகவும் பிரிக்கப்பட்டது. இவை எல்லாவற்றிலும் ஒரு முகப்படுத்தப்பட்ட நிருவாக அமைப்புப் புகுத்தப்பட்டது. இத்தகைய நிருவாக அமைப்பு புகுத்தப்பட்டாலும் கூட இவர்கள் கண்டியர், கரையோரச் சிங்களப் பிரதேசங்களை ஒன்றிணைத்தது போல் தமிழர் பிரதேசங்களையும் ஒருங்கிணைத்தனர். இவர்களால் பிரிக்கப்பட்ட வடகிழக்கு மாகாண எல்லைப் பிரிவுகள் மட்டுமன்றி இவர்கள் அறிமுகப் படுத்திய குடிசன மதிப்பீடுகளும் வடகிழக்கு மாகாணங்களை இவர் ஆக்கும் போது இப் பகுதிகளில் நிலவிய தமிழ் மக்களின் செறிவையும் கலாசாரப் பாரம்பரியத்தினையும் மையமாகக் கொண்டே இவை ஆக்கப்பட்டதை எடுத்தியம்புகின்றன. தொடர்ந்து வந்த பிரித்தானியர் நிருவாக அமைப்பில் மட்டுமன்றி சுதந்திர இலங்கை பிரித்தானியரிடமிருந்து பெற்றுக் கொண்ட நிருவாக அமைப்பிலும் இப்பகுதிகளுக்கெனத் தனித்துவமான முறையில் தமிழ் மொழிவாரியாக லிகிதர்கள், கிராமசேவையாளர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் நியமிக்கப்பட்டமையும் ஈண்டு அவதானிக்கத்தக்கது. இத்தகைய ஓர் பாரம்பரியத்தினை 1972, 1977 ஆகிய ஆண்டுகளிலும் அறிமுகப்படுத்தப் பட்ட அரசியற் திட்டங்களாலும் சிதறடிக்கப்பட முடியாதிருந்ததும் ஈண்டு நினைவு கூரற்பாலது.

நிற்க, இந்நூற்றாண்டின் முற்பகுதியிலும் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசம் வடகிழக்கு மாகாணங்களே என்பதனைச் சிங்கள மக்களும் அங்கீகரித்தமைக்கான சான்றுகளும் உள. கண்டியர் நலன்களைப் பாதுகாக்க உருவாக்கப்பட்ட ''கண்டியர் மகாசபை'' 1925 இல் முன்வைக்கப்பட்ட கோரிக்கையில் இந்நாட்டின் வடகிழக்குப் பகுதிகள் தமிழ் மக்களின் பாரம்பரியமான பிரதேசமே என்பதனை அங்கீகரிக்கத் தவறவில்லை. ஈழத்திற்கு ஓர் சமஷ்டி ஆட்சி முறையை விரும்பிய இவர்கள் இதில் மூன்று கூறுகள் அமைதல் வேண்டுமெனவும் விரும்பினர். அவையாவன கரையோரச் சிங்களவர் பகுதி, கண்டிச் சிங்களவர் பகுதி, தமிழ் மக்கள் வாழும் வடகிழக்குப் பகுதி ஆகியனவாகும். அக் கோரிக்கையை அவர்கள் நமது நாட்டுக்குச் சுதந்திர அரசமைப்பை நல்க வந்த சோல்பரிக் குழுவினர் முன்னிலையிலும் வலியுறுத்தியமை குறிப்பிடத்தக்கது.

கண்டிச் சிங்களவர் மட்டுமன்றி அக் காலத்தில் கரை நாட்டுச் சிங்களத் தலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களில் ஒருவராக விளங்கிய எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயக்காவும் ஈழத்தவர் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் சமஷ்டி ஆட்சி முறையே என்பதனை வலியுறுத்தியமையும் அவதானிக்கத் தக்கது. 1926 ஆம் ஆண்டு யூலாய் மாதம் யாழ்ப்பாணத்தில் அன்றைய மாணவ காங்கிரஸின் அழைப்பை ஏற்று எங்கள் அரசியற் பிரச்சினைகளுக்கு ஒரே ஒரு தீர்வு சமஷ்டி ஆட்சி அமைப்பே' என்ற தலைப்பில் உரையாற்றிய இவர் பின்வருமாறு குறிப்பிட்டார்: (61)

"பழைய வரலாற்றைப் பார்ப்பார்களேயானால் இந்த மூன்று இனங்களாகிய தமிழரும், கரை நாட்டுச் சிங்களவரும், கண்டிச் சிங்களவரும் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக ஈழத்தில் வாழ்ந்தும் ஒன்றிணையும் போக்கு எதையும் கொண்டிருக்கவில்லை என்பதை இவர்கள் காண்பார்கள்: இவர்கள் தங்கள் மொழியையும் பழக்க வழக்கங்களையும், மதத்தையும் பேணி இருந்தனர். இந்த வேறுபாடுகள் மெல்ல மறையும் என்பதில் நம்பிக்கை வைக்கும் எவனும் சிந்தித்துச் செயலாற்றாத ஒருவனாகும் ... ... ... ஈழத்தில் ஒவ்வொரு மாகாணத்திற்கும் முழுத்




படம்-1




படம்-2

தன்னாதிக்கம் வேண்டும். இந்நாட்டின் விசேடமான வருமானத்தைக் கவனித்துக்கொள்ள ஒன்று அல்லது இரண்டு பேரவைகள் இருத்தல்வேண்டும். இந்த முறைக்கு எதிராக ஆயிரத்தொரு மறுப்புக்களை எழுப்பலாம். ஆனால் அந்த மறுப்புக்கள் நீங்கியதும், ஏதோ ஒரு வகைப்பட்ட சமஷ்டி அரசாங்கமே ஒரே ஒரு தீர்வாக அமையும் என்பதில் நம்பிக்கை உண்டு'' என்றார்.

மேற்கூறிய கருத்தைத் தெரிவித்த திரு. பண்டாரநாயக்காதான் 1956 இல் தனிச் சிங்கள மொழிச் சட்டத்தினை உருவாக்கியவராவர். எனினும் அடுத்த ஆண்டிலே தமிழ் மக்களின் தலைவரான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தினுடன் அவர் செய்துகொண்ட ஒப்பந்தம் பிரதேச சுயாட்சியில் இவர் கொண்டிருந்த அக்கறையை எடுத்தியம்புகின்றது எனலாம். எவ்வாறாயினும் சிங்கள மக்கள் பிரதேச ரீதியாக தமது தனித்துவத்தினைப் பாதுகாக்க முனைந்தபோது தமிழ் மக்களின் தலைவர்கள் 1949இல் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் ஓர் சமஷ்டி அமைப்பே தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் என்ற கருத்தினை முன்வைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை ஒற்றை ஆட்சிப் பாராளுமன்ற அமைப்பில் தமது அங்கத்துவத்தின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் தமிழ் மக்களின் நலன்களைப் பாதுகாக்கலாம் என நம்பினர்.

1929இல் ஈழத்திற்கு புதிய அரசியல் யாப்பை வழங்க வந்த டொனமோர் கமிஷனரும் வடகிழக்குப் பகுதிகள் தமிழரின் பிரதேசங்கள் என அங்கீகரித்துள்ளனர். எனினும் பிரதேச ரீதியான சமஷ்டி அமைப்பின் கீழ் தமிழரின் நலனைப் பாதுகாப்பதற்குப் பதிலாக ஒற்றையாட்சி அமைப்பில் சமமான பிரதிநிதித்துவத்தினைப் பெறுவதன் மூலமே தமிழர் நலன்கள் பாதுகாக்கப்படும் எனத் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் விரும்பினார். இதுதான் அவர் வைத்த 50:50 என்ற வாதமாகும்: இதன்படி பாராளுமன்றத்தில் சிறுபான்மையினரும் பெரும்பான்மையினரும் சமமான பிரதிநிதித்துவத்தினைப் பெறுவர். இது ஓர் நடைமுறைச் சாத்தியமற்ற கோரிக்கை என ஈழத்திற்குப் புதிய அரசியல் யாப்பை வழங்க வந்த சோல்பரிக் கமிஷனரால் நிராகரிக்கப்பட்டது.

வட கிழக்கு மாகாணங்கள் தமிழரின் பாரம்பரிய பிரதேசங்கள், இவை சமஷ்டி அமைப்பில் சிங்கள அரசின் கீழ் இயங்க வேண்டுமென 1949 இல் உருவாக்கப்பெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சி கோரியது. 1952 இல் திரிகோணமலையில் நடைபெற்ற இதன் முதற் தேசிய மகாநாட்டிலும் இக் கோரிக்கை அங்கீகரிக்கப்பட்டது. 1956 இல் தனிச் சிங்களச் சட்டம் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டபோது வட-கிழக்கு மாகாணங்கள் முழுவதிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் (முஸ்லிம்கள் உட்பட) இதற்கெதிராக ஏகோபித்த முறையில் வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது. தமிழ் மக்களின் அபிலாஷைகளை ஓரளவுக்காவது பூர்த்திசெய்ய முற்பட்ட பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தத்திலும் வடகிழக்கு மாகாணங்கள் தமிழ்மக்களின் பாரம்பரிய வசிப்பிடம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1957 ஆம் ஆண்டு யூலை மாதம் 26ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட இவ் வொப்பந்தம் பின்னர் ஒருதலைப்பட்சமாக பண்டாரநாயக்காவினால் கிழித்தெறியப்பட்டாலும் ஓர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததொன்றே என்பதனை இதன் பின்வரும் சரத்துக்கள் எடுத்துக்காட்டுகின்றன.(62) அவையாவன:

1. பிரதேச சபைகளின் எல்லைகள் சட்டத்திலேயே அட்டவணையாகச் சேர்க்கப்பட்டு வரையறுக்கப்படவேண்டும்.
2. வடமாகாணம் ஒரு பிரதேச சபையாகவும், கிழக்கு மாகாணம் இரண்டு அல்லது கூடிய பிரதேச சபைகளாகவும் அமையும்.
3. மாகாண எல்லைகளையும் தாண்டி இரண்டு அல்லது மேற்பட்ட பிரதேச சபைகள் இணைவதற்குச் சட்டத்தில் விதி இடம் பெறும்; பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்கு அமைவாக ஒரு பிரதேச சபை தன்னைப் பிரித்துக்கொள்ளவும் இடம் இருக்கும். இரண்டு அல்லது மேற்பட்ட பிரதேச சபைகளுக்கும் பொதுவான குறிப்பிட்ட நோக்கங்களுக்கு அவை சேர்ந்து செயற்படச் சட்டத்தில் இடம் இருக்கும்.
4. பிரதேச சபையினர் நேரடியாகத் தெரிவு செய்யப்படுவர். அதற்கான தொகுதிகளை வகுப்பதற்குத் தொகுதி நிர்ணயக் குழுவோ, குழுக்களோ அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும். பிரதேச சபையின் எல்லைக்குள் அமைந்த மாவட்டங்களின் பாராளுமன்ற உறுப்பினர் பிரதேச சபைத் தலைவர் ஆவதற்குத் தகுதிபெறுவது பற்றி ஆலோசிக்கப்படும். அரசாங்க அதிபர்கள் பிரதேச ஆணையாளர்களாக நியமிக்கப்படுவது பற்றி ஆலோசிக்கப்படும். பெரிய பட்டினங்கள், கேந்திர நகரங்கள், மாநகரசபைகள் ஆகியனவற்றை மேற்பார்வை செய்யும் அதிகாரங்கள் ஆராயப்படும்.
5. அதிகாரங்கள் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டுச் சட்டத்தில் வரையறுக்கப்படவேண்டும். விவசாயம், கூட்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுறவு, காணியும் அபிவிருத்தியும், குடியேற்றம், கல்வி, சுகாதாரம், கைத்தொழில், மீன்பிடித்துறை, வீடமைப்பு, சமூக சேவை, மின்சாரம், தண்ணீர்த் திட்டங்கள், நெடுஞ்சாலைகள் ஆகியன உள்ளடங்கக் குறிப்பிட்ட விடயங்கள் பிரதேச சபைகளின் அதிகாரத்திற்குட்பட்டிருக்க வேண்டுமென்று ஒப்புக்கொள்ளப்பட்டது. வேண்டிய அதிகார எல்லைகள் சட்டத்திலேயே வரையறுக்கப்படும்.

6. குடியேற்றத் திட்டங்களைப் பொறுத்தவரை, தமது அதிகார எல்லைக்குட்பட்ட காணிகள் வழங்கப்பட வேண்டிய குடியேற்ற வாசிகளை தெரிவு செய்வதும் அத்திட்டங்களில் வேலைக்கமர்த்தப்படும் ஆட்களை தெரிவு செய்வதும் பிரதேச சபையின் அதிகாரத்திற்குட்பட்டதாகஇருக்குமென்று ஒப்புக்கொள்ளப்பட்டது. இப்போது கல்லோயா அபிவிருத்திச் சபையினால் நிர்வகிக்கப்படும் பிரதேசத்தின் நிலை ஆராயப்படல் வேண்டும்.

7. சட்டமூலத்தில் பிரதேச சபைகளை ஒட்டி உள்ளூராட்சி அமைச்சருக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களை மாற்றித் தேவையான இடத்தில் பாராளுமன்றத்திடம் ஒப்படைக்கப்படும் பொருட்டு அவ்விதிகள் திருத்தப்படும்.

8. பிரதேச சபைகளுக்கு மத்திய அரசாங்கம் சொந்தமாக நிதிவழங்கும். அத்தொகை கணக்கிடப்பட வேண்டிய கொள்கைகள் பின் ஆராயப்படும். பிரதேச சபைகளுக்கு வரிவிதிக்கவும் கடன் வாங்கவும் அதிகாரமிருக்கும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரான எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவுடன் தமிழ்மக்கள் சார்பில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் சரத்துக்களை மேலே கண்டோம். வட கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களின் மரபுவழித் தாயகம் என்பதனைச் சிங்கள மக்களின் இன்னோர் பலம்வாய்ந்த கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் ஏற்றிருந்தது. அன்றைய பிரதமரும், இக்கட்சியின் தலைவருமான டட்லி சேனநாயக்காவுடன் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் செய்து கொண்ட ஒப்பந்தம் டட்லி - செல்வா ஒப்பந்தமென வரலாற்று ஏடுகளில் இடம்பெற்றுள்ளது. (63) இவ்வொப்பந்தம் 24-3-1965 இல் கைச்சாத்தானது.

இதன் அம்சங்களாவன:

1. வடகிழக்கு மாகாணங்களில் தமிழில் நிருவாகம் நடப்பதற்கும், அவற்றைத் தமிழிலே பதிவதற்கும், தமிழ் மொழி விசேட விதிகளுக்கமைய உடனே நடவடிக்கை எடுக்கப்படும்.

2. வடகிழக்கு மாகாணங்களிலுள்ள சட்ட பூர்வமான நடவடிக்கைகளை நடாத்தவும், அவற்றைப் பதிவதற்குத் தமிழே நீதி மன்ற மொழியாகவும் விளங்கும்.

3. ஈழத்தில் மாவட்ட சபைகள் அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். எனினும் தேசிய நன்மை கருதி சட்டங்களுக்கமைய மாவட்ட சபைகளுக்கு மேலான அதிகாரங்கள் அரசாங்கத்திற்குண்டென்று ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4. ஈழப் பிரசைகள் காணிப்பங்கீடுகளில் காணிபெறும் வண்ணம் காணி அபிவிருத்தி விதிகள் திருத்தியமைக்கப்படும், வடகிழக்கு மாகாணங்களிலுள்ள குடியேற்றத்திட்டங்களில் காணி வழங்கப்படும்போது கீழ்க்காணும் விடயங்கள் முதன்மையாகக் கவனிக்கப்படும்.

(அ) வடகிழக்கு மாகாணங்களிலுள்ள காணிகள் அம்மாகாணத்திலுள்ள காணியற்றவருக்கே முதலில் வழங்கப்படல் வேண்டும்.

(ஆ) இரண்டாவதாக வடகிழக்கு மாகாணங்களில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கே வழங்கப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) மூன்றாவதாக ஈழத்தின் ஏனைய பகுதிகளிலுள்ள தமிழ் பேசும் இனத்தவர்களுக்கே முதலிடம் கொடுத்து பின்னர் ஏனையவர்களுக்கும் வழங்கலாம்.

தமிழ் மக்களின் பெரும்பான்மையான பிரதிநிதிகளின் ஆதரவின்றி 1972 ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கூட்டரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்ட குடியரசு அரசியல்திட்டத்திலும் வடகிழக்கு மாகாணங்களில் நீதிமன்ற, நிர்வாக மொழியாகத் தமிழ் அமையும் என்பது ஏற்கப்பட்டிருந்தது.

இக்கால கட்டத்திற்குள் ஒரு சமஷ்டி அமைப்பில், கூட்டாட்சி அமைப்பில் தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தினைப் பாதுகாக்கலாம் என்ற கோட்பாடு வெற்றியளிக்காதுபோகவே தனியான தமக்குரிய சுயநிர்ணயக் கோட்பாட்டுக்கமைய ஓர் தனி நாட்டிற்குள் இதனைப் பாதுகாக்கலாம் எனத் தமிழ் மக்கள் சிந்தித்தனர். இதுதான் 1976 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள பண்ணாகத்தில் உருவாக்கப்பட்ட தமிழீழத் தீர்மானமாகும். இத்தீர்மானம் அன்றுகூடிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது தேசிய மகாநாட்டில் நிறைவேறியது. (64) அஃதாவது:

ஈழத்தமிழர் தமது பெருமைமிக்க மொழியினாலும், மதங்களாலும் அவர்களது தனிவேறான பண்பாட்டு வரலாற்றுப் பாரம்பரியத்தாலும் பலநூற்றாண்டுகளாக ஆயுதந்தாங்கிய ஐரோப்பியப்படை எடுப்பாளர்களினால் தோற்கடிக்கப்படும் வரை ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் தனிவேறான சுதந்திர அரசினை நடாத்தி வந்தமையினாலும் எல்லாவற்றுக்கும் மேலாகத் தமது நிலப்பரப்பில் தனிவேறாகத் தம்மைத் தாமே ஆளவேண்டுமென்ற திட சங்கற்பம் கொண்டிருப்பதாலும் சிங்களவர்களிடமிருந்து வேறுபட்ட தனிவேறு தேசிய இனம் என இத்தால் பிரகடனஞ் செய்கிறது. 1972 இல் நிறைவேற்றப்பட்ட ஸ்ரீலங்காக் குடியரசின் அரசியல் யாப்பினால் தமிழர்கள் ஓர் அடிமையினமாக ஆக்கப்பட்ட சிங்களவர்களாகிய புதிய காலனித்துவ எசமானர்களால் ஆளப்படுகின்றனர் என்பதனை அங்கீகரிக்கின்றது. தவறான மார்க்கத்தில் இவ்வதிகாரத்தினைக் கைப்பற்றிப் புதிய காலனித்துவவாதிகள் தமிழ்த் தேசிய இனத்தின் நிலப்பரப்பினையும் மொழியையும் பொருளாதார வாழ்க்கையையும் வேலை வாய்ப்புக்களையும் கல்வி வாய்ப்புக்களையும் பறித்து தமிழ்மக்கள் தேசிய இனமாக விளங்குவதற்கான சகல தன்மைகளையும் அழித்து விடுகின்றனர்... இந்நாட்டிலே தமிழ்த்தேசிய இனம் உயிர் வாழ்தலைப் பேணிப்பாதுகாக்க வேண்டுமென்றால் ஒவ்வொரு தேசிய இனத்திற்குமுரிய சுயநிர்ணய உரிமை அடிப்படையில் 'தமிழ் ஈழம்' என்ற சுதந்திர இறைமை வாய்ந்த மதச்சார்பற்ற சோசலிஸ அரசினை அமைத்தல் வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

மேற்கூறிய தீர்மானம் நிறைவேறிய அதே ஆண்டில் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பாராளுமன்றத்தில் 19-11-1976 இல் 1949ஆம் ஆண்டிலிருந்து தாம் வற்புறுத்தி வந்த சமஷ்டி அமைப்புக் கோரிக்கையைக் கைவிட்டுத் தனித்தமிழ் ஈழக் கோரிக்கையை முன்வைப்பதாகவும் கூறினார். 1977இல் வட - கிழக்கு மாகாணங்களில் தமிழீழக் கோரிக்கையை முன்வைத்துத் தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிட்டுப் பெருவெற்றியும் பெற்றது. 1977 இல் ஆட்சிக்குவந்த ஐக்கியதேசியக்கட்சியின் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக விளங்கிய திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள் பற்றி ஆற்றிய உரை பின்வருமாறு அமைந்தது. (65)

'1972ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட குடியரசு அரசியல்யாப்பு கடந்த காலத்துடனான சட்ட அரசமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகளைத் துண்டிக்க விளைந்தது. சட்ட ரீதியான தொடர்ச்சியில் ஓர் துண்டிப்பு ஏற்பட்டால் ஈழத்து வாசிகளின் இறைமை - இந்த இறைமை அந்நியர் ஆட்சிக்காலத்தில் அல்லது வெளிநாட்டவரால் ஆக்கப்பட்ட அரசமைப்பு ஆட்சியில் ஒரு காலப்பகுதிக்கு இல்லாதுபோய்விட்டது — மீண்டும் மேலெழுகிறது. எனவே தமிழினத்தின் இறைமை — இந்தத் தேசிய இன ரீதியாகவும், புவியியல் அமைப்பிலும், மொழிரீதியாகவும் தனிவேறான அடையாளம் கொண்டதாக இருந்தது. — மீண்டும் உயிர்ப்புப் பெற்றுள்ளது. சிங்கள மக்களின் இறைமையை நிலைநாட்டுவதற்கும் புதிய அரசமைப்பை ஆக்குவதற்கும் ஐக்கியதேசியக் கட்சிக்குத் தெளிவான திட்டவட்டமான ஆணையை மக்கள் அளித்தார்கள். தமிழ் இனத்தைப் பொறுத்தவரையில் தமிழர்களிற் பெரும்பாலோர் அளித்த ஆணை வேறு கடமைப்பாடு கொண்டதால் இருந்தது.

1977 ஆம் ஆண்டிற்குப் பின்னர் தமிழர் தாயகக் கோட்பாடு புதிய உத்வேகத்தை அடைந்தது. குறிப்பாகத், தமிழ் இளைஞர்கள் இத்தகைய கோட்பாட்டின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பு மகத்தானது. இவ்விளைஞர் இயக்கங்களில் தமிழீழ விடுதலைப்புலிகள் முதன்மை வகித்தனர். (66) இக்கால கட்டத்திற்றான் தமிழ், சிங்கள இனக்கலவரம் 1983 இல் வெடித்தது. இதோடு பாராளுமன்றத்தின் கதவுகளும் தமிழ்ப் பிரதிநிதிகளுக்குப் பூட்டப்பட்டது. இந்தியா ஈழத்தமிழர் பிரச்சனையில் அதிக அக்கறைகாட்டத் தொடங்கியது. இக்காலத்திற்றான் தமிழர் அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து தமிழ் மக்களின் கோரிக்கைகளை நான்கு அம்சத்திட்டமாக 13-07-1985 இல் நடைபெற்ற திம்பு மகாநாட்டில் முன்வைத்தனர். (67)

அவையாவன

(1) ஈழத்தமிழர் தனியான தேசிய இனம்

(2) தமிழ்மொழி பேசப்படும் வடகிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைந்த தமிழரின் மரபுவழிப் பிரதேசங்களாகும்.

(3) தமிழ் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமையுண்டு.

(4) இந்நாட்டினைத் தாயகமாகக் கொண்ட சகல தமிழருக்கும் பிரஜா உரிமை வழங்கப்படல் வேண்டும்.

ஒரு காலத்தில் சாத்வீக நெறியைப் போற்றிய தமிழ் மக்கள் இப்போது பலாத்கார வழியிற்றான் தமது உரிமைகளைப் பெறலாம் என நம்பத் தொடங்கினர். இந்நிலையிற்றான் பல்வேறு பேச்சுவார்த்தைகளின் பின்னர் தமிழர் அமைப்புக்களைக் கலந்து ஆலோசிக்காது இந்திய அரசாங்கம் ஓர் புதிய நகல் திட்டத்தினை முன்வைத்தது. இதுதான் 1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் திகதியில் உருவாக்கப்பட்ட ராஜீவ் - ஜெயவர்த்தனா ஒப்பந்தமாகும் (68) இவ்வொப்பந்தம் வடகிழக்கு மாகாணங்கள் தமிழரின் மரபுவழித் தாயகம் என ஏற்றுக் கொண்டாலும், இதிலுள்ள 'சர்வசனவாக்கெடுப்பு' அம்சம் இதனை நடைமுறைச் சாத்தியமற்றதாக்கியது. அத்துடன் வட-கிழக்கு மாகாண அரசுக்கு வேண்டிய பூரண அதிகாரங்களையும் இது அளிக்கவில்லை. இதனால் இதனை தமிழ் ஈழவிடுதலைப் புலிகள் எதிர்த்தனர். தொடர்ந்தும் தமிழரின் விடிவிற்குத் தமிழீழமே ஒரே வழி எனத்தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் திரு. வே. பிரபாகரன் அவர்களின் தலைமையில் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

பிரித்தானியர் ஆட்சியின் தொடக்க காலத்தில் வடகிழக்கு மாகாணங்களில் செறிந்து வாழ்ந்த தமிழ் மக்கள் இந்நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் சிங்கள-தமிழர் உறவுகள் விரிசலடையத் தொடங்கிய காலத்திலிருந்து திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட குடியேற்றத்திட்டங்களினால் எவ்வாறு தமது சொந்த மண்ணிலே தமது பெரும்பான்மைப் பலத்தினைக் குறிப்பாகக் கிழக்கு மாகாணத்தில் இழந்தனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதைப் பிரித்தானியர் ஆட்சிக் காலத்திலும் சுதந்திர இலங்கை அரசுகளின் காலங்களிலும் மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீடுகளும் எடுத்துக்காட்டுகின்றன 1827ஆம் ஆண்டிற்றான் முதற்குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. இக் காலந் தொடக்கம் கடைசியாக 1980 வரை மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீடுகள் எவ்வாறு பாரம்பரிய தமிழ் மக்களின் பிரதேசமாகிய கிழக்கு மாகாணம் திட்டமிட்ட சிங்களவர் குடியேற்றத்தினால், தமிழ் மக்களின் பெரும்பான்மைப் பலத்தை இவ்விடங்களிலிருந்து குறைக்க உதவியது என்பதனைப் பின்வரும் அட்டவணை எடுத்துக்காட்டுகின்றது- (69)

பந்த காலத்தில் 19.90 வீதமாக உயர்ந்து 1971 இல் முதலாவது குடியரசு அரசியற் திட்ட காலத்தில் 20.7 வீதமாகி ஐக்கிய தேசியக் கட்சி காலத்தில் 1981 இல் 24.92 வீதமாக உயர்ந்தது அவநானிக்கத் தக்கது. இன்று இம்மாகாணச் சனத்தொகையில் 1/3 வீத மக்கள் சிங்கள மொழி பேசுவோராக விளங்குவது ஆச்சரியப்படுவதற்கில்லை.

இறுதியாக நோக்கும்போது பின்வரும் முடிபுகளுக்கு நாம் வரலாம். நம் நாட்டின் ஆதிக்குடிகள் கற்கால மக்களாவர். இவர்களின் சந்ததியினரே தற்கால வேடர்களாவர். இவர்களின் கலாசாரத்தினை அடுத்து இந்நாட்டின் நாகரிகத்திற்கு வித்திட்ட

| ஆண்டு | தமிழர் சதவீதத்தில் | முஸ்லீங்கள் சதவீதத்தில் | தமிழ்மொழிபேசுவோர் சதவீதத்தில் | சிங்களவர் சதவீதத்தில் |
|---|---|---|---|---|
| 1827 | 74.52 | 24.72 | 99.24 | 00.53 |
| 1881 | 59.11 | 33.71 | 92.82 | 04.66 |
| 1891 | 58.40 | 34.49 | 92.89 | 05.06 |
| 1901 | 55.83 | 35.97 | 91.80 | 05 05 |
| 1911 | 55.08 | 38.32 | 93.40 | 03.76 |
| 1921 | 53.54 | 39 41 | 92.95 | 04.53 |
| 1946 | 48.74 | 39.06 | 87.80 | 09.87 |
| 1953 | 47.37 | 38.18 | 85.55 | 13.11 |
| 1963 | 45.06 | 34 19 | 79.25 | 19.90 |
| 1971 | 43.97 | 34.64 | 78.61 | 20.70 |
| 1981 | 42.13 | 32.37 | 74 40 | 24.92 |

மேற்கூறிய அட்டவணை கிழக்கு மாகாணத்திற்கு மட்டுமே உரியது. வடமாகாணத்தில் தமிழரின் பெரும்பான்மையை முறியடிக்கச் சிங்கள அரசினால் முடியவில்லை. கிழக்கு மாகாணத்தில் 1827 இல் சிங்கள மக்களின் எண்ணிக்கை 0.53 வீதம் மட்டுமே இருந்தது. தமிழ் மக்களோடு கண்டியரசர் காலந்தொட்டு இப்பகுதியில் பரவிய முஸ்லிம்கள் குடிசனத் தொகையையும் சேர்த்தால் தமிழ் பேசும் மக்களின் எண்ணிக்கை 99.24 வீதமாக இருந்தது. சுதந்திரமடைந்த காலத்தில் கிழக்கு மாகாணத்தில் 9.87 வீதமாக இருந்த சிங்கள மக்கள் 1957 இல் பண்டா - செல்வா ஒப்பந்த காலத்தில் 13.11 வீதமாக 1965 இல் டட்லி - செல்வா ஒப்

திராவிடர் கலாசாரம் ஈழத்திற்குத் தென்னிந்தியாவிலிருந்து புகுந்தது. இதனை உருவாக்கியோர் தற்காலச் சிங்கள - தமிழ் மொழி பேசுவோரின் மூதாதையினராவர். இவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட திராவிட மொழிகளைப் பேசினர். இதில் தமிழை விடச் சிங்களத்தின் மூதாதை மொழியாகிய எலுவும் காணப்பட்டது. இம்மக்கள் ஈழவர் என அழைக்கப்பட்டனர். மொழி ரீதியாக இவர்களிடையே தனித்துவம் காணப்பட்டாலும்கூட மொழியோடு இனத்துவம் சேர்ந்த தொனி கி. பி. 6ஆம் நூற்றாண்டின்பின்னரே காணப்பட்டது. இதற்கு முன்னர் நாட்டின் பெயராக வழங்கப்பட்ட ஈழத்திலிருந்து மருவிய சீகள/சிம்கள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற சொல் ஓர் இனத்தின் பெயராக எழுச்சிபெற்றது. நாட்டின் பல பகுதிகளில் வியாபித்திருந்த தமிழ்மக்கள் பிற்பட்ட அநுராதபுர காலத்தில் வடகிழக்குப் பிராந்தியத்தினைத் தமது மரபு வழித்தயகா மாகக் கொள்ளத் தொடங்கினர். இம்மரபு வழித் தாயகத்தை சோழராட்சியின் படர்க்கை மேலும் உரம் பெற்று வளர்க்க உதவியது. யாழ்ப்பாண அரசின் எழுச்சியும் வடகிழக்குப் பகுதிகளில் தமிழ்வன்னி அரசுகளின் தோற்றமும் பாரம்பரிய தாயகத்தின் வளர்ச்சியில் முக்கிய மைல்கற்களாக அமைந்தன. ஐரோப்பியரான போர்த்துக்கேயர் (கி. பி. 1505 - 1658) டச்சுக்காரர் (கி. பி. 1658 - 1796) ஆங்கிலர் (கி. பி. 1796 - 1948) ஆகியோர் குறிப்புகள் இம் மரபு வழித் தாயகத்தினை பற்றிய தகவல்களைத் தருவதோடு இந்நூற்றாண்டிலும் சிங்களத் தலைவர்களுடன் தமிழ்த் தலைவர்கள் செய்துகொண்ட உடன்படிக்கைகளும் இதனை அங்கீகரித்ததும் ஈண்டு அவதானிக்கத்தக்கது.

## உசாத்துணை நூல்கள்


1. Michael Roberts (ed). Documeuts of the Ceylon National Cougress and Nationalist politics in Ceylon 1929 - 1950. Vol III. Colombo (பக்கம் 2574 .2591)
2. கதிரவேற்பிள்ளை சி. (பதிப்பு) இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி வெள்ளிவிழா மலர் 1974 யாழ்ப்பாணம். 1974. இவ்வரிசையில் திருவாளர்கள் அ. தியாகராசா செ. சுந்தரலிங்கம், வி. நவரத்தினம் ஆகியோரும் அடங்குவர்.
3. Wilson. A. J. The break up of Sri Lanka. The Tamil - Sinhalese conflict London. 1988 pp. 173 - 207; Satchchi Ponambalam. Sri Lanka - the nationl question and the Tamil Liberation struggle, London 1983: Silva K. M. De. Managing Ethnic tensions in multi - Ethric Socilties Sri Lanka 1880 - 1985. University press of America. 1986; Silva K. M. De. The traditional home lands of the Tamils of Sri Lanka. A Historical Appraisal Colmbo 1987.
4. Mendis G. C. 'The Vijaya legend' in Jayawickrama M. A. (ed). Paranavitana felicitation volume. Colombo. 1965. பக்கம் 263 - 279.
5. Geiger W. (ed) Mahavamsa Colombo. 1950. அத்தியாயம் VII. வரி 39.
6. மேற்படி வரி 58.
7. குலசபாநாதன். முதலியார். (பதிப்பு) யாழ்ப்பாண வைபவமாலை, கொழும்பு 1953. பக்கம் 4 - 5
8. Geiger. W (ed) மேற்படி அத்தியாம் 1.
9. Sitrampalam. S. K. The Megalithic culture of Sri Lnnka. Unpublicied Ph.. D. Thesis, University. of poona, Poona1980.
10. Ragupathy P. The Early Settlements in Jaffna An Archaeological survcy Madras. 1987
11. சிற்றம்பலம் சி. க. யாழ். மாவட்டத்தின் அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வும் ஆதிக்குடிகளும், செந்தழல் யாழ். பல்கலைக்கழகத் தமிழ் மன்ற வெளியீடு யாழ்ப்பாணம் 1982.
12. சிற்றம்பலம் சி. க. "பிராமிக் கல்வெட்டுக்களும் தமிழும் சிந்தனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட வெளியீடு தொகுதி I, இதழ் I பக்கங்கள் 57 - 86
13. சிற்றம்பலம் சி. க. இலங்கையில் ஆதிப்பிராமிக் கல்வெட்டுக்கள் காட்டும் இந்து மதம் சிந்தனை (பழைய தொடர்). தொகுதி 2. இதழ் 2. பக்கங்கள் 29 - 36.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. சிற்றம்பலம் சி. க. தமிழர் பற்றிக் கூறும் ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுக்கள் பற்றிய சில கருத்துக்கள்' தமிழோசை - 1988 - 1989 தமிழ்மன்ற வெளியீடு பக்கங்கள் 29-35
15. புஸ்பரத்தினம் ப 'ஈழம் என்னும் இடப்பெயர் பூநகரியில் கண்டுபிடிப்பு' ஈழநாதம் 04-06-90.
16. வேலுப்பிள்ளை. ஆ. தொடக்க கால ஈழத்து இலக்கியங்களும் அவற்றின்வரலாற்றுப் பின்னணியும் யாழ்ப்பாணம். 1986.
17. Gnrawardana R A.L.H. Prelude to the State An early phase in the evolution of Political Institutions in Ancieut Sri Lanka. The Sri Lanka Journal of humanities Vot III Nos 1-2 1985 பக்கங்கள் 1-39
18. Gecger. W. மேற்படி அத்தியாயம் XIX வரி 54-55
19. Paranavitana The Brahmi Inscriptions of Ceylon Colombo 1970 [இக்கல்வெட்டுக்கள் குசலகந்த, கெல்னேல, கல்உதுப்பெ.ரத்தான, மொட்டயக்கல்லு, போவத்தகல ஆகிய இடங்களிற் காணப்படுகின்றன. இவை ஆய்வம்சத்தின் 3ஆம் ,4ஆம் சந்ததியினர் தான் பௌத்த மதத்திற்கு அளித்த தானத்தைக் குறிப்பதால் இவர்களின் முன்னோர் இந்துக்கள் என்பது வெளிப்படை.
20. Geiger W. மேற்படி அத்தியாயம் XXI வரி 10—11
21. மேற்படி வரி 13—14
22. சிறிவீர டபிள்யூ. ஐ. துட்டகைமுனு - எல்லாளன் வரலாற்று நிகழ்வு: ஒரு மறுமதிப்பீடு – சமூக விஞ்ஞானிகள் சங்கப்பதிப்பு - இலங்கையில் இனத்துவமும் சமூக மாற்றமும் யாழ்ப்பாணம் 1985 பக்கங்கள் 119 - 140.
23. Geiger W. மேற்படி அத்தியாயம். XXXIII வரிகள் 57—61
24. Paranavitana S. Vallipuram Gold plate of Vasabha Epigraphia Zeylanica Vol IV No. 29 பக்கங்கள் 229—237.
25. Paranavitana S (ed Hist ry of Ceylon, Colombo 1959 பக்கங்கள் 183—184
26. மேற்படி பக்கங்கள் 292—294.
27. குலசபாநாதன் முதலியார் மேற்படி பக்கம் 9—10
28. Geiger W மேற்படி அத்தியாயம் 35 வரி 25—28
29. மேற்படி அத்தியாயம் 36 வரி 49
30. மேற்படி அத்தியாயறி 39 வரி 32
31. Silva K. M. De. A History of Srilanka London 1981 பக். 20 - 21
32. Geiger W (ed) Culavamsa London 1973 அத்தியாயம் 42 வரி 62
33. மேற்படி அத்தியாயம் 44 வரிகள் 74—75
34. குலசபாநாதன் மேற்படி பக்கங்கள் 13—22
35. நடராசா F.X.C. மட்டக்களக்களப்பு மான்மியம் கொழும்பு 1962
36. Paranavitana S மேற்படி 1959 பக்கங்கள் 327 - 331
37. மேற்படி அத்தியாயம் V. Pathmanathan S. Cola rule in Srilanka Proceedings of the fourth International Conference of Tamil Studies Jaffna 1980 பக்கங்கள் 19—35
38. குணசிங்கம் செ. கோணேஸ்வரம் கொழும்பு 1970; குணசிங்கம் செ. அண்மைக் காலத்திற் கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் ஆராய்ச்சியும் அதனாற் பெறப்பட்ட வரலாற்றுச் செய்திகளும்—அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற மட்டக்களப்புக் கிளை வெளியீடு - மட்டக்களப்பு மகாநாட்டு நினைவு மலர் மட்டக்களப்பு 1976 பக்கங்கள் 11—16
39. Pathmanathan S. Chola rule in Srilanka Proceedings of the Fourth International Conference of Tamil studies. Jaffna 1980 பக்கங்கள் 19 - 35
40. குணசிங்கம் செ. மேற்படி 1976

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. Silva K. M. De மேற்படி 1981
42. சிற்றம்பலம் சி. க. ஈழமும் இந்துமதமும் - பொலநறுவைக்காலம் (கி. பி; 1000-1250) சிந்தனை, தொகுதி 2. இதழ் 2. பக்கங்கள் 115 - 151.
43. மேற்படி
44 Paranavitana S (ed) History of Ceylon Part II Colombo 1960 அதிகாரங்கள் IV,V
45. மேற்படி அதிகாரம் VI
46 மேற்படி அதிகாரம் V
47. Pathmanathan S The Kingdom of Jaffna Colombe 1978 Pathmanathan .S. மேற்படி 1980 பக்கங்கள் 37 - 57
48. Rasanayagam C. Ancient Jaffna. Madras 1926 பக். 364
49. Pathmanathan S. மேற்படி 1978 பக். 234 - 255
50. பத்மநாதன் சி வன்னியர் யாழ்ப்பாணம் 1970
51. சோமாஸ்கந்தர் வை. (பதிப்பு) கவிராஜரியற்றிய கோணேசர் கல்வெட்டு, திரிகோணமலை 1968 பாட்டு 58
52. இந்திரபாலா . கா. 'கிழக்கிலங்கைச் சாசனங்கள்' சிந்தனை (பழைய தொடர்) இதழ் 2 - 3 யூலாய் - ஒக்டோபர் 1968 பக்கங்கள் 35 - 50
53 பத்மநாதன் சி. மேற்படி 1970
54. Queyroz F. de. Temporal and Spiritual Conquest of Ceylon. Tramslated by Perera. S. G. Colombo 1930. பக். 151.
55. Rycklof Van. Goens. Instructions for the quidence of the Opperkoopaman Anthony Paviiioen, Commandeur and council of Jaffna patnam. 1658. பக்கங்கள் 84 — 86.
56. இந்திரபாலா கா. மேற்படி 1968.
57. சின்னத்தம்பி ஜே. ஆர். தமிழீழ நாட்டு எல்லைகள் கொழும்பு 1973.
5 . மேற்படி, Silva K. M. De. 1987.
59. Sachchi Ponnampalam Srilanka the national Question and the Tamil liberation Struggle, July (London) -1983 பக் 30.
60. சின்னத்தம்பி ஜே ஆர். 1973 பக்கங்கள் 20 - 21
61. Ceylon Morning Leader July 17, 1926
62. கதிரவேற்பிள்ளை சி. மேற்படி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அதிமுக்கிய தீர்மானங்கள் பக்கங்கள் 49 - 51
63. மேற்படி பக்கம் 59
64. Sachchi PonnamPalam மேற்படி பக்கம் 185
65. Silva K. M. De மேற்படி 1986 பக்கம் 294
66. Sachchi Ponnampalam மேற்படி பக்கங்கள் 189 . 221 Wilson A. J. மேற்படி 1988
67. T. U. L. F. Publication - The Tamil United LIberation frout towards Devolution of power in Srilanka. Main documents - August 1983 - October 1987 Madras, 1988.
68. Tamil Eelam Peoples Formal Publication - Sri lanka's Ethnic Conflict and the Indo - Srilanka agreemənt, Jaff a 1988
69. T. U. L. F. Publication மேற்படி 1988 இந்நூலிலிருந்துதான் தமிழ் மாவட்டங்களிலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களது சனத்தொகையின் எண்ணிக்கை பரம்பல் போன்ற விவரங்கள் எடுக்கப்பட்டுள்ளது. இத்தகைய விவரங்கள் இந்நூலில் Schedule Appendix என்ற பகுதியில் பக்கம் 158 தொடக்கம் காணப்படுகின்றன. இக்கட்டுரையிலுள்ள அட்டவணைகளில் இவை இடம் பெற்றுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி...

பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்
நன்மை கடலிற் பெரிது.

- திருவள்ளுவர்

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் எடுக்கும், முத்தமிழ் விழாவை ஒட்டி வெளியிடப்படும் இம் முத்தமிழ் விழா மலர் வெளிவரத் துணைநிற்கும் ஒவ்வொருவருக்கும் எமது நன்றிகள் உரியதாகும். குறிப்பாக வாழ்த்துச் செய்திகள், ஆக்கங்கள், விளம்பரங்கள் தந்துதவிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

-- விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தத்தின் சத்தத்திற்கு மத்தியிலும்
தமிழீழ தேசமெங்கும் முத்தமிழ் விழா!

செந்தமிழ் வளர்ந்திடவும் பைந்தமிழர்
வாழ்வில் கலை, பண்பாடு பொலிவு பெறவும்
சிந்தனைக்கு விருந்தாக செழித்திடும் விழா!!

பாரிலே தமிழன் யாருக்கும் அடிமையில்லை - என
பரணிபாடி விழித்தெழுந்த தமிழினம் முரசறைய
தடை விதிக்கும் எதிரிகள் படை நடுங்க
நடை பெறும் விழாவின் வெற்றிக்கு
வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்!!

107080

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தை கவர்ந்த விழா!

## சிரெக்ஸ்

24*B*, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(H-45)



இன்ப விழா!

மறுமலர்ச்சிக் கழகம்
பதிவு இல. 004
யாழ். பல்கலைக் கழகம்

## சமுத்ரா றேட்ஸ்

46, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(H-46)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் தமிழீழ மண்ணில்!

நியூ முனீஸ்
ரெக்ரைல்
69A, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(H-47)



தனித்துவமான விழா!

ராசி சில்க்ஸ்
70, நவீன சந்தை,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

(H-48)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" முத்தமிழ் விழாவை
வாழ்த்துகிறோம் "

திருப்பதி ஸ்டோர்ஸ்

33, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(H-49)

" முத்தமிழ் விழா
சிறப்பாக
நடக்கட்டும்"

சண்முகம் ஸ்டோர்ஸ்

37, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(H-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிற்றி ரெக்ஸ"

*40, நவீன சந்தை,*
*யாழ்ப்பாணம்.*

" ஈழத்தமிழர் விழா! "

(H-51)

# றொலக்ஸ்
# ஹோட்டல்

*340, மருத்துவமனை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

" தமிழீழ முத்தமிழ் விழா! "

(H-52)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

□ *தமிழ் வாழ்க!, கலைகள் வளர்க!*

□ **ரி. குகநேசன்**

**304, மருத்துவமனை வீதி,**

**யாழ்ப்பாணம்.**

[H-57]

*தமிழுக்குப் பெருமை*

*சேர்க்கும் விழா?* □

**ருகுனாஸ் ரேடிங்** □

**264, மருத்துவமனை வீதி,**

**யாழ்ப்பாணம்.**

[H-58]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

□ விஜயா ஸ்ரோர்ஸ்

64, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

□ *வாழிய செந்தமிழ்!*

(H-59)

□ க. கு. கந்தையாபிள்ளை
அன் சன்ஸ்

124, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

□ *வாழ்க நற்றமிழர்!*

(H-60)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☐ *வாழ்த்துகின்றோம்!*

## செல்வா ஸ்ரோர்

**2*A*, நவீன சந்தை,**
**யாழ்ப்பாணம்.**

[H-61]

☐ *வரவேற்கின்றோம்!*

## யாழ் ரேட் சென்ரர்

**11, நவீன சந்தை,**
**யாழ்ப்பாணம்.**

(H-62)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தமிழே வாழ்க!
முத்தமிழே வளர்க!

சவுண்ட் எஞ்சினியர்ஸ்

194 ,மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

[H-63)

வண்டமிழே வாழ்க!
வளர் தமிழே வளர்க!

பொம்பே சுவீட்ஸ்

226, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

(H-64)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☐ வாழ்த்துகின்றோம்.

வி. முருகேஸ் ஸ்ரோர்
140, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

(H-53)

☐ வரவேற்கின்றோம்.

எம். குமாரசாமிப்பிள்ளை ஸ்ரோர்
120, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

(H-54)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☐ " முத்தமிழ் விழா " வை வாழ்த்துகின்றோம்

**லிங்கம் ஸ்ரோர்ஸ்**

168, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

[H67]

☐ " முத்தமிழ் விழா " சிறப்பாக நடக்கட்டும்!

**சிவதர்ஷன்**

மின்சார உபகரண விற்பனையாளர்கள்
394, மணிக்கூட்டுக்கோபுர வீதி,
யாழ்ப்பாணம்

[H68]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன் தமிழே வாழ்க!

**வெஸ்கோ**

**பார்மசி அன் பன்சி**

**250 (470), மருத்துவமனை வீதி,**

**யாழ்ப்பாணம்.**

(H-65)

தீந்தமிழே வளர்க!

**எரிக்கணேஷ்**

**566, மருத்துவமனை வீதி,**

**யாழ்ப்பாணம்.**

☐ *மூக்குக்கண்ணாடி தயாரிப்பாளர்கள்*

(H-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமைக்குரிய விழா!

**சக்தி ஸ்ரோர்**

310A மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

முத்தமிழ் விழா!

(H-55)

சிந்தை கவரும் விழா!

**நாகதர்சினி**

306, மருத்துவமனை வீதி.
யாழ்ப்பாணம்.

முத்தமிழ் விழா!

(H-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்கள் தமிழ்மொழி
எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே"

"வாமாஸ்"

121/2, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[F/67]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமிழ் விழாவினை வாழ்த்துகின்றோம்!

# சாந்தி அச்சகம்

575, காங்கேசன்துறை வீதி,

நாச்சிமார்கோயிலடி,

யாழ்ப்பாணம்.

[F-68]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" தமிழீழ மண்ணில்
நடக்கும்
தனிப் பெரும் விழாவாம்
முத்தமிழ் விழா
சிறக்க
வாழ்த்துகின்றோம்"

□ □ □ □ □

"தமிழருவி"

பல் பொருள் அங்காடி
71, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

□ □ □ □ □ □

தமிழீழத்து
இலக்கியவாதிகளின் நூல்கள்,
பாடசாலை நூல்கள்,
உபகரணங்கள்,
அன்பளிப்புப் பொருள்கள்
போன்ற
சகலவற்றுக்கும்
தனித்துவமான
வியாபார நிலையம்.

(F/69)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

○ முத்தமிழ் விழாவை வாழ்த்துகின்றோம்!

# எழிலகம்

மணிக்கூட்டுக்கோபுர வீதி,
(வெலிங்டன் சந்திக்கு
அருகாமையில்)
யாழ்ப்பாணம்.

□ மின்சாரப் பொருள்கள்
அழகுசாதனபொருள்கள் □
□ புடைவை வகைகள்
எவர்சில்வர் பாத்திரங்கள் □
□ விளையாட்டுப்பொருள்கள்
பாடசாலை உபகரணங்கள் □
□ கண்ணாடிப்பாத்திரங்கள்

போன்ற
சகல விதமான
பொருள்களையும்
ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ளலாம்.

(F/70)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழீழ விடுதலைப் புலிகளின்
கலை கலாசாரப் பிரிவினர் போர்
மணம் கமழும் இந்த மண்ணில்
பிறக்கின்ற கலைகளை அரங்கேற்றும்
முத்தமிழ் விழாவில் நாளைய சந்ததிக்கான
செழுமிய கலாசாரம் ஒன்று
முதுசொமாகின்றது. இந்தப் புதிய
கலாசார பரம்பரைக்கு
தோளோடு தோள் கொடுத்து
பங்களிப்பதில் மனம் நிறைந்த
வாழ்த்துக்களைத் தெரிவித்துக்
கொள்ளுகின்றோம்.

யாழ். மாவட்ட
கூட்டுறவாளர்கள்.

(F/71)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

□ எங்கள் தமிழின் புகழ்
எங்கும் பரவுக.

□ முத்தமிழ் விழாவை
வாழ்த்துவோர்

DHL
WORLDWIDE EXPRESS

□ கொஸ்மொஸ் மார்கட்டிங் சேவிஸ்

முகவர்:- டி. எச். எல். இன்டர்நஷனல்

120, கே. கே. எஸ். வீதி,

யாழ்ப்பாணம்.

(F/72)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ARCHIVES

University of Jaffna
107080
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமிழ் விழா
சிறப்பாக நடைபெற
நல்வாழ்த்துக்கள்...

ஈழநாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org